# முஸ்லிம் சிந்தையின் நெருக்கடி

அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான்

# முஸ்லிம் சிந்தையின் நெருக்கடி

*பேராசிரியர் அப்துல் ஹமீத் அஹ்மத்*
*அபூ ஸுலைமான்*

தமிழாக்கம்:
கலாநிதி பீ.எம்.எம். இர்பான்

**Muslim Sinthayyin Nerukkadi**

Tamil edition of
Crisis in the Muslim Mind

by
Dr. AbdulHamid AbuSulayman

Originally published by
The lnternational lnstitute of lslamic Thought 500
Grove Street, #200,
Herndon, Virginia 20170,
U.S.A.
©1414/1993 ISBN 1 56564 138 8

All rights reserved
Translated from
أزمة العقل المسلم
By Dr. P.M.M. Irfan (Naleemi)

Tamil edition - 2020

ISBN 978-955-8398-64-7

Published by
Fuzin Texts
23/3 Market Road, Dharga Town 12090, Sri-Lanka
Cover design by Gihan Indunil
Layout by Azar Wazeer
Printed by Millennium Graphics, Maharagama.

## உள்ளடக்கம்


அணிந்துரை 05

முன்னுரை 11

அத்தியாயம் 01
சமகாலம் தழுவிய இஸ்லாமிய அசல் நிலையே ஏக தீர்வு 25

அத்தியாயம் 02
இஸ்லாமிய சிந்தனைக்கான பாரம்பரிய முறைமை 87

அத்தியாயம் 03
இஸ்லாமிய சிந்தனா முறையியலின் அடிப்படைகள் 133

அத்தியாயம் 04
இஸ்லாமிய முறையியலும், இஸ்லாமிய அறிவியற்
கலைகளைக் கட்டியெழுப்ப அவசியமானவையும் 213

அத்தியாயம் 05
சமூகவியல் கலைகளுக்கான முற்குறிப்புகள் 239

அத்தியாயம் 06
இஸ்லாமும் எதிர்காலமும் 281

# அணிந்துரை

முஸ்லிம் உம்மா இன்று மிக மோசமான கட்டமொன்றில் இருக்கிறது என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். பிரிவினை, பிளவு, அடையாளச் சிதைவு, நிறுவனங்களின் வீழ்ச்சி முதலிய அபாயங்களை அது கடந்து சென்று கொண்டிருக்கிறது. அது அதல பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருப்பதை அவதானித்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறெதுவும் செய்ய இயலாத கையறு நிலையே எங்கும் காணப்படுகிறது.

உம்மா தனது நாகரிக சமூகங்களில் -குறிப்பாக துருக்கியிலும் எகிப்திலும்- மேற்கு நாகரிகத்தைச் சந்தித்தபோது தன் முன்னால் ஏதோ ஒரு பிரச்சினை இருப்பதை உணர்ந்து கொண்டது. அன்று முதல், கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக அன்னியப் பரிசோதனைகளை நிர்ப்பந்தமாக நடைமுறைப்படுத்தும் முயற்சிகள் அதில் மேற்கொள்ளப்பட்டும் தோல்வியில் முடிந்திருக்கின்றன. அடக்குமுறை மற்றும் அன்னியப் பரிசோதனை ஆகிய இந்த இரு கசப்பான அனுபவங்களை உம்மா அனுபவித்து விட்ட நிலையில், மாற்றம் என்பது தவிர்க்க முடியாத தேவை என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

கடந்த இரு நூற்றாண்டு காலப் பகுதி முழுவதும் அரசியல், ஆட்சி, கல்வி, நிர்வாகம், இலக்கியம், சமூகவியல், அறிவியல், நுண்கலைகள் முதலிய அனைத்திலும் பிறரது அனுபவங்களை உம்மா பின்பற்றிப் பார்த்திருக்கிறது. ஆனால் அதன் எதிர்பார்ப்பும் அபிலாஷையும் நிறைவேறவில்லை. ஒரே இடத்தில் சுற்றிச் சுற்றி வந்ததைத் தவிர அதனால் வேறெதனையும் சாதிக்க முடியவில்லை.

எதிர்பார்க்கப்படும் இலக்குகளை நோக்கிய மாற்றச் செயற்பாட்டில் சரியான தர்க்கமொன்றை உம்மாவின் தலைமைத்துவம் வகுத்துக் கொள்ளவில்லை என்பதையே இது காட்டுகிறது. உம்மா தனது நெருக்கடியிலிருந்து வெளியேற மேற்கொண்ட முன்னைய பரிசோதனைகளை நாம் மீளாய்வு செய்தோம். அந்தப் பரிசோதனைகளை நுணுக்கமாகவும், நேர்மையாகவும், பக்கச் சார்பின்றியும் மதிப்பீடு செய்தோம். பல்வேறு அபிப்பிராயங்களையும் சீர்த்தூக்கிப் பார்த்தோம். மாற்றச் செயற்பாட்டுக்கான சரியான தொடக்கப் புள்ளி சிந்தனையே என்பதுதான் மேற்குறித்த அனைத்தையும் பற்றிய நீண்ட அவதானத்தில் நாம் கண்டடைந்த உண்மையாகும். ஏனெனில் சிந்தனையே எந்தவொரு செயல்வாதத்துக்குமான இயல்பான முன்னுரையாகும். ஒரு செயல் சரியாயினும் தவறாயினும், அதன் தோற்றவாய் சிந்தனையே.

சரியான சிந்தனையே சரியான எழுச்சியை ஏற்படுத்தும் என்பதுதான் இதன் பொருளாகும். உம்மாவின் நெருக்கடியிலிருந்து அதனை மெதுவாக வெளியே அழைத்து வரக் கூடியதும் இந்தச் சிந்தனைதான்.

உம்மாவுக்கான சரியான அடிப்படைச் சிந்தனையை வரைந்தளிப்பதும், அதன் ஆன்மாவாக அமைவதும் இஸ்லாமே. அந்த இஸ்லாம்தான் உம்மாவின் உணர்வை வளர்க்கக் கூடியது; மனச்சாட்சியை தட்டியெழுப்பக் கூடியது; புத்தாக்கம், போராட்டம், அர்ப்பணம் என்பவற்றுக்கு ஆற்றல் கொண்ட இயக்க சக்தியை வழங்கக் கூடியது. எனவே, 'இஸ்லாமிய சிந்தனை' தான் உம்மாவுக்கான சரியான சிந்தனையாக இருக்க முடியும்.

தேவையான மாற்றச் செயற்பாடு என்பது -எல்லாவற்றுக்கும் முன்பாக- சிந்தனைச் செயற்பாடுதான் என்றும், அது இஸ்லாத்தின் அடிப்படையிலேயே கட்டெழ வேண்டும் என்றும் நாம் கூறுவது இவ்வகையில்தான். அந்தச் சிந்தனைக்கு இஸ்லாத்தின் வழிகாட்டல் அவசியம். இஸ்லாத்தின் நம்பிக்கைகள், பெறுமானங்கள், நியமங்கள், விழுமியங்கள் என்பவற்றினூடாகவே அந்தச் சிந்தனை இயங்க வேண்டும். இஸ்லாத்தின் மூலாதாரங்களிலிருந்தே அது பெறப்படவும் வேண்டும்.

'இஸ்லாமிய சிந்தனை' என்ற கலைச்சொல் பொதுவானதொரு சொல்லாக்கமாகும். அதனைப் புரிந்து கொள்வதில் மனிதர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர். எனவேதான், அது கட்டுக்கோப்பாக

வரையறுக்கப்பட வேண்டும் என நாம் கருதுகிறோம். அதற்கான முறைமை வரையப்பட வேண்டும்; விதிகள் வகுக்கப்பட வேண்டும்; கோட்பாடுகள் ஆதாரப்படுத்தப்பட வேண்டும். இந்த அனைத்திலி ருந்தும் ஒரு முழுமையான ஒற்றைச் சிந்தனை வெளிக் கொண்டு வரப்பட வேண்டும். அந்தச் சிந்தனை இறுதியில் நமது அனைத்துக் கருதுகோள்களையும் ஒருமுகப்படுத்த வேண்டும். இதுவே நமது எதிர்பார்ப்பாகும். இப்பிரச்சினையைத் தெளிவுபடுத்தி, அதனைக் கையாளும் வழிகளை விளக்கும் வினைமை மிக்க பங்களிப்பாகவே இந்நூல் வெளிவருகிறது.

இஸ்லாமிய சிந்தனையின் பாரம்பரிய முறைமை பற்றிய கலந்துரை யாடலுடன் இந்நூல் ஆரம்பமாகிறது. அப்பாரம்பரிய முறைமை பற்றிய விமர்சனமும் மதிப்பீடும் அங்கு இடம்பெறுகிறது. அதனைத் தொடர்ந்து, இஸ்லாமிய சிந்தனையின் முறைமையியலுக்கான அடிப்படைகள் மற்றும் விதிமுறைகள் பற்றி பேசப்படுகிறது. அதற் கான சட்டகம், மூலாதாரங்கள், பிரதான இயங்கு தளங்கள் என்பவை பற்றிய கலந்துரையாடலாக அது அமைகிறது.

அதனைத் தொடர்ந்து, இம்முறைமையியலின் முழுமைத்துவ நோக்கிலான ஆற்றுகை பற்றிய கலந்துரையாடலை நோக்கி நூல் நகர்கிறது. பின்னர் இஸ்லாமிய முறைமை பற்றியும் அறிவியற் கலைகள் பற்றியுமான பொதுவான கலந்துரையாடலுடன் அப்பகுதி நிறைவடைகிறது.

பின்னர், சமூக, மானிட, இஸ்லாமிய அறிவியற் கலைகள் தொடர்பான பிரச்சினைகளை ஆசிரியர் அலசுகிறார். அறிவையும், அறிவியல் நிறுவனங்களையும் இஸ்லாமிய மயப்படுத்துதல் என்ற கண்ணோக்கின் வழியாக மேற்குறித்த அறிவியற் கலைகளுக்கான விஷேட முன்னேற்பாடுகள் பற்றியும் முற்குறிப்புகள் பற்றியும் அங்கு உரையாடுகிறார்.

நூலின் இறுதியில் இரு விடயங்களை ஆசிரியர் கலந்துரையாட லுக்கு உட்படுத்துகிறார். ஒன்று: இஸ்லாமும் எதிர்காலமும். இரண்டு: மனித இனப் பயணத்தின் எதிர்காலம். தான் திருப்தி கண்ட நிலைப் பாடொன்று பற்றிய பிரகடனத்துடன் அப்பகுதியை அவர் நிறைவு செய்கிறார். இஸ்லாமிய மயப்படுத்தல் என்பது உம்மாவின் விவ காரம் என்பதும், அதன் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் விவகாரம் என்பதுமே அந்தப் பிரகடனமாகும். உம்மா தனது நெருக்கடி நிலை

யிலிருந்து வெளியேறுவதற்கான இலக்காகவும் வழிமுறையாகவும் அதுவே அமையும் என அவர் விளக்குகிறார். உம்மா தனது நாகரி கத்தை மீளக் கட்டியெழுப்பி, எழுச்சியை நிலைநிறுத்துவதற்கான வழியும் அதுவே என அவர் முடிக்கிறார்.

சிந்தனா முறைமைகளைச் சீரமைத்தல், வேர்களை நோக்கித் திரும்புதல், பகுதியளவான பார்வையிலிருந்து முழுமொத்தப் பார் வையை நோக்கி நகர்தல், பிரச்சினையின் வெளித்தோற்றத்தை விடுத்து அதன் உண்மை நிலையைக் கண்டறிதல், பொதுவான விதிமுறைகளையும் முழுமொத்த நியமங்களையும் கட்டியெழுப் புதல், இஸ்லாத்தின் வழிகாட்டலுக்கு இயைபாக இயங்கு தளங் களைச் சீரமைத்தல் என்பனவே சிந்தனை மாற்றச் செயற்பாட்டை சரியாகவும் வெற்றிகரமாகவும் ஆக்கிக் கொள்வதற்கான உண்மை யான உத்தரவாதத்தை வழங்கும் என்பதில் ஐயமில்லை. மட்டுமன்றி, அப்போதுதான் உம்மா தனது பாதங்களை சரியான பாதையில் எடுத்து வைப்பதாகவும் அர்த்தப்படும். இந்நூல் சாதிக்க முயலும் பணி அதுதான். அதற்கான பாதையைத் திறந்து விடவே இது விரும்புகிறது.

மதிப்புக்குரிய எழுத்தாளர் சிந்தனை என்ற விவகாரத்திற்கு உரிய அளவை விடக் கூடிய முக்கியத்துவத்தை வழங்கி இருக்கிறார் எனச் சில வாசகர்கள் எண்ணக் கூடும். ஆனால், சிந்தனா விவகாரம் என்பது அதீத முக்கியத்துவமுடைய அடிப்படையான விவகாரம் என்பது விவாதத்துக்கு இடமற்றது. உம்மாவிலுள்ள சிந்தனையாளர்களது ஏகோபித்த முடிவு அது. மறுபுறத்தில், இவ்விவகாரத்தை முதல் நிலைப்படுத்துதல் என்பது பிற விவகாரங்களைப் புறமொதுக்கி விடல் என்று அர்த்தப்படாது. இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த சரியான எழுச்சியொன்றை நோக்கிச் செல்ல ஏனைய அனைத்து விவகாரங்களும் நிறைவான கவனயீர்ப்பைப் பெறுவது அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சிந்தனா நெருக்கடி விவகாரம், அறபு மாந்தரின் மனக் கட்ட மைப்பு, முஸ்லிம் சிந்தையை மீட்டுருவாக்கம் செய்தல், இஸ்லாமிய சிந்தனை மற்றும் முறைமை என்பவை தொடர்பாக ஏராளமான எழுத்தாக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. ஆயினும், ஆசிரியரது இந்த ஆய்வு தனித்துவமான போக்கைக் கொண்டதாகும்.

ஏனெனில், அவர் இஸ்லாமிய உம்மாவின் நெருக்கடியையும், அதன் சிந்தனா மற்றும் முறைமையியல் பரிமாணத்தையும், அதற்கான

வரலாற்று வேர்களையும் எடுத்துக் காட்டும் போது ஆழமான பார் வைகளை முன்வைக்கிறார். இத்துறை பற்றிப் பேசியுள்ள அனேக ஆக்கங்களில் இலகுவில் காண முடியாத தனித்துவமான பார்வைகள் அவை. சில எழுத்தாளர்கள் போன்று பிரச்சினைகளை விரைவாகக் கடந்து செல்லும் பண்பை அல்லது ஒரு பகுதியை விடுத்து மற்றொரு பகுதியை மாத்திரம் கவனிக்கும் பண்பை இவரிடம் காண முடியாது. பல பிரச்சினைகளை இவர் கச்சிதமாகத் தொடர்புபடுத்துகிறார்; பாடங்களையும் படிப்பினைகளையும் திரட்டுகிறார்; பெறுபேறு களைக் கண்டடைவதற்கான முறைமையைப் பின்பற்றுகிறார். இவை அவர் பின்பற்றுகின்ற முழுமொத்தப் பார்வையின் சிறப்பம்சங்க ளாகும். இப்பார்வையே அவரது அடையாளம். இந்த வகையில், அவர் பகுதியளவான, குறித்ததொரு பள்ளி சார்ந்த விவகாரங்களில் அதிகம் கவனம் செலுத்தவில்லை. வாசகரின் கவனம் அவற்றின் பின்னால் அதிகம் சென்று விட அவர் அனுமதிப்பதும் இல்லை. மாற்றமாக, பெறுபேறுகளையும் படிப்பினைகளையும் நோக்கியே அவர் வாசகரைக் கரம் பற்றி அழைத்துச் செல்கிறார். அதனால்தான் ஆசிரியரின் நடை சாதாரண வாசகரின் சிந்தையிலும் உள்ளத்திலும் ஒரே தடவையில் உள்நுழைய சிரமப்படுகிறது. ஆயினும், ஆசிரியரின் நோக்கு, அவர் முன்வைக்கும் அடிப்படையான சிந்தனை என்ப வற்றின் ஒளியில் வாசகர் மீண்டும் அதனை வாசிக்கும் போது விரை வாகவே அதனை ஏற்றுத் திருப்தி காணும் நிலைக்கு வந்து விடுவார்.

வாசகராகிய நீங்கள் இந்நூலில் காண்பது உரைநடை ஆக்கமல்ல. அணியிலக்கண வகையறாவும் அல்ல. பல்வேறு சிந்தனைகளின் சுரங்கம் இது. அந்தச் சிந்தனைகள் உங்கள் அறிவிலும் சிந்தையிலும் உள்நுழைந்து, உங்களது ஏற்பைப் பெறுவதற்காக முண்டியடித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றின் சொந்தக்காரர் ஒரு திடமான போராளி. இஸ்லாமிய அழைப்புப் போராட்டத்தின் துன்பங்களை யும், பிரச்சினைகளையும், சுமைகளையும் தனது கட்டிளமைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம் ஆகிய அனைத்துக் கட்டங்களிலும் அனுபவித்தவர். எனவே அவரைப் பொறுத்த வரை, அவரது 'உம்மா'வின் வேதனைகள் ஓர் உரைநடை ஆக்கத்தின் தலைப்பன்று; இலக்கிய ஆக்கமும் அன்று. மாறாக, அவரது துன்பத் தின் வேதனைப் பெருமூச்சுகள் அவை. அவர் ஒரு கவிஞராக இருந் திருந்தால், தனது அற்புதமான கவிதைகளால் நூலகங்களை மூழ் கடித்திருக்கக் கூடும். தொழில் முறை எழுத்தாளராக இருந்திருந்தால்,

அவரது எழுத்தாக்கங்களின் பட்டியல் பல்கிப் பெருகியிருக்கும். அவ்வளவு சிந்தனைகள் அவரது எழுத்தில் நிரம்பி இருக்கின்றன. தொழில் முறை எழுத்தாக அவரது பணி இருந்திருப்பின், ஒவ்வொரு சிந்தனையையும் வைத்து ஒரு தனி நூலை அல்லது பல நூல்களை அவரால் உருவாக்கி இருக்க முடியும். ஆனால் அவரோ தனித்துவமான சிந்தனையாளர். தனது உம்மாவின் இலக்குகளை பற்றிப் பிடித் திருப்பவர். அவரது வார்த்தைகளில் சிலபோது போராளியின் கடினத் தன்மையும், தளபதியின் திடமும் இருக்கும். அவை சுற்றி வளைக் காமல் இலக்கை நோக்கி நேரடியாகப் பேசும். வாசகரைப் பிடித்து உலுக்கி, இலக்கை நோக்கிச் சுண்டியிழுக்கும்.

இந்நூல் எழுதப்பட்டு பல வருடங்கள் ஆகியிருப்பினும், வெளி யீடு தாமதம் அடைந்து விட்டது. உம்மாவின் நிலைமைகளை இவ்வளவு ஆழமாகவும், முழுமைத் தன்மையோடும், உண்மை யாகவும், வெளிப்படையாகவும் நோக்குவதற்கான தயார் நிலையை உம்மாவின் சிந்தனா மற்றும் சமூகத் தலைமைகள் பெறும் வேளை யொன்றை எதிர்பார்த்திருந்தமையே இத்தாமதத்துக்குக் காரணம். ஒவ்வாமைகள், பின்வாங்கல்கள், தனிப்பட்ட நலன்கள், உடனடி அரசியல் இலாபங்கள் என்பவற்றிலிருந்து விலகிய நோக்காக அது அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருந்தது.

இந்நிலையில்தான், உம்மாவில் இடம்பெற்ற சில பாரிய நிகழ்வு கள் இந்நூலின் வெளியீட்டை சாத்தியப்படுத்தின. அது முன்வைக் கும் பாரிய பிரச்சினைகளை ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்கும் உட்படுத்த வேண்டியது அவசியமாகவும் மாறியது. அந்த வகையில், இந்நூலும் அது சுமந்திருக்கும் முக்கிய விவகாரங்களும் உம்மா வினதும், அதன் சிந்தனா-சமூக-இளைஞர் தலைமைகளினதும் சரி யான கவனயீர்ப்பைப் பெற வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

இந்நூல் எதிர்பார்க்கப்படும் பயனைத் தர வேண்டும் என அல் லாஹ்வைப் பிரார்த்திக்கிறோம். நிச்சயமாக அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் கொண்டவன்.

*புகழனைத்தும் அகிலங்களின் ரட்சகனான அல்லாஹ்வுக்கே!*

**பேராசிரியர் தாஹா ஜாபிர் அல்-அலவானீ**

# முன்னுரை

*சர்வ புகழும் அகிலங்களின் ரட்சகன் அல்லாஹ்வுக்குரியது. சாந்தியும் அருளும் நமது தலைவர் முஹம்மத் (ஸல்) மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் உண்டாவதாக!*

*மதிப்புக்குரிய வாசகரே!*

*தனித்துவமான நூலொன்று உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுகிறது. இது ஒரு தொகுப்போ ஆக்கமோ அன்று. மாறாக, இது ஓர் ஆராய்ச்சி; கண்ணோக்கு; பகுப்பாய்வு. இது எடுத்தாளும் விவகாரம் வாழ்வுப் பயணம் முழுவதும் உள்ளத்தையும் உயிரையும் பெரிதும் அலைக்கழிக்கும் விவகாரம். இந்த நூல் பேசுகின்ற விவகாரம் உம்மாவின் பிரச்சினை அல்ல; மாறாக, விவகாரமே உம்மாதான்.*

*இந்நூலின் ஆசிரியர் சிறுவனாக இருந்த போதே உம்மாவின் வேதனைகளுக்கும் துன்பங்களுக்கும் முன்னால் அவரது அறிவும் உள்ளமும் திறந்து கொண்டு விட்டன. வார்த்தைகளை எப்படி வாசிப்பதென்று கண்கள் கற்றுக் கொண்டது முதல்... எழுத்துக்களை முறையாக உதடுகள் உச்சரிக்கத் தொடங்கியது முதல்... அர்த்தங்களைப் புரிந்து கொள்ளும் வித்தையை உள்ளம் அறிந்து கொண்டது முதல்... உம்மாவின் எழுத்தாளர்களும் கவிஞர்களும் வெளிப்படுத்திய வலிகளை அவர் கண்டு வந்திருக்கிறார்.*

*வஹியின் தொட்டிலில்... இஸ்லாத்தின் தூதர் நடமாடிய தெருக்களில்... கல்விக்கூடக் கதிரைகளில்... புத்தகங்களின் காகிதங்களுக்கிடையில்... வரலாற்றுப் பக்கங்கள் -அதன் இனிப்போடும் கசப்போடும்- அவரது கண் முன்னே விரிந்தன. அந்த வரலாற்றின்*

நாயகர்களோடு அவர் கற்பனையில் வாழ்ந்தார்; அவர்களில் நல்லோரை தேர்ந்தெடுத்துக் கொண்டார். சிலபோது இதயத்தின் சுவர்களெங்கும் கசப்பும் கவலையும் மண்டினாலும், நெருக்கடியின் ஆழம் பற்றிய உள்ளுணர்வு மாற்றத்தை நோக்கிய உறுதியையும் பிடிவாதத்தையும் அவருக்குள் விதைத்தது.

பின்னர் நெடிதான வாழ்வுப் பயணம் அவருக்கு அறிவையும் அனுபவத்தையும் தந்தது. உம்மாவின் பேரனர்த்தங்கள் அவரிடம் ஆழ்ந்த சிந்தனையைக் கிளர்த்தின. உம்மாவின் தடுமாற்றத்துக்கும் சறுக்கலுக்கும் சரிவுக்குமான காரணங்கள் பற்றி உள்ளம் கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தது. அச்சத்துக்கோ ஒளிவுமறைவுக்கோ பழக்கப்பட்டிராத அவரது உள்ளமும் சிந்தையும் இந்தக் கேள்விக்கு சரியான, திருப்திகரமான விடையைக் கண்டடையாமல் ஓயத் தயாராக இருக்கவில்லை.

அறிவு முதுசங்களிலிருந்தும் நவீன கலைகளிலிருந்தும் அவர் பெற்ற ஆய்வறிவும் அனுபவமும் நீண்ட தேடலையும், ஆழ்ந்த நோக்கையும், வேர்களைக் கண்டறியும் ஆவலையும், விதிமுறைகளையும் தீர்வுகளையும் பெறுகின்ற திறனையும் அவருக்குப் பெற்றுக் கொடுத்தன.

வெறுமனே ஒப்பாரி வைப்பதோடு மாத்திரம் அவர் திருப்தியடையவில்லை. கொப்பளிக்கும் கோபமோ பொங்கிப் புரளும் உத்வேகமோ அவருக்குப் போதுமாக இருக்கவில்லை. அவரைப் பொறுத்த வரை உம்மாவின் விவகாரம் என்பது ஆழ்ந்த புரிதலையும் தேடலையும் பகுப்பாய்வையும் வேண்டி நிற்கும் சிக்கலான விவகாரமாகவே தோன்றியது.

அதற்காக அவர் தனது மானசீக மற்றும் செயலார்ந்த அனைத்துச் சக்திகளையும் செலவிட்டார்; தனது முழு அறிவையும் அனுபவத்தையும் அதில் ஈடுபடுத்தினார்; உம்மாவின் பகல்களிலும் இருள்களிலும் சுற்றியலைந்தார்; அதன் வரலாற்றையும் நிகழ்வுகளையும் புரிந்து கொள்ளவும் அவற்றின் திசைவழிகளைத் தேடிச் செல்லவும் முயன்றார். அவர் தேடியதெல்லாம் உண்மை ஒன்றைத்தான். அவர் கண்டடைய விரும்பியதெல்லாம் சிகிச்சை ஒன்றைத்தான். உம்மா தனது சோதனைகலிருந்து வெளியேறி, ஆரோக்கியமான பாதையில் பயணிப்பதற்கு ஒரு மனிதன் தன்னிடமுள்ள எதனைச் செலவிடவும் தயங்கலாகாது என்பதே அவரது சிந்தனையாக இருந்தது.

*மதிப்புக்குரிய வாசகரே!*

இதனை எழுதிக் கொண்டிருக்கும் நூலாசிரியர் தனது உள்ளத்தின் அடியாளத்திலிருந்தே பிரச்சினையைப் பார்க்கிறார். ஏனெனில் நோய் அவருடைய நோய். வரலாற்று நிகழ்வுகளும் இறந்தகாலப் படிவுகளும் நிகழ்கால வேதனைகளும் எதிர்கால ஏக்கங்களும் அவரது இதயச் சுவர்களிலும் மூளை மடிப்புகளிலும் நிறைந்திருக்கின்றன.

நோயைப் புரிந்து கொண்டு நிவாரணம் பெறும் மார்க்கங்களைக் கண்டடைய முனைகின்ற அவரால் அந்த நோயின் துன்பத்தையும் வேதனையையும் நன்றாகவே உணர முடிகிறது. எல்லாத் துன்பங்களையும் தனக்கேற்பட்ட துன்பங்களாகவும், எல்லா அனர்த்தங்களையும் தனக்கு வந்த அனர்த்தங்களாகவும், எல்லா இடர்களையும் தன்னைப் பாதிக்கும் பேரிடர்களாகவுமே அவர் பார்க்கிறார். எனவே அவர் இங்கு எழுதுகின்ற எதுவும் விமர்சனமோ காயப்படுத்தலோ பெருமையோ வரம்பு மீறலோ அன்று. மாறாக, அது புரிதலின் வெளிப்பாடு. கூர்மையாகவும் கசப்பாகவும் இருந்தாலும் அது உண்மையானது; வெளிப்படையானது.

*கண்ணியமான வாசகரே!*

நூலாசிரியர் இந்தத் தொனியில் உங்களோடு பேசினாலும், 'உம்மா' வின் ஆழத்தில் புதைந்திருக்கும் நன்மையையும் சிறப்பையும் சக்தியையும் அதன் நெற்றியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இறை நம்பிக்கை, அர்ப்பணம், ஆன்ம சுத்தி என்பவற்றையும் அவர் புறந்தள்ளி விடவில்லை. அதேவேளை, இங்கு அவர் மேற்கொண்டிருக்கும் பணி அந்தச் சிறப்புக்களை மெச்சுவதோ, தவறுக்கு நியாயம் தேடுவதோ அன்று. மாற்றமாக, இயலாமையை இனங்காணவும், பலவீனத்தைக் கண்டறியவும், இழிவின் மூலவேரைத் தொட்டறியவும், ஒடுக்கப்பட்டோரின் துன்பத்தை உற்றுணர்ந்து நீக்கும் உபாயத்தை தேடிப் பெறவுமே அவர் தன்னை அர்ப்பணித்திருக்கிறார்.

உம்மாவையும் அதன் சாதனைகளையும் அதன் உயர்வுக்காக உழைத்த புத்தி ஜீவிகளையும் கற்றறிவாளர்களையும் தலைவர்களையும் இளைஞர்களையும் போராளிகளையும் மதித்துப் போற்றுவதில் அவர் குறை விட்டிருந்தால், உம்மாவின் பிரச்சினையை அடையாளப்படுத்தவும் சிகிச்சை பெறவும் அவர் முயற்சி மேற்கொண்டிருந்தமையுமே அதற்கான நியாயமான காரணமாகும்.

இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மீதோ கூற்றுகள் மீதோ அவருக்கு எந்தப் பிடிவாதமும் இல்லை. அவற்றில் தவறேதும் தோன்றினால் அதனை தெளிவுபடுத்திக் கொள்ள அவர் அஞ்சப் போவதுமில்லை. உம்மாவின் இன்றைய வீழ்ச்சி நிலைக்கு இட்டுச் சென்ற காரணங்கள் பற்றி அவர் கண்டடைந்த புரிதலை வாசகருடன் இணைந்து ஆராய்வதே இங்கு அவரது முற்றுமுழுதான நோக்கமாகும்.

இந்நூல் ஒரு சொல்லாடலுக்கும் கருத்துப் பரிமாறலுக்கும் இட்டுச் சென்று, அதனடியாக உண்மையைக் கண்டடையவும் தடைகளைத் தாண்டவும் துன்பங்களைக் துடைக்கவும் மார்க்கம் பிறக்குமாயின், அப்போது அவரை விட அகம் மகிழக் கூடிய வேறொருவர் இருக்க மாட்டார். அது இந்நூல் கண்டடைந்த முடிவுகளோடு உடன்படு வதாய் இருப்பினும் சரி; மாற்றமாய் அமைந்தாலும் சரி!

சத்தியத்தை உரைப்பதன் நோக்கம் பிரச்சினையின் ஆணிவேர் பற்றிப் பேசி, தீர்வுகளையும் பதிலீடுகளையும் கண்டடைவதுதான் என்றிருப்பின், அந்த சத்தியத்தை விடச் சிறந்த வார்த்தை எதுவுமில்லை.

இந்நூல் முயல்வதெல்லாம் கண்ணியமும் ஆற்றலும் வாய்ந்த முஸ்லிம் 'உம்மா' ஒன்றின் பிரதிமையை வரைவதற்கு வினைமை மிக்க பங்களிப்பொன்றை வழங்குவதுதான். அத்தகைய உம்மாவின் தனிநபர்களிலோ சமூகங்களிலோ நிறுவனங்களிலோ எந்தப் பிளவும் பலவீனமும் இருக்காது. சத்தியத்தையும் நேர்வழியையும் ஆற்றலை யும் அது தனது சக்தி, செயற்பாடு, முன்மாதிரி, யதார்த்தம், இலக்கு, வழிமுறை முதலிய அனைத்திலும் ஸ்தூலப்படுத்தும்.

இந்நூல் உருவத்தில் சிறியதாயினும் மேலோட்டமான, இலகு வான வாசிப்புக்கு உரியதல்ல. ஏனெனில் இதன் பேசுபொருள் சிக்க லானது; பல்பக்கத்தன்மை கொண்டது; பரந்துபட்ட கிளைகளை உடையது; வரலாறு நெடுகிலும் உம்மாவின் பரம்பெல்லையில் வாழ்ந்த சமூகங்களையும் தலைமுறைகளையும் நூற்றாண்டுகளை யும் உள்ளடக்கியது. இதன் வசனங்களைப் பின்தொடர்ந்து செல் வதற்கு வரலாற்றறிவு அவசியம்; மனித இயல்புகள் பற்றிய புரிதல் அவசியம்; சமூகங்களிலும் நாகரிகங்களிலும் தொழிற்படுகின்ற தெய்வீக விதிகள் பற்றிய தெளிவும் அவசியம். அப்போதுதான் நூலாசிரியர் எடுத்தாளும் விவகாரங்களையும் சமிக்ஞைகளையும் பெறுபேறுகளையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

கண்ணியமான வாசகர்கள் தங்கள் நேரத்தின் ஒரு பகுதியை ஒதுக்கி பொறுமையாக இந்நூலை வாசிக்க வேண்டும். இந்நூல் விவாதிக்கும்

விவகாரங்களை கால ஓட்டத்தில் அவர்கள் ஆய்வுக்கும் தேடலுக்கும் உட்படுத்த வேண்டும். அப்போதுதான் ஆசிரியர் சொல்ல நாடியதைப் புரிந்து கொள்ளல் சாத்தியமாகும். அவ்வாறன்றி அவசர அவசரமாக இந்நூலின் பக்கங்களைப் புரட்டிச் செல்லும் வாசகர் மிக மேலோட்டமான, முக்கியத்துவமற்ற சில அம்சங்களை மட்டுமே கண்டு கொள்வார். இதில் வரும் வார்த்தைகளையும் பொருள்களையும் ஆழ்ந்த நோக்குக்கும் ஆய்வுக்கும் உட்படுத்தாமல், தனக்குப் பரிச்சய மான, பழகிப்போன கருத்தாக்கங்களின் மீதே அவற்றை ஏற்றிக் காணவும் அவர் முயல்வார். இது பார்வையை மேலும் மங்கலாக்கி, பாதையை இன்னும் இருளடையச் செய்து விடும். ஏனெனில், இந்நூல் அது விவாதிக்கும் அடிப்படையான விவகாரங்களில் கவனம் செலுத்திய அளவுக்கு விலாவாரியான தகவல்களிலோ சான்றுகளிலோ அபிப்பிராயங்களை விவாதிப்பதிலோ கவனம் செலுத்தவில்லை.

உம்மாவின் உயர்பீடங்களில் அமர்ந்திருக்கும் அறிவியல், கலாசார, தலைமைத்துவ, சமூகவியல் வட்டாரங்களில் இந்த நூலும், அது உள்ளடக்கியிருக்கும் சிந்தனையும் கண்ணோக்கும் உரிய கவனத்தைப் பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அது கிளர்த்த விழைகின்ற 'உம்மாவின் சிந்தை நெருக்கடி' மற்றும் 'முழுமைத்துவ நோக்கின்மை' என்ற விவகாரங்கள் அங்கு கவனயீர்ப்புப் பெற வேண்டும். பதிலீடுகளும் தீர்வுகளும் முன்வைக்கப்பட வேண்டும். ஆய்வையும் சிந்தனையையும் தூண்டக்கூடிய வெளிப்படையானதும் வினைமை மிக்கதுமான உரையாடல் ஒன்றின் தொடக்கமாக அது அமைய வேண்டும். முஸ்லிம் சிந்தையை இரை கொண்டுள்ள இப் பேரிடரின் அடியாளத்தை உண்மையாகவே சென்று தொட வேண்டும் என்பதற்காகவும், அதற்கு சிகிச்சையளிக்கக் கூடிய மார்க்கங்களையும் சாதனங்களையும் உரியளவு கண்டடைய வேண்டும் என்பதற்காகவும் நமது மன அச்சங்களையும் தடைகளையும் நாம் களைந்து விட வேண்டும்.

உம்மாவிலுள்ள எந்தவொரு குழுமத்தினதும் அல்லது புத்திஜீவிகளதும் அந்தஸ்தையும் மதிப்பையும் குறைத்துக் காட்டும் எந்த நோக்கமும் இப்பணியில் இல்லை. ஏனெனில் இந்த உம்மாவின் அங்கத்தவர்களும் அறிஞர்களும் முன்னோர்களும் தமது உள்ளங்களில் சுமந்திருந்த விசுவாசம், தூய்மை, அர்ப்பண சிந்தை, போராட்டம் என்பவற்றை நூலாசிரியர் நன்கறிவார். நிச்சயமாக இப்பணி உம்மாவின் வரலாற்றுப் போக்கையும் அதன் நிகழ்வுகளது திசைவழியையும்

விடயவாரியாகப் புரிந்து கொள்ளும் யத்தனமே அன்றி வேறில்லை. ஏனெனில் உம்மாவின் வரலாற்றுப் போக்கில் இடம்பெற்ற அந்த நிகழ்வுகள்தான் பார்வைத்தெளிவோ வழிகாட்டலோ பதிலீடுகளோ அற்ற பாதைகளை நோக்கி மனிதர்களையும் தேசங்களையும் இட்டுச் சென்றன. எனவே இது கண்டனமோ காயப்படுத்தலோ அன்று. ஆறுதல் கூறுவதற்கும் மன்னிப்புக் கோருவதற்குமான உரையும் அன்று. மாற்றமாக, இது ஒரு புரிதலும் பகுப்பாய்வும் மட்டுமே. நமது மனதிலும் சிந்தையிலும் மறைந்திருக்கும் தடைகளை நீக்குவதற்கு இதய சுத்தியோடு உழைப்போரின் எதிர்பார்ப்பை நிதர்சனமாக்கவே இந்நூல் விழைகிறது.

உம்மாவின் சிந்தனையாளர்களும் கற்றறிவாளர்களும் தலைவர்களும் இளைய தலைமுறையினரும் தமது பணியைச் சுமக்க முன்வர வேண்டும். வெளிப்படையாகவும் உண்மையாகவும் அதனை அவர்கள் செய்ய வேண்டும். உம்மாவின் சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான வழிவகைகளைக் கைக்கொள்ள வேண்டும். அடையாளங்களையும் இயல்புகளையும் மறுதலிப்பதால் இது நிறைவேறாது. மூல வளங்களை மேலும் அதிகரித்துக் கொள்வதாலோ, இன்னுமின்னும் அர்ப்பணங்கள் செய்வதாலோ இது நடந்து விடாது. பெறுமானங்களையும் கொள்கைகளையும் நோக்கி மேலும் அழைப்பதனாலும் இது நிகழப் போவதில்லை. உபன்யாசங்களையும் வெற்று உணர்ச்சிகளையும் கூட்டிக்கொள்வதால் கூட இது சாத்தியப்படாது.

சிந்தனா முறைமையைச் சீர்திருத்தினால் மாத்திரமே இது கைகூடும். கல்விமுறைச் சீர்திருத்தத்துக்கும், உம்மாவின் சமூகவியல் ஒழுங்குகளைச் சீர்திருத்துவதற்குமான அடிப்படையும் அதுவே. மனிதர்களது ஆக்க சக்தியைப் புனரமைத்து, அறிவு, ஆற்றல், செயலாற்றுகை என்பவற்றின் கொடுமுடியைக் கைப்பற்றும் வழியும் இச் சிந்தனைச் சீர்திருத்தமே.

நோயை இனங்காணலும், சிகிச்சையை அறிதலும், சீர்திருத்தத்தின் தொடங்கு தளங்களுமே இந்நூலின் பேசுபொருளும் உள்ளடக்கமும் ஆகும். எவ்வளவு அபிப்பிராய பேதம் காணப்பட்ட போதிலும், சத்தியத்தையும் உண்மையையும் காண விழைகின்ற, இதயசுத்தி கொண்ட அனைத்துச் சிந்தனையாளர்களதும் புத்திஜீவிகளதும் ஆய்வுப் பொருளும் அதுதான். அந்த வகையில், எண்ணத் தூய்மை மற்றும் விடயவாரியான விமர்சனம் என்பவற்றின் மூலமாக கருத்துக்கள் முதிர்ச்சியடையும்; ஒருமித்த இலக்கு உருவாகும். பார்வை பரிபூரணமடையும்; வழிமுறைகள் திரட்சியடையும்.

**இடிபாடுகளின் கீழ்...**

*ஆரம்பமாக இந்நூல் அதன் ஆசிரியரது விரிவுரைகளதும் ஆய்வுகளதும் தொகுப்பாகும். வகுப்பறை ஆசனங்களில் அவர் அமர்ந்திருந்த காலம் முதல் அந்தப் பயணம் ஆரம்பித்தது. எனவே அந்த விரிவுரைகளையும் ஆய்வுகளையும் உசாவுவோருக்கு இன்னும் பல வகை விளக்கங்களும் தெளிவுகளும் கிடைக்கக் கூடும். குறித்த பிரச்சினையை ஒரே நூலில் சுருக்க முனையும் இத்திட்டத்தினுள் அந்த அனைத்து விளக்கங்களையும் கொண்டு வந்து விடல் சாத்தியமன்று. 1984 இல் (ஹி.1404) அமெரிக்காவிலுள்ள இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் பொது இயக்குனராக முழுநேரம் பணியாற்றத் தொடங்கிய காலத்திலிருந்தே இந்த விரிவுரைகளையும் ஆய்வுகளையும் ஒரே நூலில் அவர் தொகுக்க ஆரம்பித்து விட்டார்.*

*நிறுவனப் பணிகளில் மூழ்கியிருந்ததன் காரணமாக நூலின் பணியை நிறைவு செய்ய இரண்டு ஆண்டுகள் எடுத்தன. இக்காலப் பிரிவில் நூல் விவாதிக்கின்ற பல விவகாரங்கள் தொடர்பாக பல நாடுகளிலும் மேடைகளிலும் விரிவுரைகள் நடாத்தப்பட்டன. குறித்த பிரச்சினை தொடர்பாக நூலில் முன்வைக்கப்பட்டுள்ள கருதுகோள்கள் சரியானவை என்பதையும், முக்கியமானவை என்பதையும் அந்த அனைத்துச் சந்தர்ப்பங்களும் உறுதி செய்தன. மட்டுமன்றி, இவ்விவகாரத்தின் பல்வேறு பரிமாணங்களை தொட்டுக் காட்டுவதிலும், ஆழமாக அணுகுவதிலும் பல எழுத்தாளர்கள் 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவன'த்துடன் ஒத்துழைக்கவும் தொடங்கினர். பக்க உளவியற் காரணிகள் விலகி, விரிவுரைகள் மூலமாகவும் கலந்துரையாடல்கள் மூலமாகவும் நூலின் அனேக விடயங்கள் செரிமானம் அடையும் நிலை வரை அதன் வெளியீடு தாமதப்படுத்தப் பட்டது.*

*இன்று நூலை வெளியிடவும், அதன் உள்ளடக்கத்தை உம்மாவின் கற்றறிவாளர்களதும் சிந்தனையாளர்களதும் கவனத்துக்கு முழுமையாகக் கொண்டு வரவும் உறுதி பிறந்திருக்கிறது. இதன் பரிமாணங்களை இன்னும் ஆழப்படுத்துவதிலும், அவற்றின் பிரயோகங்களை நோக்கி நகர்வதிலும் அவர்களது ஒத்துழைப்புக் கிடைக்க வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பு. மட்டுமன்றி, சமகால நிகழ்வுகளின் முன்னால் இறுதியாக ஒருமுறை நின்று, அவற்றின் மத்தியில் இந்நூலின் பேசுபொருள் பெறும் நிலை என்ன என்பதைக் கண்டறியும் முனைப்பும் நமக்கிருந்தது.*

சமகால நிகழ்வுகள் என்பதனால் நாம் கருதுவது அறபு-இஸ்லாமிய முரண்பாடுகளோ மோதல்களோ துன்பியல் நிகழ்வுகளோ அன்று. அவ்வாறு கருதுவதாயின், பல நூற்றாண்டுகளாக ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்த நிகழ்வுகளை திரும்பத் திரும்ப தொட்டுப் போவதாகவே அது அமையும். அதேவேளை, ஸ்பெய்னில் உம்மா தொலைந்து போனதும், குத்ஸிலும் பாலஸ்தீனப் பூமியிலும் அது உற்ற காயங்களும் எவ்வகையிலும் குறைந்தவை அல்ல என்பது வேறு விடயம்.

கிழக்கு ஐரோப்பாவில் சோவியத்தின் மார்க்ஸிய சக்கராதிபத்தியம் சரிவுற்றதையும், சோவியத் ஒழுங்கு நிலைகுலைந்ததையும், அதன் அரசியல்-பொருளாதார-சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்ட வெடிப்புகளையுமே சமகால நிகழ்வுகள் என்பதன் மூலம் நாம் கருதுகின்றோம். இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ள கண்ணோட்டத்தின் படி, இந்நிகழ்வுகளின் முக்கியத்துவம் என்பது -முஸ்லிம் உம்மாவையும் அதன் நாகரிகப் பிரச்சினையையும் பொறுத்தவரை- ஒரு பேரரசின் சரிவினால் ஏற்பட்ட அரசியல் முக்கியத்துவத்தைக் குறிக்கவில்லை. மேற்கின் கொடுநகப் பிடியிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள சில நாடுகள் அந்த ஆட்சியை ஒரு கேடயமாகக் கொண்டிருந்தன என்பது உண்மைதான். ஆயினும், இந்நிகழ்வுகளின் முக்கியத்துவம் என்பது உண்மையில் சிந்தனா ரீதியானதும் நாகரிகம் சார்ந்ததும் ஆகும்.

இங்கு நாம் அறிந்து கொள்ளவும் நினைவில் கொள்ளவும் வேண்டிய ஒரு விடயம் உள்ளது. மார்க்ஸிய இயக்கம் என்பது அடிப்படையில் மேற்கு சிந்தனையிலும் சமூகவியலிலும் சீர்த்திருத்தத்தை மேற்கொள்ள விரும்பிய ஓர் இயக்கம். கார்ல்மாக்ஸ் என்பவர் மேற்கின் சிரேஷ்ட தத்துவ ஞானிகளுள் ஒருவராகவும், அதன் நவீன சிந்தனையாளர்களுள் ஒருவராகவும், சீர்த்திருத்த இயக்கத் தலைவர்களுள் ஒருவராகவும் கருதத் தக்கவர். மேற்கு தேசங்களுக்கும், ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் மார்க்கஸியப் புரட்சி நாடுகளுக்கும், மேற்கைரோப்பாவின் இத்தாலி, பிரான்ஸ், கிரேக்கம் போன்ற நாடுகளில் தோன்றிய மார்க்ஸியக் கட்சிகளுக்கும் இடையில் நிகழ்ந்த ஊடக யுத்தமானது கார்ல்மாக்ஸ் பற்றிய மேற்குறித்த உண்மையை எவ்வகையிலும் மாற்றியமைத்து விட முடியாது. ஆயினும், இந்த ஊடக யுத்தமே மார்க்ஸிய இயக்கம் என்பது மேற்கைரோப்பிய சிந்தனைக்கும் நாகரிகத்துக்கும் எதிரான அன்னிய இயக்கம் என்று பலரை நம்பவும் வைத்தது.

மார்க்ஸிய இயக்கத்தின் உள்ளீடே நவீன மேற்கைரோப்பிய சிந்தனா-நாகரிகத் தளங்களைச் சுத்தி செய்து, முழுமையான தர்க்க முடிவுகளை நோக்கி அவற்றைக் கொண்டு செல்வதுதான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய நாகரிகத்தின் தாக்கத்தினால் எழுந்த மேற்கைரோப் பிய நாகரிகம் அதன் பயணத்தின் ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதம் (குறிப்பாக மத்திய காலப்பிரிவில்) பிறழ்விலும் சீர்கேட்டிலும் மூட நம்பிக்கையிலும் மூழ்கியிருப்பதைக் கண்டது. சீர்த்திருத்தத்துக்கும் கோளாறுகளை சரிசெய்வதற்குமான உண்மையான அறிவார்ந்த ஆதரவு எதுவும் மேற்கைரோப்பிய நாகரிகத்துக்கு அம்மதத்திலிருந்து கிட்டவில்லை. எனவே அந்த நாகரிகம் பகுத்தறிவை தனது மூலா தாரமாகவும் சடப்பொருளை தனது இலக்காகவும் எடுத்துக் கொண்டு, மதத்தை அதன் கிரியைகளோடும் பாரம்பரியங்களோடும் தேவால யங்களின் எல்லைக்குள் நிறுத்தி வைத்தது. சமூக வாழ்வை நெறிப் படுத்தவோ கையாளவோ மதத்திற்கு எந்த அவகாசத்தையும் அந்த நாகரிகம் வழங்கவில்லை. இப்படித்தான் வாழ்வின் பல்வேறு பரிமா ணங்கள் குறித்து பகுத்தறி நோக்கு வழங்கிய பலத்திலும், தேவாலய முன்றல்களில் எஞ்சி நின்ற மிகப் பலவீனமான பண்பாட்டு-ஆன்மீகப் பலத்திலும் மேற்கு நாகரிகத்தின் சக்கரங்கள் உருளத் தொடங்கின.

இத்தகைய போலிப் புனைவானது ஆன்மீக வெறுமை நிலை யொன்றையும் கவனிக்கத்தக்க கோளாறோன்றையும் அங்கு ஏற் படுத்தி விட்டிருந்தது. கால ஓட்டத்தில் அதன் விளைவுகளும் விஷ்வரூபம் எடுக்கத் தொடங்கின. பிரான்ஸியப் புரட்சியும் அதன் சிந்தனா ஜாம்பவான்களும் பகுத்தறிவை தெய்வமாக்கி, அதற்கு கோயில்களை அமைக்க முயலும் அளவுக்கு நிலைமை முற்றியிருந் தது. எனவே இந்நெருக்கடி நிலையிலிருந்து வெளியேறும் மார்க்கத்தை ஐரோப்பிய நாகரிக சிந்தனை தேடலானது.

இத்தகைய போலிப்புனைவை இல்லாதொழிக்கத் தோன்றிய இயக்கங்களுள் மிகத் தெளிவாகவும் அதியுயர்ந்த நிலையிலும் வந்ததே மார்க்ஸிய சிந்தனையாகும். மேற்குறித்த போலித்தனத்தை ஒழித்து, மேற்கு நாகரிகத்தின் அடிப்படைகளை அதன் அதியுயர் நிலைக்கு கொண்டு செல்லும் முனைப்புடன் அச்சிந்தனை செயற்படலானது. அந்த வகையில், பிரபஞ்சம் என்பது சடவுலகே அன்றி வேறில்லை என்ற சிந்தனை வலுப்பெற்றது. மனிதனும் அவனது முடிவும் அவன் கைகளிலேயே விடப்பட்டன. இறை நிராகரிப்பும் நாத்திகமும் மதப்

புறக்கணிப்பும் பகிரங்கமாக அறிவிப்புச் செய்யப்பட்டன. மனித னுக்கு வழிகாட்டுவதிலும், வாழ்வில் அவனது ஆன்மீக-பண்பாட்டு இலக்கை திசைப்படுத்துவதிலும் கார்ல்மார்க்ஸின் திட்டத்திலோ அவரது சீர்த்திருத்தச் சிந்தனையிலோ ஆன்மாவுக்கு அல்லது 'வஹி' என்னும் வேத வெளிப்பாட்டுக்கு எந்த இடமும் இருக்கவில்லை.

இந்த அடிப்படைகளின் மீது கட்டமைந்த மார்க்ஸிய போல்ஷ்விக் அனுபவம், நீண்ட பல தசாப்தங்களில் பல கண்டங்களையும் ஊட றுத்துப் பரவியது. இறுதியில் அந்த அனுபவம் (ஆப்கானில் அது நிகழ்த்திய விழுமியமற்ற கொடூரப் போரைத் தொடர்ந்து) அரசியல்-சமூக-பண்பாட்டு-பொருளாதாரப் பேரிடரின் காரணமாக தோல்வி யைத் தழுவியது. எதனை நிலைநிறுத்த அது தோன்றியதோ, எத்தகைய போலித்தனத்தை எதிர்கொண்டு சரிசெய்ய தன்னால் முடியும் என அது எண்ணியதோ, அதற்கு மறுகிடையான நிலையில் அது முடிவுக்கு வந்தது.

இத்தோல்வி கண்டு மேற்குலக ஊடகங்களில் வெற்றிப் பேரிகை கள் முழங்கின. மார்க்ஸிய ஒழுங்கின் இந்த வீழ்ச்சியும் தோல்வியும் தனது முதலாளித்துவ ஒழுங்கிற்கு கிடைத்த வெற்றியே என மேற்கு ஊடகங்கள் சாதிக்க முயன்றன; இன்றும் முயன்று வருகின்றன. பல மனிதர்கள் இதனை நம்பி விடவும் தயார்.

இன்று நம் முன்னுள்ள சர்வதேச நாகரிக யதார்த்தத்தின் அசல் பிரதிமை அழிந்து விடாமல் இருக்கவும், பல தசாப்த வெறுமைக்கும் நிராசைக்கும் பிறகு நாம் விழித்துக் கொள்ளவும் வேண்டுமெனில், ஓர் உண்மையைப் புரிந்து கொள்வது அவசியம். அதாவது, மார்க்ஸிய ஒழுங்கானது பொருளாதார-ஆன்மீக-சமூகவியல் நெருக்கடியின் கீழ் சரிந்து கொண்டிருக்கும் அதே வேளை, மேற்குலகும் அதன் தேசங் களும் மிகக் கூர்மையான பொருளாதார-விழுமிய நெருக்கடியொன் றினூடாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றன என்ற உண்மையே அதுவாகும். மேற்கு சமூகங்களை மனக் கலக்கமும், சமூகப் பாது காப்பின்மையும் கடுமையாகப் பாதிக்குமளவு இந்நெருக்கடி அச்சு றுத்திக் கொண்டிருக்கின்றது.

மேற்கு மனிதனது ஆன்மீகப் பரிமாணத்தில் ஏற்பட்ட பலவீன மும், 'வஹி'யின் வழிகாட்டலின்றி பகுத்தறிவுக்கும் வரையறுத்த புரிதலுக்கும் அவன் முழுமையாக விடப்பட்டதுமே இன்று மேற் கிலும் கிழக்கிலும் பரவியிருக்கின்ற மேற்கு நாகரிக நோய்க்கான அடிப்படைக் காரணமாகும்.

மேற்கு நாகரிகம் தனது ஆன்மாவினதும் தெய்வீகத் தூதினதும் எச்ச சொச்சங்களைக் கூட சிதைத்தழித்து, பகுத்தறிவையும் சடப் பொருளையும் மாத்திரம் சார்ந்து நிற்க எவ்வளவுக்கெவ்வளவு முயன்றதோ அவ்வளக்கவ்வளவு அதன் நிலை மோசமடைந்தது; நெருக்கடி கடுமையாகியது.

தோல்வி கண்ட மார்க்ஸிய மறுசீரமைப்பு அனுபவத்தின் சரி வானது மேற்கு நாகரிகத்தையும் அதன் அடிப்படைகளையும் மிகப் பெரும் நெருக்கடிக்கும் பேரிடருக்கும் உள்ளாக்கியது மட்டுமன்றி, பூச்சிய நிலைக்கும் நிராசைக்கும் தள்ளியிருக்கிறது.

மறுபுறத்தில், மார்க்ஸியத்தை தோல்வியடைந்த மேற்கத்திய சித் தாந்தச் சீர்த்திருத்த இயக்கமாகப் பார்ப்பது வேறு; பொருளாதாரத்தை முகாமை செய்வதில் அரசு தலையிட்டு 'பதப்படுத்தப்பட்ட' பெறு பேற்றைக் கொண்டு வருதல் என்பது வேறு. இந்த இரண்டுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

அரசும் சமூகமும் எல்லா நிலைகளிலும், எல்லாக் கட்டங்களிலும், எல்லாத் துறைகளிலும் தலையீடு செய்தல் தவறானது. அவ்வாறே தனிநபர்கள் எந்த வழிகாட்டலோ மேற்பார்வையோ இன்றி, கேள் விக்கும் நிரம்பலுக்கும் ஏற்ப அவரவர் இயலுமைகளால் மாத்திரம் கட்டுப்படுத்தப்படும் அளவுக்கு கடிவாளமற்று விடப்படுவதும் தவறானது.

எனினும், ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பல நூற்றாண்டுகளாக மேற் கத்திய ஆதிக்கத்தின் காரணமாக அரச தலையீடு என்னும் இக்கருத் தாக்கதுக்குப் பணிந்தே வந்திருக்கின்றன. இதனால் அவற்றின் மோச மான நிலை தொடர்ந்ததுடன், அவை இன்னும் இன்னும் மோசம டைந்தன. ரஷ்யாவினதும் அதன் ஒன்றிய நாடுகளதும் கைத்தொழில், தொழிநுட்ப வல்லமையுடன் ஒப்பிடவே முடியாத வீழ்ச்சி நிலைக் கும் அவை சென்றன.

இந்நெருக்கடியிலிருந்து கிடைக்கக்கூடிய பாடமொன்று இருக்கு மாயின், வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் தனிநபரது வகிபாகத் துக்கும் சமூகத்தின் வகிபாகத்துக்கும் இடையில் சமநிலை பேணப் பட வேண்டும் என்பதே அந்தப் பாடமாகும். ஏனெனில், அதன் மூலம்தான் நன்மையான சீர்த்திருத்த நோக்குடன் முன்னெடுப்புக் களை மேற்கொள்ளவும் உழைக்கவும் அர்ப்பணிக்கவும் தனிநபர் களுக்கு பரந்த வாய்ப்பு ஏற்பட்டு, வாழ்வுக்கும் வளப்படுத்தலுக்கும்

பிரதிநிதித்துவத்துக்குமான உரிமையைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டும். அதேவேளை பலவீனர்களைப் பராமரிப்பதும், வறியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதும், சகோதரத்துவத்தையும் சமூக கூட்டுறவையும் உத்தரவாதப்படுத்துவதும் சமூகத்தின் கடமையாகும். இஸ்லாம் அழைக்கும் சமநிலை இதுதான்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ரஷ்யா கடந்து வந்த கைத்தொழில் பின்னடைவுக் கட்டத்தின் போது அரசு தலையிட்டதன் மூலமாக கைத்தொழிலுக்கும் தொழிநுட்பத்துக்கும் அவசியமான அம்சங்களைக் கட்டியெழுப்புவதில் அது வெற்றி கண்டது. எனினும், தேவைக்கு அதிகமாக மிகைப்படுத்தப்பட்ட முழுமைத்துவ சமூகக் கருத்தாக்கத்தின் பின்புலத்திலேயே இதனை அது சாதித்தது. இதற்கான விலையும் அதிகமாக இருந்தது. இதனால், சமுதாயப் பிடியிலிருந்து விடுபட்டு உழைப்பிலும் முயற்சியாண்மையிலும் சுயாதீனமடையும் தனிநபர் ஆற்றல் அங்கு பின்தள்ளப்பட்டது. இறுதியில் அந்த ஒழுங்கு அதிகாரக் கொடுங்கோன்மைப் பிடியின் கீழ் வீழ்ந்து சிதறியது.

நவீன நாகரிகத்தின் நெருக்கடி இன்னும் தீரவில்லை என்பதுதான் இந்நிகழ்வுகளில் கிடைக்கும் உண்மையான பாடமாகும். மட்டுமன்றி, அது மேலும் மேலும் விஷ்வரூபம் எடுத்து வருகிறது. அதன் நோய்க் குறிகள் இன்னும் பரவிக் கொண்டிருக்கின்றன. ரட்சணியத்துக்கும் சிகிச்சைக்குமான தேவை இப்போது மிக அதிகம். எனவே, இஸ்லாத்தின் தூதை அதன் அனைத்து சமநிலைகளோடும் துலக்கிக்காட்ட நாம் பன்மடங்கு யத்தனத்தைச் செலவிட வேண்டியுள்ளது. ஏகத்துவத்தின் தர்க்கம், பூமியின் பிரதிநிதித்துவ இலக்கு, வஹி, பகுத்தறிவு, பிக்ஹு ஆகிய அனைத்து அறிவு மூலங்களதும் ஒருங்கிணைவு, மனிதனது ஆன்மீக-பண்பாட்டு-சட உள்ளீடுகளின் சமநிலை, தனி மனிதனதும் சமூகத்தினதும் வகிபாத்திரம் முதலிய அனைத்தையும் முன்னிறுத்தி இந்த உழைப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். அப்போதுதான் இஸ்லாத்துக்குச் செய்ய வேண்டிய கடமையை நாம் சரியாகச் செய்தவர்கள் ஆவோம்; முஸ்லிம்களைக் கடைத்தேற்றுவோம்; மனித இனத்துக்கு நன்மை புரிவோம்; சிறந்த சீர்த்திருத்த நாகரிகத்துக்கான தூண்களை நட்டவர்களாவோம்.

சரியானதும் பலமானதுமான சிந்தனையே இது போன்ற விவகாரங்களின் ஆரம்பமாகவும் இறுதியாகவும் இருக்கும். அந்தச் சிந்தனையானது சரியான ஆன்மீக-நம்பிக்கைக் கோட்பாட்டு நோக்குடன்

*எந்த முரண்பாடும் இன்றி ஒருங்கிணைய வேண்டும். ஏனெனில், வரலாற்றில் தோன்றிய எந்த நாகரிகமோ மறுமலர்ச்சியோ ஒரு விசுவாசக் கோட்பாடும் வினைத்திறன் மிக்க நாகரிக நோக்கும் இன்றி நிலை பெற்றதில்லை. அந்த நாகரிக நோக்கானது ஒளியும் உயிர்ப்பும் மிக்க சிந்தனையொன்றையும், சமநிலை கொண்ட சீரான செல்நெறியொன்றையும் ஆதாரமாகக் கொண்டமைவதும் அவசியம்.*

*எங்கள் இறைவா!*

*சத்தியத்தை சத்தியமாகக் காட்டி, அதனைப் பின்பற்றும்படி எங்களுக்கு அருள் செய்வாயாக!*

*அசத்தியத்தை அசத்தியமாக காட்டி, அதனை விலகி நடக்கும்படி எங்களுக்கு அருள் செய்வாயாக!*

*நேர்வழியையும் வெற்றியையும் சக்தியையும் விமோசனத்தையும் அந்த உயர்ந்த நாயனிடமே நாம் கேட்கிறோம். நிச்சயமாக அவன் செவியுறுபவன்; பிரார்த்தனையை ஏற்பவன்!*

**பேராசிரியர் அப்துல் ஹமீத் அஹ்மத் அபூ ஸுலைமான்**

## அத்தியாயம் ஒன்று

# சமகாலம் தழுவிய இஸ்லாமிய அசல் நிலையே ஏக தீர்வு

### *ஒன்று: அசல் நிலையின் வழியான அணுகுமுறை*

முஸ்லிம் உம்மாவின் இன்றைய நாகரிகப் பின்னடைவு, வீழ்ச்சி, மானிட அவலம் என்பவற்றை அதன் நிலை குறித்து ஆய்வு செய்யும் எவரும் சிரமமின்றிப் புரிந்து கொள்ளலாம். இவ்வளவுக்கும் அது கொண்டிருக்கும் மனித-பௌதீக வளங்கள் மிகப் பிரமாண்டமா னவை; பெறுமானங்களும் கொள்கைகளும் வானளாவ உயர்ந்தவை.

முஸ்லிம் உம்மா தனது பல்வேறு பிராந்தியங்களில் அனுபவித் துக் கொண்டிருக்கும் பேரிடர் இதுதான். பின்னடைந்து தட்டழியும் இந்நிகழ் யதார்த்தமே முஸ்லிம் மனச்சாட்சியின் கவலையாக எப்போதும் இருந்து வருகிறது. ஆக்கபூர்வத்தன்மையும் முன்னோடிப் பண்பும் கொண்ட சமுதாயமொன்றின் மனச்சாட்சி அப்படித்தான் இருக்கும். அந்த வகையில், முஸ்லிம் உம்மாவானது சீர்திருத்தம், புனர்நிர்மாணம், எழுச்சி என்பவற்றை நோக்கி அவாக் கொள்வது இயல்பானதுதான்.

உம்மாவின் கட்டொழுங்கில் ஏற்பட்ட கோளாறை நிவர்த்தி செய்து, வெற்றிக்கான முன்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின், கோளாறுக்கும் பலவீனத்துக்கும் பின்னடைவுக்கு மான காரணங்களை நாம் புரிந்து கொள்வது அவசியம். ஏனெனில் இக்காரணங்களே முஸ்லிம் உம்மாவின் இருப்பை முதன் முறையாக அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கின. முஸ்லிம் உம்மா தனது வாழ்விலும் சிந்தனா முறைமைகளிலும் நிறுவனங்களிலும் எதிர் கொள்கின்ற மேற்கு மயப்பட்ட நாகரிகச் சவாலே இதற்கான மூல காரணமுமாகும்.

உம்மா இன்று அனுபவித்து வரும் நாகரிக வீழ்ச்சியின் வேர்களைப் புரிந்துகொள்வதற்கு உம்மாவின் கட்டொழுங்கு பற்றியும் இன்று வரை அதல பாதாளத்தை நோக்கி அதனை இழுத்துச் செல்லும் போக்குகள் பற்றியுமான முழுமையான பகுப்பாய்வுத் தன்மை கொண்ட, ஆழ்ந்த பார்வையொன்று நமக்கு அவசியம்.

முஸ்லிம் உம்மா தள்ளாடிச் சரிந்து, காலனியத்தின் பிடியிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அதிகாரத்தினுள்ளும் அகப்பட்டு நீண்ட பல நூற்றாண்டுகள் கடந்து விட்டன. இஸ்லாமிய உலகின் உட்பகுதியில் மிகத் தொலைவில் மறைந்து கிடந்த வரண்ட, கரடுமுரடான சில பிராந்தியங்கள் மட்டுமே அப்பிடியிலிருந்து ஓரளவு தப்பிப் பிழைத்தன. முஸ்லிம் உம்மா இன்று வரை அன்னிய கைத்தொழில் உற்பத்திகளின் ஆதிக்கப் பிராந்தியமாகவும், சந்தையாகவும், முதல் நிலைப் பொருட்களும் தேர்ச்சியற்ற தொழிற்படையும் மலிவாகக் கிடைக்கும் களமாகவும் இருப்பது இன்னும் வேதனையானது. முழு உம்மாவும் இன்று சர்வதேச சக்திகளின் ஆடுகளமாக மாறியிருக்கிறது. தனக்குத் தேவையான உணவை தானே உற்பத்தி செய்து கொள்ள முடியாத நிலையில் அது உள்ளது. அறிவியல்-தொழிநுட்பத் தளமோ, கைத்தொழில் உற்பத்திகளோ, தேர்ச்சிகளோ, முன்னேற்றகரமான துறைசார் நிறுவனங்களோ, சுயபலத்துக்கு அவசியமான அடிப்படைகளோ அற்றதாக அது மாறி நிற்கிறது.

இப்பலவீனத்தின் காரணங்களையும் வீழ்ச்சியின் வேர்களையும் வரலாற்றில் தேடிக் கண்டறிய நாம் முயன்றாலும், அவற்றை ஊக்கிய காரணிகள் எடுத்த எடுப்பிலேயே கண்களுக்குப் புலனாவதில்லை, மட்டுமன்றி, வீழ்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் பல தேசங்களில் முன்னைய அபிவிருத்தியின் விளைவாக செல்வங்களும் படாடோபமும் கொட்டிக் கிடந்ததால் அந்த வீழ்ச்சி தெளிவாகத் தெரியவில்லை என்றே சொல்ல வேண்டும். முதல் தலைமுறையின் காலத்துக்குப் பின்னர் முஸ்லிம் உம்மாவின் நிலை பொதுவாகவே இப்படித்தான் இருந்தது. செல்வமும் பணமும் படைப்பலமும் கட்டடங்களும் மாளிகைகளும் அங்கு வெளிப்படையாகவே நிறைந்திருந்தன. அதேவேளை அது வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இஸ்லாமியப் பரவல் முடக்கம் அடைந்திருந்தது. சீர்கேடும் பிறழ்வும் அதிகரித்திருந்தன. முன்னேறித் தாக்கும் நிலையில் இருந்து (offensive) தற்காப்பு நிலைக்கு (defensive) அது மாற்றம்

அடைந்திருந்தது. பக்தாதின் மீதும், குத்ஸின் மீதும், கொரடோவா மீதும், பிற நகரங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட அன்னிய அத்து மீறலும் ஊடுருவலும் வெற்றி கண்டிருந்தன.

அவ்வாறே, அடிப்படையான நோய்க் காரணிகளையும் அவற்றி னால் விளைந்த நோய்க் கூறுகளையும் பிரித்தறிவது நமது வீழ்ச்சிக் கான காரணங்களைப் புரிந்து கொள்வதற்கு அவசியமானதாகும். அந்த வகையில், பிறழ்வுற்ற குழுக்களும் பிரிவுகளும் தோற்றம் பெறுதல் என்பது இஸ்லாமிய வரலாற்றுக்குப் புதியதொரு விடயமல்ல. கறா மித்தா, நுஸைரீக்கள், துர்ஸியர்கள் முதலிய குழுக்கள் இதற்கான பழைய உதாரணங்களாகும். பஹாஇய்யா, அஹ்மதிய்யா, காதியா னிய்யா இன-தேசியவாதக் கோஷங்கள், நாத்திகம் என்பன நவீன கால உதாரணங்களாகும்.

இந்த உதாரணங்கள் அனைத்தும் அடிப்படையான நோய்களின் குறிகாட்டிகளே. ஆனால் அடிப்படையான நோய்களோ ஒரு வர லாற்று உண்மையாகத் தோற்றம் பெற்று, உம்மாவின் கட்டமைப் பில் ஊர்ந்து பரவி விட்டன. ரோம, பாரசீகச் சக்கராதிபத்தியங்களின் சவால்களுக்கு முன்னால், -மிகப் புதிதாக இஸ்லாத்தில் நுழைந் திருந்த- நாட்டுப்புற அறபுக் கோத்திர வீரர்கள் தேசத்தின் படைகளது கடி வாளத்தைப் பெறுப்பேற்கும் நிர்ப்பந்தம் உருவாகியதிலிருந்து இந்த அனர்த்தம் ஏற்படத் தொடங்கி விட்டது. இவ்வீரர்களது கோத் திர மனோபாவம் உம்மாவின் அடிப்படையையே ஆட்டங் காணச் செய்து பெரும் குழப்பமொன்றைத் தோற்றுவித்திருந்தது. பின்னர், நபித்துவ தேசத்தின் தலைநகராக இருந்த மதீனாவின் நேராட்சியை (கிலாபா றாஷிதாவை) அது நிர்மூலமாக்கியதுடன், இன-கோத்திர வெறி கொண்ட தேசங்கள் உருவாகவும் காரணமாகியது. இஸ்லாமும் ஜாஹிலிய்ய மௌட்டீகமும் சேர்ந்த கலவையொன்று அங்கு உரு வானது. ஃகிலாபா றாஷிதாவின் இறுதிக் காலப்பகுதிகளில் இடம் பெற்றதாகக் கூறப்படும் நிகழ்வுகளை (அவற்றில் கூட அறிவாய்வு முறைமை மூலம் உறதி செய்யப்பட்டவை மிகச் சொற்பமே) ஒரு தர்க்க நியாயத்திற்காக ஏற்றுக் கொண்டால் கூட, அந்த ஃகிலாபா றாஷிதா அரசுடன் மேற்சொன்ன நிலை எவ்வகையிலும் ஒப்பீடு செய்ய முடியாததாகும்.

இன்று உம்மா வந்தடைந்திருக்கும் பாதாளம் எவ்வளவு ஆழ மானது என்பதை -இந்தப் பயணத்தின் இறுதியில்- நாம் புரிந்து கொள்வோமாயின், நிலைமை எவ்வளவு ஆபத்தானது என்பதையும்

புரிந்து கொள்வோம். உம்மாவின் பல்வேறு பிராந்தியங்கள் மீதும் அதன் மாந்தர்கள் மீதும் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடரும் அனர்த் தங்களிலிருந்தும் சோகங்களிலிருந்தும் சீர்கேடுகளிலிருந்தும் அது தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வதற்கு எவ்வளவு காலப் பொருத்தமான, வினைமை மிக்க யத்தனம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் நமக்குத் தெரிய வரும்.

முஸ்லிம் உம்மாவின் இன்றைய பலவீனமும் வீழ்ச்சியும் இய லாமையும் தெளிவானது. இதயசுத்தி கொண்டோரும் அறிவுஜீவி களும் உடன்பட்டு நிற்கும் புள்ளி அது. எனினும், மிகச் சிக்கலான இந்நெருக்கடியிலிருந்து வெளியேறும் மார்க்கங்களும் அதற்கான சாதனங்களும் எவை என்பதில் அதேயளவு தெளிவோ உடன்பாடோ கிடையாது என்பதும் சர்வ நிச்சயமானது.

மட்டுமன்றி, உம்மாவின் உடலில் பரவியிருக்கும் நோயின் தாக் கங்கள் இன்று பலவாறு நிதர்சனமாகி இருக்கின்றன. நவீன இன-தேசியக் குழுவாதங்கள், நாத்திகம், சீர்கேடு, ஒழுக்க வீழ்ச்சி என பல்கிப் பெருகிக் கிடக்கும் இத்தாக்கங்கள் உம்மாவின் செவிப் பறையைக் கிழித்து விடும் அளவுக்கு ஒலியெழுப்பிக் கொண்டிருக் கின்றன. சில போலிச் சீர்திருத்தவாதிகள் இவற்றை நோக்கியே இன்று அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்காக எல்லா வகையான உத்திகளையும் அழுத்தங்களையும் தந்திரங்களையும் கூட அவர்கள் பயன்படுத்துகின்றனர். ஆரோக்கியம் மற்றும் முன்னேற் றம் என்பவற்றின் வெளிப்பாடுகள் இவைதான் எனவும் அவர்கள் சாதிக்க முயல்கின்றனர்.

ஆனால் உம்மாவின் மீது இவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பயங்கரமானவை. உம்மாவின் காயங்களை இவை இன்னும் ஆழப் படுத்தியுள்ளதுடன், அதனை மேலும் பலவீனப்படுத்த உதவக்கூடிய காரணிகளுக்கு வழியமைத்தும் கொடுத்துள்ளன.

இப்போது நமக்கு எழும் தவிர்க்க முடியாத கேள்வி இதுதான்: இந்த நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்குகந்த சரியான மார்க்கம் எது? எனது அபிப்பிராயப் படி, முதலில் உம்மாவின் இயக்கத்தை எதிர்கொள்வதற்கான தளங்களையும் பதிலீடுகளையும் வடிகட்டி வரையறுப்பதிலிருந்தே இதற்கான சரியான பதில் ஆரம்பிக்கிறது என்பேன். உம்மாவின் முன்பாக வைக்கப்படக் கூடிய இத்தளங்களை யும் பதிலீடுகளையும் முக்கியமாக மூன்று பிரதான செல்நெறிகளில் வகைப்படுத்த முடியும்:

ஒன்று: 'அன்னியத்தீர்வு'. நவீன மேற்கத்திய சடவாத அனுபவத்திலிருந்து பெறப்பட்ட இறக்குமதித் தீர்வுகளின் தொகுப்பை இது குறிக்கிறது. முதலாளித்துவம் மற்றும் மார்க்ஸியம் உள்ளடங்கலாக, அனைத்து தனிப்பட்ட, மொத்த, மதச்சார்பற்ற, நாத்திக வடிவங்களையும் இது உள்ளடக்கும்.

இரண்டு: 'இஸ்லாமிய வரலாற்றுப் பாரம்பரியத் தீர்வு'. கால-இடப் பரிமாணங்களையும் அவற்றின் விளைவுகளையும் புறந்தள்ளி, வரலாற்றின் உட்படுக்கைகளிலிருந்து நகர்த்தி வரப்பட்ட தீர்வுகளின் தொகுப்பை இது குறிக்கும்.

மூன்று: அசல் இஸ்லாமிய மூல தத்துவத் தீர்வு. 'சமகால இஸ்லாமியத் தீர்வு' என்றும் இதனை அழைக்கலாம். சமகால சவால்களை இஸ்லாமியத் தர்க்கத்திலிருந்து எதிர்கொள்வதனூடாகப் பெறப்படும் தீர்வை இது குறிக்கும்.

உம்மாவும் அதன் தலைமைகளும் தமது சக்தியையும் ஆரோக்கியத்தையும் மீட்டெடுக்க விரும்பினால், நான்கு விடயங்களை மேற்கொள்வது அவசியமாகும்:

1- தீர்வுக்கான சரியான பாதையை வரையறை செய்தல்.

2- வரையறை செய்து கொண்ட பாதை பற்றிய முழுத் திருப்தி.

3- தீர்வுக்கான பாதை பற்றிய தெளிவோடு திடமான எட்டுக்களை எடுத்து வைத்து முன்னேறுதல்.

4- அதனைச் சாத்தியப்படுத்த அவசியமான வினைத்திறனுள்ள சாதனங்களை நிறைவாகப் பெறலும், உம்மாவை அவற்றின் மீது பயிற்றுவித்தலும்.

ஒரு சிந்தனையாளர் அல்லது ஓர் எழுத்தாளர் அல்லது தலைவர் அனேகமாக உம்மாவுக்கான தீர்வொன்றையும் சரியான பாதையொன்றையும் நோக்கியே செல்வார், தான் முன்வைக்கும் தீர்வு பற்றிய ஏற்புநிலையை ஏற்படுத்துவதற்காக அதன் பல்வேறு நன்மைகளை விரித்துரைக்க அவர் முற்படுவார். இதன்போது, தவறான அல்லது செயல்திறன் குறைந்த மாற்றுத் தீர்வுகள் பற்றி எடுத்துக்கூறவோ அவற்றின் குறைகளை விளக்கவோ அவர் முற்படா விட்டால், அந்த அணுகுமுறையானது உம்மாவிலுள்ள சில மனிதர்களை அல்லது சில குழுக்களை அந்தத் தவறான மாற்றுத் தீர்வுகளோடு நிரந்தரமாகவே கட்டுண்டு கிடக்க வழியமைத்து விடலாம். மட்டுமன்றி, தவறான

தீர்வுகளுக்கும் சரியான தீர்வுக்கும் இடையில் சிறந்த ஒப்பீடொன்றை மேற்கொண்டு, முன்வைக்கப்பட்ட தீர்வே மிக உகந்தது என்பதை நிரூபிக்கும் செயன்முறையையும் அது மிகக் கடினமாக்கி விடலாம்.

எனது அபிப்பிராயப் படி, தவறான மாற்றுத் தீர்வுகள் பற்றி எடுத்துக்காட்டி, அவை ஏன் தவறு என்பதற்கான அடிப்படைக் காரணங்களை விளக்கி, சரியான தீர்வையும், அதனைத் திருப்தியோடு ஏற்பதற்கான காரணங்கள் எவை என்பதையும் எடுத்து விளக்குகின்ற அணுகுமுறையே அதிக செயல்திறன் கொண்டதும் பின்பற்றுவதற்கு மிகப் பொருத்தமானதும் ஆகும்.

அந்தவகையில், இந்த இரண்டாவது அணுகுமுறையையே இந் நூலில் தேர்ந்தெடுத்துள்ளேன். இன்று நமது முஸ்லிம் உம்மா இருக்கும் நிலையில் அதிக பயனுள்ள அணுகுமுறை இதுவாகத்தான் இருக்க முடியும். ஏனெனில், உம்மா இன்று மிகச் செறிவான சிந்தனா-கலாசாரப் படையெடுப்பு ஒன்றுக்கு உட்பட்டுள்ளது. இப் படையெடுப்பு உம்மாவின் சிந்தையைக் குழப்பி, பயணத்தை நிலை தடுமாறச் செய்திருக்கிறது. எனவே, தவறான தீர்வுகளும் பாதைகளும் ஏன் உரிய விளைவை தரப் போவதில்லை என்பதற்கான காரணங் களை அறிந்து கொள்ள வேண்டிய கடுமையான தேவை உம்மாவுக்கு இருக்கிறது. அப்போதுதான் -அல்லாஹ்வின் நாட்டப்படி- சரியான தீர்வையும் பாதையையும் நோக்கி வெற்றிகரமாகவும் திடமாகவும் அதனால் முன் செல்ல முடியும்.

## 1- அன்னியத் தீர்வு:

கடந்த இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக சீர்திருத்தம் மற்றும் சமூக மீளுருவாக்கம் தொடர்பான முஸ்லிம் உம்மாவின் இயங்கியல் செல் நெறிகளின் மீது அன்னியத் தீர்வு அணுகுமுறையே ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறது. மேற்கைரோப்பாவின் தாக்குதலுக்கும் மேலாண் மைக்கும், மேற்குலக ஒழுங்கின் சாதனைகளுக்கும் சவால்களுக்கும் முன்னால் உஸ்மானிய சாம்ராஜ்யம் பணிந்து பின்வாங்கியது முதல் இது நடந்தேறி வந்திருக்கிறது. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் ஸுல்தான் மூன்றாம் சலீமின் ஆட்சிக்காலம் தொட்டு உஸ்மானிய அரசு அன்னிய ஐரோப்பியத் தீர்வைப் பின்பற்றும் போக்கை மிக உறுதியோடு கைக்கொள்ள ஆரம்பித்தது. மீளப் பலம் பெறவும், புனர் நிர்மாணம் செய்யவுமான ஏக வழி இத்தகைய கண்மூடிப் பின்பற்றலே என அது கருதியது.

இந்த வகையில்தான் அது பொறியியலுக்கும் விஞ்ஞானத்துக்கு மான தனது முதற் கல்லூரியை நிறுவியது. ஐரோப்பியப் பாணியில் படைகளை உருவாக்கிப் பயிற்றுவிப்பதற்கான முதலாவது நவீன இராணுவப் பாடசாலையையும் அமைத்தது. உஸ்மானியர்கள் தங்க ளது திட்டத்தைச் செயற்படுத்தி, இழந்த தமது பலத்தையும் அந்தஸ்தையும் மீட்டெடுக்க எடுத்துக் கொண்ட இத் திடவுறுதியின் காரணமாக, நவீன மயப்படுத்தலையும் ஐரோப்பியப் பாணியிலான புதிய இராணுவப் படையணிகளையும் எதிர்த்த பாரம்பரிய இராணு வப் பிரிவுகளை அவற்றின் முகாம்களிலேயே கொன்று தீயிட்டுக் கொழுத்தினர்.(1)

ஆயினும், அந்தப் பின்பற்றல் திட்டமும் அது செயற்படுத்தப்பட்ட முறையும் வெற்றியளிக்கவில்லை என்பது வரலாற்றுண்மையாகும். உஸ்மானிய அரசு பலமடையவும் இல்லை; சவால்களை முறி யடிக்கவுமில்லை; அறிவியல் முன்னேற்றம் காணவும் இல்லை. மட்டுமன்றி, ஐரோப்பியரது பலம் வளர்ந்து கொண்டிருந்த அதே வேளை உஸ்மானிய அரசு வலுவிழந்து கொண்டே சென்றது.

எவ்வாறாயினும், ஐரோப்பாவைப் பின்பற்றும் திட்டத்தை மேலும் தொடர்ந்த உஸ்மானிய அரசு தனது கல்விக் குழுக்களை அங்கு அனுப்பி வைத்தது. விளைவாக, ஐரோப்பியக் கலாசாரத்தை கற்றுத் தேறிய துருக்கியர்கள் திரும்பி வந்து, ஐரோப்பாவைப் பின்பற்று வதில் புதிய பரிமாணமொன்றை இணைத்துக் கொண்டனர். ஐரோப் பியப் பாணியிலேயே சமூக, அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள் ளப்பட வேண்டும் என்பதுதான் அப்புதிய பரிமாணம் ஆகும். அவ் வாறு மேற்கொண்டால்தான் அறிவியல், நிர்வாக, ராணுவ சீரமைப்பு களுக்கான சிந்தனா-சமூக சூழமைவொன்று கைவரப் பெறும் என்பது அவர்களது வாதமாக இருந்தது. உஸ்மானியர்கள் தமது சாம் ராஜ்யத்தை மீளக் கட்டியெழுப்பப் பயன்படுத்தும் வழிமுறைகள் உரிய வெற்றியைத் தர வேண்டுமாயின் இது நிகழ்ந்தே ஆக வேண் டும் என்ற நிர்ப்பந்த நிலையும் உருவானது.

இச்சிந்தனையின் விளைவாக, தாராளவாத (Liberal) தன்மை கொண்ட பெருமளவு சமூக-அரசியல் மாற்றங்களும் சீர்திருத்தங்க ளும் நிகழ்ந்தேறின. 19ஆம் நூற்றாண்டின் பின் அரைக்கூறில் 'மத்ஹத் பாஷா யாப்பு' என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தம் இந்த அனைத்துக்கும் சிகரமாய் அமைந்தது.

ஆயினும், இச்சீர்திருத்தங்களும் முன்னைய சீர்திருத்தங்களை விட மகிழ்ச்சி அளிக்கக் கூடியனவாய் அமையவில்லை. இதனால் ஸுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் தேச விவகாரங்களை நிர்வகிக்கும் பொறுப்பை தானே நேராக பொறுப்பேற்றுக் கொண்டார். அறிஞர்களை தனக்கு நெருக்கமாக்கிக் கொண்டு, 'இஸ்லாமியக் கூட்டமைப்பு' ஒன்றுக்காக அழைப்பு விடுத்ததன் மூலம், உஸ்மானிய அரசின் வரலாற்று மாதிரியைக் காப்பாற்ற அவர் முயன்றார். ஆனால் அந்த இறுதி முயற்சியும் தோல்வியுற்று, அன்னியரைப் பின்பற்றும் அணுகுமுறை கொண்ட சீர்திருத்த இயக்கம் மிகைத்து முன்னேறியது. மட்டுமன்றி, மேற்கத்திய அசைவியக்கப் பாணியில் தேசியவாத வெறியுணர்வை உம்மாவின் பலத்துக்கும் கட்டுமானத்துக்குமான இயக்கியாக அவ்வியக்கம் முன்தள்ளியது.

அந்தவகையில், துருக்கியரும் உஸ்மானிய அரசில் ஐரோப்பியப் பின்பற்றலை வழிநடாத்தியோரும் தேசியவாதத்தை நோக்கி அழைப்பு விடுத்தனர். அதற்காக 'தோரானிய தேசியவாதம்' என்ற ஒன்றையும் உருவாக்கிக் கொண்டனர். உம்மா மற்றும் துருக்கிய தேசியவாதம் என்பவற்றின் அடிப்படையிலான இக்கருத்தாக்கம், மேற்காசியாவிலும் மத்திய ஆசியாவிலும் பரவிக் கிடந்த துருக்கி மொழி பேசும் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கியிருந்தது. இந்த 'நவீனமயமாக்கல் சீர்திருத்த இயக்கம்' பலமடைந்து, 19ஆம் நூற்றண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தனியாக ஆட்சியமைத்தது. 'ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்குமான கட்சி' என்ற பெயரில் அது உஸ்மானிய தேசத்தை முழுமையாக ஆக்கிரமித்து, ஸுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீதை ஆட்சியில் இருந்து அகற்றியது.

எனினும், துருக்கியரும் உஸ்மானிய அரசும் தமது இறுதிப் போரில் வரலாறு காணாத படுதோல்வி கண்ட போது அந்த முயற்சியும் முடிவுக்கு வந்தது. இதன் விளைவாக, அனடோலின் இருதயப் பகுதி யூனானியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும், அன்னியப் பின்பற்றலை அடியாகக் கொண்ட சீர்திருத்த முயற்சிகள் இடையறாமல் நீண்ட பல காலமாக முழு வீச்சில் தொடர்ந்தன. துருக்கியக் குடியரசின் நிர்மாணியான ஜெனரல் முஸ்தபா கமால் அதா துர்க்கும் அவரது இராணுவ சகாக்களும் இஸ்லாமிய கிலாபத்தை இல்லாதொழித்து, அன்னியரைப் பின்பற்றும் போக்கை மிகப் பரந்தளவில் தத்தெடுத்தக் கொண்டனர்.

ஐரோப்பிய மாதிரிக்கு இயைபாக முழுமையான மாற்றங்களை ஏற்படுத்தினர். சமூகக் கட்டுருவாக்கத்தில் இஸ்லாத்தினதும் அதன் கலாசாரத்தினதும் வகிபாத்திரத்தை நீக்கம் செய்து, ஐரோப்பிய கிறிஸ்தவ மதச்சார்பின்மைக் கோட்பாட்டை தமக்கான கொள்கையாக வரித்துக் கொண்டனர். அரசு, ஆட்சியொழுங்கு, சமூகத்தொடர்புகள் முதலிய அனைத்திலிருந்தும் இஸ்லாத்தை மிக வன்மத்தோடு புற மொதுக்கினர். இஸ்லாமிய சட்டங்களையும், உஸ்மானிய ஆட்சி யொழுங்கையும் முற்றாக நீக்கி, ஐரோபியாவில் மிக முன்னேறிய நிலையில் இருந்த சுவிட்சர்லாந்து நாட்டின் சட்டங்களை ஒரேயடி யாக அமுல்படுத்தினர். இஸ்லாமியக் கலாசாரம் அடுத்து வரும் சந்ததிகள் மீது எவ்வகையிலும் தாக்கம் செலுத்தி விடக் கூடாது என்பதற்காக அறபு லிபியை ரத்துச் செய்து லத்தீன் லிபியைப் பிரதியீடு செய்தனர். ஐரோப்பிய உடைகளை அணியுமாறு மக்களை நிர்ப்பந் தித்தோடு, ஹிஜாப் அணியாமல் திறந்த ஆடை அணியுமாறும் கட் டாயப்படுத்தினர். தொழுகைக்கான 'அதான்' அழைப்பும், வணக்கம் சார்ந்த பிற இஸ்லாமியக் கிரியைகளும் தடை செய்யப்பட்டன. பிடிவாதமாக யாராவது அவற்றை மேற்கொள்ள விரும்பினால், துருக்கி மொழியிலேயே அவை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் விதிக்கப்பட்டது.

அதா துர்க்கின் ஆட்சி முடிவடைய முன்னரே சமூக, பொருளாதார நிறுவனங்களை இயக்குவதில் அரச தலையீட்டை நியாயப்படுத்தும் பல கருத்தாக்கங்கள் அரசினால் தத்தெடுக்கப்பட்டிருந்தன. வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள் முதலான மிக முக்கிய பண-பொருளாதார நிறுவனங்களையும் அரசு ஆக்கிரமித்திருந்தது.

இந்த அனைத்து நடவடிக்கைகளுக்குப் பிறகும் கூட துருக்கிய சமூகம் (பின் வந்த பிற பல இஸ்லாமிய சமூகங்களும் கூட) தொடர்ந்து வீழ்ச்சியை நோக்கிச் சென்றதே தவிர நிலைமை எவ்வகையிலும் சீரடையவில்லை. ஆயினும், அன்னியப் பின்பற்றலின் அனைத்து தீர்வுக் கட்டங்களையும் அது தவறாமல் கடந்து வந்தது. இயற்கை விஞ்ஞானத்தையும், தொழிநுட்ப- இராணுவ அறிவையும் பிரதி செய்தல், இராணுவப் படையைக் கட்டியெழுப்புதல், பொது நிர்வா கத்தை நவீனமயப்படுத்துதல், லிபரல் கோட்பாடுகளைத் தத்தெடுத் தல், ஐரோப்பியக் கலாசாரத்தை மொழி பெயர்த்தல், அரசியல் மற் றும் யாப்பு மாற்றங்களை ஏற்படுத்தல், தேசியவாதக் கோட்பாட் டைப் பின்பற்றுதல், மதச்சார்பின்மை, ஐரோப்பிய சட்டங்களைத்

தத்தெடுத்தல், சமூக-பொருளாதார நிறுவனங்கள் மீது ஆதிக்கம் பெறும் வகையில் அரச இயந்திரத்தைத் தகவமைத்தல் முதலிய எல்லாவற்றையும் துருக்கி அமுல்படுத்தியது. ஆயினும், இந்தப் பின்பற்றலானது துருக்கி மேலும் மேலும் பலவீனப்படவும் வீழ்ச்சி யடையவுமே வழிவகுத்தது. இறுதியில் துருக்கி மேற்கத்திய செல் வாக்கின் முழுமையான பிடியில் வீழ்ந்தது.

மேற்குறித்த கொள்கைகளின் தோல்வியாலும், விஸ்வரூபம் எடுத்து வந்த மேற்கத்திய செல்வாக்கிற்குப் பணிந்ததாலும், அதா துர்க்கின் பின் வந்த அவரது தோழரான ஜெனரல் இஸ்மத் இனூனு துருக்கியின் அனைத்து வளங்களின் மீதும் குடியரசுக் கட்சி கொண் டிருந்த ஆதிக்கத்தை ரத்துச் செய்து லிபரல் அரசியலை நோக்கித் திரும்பவும், புதிதாகத் தேர்தல்களை நடாத்தவும் வேண்டிய நிர்ப்பந் தத்துக்கு உள்ளானார். அந்தத் தேர்தலில் அத்னான் மந்தரீஸ் தலை மையிலான ‘ஜனநாயகக் கட்சி’ என்னும் புதிய போட்டிக் கட்சியே வெற்றி பெற்றது.

இவ்வாறு, மேற்கைப் பின்பற்றுதல் என்ற தீர்வு அதன் முழு வீச்சிலும் மிகப் பரந்த அளவிலும் இரண்டு சகாப்தங்களுக்கு அதிக காலம் மிக வினைமையோடு நடைமுறைப்படுத்தப்பட்டாலும், அந்த முயற்சி எதுவுமே துருக்கியைக் காப்பாற்றவில்லை. இழந்த பலமும் அந்தஸ்தும் அதற்கு மீளக் கிட்டவும் இல்லை.

நிலைமை இன்னும் மோசமடைந்து குழப்பமும் ஸ்திரமின்மை யும் தொடர்ந்தது. அது 1961இல் அத்னான் மந்தரீஸ் தூக்கில் ஏற்றப் படுவதில் போய் முடிந்தது. துருக்கிய இராணுவத்தினால் தொடராக மேற்கொள்ளப்பட்ட புரட்சிகளின் முதற்கட்டமாகவும் அது அமைந்தது. துருக்கி மேற்கத்திய முன்னேற்றத்திலிருந்து பின்தங்கி, ‘நோயாளி’ என்ற நிலையிலேயே தொடர்ந்தும் இருந்தது. நிவாரணம் பெறவோ சிகிச்சை கிட்டவோ எந்த நம்பிக்கையும் அங்கிருக்க வில்லை.

18ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் எகிப்தில் முஹம்மத் அலியின் ஆட்சி தொட்டு இற்றை வரை ஆசியாவிலும் ஆபிரிக்கா விலும் உள்ள அறபு-இஸ்லாமிய நாடுகள் கண்ட அனுபவங்களை நாம் கூர்ந்து கவனித்தால், துருக்கிய அனுபவத்தையும் அதன் பயங்கர விளைவுகளையும் விட புதிதாகச் சொல்வதற்கு எதுவுமில்லை எனலாம்.

இந்த அன்னியப் பின்பற்றல் அனுபவத்தில் பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் இஸ்லாமிய உலகம் பொதுவாக இன்னும் வீழ்ச்சி யடைந்து சின்னாபின்னமாகிய நிலையிலேயே உள்ளது. அதற்கும் முன்னேறிய உலக நாடுகளுக்கும் இடையிலான நாகரிக இடைவெளி பாதகமான வகையில் மேலும் மேலும் ஆழமாகிக் கொண்டும், விரிசலடைந்து கொண்டும்தான் இருக்கிறது.

அன்னியப் பின்பற்றல் என்ற இந்த அணுகுமுறை தோல்வி யடைந்ததன் ரகசியத்தை அல்லது அதற்கான புறநிலைக் காரணங் களைப் புரிந்து கொள்வது கடினமான ஒன்றல்ல. சமுதாயங்கள் என்பவை யதார்த்தத்தில் உயிர் வாழும் மனிதப் படைப்புகள் என்ற வகையில் தனிமனிதர்களை விட சிக்கலான கட்டமைப்புக் கொண் டவை. கட்டுமானத்தை நோக்கி அவற்றை அசைவியக்கப் படுத்து வதும், அவற்றினுள் மறைந்திருக்கும் நோய்களைக் கண்டறிந்து வெற்றி கொள்வதும் அவ்வளவு இலகுவானதல்ல.

ஏனெனில் ஒவ்வொரு சமுதாயமும் தனது பெறுமானங்கள், நம்பிக்கைகள், கோட்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் தனித் துவமான கட்டமைப்பைக் கொண்டிருக்கும். தனக்கென்று தனியான ஊக்கிகளையும் உளவியலையும் வரலாற்றையும் கொண்டிருக்கும். இவ்விடயத்தில் அது தன்னுள் அடங்கியிருக்கும் மனிதர்களின் இயல்பை ஒத்ததாகவே இருக்கும். எனவே இந்த அனைத்துப் பக் கங்களையும் உட்கூறுகளையும் ஊக்கிகளையும் புரிந்துகொள்ளாமல், அதனுள் மறைந்திருக்கும் சக்தியையும் போராட்டப் பண்பையும் ஆக்கப் பண்பையும் அசைவியக்கப் படுத்துவதும் நெம்பித் தள்ளு வதும் மிகக் கடினமானது.

தனிமனிதர்களைப் பொறுத்தவரையில், ஒரு மனிதரை இயக்கக் கூடிய அதே காரணிகளால் மற்றொரு மனிதரை இயக்க முடியாமல் போகலாம். சமுதாயங்களின் நிலையும் அத்தகையதுதான். ஒரு மனிதக் குழுமத்தை இயக்கும் காரணியால் மற்றொரு மனிதக் குழுமத்தை இயக்க முடியாமல் போகலாம். ஒவ்வொரு சமுதாயமும் இயங்கு வதற்கு அடிப்படையான ஊக்கிகளும், முதன்மைப்படுத்தும் அம்சங் களும் உண்டு. அவற்றைப் புறந்தள்ளி விட்டு சீர்திருத்தப் பணிகளில் பிறரை கண்மூடிப் பின்பற்றுதல் தவறானது. சமுதாயங்களுக்கிடை யிலான தனித்தன்மைகளும் வேறுபாடுகளும் ஆழ்ந்து புரிந்து கொள் ளப்படுவது அவசியம். இந்த யதார்த்தம் புரிந்து கொள்ளப்படா விட்டால், முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்காலம் பிறரைப் பின்பற்றிய

கடந்த நூற்றாண்டுகளை விட எவ்வகையிலும் சிறந்ததாக அமையப் போவதில்லை.

**எடுத்துக் காட்டுகளும் மாதிரிகளும்:**

முஸ்லிம்கள் தத்தெடுத்துப் பின்பற்றிய மேற்கத்திய வங்கி முறைமை நாம் மேற்சொன்ன கருத்தை விளக்கக் கூடிய எளியதோர் உதாரணமாகும். இந்த மேற்கத்திய நிறுவன முறைமை மேற்குலகில் அறிமுகமான போது மேற்கு நாடுகளில் நிலவிய பொருளாதார-வர்த்தகத் தேவைகளுக்கும் பணிகளுக்கும் அது ஈடுகொடுத்தது. ஆனால் அதே நிறுவன முறைமை அதன் மேற்கத்திய வடிவங்களோடு இஸ்லாமிய நிலம் நோக்கி நகர்த்தப்பட்ட போது, வேறுபட்ட நம்பிக் கைகளையும் பெறுமானங்களையும் கொண்ட முஸ்லிம் உம்மாவின் கட்டொழுங்கிலும் சூழமைவிலும் எதிர்மறையான தாக்கங்களையே ஏற்படுத்தியது; மோசமான பிரிவினைகளுக்கும் போராட்டங்களுக் கும் காரணமாகியது; உம்மாவின் சக்தியைச் சிதறடித்தது; அதன் ஊக்கத்தையும் உத்வேகத்தையும் மழுங்கடித்தது. உம்மா பொருளா தார ரீதியாக அபிவிருத்தி அடைய உதவுவதற்குப் பதிலாக, அதன் வளங்கள் மீதும் இயலுமைகள் மீதும் அன்னிய ஆதிக்கம் ஊடுருவு வதை அம்முறைமை இலகுபடுத்தியது.

பொருளாதாரத் துறையில் இஸ்லாமிய அடிப்படைகளுக்கும் பெறு மானங்களுக்கம் மாற்றமான மேற்கத்திய அடிப்படைகள் அப்படியே நகர்த்தப்பட்டு இஸ்லாமிய சமூகங்களில் பிரயோகிக்கப்பட்டமையே மேற்கத்திய வங்கியியல் நிறுவனம் இஸ்லாமிய சமூகங்களில் தோல்வி அடைந்ததற்குப் பெருமளவு காரணமாகும். இந்நிலையானது பொருளாதாரத் துறையில் ஏற்க முடியாத மிகக் கடினமான இரு தெரிவுகளின் முன்னால் முஸ்லிம் தனிமனிதனையும் சமுதாயத்தை யும் நிறுத்தியது. ஒன்றில், வட்டி அடிப்படையிலான வங்கிக் கொடுக்கல்-வாங்கல் மற்றும் இஸ்லாம் ஏற்காத பெறுமானங்கள் மீது கட்டமைந்த செல்வப் பெருக்கையும் பொருளாதாரப் பலத்தையும் ஏற்றுக் கொள்ளல்; அல்லது வட்டி அடிப்படையிலான வங்கி நடை முறைகளை நிராகரித்து, இஸ்லாமிய சட்டங்களையும் பெறுமானங் களையும் பேணி உலக வாழ்வின் கஷ்டங்களையும் வறுமையையும் பொறுத்துக் கொள்ளல். இவ்விரண்டில் முதல் தெரிவின் முடிவு நிரந்தர மறுமைத் துன்பமாகவும் வேதனையாகவும் அமையக் கூடி யது; இரண்டாவது தெரிவின் முடிவு மறுமை இன்பமாகவும் ஈடேற்ற மாகவும் அமையக் கூடியது.

முஸ்லிம் மனச்சாட்சியானது இம்மையின் வளப்படுத்தலையும் நன்மையையும், மறுமையின் நற்கூலியையும் வெற்றியையும் ஒரு சேரத் தேடும் இயல்பு கொண்டது. இரட்டைத் தன்மையான நிலைப் பாடை அது ஏற்காது. உலக வாழ்வின் நன்மைக்கும் வளப்படுத்த லுக்கும், மறுமை வாழ்வின் நன்மைக்கும் வளப்படுத்தலுக்கும் இடையில் முரண்பாடு தோன்றுவதையும் அது ஏற்காது.

அந்த வகையில்தான், தற்காலத்தில் உருவாக்கப்பட்டுள்ள இஸ் லாமிய வங்கி நிறுவனங்கள் இஸ்லாமிய மாற்றுத் தீர்வு முயற்சி களின் பகுதியளவான வடிவங்களாக அமைந்துள்ளதோடு, நவீன இஸ்லாமியத் தேவைப்பாடுகளைச் சாத்தியப்படுத்தும் நம்பிக்கை யையும் தருகின்றன. முஸ்லிமின் உளவியல், சிந்தனை, உணர்வு என்பவற்றுக்கு ஏற்புடைய வகையிலான பண மற்றும் பொருளியல் சேவைகள் அத்தேவைப்பாடுகளுள் சிலவாகும்.

## உம்மாவும் இறக்குமதி செய்யப்பட்ட தீர்வும்:

வெளியிலிருந்து நுழைந்த அன்னியத் தீர்வானது ஒரு நாடகப் பாணியிலான தீர்வு போன்றது. உம்மாவை அது பார்வையாளர்களின் இடத்திலேயே இருத்தி வைக்கிறது. அரங்க நிகழ்வுகளில் உம்மா வுக்கு எந்தப் பங்கும் இல்லை. ஏனெனில், உம்மாவின் யதார்த்தத்தை அந்த அன்னியத் தீர்வு பிரதிபலிப்பதில்லை. உம்மா செய்ய வேண்டி யிருப்பதெல்லாம் நாடகத்தின் உணர்ச்சித் திருப்பங்களில் சத்தமிடு வதும் ஒலி எழுப்புவதும் மட்டும்தான். அதனைத் தவிர, நாடக மேடையில் சமூக-அரசியல் தலைவர்களான நடிகர்களுக்கிடையில் நிகழும் கதையோட்டத்தில் உம்மாவுக்கு எந்தப் பாத்திரமும் இருப்ப தில்லை. எனவேதான், ஒவ்வொரு நாடகம் முடிந்த பிறகும்... ஒவ்வொரு தலைவரின் வீழ்ச்சியின் பிறகும்... ஒவ்வொரு கட்டம் நிறைவுற்ற பிறகும்... எதுவுமே நடக்காதது போன்று உம்மா தனது பழைய சோலிகளுக்குத் திரும்பி விடுகிறது. பிறகு மீண்டும் புதிய நாடகம் அரங்கேறுகிறது. புதிய நாயகர்கள் தோன்றுகின்றனர். பழை யதும் புதியதுமான அன்னியத் தீர்வுகளின் வட்டமொன்று மீண்டும் சுழல ஆரம்பிக்கிறது.

முன்னேறிச் செல்லும் சமுதாயங்கள் தமது சொந்த நிலங்களில் கொண்டிருக்கும் சிந்தனைகள், தலைமைகள், ஆட்சியொழுங்குகள் என்பவற்றுக்கும், தேங்கி நிற்கும் சமுதாயங்களது சிந்தனைகள், தலைமைகள், ஆட்சியொழுங்குகள் என்பவற்றுக்கும் இடையில் ஒரு

வேறுபாடு உண்டு. முன்னேறிய சமுதாயங்களின் சிந்தனையும் ஒழுங்குகளும் தீர்வுகளும் தலைமைகளும் அந்தச் சமுதாயங்களின் கட்டமைப்பு, உளவியல், பெறுமானங்கள், தேவைகள் என்பவற்றி லிருந்து பிறக்கின்றன. மட்டுமன்றி, தமக்குரிய தலைமைகளையும் பணிக் குழுக்களையும் கூட அவை தம்முள்ளிருந்தே உருவாக்கு கின்றன. இத்தலைமைகளும் குழுக்களுமே அச்சமுதாயங்களின் இலக்கு மையப்பட்ட பயணத்தையும் கட்டுருவாக்கத்தையும் தொட ராக மேற்கொள்கின்றன.

அடிப்படையான இப்புரிதல்தான் இஸ்லாமிய உலகின் அல்லது பொதுவாகவே பின்தங்கிய உலகின் அரசியற் கேலிக்கூத்து குறித்த சரியான வியாக்கியானமொன்றை நமக்குத் தருகிறது. பலமான சமூ கங்களின் அரசியல், ஆட்சி, நிர்வாகம் என்பவற்றிலிருந்தும், அவற் றுக்கிடையிலான தொடர்புகளிலிருந்தும், அவற்றின் தாக்க-எதிர்த் தாக்க விளைவுகளிலிருந்தும் ஏனைய பின்தங்கிய சமுதாயங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன என்ற விளக்கத்தையும் மேற்குறித்த புரிதலே நமக்குத் தருகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட அன்னியத் தீர்வுகளிலுள்ள சிந்தனா-கலாச்சாரப் பரிமாணங்களைப் புரிந்து கொள்வதே இங்கு நமது நோக்கமாகும். அப்போதுதான் அந்த அன்னியத் தீர்வுகளைப் பின் பற்றுவதனால் இன்னும் கால விரயம் ஏற்படாமல் தவிர்க்க முடியும். மட்டுமன்றி, நமக்கும் நமது உம்மாவுக்கும் நாமே மேலும் மேலும் துன்பத்தையும் வேதனையையும் ஏற்படுத்திக் கொள்வதும் தவிர்க்கப் படும்.

வெற்றியளிக்காத முயற்சிகளில் பலநூறு வருடங்கள் வீணாகிய பிறகும் நமது சிந்தனா, அரசியல், மார்க்ஸிய, மதச்சார்பற்ற, மேற்கு மயப்பட்ட தலைமைகள் மூடுண்ட திசையிலும் வெற்று வளையங் களுக்குள்ளும் இனியும் சுற்றி வந்து கொண்டிருப்பது உம்மாவுக்கு ஒருபோதும் நீதியானதாக அமையப் போவதில்லை. இத்தனை தோல்விக்கும் பேரிடருக்கும் பிறகு அவர்களது சிந்தனையும் நிர்வாக எந்திரங்களும் இன்று அடைந்திருக்கும் நிலை முன்னைய தோல்வி களையும் அனர்த்தங்களையும் விட மோசமானவை. இன்னொரு வகையில் கூறினால், இஸ்லாமிய உலகில் காணப்படும் பலதரப்பட்ட தேசிய, மார்க்ஸிய, மதச்சார்பற்ற, மேற்கு மயப்பட்ட தலைமைகளின் சிந்தனைகள் முழுமைத்தன்மை கொண்டவையன்று. அவர்கள் சிக்கி யிருக்கும் வெற்று வளையங்களின் சகதியிலிந்து அவர்களை மீட்டெடுக்கும் சுயாதீனத்தன்மை அச்சிந்தனைகளுக்குக் கிடையாது.

முஸ்லிம் சிந்தனையாளர்களும் முதிர்ச்சியுள்ள முஸ்லிம் தலைமைகளும் தமக்கு முன்னால் உண்மையாகவே திறந்திருக்கும் பாதையில் (அது ஆரம்பத்தில் எவ்வளவு கடினமானதாகத் தோன்றினாலும்) தங்களது பயணத்தை ஆரம்பிப்பது அவசியம். இன்று நமக்குத் தேவைப்படும் தீர்வுக்கான தோற்றுவாய் நமது சன்மார்க்கமும், நிலமும், வரலாறும், தேவைகளுமே என்பதை அவர்கள் உறுதியாக நம்ப வேண்டும். அதன் அடிப்படையிலேயே சமகாலச் சவால்களை அவர்கள் எதிர்கொள்ளவும் வேண்டும். இல்லையெனில், சென்ற நூற்றாண்டுகளில் இஸ்லாமிய உலகம் கடந்து வந்த கசப்பான அனுபவங்களையும் தோல்விகளையும் விட மிகப் பாரிய பிரச்சினைகளை எதிர்காலத்தில் அது சந்திக்க வேண்டியிருக்கும். முஸ்லிம் தலைமைகளும், வேறுபட்ட புலங்களில் இயங்கும் முஸ்லிம் கற்றறிவாளர்களும், வெகுஜனங்களும் மீட்சியையும் முன்னேற்றத்தையும் கண்ணியத்தையும் அவாவிக் கனவு காண முடியும். ஆயினும் அவர்களது சிந்தனா முறைகளும் சாதனங்களும் மாற்றமடையவோ, இலக்குகள் நுணுக்கமாக வரையறுக்கப்படவோ இல்லையெனில், அவற்றின் அறுவடை இன்று வரை உம்மா சுவைத்த அனைத்து அறுவடைகளை விடவும் கசப்பாகவே அமையும்.

எனவே, உம்மாவின் சிந்தனையாளர்களும் சமூகத் தலைமைகளும் அசல் மாற்றுத் தீர்வுக்கான கூறுகளை தமது அடிப்படை இலக்குகளிலிருந்தும், மூலாதாரங்களிலிருந்தும், சரியான அளவீட்டு நியமங்களிலிருந்தும் தேடிக் கண்டடைவது அவசியம். மட்டுமன்றி, உம்மாவின் அங்கத்தவர்களது சிந்தனையிலும் செற்பாட்டிலும் நிறுவனங்களிலும் அவை வேர் விட்டு வளர முயற்சி மேற்கொள்ளப்படவும் வேண்டும்.

## 2- வரலாற்றுப் பாரம்பரியத் தீர்வு:

பாரம்பரிய அணுகுமுறையிலான தீர்வொன்றை முஸ்லிம் உம்மா நீண்ட பல நூற்றாண்டுகளாக முயன்று பார்த்து விட்டது. அத்தகைய அணுகுமுறையானது உம்மாவின் கால-இடப் பரிமாணங்களையும் அதன் வரலாற்றுப் பயணத்தையும் கணிசமாக நிராகரித்து விட்டது. மட்டுமன்றி, உம்மாவின் பிற்காலப் பிரிவுகளில் ஏற்பட்ட நவீன வாழ்வியல் சவால்களுக்கும், உம்மாவின் சிந்தனை மீது அத்துமீறிய சக்திகளுக்கும் முன்னால் அவ்வணுகுமுறை தொடர்ச்சியான பின்னடைவையும் கண்டது. ஆக, உம்மாவைக் கடைத்தேற்றுவதில்

இப்பாரம்பரியத் தீர்வு எதிர்பார்த்த விளைவைத் தரவில்லை என்பது தெளிவு. அவ்வாறு எதிர்பார்த்த விளைவு ஏற்பட்டிருந்தால், உம்மா வின் நிலை இவ்வளவு அதல பாதாளத்துக்கு இறங்கியிருக்காது. அதன் கடிவாளத்தை எதிரிகள் கைப்பற்றியிருக்கவும் மாட்டார்கள். அதனைப் பீடித்த இத்தனை துன்பங்களுக்கு இடமும் இருந்திருக்காது.

வரலாற்று யதார்த்த அணுகுமுறையானது எதிர்பார்த்த விளைவு களை ஏற்படுத்தாமைக்கான காரணங்கள் என்ன என்பது பற்றி மாத்திரம் பேசிக் கொண்டிருப்பது இங்கு போதுமான நியாயமாகாது. ஏனெனில், எந்தவொரு சரியான தீர்வும் அத்தகைய தடைகளைக் கவனத்தில் கொண்டுதான் கருமமாற்ற வேண்டும். தடைகளை எதிர் கொள்வதற்கான தீர்வுகளையும் அது முன்வைக்க வேண்டும். குறித்த தடைகளும் தீர்க்கப்பட வேண்டிய பிரதான பிரச்சினையின் பிரிக்க முடியாத பாகம்தான் என்பது வெளிப்படை.

வரலாற்றுப் பாரம்பரியத் தீர்வானது விடயங்களை மிக எளிமை யாக்கம் செய்து விடுகிறது. தனது இயங்குதளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, தனது கோட்பாடுகளுக்கும் தரவுகளுக்கும் இயைபாக இயங்காத அல்லது இயங்க விரும்பாத அல்லது இயங்க முடியாத தரப்புகளையும் சூழமைவுகளையும் பிழையாகச் சித்தரிப்பதன் மூலம் அது விவகாரங்களை எதிர்கொள்ள முற்படுவதுதான் இதற்கான காரணமாகும்.

எந்தத் தீர்வின் வெற்றிக்கு அதன் எதிரிகளே ஒத்துழைக்க வேண் டும் என்றும், அனைத்துத் தடைகளும் நீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் முன் நிபந்தனை இடப்படுகிறதோ அந்தத் தீர்வு பின்பற்றத் தகுந்த தீர்வாக அமைய முடியாது. மட்டுமன்றி, தீர்க்கப் பட வேண்டிய பிரச்சினையின் பகுதியொன்றாகவும் அந்தத் தீர்வு மாறி விடும்.

உம்மாவின் சிந்தனையையும் மூளையையும் குறிப்பிடத்தக்களவு காலம் ஆக்கிரமித்திருந்த வரலாற்றுப் பாரம்பரிய அணுகுமுறை யானது இஸ்லாமிய சமூகம் தனது பொற்காலத்தில் கொண்டிருந்த பௌதீக-வரலாற்றுப் பிரதிமைகளை பிடிவாதமாக மீட்டுருவாக்கம் செய்யும் பண்பைக் கொண்டிருந்தது. ஆயினும், அவ்வரலாற்றுப் பிரதிமைகளின் அர்த்தங்கள் பற்றியோ பௌதீக உலக மாற்றங்கள் பற்றியோ அதனிடம் எந்தப் பிரக்ஞையும் இருக்கவில்லை. இஸ்லா மும் நீண்ட வரலாற்று வேர்களும் உம்மாவிடம் காணப்பட்ட

போதிலும், உம்மாவைக் கடைத்தேற்றுவதிலும் அதன் விவகாரங் களைக் கையகப்படுத்தி நெறிப்படுத்துவதிலும் வரலாற்றுப் பாரம் பரியத் தீர்வு ஏன் தோல்வியடைந்தது என்ற விளக்கத்தை இது நமக் குத் தருகிறது. அவ்வாறே பாரம்பரிய 'மத்ஹப்' அடிப்படையிலான சட்ட நியாயவியலானது இஸ்லாமிய உலகின் பல்வேறு பிராந்தியங் களில் வணக்கம் சார்ந்த கிரியைகளுள்ளும் தனியார் சட்டங்களுள் ளும் மாத்திரம் சுருங்கிப் போனது ஏன் என்ற விளக்கத்தையும் இது தருகிறது.

நவீன இஸ்லாமிய சீர்திருத்த முன்னோடிகளுள் தனித்துவமான வராக விளங்கிய ஜமாலுத்தீன் அல்-அப்கானி விடுத்த அழைப்பானது மேற்குறித்த அணுகுமுறையின் தவறுகளை ஸ்தூலப்படுத்தும் எடுத்துக் காட்டொன்றாக அமைகிறது. 'ஃகிலாபா றாஷிதா' காலத்தில் காணப்பட்ட சமூக-அரசியல் ஒழுங்கின் தொடர்புகளைத் தவறாகப் பொருள்கோடல் செய்த அவர், தலைகீழான பாடமொன்றை அதி லிருந்து பெற்றுக் கொண்டார். அதனால், முஸ்லிம் உம்மாவை 'நீதி மிக்க சர்வாதிகாரி' ஒருவரால்தான் சீர்திருத்த முடியும் என அவர் வலியுறுத்தினார்.

அரசியல் அதிகாரத்தில் அடக்குமுறை என்பது நீதிக்கு மறுகிடை யானது என்பது தெளிவானது. மிக ஆரம்ப கட்டத்தில் இறங்கிய அல்-குர்ஆனின் கருத்தாக்கங்களில் ஒன்றாகவும் அது உள்ளது:

> ''எனினும் நிச்சயமாக மனிதன் தன்னைப் (பிறரது) தேவை அற்றவன் என்று கருதியதால் வரம்பு மீறுகிறான்''.
> (அல் அலக் 96:6-7)

> ''சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக!'' (ஆல இம்ரான் 3:159)

> ''அவர்களது அனைத்து விவகாரங்களும் அவர்களுக்கு மத்தி யிலான ஆலோசனையின் பிரகாரம் அமைந்திருக்கும்''.
> (அஷ்ஷூரா 42:38)

வரலாற்று ரீதியான பின்பற்றல் என்ற தோற்றப்பாட்டைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், அது உருவான வரலாற்று வேர்களைப் புரிந்து கொள்வது முக்கியமானது. உண்மையில் இத்தோற்றப்பாடு ஆரம்பித்தது உம்மாவின் அறிவியல் தலைமைக்கும் அரசியல் தலை மைக்கும் இடையில் பிரிவினை ஆரம்பித்த கட்டத்திலாகும்.

'ஃகிலாபா றாஷிதா'வின் தலைமைக்கும், நாட்டுப்புற அறபுக் குலங்களின் கோத்திர வெறியாட்டத்துக்கும் இடையிலான மோதலின் விளைவாக பெரும் குழப்ப நிலையொன்று தோன்றியிருந்தது. அது 'ஃகிலாபா றாஷிதா'வை நீக்கம் செய்தது மட்டுமன்றி, 'ரித்தத்' இயக்கங்களும் தொடர்ச்சியான அரசியல் மீறல்களும் தோன்றவும் வழியமைத்தது. கடைசியில், இஸ்லாத்தின் பொதுவான கொள்கை களைப் பேணி நடந்த மதீனத்து மாந்தருக்கும், கோத்திர அரசியல் தலைவர்களுக்கும் இடையிலான பகிரங்க மோதலில் போய் அது முடிந்தது. ஹுஸைன் பின் அலி, அப்துல்லாஹ் பின் ஸுபைர், முஹம்மத், ஸைத் பின் அலி முதலிய பலர் முதல் தரப்பினைச் சார்ந்திருந்தனர் (அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!).

இறுதியாக, சிந்தனா-அறிவியல் தலைமை தோல்வியடைந்து பின்வாங்கி, மதத் தலைமையாகவும் சமயத்துறை அறிஞர்களைக் கொண்ட அமைப்புகளாகவும் பரிணாமம் பெற்றது; அரசியலிலிருந்து விலகி, ஆட்சிக்கு எதிரணியாகவும் மாறியது. கால ஓட்டத்தில் பெரு விரிசலடைந்து பல நூற்றாண்டுகள் தொடர்ந்த இப்பிரிவினை, இஸ்லாமிய சிந்தனையின் மீதும் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்திய மாந்தர்களது சிந்தனையின் மீதும் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. உள்ளதை அப்படியே பின்பற்றும் மரபொன்று தோன்றி, வஹியை யும் வேத வசனங்களையும் பகுதியளவில் நோக்கும் பண்பும், மொழி யடிப்படையிலான ஒற்றைப்படை அணுகுமுறையும் உருவாயின. சிலபோது ஷரீஆவின் மீது பலவீனர்களது கையாடல்கள் நிகழ்ந்து விடுமோ என்ற அச்சமும் கூட இக்கண்மூடிப் பின்பற்றலையும் தேக்க நிலையையும் ஊக்கப்படுத்தியிருக்கலாம்.

பின்வந்த நூற்றாண்டுகளில் இச்சிந்தனை மரபானது ஆரம்பகால வரலாற்றுப் பிரதிமைகளையும் வரலாற்று நினைவோட்டங்களையும் அதீதமாக மகத்துவப்படுத்தும் நிலைக்கு இஸ்லாமிய சிந்தனையை இட்டுச் சென்றது. இப்படித்தான் சமூக-அரசியல் தலைமைகளின் சிந்தனா வேர்கள் வரட்சியடைந்தன. சிந்தனைப் பலவீனம், அரசியல் அறியாமை என்பவற்றின் காரணமாக அவர்களது கையிலிருந்து கடிவாளம் தவறிப் போனது.

இந்த அனைத்தும் சேர்ந்து உம்மாவை ஒரு புறத்தில் கண்மூடிப் பின்பற்றலிலும் சிந்தனைத் தேக்கத்திலும், மறுபுறத்தில் அடக்கு முறையின் பிடியிலும் சமூக-அரசியல் தேக்கத்திலும் வீழ்த்தி விட்

டன. ஏனெனில், அதற்கப்பால் சிந்தனைத் தலைமைகள் பருகக் கூடிய சமூக-அரசியல் சார்ந்த அறிவியல் ஊற்றுகள் எதுவும் அங்கிருக்கவில்லை. அவ்வாறே சமூக-அரசியல் தலைமைகள் தமக்கு அவசியமான தீர்வுகளையும் பதிலீடுகளையும் உய்த்துப் பெற முடியு மான சிந்தனா அடித்தளமொன்றும் அங்கிருக்கவில்லை.

இப்படித்தான் கண்மூடித்தனமும் சிந்தனைத் தேக்கமும் ஒரு புறமாகவும், அரசியல் அடக்குமுறையும் அநியாயமும் மறுபுறமாக வும் உம்மாவை பற்றிக் கொண்டன. இந்நிலையானது இஸ்லாமிய உலகின் பின்தங்கிய நாடுகளது வரலாற்றையும், (மங்கோலிய மற்றும் சிலுவைப் படையெடுப்புகளின் பிறகு) நவீன காலனியத்தின் பிடியில் அவை வீழ்வதற்கு இட்டுச் சென்ற முக்கிய காரணங்களையும் நுணுக்கமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

வரலாற்று ரீதியான பின்பற்றல் அணுகுமுறையின் பின்னணியில் உம்மாவும் அதன் நிறுவனங்களும் இவ்வாறு வீழ்ச்சியடைந்தமை யும், அதன் சிந்தனா வீச்சுக் குறுகியமையும் மற்றொரு பாரிய அபாயத்தை உருவாக்கின. உம்மாவும் அதன் தலைமைகளும் தீர்வுக் கான அடிப்படைகளை வேற்று நாகரிகத்தின் வழியில் தேடிச் சென்ற மையே அந்த அபாயமாகும். அவர்கள் அன்னிய நாகரிகத்தை விரும்பியோ வெறுத்தோ பிரமிப்படைந்தோ பணிந்தோ எந்த வகை யில் பின்பற்றிச் சென்றிருந்தாலும், அது உம்மாவை இன்னுமின் னும் பலவீனப்படுத்துவதாகவும் வீழ்ச்சியடையச் செய்வதாகவுமே அமைந்திருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. இந்த வகையில்தான், உம்மாவைப் பீடித்த இத்தோற்றப்பாட்டை ஆய்வாளர்கள் ‘வடக்குக் கும் தெற்குக்கும் இடையிலான அல்லது கைத்தொழில் முன்னேற்ற நாடுகளுக்கும் பின்தங்கிய மூன்றாம் மண்டல நாடுகளுக்கும் இடை யிலான நாகரிக-பொருளாதார இடைவெளி அதிகரிப்பு’ என அடை யாளப் படுத்துகின்றனர். மூன்றாம் மண்டலத்தின் பெரும் பகுதியை அல்லது அதன் பிரதான அடையாளங்களை இஸ்லாமிய உலக நாடுகளே பிரதிநிதித்துவம் செய்கின்றன என்பது இங்கு குறிப் பிடத்தக்கது.

வரலாற்றுப் பாரம்பரிய சிந்தனைப் பள்ளியின் தோல்வியே இந் தப் பிரிவினை, தனிமைப்படல், ஒதுங்குதல் என்பவற்றிலிருந்து பெறப்படும் மிக முக்கிய பாடம் எனலாம். ஏனெனில், வரலாற்றுப் பிரதிமைகள் பற்றிய கனவுகளில் வாழ்தல் என்பது இயல்புக்கு மாற்றமானதாகும். மட்டுமன்றி, காலம், இடம், சிந்தனை, வசதி

வாய்ப்புகள் என்பவற்றின் அடிப்படையிலான வாழ்வியக்கத்துக்கும் அது எதிரானது. அந்தவகையில், இத்தகைய சிந்தனைகளையும் சீர்திருத்த அணுகுமுறைகளையும் நாம் ஏற்றுக் கொள்வதாயின், அன்னிய சிந்தனைப் படையெடுப்புக்கு முன்னால் நாம் கண்ட பின்னடைவு, பலவீனம், வீழ்ச்சி, தோல்வி முதலிய விளைவுகளையும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

உம்மாவுக்கு இன்று புதியதொரு பாதை தேவைப்படுகிறது. அதன் தலைவர்களும் சிந்தனையாளர்களும் வினைமை மிக்க புதிய முயற்சியொன்றில் இறங்க வேண்டியுள்ளது. மூடுண்ட பாதைகளையும் மலட்டுத்தனமான வழிமுறைகளையும் தவிர்க்கும் வகையில் அம் முயற்சி அமைய வேண்டும்.

அந்தப் புதிய பாதை எது? புதிய அணுகுமுறை எது? அதன் உள்ளீடு என்ன? பண்புகள் என்ன? முன்னைய வழிமுறைகளை விடச் சிறந்ததாகவும், இன்று வரை சாதிக்கப்படாததை சாதிப்பதாகவும் அது அமைகிறதா என்பதை நாம் எவ்வாறு சோதித்துப் பார்க்கலாம்?

அதற்கு நாம் முதலில் இத்தோற்றப்பாட்டைப் புரிந்து கொள்வது அவசியம். அது எப்படி ஆரம்பித்தது? பலவீனமும் வீழ்ச்சியும் எப்படி, எப்போது, ஏன் ஏற்படத் தொடங்கின? எவ்வாறு அவை விஸ்வரூபம் எடுத்தன?... என்பதையெல்லாம் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய உடலிலும் இஸ்லாமிய வரலாற்றிலும் ஏற்பட்ட நோய், அதன் தோற்றம், அடையாளங்கள், பக்க விளைவுகள் என்பன நன்கு புரிந்து கொள்ளப்பட வேண்டும். அதன் மூலமாகவே எத்தகைய சிகிச்சை அவசியம் என்பது கண்டறியப்பட முடியும். தேவையான முற்சிகள் முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்படவும் முடியும்.

### 3- நவீனம் தழுவிய அசல் இஸ்லாமிய அணுகுமுறை:

இந்த அணுகுமுறையானது -தலைப்பே குறிப்பது போல்- இலக்கு, நம்பிக்கை, பெறுமானங்கள், கோட்பாடுகள் முதலிய எல்லா வகையிலும் இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த அணுகுமுறையாக இருப்பது அவசியம். ஏனெனில் இங்கு நாம் கலந்துரையாடுவது நம்பிக்கை, பெறுமானம், உளவியல்-சிந்தனா கட்டமைப்பு என்பவற்றில் இஸ்லாமியமான சமுதாயமொன்றின் வளர்ச்சியையும்

இயக்கத்தையும் பற்றியாகும். எனவே, அடிப்படையான இவ்வுண்மையைப் புறமொதுக்கி விட்டு அந்த சமுதாயத்தை இயக்குவதோ முன்தள்ளுவதோ இயலாத காரியம். எத்தனை நோய்களுக்கும் விகாரங்களுக்கும் சோதனைகளுக்கும் அது உட்பட்டிருப்பினும், அதன் ஆளுமையும் ஆற்றல்களும் ஊக்கிகளும் புரிந்து கொள்ளப்படாமல் அது இயக்கப்படுவது சாத்தியமற்றது.

இத்தீர்வின் தொடங்கு தளமும் உள்ளடக்கமும் திசைவழியிலும் மாத்திரம் இஸ்லாமியமாக இருத்தல் போதாது என்பது இங்கு தெளிவானது. இஸ்லாம் என்பது 'இஸ்லாமிய வரலாற்றுப் பின்பற்றல் சார்ந்த தீர்வு'க்கும் 'நவீனம் தழுவிய இஸ்லாமிய மூல தத்துவத் தீர்வு'க்கும் பொதுவான ஒன்றாகும். எனவே, 'நவீனம் தழுவிய இஸ்லாமிய மூலதத்துவத்' தீர்வை ஏனைய தீர்வுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது மட்டுமன்றி, வினைத்திறனுக்கும் வெற்றிக்குமான காரணிகளை சாதகப்படுத்தும் வகையில் அத்தீர்வில் காணப்படும் சிறப்பம்சங்களை அடையாளப்படுத்துவதும் அவசியமாகும்.

முன்வைக்கப்படும் இஸ்லாமியத் தீர்வு அசல் தன்மை கொண்டதாக இருக்கும் அதேவேளை, நவீனம் தழுவியதாகவும் அமைந்திருக்க வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது. அதாவது, குறித்த தீர்வானது இஸ்லாமிய நம்பிக்கைகள், பெறுமானங்கள், உணர்வுகள் என்பவற்றிலிருந்து பிறந்து, உம்மாவின் சமகால யதார்த்தத்தையும் இன்றைய விவகாரங்களையும் நோக்கிச் செல்ல வேண்டும். இதன்போது, ஆரம்ப கால முதுசங்களையும் இஸ்லாமிய அனுபவத்தையும் புரிந்து கொள்வதற்கு கால-இடப் பரிமாணங்கள் பற்றிய பிரக்ஞை அவசியம். மட்டுமன்றி, மனித வாழ்வில் எண்ணிக்கை அடிப்படையிலும் வகை மாதிரியாகவும் ஏற்படக் கூடிய மாற்றங்களை ஆழம், நுணுக்கம், தேர்ச்சி, பகுப்பாய்வு, முழுமைத்துவ நோக்கு என்பவற்றின் ஊடாகப் புரிந்து கொள்வதும் அவசியம்.

இத்தகைய அணுகுமுறையே கண்மூடிப் பின்பற்றுதலின் அடியாகப் பெறப்படும் தீர்வுகளிலிருந்தும் அணுகுமுறையிலிருந்தும் வேறுபட்டு, புதிய இஸ்லாமியத் தீர்வுகளையும் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்டு வரும். அத்தகைய தீர்வுகள் உம்மாவின் தேவைகளைப் பிரதிபலிப்பது மட்டுமன்றி, அதன் யதார்த்தத்துக்கும் சவால்களுக்கும் இயைபானவையாகவும் இருக்கும். உம்மாவின் பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் இஸ்லாமிய உயர் இலக்குகளையும் அவை அடிச்சட்டகமாகக் கொண்டிருப்பதால்,

உம்மா தலைமைத்துவ ஸ்தானத்தைப் பெறுவதோடு, மனித இனத்தின் பயணத்தை அழகாக வழிநடாத்தும் தகுதியையும் பெற வழியேற்படும்.

உம்மாவின் சுயாதீன இஸ்லாமிய அடிப்படையிலிருந்து நவீன சமகாலத்தை அணுகுதல் என்ற இப்புரிதலானது 'முழுமைத்துவ நோக்கு' என்ற பொருளையே முதலில் தருகிறது. அந்த வகையில், அடிப்படையான இஸ்லாமியக் கொள்கைகளையும் பிரயோகங் களையும் கால-இடப் பரிமாணங்களுடன் புரிந்து கொண்டு, அவற் றின் முழுமொத்த இலக்குகளையும் சரியான தொடர்புகளையும் உய்த்தறிந்து, நவீன சமூகத்தைக் கையாள்வதற்கான அடிப்படையாக அவற்றை ஆக்கிக் கொள்வதை இது குறிக்கிறது. அதன் மூலமே நாகரிகத் தலைமை ஆசனத்தில் உம்மா அமர்வது சாத்தியமாகும்.

'நவீனம் தழுவிய மூல தத்துவ' அணுகுமுறைக்கு சக்தியும் நிபுணத்துவத் தேர்ச்சியும் சரியான முறைவழியும் அவசியம். மனித இயல்புகள் மற்றும் இயற்கைப் பண்புகள் பற்றிய அறிவின் அடியான பகுப்பாய்வையும் செயல்வாதத்தையும் கூட அது வற்புறுத்துகிறது. இத்தகைய செயல்வாதமானது யதார்த்தத்திலிருந்தும், அதன் விவ காரங்கள், பிரச்சினைகள், இயலுமைகள் என்பவற்றிலும் இருந்தே உருவாக முடியும். மட்டுமன்றி, இஸ்லாத்தின் முழுமொத்த இலக்கு கள், பெறுமானங்கள், வழிகாட்டல்கள் என்பவற்றின் திசைவழியில் அது செல்வதும் அவசியம்.

இத்தகைய அறிவார்ந்த முழுமைத்துவச் செயன்முறையின் மூல மாகவே எளிய விவசாய- வர்த்தக- மந்தை வளர்ப்புச் சமூகங்களில் தேவையான சிந்தனா, நாகரிக நகர்வொன்றை ஏற்படுத்தி, இயந்திரத் தொடர்பாடலும் தொடர்ச்சியான அசைவியக்கமும் கொண்ட உலகி னுள் அவற்றை அழைத்துச் செல்ல முடியும். அதன் தொடராகவே ஆற்றல்கள், செயல்வாதங்கள், அபிலாஷைகள் என்பவற்றிலும், செல் வம், உற்பத்தி என்பவற்றின் வடிவங்களிலும், அவற்றுக்கான இய லுமைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். மட்டுமன்றி, தனி மனிதன், சமூகம், அரசியல்-சமூக-பொருளாதார ஒழுங்குகள் என்ப வற்றின் வகிபாத்திரங்களில் மாற்றமேற்படுத்தி, உலகம் இன்று ஏக காலத்தில் பயனையும் துன்பத்தையும் அனுபவித்துக் கொண்டிருக் கின்ற சவால்களுக்கும் அபாயங்களுக்கும் வாய்ப்புகளுக்கும் முகங் கொடுக்கச் செய்யும் வகையில் அவற்றைத் தகவமைக்கவும் முடியும்.

ஆக- முழுமொத்த அணுகுமுறைகள் பற்றிச் சிந்திக்கவும், மனிதக் குழுமங்களது அசைவியக்கம், அடர்த்தி, சமூக உறவுகள் என்பவற்

றைக் கூர்ந்து கவனிக்கவும் வேண்டிய தேவை நமக்கு ஏற்பட்டுள்ளது. இஸ்லாத்தின் முழுமொத்த இலக்குகள், பெறுமானங்கள், அடிப்படைக் கோட்பாடுகள் என்பவற்றை முழுமையான கவனக் குவிப்புடன் புரிந்து, தற்காலத்துக்கு உகந்த இஸ்லாமிய சமூகவியல் சிந்தனைக்கான இயங்குதளமாக அவற்றை நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதே இதன் முதல்நிலைப் பொருளாகும். மட்டுமன்றி, இவ்வழிமுறையினூடாகவே அச்சிந்தனையை திசைமுகப்படுத்தி, கட்டுப்பாட்டுடன் இயங்க வைக்கக் கூடிய நிறுவனங்களையும் ஒழுங்குகளையும் நியமங்களையும் வடிவமைப்பது சாத்தியமாகும். நீதி, கலந்தாலோசனை, கூட்டுறவு, சகோதரத்துவம் மற்றும் இன்ன பிற இஸ்லாமியப் பெரும் பெறுமானங்கள் கொண்ட சமூகமொன்றை பலவீனமோ இயலாமையோ சீர்கேடோ வரம்புமீறலோ இன்றி தக்கவைத்துக் கொள்ளவும் அப்போதுதான் முடியும்.

இந்த நவீனம் தழுவிய இஸ்லாமிய மூலதத்துவத்தை சாத்தியப் படுத்துவதற்கு இஸ்லாமிய ஆய்வு முறைமையை மீள்வார்ப்புச் செய்ய வேண்டியுள்ளது. அப்போதுதான் செயற்பாடு, அறிவு, அனுபவம் ஆகிய தளத்திலிருந்து இஸ்லாத்தின் அதியுயர் இலக்குகளையும் பெறுமானங்களையும் சமூக-நாகரிக நியமங்களையும் நோக்கி நகர முடியும். கல்வியின் ஆன்மீகப் பெறுமானம் மற்றும் நடைமுறைத் தொழிநுட்பம் ஆகிய இரு பகுதிகளையும் உள்ளடக்கிய வகையிலான ஒருமைப்பாட்டுத் தன்மை அனைத்துப் படித்தரங்களிலும் மீளக் கொண்டு வரப்படுவதன் முக்கியத்துவத்தை இது எடுத்துக் காட்டுகிறது. கல்வியின் இஸ்லாமியத் தத்துவம், அதன் ஆழம், சிறப்புக் கூறு முதலிய அம்சங்களும் (குறிப்பாக சமூக, மானிடவியல் கலைகளில்) இதன் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறே, நவீனம் தழுவிய இஸ்லாமிய மூலதத்துவமானது முதன்மைப்படுத்த வேண்டிய அம்சங்களை மீளொழுங்குபடுத்துவதற்கும், சிந்தனையையும் செயன்முறையையும் மீள்வார்ப்புச் செய்வதற்கும் வழிவகுக்கும். இதன் விளைவாக, ஆரோக்கியமான இஸ்லாமியக் கல்விச் சாதனங்கள் கிடைக்கப் பெறுவதோடு, அரசியல்-சமூக நிறுவனங்களும் ஒழுங்குகளும் மீட்டுருவாக்கம் செய்யப்படும் வாய்ப்பு ஏற்படும். இஸ்லாமியப் பெறுமானங்களதும், அதன் அதியுயர் இலக்குகளதும் அடிப்படையிலான மீள்கட்டுமானத்தை நோக்கிய சமூக அசைவியக்கத்தில் பரிபூரணத் தன்மையையும் தொடர்ச்சித் தன்மையையும் சாத்தியப்படுத்த இந்நிலை உதவும்.

நவீனம் தழுவிய மூலதத்துவமானது இரு விடயங்களை உள்ளடக்கியுள்ளது. சீர்த்திருத்தத்தையும் மானிட-நாகரிக முன்னிலை யையும் சாத்தியப்படுத்த நாம் விரும்பினால், அவ்விரண்டையும் ஒன்றிணைத்திருப்பது அவசியம். கடந்த பல நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஒவ்வொரு நாகரிக மாற்றத்தின் போதும் கிடைக்கப் பெற்ற வரலாற்றுப் பாடங்கள் இந்த உண்மையை நமக்கு எடுத்துக் காட்டு கின்றன. நம்பிக்கை சார்ந்த ஆக்கபூர்வமான நோக்கும், வினைத் திறன் மிக்க சிந்தனா மேன்மையுமே அவ்விரு அம்சங்களாகும். இஸ் லாத்தின் ஆரம்ப காலத்தில் இவ்விரண்டும் ஒருசேர இணைந்தி ருந்தன. அதன் விளைவாக ஆரம்ப கால முஸ்லிம்கள் நிகழ்த்திய சாத னைகளை வரலாற்றுப் பக்கங்களும் எடுத்தியம்புகின்றன. குறைஷி வர்க்கத்தின் ஜீவநாடிகளை அறுத்தெறிய மேற்கொள்ளப்பட்ட முன் னெடுப்புகள், அகழி யுத்தத்தின் போதும் ஹுதைபியா உடன்படிக் கையின் போதும் மக்கா வெற்றியின் போதும் மேற்கொள்ளப்பட்ட இராணுவ-இராஜதந்திர ஏற்பாடுகள், ரோமர்களுடனான தீர்மானகர மான யர்மூக் யுத்தத்தில் ஷாம் பாலைவனத்தை ஊடறுத்து முஸ்லிம் படைகளுக்கு உதவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நுண்மையான திட்டங்கள் என்பவற்றில் இதனை நாம் கவனிக்க முடியும். திணைக் கள ஏற்பாடுகள், கொள்கை வரைபுகள், அடிப்படைகளையும் ஒழுங்குகளையும் வகுத்தல், கல்விக்கும் பயிற்சிக்கும் அறிவு-ஞானங் களைப் பரப்புவதற்குமான நிலையங்களாக மஸ்ஜிதுகளைக் கட்டி யெழுப்புதல் என்பவற்றிலும் இதனை நாம் காணலாம். அந்த ஆரம்ப முஸ்லிம் சமுதாயம் தன்னைச் சுற்றிக் காணப்பட்ட தேக்க நிலைச் சமுதாயங்களை விட அல்லது காட்டுமிராண்டிக் கோத்திரச் சமுதா யங்களை விட எவ்வளவு தூரம் அறிவியல் உயர்நிலையை எட்டி யிருந்தது என்பதற்கு இவை சான்று பகர்கின்றன.

ஆக- இஸ்லாமிய அசைவியக்கமானது நம்பிக்கை சார்ந்த பகுதிக்கு மாத்திரம் அழுத்தம் கொடுத்து விட்டு, அதன் செயன்முறையை மீளாய்வு செய்யாமல் விடுவதால் எந்த நன்மையும் ஏற்படப் போவ தில்லை. அவ்வாறே, மேற்கு மயப்பட்ட மதச்சார்பற்றவர்கள் சிந் தனை சார்ந்த விவகாரத்தைப் பற்றிக் கொண்டு, பல்வேறு நவீன சாதனைகளுக்கு முன்னால் பிரமித்து நின்று விடுவதாலும் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. பிரதிநிதித்துவப் பணியின் அடிப்படைகளைச் சாத்தியப்படுத்தி, நாகரிகத்தைக் கட்டியெழுப்பு வதற்கு இவ்விரு அணியினரும் ஒன்றிணைக்கப்படுவது அவசிய மாகும்.

நம்பிக்கை, சிந்தனை ஆகிய இவ்விரு அம்சங்களையும் ஒன்றிணைப்பதானது -இறுதியில்- வஹ்யி என்னும் வேத வெளிப்பாட்டுக்கும் பகுத்தறிவுக்கும் இடையிலான உறவை மீள நிலைநிறுத்தும் செயற்பாடே அன்றி வேறில்லை. வஹ்யியையும் அது எடுத்தாளும் விவகாரங்களையும் புரிந்து கொள்வதற்கு பகுத்தறிவைப் பயன்படுத்துவதை இது குறிக்கிறது. வஹ்யியின் அகிலம் தழுவிய முழுமொத்த இலக்குகள் மூலமாகவும், அதன் வாழ்வியல்-நாகரிகப் பெறுமானங்கள் மூலமாகவும் பகுத்தறிவை வழிநடாத்துதல் எனவும் இதனைக் கூற முடியும். இவ்விரு பகுதிகளையும் ஒன்றிணைப்பதன் மூலமாக மேற்கொள்ளப்படும் சீர்திருத்தச் செயற்பாடானது இறுதியில் முறைவழியின் மீது ஏற்றப்படும் சிந்தனைச் செயற்பாடாகவே அமையும். இன்று உம்மா எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி என்பது சிந்தனா நெருக்கடியே அன்றி வேறில்லை என இதனை இன்னொரு வகையில் கூற முடியும்.

சரியான தொடக்கம், முன்னிலைப்படுத்த வேண்டிய அம்சங்கள், அவற்றுக்கான திட்டங்கள் என்பவற்றை நோக்கிய இந்த அழைப்பே உண்மையில் இன்று சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும், பிரக்ஞை மிக்க சமூக-அரசியல் தலைமைகளும் மேற்கொள்ள வேண்டிய பணியாகும். உம்மாவுக்கு இது குறித்து அறிவூட்டவும், தேவையான அடிப்படைகளைக் கட்டியெழுப்பவும் அவர்கள் உழைக்க வேண்டும். அப்போதுதான் சீர்திருத்த விதை ஆழப்பதிந்து மரமாக வளரும்; நல்விளைவையும் தரும்.

எல்லா ஆரம்பங்களையும் போலவே இங்கும் பாதை கரடு முரடாகத் தோன்றலாம். தொடக்கம் கடினமாகவும் அமையலாம். ஆயினும், பாதை இலகுவாக இருந்தால்தான் மக்கள் அதனைத் தெரிவு செய்வார்களா என்ன? எதற்காகத் தமது பயணத்தை ஆரம்பித்தார்களோ அதனை அடைவதற்கு குறித்த பாதை உதவும் என அறியும் போது நிச்சயமாக அதனையே அவர்கள் தெரிவு செய்வார்கள்!

## இரண்டு: நெருக்கடியின் வரலாற்று வேர்கள்.

*1) அரசியல் தளம் மாற்றமடைதல்: ''நாட்டுப்புற அறபிகளும், குழப்ப நிலையும், ஃகிலாபா றாஷிதாவின் வீழ்ச்சியும்''*

உம்மா தனது பலவீனம், சிதைவு, நாகரிகப் பின்னடைவு முதலிய நெருக்கடிகளிலிருந்து வெளியேறுவதற்கு இஸ்லாமியத் தீர்வு அத்தி

யாவசியமான ஒன்று என்பது இதுவரை நாம் முன்வைத்த பகுப் பாய்விலிருந்து தெளிவாகிறது. விடுதலைக்கும் புத்தாக்கத்துக்குமாக உம்மாவில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு யத்தனங்ளை முன்சென்ற பக்கங்களில் சுருக்கமாக ஆராய்ந்தோம். உம்மா நவீன மேற்கு நாகரிகத்தின் சவாலை எதிர்கொண்டு, தோல்வி கண்டு, அதன் அடக்குமுறைக்கு உட்பட்டதிலிருந்து இந்த யத்தனங்கள் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளன. வரலாற்றில் முதல் தடவையாக உம்மா இதனை ஒரு நாகரிகச் சவாலாக எதிர்கொண்ட போதும், அந்த நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்கு அது மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் எவ்வாறு தோல்வியடைந்தன என்பதையும் நாம் கண்டோம்.

அந்த வகையில்- உம்மாவை நெருக்கடியிலிருந்து விடுவித்து, அதன் கழுத்தை இறுகப் பற்றியிருக்கும் பலவீனத்தையும் வீழ்ச்சி யையும் உடைத்தெறிவதற்கான ஏக மார்க்கமாக அமையக் கூடியது 'நவீனம் தழுவிய மூல தத்துவ' அணுகுமுறையே என்று திடமாக நாம் நம்புகிறோம். மேலே நாம் மேற்கொண்ட பகுப்பாய்வின் பெறுபேறும், முஸ்லிம் உம்மாவின் இன்றைய யதார்த்தமும் இதனை நமக்கு உணர்த்துகின்றன. எனவே, இந்நெருக்கடி எத்தகையது என்ப தையும் அதன் துருவங்கள் எவை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நெருக்கடியின் மூலக்கருவை நாம் ஊடறுத்துச் செல்ல முடியும். அது பற்றிய அறியாமையே கடந்த பல நூற்றாண்டுகளாக பயணத்தைத் தொடர விடாமல் நம்மைத் தடுத்து வந்திருக்கிறது.

இச்செயற்பாட்டின் போது நாம் நுனிப்புல் மேய்வதோடு திருப்தி யடைந்து விடாமல், அதன் இறுதி வேர்கள் வரை ஊடுருவிச் செல்வது அவசியம். நமது கல்வியியல் அடிப்படைகளிலும் மனப் பாங்கிலும் எத்தகைய தடைகள் காணப்பட்டாலும், நாம் தளர்ந்து விடக் கூடாது. உம்மாவின் வரலாறு நெடுகிலும் நிலவிய குறுங் குழுவாத, சமூக, கோத்திர, சிந்தனா ரீதியான மோதல்களின் தாக்கத் திற்குட்பட்டு, சிலபோது இதய சுத்தியோடும் பலபோது போலியாக வும் வெளிப்படும் அச்சமோ புனிதப்படுத்தலோ கூட நமது இச் செயற்பாட்டைத் தடுத்து விடக் கூடாது. ஏனெனில், இத்தகைய அச்சமும் போலியான புனிதப்படுத்தலுமே உள்ளத்தையும் அறிவை யும் சிந்திக்கவோ செயற்படவோ விடாமல் முடமாக்கி வருகின்றன.

எனவே, நமது இருப்பையும் இன்று வரையான வரலாற்றையும் விதிவிலக்கின்றி நாம் முழுமையாகக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அதனூடாகவே போலியான புனிதப்படுத்தல்களையும் மலட்டுத் தனமான கண்டனங்களையும் தவிர்த்து, சரியான அறிவையும் புரிதலையும் நாம் கண்டடைய முடியும்.

உம்மாவின் கட்டமைப்பிலும் வரலாற்றிலும் ஏற்பட்ட முதலாவது நெருக்கடி ஃகிலாபா றாஷிதா வீழ்ச்சியடையக் காரணமான அந்த மிகப்பெரும் குழப்ப நிலையே ஆகும் அப்போதிருந்த இஸ்லாமிய தேசத்தினுள் ஏற்பட்ட தொடர் உள்நாட்டுப் போர்களின் விளைவாக ஃகிலாபா றாஷிதா வீழ்ச்சியடைந்து, அடக்குமுறையும் மன்னராட் சியும் கோத்திர வெறியும் கொண்ட அரசொன்று இடம்பிடித்தது. பனூ உமையாக்களே அத்தகைய ஆட்சிமுறையை முதன்முதலில் ஆரம்பித்து வைத்தனர்.

உம்மாவின் வரலாற்றில் நிகழ்ந்த அப்பெரும் குழப்பமும் ஃகிலாபா றாஷிதாவின் வீழ்ச்சியும் மிக முக்கியமான நிகழ்வுகளாகும். அவற்றையும் அவற்றுக்குக் காரணமான அம்சங்களையும் இலகுவாக நாம் கடந்து சென்று விட முடியாது. இன்றுவரை நமது இயலுமை களில் தாக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் அந்நிகழ்வுகளின் விளை வுகள் ஆழ்ந்து புரிந்து கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான், உம்மா கடந்து வந்த பயணத்தை நுணுக்கமாகத் தெரிந்து கொண்டு, இன்று நாம் கடந்து கொண்டிருக்கும் கட்டத்தையும் அதன் பாதக நிலைகளையும் புரிந்துகொள்ள முடியும்.

இஸ்லாமிய நேர்வழி ஆட்சியின் நிலைக்களனாக இருந்த மதீ னத்து அரசியல் தளம் மாற்றமடைந்தமையே அப்பெரும் குழப்ப நிலைக்கும் ஃகிலாபா வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தது. எனி னும், அம்மாற்றமும் அதனை சுதாரித்துக் கொள்ளும் ஆற்றலும் போதிய கவனயீர்ப்பைப் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இதனைச் சற்று விரிவாக இங்கு நோக்குவோம்.

நபித் தோழர்களும் அவர்களது படையணியுமே இறைத்தூதர் (ஸல்) அவர்களது அரசின் அத்திவாரமாக அமைந்திருந்தனர். நேர்வழி அரசை அத்தோழர்களே தமது தோள்களில் சுமந்திருந்தனர். அத் தோழர்களின் பல்வகைமையும் தயார்நிலையும் இலட்சிய மனப் பாங்கும் முதிர்ச்சியும் பயிற்சியும் அந்த அரசுக்குப் பக்கபலமாக இருந்தன.

ஆயினும், ஒன்றன் பின் ஒன்றாக ஏற்பட்ட நிகழ்வுகளின் நெரிச லாலும், இஸ்லாமிய அரசு அன்று எதிர்கொண்ட ரோம-பாரசீக சாம்

ராஜ்யங்களின் சவால்களாலும் நாட்டுப்புற அரபுக் கோத்திர மாந்தர்கள் பெருமளவு உள்ளீர்க்கப்படும் நிலை உருவானது. அவ்வாறு உள் ளீர்க்கப் பட்டவர்கள் தமது தீவிரக் கோத்திர உணர்வோடும் அறி யாமையுடனுமே நாட்டுப்புறக் கோடிகளிலிருந்து இஸ்லாமியப் படையில் இணைந்து கொண்டனர். அதேவேளை, வயது முதிர்ச்சி காரணமாகவும், போர்களில் வீர மரணம் எய்தியமை காரணமாகவும் நபித்தோழர்களது நேரடிப் பங்களிப்பு படிப்படியாக்க் குறைவ டைந்திருந்தது.

இந்நிலையானது இறுதியில் இஸ்லாமிய அரச படையில் நாட்டுப் புற அறபிகள் செல்வாக்குப் பெற வழியமைத்தது. இஸ்லாம் பற்றிய பொதுவான புரிதலைக் கொண்டிருந்த இவர்கள், தமது கோத்திரக் கருத்தாக்கங்களையும் சேர்த்தே சுமந்து வந்திருந்தனர். இறைத்தூதர் (ஸல்) அவர்களது தலைமையின் கீழும், நேர்வழி நடந்த ஆட்சி யாளர்களின் தலைமையின் கீழும் நிகழ்ந்து வந்த பல தசாப்த கால இஸ்லாமிய சமூக உருவாக்கத்தில் முஸ்லிம்கள் பெற்றிருந்த அறிவோ பயிற்சியோ பண்படுத்தலோ பின்வந்த நாட்டுப்புற அறபிகளுக்கு கிடைக்கவில்லை.

இத்தகைய கோத்திர மாந்தர்களின் ஆதிக்கம் அரச படையில் மேலோங்கிய போது, ஃகிலாபாவின் நிலைக்களனாக இருந்த அரசியல் தளம் மாற்றத்திற்கு உள்ளானது. அதன் பிறகு உருவான புதிய படையும், புதிய அரசியல் தளமும் வரித்துக் கொண்ட பெறு மானங்களும் நோக்கங்களும் அளவுகோல்களும் ஏலவே நபியவர் களால் அறிமுகம் செய்யப்பட்டிருந்த தூய இஸ்லாமியப் பெறு மானங்கள், நோக்கங்கங்கள், அளவுகோல்கள் என்பவற்றிலிருந்து வேறுபட்டனவாய் அமைந்திருந்தன.

இதன் தவிர்க்க முடியாத விளைவாகவே அந்தப் பெரும் குழப்ப மும் ஃகிலாபா வீழ்ச்சியும் நடந்தேறின; கோத்திர வெறியும் சுய நலமும் அடக்குமுறையும் கொண்ட ஆட்சியொன்று தோன்றியது; உஸ்மான் (றழி), அலி (றழி), ஹஸன் (றழி) ஆகியோருக்கு வாய்க்கப் பெறாத ஸ்திரமான அதிகாரம் பனூ உமையாக்களுக்கு இயல்பாகவே வாய்க்கப் பெற்றது.

மட்டுமன்றி, மக்காவிலும் மதீனாவிலும் இஸ்லாத்தைப் பேணி வாழ்ந்த சிறு குழுவினருக்கு சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தலைதூக்க முடியாமல் போனதும் இதனால்தான். மிக மோசமான உள்நாட்டுப் போர்களில் ஹுஸைன் பின் அலி, அப்துல்லாஹ் பின்

ஸுபைர், முஹம்மத் பின் அந்-நஃப்ஸ் அஸ்-ஸகிய்யா, ஸெய்த் பின் அலி முதலானோரின் அணிகள் துவம்சம் செய்யப்பட்டதும் இத னால்தான். இந்த உள்நாட்டுப் போர்களில் மிகப் பரந்தளவு வெற்றி கண்ட கோத்திரப் படைகள், கால ஓட்டத்தில் இஸ்லாத்தை நோக்கிப் பெரும் திரளாக வந்த சமூகங்களையும் சேர்த்துக் கொண்டு, பாரசீக, ரோம, இந்திய, துருக்கிய சமுதாயங்களையும் வெற்றி கண்டன. இந்த அனைத்துச் சமுதாயங்களும் தம்மிடம் உள்ளூறையாகப் படிந் திருந்த மௌட்டீக, கோத்திரப் பண்புகளிலிருந்து விடுபட்டு, இஸ் லாமிய அடிப்படையில் பயிற்றப் படுவதற்கான அவகாசம் பெறா மலே இஸ்லாமியக் கொடியின் கீழ் அணி திரண்டிருந்தன என்பது கவனிப்புக்குரியது.

இப்படித்தான் அப்பிறழ்வு ஆரம்பமானது. இஸ்லாத்தின் இலட் சியங்களையும், தூய கருத்தாக்கங்களையும், மாசற்ற விதிமுறை களையும் விட்டுப் பிறழ்ந்த நாட்டுப்புறக் கோத்திர மாந்தரின் ஆதிக்கமும் மேலோங்கியது. இதனால் அரசியல் தளம் மாற்ற மடைந்து, இஸ்லாமும் மௌட்டீகமும் கலந்த புதியதொரு தலை மையையும் ஆட்சியொழுங்கையும் நோக்கி உம்மா நகர்ந்தது.

## 2) அறிவியல் தலைமைக்கும் அரசியல் தலைமைக்கும் இடையில் ஏற்பட்ட பிளவு:

நாட்டுப்புற அறபிகள் இஸ்லாத்தின் வெற்றிப்படை மீது ஆதிக்கம் பெற்று, ஃகிலாபா றாஷிதாவை வீழ்த்தி, உமையாக்களின் மன்ன ராட்சியை நிறுவியமை மேற்குறித்த மாற்றத்திற்கும் பிறழ்வுக்கும் காரணமாக இருந்த அதேவேளை, வெளிப்படையான இம்மாற்றத் தினால் விளைந்த கருத்தியல் மாற்றமானது இன்னும் அதிகம் அபா யம் கொண்டதாகவும், ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. ஏனெனில், இப்பிறழ்வானது உம்மாவின் தலை மைத்துவ அணிகளுக்கு மத்தியில் பிளவொன்று ஏற்படக் காரண மாகியது. அப்பிளவு அறிவியல் தலைமைக்கும் அரசியல் தலை மைக்கும் இடையிலான உறவுச் சிதைவில் துலாம்பரமாகப் பிரதி பலித்தது. பிற்காலத்தில் தோன்றிய பலவீனம், வீழ்ச்சி, முரண்பாடுகள் என்பவற்றுக்கும் மிக முக்கியமான அடிப்படையாக அது அமைந்தது. மட்டுமன்றி, இஸ்லாம் தனிமனிதர்களிலும் சமுதாயங்களிலும் பீறிடச் செய்திருந்த பிரமாண்டமான ஆக்க சக்தி பலவீனம் அடைவதற்கும் அது காரணமாகியது.

முஸ்லிம் சமூக ஒழுங்கில் கோத்திர வெறியும் சுயநலமும் அடக்குமுறையும் கொண்ட அதிகாரமொன்று உருப்பெற்ற போது, ஹிஜாஸ் பிராந்தியத்தில் சீரிய இஸ்லாமிய சிந்தனையைப் பிரதி பலித்து வாழ்ந்த தலைமைத்துவம் அப்புதிய மாற்றத்தையும், அதன் நோக்கங்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மட்டுமன்றி, அம் மாற்றத்துக்கு எதிராக -கோத்திர அடிப்படையிலன்றி- நம்பிக்கை மற்றும் சிந்தனைத் தளத்தில் போராடவும் துவங்கியது.

ஆயினும், ஒரு நூற்றாண்டுக்கும் அதிக காலம் தொடர்ந்த புரட்சி களுக்கும் கொடிய உள்நாட்டு யுத்தங்களுக்கும் பிறகு கூட இஸ் லாத்தைச் சீரிய முறையில் பின்பற்றி வாழ்ந்த அறிஞர்களால் உம்மாவின் வெகு மக்களை தம்பால் ஈர்க்க முடியாது போனது. அவ்வளவு தூரம் கோத்திர-இன-குறுங்குழுவாதக் கருத்தாக்கங்கள் வெகுமக்களின் மனவமைப்பிலும் உருவாக்கத்திலும் ஆதிக்கம் செலுத்தியிருந்தன. இதனால் அவ்வறிஞர்கள் பின்வாங்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகினர். அவர்களை முற்றுகை யிட்டு, தனது நோக்கங்களுக்கு அவர்களை பணிய வைத்து, எதிர்ப்புப் போராட்டத்தின் குரல் வளையை நெரிக்க முயன்ற புதிய அரசியல் தலைமையை விட்டுத் தூர விலக வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டது. புதிய அரசியல் தலைமையின் நெருக்குவாரங்களிலி ருந்தும் சித்திரவதைகளிலிருந்தும் -நான்கு இமாம்கள் உட்பட- பல சிரேஷ்ட அறிஞர்கள் தப்பவில்லை. அந்தவகையிலேயே இஸ் லாத்தை உரிய முறையில் பேணி ஒழுகாத அரசியல் தலைமையின் கீழ் நீதிபதியாகப் பணியாற்ற மறுத்த இமாம் அபூ ஹனீபா (றஹ்) சிறையில் மரணிக்க நேர்ந்தது (ஹி.150). நிர்ப்பந்த நிலையில் இருப்பவரது விவாகரத்து (தலாக்) செல்லுபடியற்றது எனப் பகிரங்க மாக மார்க்கத் தீர்ப்பு வழங்கியதற்காக இமாம் மாலிக் (றஹ்) கரம் செயலிழக்கும் அளவுக்கு தண்டிக்கப்பட்டதும் இதனால்தான். (மரணம் ஹி.179) அன்று காணப்பட்ட அரசியல் அதிகாரத்தின் பிடியைத் தளர்த்துமளவுக்கு இமாம் மாலிக்கின் மார்க்கத் தீர்ப்பு எதிர்மறை யான அரசியல் அர்த்தமொன்றைத் தாங்கியிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.[2]

அரசியல் அதிகாரத்தின் பல செயற்திட்டங்களை எதிர்த்ததனா லேயே இமாம் அஹ்மதும் ஏராளமான சித்திரவதைகளுக்கு உட் படுத்தப்பட்டார் (மரணம் ஹி. 241). இமாம் ஷாபிஈ கூட யமனி லிருந்து பக்தாதுக்கு விலங்கிடப்பட்டுக் கொண்டு வரப்பட்டார்.

அவரது சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கண்டு அதிகார வர்க்கம் அச்சமடைந்திருந்தது. எனினும், இறுதியில் அவர் ஆட்சியாளர்களின் பிடியிலிருந்து மிகத் தூரமாக அமைந்திருந்த எகிப்தில் பாதுகாப்புக் கருதி தஞ்சம் புகுந்தார் (மரணம் ஹி. 204).

இஸ்லாமிய சிந்தனைத் தலைமைக்கும் சமூக-அரசியல் தலைமைக்கும் இடையிலான இப்பிரிவினையே இஸ்லாமிய ஆக்க சக்தி பின்னடைவதற்கும், இஸ்லாமிய உறவின் உள்ளிழை சிதைவதற்கும், இஸ்லாமிய சிந்தனையும் இதர ஒழுங்குகளும் வீழ்ச்சியடைவதற்கும், தீய சக்திகளுக்கான வாயில் அகலத் திறந்து கொள்வதற்குமான அடிப்படைக் காரணமாக அமைந்தது.

இதனால், இஸ்லாத்தின் உந்துசக்தி படிப்படியாகக் குன்றி பலவீனம் அடையலானது. பின்வந்த காலங்களில் இஸ்லாமிய நாகரிகத்துக்கும் உம்மாவின் பங்களிப்புக்குமாக எஞ்சியிருந்ததெல்லாம் இஸ்லாத்தின் பொதுவான ஆகர்ஷண சக்தியும், மனித உள்ளங்களில் அது ஏற்றி வைத்திருந்த நேர்வழியின் ஒளியும் மாத்திரமே. சுற்றிக் காணப்பட்ட சமுதாயங்களும் பின்தங்கியிருந்த அந்நிலையில், நாகரிகப் பதிலீடொன்று அற்றுப் போயிருந்தது. முஸ்லிம் பிரதேசங்கள் பர்பரியர்களாலும் மங்கோலியர்களாலும் ரோமர்களாலும் சிலுவை வீரர்களாலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தன.

அறிவியல் தலைமைக்கும், அரசியல் தலைமைக்கும் இடையிலான இப்பிரிவினையானது பிற்காலங்களில் உம்மாவைப் பீடித்த பல நோய்களுக்கு வளமான மண்ணாக அமைந்தது. இன்றுவரை உம்மா சிந்தனா ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் பலவீனமடைந்து மூச்சுத் திணறி நிற்க அந்நோய்கள் காரணமாயின. நவீன மேற்கு நாகரிகச் சவாலுக்கு முன்னால் பௌதீக ரீதியாகவும் மானசிக ரீதியாகவும் உம்மாவின் இருப்பே அச்சுறுத்தலுக்கு உள்ளானது.

மோசமான இச்சிதைவானது முதலில் சமூகப் பொறுப்பிலிருந்தும், நடைமுறைத்தன்மை வாய்ந்த செயல்வாதத்திலிருந்தும் சிந்தனைத் தலைமை அணி ஒதுங்கி விடக் காரணமாகியது. இந்த ஒதுங்கு நிலையே அடுத்த கட்டமாக முஸ்லிம் பகுத்தறிவு பலவீனமடைந்து, ஒடுங்கி, மஸ்ஜித் வராண்டாக்களில், கோட்பாட்டு மற்றும் வரலாற்றுப் பனுவல்களுக்குள் மூழ்கி விடுவதற்கான அடிப்படைக் காரணமாகவும் அமைந்தது. மட்டுமன்றி, அவர்கள் அல்-குர்ஆன் மற்றும் அஸ்-ஸுன்னா வசனங்களது உயர் நோக்கங்களைப் புரிந்துகொள்வதற்கு

'விளக்க முறை' அணுகுமுறையையும் (Descriptive method), மொழி யியல் அணுகுமுறையையும் பயன்படுத்தலானார்கள். அதிகாரத்தில் இருப்போர் தமது பிறழ்வுகளுக்குச் சார்பான கருவியாக அவ்வச னங்களைப் பயன்படுத்தாமல் தடுக்கும் முயற்சியாகவும் அது அமைந் திருந்தது. இப்போராட்டம் இறுதியில் 'இஜ்திஹாதின் வாயில் மூடப்படல்' என்ற கருத்தாக்கத்தில் போய் முடிந்தது. உண்மையில் இஜ்திஹாதுக்கென மூடக்கூடிய வாயிலோ, இடித்து வீழ்த்தக் கூடிய வீடோ இருக்கவில்லை. அது அரசியல் தலைமைகளின் முறையற்ற செயற்பாடுகளின் விளைவாக சிந்தனைத் தலைமைகள் வலுவிழந்தி ருந்ததைக் குறிக்கும் பிரயோகமே அன்றி வேறில்லை. அரசியல் அதிகாரத்தில் இருந்தோர் தமக்கும், தம்மைச் சார்ந்தோருக்கும், தமது கோத்திர நலன்களுக்கும் ஏதுவான வகையில் தம்மால் முடிந்த அனைத்தையும் கையகப்படுத்திக் கொண்டு பிறரை அடக்கியாள முயன்றதால், அறிஞர்கள் எல்லா விதமான நவீனங்களிலிருந்தும் ஒதுங்கி மஸ்ஜித் வளாகங்களுக்குள் தமது அறிவியல் செயற்பாடு களை முடக்கிக் கொண்டனர்.

அடுத்ததாக, இப்பிரிவினையானது அரசியல் தலைமையின் அறி வீனத்துக்கும் வழி வகுத்தது. ஏனெனில், மாற்றங்களோடு இயைந்து சென்று, கருத்துக்களையும் கொள்கைகளையும் பதிலீடுகளையும் வழங்கக் கூடிய சிந்தனைத் தளமொன்றின் சேவை அரசியல் தலை மைக்கு கிடைக்காமல் போயிற்று. இந்தவகையில், பொதுவாக எல்லா இஸ்லாமிய நாடுகளினதும் வரலாற்றில் தோன்றிய அரசியல் தலை மைகள் மக்களை அநியாயமாக அடக்கியாளும் அதிகார மையங் களாக மாறிப் போனமை ஒன்றும் ஆச்சரியமானதல்ல. உம்மாவின் விவகாரங்களைக் கையாள்வதிலும், அதன் சாதகமான கருத்தாக்கங் களையும் ஆக்க சக்தியையும் வெளிக் கொண்டு வருவதிலும் 'ஷூறா' என்னும் கலந்தாலோசனைக்கோ உம்மாவின் பங்கேற்புக்கோ இட மில்லாது போனதும் ஆச்சரியமானதல்ல. இறுதியில் முழுமொத்த உம்மாவும் உளவியல், சிந்தனை, நிறுவனங்கள், ஒழுங்குகள் முதலிய அனைத்துத் தளங்களிலும் சிதைவுக்கும் நாகரிகப் பின்னடைவுக்கும் உட்பட்டது கூட ஆச்சரியமான விடயமல்ல.

ஃகிலாபா அரசு வீழ்ந்தது முதல் உம்மாவின் உடலிலும் அதன் ஐக்கியத்திலும் ஏற்பட்ட சிதைவையும் பலவீனத்தையும் புரிந்து கொள்வது வாசகர்களுக்கு கடினமானதல்ல. ஆயினும், இஸ்லாத்தின் தோற்றத்தோடு உருவாகிய நாகரிக உந்துசக்திக்கும், ஆரம்ப இஸ்

லாமிய உத்வேகத்தின் திரட்சியாலும் நீட்சியாலும் பின்னர் ஏற்பட்ட பௌதீகச் செழிப்புக்கும் இடையிலான வேறுபாட்டை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். சுற்றியிருந்த சமுதாயங்களின் பலவீன மும் வீழ்ச்சியுமே அத்தகைய பௌதீகச் செழிப்புக்கு உண்மையில் வாய்ப்பளித்திருந்தன. முஸ்லிம் உம்மா வீழ்ச்சியடைந்து, அதன் உந்துசக்தி பலவீனப்பட்டிருந்த நிலையிலும் கூட இவ்வாய்ப்பு அதற்குக் கிட்டியிருந்தது. ஏனெனில், அப்போது கூட இஸ்லாமிய உந்துசக்தி ஒப்பீட்டளவில் பாரியதாகவே இருந்தது. இந்தவகையில் தான், திரட்சிகளும் வெளிப்பாடுகளும் தமக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த சக்தி மூலங்களையும் அவற்றைப் பீடித்த சிதைவு களையும் நாம் நுணுக்கமாகக் கவனிக்க வேண்டியுள்ளது. அத்தகைய அம்சங்களைத் தெளிவாக அவதானிப்பது அவ்வளவு இலகுவான தன்று. அவற்றின் திரை விலகவும், திரட்சிகள் கரைந்து சமூக-சிந்தனா விவகாரங்கள் தெளிவாக வெளிப்படவும், பாதிப்புகள் துலாம்பர மாகத் தென்படவும் நீண்டதொரு காலம் தேவை. இன்று உம்மாவில் நாம் காணும் நிலை அதுவே.

## மூன்று: நெருக்கடியின் உண்மை நிலையும் திசைவழியைத் திருத்தும் முறையும்.

### 1) நெருக்கடி சிந்தனா ரீதியானது; அகீதா ரீதியானதல்ல:

வரலாற்று ரீதியில் அல்லது அன்னியப் பின்பற்றலின் அடிப் படையில் பாரம்பரியத் தீர்வுகளை அல்லது பதிலீடுகளைக் கண்ட டைவதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வி யடைந்து விட்டன. இவ்வளவு முயற்சிக்குப் பிறகும் இஸ்லாமிய நோக்கு இன்னும் தெளிவற்றதாகவே இருக்கிறது. அந்நோக்கில் இஸ்லாமிய நம்பிக்கைக்கும் சிந்தனைக்கும் இடையில் பெரும் கலப்பொன்று ஏற்பட்டிருக்கிறது. அகீதா, சிந்தனை ஆகிய இந்த இரண்டுமே முற்றுண்மையான இயல்பும் எல்லையற்ற புனித்துவ மும் கொண்ட ஒரே அம்சமாக இங்கு கொள்ளப் பட்டிருக்கிறது. நமது எதிராளிகளும் நமது வளங்கள் மீது பேராசை கொண்டிருப் போரும் தம்மிடமுள்ள தொலைத்தொடர்பு, கலாசார, கல்விச் சாத னங்களின் வழியாக மேற்கொண்டு வரும் பரப்புரைகளே இதற்கான காரணமாகும். இஸ்லாமிய உலகம் குறித்து கீழைத்தேய-காலனிய ஆய்வு வட்டாரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒழுங்கமைக்கப்

பட்ட யத்தனங்களும் இதற்குப் பக்கபலமாக அமைந்தன. மட்டு மன்றி, முஸ்லிம் சிந்தையில் பழக்கப்படுத்தப்பட்டுள்ள உளவியல் தடைகளும் கூட நவீன இஸ்லாமிய நோக்கு தெளிவற்றுப் போவ தற்கு உதவியிருக்கின்றன. இதனால் அது தனது முதுசங்களதும் புனிதப் பிரதிகளதும் உண்மைத் தன்மையையும் சாராம்சத்தையும் புரிந்து கொள்ளத் தேவையான அளவோடும் ஆழத்தோடும் அவற் றைப் பகுப்பாய்வு செய்யும் துணிவை இழந்து விட்டது. அவற்றில் முற்றுண்மையாகவும் அடிப்படையாகவும் காணப்படும் அம்சங்களை யும், கால-இட வர்த்தமானங்களால் வரையறுக்கப்படும் அம்சங்களை யும் வேறுபிரித்துப் பார்க்க அது துணிவதில்லை. உள்ளடக்கத்துடன் தொடர்புற்றவை எவை, செயன்முறையோடு தொடர்புற்றவை எவை எனக் கண்டறியவும் அது முற்படுவதில்லை.

நமக்குள் நாமே விதைத்துக் கொண்டிருக்கும் அச்சமும் பயமும் அவநம்பிக்கையும் கடந்த கால நிகழ்வுகளையும் பிரச்சினைகளையும் குறைபாடுகளையும் உற்று நோக்கும் ஆற்றலை நம்மிடம் மழுங் கடித்து விட்டன. அதனால் முஸ்லிம் சிந்தை இன்றுவரை சில அடிப்படையான கருத்தாக்கங்களதும் கடந்தகாலத் தவறுகளதும் கைதியாகவே நிற்கிறது. புரிந்து கொள்ளவோ, பகுத்து நோக்கவோ, செல்நெறியைச் சீர்செய்யவோ, பிரச்சினைகளை ஆழ ஊடுருவி அறிந்து கொள்ளவோ அதனிடம் ஆற்றல் இல்லை. இந்த ஆற்றல் இல்லாமல் அது தனது பயணத்தை நேராகவோ திடமாகவோ மேற் கொள்ள முடியாது. பார்வையிழந்து, இறந்த காலத்தின் மூலையில் விலங்கிடப்பட்டு அமர்ந்திருக்க வேண்டிய நிலையே அதற்கு ஏற் படும்.

எனவே, சிந்திப்புக்கான முறைமை சீர்செய்யப்படா விட்டால் முஸ்லிம் சிந்தை தீர்க்கமான நோக்கோ திறனாய்வுப் பார்வையோ அற்றதாகவே தொடர்ந்தும் இருக்கும். கடந்த பல நூற்றாண்டுகளாக பல்வேறு தேசங்களிலும் தலைமுறைகளிலும் முன்வைக்கப்பட்டுத் தோல்வி கண்ட தீர்வுகளிலும் யத்தனங்களிலுமே அது திரும்பத் திரும்ப சுழன்று கொண்டுமிருக்கும். மட்டுமன்றி, அத்தகைய தோல் வியடைந்த தீர்வு முயற்சிகள் உம்மாவை இன்னும் இன்னும் பல வீனப்படுத்தவும் களைப்படையச் செய்யவுமே வழிவகுக்கும்.

உம்மாவின் சிந்தனா மற்றும் அரசியல் தலைமைகள் அனைத்தும் தலைமைப் பாத்திரத்தை தத்தமக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கான போராட்டத்தில் நிராசை அடைந்த பிறகு -வேண்டுமென்றோ

தற்செயலாகவோ- நியாயமற்ற பௌதீக, உளவியல் பயங்கரவாதத் துக்கு உம்மாவையும் அதன் சிந்தையையும் பணிய வைக்க முயன்றன. உம்மாவுக்குத் தலைமை தாங்குவதிலும், எதிர்த் தரப்புக்கு முகங் கொடுப்பதிலும் தனது வகிபாகத்தை ஸ்திரப் படுத்திக் கொள்ள ஒவ்வொரு குழுவும் இதன் மூலம் முயன்றது. அந்தவகையில், அரசியல் தலைமையானது பௌதீக ரீதியாக அச்சுறுத்தும் வழிமுறை களையும், அறிவியல் தலைமையானது உளவியல் ரீதியாக அச்சு றுத்தும் வழிமுறைகளையும் தத்தமக்கு விரித்துக் கொண்டன. இது அப்பாவி முஸ்லிம் சிந்தையின் சுமையை இன்னும் கனக்கச் செய்து விட்டது. மட்டுமன்றி முஸ்லிம் தனி மனிதன் தனது வாழ்விலும், தனிப்பட்ட விவகாரங்களிலும், சமூக அசைவியக்கத்திலும் மேற் குறித்த தலைமைகளுக்கும் அவற்றின் நோக்கங்களுக்கும் அடிமைப் பட்டுப் பணிந்து நிற்கும் நிலையையும் உருவாக்கியது. இவ்விவ காரத்தில் ஒவ்வொரு குழுவும் எத்தகைய உள்நோக்கங்களை கொண் டிருந்தது என்பது பற்றியோ, தனது வகிபாத்திரத்தையும் அதற்கான நியாயங்களையும் எவ்வாறு புரிந்து வைத்திருந்தது என்பது பற்றியோ இங்கு நாம் பேசவில்லை.

அச்சுறுத்தல் ஏற்படுத்திய அழிவுகரமான பாதிப்புகளிலிருந்து குறிப்பிட்ட அரசியல் தலைமைகளோ அறிவியல் தலைமைகளோ கூட தப்ப முடியாத எல்லைக்கு அந்த அச்சுறுத்தல் சென்றிருந்தது என்பதுதான் இங்கு முரண் நகையாகும். ஏனெனில், இத்தலைமை களின் அரசியல்-நாகரிக அடித்தளம் பலவீனமடைந்த போது அவை யும் சேர்ந்துதான் பலவீனமடைந்தன; தமது சுயாதீனத்தையும் இழந் தன; வேறு தெரிவின்றி, பேராசை கொண்ட அன்னிய சக்திகளுக்கு அடங்கியும் போயின.

இத்தகைய மயக்கத்துக்கும் இறுகிய தளைகளுக்கும் முன்னால் முஸ்லிம் சிந்தை பின்வரும் இரு தெரிவுகளில் ஒன்றுக்கே வர முடி யும். ஒன்றில், தனது கடந்த கால வரலாற்றை அதன் சிக்கல்களோடும் பிறழ்வுகளோடும் முழுமையாக ஏற்றுக் கொள்வதுடன், வழிமுறை, சிந்தனை, சமூகம், நிறுவனங்கள் என்பவற்றில் அப்பிறழ்வுகள் பதித்த முத்திரைகளையும் உள்ளது உள்ளவாறு ஏற்றுக் கொள்ளல்; அல்லது, தனது வரலாறும் முதுசங்களும் அடையாளமும் கடந்த நூற்றாண்டு களில் தவறுகளுக்கும் நோய்களுக்கும் பிறழ்வுகளுக்கும் விகாரங் களுக்கும் உட்பட்டு விட்டன என்ற வகையில் அந்த அனைத்தையும் முற்றாக நிராகரித்தல்.

இத்தெளிவற்ற பார்வை காரணமாக, சிந்தனையும் நம்பிக்கையும் ஒன்றோடொன்று கலந்து குழம்பிப் போயின. இலக்குகளும் வழி முறைகளும், மதமும் வரலாறும், கொள்கைகளும் மனிதர்களும், பெறுமானங்களும் நிகழ்வுகளும், கோட்பாடுகளும் சம்பிரதாயங் களும் வேறுபாடற்றுக் கலந்து விட்டன. இதனால், முஸ்லிம் சிந்தை இந்த அனைத்தையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது அனைத்தையும் நிராகரித்தல் என்ற இரு துருவங்களுக்கிடையில் சிதறுண்டது. மதத் தையும் வரலாற்றையும் வேறுபடுத்தி நோக்கவோ, இலக்குக்கும் வழி முறைக்கும் இடையில் வித்தியாசம் காணவோ அதனால் முடியாமற் போனது.

மறுபுறத்தில், பௌதீக வளப் பாதிப்புக்கு உட்பட்ட சமுதாயங் களது நெருக்கடியானது அவற்றின் நம்பிக்கைகள், மதங்கள், பெறு மானங்கள், ஆளுமை சார் அடிப்படைகள், அசைவியக்கத் தூண்டி கள் என்பவற்றின் மானசீக நெருக்கடியால்தான் உருவாகிறது என மற்றொரு சாரார் குரலெழுப்பினர்.

இப்படி முரண்பட்ட சுலோகங்களும் கோஷங்களும் எழுந்து பார்வை தெளிவற்றுப் போனது. இறுதியில், தாம் எங்கே போகிறோம் என்பதையோ, நெருக்கடியிலிருந்து வெளியேறும் மார்க்கம் என்ன என்பதையோ அறியாத நிலைக்கு உம்மாவின் வெகுமக்கள் சென்ற டைந்தனர்.

இந்த அனைத்து உண்மைகளையும் உம்மா கவனத்தில் கொள்வது அவசியம். ஏனெனில், இந்த அனைத்தும் சேர்ந்ததே அதன் இருப்பும் அடையாளமும் ஆகும். இவற்றுள் எந்தப் பகுதியையும் நாம் விட்டு விட முடியாது. ஏனெனில், நமது சன்மார்க்கமும் பெறுமானங்களும் அடிப்படையானவை. நமது வரலாறும் சம்பிரதாயங்களும் மனிதப் பாத்திரங்களும் உண்மையானவை. இவற்றுள் எவையுமே மறுக் கவோ நிராகரிக்கவோ முடியாத யதார்த்தங்கள். இவற்றை நாம் சரியாகவும் இதய சுத்தியோடும் அணுகாமல் நமது அடையாளத்தின தும் உளவியலினதும் அடிப்படைகள் முழுமை பெறப் போவதில்லை.

‘எதை எடுப்பது? எதனை விடுவது?’ என்பதல்ல நமது பிரச்சி னை. ‘நமது அடிப்படை அம்சங்களிலும் வரலாற்றிலும் உள்ள ஒவ் வொரு விவகாரமும் நமது உள்ளத்திலும் அறிவிலும் எத்தகைய இடத்தைப் பிடித்திருக்கிறது?’ என்பதே இங்கு நமது கேள்வி. நமது சன்மார்க்கத்தையும், நம்பிக்கைகளையும், கோட்பாடுகளையும், பெறு

மானங்களையும், கருத்தியல்களையும், வழிமுறைகளையும் நாம் மொத்தமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில் ஐய மில்லை. அதேவேளை, வரலாறு, பாரம்பரியங்கள், நிகழ்வுகள், மனிதர்கள், வெறியுணர்வுகள், மௌட்டீகங்கள், பிறழ்வுகள், கால- இடத் தடைகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட எதுவும் இவற்றுடன் கலந்து விடாமலும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போது தான், மனிதனுக்கான நேர்வழியின் தூது குறித்த ஆழமும் தெளிவும் கொண்ட பார்வையொன்று உம்மாவுக்கும் முஸ்லிம் சிந்தைக்கும் கைகூடும்.

வரலாறு, பாரம்பரியங்கள், மனிதர்கள், நிகழ்வுகள், காலம், இடம், என்பவற்றைப் பொறுத்த வரை, அவை பாடங்களாகவும் படிப் பினைகளாகவும் நிற்கக் கூடியவை; சிறந்த ஆய்வுக்கும் திட்ட மிடலுக்கும் உதவக் கூடியவை; உறுதியோடு முன்செல்ல வழி காட்டக் கூடியவை; நமது அசைவியக்கத்தை மந்தப்படுத்தும் தவறு களையும் பிறழ்வுகளையும் அபாயங்களையும் காட்டித் தரக் கூடி யவை; நமது கழுத்தையும் அவயவங்களையும் அழுத்திக் கொண்டி ருக்கும் தளைகளை அகற்றி விடக் கூடியவை.

பௌதீக வளங்களும் வசதிகளும் நம்மிடம் தாராளமாகவே உள்ளன. அறிவுள்ள எவரும் இந்த உண்மையை மறுக்க மாட்டார். கண்டங்களிலும் கடல்களிலும் சமுத்திரங்களிலும் பரந்து கிடக்கும் முஸ்லிம் நிலங்கள் இதற்குச் சான்று.

ஆக- உம்மா அனுபவித்துக் கொண்டிருக்கும் நெருக்கடிக்கும் இயலாமைக்கும் அதன் கருத்தியல் சார் உளவியல்தான் காரணம். ஆயினும், உளவியலின் எப்பகுதியோடு அது தொடர்புபடுகிறது என்பதைக் கண்டறிவதே இங்குள்ள பிரச்சினை. உம்மாவின் கருத் தியல் சார் உளவியலே அதன் நெருக்கடிக்கும் பின்னடைவுக்கும் காரணம் என்று கூறுவோர் அதன் மூலமாக நாடுவது எதனை? மௌட்டீகங்களையா? வெறித்தனங்களையா? இற்றுப் போன சம்பிரதாயங்களையா? மூட நம்பிக்கைகளையா? மாய மந்திரங் களையா? வெளியிலிருந்து வந்த சிந்தனைச் சிக்கலையா? அன்னிய ஆத்மீக-உள்ளர்த்த விசாரங்களையா..?

ஏராளமானோர் இதனை அறியாமை அல்லது எதிரிகளின் சூழ்ச்சி என்ற கோணத்திலிருந்தே அணுகுகின்றனர். அவர்களிலும் பலர் இஸ்லாத்தையும் அதன் நம்பிக்கைகளையும் பற்றிய அறியாமை என்ற அர்த்தத்திலேயே இதனை அணுகுகின்றனர்.

உம்மாவின் நம்பிக்கைகள் மற்றும் அறிவு முதுசங்கள் பற்றிய அறியாமைப் பொறிக்குள் -நல்லெண்ணத்துடன்- வீழ்ந்து விட்டவர் களுக்கு நாம் கூறுவது இதுதான்:

ஜாஹிலிய்ய மௌட்டீகங்களுக்கும் மாய மந்திரங்களுக்கும், இஸ்லாம் மார்க்கத்துக்கும் அதன் பெறுமானங்களுக்கும் நம்பிக்கை களுக்கும் இடையிலான வேறுபாடு மிகப் பெரியது.

நமது சன்மார்க்கத்திலும் நம்பிக்கைகளிலும் நமது எதிரிகள் என்ன குறையைத்தான் கண்டிருக்கிறார்கள்?

இஸ்லாமும் அதன் நம்பிக்கைகளும் பெறுமானங்களும் இன்றி இஸ்லாமிய சமூகங்களில் என்ன நன்மைதான் எஞ்சி விடப் போகிறது?

உம்மாவின் தனிமனிதர்களிடம் இன்று எஞ்சியிருக்கும் நல்லம் சங்கள் கூட இஸ்லாத்திலிருந்தும் அதன் நம்பிக்கைகளிலிருந்தும் பெறுமானங்களிலிருந்தும் வந்தவையே அன்றி வேறென்ன?

இஸ்லாம் பற்றிக் குறை கூறுபவர்கள் அதன் எந்த நம்பிக்கையைக் குறை சொல்கின்றனர்?

சத்தியமும் நீதியும் நிறைந்த அல்லாஹ்வை விசுவாசிக்கும் ஏகத் துவக் கொள்கையை அவர்கள் குறை காண்கிறார்களா?

இஸ்லாம் நன்மையையும் சீர்திருத்தத்தையும் நீதியையும் வளப் படுத்தலையும் போதிக்கிறது என்பதற்காக அதனைக் குறை கூறுகின் றார்களா?

நன்மை புரிந்தவருக்கும் தீமை புரிந்தவருக்கும் மறுமையில் நீத மான கூலி வழங்கப்படுமென்று சொல்வதற்காகக் குறை கூறுகிறார் களா?

கலந்தாலோசனை, சகோதரத்துவம், கூட்டுறவு, கண்ணியம், தூய்மை, நேர்மை, அறிவு, நேர்வழி என்பவற்றை வலியுறுத்துகிறது என்பதற்காகக் குற்றம் சாட்டுகிறார்களா?

தீமையையும் சீர்கேட்டையும் வரம்பு மீறலையும் எதிர்ப்பதால் அதனைக் குற்றவாளி ஆக்குகிறார்களா?

உண்மை, நாணயம், நீதி, செயல் நேர்த்தி, இரக்கம் காட்டுதல், இன பந்துகளைப் பேணல் என்பவற்றைப் போதிப்பதால் அதன் மீது குற்றம் சுமத்துகிறார்களா?

இஸ்லாத்தின் அடிப்படைகளும் பெறுமானங்களும் உட்கருவும் இவைதான். இவை தவிர்ந்த எல்லாமே அறியாமையும் குழப்பமும் மூடநம்பிக்கைகளும் மாய மந்திரங்களும்தான். யார் எப்படி நியா யப்படுத்தினாலும், திரிபு படுத்தினாலும் இந்த உண்மையை எவரா லும் மாற்ற முடியாது.

அல்-குர்ஆனின் தீர்க்கமான சில வசனங்களையும், இறைத்தூதர் (ஸல்) அவர்களது பொருள் பொதிந்த சில வாசகங்களையும் மேலோட்டமாக கவனித்துப் பார்த்தாலே அவை இஸ்லாத்தின் பெறுமானங்களையும் அதியுயர் இலக்குகளையும் எடுத்துரைப்பதைக் கண்டறிந்து விட முடியும். புரிதலில் ஏற்படக் கூடிய அனைத்துப் பிறழ்வுகளையும் முறியடித்து, சரியான வழிமுறையை அவை திட்ட வட்டமாக முன்வைப்பதையும் புரிந்து கொண்டு விட முடியும்:

## அ) அல்-குர்ஆனில் கூறப்பட்டுள்ள பிரதான பெறுமானங்கள்:

- **ஏக இறைக் கொள்கை:**

''நிச்சயமாக அல்லாஹ்வே வணக்கத்துக்குரிய ஏகன்; அவன் தூய்மையானவன்''. *(4:170)*

''வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர எவரும் இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்!'' *(47:19)*

''அல்லாஹ் யாதொரு சந்ததியை எடுத்துக் கொள்ளவுமில்லை; அவனோடு வேறெந்தக் கடவுளும் இல்லை''. *(23:91)*

''அந்த அல்லாஹ்வே உங்களது உண்மையான ரட்சகன்''. *(10:32)*

''அவனைப் போன்று எதுவுமில்லை; அவன் நன்கு செவி யுறுபவன்; யாவற்றையும் பார்ப்பவன்''. *(42:11)*

''சத்தியம் அவர்களது மனோ இச்சைகளைப் பின்பற்றி இருந்தால், வானங்களும் பூமியும் அவற்றில் உள்ளவையும் சீர்கெட்டுப் போயிருக்கும்''. *(23:71)*

''நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது அன்பு கூர்பவன்; கருணை மிக்கவன்''. *(22:65)*

''உங்களது இறைவன் ஏக இறைவனே. அவனைத் தவிர வேறு

கடவுள் இல்லை. அவன் கருணை சொரிபவன்; அன்பு மிக்கவன்''. *(2:163)*

''அந்த அல்லாஹ்தான் உங்கள் ரட்சகன்; அனைத்தையும் படைப்பவன். அவனையன்றி வேறு கடவுள் இல்லை''. *(40:62)*

''அல்லாஹ்வாகிய அவனைத் தவிர வேறு கடவுள் இல்லை. அவன் மறைவானதையும் வெளிப்படையானதையும் அறிந்தவன்''. *(59:22)*

''நிச்சயமாக உங்களது இறைவன் அல்லாஹ்தான். அவனைத் தவிர வேறு கடவுள் இல்லை. அவன் அனைத்தையும் பற்றிய விசாலமான அறிவுடையவன்''. *(20:98)*

''அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் உண்டா? வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் அவனே உங்களுக்கு ஆகாரம் அளிக்கின்றான். அவனையன்றி வேறு கடவுள் இல்லை''. *(35:3)*

''அல்லாஹ் (தனக்கு) எந்தச் சந்ததியையும் எடுத்துக் கொள்ளவில்லை, அவனோடு வேறொரு கடவுளும் இல்லை. அவ்வாறு இருந்திருந்தால், ஒவ்வொரு கடவுளும் தான் படைத்ததைத் தன்னுடன் எடுத்துச் சென்றிருப்பார். அவர்களில் சிலர் மற்றும் சிலர் மீது மேலாண்மை செலுத்தவும் முற்பட்டிருப்பர். இவர்கள் வர்ணிப்பவற்றை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன்''. *(23:91)*

''(வானம், பூமி ஆகிய) இரண்டிலும் அல்லாஹ் தவிர்ந்த பல கடவுளர்கள் இருந்திருந்தால், அவ்விரண்டும் குழம்பிச் சீர் கெட்டிருக்கும். அர்ஷின் ரட்சகனான அல்லாஹ் இவர்களது வர்ணனைகளை விட்டும் தூயவன்''. *(21:22)*

''வானங்களையும் பூமியையும் அவற்றுக்கிடையில் இருப்பவற்றையும் சத்தியத்தைக் கொண்டே நாம் படைத்தோம்''. *(15:85)*

''நிச்சயமாக அல்லாஹ்வே உண்மையான இறைவன். அவனே மரணித்தவர்களுக்கு உயிரூட்டி எழுப்புகிறான். அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவன்''. *(22:6)*

''அல்லாஹ் ஆகிய அவனே உங்களது உண்மையான ரட்சகன்''. *(10:32)*

*''நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை புரியுமாறும், நெருங்கிய உறவினருக்கு பொருள் கொடுத்து உதவுமாறும் கட்டளை இடுகின்றான். மேலும், மானக்கேடான செயல்களையும் பாவத்தையும் வரம்புமீறலையும் அவன் தடுக்கிறான்''. (16:90)*

*''(ஷுஐப்) கூறினார்: என் சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வேறு கடவுள் இல்லை. உங்கள் ரட்சகனிடமிருந்து உங்களுக்குத் தெளிவான அத்தாட்சியொன்று வந்திருக்கிறது. எனவே, அளவை நிறுவைகளைப் பூரணமாக நிறைவேற்றுங்கள்'' (7:84)*

- ***மனித ஐக்கியம், மனித இருப்பின் நோக்கம், மானிடப் பொறுப்பு:***

*''மனிதர்களே, உங்கள் ரட்சகனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்! ஒரே ஆத்மாவிலிருந்து உங்களை அவன் படைத்தான். அதிலிருந்தே அதன் சோடியையும் படைத்தான். அவ்விருவரிலும் இருந்து ஏராளமான ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் பரஸ்பரம் (தேவைகளை) கேட்டுப் பெறுகிறீர்கள். மேலும், இனபந்துக்கள் விடயத்திலும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களை கவனித்துக் கொண்டுதான் இருக்கிறான்''. (4:1)*

*''மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். நீங்கள் பரஸ்பரம் அறிமுகமாகும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அதிக கண்ணியமானவர் உங்களில் அதிக உள்ளச்சம் கொண்டவரே''. (49:13)*

*'உமது ரட்சகன் வானவர்களை நோக்கி, 'பூமியில் நான் ஒரு பிரதிநிதியை ஆக்கப் போகிறேன்' எனக் கூறினான். அப்போது அவர்கள், 'அதில் குழப்பம் செய்து, இரத்தம் சிந்தச் செய்யக் கூடியோரையா நீ ஏற்படுத்தப் போகிறாய்? நாங்களோ உனது புகழை சதாவும் துதித்து, உனக்கு தூய்மையாக வழிபடுகிறோம்!' எனக் கூறினர். அதற்கவன், 'நீங்கள் அறியாதவற்றை நிச்சய*

*மாக நான் அறிவேன்' எனக் கூறி, ஆதமுக்கு அனைத்துப் (படைப்புகளின்) பெயர்களையும் கற்றுக் கொடுத்தான்'. (2:30-31)*

*'(நபியே!) உமது ரட்சகன் வானவர்களிடம், 'நிச்சயமாக நான் மனிதனை (காய்ந்தால்) ஒலியெழுப்பக் கூடிய பிசுபிசுப்பான களிமண்ணிலிருந்து படைக்கப் போகிறேன். அவ்வாறு நான் அவனைப் படைத்து, சீர்படுத்தி, என்னிடமிருக்கும் ஆன்மா விலிருந்து அவனுக்கு ஊதியதும், நீங்கள் பணிந்து மரியாதை செய்யுங்கள்!' என்று கூறினான். எனவே வானவர்கள் அனை வரும் அவருக்கு சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்தினர். ஆயினும் இப்லீஸ் சிரம் பணிய மறுத்து விட்டான்.' (15:28-31)*

*'(நபியே) கேட்பீராக: அறிவுடையோரும் அறிவில்லாதோரும் சமமாவார்களா?' (39:9)*

*'நிச்சயமாக நாம் ஆதமின் சந்ததிகளை கண்ணியப்படுத்தி உள்ளோம். தரையிலும் கடலிலும் நாமே அவர்களைச் சுமந்து செல்லச் செய்தோம்.' (17:70)*

*'நாம் செவி சாய்த்திருந்தால் அல்லது சிந்தித்திருந்தால் நரகவாசி கள் ஆகியிருக்க மாட்டோம்' என அவர்கள் கூறுவர்.' (67:10)*

*'அவன் உங்களுக்கு உருவமைத்து உங்கள் தோற்றங்களையும் அழகாக்கினான். தூயவற்றிலிருந்து உங்களுக்கு ஆகாரமும் அளித்தான்'. (40:64)*

*'அவர்களில் யார் அழகிய செயல் புரிகிறார் என அவர்களைச் சோதிப்பதற்காக பூமியின் மீது இருப்பவற்றை அதற்கு நாம் அலங்காரமாக ஆக்கினோம்'. (18:7)*

*'உங்களில் எவர் செயல்களால் அழகானவர் என்று சோதிப்ப தற்காக அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்'. (67:2)*

*'சன்மார்க்கத்தை ஏற்பதில் எந்த நிர்ப்பந்தமும் இல்லை'. (2:256)*

*'அல்லாஹ்வின் பாதையிலும், பலவீனர்களான ஆண்களுக்கா வும் பெண்களுக்காவும் சிறுவர்களுக்காகவும் போராடாமல் இருக்க உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது?!' (4:75)*

*''சன்மார்க்க விடயத்தில் உங்களோடு போராடாமலும், உங்கள் வாழ்விடங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருப் போருடன் நல்ல முறையில் நடந்து கொள்வதையோ அவர் களுக்கு நீதி செலுத்துவதையோ அல்லாஹ் உங்களுக்குத் தடை செய்யவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களையே நேசிக்கிறான். சன்மார்க்க விடயத்தில் உங்களுடன் போரிட்டு, உங்கள் வாழ்விடங்களில் இருந்து உங்களை வெளியேற்றி, உங்களை வெளியேற்றுவதற்கு உதவியும் செய்தவர்களுடன் நட்புப் பாராட்டுவதையே அவன் தடை செய்கிறான். யார் இவர்களுடன் நெருங்கிய நட்புக் கொள்கின்றார்களோ அவர் களே அநியாயக்காரர்கள்''. (60: 8-9)*

- ***நீதியும் சீர்திருத்தமும்:***

*'உலகில் உனது பங்கை மறந்து விடாதே. அல்லாஹ் உனக்கு உபகாரம் செய்தது போன்று (நீயும் பிறருக்கு) உபகாரம் செய். பூமியில் விஷமம் செய்ய விரும்பாதே. நிச்சயமாக அல்லாஹ், விஷமக்காரர்களை விரும்புவதில்லை'. (28:77)*

*'பின்னர் ஒவ்வோர் ஆத்மாவும் செய்த செயல்களுக்கான கூலி நிறைவாக வழங்கப்படும். அவர்களுக்கு எந்த அநீதியும் இழைக்கப்படாது'. (2:281)*

*'அந்நாளில் ஒவ்வோர் ஆத்மாவும் சம்பாதித்ததற்கான கூலி வழங்கப்படும். அன்று எந்த அநீதியும் இடம்பெறாது. நிச்சய மாக அல்லாஹ் விரைவாக விசாரணை செய்யக் கூடியவன்'. (40:17)*

*'நிச்சயமாக அல்லாஹ் மனிதர்களுக்கு எந்த அநீதியும் இழைப்ப தில்லை. மனிதர்களே தங்களுக்குத் தாங்கள் அநீதி இழைத்துக் கொள்கின்றனர்.' (10:44)*

*'நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், உபகாரம் புரியு மாறும், நெருங்கிய உறவினருக்குக் கொடுத்துதவுமாறும் கட்டளை இடுகின்றான். மேலும், மானக்கேடானதையும், பாவத்தையும், வரம்பு மீறலையும் அவன் தடுக்கின்றான். நீங் கள் நல்லுணர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக உங்களுக்கு (இவ்வாறு) அவன் உபதேசிக்கிறான்'. (16:90)*

*‘நீங்கள் அல்லாஹ்வுக்காக நீதியின் மீது நிலைத்து நின்று (உண்மையாக) சாட்சி பகருங்கள். அது உங்களுக்கோ (உங்கள்) பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ எதிராக இருந்த போதிலும் சரி!’ (4:135)*

*‘நீங்கள் மனிதர்களுக்கு மத்தியில் தீர்ப்புக் கூறினால் நீதமாக தீர்ப்புக் கூறுங்கள்’. (4:85)*

*‘ஒரு சமூகத்தின் மீது (உங்களுக்குள்ள) வெறுப்பு அவர்களுடன் நீதமாக நடக்க உங்களைத் தடுக்க வேண்டாம். நீதி செலுத் துங்கள்; அதுவே உள்ளச்சத்துக்கு மிக நெருக்கமானது’. (5:8)*

*‘உங்களுடன் போரிடுபவர்களுடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள். வரம்பு மீறாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் வரம்புமீறி அடர்ந்தேறுவோரை விரும்புவதில்லை’. (2:90)*

*‘நன்மையை நோக்கி அழைத்து, நல்லதை ஏவி, தீமையைத் தடுக்கின்ற ஒரு சமூகம் உங்களில் இருக்கட்டும். அவர்களே வெற்றியாளர்கள்’. (3 :104)*

*‘நன்மைக்கும் இறையச்சத்துக்கும் பரஸ்பரம் உதவிக் கொள் ளுங்கள். பாவத்திற்கும் அடர்ந்தேறலுக்கும் உதவாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கடுமையாக தண்டிக்கக் கூடியவன்’. (5:2)*

*‘ஒரு தீமைக்கான கூலி அதைப் போன்ற தீமையே. எனினும் எவர் மன்னித்து சமாதானம் செய்து கொள்கிறாரோ அவருக்கான நற்கூலி அல்லாஹ்விடம் உண்டு. நிச்சயமாக அல்லாஹ் அநி யாயக்காரர்களை நேசிப்பதில்லை’. (42:40)*

- **விஷமம், அநீதி, விரயம் என்பவற்றைத் தவிர்த்தல்:**

*‘(நயவஞ்சகர்களே!) நீங்கள் (போருக்கு வராது) விலகிக் கொண்டு, அதன் பின்னர் பூமியில் விஷமம் புரிந்து இரத்த பந்தத்தைத் துண்டித்து விடப் பார்க்கிறீர்களா?’ (47:22)*

*‘பூமியைச் சீர்திருத்திய பிறகு அதில் குழப்பத்தை ஏற்படுத்தா தீர்கள். அதுவே உங்களுக்கு நல்லது’. (7:85)*

*‘அல்லாஹ்வின் அருட்கொடைகளை நினைத்துப் பாருங்கள். பூமியில் விஷமம் செய்து திரியாதீர்கள்’’. (7:74)*

*‘வானத்தையும் பூமியையும் அவ்விரண்டிற்குமிடையில் இருப்பவற்றையும் நாம் வீணாகப் படைக்கவில்லை. அது (வீணென்பது) நிராகரிப்பாளர்களின் எண்ணமாகும். நிராகரித்து விட்ட அவர்களுக்கு நரகின் கேடு காத்திருக்கிறது. நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தவர்களை பூமியில் விஷமம் புரிந்தவர்கள் போன்று நாம் ஆக்கி விடுவோமா?! அல்லது இறையச்சமுள்ளோரை பாவிகள் போன்று ஆக்கி விடு வோமா?!’ (38:27-28)*

*‘(ஷுஐப்) கூறினார்: என் சமூகமே! அல்லாஹ்வையே வணங் குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வேறு கடவுள் இல்லை. அளவை நிறுவையில் நீங்கள் குறைவு செய்து விடாதீர்கள். நீங்கள் நன்னிலையில் இருப்பதை நான் காண்கிறேன். சூழ்ந்து கொள்ளக் கூடிய ஒரு நாளின் வேதனை உங்களை அடைந்து விடுமோ என நான் பயப்படுகிறேன். என் சமூகமே! நீங்கள் அளவை நிறுவைகளை நீதமாக நிறைவேற்றுங்கள். மக்களுக்குக் கொடுக்க வேண்டிய பொருட்களைக் குறைத்து விடாதீர்கள். நீங்கள் (உண்மையான) இறை நம்பிக்கையாளர்களாக இருந் தால், அல்லாஹ் (இலாபமாக) மீதப்படுத்தித் தருவதே உங்க ளுக்குச் சிறந்ததாகும். நான் உங்களை கண்காணித்துப் பாது காப்பவனல்ல’. (11:84-86)*

*‘அல்லாஹ்வுக்கு உறுதியாக வாக்குறுதி வழங்கிய பிறகு அதனை முறித்து விடுபவர்களுக்கும், இணைந்து நடக்கும்படி அல்லாஹ் ஏவியதைத் துண்டித்துக் கொள்பவர்களுக்கும், பூமியில் விஷமம் புரிபவர்களுக்கும் அல்லாஹ்வின் சாபம் ஏற்படும். அவர்களுக்கு மிகக் கெட்ட தங்குமிடமும் உண்டு’. (13:25)*

*‘நபியே, நீங்களும் இணைவைப்பதிலிருந்து விலகி உங்க ளுடன் இருப்பவர்களும் உங்களுக்கு ஏவப்பட்டவாறு நேர் வழியில் நிலைத்திருங்கள்; வரம்பு மீறாதீர்கள்’. (11:112)*

*‘வரம்பு மீறியவர்களுக்கு நிச்சயமாக மிக மோசமான தங்கு மிடம் உள்ளது.’ (38:55)*

*‘வரம்பு மீறுவோரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டாம்’. (26:151)*

*'ஃபிர்அவ்ன் அப்பூமியில் பெருமையடித்து வரம்பு மீறுபவனாக இருந்தான்'. (10:83)*

*'நிச்சயமாக நாம் அல்லாஹ்விடமே திரும்புவோம். மேலும், வரம்பு மீறுவோர் நரகவாசிகளே!'. (40:43)*

*'ஆகவே, அநியாயக்காரர்களுக்கு நோவினை தரும் நாளின் கேடுதான்!' (43:65)*

*'குற்றமெல்லாம் மனிதர்களுக்கு அநியாயம் செய்பவர்கள் மீதுதான்'. (42:42)*

*'பின்னர், அல்லாஹ்வை அஞ்சிக் கொண்டோரை மீட்டெடுத்து, அநியாயக்காரர்களை முழந்தாளிடச் செய்து நரகில் தள்ளி விடுவோம்'. (19:72)*

*'நீங்கள் சம்பாதித்துக் கொண்டிருந்ததைச் சுவையுங்கள் என அங்கு அநியாயக்காரர்களுக்கு கூறப்படும்'. (39:24)*

*'நித்திய ஜீவனும் அனைத்தையும் நிர்வகிப்பவனுமாகிய அவனுக்கு முன்னால் அனைவரும் பணிந்து நிற்பர். யார் அநியாயத்தைச் சுமந்து கொண்டாரோ அவர் நஷ்டம் அடைந்தே தீருவார்'. (20:111)*

- **உண்மை, நேர்மை, நல்லுபகாரம்:**

*'நிச்சயமாக, முஸ்லிம் ஆண்களும் பெண்களும், இறை விசு வாசம் கொண்ட ஆண்களும் பெண்களும், இறைவனுக்கு வழிபட்டுப் பணியும் ஆண்களும் பெண்களும், உண்மை கூறும் ஆண்களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும் பெண்களும், இறையச்சம் கொண்ட ஆண்களும் பெண்களும், தர்மம் வழங்கும் ஆண்களும் பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும், கற்புள்ள ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வை அதிகம் நினைவுகூரும் ஆண்களும் பெண்களும் ஆகிய அவர்களுக்கு அல்லாஹ் மன் னிப்பையும் மகத்தான கூலியையும் தயார் படுத்தி வைத்திருக்கிறான்'. (33 : 35)*

*'உண்மையாளர்களுக்கு அவர்களது உண்மை பயனளிக்கும் நாள் இதுதான் என அல்லாஹ் கூறுவான்'. (5 :119)*

*'உண்மையாக நடந்து கொண்டவர்களுக்கு அவர்களது வாய் மைக்கான கூலியை அல்லாஹ் நிச்சயம் வழங்குவான்'. (33:24)*

‘அவர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் (அல்லாஹ்வுக்காகச்) செலவு செய்வார்கள்; கோபத்தை மென்று விழுங்குவார்கள்; மனிதத் தவறுகளை மன்னிப்பார்கள்’. *(3:134)*

‘அல்லாஹ் உங்களுக்குப் பொறுப்பாக்கிய செல்வத்திலிருந்து (அவனுக்காகச்) செலவிடுங்கள்’. *(57:7)*

‘தங்கத்தையும் வெள்ளியையும் அல்லாஹ்வின் பாதையில் செலவிடாமல் சேமித்து வைப்பவர்களுக்கு நோவினை தரும் தண்டனை இருப்பதாக (நபியே) நன்மாராயம் கூறுங்கள்’. *(9:34)*

‘தர்மம் கேட்டு வருபவருக்கும், (சங்கோஜத்தால்) கேட்காது இருப்பவருக்கும் அவர்களது செல்வங்களில் ஒரு பங்கு உண்டு’. *(51:19)*

‘அவர்கள் தங்கள் ரட்சகனின் கட்டளையை ஏற்பார்கள்; தொழுகையை நிலை நாட்டுவார்கள். அவர்களது அனைத்து விவகாரங்களும் அவர்களுக்கு மத்தியிலான கலந்தாலோசனையின் அடிப்படையில் அமைந்திருக்கும். நாம் வழங்கிய செல்வத்திலிருந்து அவர்கள் நற்செலவும் செய்வார்கள்’. *(42:38)*

‘தர்மம் செய்யும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அல்லாஹ்வுக்கு அழகிய கடன் கொடுத்தவர்களுக்கும் அது இரு மடங்காக வழங்கப்படும். அவர்களுக்கு கண்ணியமான கூலியும் உண்டு’. *(57:18)*

‘விசுவாசம் கொண்டவர்களே! சொல்லிக் காட்டுவதன் மூலமாகவும், தீங்கு செய்வதன் மூலமாகவும் உங்களது தான தர்மங்களைப் பாழாக்கி விடாதீர்கள்’. *(2:264)*

‘நன்மை செய்வதற்கு, அல்லது அல்லாஹ்வை அஞ்சிக் கொள்வதற்கு, அல்லது மக்களுக்கு மத்தியில் சமாதானம் செய்து வைப்பதற்குத் தடையாகும் வகையில் நீங்கள் செய்யும் சத்தியங்களுக்குள் அல்லாஹ்வை உட்படுத்தாதீர்கள்.’ *(2:224)*

‘சன்மார்க்கத்தைப் பொய்யாக்குபவரை நபியே நீர் கவனித்தீரா? அத்தகையவர் அனாதைகளுக்கு அநீதம் இழைப்பார்; ஏழைகளுக்கு உணவளிக்க (பிறரைத்) தூண்ட மாட்டார்’. *(107:1-3)*

*'அல்லாஹ் வட்டியை அழித்து தர்மங்களை வளரச் செய்கிறான்'. (2:276)*

*'அவர்கள் சத்தியத்தை பரஸ்பரம் உபதேசித்து,* பொறுமையை*யும் பரஸ்பரம் உபதேசிப்பர்'. (103:3)*

*'அவர்கள்* பொறுமையை *பரஸ்பரம் உபதேசம்* செய்வார்கள். *இரக்கத்தையும் பரஸ்பரம் உபதேசம்* செய்வார்கள்*'. (90:17)*

*'நம்பிக்கையாக ஒப்படைக்கப்பட்டவற்றை அவற்றுக்கு உரியவர்களிடம் சேர்ப்பித்து விடுமாறு அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகிறான்'. (4 :58)*

*'அவர்கள் தங்களிடம் நம்பிக்கையாக ஒப்படைக்கப்பட்டவற்றையும், தங்கள் ஒப்பந்தங்களையும் பேணிக்* கொள்வார்கள்*.' (70:32)*

*'(நபியே! அவர்களிடம் இப்படிக்) கூறுங்கள்: வாருங்கள்; உங்கள் ரட்சகன் உங்களுக்குத் தடுத்திருப்பதை உங்களுக்கு எடுத்தோதுகிறேன்: அவனுக்கு நீங்கள் எதனையும் இணையாக்காதீர்கள்.* பெற்றோருக்கு *உபகாரமாக நடந்து* கொள்ளுங்*கள். வறுமைக்குப் பயந்து உங்கள் பிள்ளைகளைக்* கொல்லா*தீர்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கி*றோம். வெளிப்படை*யானதாயினும் அந்தரங்கமானதாயினும் (எத்தகைய) மானக்கேடான* செயல்களையும் நெருங்காதீர்கள். கொல்ல *வேண்டாமென அல்லாஹ் தடுத்த உயிர்களை நியாயமான காரணம் இன்றிக்* கொல்லாதீர்கள். *நீங்கள் சிந்தித்து உணரலாம் என்பதற்காக அல்லாஹ் இவ்வாறு உங்களுக்கு உபதேசிக்கிறான். அனாதைகள் வளர்ந்து* பெரியவர்களாகும் *வரை அவர்களது* செல்வங்களை *மிகச் சிறந்த முறையில் கையாளுங்கள். அளவை நிறுவைகளை நீதமாக நிறைவேற்றுங்கள். எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்கு அப்பால் நாம் நிர்ப்பந்திப்பதில்லை. நீங்கள் பேசினால்,* நெருங்கிய *உறவினராக இருப்பினும், நீதியையே பேசுங்கள். அல்லாஹ்வுடனான உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நீங்கள் நல்லுணர்ச்சி* பெறும் பொருட்டு *அல்லாஹ் இவ்வாறு உங்களுக்கு உபதேசிக்கிறான்'. (6:152-3)*

*''விசுவாசிகளில் இரு குழுவினர் மோதிக்* கொண்டால், *அவர்களுக்கிடையில் சமாதானம்* செய்து வையுங்கள். *ஒரு சாரார்*

*மற்றொரு சாரார் மீது அடார்ந்தேறினால் அக்குழு அல்லாஹ் வின் கட்டளைக்குப் பணிந்து வரும் வரை அவர்களுக்கெதி ராகப் போராடுங்கள். அவர்கள் பணிந்து வந்து விட்டால், இரு சாராருக்குமிடையில் சமரசம் செய்து வையுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களையே விரும்புகிறான். நிச்சயமாக இறை விசுவாசிகள் சகோதரர்களாவர். எனவே உங்களது சகோதரர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; உங்களுக்குக் கிருபை உண்டாகும். விசுவாசிகளே! ஒரு குழுவினர் மற்றொரு குழு வினரைப் பரிகசிக்க வேண்டாம். ஏனெனில், (பரிகசிக்கும்) இவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக்கூடும். பெண்களும் வேறு சில பெண்களை(ப் பரிகசிக்க வேண்டாம்.) ஏனெனில், இப்பெண்களை விட அப்பெண்கள் சிறந்தவர் களாக இருக்கக் கூடும். நீங்கள் ஒருவரையொருவர் குறை கூற வேண்டாம். ஒருவருக்கொருவர் பட்டப்பெயர் கூறி அழைக்க வும் வேண்டாம். விசுவாசம் கொண்டதன் பிறகு அவ்வாறு மோசமான பெயர் கூறி அழைப்பது மிகக் கெட்ட செயலாகும். எவர் இத்தகைய பாவங்களிலிருந்து மீளவில்லையோ அவர் களே அநியாயக்காரர்கள். விசுவாசிகளே! அனேகமான ஐயங் களைத் தவிர்ந்து கொள்ளுங்கள். நிச்சயமாக சில ஐயங்கள் பாவமானவையாகும். பிறரை உளவு பார்க்காதீர்கள். சிலர் சிலரைப் பற்றி புறம் பேசாதீர்கள். உங்களில் ஒருவர் மற்றொரு சகோதரரின் இறந்த மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? நீங்கள் அதனை நிச்சயமாக வெறுப்பீர்கள். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மன்னிக்கக் கூடியவன்; கிருபை மிக்கவன்'. (49:9-12)*

*'ஞானத்தைக் கொண்டும் அழகிய உபதேசத்தைக் கொண்டும் உமது ரட்சகனின் பாதையை நோக்கி அழைப்பீராக. மிக அழ கிய வழிமுறையிலேயே அவர்களுடன் தர்க்கம் புரிவீராக'. (16:125)*

- ***கல்வி, அறிவு, வளப்படுத்தல்:***

*'படைத்த உமது ரட்சகனின் பெயரால் வாசிப்பீராக! மனிதனை அவன் இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். வாசிப்பீராக! உமது ரட்சகன் சங்கை மிக்கவன். பேனாவைக் கொண்டு அவன் கற்றுக் கொடுத்தான்''. (96:1-4)*

*‘பூமியின் பாகங்களில் திரிந்து அவன் அளித்திருக்கும் ஆகாரத் தைப் புசியுங்கள்’’. (67:15)*

*‘நிச்சயமாக அல்லாஹ் பாவமீட்சி பெறுவோரை நேசிக்கி றான்; பரிசுத்தம் அடைவோரையும் நேசிக்கிறான்’. (2:222)*

*‘(நபியே) கூறுவீராக: பூமியில் பரந்து சென்று, படைப்பு எவ்வாறு ஆரம்பித்தது என்று கவனித்துப் பாருங்கள்’. (29:20)*

*‘வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்தையும் உங்களுக்கு அவன் வசப்படுத்தினான்’. (45:13)*

*‘நீங்கள் அமைதி பெறும் பொருட்டும், அவனது அருளை தேடிப் பெறும் பொருட்டும் இரவையும் பகலையும் ஆக்கி யிருப்பது அவனது கிருபையே ஆகும்.’ (28:73)*

- ***நல்லெண்ணமும் நன்மை நாட்டமும்:***

*‘நன்மைக்கும் இறையச்சத்துக்கும் பரஸ்பரம் உதவுங்கள்; பாவத்திற்கும் வரம்புமீறலுக்கும் உதவாதீர்கள்’. (5:2)*

*‘(நபியே) கூறுவீராக: நீங்கள் செயற்படுங்கள்; அல்லாஹ்வும் அவனது தூதரும் இறைவிசுவாசிகளும் உங்கள் செயலைப் பார்ப்பார்கள்’. (9:105)*

*‘எனவே அல்லாஹ் அவர்களது பிரார்த்தனையை அங்கீகரித் தான். உங்களில் ஆணாயினும் பெண்ணாயினும் எவருடைய செயலையும் நான் வீணாக்கி விட மாட்டேன் (என அவன் கூறினான்)’. (3:195)*

*‘நற்செயல் புரிவோரது கூலியை நிச்சயமாக நாம் வீணாக்க மாட்டோம்’. (7:170)*

*‘எவர் ஒரு தீமையைப் புரிந்து அல்லது தனக்குத்தானே அநியாயம் இழைத்து, பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப் புக் கோருகிறாரோ, அவர் அல்லாஹ்வை மன்னிப்பு மிக்க வனாகவும் கிருபை நிறைந்தவனாகவும் காண்பார்.’ (4:110)*

*‘உங்கள் ரட்சகனிடம் பாவ மன்னிப்புக் கோரி அவனிடமே மீளுங்கள். நிச்சயமாக எனது ரட்சகன் கிருபை நிறைந்தவன்; அன்பு மிக்கவன்’. (11:90)*

## ஆ) அல்-குர்ஆனின் பிரயோக வடிவமாகவும் பக்கபலமாகவும் அமைந்த ஸுன்னா:

மேற்குறித்த அனைத்து வசனங்களும் அல்குர்ஆனின் பிரதான கருத்தாக்கங்களையும், முழுமையான உயர் இலக்குகளையும் விளக்கி நிற்பவையாகும். அவற்றின் தாக்கத்தையும் பிரயோகங்களையுமே இறைத்தூதர் (ஸல்) அவர்களது வார்த்தைகளிலும், செயல்களிலும், ஆரம்ப முஸ்லிம் சமூகத்தை அன்னார் நிர்வகித்த முறையிலும் காண்கிறோம். அவற்றில் சில சான்றுகளை இங்கு முன்வைக்கவும் நாம் விரும்புறோம். மனித இனம் ஆசித்து நிற்கும் அனைத்தையும் மனித இன வரலாற்றில் தோன்றிய அனைத்து நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் மதங்களையும் தத்துவங்களையும் விட பரிபூரண வடிவத்தில் அல்-குர்ஆனும் அஸ்-ஸுன்னாவும் எவ்வாறு முன்வைத் திருக்கின்றன என்பதை அவற்றிலிருந்து வாசகர்கள் தெளிவாகக் கண்டு கொள்ள முடியும்.

### • எண்ணம், மனச்சாட்சி, மானிடப் பொறுப்பு:

இறைத்தூதர் (ஸல்) கூறுகின்றார்கள்:

*'நிச்சயமாக செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்த வையே. நிச்சயமாக ஒவ்வொரு மனிதருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கும்'. (புஹாரி, முஸ்லிம், நான்கு ஸுனன் கிரந்தங்கள்)*

*'நிச்சயமாக அல்லாஹ் உங்கள் உடல்களையோ தோற்றங் களையோ பார்ப்பதில்லை. உங்கள் உள்ளங்களையும் செயல்களை யுமே பார்க்கின்றான்'. (முஸ்லிம், அஹ்மத், இப்னு மாஜா)*

*'இறையச்சம் கொண்டிருந்தாலே அன்றி, அஜமியை விட அறபிக்கு எந்தச் சிறப்பும் இல்லை'. (அஹ்மத்)*

*'செயல்களால் பின்தங்கியவரை மரபுவழியான கௌரவம் முன் கொண்டு செல்லாது'. (அஹ்மத், இப்னுமாஜா)*

*'ஒரு மனிதனின் சன்மார்க்கமே அவனது கண்ணியமாகும்; பகுத் தறிவே மனிதப் பண்பாகும். நற்பண்பே நற்பெயராகும்'. (பைஹகீ, ஹாக்கிம்)*

*'கசப்பாய் இருப்பினும் சத்தியத்தைப் பேசுங்கள்!' (பைஹகீ, அபூ நுஐம்)*

*'நன்மை என்பது நற்பண்பாகும். பாவம் என்பது உன் உள்ளத்தை நெருடுவதும், மக்கள் காண்பதை நீ வெறுப்பதும் ஆகும்'. (புஹாரி, முஸ்லிம், திர்மிதீ)*

*'தலைமைத்துவம் என்பது நம்பிக்கைப் பொறுப்பாகும். சத்தியத்தை ஏவி, சத்தியத்தின் அடிப்படையில் அதனை மேற்கொண்டவர்களைத் தவிர ஏனையோருக்கு அது மறுமைநாளில் இழிவாகவும் கைசேதமாகவுமே அமையும்.' (ஹாக்கிம்)*

*'நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பர்களே! ஒவ்வொருவரும் அவரது மேய்ப்புக் குறித்து பொறுப்புக்கூற வேண்டியவர்களே!''. (புஹாரி, முஸ்லிம்)*

*'அநியாயம் புரியும் ஆட்சியாளனிடம் சத்தியத்தை எடுத்துச் சொல்வதுதான் மிகச்சிறந்த அறப்போராகும்'. (அஹ்மத், தபறானி, பைஹகீ, நான்கு ஸுனன் கிரந்தங்கள்)*

*'ஒரு சமூகம் உடன்படிக்கையை முறித்து விட்டால், அவர்களுக்கு மத்தியில் கொலை நிகழத் தொடங்கி விடும். ஒரு சமூகத்தில் மானக்கேடான செயல்கள் தோன்றி விட்டால், அல்லாஹ் அவர்கள் மீது மரணத்தைச் சாட்டி விடுவான்'. (ஹாக்கிம்)*

*'எனது சமுதாயம் வழிகேட்டில் ஒன்றிணையாது. எனவே நீங்கள் ஒரு கருத்து முரண்பாட்டைக் கண்டால், பெரும்பான்மை மக்களோடு இருங்கள்'. (இப்னுமாஜா, அஹ்மத், ஹாக்கிம்)*

*உங்களில் ஒருவர் ஒரு தீமையைக் கண்டால் அதனைக் கையால் மாற்றியமைக்கட்டும். முடியா விட்டால், நாவினால் விலக்கட்டும். அதுவும் முடியா விட்டால், உள்ளத்தால் விலகியிருக்கட்டும். அதுவே இறை விசுவாசத்தின் மிகப் பலவீனமான நிலையாகும். (அஹ்மத், முஸ்லிம், நான்கு ஸுனன் கிரந்தங்கள்)*

- **மென்மை, கிருபை, ஒத்துழைப்பு, நற்பண்பு:**

*'ஆட்சியாளர் மன்னிப்பதில் தவறிழைப்பது தண்டிப்பதில் தவறிழைப்பதை விடச் சிறந்தது'. (ஹாக்கிம், பைஹகீ)*

*'எங்கிருந்தாலும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். ஒரு தீமை செய்தால் அதனைத் தொடர்ந்து நன்மை ஒன்றையும் செய்யுங்கள்; இது அதனை அழித்து விடும். மனிதர்களோடு நற்பண்புடன் நடந்து கொள்ளுங்கள்'. (ஹாக்கிம், அஹ்மத், பைஹகீ, திர்மிதீ)*

‘ஒரு சமூகத்தின் மென்மை அதற்கு நன்மையாகவே அமையும். ஒரு சமூகத்தின் முரட்டுத்தனம் அதற்குத் தீங்காகவே அமையும்’. *(புஹாரி, முஸ்லிம்)*

‘அனைத்து விடயங்களிலும் அல்லாஹ் மென்மையை விரும்பு கின்றான்’. *(புஹாரி, முஸ்லிம்)*

‘எவரிடம் மென்மை இல்லையோ அவருக்கு நல்ல விடயங்கள் கிட்டாமல் போய் விடும்’. *( முஸ்லிம், இப்னுமாஜா, அஹ்மத்)*

‘இலகுபடுத்துங்கள்; கஷ்டப்படுத்தாதீர்கள்; நன்மாராயம் கூறுங் கள்; வெறுப்படையச் செய்யாதீர்கள்’. *(புஹாரி)*

‘பூமியில் உள்ளோருக்கு இரக்கம் காட்டுங்கள். வானத்தில் உள் ளோர் உங்களுக்கு இரக்கம் காட்டுவார்கள்’. *(ஹாக்கிம், தபறானி)*

‘ஒவ்வோர் உயிரின் விடயத்திலும் கூலி உண்டு’. *(இப்னு மாஜா, அஹ்மத்)*

‘இரக்கம் காட்டாதவர் இரக்கம் காட்டப்பட மாட்டார்’. *(புஹாரி)*

‘படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பமே. அவற்றுக்கு அதிகம் பயன் தருபவரே அல்லாஹ்விடம் அதிக நேசத்திற்கு உரிய வராவார்’. *(அபூ யஃலா, பஸ்ஸார், தபறானி)*

‘மூத்தோருக்கு மதிப்பளிக்காமலும், இளையோருக்கு அன்பு காட் டாமலும், அறிஞருக்குரிய அந்தஸ்தை வழங்காமலும் இருப்பவர் எம்மைச் சார்ந்தவரல்ல’. *(அஹ்மத், ஹாக்கிம்)*

‘உங்களுக்கு விரும்புவதையே பிற மனிதர்களுக்கும் விரும்புங் கள்’. *(புஹாரி, தபறானீ, அபூ யஃலா, ஹாக்கிம், பைஹகீ)*

‘இறை விசுவாசிகள் ஒரு மனிதனின் உடலைப் போன்றவர்கள். அவனது சிரசு நோயுற்று வருந்தினால் முழு உடலும் வருந்தும். கண் நோயுற்று வருந்தினால் முழு உடலும் வருந்தும்’. *(புஹாரி, தபறானீ, அபூ யஃலா, ஹாக்கிம், பைஹகீ)*

‘ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமின் சகோதரர் ஆவார். அவர்கள் ஒருவருக்கொருவர் அநியாயம் இழைக்கவோ, ஒருவரையொருவர் இழிவு படுத்தவோ மாட்டார்கள். தனது சகோதரனின் தேவையை நிறைவேற்றுபவரது தேவையை அல்லாஹ் நிறைவேற்றுவான். ஒரு முஸ்லிமின் துன்பத்தை நீக்கி வைப்பவரது மறுமைத் துன்பத்தை

அல்லாஹ் நீக்கி விடுவான். ஒரு முஸ்லிமின் குறையை மறைப்ப வரது குறையை மறுமையில் அல்லாஹ் மறைத்து விடுவான்'. *(புஹாரி, முஸ்லிம்)*

'எவரது தீங்கிலிருந்து அவரது அயலவர் பாதுகாப்புப் பெற வில்லையோ அவர் விசுவாசம் கொண்டவராக மாட்டார்'. *(புஹாரி)*

## • *நீதி, நல்லறிவு, தர்மம், நற்செயல்:*

'ஒரு மனிதர் தனது சகோதர முஸ்லிமை வெறுப்பதே அவர் மோசமானவராக இருக்கப் போதுமானதாகும்'. *(முஸ்லிம், அபூதாவுத், திர்மிதீ)*

'அநியாயம் மறுமை நாளில் இருள் திட்டுக்களாகத் தோன்றும்'. *(புஹாரி, முஸ்லிம்)*

'வசதி படைத்தவர் தனது கடனை நிறைவேற்றாமல் பிற்படுத்து வது அநீதியாகும்'. *(புஹாரி, முஸ்லிம், நான்கு ஸுனன் கிரந்தங்கள், மாலிக், அஹ்மத்)*

'உனது சகோதரன் உன்னை நம்பும் நிலையில் அவனிடம் நீ பொய்யுரைப்பது மிகப்பெரிய துரோகமாகும்'. *(அஹ்மத், அபூதாவுத்)*

'நிச்சயமாக உங்களது உயிர்களும் செல்வங்களும் உங்களது இன்றைய தினம் போல் கண்ணியம் வாய்ந்தவையாகும்'. *(புஹாரி, முஸ்லிம், திர்மிதீ, இப்னுமாஜா, அஹ்மத், தாரமீ)*

'ஒருவர் தனது பராமரிப்பில் இருப்பவரைக் கவனிக்காமல் விடுவதே அவர் பாவியாக இருக்கப் போதுமானதாகும்'. *(புஹாரி, முஸ்லிம்)*

'எல்லா நன்மைகளுமே தர்மம்தான்'. *(முஸ்லிம், திர்மிதீ)*

'தர்மம் செய்வதில் குறைவு ஏற்படாது'. *(அஹ்மத், முஸ்லிம், திர்மிதீ)*

'மக்கள் கொடுத்தாலும் கொடுக்கா விட்டாலும், ஒருவர் அவர் களிடம் இரப்பதை விட விறகு வெட்டி விற்பது சிறந்தது'. *(புஹாரி, நஸாயி, இப்னுமாஜா, மாலிக், அஹ்மத்)*

'மேலிருக்கும் கரம் கீழிருக்கும் கரத்தை விடச் சிறந்தது'. *(புஹாரி, முஸ்லிம், அபூதாவுத், திர்மிதீ, நஸாயி, மாலிக், அஹ்மத்)*

*'அதிகமான சொத்துக்களை வைத்திருப்பது செல்வமன்று. நிறை வான மனமே உண்மையான செல்வமாகும்'. (புஹாரி, முஸ்லிம், திர்மிதீ, இப்னுமாஜா, அஹ்மத்)*

*'ஒரு மனிதர் சாப்பிடக்கூடிய மிகச்சிறந்த உணவு அவர் தனது கைகளால் சம்பாதித்துச் சாப்பிடுவதே'. (திர்மிதீ, அபூதாவுத், நஸாயி, அஹ்மத், தாரமீ)*

*'எல்லா நோய்க்கும் மருந்துண்டு'. (புஹாரி, முஸ்லிம், அபூதாவுத், திர்மிதீ, இப்னுமாஜா, அஹ்மத்)*

*'நோயுற்ற ஒட்டகங்களை ஆரோக்கியமான ஒட்டகங்களிடம் கொண்டு செல்லலாகாது'. (இப்னுமாஜா)*

*'ஒரு வணக்கவாளியை விட அறிஞனுக்குள்ள சிறப்பு உங்களில் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவரை விட எனக்குள்ள சிறப்புப் போன்றதாகும்'. (திர்மிதீ)*

*'ஓர் இறைவிசுவாசி ஒரே புற்றிலிருந்து இருமுறை தீண்டப்பட இடமளிக்க மாட்டார்'. (புஹாரி, முஸ்லிம், அபூதாவுத், திர்மிதீ, இப்னு மாஜா, அஹ்மத்)*

*'ஏமாற்றுபவர் எம்மைச் சேர்ந்தவர் அல்ல'. (திர்மிதீ)*

*'பெண்களில் மகத்தான அருள் நிறைந்தவள் செலவுகளை குறைத்துக் கொள்பவளே'. (பைஹகீ, ஹாக்கிம்)*

*'நற்பண்புகளும் சன்மார்க்கப் பேணுதலும் கொண்ட ஒருவர் உங்களை நாடி வந்தால் அவருக்குத் திருமணம் செய்து வையுங்கள்'. (திர்மிதீ, இப்னுமாஜா, பைஹகீ)*

*'பெண்கள் ஆண்களின் பாகங்கள்'. ( அபூதாவுத், திர்மிதீ, நஸாயி, அஹ்மத், தாரமீ)*

*'உங்களில் சிறந்தவர் தன் குடும்பத்திற்குச் சிறந்தவரே'. (திர்மிதீ, இப்னுமாஜா, ஹாக்கிம்)*

*'ஆகுமானவற்றில் அல்லாஹ்வுக்கு மிக வெறுப்புக்குரியது விவா கரத்தாகும்'. (அபூதாவுத், இப்னுமாஜா, ஹாக்கிம்)*

*'உங்கள் கையில் ஒரு மரக்கன்று இருக்கும் நிலையில் மறுமை வந்தாலும் உடனே அதனை நட்டு விடுங்கள்'. (அஹ்மத்)*

### இ) சிந்தனை மற்றும் வழிமுறைகள் என்ற விவகாரத்துக்கும், பெறுமானங்கள் மற்றும் இலக்குகள் என்ற விவகாரத்துக்கும் இடையிலான வேறுபாட்டைப் பிரித்தறிதல்:

இஸ்லாத்தின் நம்பிக்கைகளையும் பெறுமானங்களையும் கொள் கைகளையும் எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது என்பது மேற் குறித்த முன்வைப்பிலிருந்து ஐயத்துக்கிடமின்றித் தெளிவாகிறது. அவை தொடர்பாக யாராவது ஆட்சேபணை தெரிவித்தால் கூட அதற்கு எவரும் செவிதாழ்த்தப் போவதும் இல்லை. ஆயினும், சதி காரர்கள் இந்த அர்த்தங்களை தேடிப் பார்க்க மாட்டார்கள். இவை பற்றி அவர்கள் பேசப் போவதும் இல்லை. உண்மையில் இவற்றுள் பலவற்றைக் குறித்து நம்மவர்களில் பலர் பேசியுள்ள போதிலும், விரோதிகள் அவற்றை வேண்டுமென்றே நிராகரித்திருக்கின்றனர். முஸ்லிம் உம்மாவும் கூட தனது கல்வித் திட்டத்தில் இந்த உயர்ந்த கருத்தாக்கங்களின் அடிப்படையில் இளைய தலைமுறையினரைப் பயிற்றுவிக்க கூடிய முறையான அறிவின்மையால் அவற்றை இழந்து நிற்கிறது.

இஸ்லாத்தின் எதிரிகளைப் பொறுத்த வரையிலும், இஸ்லாம் பற்றி அறியாதவர்களைப் பொறுத்த வரையிலும் இஸ்லாமிய நம்பிக்கைகள் மிக விகல்பமான பொருள்கோடலுக்கு உட்பட்டி ருக்கின்றன. காரண-காரியத் தொடர்பைப் பேணாது இறையருளை எதிர்பார்த்தல், வரம்புமீறல், அரசியல் அடக்குமுறை சார்ந்த குற்றங் கள், சிந்தனா-உளவியல் குறைபாடுகள், அடிமை வணிகம், பெண் களை இழிவுபடுத்தும் சம்பிரதாயங்கள் என்பவை குறித்த கதை யாடலாகவே இந்த நம்பிக்கைகள் அவர்களால் பார்க்கப்படுகின் றன. அவர்களைப் பொறுத்தவரை இஸ்லாத்தின் நம்பிக்கைகள் என்பவை முஸ்லிம்களது பிறழ்வுகள், தவறுகள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், அறியாமை, சிந்தனைத் தேக்கம், அணுகுமுறைக் குறைபாடு, மௌட்டீகங்கள், வெறியுணர்வுகள் என்பவை பற்றிய கதையாடல்கள்தான்.

இஸ்லாத்தில் நுழைந்த பல சமூகங்கள் பற்றிய உண்மையொன்றை இவ்விடத்தில் சுருக்கமாக முன்வைப்பது பயனுள்ளதாக அமைய முடியும். உண்மையில் இச்சமூகங்கள் தமது வீழ்ச்சிக் காலப் பிரிவு களிலேயே இஸ்லாத்தில் நுழைந்திருந்த போதிலும், இஸ்லாமும் அதன் கொள்கைகளுமே அவை ஏற்படுத்திய அனைத்துச் சாதனை

களுக்கும் காரணமாக அமைந்தன. இஸ்லாத்தின் இத்தகைய பெறுமானங்கள், கொள்கைகள், உந்துசக்தி என்பவற்றுக்கு மத்தியிலும் இச்சமூகங்களின் பிற்காலப் பிறழ்வுக்கும் வீழ்ச்சிக்கும் காரணமானவை அவற்றின் கடந்த காலப் படிவுகளும் இஸ்லாத்துக்கு முரணான அன்னியத் தாக்கங்களுமே ஆகும். இச்சமூகங்களின் மாந்தர்களது உள்ளங்களில் இஸ்லாமியக் கருத்தாக்கங்கள் சற்றேனும் எஞ்சியிராது போயிருந்தால், அவை இன்னும் கடுமையான இருளுக்கும் சீர்கேட்டுக்கும் மடமைக்கும் உட்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

முஸ்லிம்களது வாழ்வில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளுக்குக் காரணம் இஸ்லாத்தின் பெறுமானங்களோ இலக்குகளோ அல்ல என்பது இங்கு புரிந்து கொள்ளப்படுவது அவசியம். உண்மையில் அக்குறைபாடுகளுக்குக் காரணம் அவர்களது பகுத்தறிவும் சிந்தனையும்தான். எனவே, குறைபாடு பற்றியும் சீர்திருத்தம் பற்றியுமான கருத்தாடலானது உண்மையில் முஸ்லிம் பகுத்தறிவு பற்றியும் சிந்தனை பற்றியுமான கருத்தாடலாகவே அமைய வேண்டும். அறிவையும் சிந்தனையையும் பயன்படுத்தி, கொள்கைகளையும் பெறுமானங்களையும் இலக்குகளையும் சமூகங்கள் மீதும், அமைப்புகள் மீதும், நிகழ்வுகள் மீதும் எவ்வாறு பிரயோகிப்பது என்ற கருத்தாடல் அது. சமூகக் கூட்டுறவும் பிணைப்பும் என்ற கொள்கை வேறு; அதன் நடைமுறைகள், ஏற்பாடுகள், அவற்றில் தோன்றும் குறைபாடுகள் என்பவை வேறு. அவ்வாறே, ஷரீஆவின் அறுதியான இலக்குகளும் பெறுமானங்களும் வேறு; அவற்றின் நடைமுறைக் கொள்கைகளும் பிரயோகங்களும் வேறு.

பெறுமானங்கள், கொள்கைகள், அதியுயர் இலக்குகள் என்பவை அகிலம் தழுவியவை; முழு மொத்தமானவை; கால-இடப் பரிமாணங்களை ஊடறுத்துச் செல்பவை. ஆனால் நடைமுறைகளையும் பிரயோகங்களையும் ஏற்பாடுகளையும் பொறுத்தவரை, அவை கால-இடப் பரிமாணங்களிலிருந்து புறப்பட்டு பெறுமானங்களையும் கொள்கைகளையும் நோக்கிச் செல்பவை.

நம்பிக்கைக் கோட்பாடுகள், கொள்கைகள், பெறுமானங்கள் என்பவற்றுக்கும், சிந்தனைகள், புரிதல்கள், பிரயோகங்கள், இணைக்கப் படுத்தல்கள், அவற்றில் ஏற்படும் குறைபாடுகள், பிறழ்வுகள் என்பவற்றுக்கும் இடையிலான வேறுபாடானது மிக அடிப்படையானதொரு விவகாரம் என்பதை இந்த அனைத்தும் நமக்குத் தெளிவு

படுத்துகின்றன. இது எந்த மயக்கங்களும் இன்றிப் புரிந்து கொள் ளப்பட வேண்டும். அப்போதுதான் நமது விவகாரங்களைச் சீர் படுத்தி, பயணத்தைச் சரிசெய்து, இலக்குகளை நோக்கி விரைந்து செல்வதும், நமது துன்பங்களுக்கு எல்லை இடுவதும் சாத்தியமாகும்.

இன்று ஏற்பட்டிருப்பது சிந்தனா நெருக்கடியே அன்றி, அகீதா சார்ந்த நெருக்கடி அல்ல என்பதுதான இதன் இறுதிப் பொருளாகும். இன்னொரு வகையில் சொன்னால், இது முறைமை சார்ந்த நெருக் கடியே அன்றி, உள்ளடக்கம் சார்ந்ததன்று. சாதனமே இங்கு பிரச் சினை; இலக்கு அல்ல.எனவே, இந்தப் புள்ளியில் இருந்துதான் சரியான ஆய்வும், வினைமை மிக்க உழைப்பும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் மூலமாகத்தான், உள்நோக்கம் கொண்ட அறை கூவல்களுக்கும், ஏமாற்றமளிக்கும் கானல்களுக்கும், மலட்டுத்தன மான கோஷங்களுக்கும் பின்னால் நாக்கைத் தொங்க விட்டு அலை யும் நிலைக்கு நாம் முடிவு காணலாம்.

## (2) சிந்தனைத் தனிமையே தேக்கம், கண்மூடிப் பின்பற்றல், பின்னடைவு என்பவற்றின் வேரடி மண்ணாகும்:

முஸ்லிம் சிந்தனை, முஸ்லிம் பகுத்தறிவு, முஸ்லிம் முறைமை என்பவை தொடர்பான நெருக்கடியானது கால ஓட்டத்திலும், தலை முறைகளின் விருத்தியிலும், சவால்களின் தன்மை மாற்றங்களிலும் மிகத் தெளிவாக வெளித்தெரிய ஆரம்பித்திருக்கிறது. இறுதியாக, இலட்சியவாதத்திற்கும் யதார்த்ததுக்கும் இடையிலான விரிசல் எல் லோருக்கும் வெளிப்படையாகத் தெரியுமளவுக்கு நிலைமை வந்த டைந்திருக்கிறது. இலக்குகள் ஆசைகளாக மாறியுள்ளன. சாதனை களும் ஆற்றல்களும் வரலாறாகவும் நினைவுகளாகவும் மாறியிருக் கின்றன. உம்மா அதன் எதிரிகளின் பிடியில் வீழ்ந்ததன் மூலமாக சமூகத்தினதும் அதன் அரசியல் தலைமையினதும் வங்குரோத்து நிலை பிரத்தியட்சமாக வெளித் தெரிந்து விட்டது. மட்டுமன்றி, சிந்தனைத் தலைமையின் வங்குரோத்து நிலையும் தெளிவாகி விட்டது. முன்னெடுப்பு என்ற கடிவாளத்தைக் கையேற்கும் திராணி இன்று அதனிடம் இல்லை. வெளியிலிருந்து வந்த கலாசார-நாகரிக தாக்குதலுக்கு முகம் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உம்மாவின் நாகரிக வலுவைப் புதுப்பிக்க அதனால் முடியவில்லை.

உம்மா நேற்று நாகரிக சிகரங்களைத் தொட்டிருந்ததெனில், அதற்குக் காரணம் இஸ்லாத்தின் ஆரம்ப உந்து விசையின் தாக்கமும்,

அதில் எஞ்சி நிற்கின்ற கருத்தாக்கங்களும் கொள்கைகளும் கட்ட மைப்புகளுமேயன்றி வேறில்லை. ஆயினும், பின்னர் சூழ்நிலை களும் சவால்களும் மாற்றமடைந்து, எதிர்ப்புக் காரணிகள் புதிதாக தோன்றத் தோன்ற கனன்று கொண்டிருந்த ஜோதி அணைந்து போனது. அசைவியக்கம் ஓய்ந்து போனது. பணிக் கையேடு தொலைந்து, உந்து சக்தியும் புத்தாக்கமும் மங்கி மறைந்தன. அரசியல் தலைமை சிந்த னைத் தலைமையிலிருந்து பிரிந்து, ஆட்சியாளர்களும் கற்றறிவாளர் களும் தமக்குள் முரண்பட்டுக் கொண்டதன் விளைவு இது. இதனால் வெறும் வாக்கியவாத அணுகுமுறையும் கண்மூடிப் பின்பற்றலும் தோன்றின. மௌட்டீகக் கருத்தாக்கங்களுக்கும் மனோ இச்சைக்கும் பின்னால் அடிபட்டுச் செல்லும் நிலை ஏற்பட்டது. உம்மாவின் பயணம் தளர்வடைந்து, தடைகளையும் சவால்களையும் எதிர்கொள் வது கடினமாகிப் போனது. இறுதியில், புதிய சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்ற நாகரிகத் திசைவழிகளை உம்மாவினால் எட்ட முடியாது போனது. அதற்கான அறிவுகள், ஒழுங்குகள், திட்டங்கள், சாதனங்கள், கொள்கைகள் என்பவற்றைத் தொடர்ச்சியாக உற்பவிக்க முடியாத நிலைமைக்கும் அது தள்ளப் பட்டது.

ஆக- அரசியல் மற்றும் சிந்தனா ரீதியான தலைமைகள் பிளவுற்று சிந்தனைத் தலைமை தனித்தொதுங்கியது முதல், உம்மாவும் அதன் சமூக-நாகரிக அசைவியக்கமும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது ஆரம்ப முஸ்லிம் தலைமுறை இட்டு வைத்த கட்டமைப்புக்களதும் சமூகவியல் கொள்கைகளதும் எச்சங்களின் மீதுதான். அதேவேளை, அரசியல்-சிந்தனா-நாகரிக முரண்பாடும் பிறழ்வுகளும் உம்மாவின் உடலிலும் அதன் சமூக-அரசியல் தலைமைகளிலும் இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. மற்றொரு புறத்தில், சூழ்நிலை மாற்றங்களும் சமூக மாற்றங்களும் சவால்களும் கூட தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்போது இஸ்லாமிய வரலாற்றுக் கட்டடத்தில் எஞ்சியிருப்பது வரைபுகளும் கட்டமைப்புகளும் மட்டுமே. மனிதர்களது உள்ளங்களில் தங்கியிருக்கும் உணர்வுப் பிம்பங்களையும், தனிப்பட்ட வாழ்வில் அவர்கள் அனுஷ்டிக்கும் சில கிரியைகளையும் செயற்பாடுகளையும் தவிர அக்கட்டடத்தின் தெளிவான விவரணம் ஒன்றை இன்று காண்பதற்கில்லை.

சிந்தனைத் தலைமை தனித்தொதுங்கி விட்டதனாலும், உம்மா வின் சமூக-அரசியல் பொறுப்பிலிருந்து அது தூரமாக முற்றுகை

யிடப்பட்டு விட்டதனாலும் புனித வசனங்களை நோக்கி முற்று முழுதாகத் திரும்பி விட்டது. அத்துறையினர் புனித வசனங்களைக் கற்கவும், அவற்றை பேணிப் பாதுகாப்பதற்கு அவசியமான கலை களை உருவாக்கவும் ஆரம்பித்தனர். அதற்காகவே அல்-குர்ஆன் தொடர்பான கலைகளையும், நபி மரபு தொடர்பான கலைகளையும், மொழி தொடர்பான கலைகளையும் உருவாக்கினர். அவர்கள் உரு வாக்கிய சட்டவியல் கலைகள் கூட தனிநபர் சார்ந்த வணக்க வழிபாடுகளையும், கொடுக்கல்-வாங்கல் நடவடிக்கைகளையுமே அதிகம் பேசின. ஆரம்ப முஸ்லிம்கள் அன்றாட வாழ்வில் மேற் கொண்ட செயற்பாடுகள் பற்றிய -கோட்பாட்டாக்கம் அற்ற- விவ ரணமாகவும் விளக்கங்களாகவுமே அவை அமைந்திருந்தன.

அதேபோன்று, சட்ட நியாயவியல் கலையும் அதன் வாழ்வியல் பிரயோகங்களும் ‘அகீதா’ என்னும் இறையியல் கலையிலிருந்தும், அதன் முழுமைத்துவ அகில நாகரிக நோக்கிலிருந்தும் விலகியே நின்றன. அந்தவகையில், சமூக வாழ்வைத் திசைப்படுத்துவதிலோ அதன் அசைவியக்கத்துக்கும் முன்னெடுப்புக்குமான வழிகாட்டலை வழங்குவதிலோ இறையியல் கோட்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க பாத்திரம் எதுவும் இருக்கவில்லை. மட்டுமன்றி, அகீதாவின் உள்ள டக்கம் கூட மயக்கமான அம்சங்கள் மற்றும் தர்க்கவாதங்கள் தொடர்பான கலையாக மாற்றமடைந்து, முஸ்லிம் பகுத்தறிவை அதனால் புரிந்து கொள்ள முடியாத மறைவான அம்சங்கள் என்ற அநாவசியப் பேரலைக்குள் தள்ளி விட்டது. இது முஸ்லிம் பகுத் தறிவை செயலிழக்கச் செய்ததுடன், வாழ்வில் மேற்கொள்ள வேண் டிய பிரதிநிதித்துவ பணியின் இலக்குகளை விட்டு அதனைத் திசை திருப்பி விட்டது.

ஆரம்ப காலத்தில் முஸ்லிம் பகுத்தறிவுக்கும், சிந்தனைக்கும், செயல்வாதத்துக்கும் உயிர்ப்புமிக்க வழிகாட்டியாய் நின்ற இஸ் லாத்தின் அடிப்படைகள் கூட இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட லாயின. முதல் பகுதி, நேரடி வசனங்கள் (நுஸூஸ்) சார்ந்தது. அவ் வசனங்களைப் பாதுகாப்பதற்கும் ஒப்பீடு செய்வதற்குமான அடிப் படை ‘உஸூல்’களாக இப்பகுதி அடையாளப்படுத்தப்பட்டது. இரண்டாம் பகுதி, சமூக-வாழ்வியல் யதார்த்தத்தைக் கவனத்தில் கொள்வதற்கும், இயல்புகளோடும் சூழமைவுகளோடும் உறவாடு வதற்கும் அவசியமான அடிப்படைகள் சார்ந்தது. இரண்டாம் நிலை ‘உஸூல்’களாக இப்பகுதி அடையாளப்படுத்தப்பட்டது.

இந்தவகையில், புனித வசனங்கள் தொடர்பான அடிப்படைகளும் முறைமைகளும் விருத்தி செய்யப்பட்டு, தனியான அறிவியலாகவும் சம்பூரண அறிவுத் துறைகளாகவும் வளர்த்தெடுக்கப் பட்டன. ஆயினும் சூழ்நிலைகள், இயல்புகள், நிகழ்வுகள் என்பவை தொடர் பான அடிப்படைகளும் முறைமைகளும் அத்தகைய கவனயீர்ப்பைப் பெறவில்லை. அவற்றுடன் தொடர்பான அறிவுசார் கடமைகளும் கூட கவனிக்கப்படவில்லை. எனவேதான், சமூகக் கலைகள் அவற் றுக்குரிய சரியான பொருளிலும் அளவிலும் உருவாகாமல் போயின. இஸ்லாமிய அரசியல் விஞ்ஞானம், இஸ்லாமியக் கல்வியியல், இஸ்லாமியப் பொருளியல், இஸ்லாமிய ஊடகவியல், இஸ்லாமிய முகாமைத்துவம் என எதுவுமே உருவாகாமல் போனதும் இதனால் தான். (ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமை சார் அறிவியல் என்பது எவ்விதத் திட்டமிடலோ முறைமையோ அற்ற சிதறலான அவ தானங்களல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.)

இந்நிலையில், முஸ்லிம் சமூகத்துக்குரிய அறிவாக்கப் பணியாளர் களைத் தயார்படுத்துதல், முறைவழியான ஒழுங்குகளைக் கட்டி யெழுப்புதல், கொள்கைகளை வரைதல் முதலிய பணிகள் ஒழுங் கற்றவையாகவும் இலக்கற்றவையாகவும் மாறின. உம்மாவின் பயணம் தடுமாறத் தொடங்கியது. அதன் நிறுவனங்கள் சரிவுற்றன. அதன் அறிவாக்கப் பணியாளர்களது தரம் வீழ்ச்சியடைந்தது.

அவ்வப்போது தோன்றும் சமூகவியல் அவதானிப்புகளுக்கும், விஞ்ஞான பூர்வமான சமூகவியல் ஆய்வுகளுக்கும் இடையில் ஒரு பிரதான வேறுபாடு உள்ளது. விஞ்ஞான பூர்வமான சமூகவியல் ஆய்வுகள் என்பவை ஒழுங்கமைக்கப் பட்டவை. நிகழ் யதார்த்தம், இயல்புகள், பிரபஞ்ச இயற்கை நியமங்கள் என்பவற்றிலிருந்து புறப் பட்டு, இலக்குகள், கொள்கைகள், பெறுமானங்கள் என்பவற்றை நோக்கி அவை செல்லும். யதார்த்தத்தின் பெறுபேறுகளுக்கு அமை வாக நின்று, அவசியமான தாக்கங்களையும் அவை ஏற்படுத்தும். அவ்வாறன்றி, -இன்று வெகுவாக நிகழ்வது போன்று- வார்த்தை களுக்கும், அர்த்தங்களுக்கும், கோஷங்களுக்கும், நிகழ்வுகளுக்கும் பின்னால் அவை ஒளிந்து கொள்வதில்லை.

முஸ்லிம் சிந்தையின் நெருக்கடி என்பது உயர் இஸ்லாமிய இலக்குகளைச் சாத்தியப்படுத்தி, பெறுமானங்களையும் கொள்கை களையும் ஸ்தூலப்படுத்துதல் தொடர்பான நெருக்கடியாகும். அது -ஆரம்பமாகவும் உள்ளடக்க அடிப்படையிலும்- சிந்தனை சார்ந்த

ஒரு நெருக்கடி. சமூக ஆய்வுத் துறையில் முஸ்லிம் சிந்தனை இழந்து நிற்கின்ற அறிவியல் முறைமை சார்ந்த நெருக்கடியாகவும் அது உள்ளது.

இன்றிருக்கும் முஸ்லிம் சிந்தனா நெருக்கடியானது சமூக விஞ் ஞானங்களைக் கட்டியெழுப்புதல் தொடர்பான நெருக்கடி ஆகும். ஏனெனில், அத்தகைய சமூக விஞ்ஞானங்களே -புனித வசனங்களின் பொருள்கோடல் அறிவுக்கு அப்பால்- இயல்புகள், இயற்கைத் தன்மைகள், நிகழ்வுகள், கால-இடச் சூழமைவுகள் என்பவை தொடர் பான அறிவையும் வழங்க வல்லவை. அந்த அறிவின் வழியேதான் இஸ்லாத்தின் இலக்குகளையும் பெறுமானங்களையும் கொள்கை களையும் சாத்தியப்படுத்தக் கூடிய சிந்தனையையும் ஒழுங்குகளை யும் நிறுவனங்களையும் கொள்கைகளையும் உம்மாவினால் கட்டி யெழுப்ப முடியும்.

சமூக விஞ்ஞானங்கள் என நாம் பேசும் போது, முறைவழிப் பட்ட ஆய்வியல் துறைகளையே இங்கு நாம் கருத்தில் கொள்கி றோம் என்பது முக்கியமானது. ஆயினும், மேற்குலக வடிவமோ அல்லது கீழைத்தேய வடிவமோ அல்லது வேறொரு வடிவமோதான் இங்கு அவசியம் பின்பற்றப்பட வேண்டும் என்பதில்லை. தனது பரிபூரண அறிவு மூலங்களிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் முஸ் லிம் சிந்தையானது தனக்குப் பொருந்தக் கூடியதும், தனது இலக்கு களை முழுமையாக சாத்தியப்படுத்தக் கூடியதுமான வடிவமொன் றைத் தன்னுடன் இணைத்துக் கொள்வதில் தவறில்லை.

இஸ்லாமிய சமூக விஞ்ஞானங்கள், அறிவியல் கலைகள், அவற் றின் பெயர்கள் என்பவை பற்றிய விலாவாரியான விளக்கங்கள் இப்போதைக்கு நமக்கு அவசியமில்லை. காலவோட்டத்தில் அவை பற்றி நாம் தெரிந்து கொள்ளலாம். இன்று நாம் எந்த வடிவத்தில் ஆரம்பித்தாலும், ஏற்கனவே தெரிந்த புள்ளியிலிருந்து ஆரம்பிப்பதே நமது நோக்கமாகும். அப்போதுதான், மனித இனம் இன்று வரை கண்டடைந்த சாதனைகளிலிருந்து நாமும் பயன்பெற முடியும். தொடக்கப் புள்ளியானது அசல்தன்மை, முதிர்ச்சி, பரந்த நோக்கு முதலிய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதே இங்கு முக் கியமானது. அப்போதுதான், முன்னர் நாம் அகப்பட்டு விடுபட முயன்று கொண்டிருக்கும் 'கண்மூடிப் பின்பற்றல்' என்ற பொறி யிலிருந்து தூர விலகி பயணத்தைத் தொடர முடியும்.

## அத்தியாயம் இரண்டு

# இஸ்லாமிய சிந்தனைக்கான பாரம்பரிய முறைமை

### -திறனாய்வும் மதிப்பீடும்-

வரலாற்றுத் தீர்வு மற்றும் அந்நியத் தீர்வு உள்ளிட்ட பாரம்பரியத் தீர்வுகள் கடந்த பல நூற்றாண்டுகளில் எவ்வாறு தோல்வி கண்டன என்பது முன்னைய அத்தியாயத்தில் நமக்குத் தெளிவாகியது. எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டாலும், எத்தனை முறை பரிசோதித்தாலும் சீர்திருத்தத்திற்கான சரியான தொடக்கமாக அவை அமையவில்லை என்பதும் அங்கு தெளிவாகியது. அவ்வாறே, உம்மாவின் நெருக்கடி என்பது வசதிகள் அல்லது வளங்கள் சார்ந்த நெருக்கடி அல்ல என்பதும், கருத்தியல் சார்ந்த சில அம்சங்களில் ஏற்பட்ட நெருக்கடியே அது என்பதும் கூட தெளிவாகியது.

கருத்தியல் சார்ந்த இந்நெருக்கடி கூட நம்பிக்கைகள், பெறுமானங்கள், கொள்கைகள் என்பவை சார்ந்த நெருக்கடியாக அன்றி, சிந்தனை மற்றும் முறைமை சார்ந்த நெருக்கடியாகவே இருக்கிறது என்பதும் நமக்குத் தெளிவு. இந்த நெருக்கடியின் வேர்கள் இஸ்லாமிய வரலாற்றில் அரசியல் தள மாற்றத்தில் இருந்தும், அதைத் தொடர்ந்து சிந்தனைத் தலைமை தனித்தொதுங்கி சமூகப் பொறுப்பிலிருந்து விலகியதிலிருந்தும் தொடங்குகின்றன என்பதையும் கண்டோம். அதன் விளைவாக, உம்மாவில் முறைவழிப்பட்ட சமூக-அரசியல்-சிந்தனா அசைவியக்கத்தின் வளர்ச்சி நின்று போனதையும், அடுத்தடுத்துத் தோன்றிய பாரிய மாற்றங்களோடும் வளர்ச்சிகளோடும் சவால்களோடும் இயைந்து செல்ல இயலாத நிலையை உம்மா அடைந்தது என்பதையும் முன்னைய அத்தியாயத்தில் கலந்துரையாடினோம்.

முஸ்லிம் பகுத்தறிவின் செல்நெறியையும், முஸ்லிம் சிந்தனையின் இயங்கு தளங்களையும் சீரமைக்காமல் இந்நெருக்கடியைத் தீர்த்து வைக்க முடியாது என்பது தெளிவு. அந்த வகையில், நிகழ்வுகள், சவால்கள், உறவுகள், இயல்புகள் முதலியன உள்ளிட்ட சமூக வாழ்வுடன் கட்டுக்கோப்புடன் உறவாடத் தக்க வகையில் முஸ்லிம் சிந்தனையின் சமூக-அறிவியல் முறைமை கட்டியெழுப்பப்பட வேண்டும். ஏனெனில், முறைமை சீரடைந்தால்தான் சிந்தனை சீரடையும். அத்தகைய சீரிய சிந்தனையினால் மட்டுமே கட்டுமானம், சீர்திருத்தம், வளப்படுத்தல், சவால்களை எதிர்கொள்ளல் முதலிய முயற்சிகளுக்குப் பயனளிக்கும் வகையிலான சக்தியை வழங்க முடியும்.

எனவே, முஸ்லிம் பகுத்தறிவும் சிந்தனையும் தொழிற்படும் முறைமை குறித்து மிக நெருங்கி நின்று நாம் அவதானிக்க வேண்டியுள்ளது. அப்போதுதான் அதிலுள்ள பிரச்சினையும் குறைபாடும் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அதனைச் சீர்திருத்துவதும், தேவையான அடிப்படைகளை இடுவதும் கூட சாத்தியமாகும்.

## 1) உஸூல் (அடிப்படைகள்): வரைவிலக்கணமும் தெளிவும்

இஸ்லாமிய சிந்தனைக்கான வரலாற்று முறைமை என்பதன் மூலம், (ஃபிக்ஹு என்னும்) சட்ட நியாயவியலின் அடிப்படைகள் பற்றிய கலையே இங்கு நாடப்படுகிறது. ஏனெனில் இஸ்லாமிய அறிவாய்வு வட்டத்தில் அடிப்படையான ஆய்வு முறையை பிரதிநிதித்துவம் செய்கின்ற மிக முக்கியமான கூறு இந்த ஃபிக்ஹுக் கலைதான். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தையும், இஜ்திஹாத் என்னும் ஆய்வு முயற்சிக் காலத்தையும் தொடர்ந்து வந்த காலங்களில் இக்கலை பற்றியும் அதனுடன் தொடர்புள்ள அம்சங்கள் பற்றியும் ஆய்வு செய்தோரது நிலைப்பாடு முன்னைய கால நிலைப்பாடுகளை அப்படியே பிரதி செய்து பின்பற்றும் தன்மையைக் கொண்டிருக்குமாயின், அவ்வரலாற்று முறைமையை 'பாரம்பரியப் பின்பற்றல் முறைமை' என அழைக்க முடியும்.

இம்முறைமையின் பொதுவான விதிகளும் அடிப்படைகளும் இஸ்லாமிய சிந்தனையின் இயல்பையும், சன்மார்க்கத் தூதுடன் அதற்குள்ள தொடர்பையும் அசல் நிலையில் பிரதிபலித்தன. ஃகிலாபா றாஷிதாவின் சிந்தனையிலும், ஈடுபாட்டிலும், ஒழுங்குகளிலும், அறிவு முயற்சிகளிலும் இந்த உயிர்ப்பு நிலை மிகச் சிறப்பாக வெளிப்பட்டு நின்றதெனலாம். ஏனெனில் அக்காலத்தவர்கள் 'வஹி' என்னும்

வேத வெளிப்பாட்டையே வழிகாட்டல் மூலாதாரமாக எடுத்துக் கொண்டனர். வஹியைப் புரிந்து கொள்வதற்கும், அதிலிருந்து அழகிய வழிகாட்டல்களைப் பெறுவதற்கும், இயல்புகளையும் நிகழ்வுகளையும் ஆய்வு செய்து, தீர்வுகள், ஒழுங்குகள், சட்டங்கள், நடைமுறைக் கொள்கைகள் என்பவற்றைப் பிறப்பிப்பதற்குமான வழிமுறையாக பகுத்தறிவையும் இஜ்திஹாதையும் அவர்கள் எடுத்துக் கொண்டனர்.

தொடர்ந்து வந்த இஜ்திஹாத் காலப் பிரிவிலும், அரசியல் தலைமையும் சிந்தனைத் தலைமையும் ஒன்றாக இணைந்திருந்த ஆரம்பக் கட்டத்தில், இஸ்லாமிய சிந்தனையாளர்கள் தூதுத்துவத்துக்கும் நேர் வழி ஆட்சிக்கும் நெருங்கிய காலத்தவர்களாக இருந்ததால், மேற் குறித்த முறைமையின் அடிப்படையிலேயே தமது அறிவியல் படைப்புகளை முன்வைத்தனர். எனினும், பின்னர் ஆதிக்கம் பெற்ற அரசியல் ரீதியான தனிமைப்படலின் காரணமாக அவர்கள் படிப்படியாக அல் குர்ஆன், நபிவாழ்வு, தனிநபர் விவகாரங்களான வணக்கங்கள், கொடுக்கல்-வாங்கல்கள் என்பவை தொடர்பான அம்சங்களில் மாத்திரம் தமது ஆக்கங்களையும், ஆய்வுகளையும், கல்வி முயற்சிகளையும் சுருக்கிக் கொண்டனர். அரசியல், ஆட்சி, சமூக நிறுவனங்கள், சமூகத்தின் பொதுவான கூட்டு சுயாதீனத் தன்மை என்பவை குறித்து அவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அந்த வகையில், ‘உஸூல்’ சார்ந்த அம்முறைமையானது அப்போதைக்கு நாடப்பட்ட பணியை நிறைவேற்றும் வகையில் தகவமைந்து, தான் உருவாகிய சூழ்நிலைகளோடு ஒத்திசைந்தது. அப்போதைய நிலையில் அறிஞர்களுக்கு அதனைவிட வேறு தெரிவும் இருக்கவில்லை.

எனினும், அம்முறைமையின் பொதுவான முழுமொத்த அடிப்படைகள் மேலதிக வளர்ச்சிக்கும் புத்தாக்கத்துக்கும் ஏதுவாகவே அமைந்திருந்தன. தேவையான அமைப்பில் அதனை வளர்த்தெடுக்கும் பொறுப்பு பின்வந்த தலைமுறைகளுக்கே உரியதாக இருந்தது. அந்த வகையில், வெறும் பின்பற்றலாக அன்றி அசலான உயிர்ப்புடன் அவர்கள் அப்பயணத்தைத் தொடர்ந்திருக்க வேண்டும். அவ்வாறு தொடர்ந்திருந்தால், அம்முறைமையைக் கையாளவும் அதிலிருந்து பயன்பெறவும் அவர்களாலும் முடிந்திருக்கும். தனிப்பட்ட வாழ்வியல் விவகாரங்களுக்கான சட்டங்கள் என்ற வட்டத்துடன் நின்றுவிடாமல், புதிய சூழ்நிலைகள், மாற்றங்கள், இயலுமைகள் தேவைகள், சவால்கள் என்பவற்றைக் கவனித்து தொடர்ச்சியாகக் கட்டியெழுப்பவும் முடிந்திருக்கும். அதன் மூலமாக, இஸ்லாமிய

சிந்தனையும், அதன் முழுமைப் பண்பும், அசல் தன்மையும், அறிவு முயற்சியும், மூலாதாரங்களின் ஒழுங்கமைவும், அறிவியற் கலைகளும் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

இன்றைய நிலையில் இஸ்லாமிய சிந்தனைக்கான பாரம்பரியப் பின்பற்றல் முறைமையின் முழுமொத்த அடிப்படைகள் பற்றிய சுருக்கமான அறிமுகக் குறிப்பொன்றுடன் நமது திறனாய்வையும் மதிப்பீட்டையும் ஆரம்பிப்பது பயனுடையதாக அமைய முடியும். அதன்பிறகு இம்முறைமை பற்றியும், வரலாறு நெடுகிலும் அது கிளர்த்திய பாரிய விவகாரங்கள் பற்றியுமான மிக முக்கியமான திறனாய்வுக் குறிப்புகளை நாம் முன்வைக்கலாம்.

இஸ்லாமிய சிந்தனை முறைமையின் மூலாதாரங்களும் பொதுவான இயங்கு தளங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படுவது 'உஸூல் அல்-ஃபிக்ஹ்' என அறியப்படும் 'சட்ட நியாயவியல் அடிப்படைகள்' பற்றிய கலையிலேயே என்பதை நாம் அறிவோம். இஸ்லாம் அறிமுகப்படுத்திய எளிய உண்மைகளையும் பொதுவான அடிப்படைகளையும் இக்கலையின் பொதுவான விதிகள் பிரதிபலிக்கின்றன. அவற்றையே இஸ்லாத்தின் முதல் தலைமுறையின் சிந்தனையும் செயல்வாதமும் ஒழுங்கமைப்பும் இயல்பாக நடைமுறைப் படுத்தியும் வந்தன. எனினும், 'உஸூல்' என்பது அறிவியல் கலையாக உருப்பெற்றது ஃகிலாபா அரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தோன்றிய தாபியீன்களையும் தபஉத் தாபியீன்களையும் சேர்ந்த சிரேஷ்ட அறிஞர்கள் மூலமாகத்தான். இஸ்லாமிய சிந்தனை முறைமை மற்றும் 'உஸூல்' துறையில் தோன்றிய முதல் ஆக்கமாக இமாம் ஷாபியின் (ஹி.150-204) 'அர்-ரிஸாலா' என்ற நூல் கருதப்படுகிறது.

இக்கலையும் முறைமையும் தங்கி நிற்கின்ற மூலாதாரங்கள் இரு தொகுதிகளாக அமைந்துள்ளன: ஒன்று, அடிப்படையான தொகுதி. மற்றையது, உப தொகுதி. அடிப்படையான தொகுதியின் உள்ளடக்கமாக அல்-குர்ஆன், நபி மரபு, இஜ்மாஃ, கியாஸ் என்பன உள்ளன. உப தொகுதியினுள் இஸ்லாமிய இஜ்திஹாத் செயற்பாடுகளுக்கும், இஸ்லாமிய நோக்கில் சமூக வாழ்வியல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கும் அடிப்படையாக உள்ள விதிகளும் மூலாதாரங்களும் அடங்குகின்றன. சிலபோது இவை இரண்டாந்தர 'உஸூல்' எனவும், கருத்து வேறுபாட்டுக்கு உட்பட்ட சான்றுகள் எனவும் அடையாளப் படுத்தப்படுவதுண்டு. இந்த 'உஸூல்'களின் எண்ணிக்கையும், அவை ஒவ்வொன்றினதும் முக்கியத்துவமும் ஒவ்வொரு சிந்தனைப்

பள்ளிக்கும் மத்ஹபுக்கும் ஏற்ப கூடிக் குறைவதுண்டு. இஸ்திஹ்ஸான், மஸாலிஹ் முர்ஸலா, இஸ்திஸ்ஹாப், ஸத்து அல்-தராயிஃ, உர்பு, ஸஹீஹு அக்வாலிஸ் ஸஹாபா, அமலு அஹ்லில் மதீனா என்பன இந்த 'உஸூல்'களில் மிக முக்கியமானவை ஆகும்.

## ஷரீஆக் கலைகளும் ஷரீஆ சாராத கலைகளும்:

இஸ்லாமிய சிந்தனையின் ஆய்வு முறைமையை அல்-குர்ஆன், நபி மரபு, மற்றும் அவற்றின் அடியாக உருவாகும் இஜ்மாஃ, கியாஸ் தொடர்பான விவகாரங்கள் என்ற முதலாம் நிலை மூலாதாரங்கள் எனவும், இஜ்திஹாத் மற்றும் மனித வாழ்வியல் விவகாரங்களோடு தொடர்புற்ற இரண்டாம் நிலை மூலாதாரங்கள் எனவும் பிரிக்கின்ற இப்பாகுபாட்டு முறையின் அடிப்படையில், இஸ்லாமிய அறிவியல் கலைகள் அக்காலம் தொட்டே ஷரீஆ சார்ந்த கலைகள் என்றும், ஷரீஆ சாராத கலைகள் என்றும் வெவ்வேறாக கட்டியெழுப்பப்பட்டு வந்துள்ளன.

இந்த வகையில், அல்-குர்ஆனிலிருந்தும் நபி மரபிலிருந்தும் சட்டம் பெறுகின்ற நியாயவியல் ஆய்வுகளை நிலைக்களனாகக் கொண்ட ஷரீஆக் கலைகள் அக்காலத்திலிருந்தே தனியான முத்திரையொன் றைப் பெற்று வந்திருப்பதை நாம் அவதானிக்கலாம். இந்த அடிப் படையில்தான் அல்-குர்ஆன் தொடர்பான கலைகள், நபி மரபு சார்ந்த கலைகள், சட்ட நியாயவியல் கலைகள், இறையியல் கோட்பாடுக் கலைகள், அரபு மொழி சார்ந்த கலைகள் என பல்வேறு பிரிவுகளைக் கொண்ட ஷரீஆக் கலைகளின் தொகுப்பு உருவாகியது.

அரபு மொழி சார்ந்த கலைகள் ஷரீஆ சார்ந்த ஆய்வுகளோடும் கலைகளோடும் ஏன் இறுகப் பிணைந்துள்ளன என்பதும், அறிஞர்கள் அவற்றில் ஏன் கவனம் செலுத்தினர் என்பதும் வெளிப்படையானது. அறபு மொழி சார்ந்த ஆய்வானது அல்-குர்ஆன் மற்றும் அஸ்-ஸுன்னா வசனங்களை ஆய்வு செய்து பொருள் கோடல்கள் செய்வதற்கு மிக அடிப்படையானது என இதனை எளிமையாகக் கூறி விடலாம்.

இஸ்லாமிய சிந்தனா முறையியல் கட்டமைப்பில் நிகழ்ந்த இப் பிரிப்பானது இறையியல் கோட்பாடுக் கலை (இல்முல் அகீதா அல்லது இல்முல் கலாம்) ஷரீஆ ஆய்வுகளின் பட்டியலில் ஏன் இணைக்கப்பட்டது என்பதை தெளிவுபடுத்துகிறது. இல்முல் கலா மின் பேசுபொருள் இஸ்லாமிய அகீதாவாக இருந்தாலும், பின்னர்

அது மதங்கள் மற்றும் பிற கோட்பாடுகள் தொடர்பான ஒப்பீட்டு ஆய்வுகளின் வட்டத்தினுள் நுழைந்து விட்டது. தர்க்கம், கிரேக்க தத்துவ நோக்கு என்பனவும் அதன் வட்டத்தினுள் நுழைந்து கொண்டன. மட்டுமன்றி, வசனங்களின் பொருள்கோடல் ஆய்வுகளிலிருந்தும் அது தூரமாகியது. செயல்வாதத்திலிருந்தும் சமூக-அரசியல் பொறுப்பிலிருந்தும் தூரமாகி, அறிவியல் ஏகாந்தத்தில் வாழ்ந்த ஷரீஆத் துறை அறிஞர்கள் அக்கலையில் தமது கவனத்தைக் குவித்திருந்தனர். இந்நிலையானது ஷரீஆக் கலைகளிலும் ஆய்வுகளிலும் முன்னுரிமை பெறும் நிலைக்கு அக்கலையைக் கொண்டு சென்றதோடு, ஷரீஆத் துறை சார்ந்த அணிகளுக்கு மத்தியிலான முரண்பாட்டுக்கும் சர்ச்சைக்கும் காரணமாகவும் ஆக்கி விட்டது. இதனால் அகீதா கோட்பாடானது உம்மாவின் பலவீனத்துக்கும் சிந்தனைச் சிதைவுக்குமான தளமாக மாறியது. உம்மாவின் கட்டொழுங்கு களதும், விருத்தியடைந்து செல்லும் சமூக-நாகரிகக் கட்டமைப்புக் களதும் அசைவியக்கத்துக்கான வழிகாட்டி என்ற வகிபாத்திரத்தை அக்கோட்பாடு இழந்தது. இதன் விளைவாக, அகீதா சார்ந்த முழு மொத்த வழிகாட்டற் கலைகள் என்ற வட்டத்தை விட்டு சட்ட நியாயவியல் சார்ந்த பகுதி அளவிலான வாழ்வியற் கலைகளின் வட்டம் விலகி வேறாகியது. இரு பகுதிகளும் இணைந்து இஸ்லாமியக் கண்ணோக்கை கட்டமைக்கத் தவறியதால் கோட்பாடு மற்றும் நடைமுறை ஆகிய இரண்டுமே குறைபாட்டுக்கு உட்பட்டன. பின்னர் ஏற்பட்ட மாற்றங்களோடும் சவால்களோடும் இயைந்து செல்ல அவற்றினால் முடியாமல் போனது.

வரைவிலக்கணப்படுத்தலுக்கும் திறனாய்வுக்குமான இவ்விடத்தில் முக்கியமான சில பிரயோகங்கள் பற்றியும், பாரம்பரிய சிந்தனைச் சட்டகத்தில் அவற்றின் பிரதான உள்ளடக்கம் பற்றியும் கவனம் செலுத்துவது பயனுள்ளதாக அமையும். குறித்த சிந்தனையில் எவ்வாறான குறைபாடுகள் நேர்ந்திருக்கின்றன என்பதையும் அவற்றுக்கான காரணங்களையும் கண்டறிந்து பிரச்சினைகளைத் தீர்க்கும் திசையில் பயணிக்க அது நமக்கு உதவும்.

இந்தவகையில், முதல் நிலையான அடிப்படை மூலாதாரங்களாக அல்-குர்ஆனும் நபிவழியும் அமைகின்றன. பாரம்பரியச் சட்டகத்தின்படி இவ்விரு அடிப்படை மூலாதாரங்களையும் கற்பதற்கான தகைமைகளாக அமைபவை வரலாற்று, மொழியியல், கோட்பாட்டுத் தகைமைகளே என்பது இங்கு மிக முக்கியமான அவதானமாகும்.

இந்நிலையில், இஸ்லாமிய அறிவாய்வு என்பது வெறும் கோட்பாட் டாய்வாக மாறி விடுகிறது. இவ்விரு மூலாதாரங்களோடும் கலந்த நடைமுறைப் புரிதலானது (அதாவது, நடைமுறைத் தேவைகள், இயலுமைகள், சவால்கள் என்பவை பற்றிய புரிதலானது) இரண்டாந் தர விவகாரமாகவே இங்கு பார்க்கப்படுகிறது. அதுவும் ஆய்வாளரது உருவாக்கம், வாழ்வமைப்பு என்பவற்றிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

பிற்கால வரலாற்றில் இஸ்லாமிய ஆய்வுகளின் மீது இறுகிய-மொழி சார்ந்த புரிதலும் முறைமையும் ஏன் ஆதிக்கம் பெற்றன என்பதையும், இஜ்திஹாத் செயற்பாடு ஏன் நின்று போனது என்ப தையும் இதிலிருந்து நாம் புரிந்து கொள்கிறோம். மட்டுமன்றி, ஏலவே பல நூற்றாண்டுகளாக இஜ்திஹாத் செயற்பாடு நின்றிருந்த போதி லும், இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் தோன்றிய குறிப்பிட்ட சில ஆளுமைகள் இஜ்திஹாத் செய்யும் ஆற்றலை எவ்வாறு பெற்றிருந் தார்கள் என்பதையும் இதன் மூலம் நாம் புரிந்து கொள்கிறோம். அவர்களது ஆய்வு முறைமையும், சமூக-அரசியல் வாழ்வில் அவர்கள் மேற்கொண்டிருந்த செயல்வாதங்களுமே புதிய அறிவியல் கலை களையும் உம்மாவின் வாழ்வியல் யதார்த்தத்தையும் புரிந்து கொள் ளும் தகுதியை அவர்களுக்களித்தன. வார்த்தைகளை மட்டும் கவ னிக்காமல், விடயவாரியான ஆழ்ந்த பார்வையைச் செலுத்துவதற்கு அவை அவர்களைப் பயிற்றுவித்தன. நபித்தோழர்களதும், ஆரம்ப கால சிரேஷ்ட முஜ்தஹித் அறிஞர்களதும் நிலையை ஒத்ததாக அந் நிலை அமைந்திருந்தது.

அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னா தொடர்பாக பாரம்பரியச் சட்ட கத்தினுள் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இவ்விரு மூலாதாரங்களை யும் ஒன்றோடொன்று கலந்து குழப்பிக் கொண்டிருப்பது அவதானிக் கத்தக்கது. இவை ஒவ்வொன்றினதும் அந்தஸ்து என்ன என்பதிலும், இரண்டுக்கும் இடையிலான உறவு என்ன என்பதிலும் அங்கு ஒரு சர்ச்சை நிலவுகிறது. இந்த ஒவ்வொரு மூலாதாரத்தினதும் தனித்துவ மான வகிபாத்திரம் குறித்த தெளிவான, விடயவாரியான புரிதல் ஒன்றைக் காண்பது அங்கு மிகச் சிரமம். இந்தவகையில்தான், அவை யிரண்டையும் குறித்த நவீன ஆய்வுகளில் கூட 'வரலாற்றுப் பாரம் பரியம்' என்ற கருத்தாக்கமும், 'பிரதி செய்தல்' என்ற சிந்தனையும் ஆதிக்கம் பெற்றன. ஷரீஆவின் அதியுயர் இலக்குகளின் பின்னா லுள்ள ஞானம் மட்டுமன்றி, சட்ட நியாயவியலினதும் இஸ்லாமிய சிந்தனையினதும் அசைவியக்கத் தன்மையும் காணாமல் போயின.

அச்சிந்தனையின் அதிகமான பகுதிகளில் கால-இடப் பரிமாணங் களும் அற்றுப் போயின. முழு மொத்த வஹியிலும், மானிட-பிரபஞ்ச இயல்பிலும் குறித்ததொரு பகுதியளவான வசனம் (Text) பெறுகின்ற இடம் எது என்பதும் தெளிவற்றுப் போனது.

ஆனால், இந்நிலையானது புனித நபிவழியிலும், ஃகிலாபா றாஷிதா ஆட்சியாளர்களதும் நபித்தோழர்களதும் நடைமுறையிலும் நாம் தெளிவாகக் காணும் யதார்த்தத்திற்கு மாற்றமானதாகும்.

இந்த வகையில், புனித நபிமரபு தொடர்பான ஆய்வுகள் முடிவற்ற சிக்கல்கள் கொண்ட ஆய்வுகளாக மாறிப் போயின. புனித ஸுன்னா பதிவு செய்யப்பட்டு பல தசாப்தங்களும் நூற்றாண்டுகளும் கடந்த பிறகும் கூட, அறிவிப்புகள் பற்றியும் அறிவிப்பாளர் வரிசைகள் பற்றியுமான சம்பிரதாயபூர்வமான விவகாரங்களில் மாத்திரமே அவை கவனம் செலுத்தின. இவ்விவகாரங்களும் முக்கியமானவைதான் எனினும், ஸுன்னாவின் அர்த்தங்களோ நோக்கங்களோ மொழி ரீதியான சட்டகத்துக்கு வெளியே ஆய்வு ரீதியான பரிசீலனைகளை உரியளவு பெறாது போய்விட்டன.

'இஜ்மாஃ' என்னும் சான்று குறித்து நாம் கவனித்துப் பார்த்தால், 'உஸூல்' அடிப்படையிலான இஜ்மாஃ என்பதன் மூலம் நாடப் படுவது பெரும்பான்மை அபிப்பிராயத்தின் அடிப்படையிலான இஜ்மாஃ அன்று. மாறாக, எந்த ஒரு அபிப்பிராய பேதத்திற்கோ முரண்பாட்டுக்கோ இடமற்ற முழு மொத்த உடன்பாட்டையே அந்த இஜ்மாஃ குறிக்கிறது. அத்தகைய இஜ்மாஃ உம்மாவின் எந்தவொரு பிரிவுக்கேனும் சாத்தியப்படுதாயின், அது புனித வசனங்களில் குறிப் பிடப்பட்டிருக்கும் அடிப்படையான மார்க்க விவகாரங்களில் மாத் திரமே சாத்தியமானது. ஆயினும் குறித்ததொரு விவகாரத்தில் புனித வசனமே சான்றாக நிற்கும் போது, அங்கு இஜ்மாவுக்கு எந்த அவசியமும் இல்லாது போய் விடுகிறது.

'உஸூல்' அடிப்படையிலான இந்த இஜ்மாவை அதன் பாரம் பரியப் பொருள்கோடலில் அங்கீகரிப்போர் அல்-குர்ஆன் மற்றும் அஸ்-ஸுன்னா தொடர்பான அறிஞர்களும் சிறப்புத் தேர்ச்சியாளர் களும் மட்டுமே. இந்நிலையில் வெறும் கோட்பாட்டு ரீதியான விவகாரமாக மாறும் இந்த இஜ்மாஃ, மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யாத நிலைக்குத் தள்ளப்படுகிறது. மக்களது பகுத்தறிவை விளித் துப் பேசவோ, அவர்களை இயக்கவோ, அவர்களது யதார்த்தத்தைப்

பிரதிபலிக்கவோ, அவர்களது திருப்தியையும் ஆதரவையும் பெறவோ முடியாததாகவும் மாறுகிறது.

இந்நிலையில், சிந்தனா-அறிவியல் தலைமைக்கும், சமூக-அரசியல் தலைமைக்கும் இடையிலான பிரிவினையை அங்கீகரித்து மேலும் கூர்மைப்படுத்தும் யதார்த்தமாகவும் அது மாறுகிறது. இதனால் சமூகம் இன்னும் பலவீனமடைகிறது. இறுதியில், இந்த இரு குழுக்களதும் பின்னிப்பிணைந்த வகிபாகத்தின் மீதும் சட்டபூர்வத் தன்மையின் மீதும் கட்டெழுந்திருக்கின்ற முஸ்லிம் உம்மா என்ற கருத்தாக்கமே நடைமுறையில் அற்றுப்போகும் நிலை உருவாகிறது.

ஆக- 'உஸூல்' அடிப்படையிலான 'இஜ்மாஃ' என்பது முற்று முழுக்க கோட்பாடு சார்ந்ததொரு கருத்தாக்கம் மட்டுமே. யதார்த்தத்தில் அது குறிப்பிடத்தக்க எந்தவொரு அறிவியல் மூலாதாரத்தையும் பிரதிபலிக்கவில்லை. சமூக, அரசியல், மற்றும் இயங்கியல் சார்ந்த இஸ்லாமிய முன்வைப்புக்கான உண்மையான வழியாகவும் அது அமையவில்லை. சமகால இஸ்லாமிய சமூகத்தின் அரசியல், சட்டத் தீர்ப்பு, சட்டவாக்கம் முதலிய எந்த அம்சத்துடனும் அது தொடர்பு படவில்லை. எனவே நாம் கண்டடைய விரும்பும் 'இஜ்மாஃ' வேறு வகையானது. அது இஜ்திஹாதின் மீதும் ஷூறாவின் மீதும் கட்டமைய வேண்டும். உம்மாவிலுள்ள பேரறிஞர்களையும், இஸ்லாமியப் பேணுதல் கொண்ட சமூகத் தலைவர்களையும் பரந்தளவில் உள்வாங்க வேண்டும். அவர்கள் வேறுபட்ட அரசியல், சமூக, அறிவியல் பாத்திரங்களை வகிப்போராக இருக்க முடியும். அந்த இஜ்மாஃ பெரும்பான்மை அபிப்பிராயம் என்ற கருத்தாக்கத்தையே பின்பற்ற வேண்டும். உம்மாவின் பெரும்பான்மை என்பது அதன் உண்மையான தலைமைகள் மூலமாகவே பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. அவர்கள் அனைவரும் ஒரே அபிப்பிராயத்தின் மீது ஒன்றுபட முடியாத போது அவர்களில் பெரும்பான்மையினரது அபிப்பிராயம் அங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இதன் மூலமாக நாம் இரு விடயங்களை தனித்தனியாக வேறுபடுத்தி நோக்குகிறோம். கொடுக்கல்-வாங்கல்கள், நிறுவனங்கள், பொதுக்கொள்கை என்பவை தொடர்பான கோட்பாட்டுப் படிப்பு அல்லது தனிப்பட்ட அபிப்பிராயம் என்பது வேறு; பொது வாழ்வுக்குரிய அரசியல்-சட்டக் கடப்பாடும், அதன் மானசீக, விழுமிய, சமூக, அரசியல் விளைவுகளும் வேறு.

‘கியாஸ்’ (ஒப்பீடு) என்பது நான்காவது அடிப்படை மூலாதாரம் ஆகும். புதிய சில நிகழ்வுகள் தொடர்பாக அல்-குர்ஆன் மற்றும் அஸ்-ஸுன்னா ஆகிய இரண்டிலும் புனித வசனங்கள் ஏதும் இடம் பெற்றுள்ளதா என ஆய்வு செய்வதையே ‘கியாஸ்’ என்ற பிரயோகம் குறிக்கிறது. தூதுத்துவக் காலத்தில் இடம்பெற்ற சில நிகழ்வுகளுக் கும், புதிய நிகழ்வுகளுக்கும் இடையில் பொதுத்தன்மை ஏதும் உள்ளதா என்பதைக் கண்டறிவதே இதன் நோக்கம். அதன் மூலமாக இரு வகை நிகழ்வுகளுக்கும் பொதுவான சட்டத் தீர்ப்பொன்றைக் கண்டறிதல் சாத்தியமாகலாம்.

எனினும், இந்த அடிப்படையானது ஆரோக்கியமான வகையில் நடைமுறைக்கு வர வேண்டுமாயின், சமூகத்தின் முழுமொத்த வடிவ மும் ஸ்திரமாக இருப்பது அடிப்படை நிபந்தனையாகும். அதில் ஏற்படும் எந்த மாற்றமும் பகுதியளவானதாகவும், மிக வரையறுக்கப் பட்டதாகவுமே அமைய வேண்டும். அப்போதுதான் அந்த ஒவ்வொரு வரையறுக்கப்பட்ட நிகழ்வையும் கடந்த காலத்தில் இடம்பெற்ற பகுதியளவான நிகழ்வுகளுடன் மாத்திரம் ஒப்பிட்டு, ஒரு பொதுத் தன்மையையும் பொதுத் தீர்ப்பொன்றையும் பெற்றுக் கொள்ளல் சாத்தியமாகும்.

இரண்டாம் ஃகலீபா உமர் (றழி) அவர்களது ஆட்சிக் காலத்தில் இஸ்லாத்தின் புவியெல்லை விரிவடைந்தது. சமூகங்களும் பல்கிப் பெருகின. அதன் பிறகு பல நூற்றாண்டுகளும் கழிந்து விட்டன. சூழ்நிலைகள், இயலுமைகள், தேவைகள், சவால்கள் முதலிய அனைத்துமே மாறிப்போயின. இந்த எல்லா நிலைகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் வெறும் பகுதியளவிலான மாற்றங்களன்று. பல மாற் றங்கள் மிகப் பரந்த மாற்றங்களாகவும் முழுமையான மாற்றங்களாக வும் அமைந்திருந்தன. எனவே இத்தகைய பல மாற்றங்களையும் நிகழ்வுகளையும் ஆய்வதற்கு பகுதியளவிலான ஒப்பீட்டு முறை இனியும் உகந்ததாகாது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம். அந்தவகையில்தான் நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே ‘உஸூல்’ ரீதியிலான புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருப்பதையும் எம்மால் அவதானிக்க முடிகிறது. ஈராக் பிராந்தியத்திலும் அதற்கு அப்பால் பாரசீக நாடுகளிலும் தோன்றி வளர்ந்த ‘இஸ்திஹ்ஸான்’ என்ற துணை மூலாதாரத்தை இங்கு நாம் விஷேடமாக எடுத்துக் காட்ட முடியும். ஃகிலாபா றாஷிதாவிலும் பின்வந்த காலங்களிலும் ஏற் பட்ட முஸ்லிம் சமூக உருவாக்கம், மற்றும் பாரசீக நிலங்களை

நோக்கி அச்சமூகம் விரிவடைந்தமை என்பவற்றால் ஏற்பட்ட புதிய மாற்றங்களின் விளைவே 'இஸ்திஹ்ஸான்' என்ற துணை மூலாதாரத்தின் தோற்றம் என்பதை (கியாஸ் தொடர்பாக ஏலவே குறிப்பிடப் பட்டவற்றின் ஒளியில்) எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. பாரசீக, ஈராக் பிராந்தியங்கள் பல நாகரிகங்களும் அரசுகளும் தோற்றம் பெற்ற பிராந்தியங்களாக இருந்தது மட்டுமன்றி, 'அப்பாசிய அரசு' எனும் மிகப்பெரிய இஸ்லாமிய ஆட்சியின் தளமாகவும் அமைந்திருந்தமை இங்கு மனங்கொள்ளத்தக்கது. இதனால் அங்கு மிகப் பெரும் குடிசன, சமூக, அரசியல், நாகரிக மாற்றங்கள் ஏற்பட்டு வளர்ச்சி கண்டன. அந்த மாற்றங்கள் ஆரம்ப அரேபிய தீபகற்ப இஸ்லாமிய சமூகத்துக்குப் பரிச்சயமற்ற மாற்றங்கள். ஏலவே 'ஹிஜாஸ்' பிராந்தியத்திலிருந்து ஃகிலாபா றாஷிதாவின் ஆசனம் அகன்றது முதல் அரேபிய தீபகற்பத்தின் அரசியல் வகிபாத்திரம் மறைந்து விட்டிருந்ததும் இங்கு நினைவுகூரத் தக்கது.

'இஸ்திஹ்ஸான்' என்ற சட்ட நியாயவியல் அடிப்படையானது துணைச் சட்ட மூலாதாரங்களின் பட்டியலில் தலையாய இடத்தை வகிக்கிறது. சமூக, சட்டவாக்கப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் புதிய மாற்றங்களை சட்ட நியாயவியல் அறிஞர்கள் -குறிப்பாக பெருநகர்களில்- உணர்ந்திருந்தார்கள் என்பதையும், அவர்களது சிந்திப்பு முறைமையில் அது தாக்கம் செலுத்தியிருந்தது என்பதையும் இந்த துணைச் சட்ட மூலாதாரத்தின் தோற்றம் விளக்குகிறது. நிகழ்வுகளையும் சம்பவங்களையும் ஒப்பீடு செய்வதற்கு பகுதியளவான 'கியாஸ்' முறைமையில் மாத்திரம் தங்கி நிற்க முடியாது. அவ்வாறு தங்கி நிற்பது 'பொதுத்தன்மைகள்' பற்றிய ஊகங்களை ஆய்வாளனிடம் ஏற்படுத்துவதோடு, குறித்த விவகாரத்தில் பல்வேறு கோணங்களை முழுமையாகப் புரிந்து கொள்ளாமலும் தடுத்து விடும். இதனால், முற்றுண்மையைப் பிரதிபலிக்காத சட்ட முடிவுகளுக்கே அவர் வந்து சேர்வார். இப்பின்புலத்திலேயே 'இஸ்திஹ்ஸான்' என்ற கருத்தாக்கத்துக்கான தேவை ஏற்பட்டது. பொதுத்தன்மைகளைக் கண்டறிவதில் தவறு நேரும்போது, பகுதியளவிலான பார்வையைத் தாண்டி, மொத்தமான நோக்குடன், ஷரீஆவின் ஆன்மாவும் உயர் நோக்குகளும் முன்னுரிமை அம்சங்களும் தருகின்ற தீர்ப்பைக் கண்டடைவதற்கு சட்ட நியாயவியல் அறிஞனுக்கு 'இஸ்திஹ்ஸான்' உதவியது.

அதுவரையில் வசனங்களையும், அவற்றின் நேரடிப் பொருள்

கோடல்களையும் மாத்திரம் பற்றிப் பிடித்திருந்த சட்ட அறிஞர்களுக்கு சமூகத்தின் மீதும், அதன் சாதனங்கள், வசதிகள், தேவைகள், என்பவற்றின் மீதும் ஏற்பட்ட வகைமாதிரியான, முழுமொத்த மாற்றங்களது தாக்கத்தினை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை. அந்த வகையில், வசனங்களை நேரடியாகப் பொருள்கோடல் செய்தல் மற்றும் பகுதியளவான நோக்கில் அணுகுதல் என்பவற்றைத் தாண்டி, ஷரீஆவின் ஆன்மா, இலக்குகள், முன்னுரிமைப் பகுதிகள், முழு மொத்த அம்சங்கள் என்பவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. விலைக் கட்டுப்பாடு மற்றும் அது தொடர்பான வசனங்கள் தொடர்பான அவர்களது நிலைப்பாட்டை இதற்கான உதாரணமாக எடுத்துக் காட்ட முடியும். விலைக் கட்டுப்பாடு செய்யலாகாது என நபித்துவ வசனங்கள் தெளிவாகவே அறிவுறுத்தியிருந்தன. புனித வசனங்களை நேரடியாகப் பொருள்கோடல் செய்வதிலும், நபிமரபின் நிகழ்வுகளை பகுதியளவான ஒப்பீடுகளுக்கு உட்படுத்துவதிலும் கவனமாக இருந்த அக்கால அறிஞர்கள், விலைக்கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற மார்க்கத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டனர். அவ்வாறான கட்டுப்பாடொன்று ஏற்படுத்தப்படா விட்டால் அநீதி நிகழக்கூடிய சாத்தியம் காணப்பட்டமையே இத்தீர்ப்பை அவர்கள் ஏற்கக் காரணமாகியது. சமூக-பொருளாதார ஒழுங்கமைப்பின் முழு மொத்தச் சமநிலையை மீள ஏற்படுத்தக் கூடிய முழுமையான அணுகுமுறையொன்று அவர்களிடம் இல்லாதிருந்த நிலையில், விலைக் கட்டுப்பாட்டுத் தீர்ப்பை ஏற்றுக்கொள்வது தவிர வேறுவழி இருக்கவில்லை. சந்தையில் சமநிலை பேணப்படுவதற்கு சந்தையின் அசைவியக்கம் மற்றும் சந்தைப் பொருட்களின் விலைகள் மீதான அரச தலையீடு அவசியம். அதன் மூலமாகவே சமூகம் பொருளாதார அநீதிக்குட்படாது பாதுகாக்கப்படும். பொருட்களை வைத்திருப்போர் தேவையுடையோரைச் சுரண்டும் நிலையும் தடுக்கப்படும்.

## 2) சமூக விஞ்ஞானங்களை குழிதோண்டிப் புதைத்தமை.

இஸ்லாமிய சிந்தனையின் 'உஸூல்' மற்றும் முறைமை பற்றியும், அவற்றின் தோற்றம், வளர்ச்சி பற்றியுமான மேற்குறித்த அவதானங்கள் ஒரு விடயத்தை நமக்குத் தெளிவு படுத்துகின்றன. துணை மூலாதாரங்களானவை வாழ்வையும் யதார்த்த நடைமுறையையும் பற்றிய இஸ்லாமிய நோக்கின் அடிப்படைகளையும் இயங்கு தளங்களையும் பிரதிபலிக்கக் கூடியவை என்பதே அதுவாகும். வாழ்வியல்

யதார்த்தத்தின் மீதான அறிவார்ந்த யத்தனத்தையும், நோக்கையும் பிரதிபலிக்கின்ற இம்மூலாதாரங்களே இஸ்லாமிய சிந்தனை முறைமைக்கும், அறிவு மூலாதாரங்களுக்கும், வஹியோடு இயைந்த வழிகாட்டலுக்குமான இரண்டாவது பிரதான அடிப்படையாக அமைகின்றன என்பது இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும்.

'உஸூல்' சார்ந்த இப்பகுதியே இஜ்திஹாத் மற்றும் பிரயோகத் தளத்தைப் பிரதிநிதித்துவம் செய்த போதிலும், ஒரு கிளையம்சமாக அல்லது இரண்டாந்தர அம்சமாக அதனை வகைப்பாடு செய்தமையானது இஸ்லாமிய அறிவு மற்றும் முறைமை சார் யந்திரத்தில் ஏற்பட்ட கோளாறாகவே அமைந்ததெனலாம். இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட கோளாறு, சமூக-நாகரிகப் பின்னடைவு நபித்துவ -கிலாபா மாதிரிகளிலிருந்து உம்மா தூரமானமை முதலியவற்றுக்கு இட்டுச் சென்ற பிரிசந்தியும் இதுவே.

இதன் பிரத்தியட்ச விளைவாக, மனிதர்கள், பிற படைப்புகள், சமூகவியல் ஒழுங்குகள் என்பவை தொடர்பாக ஒழுங்கமைக்கப்பட்ட அறிவியல் நோக்கைப் பிரதிபலிக்க அக்கிளை 'உஸூல்'களால் முடியாமல் போனது. இஸ்லாமிய சிந்தனைத் தலைமை புறமொதுங்கி இருந்தமையும், சமூக-அரசியல் செயற்பாடுகளில் ஆர்வமற்று இருந்தமையும் கூட இதற்குக் காரணமாய் அமைந்தது. புனித வசனங்கள் தொடர்பான ஆய்வுகள் விருத்தி அடைந்தது போன்று இத்தகைய கிளை மூலாதார ஆய்வுகள் விருத்தியடைய முடியாமலும், இஜ்திஹாதுக்கான அடிப்படை விதிகளாக அவை மாற முடியாமலும் போனது கூட இதனால்தான். இன்றுள்ள சமூக-மானிட அறிவியற் கலைகளை ஒத்த கலைகளை அந்த இஜ்திஹாதின் மீது கட்டியெழுப்ப முடியாது போனதும் இதனால்தான்.

நேர்வழி நின்ற ஆட்சியாளரான உஸ்மான் (றழி) அவர்களது கொலையைத் தொடர்ந்து இஸ்லாமிய தேசத்தில் தோன்றிய 'பெரும் குழப்பம்', உமையா அரசின் தோற்றம், அரசியல் கொந்தளிப்புகள் என்பவற்றின் விளைவாகவே அரசியல் தலைமைக்கும் (அதாவது ஆட்சியாளர்களுக்கும்), இஸ்லாமிய சிந்தனைத் தலைமைக்கும் (அதாவது அறிஞர்களுக்கும்) இடையில் பிரிவினை தோன்றியது. ஆட்சி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விவகாரங்களிலிருந்து இஸ்லாமியத் தலைமை இவ்வாறு புறமொதுக்கப்பட்டதன் விளைவாக, பேணுதல் மிக்க இஸ்லாமியத் தலைமைகளின் அரசியல் ஆற்றலும், சமூகவியல் அனுபவமும் பலவீனமடைந்தன. இதனால்,

இஸ்லாமிய 'உஸூல்' சிந்தனையானது கிளை உஸூல்களையும் விதிகளையும் வளர்த்தெடுத்து விரிவாக்கம் செய்வதிலிருந்து திசை திருப்பப்பட்டது. இஸ்லாமியப் புனித வசனங்கள் தொடர்பான ஆய் வுத்துறை போன்று முறைவழிப்பட்ட அறிவியல் ஒழுங்கில் நிரற் படுத்தப்படுவதிலிருந்தும் அந்த 'உஸூல்' சிந்தனை தடுக்கப்பட்டது.

இஸ்லாமிய சிந்தனை முறைமையிலும், அதன் கலைகளிலும் ஏற்பட்ட மாற்றங்களின் ஒளியில், இஸ்லாமியப் பகுத்தறிவு நோக் கும், இஜ்திஹாத் செல்நெறியும், முன்னெடுப்பும், புத்தாக்கமும் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இஜ்திஹாதுக்குரிய வாயில்கள் உம்மாவின் மிக ஆரம்ப வரலாற்றுக் கட்டத்திலேயே ஏன் மூடப்பட்டன? இயல்பான பகுத் தறிவு சார்ந்த ஆறிவாய்வுகள் இஸ்லாமிய சிந்தனையாளனதும் சட்ட நியாயவியல் அறிஞர்களதும் அறிவுப் பரப்பில் புறக்கணிக்கப்பட்ட விவகாரமாக தங்கி விட்டது ஏன்? ஆய்வுகள் என்பவை சில சட்ட அறிஞர்களது தனிப்பட்ட செயற்பாடுகளாகவும் அனுபவங்களாக வும் மாத்திரம் நின்று விட்டது ஏன்?... என்பவை போன்ற கேள்வி களுக்கான விடைகளையும் இதன் மூலம் நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அறிஞர் பெருமக்களது தனிப்பட்ட முயற்சிகளும் வாழ் வியல் அனுபவங்களும் இஸ்லாமிய சிந்தனையைச் செழுமைப் படுத்துவதில் பங்களிப்புச் செலுத்தி உள்ளன என்பதில் ஐயமில்லை. தாம் கண்டடைந்த உண்மைகள் குறித்தும் இயல்புகள் குறித்தும் கலந்துரையாடல்கள் மூலமாகவும் அறிவார்ந்த நோக்கினூடாகவும் இப்பணியை அவர்கள் செய்துள்ளனர். ஆயினும், அவர்களது இம் முயற்சிகள் இஸ்லாத்தின் புனித வசனங்கள் மற்றும் அதியுயர் நோக்கங்கள் என்பவற்றின் ஒளியில் 'ஃபித்றா' விவகாரங்கள் தொடர் பாக மேற்கொள்ளப்பட்ட அறிவியல் முறைமையிலான திட்டமாக அமைந்தவை அல்ல.

இந்த வகையில்தான், இஸ்லாமிய சிந்தனையில் -அதிலும் குறிப் பாக இஸ்லாமிய சட்டவியலில்- இஸ்லாமிய சமூகவியற் கருத் தாக்கங்கள் கலந்து காணப்பட்ட போதிலும், இஸ்லாமிய சமூகவியற் கலைகள் என்று கருதத்தக்க எதுவும் தனியாக முன்வைக்கப் பட வில்லை. இஸ்லாமிய சிந்தனையைப் பிரதிநிதித்துவப் படுத்தியோர் சமூக முன்னேற்றச் செயற்பாட்டிலிருந்து ஒதுங்கி நின்றமையே இதற்கு காரணமாகும். உம்மாவின் வாழ்வமைப்பையும், அதன் சமூக நிறுவனங்களையும் திசைப்படுத்தி, அதன் இயலுமைகளுக்கும்

தேவைகளுக்கும் சவால்களுக்கும் அவசியமான நாகரிகப் பதிலீடு களையும் தீர்வுகளையும் வழங்கக்கூடிய கோட்பாட்டாக்கக் கடி வாளத்தை அவர்கள் கையில் எடுக்காமல் போனது இந்நிலைக்கு வழிவகுத்து விட்டது.

பொது ஒழுங்கு, பொது நிறுவனங்கள், ஆட்சி மற்றும் அரசியல் விவகாரங்கள் என்பவற்றை வினைத்திறனுடன் கையாளக்கூடிய இஸ்லாமிய சிந்தனா, சட்ட ஆய்வுகளை நியாயவியல் நூல்களில் காண முடியாது போனது. இஸ்லாமிய சிந்தனை பயணித்து வந்த பாதை மற்றும் அதன் முறைமை பற்றிய அறிவின் ஒளியில் அதற்கான காரணங்களை நாம் இன்று புரிந்து கொள்ள முடிகிறது. உண்மையில் இத்தகைய விவகாரங்கள் மிகச் சில துறைசார் நூல்களுக்கு உரியன வாகவே விடப்பட்டுள்ளன. அந்த நூல்களும் கூட பெரும்பாலும் விவரிப்புப் பாங்கும் மேலோட்டமான தன்மையும் கொண்டவை. எனவே அவற்றின் தாக்கம் மிகப் பலவீனமானது.

அரசியல் தலைமைக்கும் இஸ்லாமிய சிந்தனைத் தலைமைக்கும் இடையில் ஏற்பட்ட பிளவினால் உருவாகிய இச்சட்டகமானது, இஸ்லாமிய சிந்தனையின் முறைமையிலும் அது ஆர்வம் காட்டும் விவகாரங்களிலும் மட்டுமன்றி, இஸ்லாமிய அறிவியல் கலைகள் மற்றும் அவற்றின் செல்நெறிகள் என்பவற்றிலும் பிரதிபலித்தது. இறுதியில் அது வெறும் விளக்கவுரைகளில் மூழ்கிப் போகவும், பதவியல் ஆய்வுகளைக் கொண்டாடவும் காரணமாகியது. புனித வசனங்களின் கட்டுக்கோப்பை உறுதிப்படுத்தி, அத்தியாயங்களாகப் பிரித்து, பத விளக்கம் வழங்குவதற்கு அவசியமான மொழி மற்றும் இலக்கியக் கலைகளில் அதிக ஈடுபாடு காட்டும் நிலையாக அது அமைந்திருந்தது.

இப்பிரிவினையும், அதன் விளைவான சிந்தனா முறைமையும் உம்மாவின் சமூக வாழ்வை இரு பிரிவுகளாகவும், இரு விசுவாச நிலைகளாகவும் கூறுபடுத்தின. ஒன்று, தனிநபர் சம்பந்தப்பட்டது; மற்றையது, பொதுவானது. முஸ்லிம் சிந்தனையாளர்களும் அறிஞர் களும் தனிநபர் சம்பந்தப்பட்ட பகுதி குறித்தே அதிகம் கவனம் செலுத்தினர்.

அவர்களது நூல்களுள் அநேகமானவை தனிநபர் சம்பந்தப்பட்ட விவகாரங்களையும் வணக்கங்களையும் கொடுக்கல்-வாங்கல்களை யும் பற்றியே குறிப்பாகப் பேசின. இஸ்லாமிய தனியாள் விவகாரம்

தொடர்பான இப்பகுதியே அறிஞர்களுக்கும் உம்மாவிலுள்ள தனி மனிதர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட தொடர்பாகவும் மாறி யிருந்தது. அந்தவகையில், தனிநபர்கள் தமது விவகாரங்களை நடாத்திச் செல்வது தொடர்பில் அறிஞர்களது அபிப்பிராயங்களையும் சட்டத் தீர்ப்புகளையும் பெற்று வந்தனர்.

அதேவேளை, அரச அதிகாரம், பொது நிறுவனங்கள், ஆட்சி விவ காரங்கள், அவற்றில் இயங்கு தளங்கள் முதலியவை தொடர்பான பொதுப் பகுதியைப் பொறுத்த வரை, அதில் ஆட்சியாளர்களும் பல சாலிகளும் அதிகாரம் படைத்த தலைவர்களுமே தனியாதிக்கம் செலுத்தினர். முஸ்லிம் அறிஞர்களும் சிந்தனையாளர்களும் இப் பகுதியைப் புறக்கணித்தே இருந்தனர். மட்டுமன்றி, இவ்விவகாரங் களின் கடிவாளத்தைக் கையகப்படுத்தி வைத்திருந்த ஆட்சியாளர் களையும் அரசியல் குழுக்களையும் பற்றிய அவர்களது நோக்கும், உம்மாவின் பொது உளவியலும் ஐயம், அவநம்பிக்கை என்பன கலந்தவையாகவே அமைந்திருந்தன. அதிகாரத்தைக் கையகப்படுத்தி வைத்திருந்தோர் சட்டபூர்வமான உரிமை அற்றவர்கள் என்ற பார் வையே பொதுவாக அவர்களிடம் இருந்தது.

அறிஞர்களும், இஸ்லாமிய சிந்தனையைச் சுமந்த மாந்தர்களும் கட்டுண்டு கிடந்த இத்தகைய சிந்தனா-உளவியல் சூழமைவானது, பொதுவான அரசியல்-சமூக விவகாரங்கள் பற்றிய அறிவார்ந்த நோக்குப் பலவீனமடைய வழி வகுத்தது. பொதுக் கொள்கைகளதும் நிறுவனங்களதும் பின்னடைவுக்கும் காரணமாகியது. இத்தகைய நிறுவனங்களைத் திசைப்படுத்தி, அவற்றின் இலக்குகளைப் பாது காத்து, சீர்கேட்டிலிருந்தும் அழிவிலிருந்தும் அவற்றை காப்பாற்றத் தேவையான பலம் குன்றிப் போகவும் அது வழிகோலியது. இதனால், உம்மா, சமூகம், தேசம் என்பவை பற்றிய புரிதலும், அந்நிறுவனங்கள் எவ்வளவு முக்கியமானவை என்ற புரிதலும், அவற்றின் சட்டபூர்வத் தன்மை பற்றிய புரிதலும் உம்மாவிடம் பலவீனமுற்றது. அவை திசை விலகி வீழ்ச்சியடைந்து விடாமல் தடுக்கக் கூடிய ஆற்றல்களும் உம்மாவின் உளவியலில் தோல்வி கண்டன.

இவ்வாறு, அரசியல் தலைமையின் இஸ்லாமியப் பலவீனம், பரிபூரண கல்வித் திட்டமின்மை, பொது நிறுவனங்களிலும் பொது வான சமூக உணர்விலும் ஏற்பட்ட பலவீனம் என்பவற்றின் விளை வாக உம்மா பலவீனமடைந்தது. அதன் கட்டமைப்பும் பலவீன மடைந்தது. அதிகாரம், பொதுச் சட்டம், பொது நிறுவனங்கள்

என்பவற்றின் வகிபாத்திரமும் பலவீனமடைந்தது. உம்மாவானது பிரிவுகளாகவும், கோத்திரங்களாகவும், குட்டித் தேசங்களாகவும், குழுக்களாகவும், தனிநபர்களாகவும் சிதறி நலிவுற்றது. பிரிந்து நின்று மோதிக் கொண்ட கும்பல்களை மார்க்கமோ மனசாட்சியோ பொது நலனோ தடுக்கக் கூடிய நிலை இருக்கவில்லை.

அவர்களிடம் ஒற்றுமை ஏற்படவில்லை. எந்த இழப்பும் அவர் களைத் தடுத்து நிறுத்தவில்லை. எந்தச் சோதனையிலும் அவர்கள் விழித்துக் கொள்ளவும் இல்லை. முஸ்லிம் சமூகங்களின் இருப்பி லும் மனசாட்சியிலும் செயற்பாட்டிலும் உம்மா என்ற கருத்தாக்கத் தைப் பிரதி விம்பப்படுத்தக்கூடிய கூட்டுக் கட்டமைப்போ உணர்வு நிலையோ இல்லாது போனது. உம்மா என்ற வகையில் அதனைக் கரம்பற்றி அழைத்துச் செல்லக்கூடிய நம்பத்தகுந்த நிறுவனங்களோ தலைமைகளோ கூட இல்லாது போயின. அப்படி இருந்திருந்தால் அவை உம்மாவின் அணிகளை ஒழுங்குபடுத்தி, அதன் சமூக-நாகரிகப் பயணத்தை திசைப்படுத்தியிருக்கும்.

உம்மாவின் பயணத்தில் ஏற்பட்ட இப்பிறழ்வின் விளைவாக அதன் தனிநபர்களையும் தலைமுறைகளையும் உருவாக்குவதற்கான இஸ்லாமிய சிந்தனையினதும் கல்வியினதும் உள்ளடக்கமானது பயங் கரவாதத்திற்கும் பயமுறுத்தலுக்கும் பணிய வைத்தலுக்குமான உள் ளடக்கமாக மாறிப் போனது. உம்மாவின் பெரும்பாலான சமூக-சிந்தனா-அரசியல் தலைமைகள், தெரிந்தோ தெரியாமலோ, பல்வேறு வடிவங்களில் இச்சிந்தனையை நோக்கியே ஆர்வமூட்டவும் அழைக்க வும் செயற்படவும் முற்பட்டன.

## ‘அக்ல்’, ‘நக்ல்’ என்பவற்றுக்கிடையிலான மோதலும் பாதகங்களும்:

‘வஹி’க்கும் பகுத்தறிவுக்கும் இடையில் சிருஷ்டிக்கப்பட்ட கற் பனையான முரண்பாடே அரசியல் தலைமைக்கும் அறிவியல் தலை மைக்கும் இடையில் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பிளவும் மோதலுமாகும். இம்மோதலின் விளைவாக மற்றோர் ஆபத்தான பிரிவினையும் தோன்றியது. சட்ட நியாயவியல் சார்ந்த அறிவியற் கலைகள் ‘இல்முல் கலாம்’ என்னும் இறையியற் கலை யிலிருந்து (அதாவது ‘அகீதா’ சார்ந்த கலையிலிருந்து) பிரிந்தமையே அந்த ஆபத்தான பிரிவினையாகும். இறையியற் கலைக்கும் சட்ட நியாயவியற் கலைக்கும் இடையில் ஏற்பட்ட இம்முரண்பாடு

வெறுமனே வடிவம் சார்ந்த அல்லது துறை சார்ந்த அல்லது கல்விப் புலம் சார்ந்த முரண்பாடு மட்டுமன்று. மாற்றமாக, அது அபாயகர மானதொரு சிந்தனா முரண்பாடு. சன்மார்க்கம், அதன் கருத்தாக்கங் கள், உயர் இலக்குகள் என்பவற்றுக்கும், சமூக வாழ்வு, அதன் நிறுவனங்கள் என்பவற்றுக்கும் இடையிலான உறவின் மீது பல தாக்கங்களை அது உண்டு பண்ணியது.

இதனால் (சித்தாந்த ரீதியான) அகீதாக் கோட்பாடானது இஸ்லா மியப் பகுத்தறிவின் இயல்புக்கு அப்பாற்பட்ட மறைவான விவ காரங்கள் தொடர்பிலான தத்துவார்த்த-கோட்பாட்டுத் தர்க்கத்தில் மூழ்கிப் போனதுடன், இஸ்லாமிய சிந்தனையை பிரமைகளுள்ளும் தள்ளி விட்டது. அப்பிரமைகள் முஸ்லிம் பகுத்தறிவின் ஆற்றல்களை மழுங்கடித்ததுடன், இஸ்லாமிய நோக்கையும் விகாரப்படுத்தின. கட்புலனாகின்ற மற்றும் கட்புலனாகாத விவகாரங்கள் தொடர்பிலும், வஹி, பகுத்தறிவு, இறை விசுவாசம், இறைவனிடம் பொறுப்புச் சாட்டுதல், காரண-காரியத் தொடர்பு முதலியவை தொடர்பிலும் இஸ்லாமிய உளவியலைக் கட்டமைப்பதில் இவை எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தின. விதியும் முன்னளப்பும் (கழா-கத்ர்), அல்லாஹ்வின் பெயர்களும் பண்புகளும் (அல்-அஸ்மாஉ வஸ்-ஸிபாத்) முதலியவை தொடர்பான விவகாரங்கள் மற்றும் அவற்றின் தொடராக வந்த யூகங்கள், கற்பனைகள், வாத-விவாதங்கள் உள் ளிட்ட மலட்டுத்தனமான நீண்ட பட்டியலும் இவ்வகையானதே. உம்மாவுக்கோ அதன் சிந்தனைக்கோ உளவியல் கட்டமைப்புக்கோ நம்பிக்கைக் கோட்பாட்டுக்கோ இவற்றினால் அனேகமாக எந்த நன்மையும் விளையவில்லை.

விளைவாக, இஸ்லாமிய சட்டவியலும் சிந்தனையும் அகீதா ரீதியாக தமது கோட்பாட்டுத் தளத்தை இழந்தன. நம்பிக்கை சார்ந்த அடிப்படைகளையும் நோக்கங்களையும் முழு மொத்த அம்சங்களை யும் பிரதிநிதித்துவம் செய்பவை அகீதா ரீதியான இக்கோட்பாட்டுத் தளம்தான். அது இல்லாமல் முஸ்லிம் பகுத்தறிவினாலோ சிந்தனை யினாலோ சமூகக் கட்டமைப்பினாலோ இஜ்திஹாத் அடிப்படையில் தனது பயணத்தை முன்னேற்றகரமாகத் தொடர முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், முஸ்லிம் சிந்தனை வெறும் பகுதியளவான அறி வியலினதும் விபரிப்பு முறைமையினதும் கைதியாக மாறிப் போனது. பல்வேறு உயிர்கள் படைப்புகள், சூழமைவுகள், அவற்றில் கால-

இடத் தேவைகள், இயலுமைகள் என்பவற்றின் யதார்த்தத்தையும் மாற்றங்களையும் புரிந்து கொள்ளவோ விருத்தியடையவோ அதனால் முடியவில்லை.

அறிவியல் தலைமைக்கும் அரசியல் தலைமைக்கும் இடையிலான மேற்குறித்த பிரிவினையைப் பிரதிபலிக்கின்ற -பாரம்பரிய முறைமையியல் சார்ந்த- விவகாரங்களுள் ஒன்றுதான் அல்-குர்ஆனிலும் அஸ்-ஸுன்னாவிலும் உள்ள வசனங்கள் மாற்றத்துக்கு உட்படுதல் (நஸ்ஃக்) தொடர்பான பிரச்சினையாகும். இன்றுவரை தீர்க்கப்படாத, பலருக்கும் தெளிவற்ற விவகாரங்களுள் ஒன்றாக இது உள்ளது. (நஸ்ஃக்) என்ற கருத்தாக்கத்தில், காலத்தால் பிந்திய வசனம் தொடர்பான சட்டங்களும் வழிகாட்டல்களும் உறுதிப்படுத்தப்பட்டு, காலத்தால் முந்திய கருத்தாக்கங்களும் சட்டங்களும் ரத்துச் செய்யப்படும் நிலையே பரவலான நிலைப்பாடாக உள்ளது. இந்நிலைப்பாடானது முன்னைய சட்டங்கள் விதிக்கப்பட்ட சூழமைவைக் கவனத்தில் கொள்வதோ, அது தொடர்பாக உரிய பகுப்பாய்வை மேற்கொள்வதோ கிடையாது. அந்த வகையில், இஸ்லாமிய ஷரீஆவில் பின்பற்றப்பட்ட 'நஸ்ஃக்' நிலைப்பாடானது உலக சட்டங்களில் இடம்பெறும் சட்ட மாற்றுச் செயற்பாட்டுக்கு நெருக்கமாக அமைந்தது. அதாவது, முன்னைய சட்டமும் பின்னைய சட்டமும் தோன்றிய நிலைமைகளும் சூழமைவுகளும் வேறுபட்டிருக்கும் நிலையிலும், பின்னைய சட்டம் முன்னைய சட்டமொன்றை ரத்துச் செய்வதை இது குறிக்கிறது. இப்புரிதலின் படி, பொதுவாக மதீனத்து சமூகமும் அதன் அரசும் மக்கா வெற்றிக்குப் பிறகு, தூதுத்துவ வாழ்வின் இறுதிக் கட்டத்தில் கொண்டிருந்த ஷரீஆ சட்டங்களையும் சமூக ஒழுங்குகளையும் இஸ்லாமிய நடைமுறைகளையும் மாத்திரம் பின்பற்றிச் செயற்படும் நிலை உருவாகியது. மதீனத்து சமூகத்தின் அந்த இறுதி வடிவத்தில் சமூக-அரசியல் அடிப்படைகள் ஸ்திரமடைந்திருந்தன. திடமான ஒழுங்குகளைக் கொண்ட பலமானதோர் அரசு அனைத்துக் கோத்திரங்களின் மீதும், முழு அரேபியத் தீபகற்பத்தின் மீதும் செல்வாக்குச் பெற்றிருந்தது. இதனையே நாம் 'இரண்டாவது மதீனாக் காலம்' என அழைக்கிறோம். இக்காலப்பிரிவு 'முதலாவது மதீனாக் காலம்' என்ற கட்டத்திலிருந்து வேறுபட்டது. ஏனெனில் 'முதலாவது மதீனாக் காலம்' அச்சமும் பலவீனமும் நிலவிய காலமாகும். முஸ்லிம்கள் அப்போது எண்ணிக்கையிலும் குறைவாக இருந்தனர். சமூகமும் தேசமும் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டி

ருந்தன. பலமான பல எதிரிகளுடன் போராட்டங்களும் நிகழ்ந்து கொண்டிருந்தன.

இந்த வகையில், நபித்துவக் காலத்தை மூன்று பிரிவுகளாக அல்லது மூன்று கட்டங்களாக நாம் நோக்குகிறோம். முதலாவது, மக்காக் காலம். ஆரம்ப உருவாக்கக் கட்டத்தை இது குறிக்கிறது. இஸ்லாத்தை நோக்கிய அழைப்பு, எத்தி வைப்பு. தனிநபர் முன்னெடுப்பு என்பன இக்கட்டத்தில் இடம்பெற்றன. அன்றைய சமூகத்தில் நிலவிய பிழையான ஒழுங்குகள், நம்பிக்கைகள், சமூக நடைமுறைகள் என்பவற்றை மாற்றியமைக்கும் வகையிலான விமர்சனமும் அறிவூட்டலும் தீர்வுகளும் பதிலீடுகளும் முன்வைக்கப்படும் கட்டமாக இது அமைந்திருந்தது.

அல்-குர்ஆனிய, தூதுத்துவப் பயணமானது பல்வேறு நிலைமைகளையும் சூழமைவுகளையும் கையாளத்தக்க வகையிலான செயற்பாடுகளையும் நடைமுறைகளையும் கையாண்டிருந்ததை முழுமொத்த நோக்கொன்றினூடாக எவரும் புரிந்து கொள்ள முடியும். ஒரே மூலாதாரத்திலிருந்து பிறந்த பெறுமானங்களும் கொள்கைகளுமே அச்செயற்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் அடிப்படையாக இருந்திருப்பதையும் அத்தகைய முழு மொத்தப் பார்வையால் புரிந்து கொள்ள முடியும்.

அந்தவகையில், மக்காக் காலமானது புதிய அகீதா மற்றும் நாகரிகம் சார்ந்த இலக்குகளை நோக்கிய உழைப்பு, அழைப்பு, சீர்திருத்தம் என்பவற்றைக் கொண்ட கட்டமாக அமைந்திருந்தது. அழைப்பு, கலந்துரையாடல், மிக முக்கியமானவை, மிகப் பொதுவானவை, மிகப் பரந்தவை என்பவற்றைப் பேணும் கட்டமாகவும் அது இருந்தது. உண்மையில் அது சமூகம் சார்ந்த கொள்கை விவகாரம். சமூகத்தை மீளொழுங்கு செய்யும் கட்டம். எனவே, அடிப்படையான விவகாரத்தை நோக்கியதாகவே அது அமைந்திருக்கும். கொள்கை சார் அணுகுமுறையே அங்கு பின்பற்றப்படும்.

அந்த வகையில்தான், தன்னைப் பின்பற்றியோர் எவ்வளவு துன்பத்திற்கும் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்ட போதிலும், இறைத் தூதர் (ஸல்) அகிம்சை என்ற கொள்கையில் தயக்கமின்றி நிலைத்திருந்தார்கள். மாற்றத்தையும் சீர்திருத்தத்தையும் ஏற்படுத்துதல் என்ற அடிப்படையான பணியிலிருந்து பிசகி விடாதிருப்பதிலேயே அவர்கள் கவனம் செலுத்தினார்கள். இப்பணி உண்மையில் ஒரு

பொதுவான கொள்கை சார் விவகாரமாகும். ஒரு கொள்கைவாதி கொள்கை சார் வழிமுறைகளினூடாகவே மாற்றத்தை ஏற்படுத்த முயல்வார் என்ற வகையில், பலப்பிரயோகத்திற்கோ வன்முறைக்கோ அங்கு இடமிருக்காது. வெறுப்பூட்டல், சிக்கல்களை ஏற்படுத்தல், விலாவாரியாக விளக்கமளித்தல் முதலிய எதுவுமற்ற கவனக் குவிப் பும் நளினமுமே அங்கிருக்கும்.

'முதலாவது மதீனாக் காலம்' என்பதன் மூலம் நாடப்படுவது ஹுதைபியா உடன்படிக்கைக்கு முற்பட்ட காலப் பகுதியாகும். முஸ்லிம்கள் தமது தேச அரசை உருவாக்கிய காலமாகவும், அறபு, யூதக் கோத்திரங்கள் அவர்களை எதிர்த்த காலமாகவும், தமக்குள் கூட்டணிகளை அமைத்து முஸ்லிம்களுக்கெதிராக தாக்குதல்களை யும் சூழ்ச்சிகளையும் மேற்கொண்ட காலமாகவும் இது அமைந்தி ருந்தது. முஸ்லிம் சமூகம் அதிகபட்ச கட்டுக்கோப்பையும் தியாகத் தையும் கைக்கொண்டமை இக்காலப் பிரிவின் சிறப்பம்சமாகும். அவ்வாறே, எதிரிகளின் கோட்டைகளைத் தகர்த்து, அத்துமீறலுக்குப் பதிலடி கொடுத்து, அவர்களை அச்சமடையச் செய்வதில் அதியுச்ச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காலமாகவும் இது இருந்தது.

'இரண்டாவது மதீனாக் காலம்' என்பது ஹுதைபியாவுக்குப் பிற் பட்ட காலமாகும். இக்காலப் பிரிவில் முஸ்லிம் சமூகமும் அரசும் ஸ்திரமடைந்து, வெற்றியும் பலமும் பெற்றிருந்தன. எதிரிகளுடனான உறவில் மிகப் பலமான தரப்பாக முஸ்லிம்களே இக்காலப் பிரிவில் இருந்தனர். இதன்போது, ஒரு புறத்தில் சமூக ஒழுங்கமைப்புகள் முழுமைப்படுத்தப்பட்டு, சமூகம் சீராகப் பயணிக்கவும், அதன் கட்டமைப்பும் ஆளுமையும் பாதுகாக்கப்படவும் அவசியமான நியமங்கள் உறுதி செய்யப்பட்டன. மறுபுறத்தில், பகைவர்களோடும் சுற்றி வாழ்பவர்களோடும் முஸ்லிம் அரசும் சமூகமும் மிகுந்த மனக் கட்டுப்பாட்டுடனும் நளினமாகவும் நடந்து கொண்டன. இது உள்ளங்களை ஒன்றுபடுத்தவும், ஸ்திரத்தன்மை, உழைப்பு, பரஸ்பர உதவி என்பவற்றை ஏற்படுத்தவும் வாய்ப்பளித்தது.

இங்கு அறிவார்ந்த அணுகுமுறையும், சட்டவாக்கத் தரமும் (அவை ஒரே இயல்பிலான நோக்கையும் இலட்சியங்களையும் கொண்டவையாயினும்) குறித்த கட்டத்தின் யதார்த்ததுக்கும் சூழ் நிலைக்கும் உகந்த கொள்கைகளையும் நடைமுறைகளையும் பிரதி பலித்திருப்பதைக் காண்கிறோம். அவ்வாறே, இந்த அணுகுமுறை யும் சட்டவாக்க விதமும் குறிப்பிட்ட இக்கட்டத்தின் மீது தாக்கம்

செலுத்தி, திசைப்படுத்தி, தேவையான விளைவுகளைக் கண்டடையும் நோக்கத்தைக் கொண்டிருந்ததையும் அவதானிக்கிறோம்.

ஆக - வித்தியாசமான இக்கட்டங்களின் இயல்புகளையும் வேறுபாடுகளையும் இயங்கு தளங்களையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் மேற்கொள்ளப்படும் எந்தச் செயற்பாடும் அல்லது சட்டவாக்கமும் உம்மாவின் சிந்தனைக்குப் பாதகமாகவே அமையும். மட்டுமன்றி, அது உம்மாவின் பயணத்தைத் தடுத்து, இஸ்லாத்தின் வழிகாட்டல்களை வெறும் கோட்பாட்டுத் தளைகளாக மாற்றி விடும். இக்கோட்பாட்டுத் தளைகளால் யதார்த்தத்தையோ, அதன் மீது தாக்கம் செலுத்தும் காரணிகளையோ, ஒவ்வொரு கட்டத்திற்கும் பொருத்தமான கொள்கைகளையோ, இயங்கியல் மூலோபாயங்களையோ புரிந்து கொள்ள முடியாது.

முன்னயதை பின்னையது ரத்துச் செய்தல் என்ற சட்ட-கல்வியியல் பாணியிலான 'நஸ்ஃக்' கருத்தாக்கமானது தற்காலத்தின் பாராளுமன்றங்களாலும் அவை போன்ற நிறுவனங்களாலும் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கே நடைமுறைச் சாத்தியமானதாகும். அந்நிறுவனங்கள் தமக்குக் கட்டுப்பட்டிருக்கும் சமூகங்களை நிர்வகிப்பது தொடர்பான தமது தீர்மானங்களை நியாயப்படுத்தவே இவ்வாறான சட்டங்களை வெளியிடுகின்றன. அந்த வகையில், குறித்ததொரு விடயம் தொடர்பாக பின்னர் வெளியிடப்படும் சட்டமொன்று முன்னர் வெளியிடப்பட்ட சட்டமொன்றின் நடைமுறையை வறிதாக்கி விடும். ஆனால் அது வஹியினதும் தூதரினதும் வழிகாட்டல் என்ற விவகாரத்திலிருந்து வேறுபட்டதாகும். ஏனெனில் வஹியின் வழிகாட்டல் என்பது பூமி முழுவதிலும் தோன்றுகின்ற எல்லாத் தலைமுறைகளுக்கும் எல்லாக் காலங்களிலும் மனித இனத்தின் பயணத்தைத் திசைப்படுத்தும் ஏற்பாடாகும்.

வழக்கிலுள்ள பாரம்பரியப் புரிதலின் படியான 'நஸ்ஃக்' என்பது இஸ்லாமிய சிந்தனை முறைமையில் அசைவியக்கமற்ற கருத்தாக்கமொன்றையே பிரதிபலிக்கிறது. இப்புரிதலானது புனித அல்-குர்ஆனின் பொதுவான முழு மொத்த இயல்புக்கும், அதன் விளக்கமாகவும் நடைமுறையாகவும் அமைந்த தூய ஸுன்னாவின் இயல்புக்கும் இடையிலான வேறுபாட்டைக் கவனிப்பதில்லை. மட்டுமன்றி, வசனங்களைப் புரிந்து கொள்வதிலும், அவற்றில் நாடப்படும் அர்த்தங்களைப் புரிந்து கொள்வதிலும், நடைமுறைப் படுத்துவதிலும் கால-இட பரிமாணங்கள் பற்றிய மிகப் பலவீனமான அறிவையே

இத்தகைய புரிதல் பிரதிபலிக்கிறது. அல்-குர்ஆன் வசனங்கள் இறங்கிய பின்னணிக் காரணங்கள் பற்றிய அதன் மிகக் குறைந்த கவனயீர்ப்பு இவ்வுண்மையை உறுதிப்படுத்துகிறது. வசனங்கள் இறக்கப்பட்டமைக்கான பின்னணிக் காரணங்களை ஆராய்ந்து விளக் கும் நூல்கள் மிகக் குறைவாகவே எழுதப்பட்டுள்ளன. நபி (ஸல்) அவர்களது சொல் மற்றும் செயல்களுடன் தொடர்பான சூழமைவுக் காரணங்களையும், அவற்றின் கால ஒழுங்கையும் பொறுத்த வரை யிலோ, அவை பற்றிய அறிவும் அக்கறையும் எழுத்தும் இன்னும் குறைவாகவும் அரிதாகவுமே உள்ளன.

முறைவழிப்பட்ட 'உஸூல்' ஆய்வுகளின் சட்டகத்தினுள் நிலவு கின்ற 'நஸ்ஃக்' பற்றிய இப்பாரம்பரியப் புரிதலானது (அதாவது, மனிதர்கள் இயற்றும் சட்டங்களில் பின்பற்றப்படுவது போன்ற 'முரண்படுதலும் ரத்துச் செய்தலும்' என்ற அர்த்தத்திலான புரிதலா னது), தனது காலத்தையும் இடத்தையும் நிலைக்களனாகக் கொண்டு, சட்டங்களையும் கொள்கைகளையும் தீர்வுகளையும் தேடி தூதுத் துவக் காலத்தை நோக்கிச் செல்லும் ஆய்வாளனதும் சிந்தனையாள னதும் தலைவனதும் உணர்வோட்டத்துடன் மோதும் புரிதலாகவே அமைந்திருக்கிறது. ஏனெனில், அவனைச் சூழ்ந்துள்ள புதிய நிலை மைகளும், தேவைகளும், சவால்களும், அவற்றில் முன்னுரிமை பெறும் அம்சங்களும் நபித்துவக் காலத்திலிருந்த நிலைமைகளிலி ருந்து பல வகைகளில் வேறுபட்டவை. சூழ்நிலைகளும் தேவை களும் -மொத்தமான நபித்துவக் காலத்துடன் சிற்சில அம்சங்களில் ஒத்த தன்மையைக் கொண்டிருந்தாலும்- பல அம்சங்களில் அவை வேறுபாடானவை. மொத்தமான நபித்துவ காலத்திலிருந்தும், அதன் கட்டங்களிலிருந்தும், சூழ்நிலைகளிலிருந்தும் ஒவ்வொரு நிகழ்வாக அல்லது சூழ்நிலையாக தனித்தனியாக எடுத்து நோக்கினால் இவ் வேறுபாடு மிகத் தெளிவாகத் தெரிந்து விடும்.

'நஸ்ஃக்' பற்றிய இப்பாரம்பரியப் புரிதலானது வஹியினதும் தூதினதும் பல அடிப்படையான கொள்கைகளை ரத்துத் செய்யும் நிலைக்குச் சென்றிருப்பதை முஸ்லிம் ஆய்வாளனால் இன்று அவ தானிக்க முடிகிறது. இறுதியாக இறங்கிய வசனங்களோடும், இரண் டாவது மதீனாக் காலத்தில் இறைத்தூதர் (ஸல்) மேற்கொண்ட செயற்பாடுகளோடும், அப்போதிருந்த முஸ்லிம்களின் தேவைகளோ டும் இஸ்லாமியத் தூதின் துறைகளையும் பரிமாணங்களையும் இப்பாரம்பரியப் புரிதல் சுருக்கி விட்டது. 'நஸ்ஃக்' பற்றிய புரிதலின்

எதிர்மறையான விளைவுகளுள் ஒன்றாக, முஸ்லிம்களுக்கும் முஸ் லிம் அல்லாதவர்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய விவகா ரத்தையும், அதன் தொடராகத் தோன்றிய அழைப்பு மற்றும் சர்வதேச நாகரிகத் தொடர்புகள் பற்றிய கருத்தாக்கங்களையும் குறிப்பிடலாம். மக்காக் காலத்துக்கும் மதீனாக் காலத்துக்கும் இடையிலான தொடர் பில் 'நஸ்ஃக்' கருத்தாக்கம் பிரயோகிக்கப் பட்டமையும், தற்கால அழைப்புச் செயற்பாட்டிலும், சட்டவாக்கத்திலும், அரசியல் மூலோ பாயங்களிலும் அது ஏற்படுத்திய தாக்கமும் மற்றோர் எடுத்துக் காட்டாக அமைகிறது.

முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இடையிலான உறவுகளைப் பொறுத்தவரை, 'எனவே இணைவைப்பாளர்களை கண்ட இடத்தில் கொல்லுங்கள்' எனத் தொடரும் (ஆயத்துஸ் ஸைஃப்) வசனமானது 'நஸ்ஃக்' பற்றிய பாரம்பரிய முறைமை யிலுள்ள எதிர்மறைத் தாக்கங்களுக்கான தெளிவான மாதிரியொன் றைப் பிரதிபலிக்கிறது எனலாம். இவ்வசனம் இரண்டாவது மதீனாக் காலத்தின் இறுதிப் பகுதியில் இறங்கியதாகும். முஸ்லிம்கள் நன்கு பலமும் அதிகாரமும் பெற்றிருந்த காலம் அது. கடந்து சென்ற இருபது வருடங்களுக்கும் மேலாக முஸ்லிம்களும் அவர்களது அரசும் அழைப்பு, சமாதானச் செயற்பாடு, நன்மை, பொறுமை என்பவற்றை வெளிப்படுத்திய நிலையிலும், முஸ்லிம்களை எதிர்ப்பதிலும், அவர் கள் மீது அடர்ந்தேறுவதிலும், உடன்படிக்கைகளை முறிப்பதிலும் வரம்பு மீறிச் செயற்பட்ட அரேபிய இணைவைப்பாளர்களை எதிர் கொள்ளும் வகையிலேயே மேற்குறித்த வசனம் இறங்கியது. சமூக ரீதியாகவும் நாகரிக ரீதியாகவும் மிகப் பிற்போக்கான நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த இணைவைப்பாளர்களுடன் போரிடுமாறும், பலத்தைப் பிரயோகித்து அவர்களைப் பணிய வைக்குமாறும் அல்-குர்ஆன் இதன் மூலம் கட்டளையிட்டது. ஒழுங்குபடுத்தப்பட்ட நாகரிக சமூகம் ஒன்றினுள் கடின இயல்பு கொண்ட அந்த அறபிகள் வந்து விட வேண்டும் என்பதும், அவர்களது உள்ளங்கள் பண்பட்டு அத்துமீறல்களிலிருந்தும் கடின இயல்பிலிருந்தும் விடுபட வேண் டும் என்பதுமே இதன் நோக்கமாகும்.

நஸ்ஃக் பற்றிய பாரம்பரியப் புரிதலானது குறித்த வசனத்திலி ருந்து உரிய கோட்பாட்டு அர்த்தத்தை சாராம்சமாகப் பெறவில்லை என்பதை இங்கு நாம் அவதானிக்கிறோம். சீர்திருத்தம், பண்படுத்தல், அநியாயக்காரரையும் அத்துமீறுவோயும்ரை பலப் பிரயோகத்தின்

மூலம் தடுத்து நிறுத்துதல் என்பனவே அவ்வசனத்திலிருந்து பெறப் பட வேண்டிய கோட்பாட்டு அர்த்தமாகும். ஆனால் பாரம்பரியப் புரிதலோ தஃவாவின் எல்லாத் துறைகளிலும், முஸ்லிமல்லாதவர் களுடனான எல்லாத் தொடர்புகளிலும் இவ்வாசனத்தைப் பிரயோகிக் கிறது. இதன் மூலம், நன்மை புரிபவர்களுடன் நன்றாக நடந்து கொள்ளல், அவர்களது உள்ளங்களைப் பிணைத்தல், நீதியாக நடப்ப வர்களுடன் நீதியாக நடத்தல் முதலிய கருத்தாக்கங்களை ரத்து செய்யும் முடிவை நோக்கியே அது சென்றடைகிறது. இந்நிலையில், சகிப்புத்தன்மை என்பது விதிவிலக்கான ஒன்றாகவும், நம்பிக்கைச் சுதந்திரத்தின் எல்லையை ஒடுக்குவதே பொதுவான விதியாகவும் மாறி விடுகிறது. ஆனால், குறித்த வசனத்தொடர் அக்காலத்தில் வாழ்ந்த வேதக்காரர்களையும், மஜூஸிகளையும், அவர்களுடன் இறைத்தூதர் (ஸல்) நடந்து கொள்ள வேண்டிய முறையையும் பற்றிப் பேசுகின்றதே தவிர, எல்லா மதங்களையும் மனித நாகரிகங்களை யும் குறித்து மொத்தமாகப் பேசவில்லை. அந்த வகையில், எல்லாக் காலங்களிலும் வாழ்கின்ற எல்லா மதங்களையும், மனிதக் குழுமங் களையும் அன்றி, இறைத்தூதர் (ஸல்) காலத்தில் வாழ்ந்த (யூத, கிறிஸ்தவ, மஜூஸிய) குழுக்கள் மூன்றும் மட்டுமே இவ்வசனம் கூறும் அர்த்தத்தினுள் அடக்கப்பட வேண்டும்.

இவ்விவகாரம் குறித்தும், இதனால் ஏற்பட்ட பல விளைவுகள் குறித்தும் ''சர்வதேச உறவுகள் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு: சிந்தனைக்கும் முறையியலுக்குமான வழிகாட்டல்கள்'' என்ற எனது நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சட்டங்களும் வசனங்களும் வெளிப்படையாக முரண்படுவதாகத் தெரிந்த மாத்திரத்திலேயே 'நஸ்ஃக்' அல்லது ரத்துச் செய்தல் என்ற கருத்தாக்கத்துக்கு கட்டாயம் நாம் செல்ல வேண்டும் என்பதில்லை என அங்கு நான் விளக்கி யிருக்கிறேன்.

மனித வாழ்வு அதன் பல்வேறு நிலைகளில் பல்வேறு நிலைப் பாடுகளையும் சட்டங்களையும் வேண்டி நிற்கும் ஒன்றாகும். ஒரு குறித்த சட்டத்துக்கான அல்லது வழிகாட்டலுக்கான தொடர்புகளும் நிபந்தனைகளும் சூழமைவுகளும் சாத்தியமாகும் பட்சத்தில், அந்தச் சட்டம் அல்லது வழிகாட்டல் ஒரு முஸ்லிம் அவசியம் பின்பற்ற வேண்டிய ஒன்றாக மாறி விடுகிறது. அந்த வகையில், முஸ்லிம் அல்லாத ஒருவர் தன்னைச் சூழவுள்ள முஸ்லிம்களுடன் சமாதான மாக வாழ்பவராகவும் நல்ல முறையில் நடந்து கொள்பவராகவும்

இருந்தால், அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வது முஸ்லிம் கள் மீது கடமையாகி விடுகிறது. இஸ்லாத்தின் மீது பகைமை கொண்டு, முஸ்லிம்கள் மீது அத்துமீறும் முஸ்லிமல்லாதவரே மோதலுக்கும் போருக்கும் பணிய வைக்கப்படலுக்கும் உரியவர். இவ்விரு நிலைகளுக்கும் இடையில் குழப்பிக் கொள்ளவோ, இரு வேறுபட்ட அம்சங்களுக்கிடையில் 'நஸ்ஃக்' என்ற கருத்தாக்கத்தை நுழைக்கவோ வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட நிலைமையைத் தோற்றுவிக்கும் அம்சங்கள் காணப்படும் போது இஸ்லாமிய வழிகாட்டலின் அடிப்படையில் அக்குறிப்பிட்ட நிலைமைக்கேற்ப செயலாற்றுவதே கடமையாகும். குறித்த நிலைமை வேறொரு நிலைமையாக மாறி விடும் பட்சத்தில் முன்னைய நிலைமையின் மீது பிடிவாதமாகத் தொடர்ந்திருப்பதில் எந்த அர்த்த முமில்லை. அதற்கு மாறாக, புதிய நிலைமை மீதான சட்டத்துக்கும் வழிகாட்டலுக்கும் ஏற்ப தகவமைத்துக் கொள்வதே அங்கு முக்கிய மானது. முஸ்லிம்களுடன் சமாதானமாகவும் அத்துமீறாமலும் வாழ் கின்ற முஸ்லிமல்லாதோருடனான உறவில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நன்மை, விட்டுக் கொடுப்பு, உபகாரம் என்பவற்றை எடுத்துரைக்கும் மறை வசனங்களை ஏலவே குறிப்பிட்ட 'ஆயத்துஸ் ஸைப்' ரத்துச் செய்து விட்டது என்ற கருத்தாக்கத்தின் போலித் தன்மையை இந்நிலைப்பாடு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இந்த வகையில்தான், அல்-குர்ஆனில் கடைசியாக இறங்கிய வச னங்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கடைசியாகச் செய்த செயல் களும், அவற்றுக்கு முந்திய வசனங்களையும் சட்டங்களையும் ரத்துச் செய்து விட்டன என்ற புரிதலானது உண்மையில் இறுதித் தூது என்ற கருத்தாக்கத்தையும் அதன் நிரந்தர வழிகாட்டல் பண்பையும் ரத்துச் செய்வதாகி விடுகிறது. மட்டுமன்றி, அதனை மிகக் குறுகிய வட்டத் துக்குள்ளும் தள்ளி விடுகிறது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உருவாக்கிய சமூகம் அரேபியத் தீபகற்பத்தில் பலமும் செல்வாக்கும் பெற்றிருந்த கட்டத்தில்தான் அன்னார் மரணித்தார்கள். அன்றைய அரசுக்குப் பொருந்திய பல அம்சங்கள் பின்னர் இஜ்திஹாத் காலம் எனவும் இஸ்லாமிய சட்ட நூல்கள் எழுதப்பட்ட காலம் எனவும் அறியப்படுகின்ற உமையா, அப்பாஸிய ஆட்சிக் காலங்களுக்கும், உஸ்மாமானியப் பேரரசின் ஆரம்ப கட்டத்துக்கும் கூட பொருந்தியிருந்தன. ஆனால், இன்று முஸ்லிம்களது நிலையோ பலவீனமானது. இன்றைய அவர்களது

நிலை -சில கூறுகளில்- மக்காவில் வாழ்ந்த ஆரம்ப முஸ்லிம்களின் நிலையை அல்லது அபீஸீனியாவில் வாழ்ந்த முஸ்லிம்களின் நிலையை அல்லது ஹுதைபியா உடன்படிக்கைக்கும் மக்கா வெற்றிக் கும் முந்திய முதலாவது மதீனாக் கால அரசை ஒத்ததாக உள்ளது. இன்று அவர்கள் எதிரிகளால் முற்றுகை இடப்பட்டிருக்கிறார்கள். அழிவையும் அனர்த்தத்தையும் காண்பித்து எதிரிகள் அவர்களை அச்சு றுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஹுதைபியா உடன்படிக்கைக்கும் மக்கா வெற்றிக்கும் பின்னர் இஸ்லாம் விதித்த சட்டங்களையும், முதன்படுத்தல்களையும், இறைத் தூதர் (ஸல்) செயற்படுத்திய ஒழுங்கமைப்புக்களையும், கொள்கை களையும், மூலோபாயங்களையும், நிலைப்பாடுகளையும் நாம் கூர்ந்து கவனித்திருக்க வேண்டும். அப்போதுதான் -மிகக் குறைந்த தயாரிப்பு களைக் கொண்ட, ஒடுக்கப்பட்ட சமூகங்களாக வாழும் நாம்- பலம் வாய்ந்த எதிரிகள் நம் மீது திணிக்கும் சவால்களை எதிர்கொள்ளும் முறை பற்றி பல விடயங்களை கற்றுக் கொண்டிருப்போம். பலம் வாய்ந்த எதிரிகளுக்கு முன்னால் குறைந்த தயாரிப்புக்களோடு பல வீனப்பட்டு நின்றாலும், இத்தகைய சூழ்நிலைகளையும் சவால் களையும் எதிர்கொள்ளும் வகையில் பின்பற்ற வேண்டிய அரசியல், பொருளாதார, இராணுவ முன்னெடுப்புகள் என்ன என்பதையும் புரிந்து கொண்டிருப்போம்.

தற்காலத்தில் 'நஸ்ஃக்' பற்றிய பாரம்பரியப் புரிதலை விளக்கும் இரண்டாவது உதாரணமாக அமைவது, அழைப்பு மற்றும் இஸ்லா மியச் சட்டவாக்கச் செயற்பாடுகளுக்கான மூலோபாயம் பற்றியும், மக்காக் காலகட்டம் மற்றும் மதீனாக் காலகட்டம் என்பவற்றுடன் அதற்குள்ள தொடர்பு பற்றியும் நவீன இஸ்லாமிய சிந்தனையில் வளர்ந்துள்ள கருத்தாக்கமாகும். ஏனெனில், இவ்விவகாரம் தொடர் பாக நவீன இஸ்லாமிய சிந்தனையாளர்கள் இரு குழுக்களாகப் பிரிந்துள்ளனர். ஒரு குழுவினர் மக்காக் காலகட்டத்தை நவீன காலத்தின் மீது அப்படியே பிரயோகிக்கலாம் எனக் கருதுகின்றனர். ஷரீஆ மற்றும் சட்டங்கள் விடயத்தில் முஸ்லிம்கள் இன்று மக்காக் காலகட்டத்தைப் போன்றே வாழ்வதாக வாதிக்கும் இக்குழுவினர், முஸ்லிம்கள் இக்கட்டத்தில் 'அகீதா' விவகாரத்திலேயே ஈடுபாடு காட்ட வேண்டும் என அழைப்பு விடுக்கின்றனர். வணக்கங்கள், கொடுக்கல்-வாங்கல் தொடர்புகள், சமூக ஒழுங்கமைப்புகள் என்பன மதீனாக் காலகட்டத்தின் மையப்பணி என இக்குழுவினர் கருது

கின்றனர். மற்றக் குழுவினரோ நவீன காலத்தை இரண்டாம் மதீனாக் காலத்துடன் ஒப்பிடுகின்றனர். அறபுத் தீபகற்பத்தில் முஸ்லிம்கள் மிகப் பலமான அரசாகவும் சமூகமாகவும் வாழ்ந்த கால கட்டமே இந்த இரண்டாம் மதீனாக் காலமாகும். அக்காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்களது நிலைக்கும் தற்கால முஸ்லிம்களது நிலைக்கும் இடையிலான வேறுபாட்டை இவர்கள் கண்டு கொள்வதில்லை. 'நஸ்ஃக்' குறித்து இவர்கள் கொண்டிருக்கும் நிலைப்பாடுதான் இதற்குக் காரணமாகும். மதீனாக் காலத்தின் சட்டங்களே பேணிப் பின்பற்றப்பட வேண்டியவை என்ற முடிவுதான் இந்நிலைப்பாட்டி லிருந்து கிடைக்கும் பிரதி விளைவாகும். அந்த வகையில், இச் சட்டங்களுடன் முரண்படுகின்ற முன்னைய மக்காக் காலச் சட்டங் கள் அனைத்தும் 'நஸ்ஃக்' செய்யப்பட்டவையாக மாறுகின்றன. இக்குழுவினரைப் பொறுத்தவரை, இறைத்தூதர் (ஸல்) மிக இறுதி யாக இட்ட கட்டளைகள் மட்டுமே எல்லா நிலைகளிலும் பேணிப் பின்பற்றப்பட வேண்டியவையாகும். ஆனால் அக்கட்டளைகளோ பொதுவாக இரண்டாவது மதீனாக் கால கட்டத்துக்கான சட்டங் களையும் யதார்த்தங்களையும் மாத்திரம் பிரதிபலிப்பவையாக உள்ளன. இந்நிலையில், மக்காக் காலப் பிரிவுக்குரிய வசனங்கள் அல்லது முதலாம் மதீனாக் காலப் பிரிவுக்குரிய வசனங்கள் ஓதிப் பாராயனம் செய்து நற்கூலி பெறும் வசனங்களாக மாத்திரமே எஞ்சி நிற்கின்றன. ஏனெனில், 'நஸ்ஃக்' பற்றிய தவறான புரிதல் அவ்வச னங்களின் தேவையை இல்லாது செய்து விட்டது.

சில வசனங்கள் வேறு சில வசனங்களை 'நஸ்ஃக்' செய்திருக் கின்றன என்பதில் நமக்கு ஐயமில்லை. அதேவேளை, இம்மார்க்கமும் தூதும் மனிதர்கள் பின்பற்ற வேண்டும் என்பதற்காக அருளப்பட்ட பரிபூரணமானதொரு தொகுதி என்பதிலும், அவர்களது இம்மை-மறுமை நலன்கள் அதிலேயே உள்ளன என்பதிலும் நமக்கு ஐய மில்லை. அந்த வகையில், ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது ஒரு குறிப் பிட்ட சமூகத்தினர் மக்காக் காலம் போன்ற ஒரு கால கட்டத்தில் தான் வாழ்கிறார்கள் என்று கூறுவதற்கோ, பின்வந்த மதீனாக் கால கட்டங்களில் விதிக்கப்பட்ட சட்டங்களை அந்த நபர் அல்லது சமூ கத்தினர் பின்பற்ற வேண்டியதில்லை என்று கூறுவதற்கோ இட மில்லை.

அதேவேளை, இஸ்லாமும், அதன் கால-இட வர்த்தமானங்களுக்கு அமைவான சட்டவாக்கமும் வித்தியாசமான பல கட்டங்களைக் கடந்து வந்திருக்கின்றன என்ற தெளிவும் நமக்கு அவசியம். அந்த

வகையில், படிமுறையாக வேறுபட்ட இக்கட்டங்களை எந்த நெகிழ்ச்சியுமின்றி பிற்காலத்தில் தோன்றும் வேறுபட்ட சூழமைவு கள் மீது பிரயோகிக்கவோ ஒப்பீடு செய்யவோ இடமில்லை. ஏனெனில், தூது பூரணமடைந்த பிறகு வந்தவர்களுடைய நிலையை, தூது படிமுறையாகப் பிரயோகிக்கப்பட்ட காலங்களில் வாழ்ந்தவர் களுடன் ஒப்பீடு செய்ய முடியாது. குறித்த நிகழ்வுகளோடும் அது குறித்த சட்டங்களோடும் வாழ்ந்தவர்கள் அவ்வக் குறிப்பிட்ட நிகழ்வு களை மட்டுமே அறிந்திருப்பர். அவை தொடர்பான சட்டங்களை மட்டுமே பின்பற்றக் கடமைப்பட்டும் இருப்பர்.

அவ்வாறெனில், இவ்விவகாரத்தைப் புரிந்து கொள்வது எப்படி?

பகுதியளவான பார்வை, முழுமைத்துவப் பார்வை, இஸ்லாமிய சிந்தனை முறைமை, சமூகங்களின் கால-இடப் பரிமாணங்கள் பற்றிய அறிவு, அறிவுக்கான மூலாதாரம் என்ற வகையில் வஹீ பகுத்தறிவுடன் கொண்டுள்ள உறவு, அறிவுக்கான இரண்டாம் மூலாதாரம் என்ற வகையில் 'ஃபித்றா' என்னும் படைப்பியல்பின் பாத்திரம், மனிதனுக்கு பூமியின் வளமாக்கற் பணியை மேற்கொள் வதற்குரிய ஆற்றலையும் நேர்வழியையும் வழங்குவதில் வஹியும் ஃபித்றாவும் பரஸ்பரம் ஒத்துழைக்கும் பாங்கு என்பனவே இங்கு உண்மையில் கவனிக்கப்பட வேண்டிய விவகாரங்களாகும். ஏனெ னில், தனிநபர்களாயினும் சமூகங்களாயினும் வேறுபட்ட கால-இடப் பரிமாணங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் சூழமைவுகளும் வசதிகளும் தேவைகளும் சவால்களும் வெவ்வேறானவையே. பழைய சமூகங்களதும், நவீன சமூகங்களதும் தேவைகளும் இயலுமைகளும் சமமானவையன்று. எனவே, அவற்றின் நடைமுறைகளும் ஒழுங்கு களும் முற்று முழுக்க சமமாக அமையாது. மட்டுமன்றி, இன்று நாம் காண்பது போன்று ஐம்பெரும் கண்டங்களிலும் வாழும் சமூ கங்களுக்கிடையில் இடத்தால் வரும் வேறுபாடுகள் கூட காலத்தால் வரும் வேறுபாட்டை விடக் குறைந்தவையல்ல. அந்த வகையில், சமூகங்களது நிலை வேறுபாடுகள், சமூகத்தினுள்ளேயான தனிநபர் வேறுபாடுகள், இட வேறுபாடுகள் என்பன வித்தியாசமான கையா ளல்களை வேண்டி நிற்கின்றன. குறித்த சமூகத்தின் அமைப்பு, யதார்த்தம், ஒழுங்கு என்பவற்றைக் கருத்திற் கொண்டே அவை கையாளப்பட வேண்டும். அவை சிறுபான்மை சமூகங்களாயினும் சரி; பெரும்பான்மை சமூகங்களாயினும் சரி. முஸ்லிம் சமூகங்களா யினும் சரி; முஸ்லிமல்லாத சமூகங்களாயினும் சரி.

எனவே, மக்காக் காலம் என்றோ மதீனாக் காலம் என்றோ கூறுவதை விட, ஷரீஆவின் மகாஸித் மற்றும் முழு மொத்த அம்சங் கள் என்பவற்றின் ஒளியில் உயிர்ப்பும் முழுமையும் கொண்ட பார்வையொன்றே இன்று நமக்குத் தேவைப்படுகிறது. சமூகங்களும் தனிமனிதர்களும் அவர்களது தேவைகளுக்குகந்த உயிர்ப்பு மிக்க ஃபிக்ஹு மூலமாகவும், சிந்தனை மூலமாகவும் -செயற்கையான ஒப்பீடுகளின்றி- வழிநடாத்தப்பட வேண்டும். அதன் மூலமாக, ஒவ்வொரு தனிநபருக்கும் சமூகத்துக்கும் உரிய கட்டம் ஷரீஆவின துமு், ஃபித்றாவினதும், அதன் நோக்கங்களினதும், மகாஸிதுகளின தும் ஒளியில் பொருத்தமாக வந்தமைந்து விடும். இஸ்லாத்தைப் பற்றியொழுகும் பெரும்பான்மை அறிஞர்களது நிலைப்பாடு இதுவே யாகும். இஸ்லாமிய அழைப்பும் அரசும் கடந்து வந்த கட்டங்களை முஸ்லிம்கள் இவ்வாறு தமது வாழ்வில் பின்பற்றிச் செல்வதனூ டாகத்தான் இஸ்லாமியத் தூதின் மகாஸிதுகளை அடைவதற்கும், முஸ்லிம் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குமான அதியுச்ச ஆற்றலை தனிநபரும் சமூகமும் பெற்றுக் கொள்ள முடியும்.

பாரம்பரியப் பொருள் கோடலின் அடிப்படையிலான இஸ்லாமிய முறைமையியற் குறைபாட்டின் காரணமாக அல்லது அதனைப் பிற்கால முஸ்லிம் புலமையாளர்கள் பயன்படுத்திய விதம் காரண மாக இன்று உம்மா எதிர்கொள்ளும் சிந்தனா ரீதியான நெருக்கடிக்கு உதாரணமாக வட்டி என்ற விவகாரத்தைக் குறிப்பிடலாம். வட்டி என்ற கருத்தாக்கம், அதன் பரப்பு, அது தொடர்பாக அல்-குர்ஆனிய வழிகாட்டலும் ஸுன்னாவின் நடைமுறைகளும் பொருள்கோடல் செய்யப்பட்ட விதம் என்பன இந்நெருக்கடியை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இன்று இஸ்லாமிய சிந்தனைத் தளத்தை வழிநடாத் தும் பலரிடம் சமூக-பொருளாதார வாழ்வு தொடர்பாகக் காணப் படும் முழுமையற்ற நோக்கும் குறையறிவுமே இந்நெருக்கடிக்குக் காரணம் என்பதை கூர்ந்து கவனிக்கும் எவரும் புரிந்து கொள்ளலாம். பொருளாதார வாழ்வு தொடர்பான ஷரீஆவின் மகாஸிதுகளையும் சட்டவாக்கத்தையும் கண்டு கொள்ளாத படி பயனற்ற வாதங்களில் இஸ்லாமிய சிந்தனையை மூழ்கடித்ததும் இந்நெருக்கடிதான். இறுதி யில், வட்டி தொடர்பான மேலோட்டமான வகைப்பாடுகளையும் பெயர்களையும் முரண்பட்ட கண்ணோட்டங்களையும் நோக்கி அது இஸ்லாமிய சிந்தனையைக் கொண்டு சேர்த்தது. வட்டி தொடர்பாக வும், அதன் பரப்பு, இலக்கு என்பவை தொடர்பாகவும் இருபதுக்கு

மேற்பட்ட சட்ட நிலைப்பாடுகள் தோன்றுமளவுக்கு நிலைமை சென்றடைந்தது. இவ்விவகாரம் தொடர்பான மிக முக்கியமான, ஸஹீஹான நபிமொழியொன்றை சில சட்ட மரபுகள் கண்டுகொள்ள வில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. அந்நபிமொழியை நாம் முழுமையான பொருளியல் நோக்கில் ஆழ்ந்து கவனித்திருந்தால், அது தொடர்பான சில நபித்துவக் கொள்கைகளைக் புரிந்து கொள்ள வும், அக்கொள்கைகள் கடந்து வந்த படிமுறைகளைப் புரிந்து கொள்ளவும் நமக்கு முடிந்திருக்கும். உஸாமா பின் ஸெய்த் (றழி) அறிவிக்கும் அந்த நபிமொழி, தாமதக் கொடுப்பனவுக்காகப் பெறப் படுவதையே வட்டி (ரிபா அந்-நஸீஆ) என வரையறை செய்கிறது. அதற்கு முன்னர் நபிகளார் அடிப்படையான பண்ட மாற்றுக்களில் நிலவும் அனைத்து ஏற்றத் தாழ்வுகளையும் தடுத்திருந்தார்கள். அன்றைய சூழ்நிலையில் இத்தகைய பண்டமாற்றுக்கள் 'ஆறு வகை' என அறியப்பட்டிருந்தன. ''தாமதக் கொடுப்பனவின் வட்டி தவிர வேறு வட்டியேதும் இல்லை'' என்ற அந்த நபி வாக்கை உஸாமா (றழி) வாயிலாக புஹாரியும் முஸ்லிமும் பதிவு செய்துள்ளனர்.

இதே பகுதியளவான பார்வை காரணமாகவே சில சட்ட மரபுகள் தமது முழுமையற்ற புரிதலை நியாயப்படுத்தும் வகையில் குறித்த வசனங்கள் தொடர்பாக முறையற்ற உபாயங்களையும் தந்திரங் களையும் கையாளும் நிலைக்குச் சென்றன. 'முஸாறஆ' என்னும் விவசாய ஒப்பந்தம் தொடர்பாக றாஃபிஉ பின் கதீஜ் அறிவிக்கும் நபிமொழியை அடிப்படையாகக் கொண்டு, நில உரிமையாளர் விவசாயத்துக்கான விதையை விவசாயிக்கு வழங்கியிருந்தால் அவர் விளைச்சலின் அரைப்பகுதியைப் பெற்றுக் கொள்வது ஆகுமானது என்ற தீர்ப்பை அவை வழங்கியிருப்பதும் இப்பகுதியளவான பார்வைக்கோர் எடுத்துக் காட்டாகும்.(3)

வேறு சில சட்ட மரபுகள் மற்றொரு முடிவுக்கு வந்திருந்தன. இஸ்லாமியப் பொருளியல் சட்டவாக்கத்தின் நோக்கத்தையும் மகாஸிதையும் தொலைத்து விடுவதாக அம்முடிவு அமைந்தது. வட்டி தொடர்பாக வந்திருக்கும் அனைத்து வசனங்களும் அட்சரம் பிசகா மல் வணக்கம் போன்று பின்பற்றப்பட வேண்டிய கட்டளைகளா கும் என்றும், 'ரிபா அல்-பழ்ல்' தொடர்பான நபிமொழியில் குறிப் பிடப்பட்ட 'ஆறு வகை'களுக்கு அப்பால் அவை செல்லக் கூடாது என்றும் வரையறுத்ததன் மூலமாக இம்முடிவை அவை வெளிப் படுத்தின.(4)

பொருளாதாரக் கொள்கைகளிலும், தேவையான தீர்வுகளிலும், பதிலீடுகளிலும் ஏற்பட்ட முறைமை சார்ந்த இக்குறைபாட்டினாலும், சிந்தனைப் பின்னடைவினாலும் மிக முக்கியமான முறையியல் மாற்றமொன்று நிகழத் தொடங்கியிருக்கிறது. இஸ்லாமியப் பற்றுக் கொண்ட பொருளாதார நிபுணர்கள் இஸ்லாமியப் பொருளாதார ஆய்வுத் துறையில் முழுமைத்துவப் பார்வையுடன் தடம் பதிக்கத் தொடங்கியதன் மூலமாகவே அம்மாற்றம் நிகழ்ந்தது. ஒழுங்கு படுத்தப்பட்ட சிந்தனா முறைமையொன்றுக்குக் கட்டியம் கூறும் மாற்றம் அது. துறை சார்ந்த சமகால இஸ்லாமிய சிந்தனையினதும் முறைமையினதும் பல அம்சங்களைச் சீரமைப்பதற்கான செயல் பூர்வமான ஆரம்பமாக அதனை நாம் நம்ப முடியும். மட்டுமன்றி, இஸ்லாமிய சிந்தனையின் முழுமைப் பண்பையும் உயிர்ப்பையும் -அல்லாஹ்வின் உதவியால்- அந்த மாற்றமே மீட்டுக் கொண்டு வரும் என்றும் நம்பலாம்.

இன்னொரு புறத்தில், முன்னோர்களான அனைத்து 'ஸலபு'களது கூற்றுகளையும், புரிதல்களையும், விளக்கங்களையும், இஜ்திஹாது களையும் புனிதத்தன்மை கொடுத்து நோக்குவதையும், அவை ஸுன்னாவினதும் வஹியினதும் பகுதி என்பது போலக் கருதுவதை யும் முறைமை சார் செயற்பாட்டாளர்களது குறைபாடுகளுள் ஒன் றாகக் குறிப்பிடலாம். மனிதன் என்பவன் இயல்பாகவே குறை பாடுடையவன்; கால-இட வர்த்தமானங்களால் வரையறுக்கப்பட்ட வன் என்பதை நாம் நன்கறிவோம். வஹியைத் தவிர வேறெதற்கும் புனிதத் தன்மை கிடையாது என்பதையும் கோட்பாட்டு ரீதியாக நாம் நம்புகிறோம். ஆயினும், 'ஸலபு'களது கூற்றுக்களை நாம் ஆய்வுக்கு உட்படுத்தும் போது நமது யதார்த்தத்தையும் தேவைகளையும் கையாள்வதற்கான அசல் தன்மை வாய்ந்த முற்போக்கான பார்வை யொன்றைப் பெறும் நோக்கில் அவற்றை நாம் ஆராய்வதில்லை. மாறாக, அவற்றை அப்படியே பின்பற்றவும், 'கியாஸ்' அடிப்படை யில் அவற்றை நமது பிரச்சினைகளின் மீதேற்றி நம்மை நாமே சிரமத்துக்கு ஆளாக்கிக் கெள்ளவுமே அவற்றை ஆராய்கிறோம். அந்த முன்னோர்களை கண்ணியப்படுத்துவது தொடர்பாகவும், அவர்களது சாதனைகளை மதிப்பது தொடர்பாகவும் நமக்குள் விதைக்கப் பட்டுள்ள பிழையான புரிதலே நாம் இப்படி நடந்து கொள்ளக் காரணமாகும். அந்த கண்ணியமும் மரியாதையும் நம்மையறியாம லேயே நமது உள்ளங்களில் அச்சமாகவும் பயமாகவும் மாறுவதற்கு நமது இயலாமையும் நமது சிந்தனை முறைமையின் பிறழ்வும்

இடமளித்து விட்டது. இறுதியில், தேவையான சீரமைப்பையும் விருத்தியையும் ஏற்படுத்தாமல் தடுக்கின்ற புனிதக் கருத்தாக்கமாக அந்த கண்ணியம் மாறிப் போனது.

இந்த வகையில்தான், சமகால யதார்த்தத்திலிருந்து பிறந்து, இஸ்லாத்தின் மகாஸித், பெறுமானங்கள், சட்டங்கள் என்பவற்றின் திசையில் பயணிக்கும் அனைத்து முழுமை தழுவிய நவீன சிந்தனை களும் புரிதல்களும் பாரம்பரிய சிந்தனையைச் சுமந்த பலரிடம் ஐயத்துக்குரியவையாகவும் நிராகரிக்கப்படுபவையாகவும் மாறியிருக் கின்றன. ஏனெனில், அவர்களைப் பொறுத்தவரை இவை ஸலஃப் அறிஞர்களது கூற்றுகளுக்கு இயைபாக அமையவில்லை; அவர்களது பார்வைக் கோணத்திலிருந்து பிறக்கவில்லை.

இத்தகைய நிலைப்பாட்டினால், 'ஸலஃபு'களின் முதுசங்களி லுள்ள சிந்தனைகளிலிருந்து ஆரோக்கியமாகப் பயன்பெற வழி யில்லாது போகிறது. நவீன பிரச்சினைகளைக் கையாள்வதற்கான பரந்துபட்ட அறிவையும் அனுபவத்தையும் ஸலஃபுகளிடமிருந்து பெற்று, வாழ்வியல் யதார்த்தத்தையும் சமூக செயற்பாட்டையும் நாகரிகப் பயணத்தையும் நோக்கி இஸ்லாத்தை மீளக் கொண்டு வரவும் வழியில்லாது போகிறது.

சுருங்கக் கூறின், பாரம்பரிய இஸ்லாமிய முறைமையானது மொத்தத்தில் அது உருவாகிய காலத்தின் தேவைகளையும் அதன் அரசியல்-நாகரிக சூழ்நிலைகளையும் கவனத்தில் கொண்டிருந்தது என்பது தெளிவு. ஆயினும், அத்தேவைகளிலிருந்தும் சூழ்நிலைகளி லிருந்தும் வெளியே வருவதற்கான இயலுமை அற்றுப் போனமையே அதன் குறைபாடாக அமைந்தது. இதனால் வாழ்வின் விருத்திக்கும் கால முன்னேற்றத்துக்கும் ஏற்ற வளர்ச்சி நின்று போனது. அவ்வாறே, ஆரம்ப 'உஸூல்' சார்ந்த ஆய்வுகள் புனித வசனங்கள் தொடர்பான ஆய்வுத் தேவைகளை ஏற்றுக் கொண்ட போது, சமூகவியல் அறிவின் பல்வேறுபட்ட துறைகளில் ஆய்வு செய்வதற்கு அவசியமான முறை மையின் விதைகளைத் தன்னகத்தே பொதிந்துதான் இருந்தது. அது கொண்டிருந்த அடிப்படைகளையும் முன்னாயத்தங்களையும் பின் னால் வந்தவர்களே தொடர்ந்து கட்டியெழுப்பி பயன் பெற்றிருக்க வேண்டும்.

அதே போல், பாரம்பரிய முறைமையிலுள்ள குறைபாட்டை இன்றைய நிலையில் அது கையாளப்படும் விதத்தினுடாகவும் நாம்

புரிந்து கொள்வது அவசியம். ஏனெனில், இக்குறைபாடானது குறித்த முறைமையின் இயல்பில் மாத்திரம் உள்ள ஒன்றல்ல. சமகால இஸ்லாமிய ஆய்வு வட்டாரங்களின் நடைமுறை சார்ந்த காரணி களும் இக்குறைபாட்டுக்குப் பின்னால் உள்ளன. இம்முறைமை பற்றியும் அது உள்ளடக்கியுள்ள அர்த்தங்கள் பற்றியுமான புரிதல் குறைபாடே இதற்குக் காரணமாகும். மட்டுமன்றி, இம்முறைமையின் சில கூறுகளையும், பிரச்சினைகளையும், விருத்தியடைவதற்கான அதன் இயலுமைகளையும், தற்காலத்தில் அதன் நாகரிகப் பிரயோ கங்களையும் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட குழப்ப நிலையும் இதற்கு மற்றொரு காரணமாகும்.

நபி (ஸல்) அவர்களது ஸுன்னா இஸ்லாமிய சிந்தனைக்கான மூலாதாரமொன்றாக உள்ளது என்ற வகையில் அந்த ஸுன்னாவின் வசனங்களோடும், பிற முதுசங்களோடும் தொடர்புபட்ட முறைமை சார்ந்த விவகாரமொன்று குறித்து சுட்டிக் காட்டுவதும் இங்கு அவ சியமானது. நுபுவ்வத் தோன்றி இத்தனை நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் ஸுன்னாவின் வசனங்கள் பொதுவான அறிஞர்களுக்கும் முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும் இலகுவாகக் கையாள முடியாத நிலை யிலேயே உள்ளன. அவை தொடர்பான அபிப்பிராயங்கள் இன்று வரை சிதறிய நிலையிலேயே காணப்படுகின்றன. அவை தொடர் பான கலைச் சொற்களும் பெருகிய வண்ணமே உள்ளன. இலகு வாகவும் வினைத்திறனாகவும் கையாளவோ பயன் பெறவோ முடி யாத வகையில் அவ்வசனங்கள் ஏராளமான நூல்களிலும் கையெழுத் துப் பிரதிகளும் சிதறிக் கிடக்கின்றன. எவரொருவர் எந்தவொரு வச னத்தை சான்றாகக் கொண்டு வந்தாலும், அது தொடர்பாகவும் அதன் அறிவிப்பாளர் வரிசை மற்றும் கலைச் சொற்கள் தொடர்பாகவும் பல்வேறு குறுக்கீடுகளும் பின்னூட்டங்களும் விவாதங்களும் எழுந்து, அந்தச் சந்தடிக்குள் குறித்த ஹதீஸின் அர்த்தமும் பயனும் ஏறக் குறையத் தொலைந்து விடும் நிலையே இன்று காணப்படுகிறது. எனவே, முறைமை சார்ந்ததும் வினைத்திறன் மிக்கதுமான சீர் திருத்தமொன்று நிகழ வேண்டுமாயின், ஸஹீஹான ஸுன்னாவின் வசனங்கள் இலகுவான ஒழுங்கொன்றில் நிரற்படுத்தப்படுவது அவசியம். பொதுவான அறிஞர்களும், கற்றறிவாளர்களும், சிறப்புத் துறையாளர்களும் அனைத்து அறிவியல் துறைகளிலும் இலகுவாக வும் நம்பிக்கையோடும் கையாண்டு பயன்பெறத்தக்க வகையில் அவை ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

அந்த வகையில், புனித ஸுன்னா தொடர்பான பணிகள் நியமப் படுத்தப் படுவதும், ஐயங்கள், மிகைப்படுத்தல்கள், இஸ்றாஈலிய் யாத்கள் என்பவற்றிலிருந்து அதன் வசனங்கள் வடிகட்டப்பட்டு அத்தியாயங்களாக வகைப்படுத்தப் படுவதும் அவசியம். நல்ல எண் ணத்துடனோ தீய எண்ணத்துடனோ இடைச்செருகப்பட்ட அனைத் தும் ஸுன்னாவிலிருந்து களையப்பட வேண்டும். இவ்வகையில், அஸ்-ஸுன்னா தெளிவான முறைமை கொண்ட பின்வரும் நான்கு வகைகளாக வகுக்கப்பட முடியும்:

1. அறிவிப்பாளர் வரிசையும் உள்ளடக்கமும் ஸஹீஹாக அமைந்து, அடிப்படையான சான்றாக கொள்ளத்தக்கவை.
2. உள்ளடக்கம் ஸஹீஹாக அமைந்தாலும், அறிவிப்பாளர் வரிசை ஸஹீஹானது என திட்டவட்டமாகக் கூற முடியா மலிருப்பதால், துணைச் சான்றாக கொள்ளத் தக்கவை.
3. அறிவிப்பாளர் வரிசை ஸஹீஹானது எனக் கருதப்பட்டா லும், உள்ளடக்கம் ஷரீஆவின் ஆன்மாவோடும் அதன் பிர தான மகாஸிதுகளோடும் உடன்படாத கருத்துக்களைக் கொண்டிருப்பதால் நிதானமாகவும் நுணுக்கமாகவும் அணு கப்பட வேண்டியவை.
4. உள்ளடக்கம், அறிவிப்பாளர் வரிசை ஆகிய இரண்டிலும் கோளாறு காணப்படுவதால் நிராகரிக்கத் தக்கவை.

முறைமை சார்ந்த இவ்விவகாரத்தின் அபாயகரத் தன்மை ஸுன்னா வில் ஏற்படும் குறைபாட்டுடன் மாத்திரம் நின்று விடுவதில்லை. மாற்றமாக, போலியான பயத்தினதும் பேணுதலினதும் பெயரால் முஸ்லிம் பகுத்தறிவை பல நேரங்களில் பிழையான கருத்தாக்கங் களுக்குப் பணிய வைப்பதாகவும் இது அமைந்து விடுகிறது. விளை வாக, முஸ்லிம் பகுத்தறிவின் இயங்கு தளங்களும் முறைமையும் நிர்மூலமாகி விடுகின்றன. ஏனெனில், தவறான ஒன்றை சரியானது என அது ஏற்றுக் கொள்ளும் போது, தனது உணர்வையும் புலவய அறிவையும் தீட்சண்ய நோக்கையும் நீக்கம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு ஏற்படுகிறது. அப்போதுதான் அறிவியலோ காரண-காரியமாவதோ ஏற்காத போலித்தனமான மீபொருண்மை ஒன்றினை ஏற்பது அதற்குச் சாத்தியமாகும். இவ்வாறு தவறான ஒன்றின் மீது முஸ்லிமின் சிந்தனையும் முறைமையும் பகுத்தறிவும் பழக்கப்பட்டு விட்ட பிறகு அதற்கெனத் தனியான ஆற்றலோ

பெறுமதியோ இருக்காது. ஏனெனில், (அல்-குர்ஆனும் ஸுன்னாவு மாகிய) வஹீ கொண்டு வந்த சரியான அடிப்படைகளின் மீது செயற்படுவதை அது நிறுத்தி விட்டது.

ஆக- சிந்தனை, அதன் இயங்கு தளங்கள், ஷரீஆவின் முழு மொத்த அம்சங்கள், அடிப்படைகள், பெறுமானங்கள், இலக்குகள் என்பவை குறித்த உணர்வார்ந்த புரிதலும், அவற்றைப் பாதுகாப்ப தற்கான விழிப்புணர்வும் அவசியம். ஏனெனில் இப்புரிதலும் விழிப் புணர்வும்தான் வஹியையும் தூதையும் ஷரீஆவையும் ஏமாற்று, மோசடி, அழிவு என்பவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான அடிப் படையான அளவீடாகவும் நியமமாகவும் உள்ளன. மட்டுமன்றி, முஸ்லிம் பகுத்தறிவும் முறைமையும் அறிவியல் இயலாமையின் காரணமாகவும் உள்ளார்ந்த அச்சத்தின் காரணமாகவும் நிர்மூலமாகி விடாமல் பாதுகாப்பதற்கும் இதே புரிதலும் விழிப்புணர்வும்தான் முக்கியமான அளவீடாகவும் நியமமாகவும் உள்ளன.

முஸ்லிம் பகுத்தறிவையும், அதன் முறைமையையும், அதன் ஆரோக்கியமான இயக்கத்தையும் பாதுகாத்தல் என்பது உண்மையில் சன்மார்க்கத்தையும், ஷரீஆவையும், முஸ்லிம் தனிமனிதனையும், சமூகத்தையும் பாதுகாப்பதாகவே அமைகிறது. இவை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையல்ல. ஏனெனில், 'தூது' என்பது இலக்காக வும், பகுத்தறிவும் புலனறிவும் அதற்கான வழிமுறையாகவும் உள் ளன. வழிமுறை நிர்மூலமாகி விட்டால் இலக்கும் நோக்கமும் தொலைந்து விடும்.

அஸ்-ஸுன்னா தொடர்பாக இங்கு நாம் குறிப்பிட்டவை பிற முது சங்களுக்கும் பொருந்தும். அந்த வகையில், ஸுன்னாவைப் போலவே பிற முதுசங்களும் இலகுவாகக் கையாளத்தக்க வகையில் ஒழுங் கமைக்கப்பட வேண்டும். மதிப்பச்சங்களுக்கும் புனிதத்துவங்களுக் கும் அப்பால் நின்று திறனாய்வுப் பார்வை முன்வைக்கப்படுவதோடு, பயனும் நிறையும் எடுத்துக்காட்டப்பட வேண்டும். அப்போதுதான், அம்முதுசங்களின் சிந்தனையும் பிரயோகங்களும் அசல் நிலையோடும் உயிர்ப்போடும் இயங்குகின்ற நவீன இஸ்லாமிய சிந்தனைக்கான மாதிரியாகவும் உதவியாகவும் அமையும். நமது சக்தியை விரயமாக்கி, தேவைகளையும் சவால்களையும் விட்டு நம்மைத் திசை திருப்பக் கூடிய வரலாற்று மோதல்களும் குதர்க்கவாதங்களும் மீண்டும் தலை தூக்காமலும் தவிர்க்கப்படும்.

இஸ்லாமிய முறைமையியலில் வஹியினதும் பகுத்தறிவினதும் பாத்திரம் குறித்து ஏற்பட்ட குழப்ப நிலையும் இங்கு கவனயீர்ப்புச் செய்யப்பட வேண்டிய முக்கிய விவகாரமாகும். (இது பற்றிப் பின்னர் விரிவாகக் கலந்துரையாட உள்ளோம்.) தெளிவற்ற நோக்கு, அனுபவக் குறைவு, நிகழ்வுகள் ஒன்றோடொன்று முட்டி மோதியமை, அரசியல் நோக்கங்களின் தாக்கம் என்பனவே இக்குழப்ப நிலைக்கான காரண மாகும். மெய்யியலாளர்களும் அவர்களது மாணாக்கரும் வேற்று நாகரிகங்களையும் மதங்களையும் தத்துவங்களையும் பின்தொடர்ந்து சென்று, அவற்றின் இறையியல் விவகாரங்களில் முஸ்லிம் பகுத் தறிவை தவறாகப் பிரயோகித்த போதே இது நிகழ்ந்ததெனலாம். இஸ்லாமிய சிந்தனையை வழிநடாத்திய சிலர் கூட இதில் சறுக்கி விட்டமைக்கு முஃதஸிலாக்கள் ஓர் எடுத்துக்காட்டு. ஆயினும், இஸ் லாமிய அகீதாவின் அடிப்படைகள் மீது அதனால் ஏற்படக் கூடிய அபாயத்தை இஸ்லாமிய சிந்தனைத் தலைமை உணர்ந்து கொண்டு எதிர்வினை ஆற்றியது. அந்த எதிர்வினையே பகுத்தறிவையும் அதன் வகிபாத்திரத்தையும் நிராகரிப்பதாக அமைந்து விட்டது. இதனால் பகுத்தறிவின் முக்கியத்துவமும் குறைந்தது. புனித வசனங்களை வெறும் விவரணக் கண்ணோட்டத்திலும், பகுதியளவான மொழியியல் நோக்கிலும் அணுகும் நோக்கு உருவாகி, இஸ்லாமிய சிந்தனைப் பலவீனம் இன்னும் ஆழமடைந்தது. இதன் மோசமான பாதிப்பினால் பிற்காலப் பிரிவுகளில் இஸ்லாமிய சிந்தனை மேலும் வரட்சியடைந் தது. பகுத்தறிவையும் இஸ்லாத்துடன் அதற்குள்ள தொடர்பையும் குறித்த சந்தேகமும் விரோத மனப்பாங்கும் மேலும் வலுவடைந்தன.

### 3) நமது முதுசம்:

**நேற்றைய செல்வம்; இன்றைய கட்டுச்சாதம்; நாளைய பாடம்.**

பாரம்பரிய இஸ்லாமிய முறைமையியல் சார்ந்த சில முக்கிய விவகாரங்கள் குறித்தும், சமகால இஸ்லாமிய சிந்தனையின் செயல் வாதங்கள் குறித்துமான விமர்சன பூர்வமான அறிமுகத்தை மேலே சுருக்கமாக நோக்கினோம். இறுதியாக, சில கேள்விகளுக்கு நாம் விடையளிக்க வேண்டியுள்ளது. முஸ்லிம்களது இன்றைய சிந்தனா-நாகரிக நிலை குறித்து நமது சிந்தைகளில் எழும் கேள்விகள் அவை. இன்றைய உலக வரைபடத்தில் முஸ்லிம்கள் அடைந்திருக்கும் பல வீனத்தின் காரணமாகவும், அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக் கும் அநீதி, இழிவு, அவலம் என்பவற்றின் காரணமாகவும் அந்தக் கேள்விகள் நமக்குள் மீண்டும் மீண்டும் எழுகின்றன.

‘இன்று நாம் அடைந்துள்ள அவல நிலைக்கான கண்டனத்தை யார் மீது சுமத்துவது?’ என்பது அவற்றுள் மிக முக்கியமானதொரு கேள்வி. ஆனால் இவ்வாறான கேள்வியொன்றுக்கே இடமில்லை என்பதுதான் இதற்கான பதிலாகும். ஏனெனில், குறித்த பிரச்சினைக் கான குற்றத்தைச் சுமத்தக் கூடிய ஒரு நபரை அல்லது ஒரு காலத்தைத் தேடியெடுப்பதல்ல உண்மையில் இங்கு முக்கியமானது. அவ்வாறு ஒருவரை அல்லது ஒரு காலப்பிரிவை தேடிக் கொண்டிருப்பதானது இன்னும் பல நூற்றாண்டுகளுக்கும் தலைமுறைகளுக்கும் உம்மா மேற்கொள்ள வேண்டிய பயணம் பற்றிய முழுமைத்துவப் பார் வையை விட்டு நம்மைத் தூரமாக்கி விடும். நமது ஸலஃபுகள் அவர் களது சக்திக்கும், அவர்கள் எதிர்கொண்ட சூழல் நிர்ப்பந்தங்களுக்கும் சவால்களுக்கும் உட்பட்ட வகையில் நமக்கு விட்டுச் சென்ற நேர் பாதையை நோக்கி நமது பயணத்தைத் திருப்புகின்ற உழைப்பிலி ருந்தும் அந்தத் தேடல் நம்மைப் பராக்காக்கி விடும்.

ஆக- நாம் எழுப்ப வேண்டிய மாற்றுக் கேள்வி இதுதான்: சரி யானதொரு சமூகச் சட்டகத்தினுள் நமது பிரச்சினையின் பரிமாணங் களை நாம் புரிந்து கொள்வது எவ்வாறு? நமது பிரதான திசை வழிகளை தெளிவாகத் தெரிந்து கொள்வதும், ஆரோக்கியமான பாதையை நோக்கிப் பயணத்தை மீள ஆரம்பிப்பதும் எப்படி?

இதற்குத் தேவையானது இதுதான்:

1. இறந்த காலத்தை நாம் பிரக்ஞை பூர்வமாகப் புரிந்து, அதிலி ருந்து படிப்பினைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த இறந்த காலத்தை நாம் பலவீனத்துக்கான அடிப்படையாகக் கொள்ளாமல், சக்திக்கான மூலதனமாகக் கொள்ள வேண்டும். நேர்நிலையான அம்சங்களில் கவனம் குவித்து அவற்றை எடுத்துக் கொள்வதன் மூலமாகவும், எதிர்மறையான அம்சங்களை விட்டு விலகுவதன் மூலமாகவும் இதனைச் செய்ய முடியும். ஏனெனில், பிரச்சினை களையும், மோதல்களையும், கவலைகளையும் பற்றிய இழுபறியில் நாம் பல நூற்றாண்டுகளைக் கடத்தி விட்டோம்.

2. நாம் முன்னோக்கி நகர வேண்டுமாயின், கடந்த காலத்தில் ஏற்பட்ட பல குறைபாடுகளுக்கும் தவறுகளுக்குமான காரணிகளுடன் நல்லெண்ணம் என்ற அம்சமும் கலந்திருந்தமையைப் புரிந்து கொள் வது அவசியம். மட்டுமன்றி, முன்னைய தலைமுறைகளைச் சூழ்ந் திருந்த யதார்த்தங்களும் சூழமைவுக் காரணிகளும் கூட இங்கு

கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அன்றைய சவால்களுக்கும் முன்னுரிமைப் படுத்தல்களுக்கும் மத்தியில் இத்தகைய காரணிகளது நீண்ட காலத் தாக்கங்களை கவனமாகப் புரிந்து கொள்வது அவ்வளவு எளிதாக இருந்திருக்காது. இந்நிலைதான் பல நேரங்களில் உம்மாவை யும், அதன் சமூகங்களையும், தலைமைகளையும் விரும்பத்தகாத தாக்கங்களை ஏற்படுத்தும் பிரிசந்திகளை நோக்கித் தள்ளியது. எனவே, முன்னோர்களது வரலாற்றை நாம் ஆய்வதன் சரியான நோக்கம் பாடங்களையும் படிப்பினைகளையும் பெற்றுக் கொள்வதாகவே இருக்க வேண்டும். கழிந்து விட்ட காலங்கள் குறித்தும், நடந்து முடிந்த நிகழ்வுகள் குறித்தும் காழ்ப்புணர்வையும் பகையையும் கசப்புணர்வையும் இழுத்து வருவதாக அது அமைந்து விடக் கூடாது. அவர்களது இடத்தில் நாம் இருந்திருந்தால், அவர்களை விடச் சிறப் பாக அவற்றைச் செய்திருப்போம் என்று சொல்வதற்கில்லை. எனவே, இன்றுள்ள நமது யதார்த்தத்தையும் சவால்களையும் விடுத்து, முன் னோர்களது தவறுகளை இழுத்து வந்து சச்சரவுப் பட்டுக் கொள் வதில் எந்த நன்மையும் கிட்டப் போவதில்லை. இறந்த காலத்தைக் கற்பதன் நோக்கம் புரிந்து கொள்வதாகவும், படிப்பினை பெறுவ தாகவுமே இருக்க வேண்டும். அப்போதுதான் அது பலவீனத்துக்கும் பிரிவினைக்கும் பரஸ்பரக் கழுத்தறுப்புக்குமான அடிப்படையாக அன்றி, பலத்துக்கும் தொடர்ச்சியான நிலைபேற்றுக்குமான ஆதார மாக அமையும்.

நமது உம்மாவும், சூழவுள்ள உலக சமுதாயங்களும் சாதித்தவற்றை இஸ்லாமும், இஸ்லாமிய சிந்தனையும், இஸ்லாமிய முறைமையும் இல்லாது போயிருப்பின் சாதிக்க முடிந்திருக்காது என்பதை வர லாற்றுப் பாடங்கள் நினைவூட்டுகின்றன.

இஸ்லாமிய சிந்தனையும் முறைமையும் ஆரம்ப காலங்களில் நிகழ்த்திய பெரும் சாதனையே முன்னைய இஸ்லாமிய நாகரிகத்தின் தாங்கு தூண்களை நிறுவியது என்பதை நாம் நினைவில் கொள்வது அவசியம். அந்தச் சாதனையே மனித இனத்தைக் கூட நாகரிகப் பாய்ச்சலொன்றை நோக்கி நெம்பித் தள்ளியது. இன்று நவீன மானிட நாகரிகம் பல பௌதீக இயலுமைகளையும், அறிவியல்-நாகரிகச் சீர்திருத்தங்களையும், மத-சமூக-சிந்தனா சீராக்கங்களையும் எட்டி இருந்தாலும், அவற்றுக்கு முன்னோடியாக இஸ்லாமிய நாகரிகம் வகித்த பாத்திரத்தை எவராலும் மறுக்க முடியாது. இந்தச் சாதனை யையும் அதன் பரப்பையும் முக்கியத்துவத்தையும் நுணுக்கமாகப்

பரிசீலிப்பவர் அவரது அனுமானத்தை விஞ்சும் வகையிலான பிரமிப் பூட்டும் அம்சங்களைக் கண்டு கொள்வார் என்பதில் ஐயமில்லை.

ஆயினும், வாசகரின் முன்னுள்ள இந்த ஆய்வினது நோக்கம் எதிர்காலத்திற்கு எது தேவையானது என்பதைக் கண்டறிவதே. அப் போதுதான் முஸ்லிம் உம்மா தொடர்ந்து வளர்ச்சியடைந்து புதிய திசைகளைக் கண்டடையலாம். நவீன நாகரிகப் பங்களிப்பை நோக்கி -நமது முன்னோர்களைப் போன்று- புதிய உத்வேகத்துடன் எட்டு வைக்கலாம். நவீன நாகரிகத்தின் குறைபாடுகளையும் கோளாறு களையும் சீர்செய்து, அதன் பிறழ்வினால் தனக்கு மட்டுமன்றி முழு மனித இனத்துக்கும் ஏற்படக் கூடிய அபாயங்களையும் தவிர்க்க லாம். அதன் மூலமாக, -இறை நாட்டப்படி- இந்த மார்க்கமும் உம்மாவும் தமது ஆற்றலையும் சக்தியையும் சீர்திருத்தத்துக்கான தலைமைப் பாத்திரத்தையும் மீளப் பெறலாம்.

3. ‘தல்ஃபீக்’(5) கட்டத்திலிருந்து நாம் வெளிவர வேண்டும். அர சியல், இராணுவ, பொருளாதார, கலாசாரத் தளங்களில் மேற்குலகு பெற்ற மேலாண்மையினதும், காலனிய-நாகரிகத் தாக்கத்தினதும் எதிர்வினையாக உம்மாவும் அதன் படித்த வர்க்கமும் மேற்கை அடியொற்றிச் சென்றமையை இது குறிக்கிறது. புனித வசனங்களை வெறும் சொற்பொருள் அணுகுமுறையூடாகப் புரிந்து கொண்டு, மேற்கைப் பின்பற்றும் உபாயத்தை அவர்கள் கைக்கொண்டனர். இதனால், மேற்கின் கருவிகளையும் சாதனைகளையும் நிறுவனங் களையும் மட்டுமன்றி, அவற்றுடன் தொடர்புபட்ட அனைத்துக் கருத்தாக்கங்களையும் பெறுமானங்களையும் நடைமுறைகளையும் கூட இறக்குமதி செய்யும் பணியை அவர்கள் இலகுவாக்கினர். அவை உம்மாவின் நம்பிக்கைகள், பெறுமானங்கள், கொள்கைகள், உள வியல் முதலிய அனைத்துக்கும் அன்னியமாக இருந்தன.

‘தக்லீத்’ நிலையிலிருந்து அசல் நிலையையும் புத்துயிர்ப்பையும் நோக்கி நகராமல், ‘தல்ஃபீக்’ நிலையை நோக்கி நகர்ந்தமையானது தேக்க நிலையினதும் இஸ்லாமிய சிந்தனா முறைமை வீழ்ச்சியினதும் இயல்பான பெறுபேறாக அமைந்தது. இறுதியில் அந்த முறைமை யானது புனித வசனங்களை பதவுரையின் வட்டத்தில் மாத்திரம் ஆய்வுக்குட்படுத்தும் வெற்றுக் கோட்பாட்டு முறைமையாக மாறியது. மனித உள்ளங்களிலும், இஸ்லாமிய சமூகங்களிலும், மானிட சமு தாயத்திலும் ஆரம்ப இஸ்லாமிய காலப் பகுதிக்குப் பின் வந்த

நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் நிகழ்வுகளையும் பற்றிய சரியான புரிதலோ அறிவியல் அவதானமோ அதில் இருக்கவில்லை.

அசல் தன்மை வாய்ந்த சிந்தனையானது வெறும் கண்மூடிப் பின்பற்றலை நிராகரிக்கிறது. யதார்த்தத்தையும் அறிவார்ந்த நடைமுறைகளையும் விட்டொதுங்கி, வெறும் கோட்பாட்டுத் தளத்திலும் சொல்லாய்வு முறைமையிலும் சுருங்கி நின்று வசனங்களை அணுகும் மலட்டுத்தனமான 'தல்ஃபீக்' முறைமையை அது ஏற்பதில்லை.

இந்த அசல் தன்மையானது சிந்தனா ரீதியான சீர்திருத்தத் தொடக்கமொன்றை வற்புறுத்துகிறது. முறைமை சார்ந்த ஊற்றுக்களிலிருந்து ஆரம்பிக்கும் இச்சீர்திருத்தமானது, இஸ்லாமியக் கருத்தாக்கத்தையும் இலக்குகளையும் பெறுமானங்களையும் சமூக-நாகரிகக் கட்டமைப்பின் மீதும் இஸ்லாமிய செயல்வாதத்தின் மீதும் பிரதிபலிக்கிறது. மட்டுமன்றி, அது யதார்த்தத்தையும் செயலையும் இஸ்லாமிய ஆற்றுகையினதும், நம்பிக்கை மற்றும் சிந்தனா மூலங்களினதும் இயல்பான பெறுபேறாக மாற்றுகிறது. இறுதியில் அது சுயாதீன இஸ்லாமிய அறிவியல் நோக்கொன்றையே குறித்து நிற்கிறது எனலாம். இஸ்லாமிய சமூகவியல் விஞ்ஞானங்களால் அந்நோக்கு துல்லியமாக வரையறுக்கப் பட்டிருக்கும். அந்த இஸ்லாமிய சமூகவியல் விஞ்ஞானங்கள் தமக்கென தனித்துவமான அறிவு மூலங்களை மட்டுமன்றி, பிரத்தியேகமான கருதுகோள்களையும் தொடங்கு தளங்களையும் இலக்குகளையும் கூட கொண்டிருக்கும். அந்த வகையில், அசல் தன்மை கொண்ட, அறிவார்ந்த, விஞ்ஞான பூர்வமான, ஒழுங்கமைக்கப்பட்ட மாற்றுக் கண்ணோக்கு ஒன்றின் உருவாக்கமே இதன் இறுதி நிலைப் பொருளாகும். பிறர் கண்டடைந்த தகவல்களிலிருந்தும் சாதனைகளிலிருந்தும் பயன்பெற அக்கண்ணோக்கு முயற்சிப்பதுடன், அவற்றை வரவேற்கவும் செய்யும். அதே வேளை, அவற்றைத் தனது அளவுகோல்களின் படியும், தனது தனித்துவமான நோக்கின் வழியாகவுமே அது எடுத்துக் கொள்ளும்.

முதல் தலைமுறைக்குப் பிறகு இஸ்லாத்தின் பயணத்தில் ஏற்பட்ட பின்னடைவுக்கும் ஃகிலாபா றாஷிதாவின் வீழ்ச்சிக்கும் காரணம் இஸ்லாமிய சிந்தனையோ இஸ்லாமியத் தலைமைகளின் தவறுகளோ அன்று. மாற்றமாக, பூமியின் நாலா புறங்களிலும் இருந்து பல்வேறு சமூகங்களும் சமுதாயங்களும் ஒரேயடியாக பாரிய எண்ணிக்கையில் இஸ்லாத்தையும் முஸ்லிம் சமூகத்தையும் நோக்கி வந்தமையே அதற்கு முதல் நிலைக் காரணமாகும். அச்சமுதாயங்கள்

ஏலவே தமக்குள் படிந்திருந்த அனைத்துக் கலாசாரங்களையும் மௌட்டீகங்களையும் சுமந்து கொண்டுதான் இஸ்லாத்தினுள் வந்திருந்தன. ஆயினும், அவை இஸ்லாமியத் தராசு கொண்டு நிறுக்கப்படவில்லை. அலையலையான இந்த நுழைவையும், அதன் விளைவான நிகழ்வுகளையும் முஸ்லிம் உம்மாவினால் சமாளிக்க முடியாமல் போனது. அச்சமூகங்களையும் கோத்திரங்களையும் முதிர்ச்சியடையச் செய்வதற்கு அவசியமான பயிற்றுவித்தல் முறைகளை விருத்தி செய்து கொள்ள அதனால் முடியவில்லை. அச்சமூகங்களது இளைய தலைமுறையை முன்னைய மௌட்டீகங்களிலிருந்து விடுவித்து, இஸ்லாமிய சிந்தனையின் அடிப்படையிலும் அதன் இலக்குகள், நோக்கங்கள், பெறுமானங்கள், அளவுகோல்கள் என்பவற்றின் அடிப்படையிலும் மீட்டுருவாக்கம் செய்யவும் அதனால் முடியாமற் போனது. இந்நிலையானது முதல் தலைமுறை முஸ்லிம்களின் கட்டுக்கோப்புத் தரத்திலிருந்து பிசகிய அரசியல் தளங்கள் உருவாகக் காரணமாகியது. ஆரம்ப இஸ்லாமிய சமூகமும், அதன் நேர்வழி அரசும் கட்டமைத்திருந்த அரசியல்-இராணுவ முதிர்ச்சி நிலை இப்பின்னைய கட்டத்தில் இருக்கவில்லை.

இவ்வாறு இஸ்லாத்தை நோக்கி வந்த சமூகங்களையும், கோத்திரங்களையும் உரிய வகையில் தயார் படுத்துவதிலும், இஸ்லாத்தின் முழுமொத்த இலக்குகள் மற்றும் பெறுமானங்களின் அடிப்படையில் அவற்றை முதிர்ச்சியடையச் செய்வதிலும் ஏற்பட்ட கோளாறானது, பற்றுறுதியற்ற அரசியல் தலைமைகள் உம்மாவின் அரசியலையும் நிர்வாக விவகாரங்களையும் நடாத்திச் செல்வதற்கு அச்சமூகங்களைச் சார்ந்து நிற்க இடமளித்தது. இந்நிலையில், (ஏலவே பற்றுறுதியற்ற அரசியல் தலைமை மற்றும் உம்மாவின் விவகாரங்களை நிர்வகிப்பதிலிருந்து இஸ்லாமிய அறிஞர்கள் தூரமாக்கப்பட்டிருந்தமை என்பவற்றின் பின்புலத்தில்) இஸ்லாமிய சிந்தனையின் செழுமையான பங்களிப்பு தொடராமல் போனதும், வழிகாட்டல், ஒழுங்கமைத்தல், தொழிநுட்பம் முதலிய துறைகளில் அதன் தாக்கம் குறைந்து போனதும் ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல.

எவ்வாறாயினும், இஸ்லாத்தின் சிந்தனை, அதன் தாக்கம், ஆன்மா, புத்தாக்க முறைமை என்பவற்றின் அடிப்படையில் ஆரம்ப காலங்களில் நிகழ்ந்த சாதனைகள் பின்வந்த நூற்றாண்டுகளின் இருளுக்கும் வெளிச்சம் பாய்ச்சின. மட்டுமன்றி, நேர்வழிக்கும் அறிவியலுக்கும் சாதனைகளுக்குமான கோட்டைகளையும் அவை கட்டியெழுப்பின.

அவை இல்லையெனில், மனித இனம் இவ்வளவு உயர்ந்த சாதனை களை நிகழ்த்தியிருக்க முடியாது.

இஸ்லாத்தின் முதல் தலைமுறை மாந்தரைச் சூழ்ந்து நின்ற இத்தகைய சவால்கள், அவர்களுக்கிருந்த வசதிகள், அவர்கள் நிகழ்த் திய மாபெரும் சாதனைகள் என்பவற்றின் ஒளியில் நின்று பார்த்த பிறகும், அவர்கள் மீது குற்றம் சுமத்தும் தேவை நமக்கு உள்ளது தானா? மௌட்டீகங்களதும் தத்துவங்களதும் பிறழ்வுகளதும் திரட்சி யான தாக்குதலுக்கு முன்னால் உம்மாவின் ஆற்றுகையும் பார்வைத் தெளிவும் பின்னடைந்தமைக்காக நாம் ஆச்சரியப்பட அல்லது கண்ட னத்தை முன்வைக்கத்தான் முடியுமா? கோத்திரங்களும் சமூகங்க ளும் அலை அலையாகத் திரண்டு வந்த போது, உம்மா அன்றிருந்த சூழ்நிலையிலும் வசதி வாய்ப்பிலும் அந்த அனைவரையும் உள்வாங்கி முதல் தலைமுறை போன்று பயிற்றுவிக்கத்தக்க நிறுவனங்களையோ சக்தியையோ கொண்டிருக்கவில்லை. எனவே, அத்தகைய சூழ்நிலை யில் உம்மாவின் கண்ணோக்கில் மயக்கம் தோன்றுவது தவிர்க்க முடியாதது; உம்மாவின் ஆக்க சக்திகள் படிப்படியாகப் பலவீனம டைந்து பின்வாங்குவதும் தவிர்க்க முடியாதது. இறுதியாக, உம்மா வின் சிந்தனையானது வெறும் தோற்றங்களாகவும் வடிவங்களாகவும் சொற்களாகவும் முதுசங்களாகவும் மாத்திரம் எஞ்சி நிற்கும் என்பதே நிதர்சனமாகும். பின்னால் தோன்றும் தலைமுறைகள் அவற்றை போற்றிப் புனிதப்படுத்தலாம். ஆனால் அவற்றின் உள்ளடக்கத்தை உண்மையாகப் புரிந்து கொள்ள முடியாது. அவற்றினுள் மறைந் திருக்கும் ஆற்றல்களிலிருந்து நடைமுறை வாழ்வில் அவர்களால் பயன்பெறவும் முடியாது.

எல்லா விதமான தடைகளுக்கும் அப்பால், இஸ்லாமிய சிந்தனை யானது உம்மாவுக்கும் மனித இனத்துக்கும் பல்வேறு துறைகளில் -வேறுபட்ட தரங்களில்- ஆற்றிய பங்களிப்புக் குறித்து நாம் அவசியம் பெருமைப்பட வேண்டும். இஸ்லாமும் அதன் முறைமையும் சிந் தனை, வளப்படுத்தல், சீர்திருத்தம் என்பவற்றுக்கு ஆற்றிய பங்க ளிப்பைத் தெரிந்து கொள்ளாமல் நமது வரலாற்றிலும் இருப்பிலும் நிகழ்ந்த சாதனைகளைப் புரிந்து கொள்ளவோ அவற்றை வியாக்கி யானப் படுத்தவோ நம்மால் முடியாது. இஸ்லாமிய சிந்தனையும் அதன் முறைமையும் தமக்கு இயலுமான பங்களிப்பை முழுமையாக வழங்கியிரா விடினும், இன்று வரை அது வழங்கியிருப்பது அதிகம் தான். எவ்வளவு தடைகள் இருந்த போதிலும், அதன் முழுமை

தழுவிய பிரமாண்டமான பங்களிப்பே அதனுள் மறைந்திருக்கும் ஆற்றல்களுக்கும், மீள மீளப் புத்துயிர்ப்படையும் அதன் சக்திக்கும் சிறந்த சான்றாகும்.

இன்று நாம் வந்தடைந்திருக்கும் கட்டம் பல சமுதாயங்களையும் காலப்பிரிவுகளையும் கடந்து வந்த பயணம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்பயணம் வழங்கியிருக்கும் பங்களிப்பே இன்று மனித நாகரிகம் அடைந்துள்ள அனைத்து ஆற்றல்களதும் அடித்தளமாகும். தீமைகளும் மௌட்டீகங்களும் ஒன்று திரண்டு இப்பயணத்தையும் அதன் பங்களிப்பையும் இடைநிறுத்த முயன்றாலும், தெளிவானதும் முழுமொத்தமானதுமான நோக்கொன்றைச் சென்றடைவதே இன்று தேவையான யத்தனமாகும். ஏனெனில் அத்தகைய நோக்கின் மூலமாகவே இஸ்லாத்தின் ஒளி மீண்டு வருவதற்கும், உம்மா ஆரோக்கியமடைந்து தனது பயணத்தைத் தொடர்வதற்குமான பாடங்களையும் படிப்பினைகளையும் நாம் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு நேர் மார்க்கமாகவும், வெற்றியளிக்கும் அறிவியலாகவும், நன்மையும் பாதுகாப்பும் சமாதானமும் நிறைந்த நாகரிகமாகவும் அது மனிதனுக்குத் தனது பங்களிப்பை முழுமையாக வழங்குவது அப்போதே சாத்தியாகும்.

பொறுப்பை அல்லது கண்டனத்தை யார் மீது சுமத்துவது என்று தேடுவதல்ல இங்குள்ள உண்மையான பிரச்சினை. மாறாக, நமது பயணத்திலும் பங்களிப்பிலும் ஏற்பட்ட குறைபாட்டுக்கும் பின்னடைவுக்குமான காரணங்களைத் தேடியறிவதிலேயே அது மறைந்துள்ளது. நமது பார்வையை மீட்டெடுப்பதற்கும், நமது சக்தியைப் புதுப்பித்துக் கொள்வதற்கும், நமது பயணத்தை திசைபடுத்திக் கொள்வதற்குமான மிகச் சிறந்த பாதையை அடைந்து கொள்வதே நம்முன் உள்ள உண்மையான பிரச்சினை.

அந்த வகையில்- பார்வையைப் புதுப்பித்தல், முறைமையைச் சீரமைத்தல், ஆற்றலுக்கும் உழைப்புக்குமான மூலங்களை வளர்த்தெடுத்தல் என்பவற்றுக்கான எட்டொன்றாகவே நமது ஆய்வின் முடிவு அமைகிறது. நமது உம்மா சாதித்திருக்கிறது; பங்களித்திருக்கிறது. ஆயினும் இன்னும் அதனிடம் எதிர்பார்க்கப்படுவது ஏராளம். விமர்சன பூர்வமான, ஆழ்ந்த ஆய்வுப் பார்வையொன்று ஆரம்பிக்கப்படுவதே இன்று வேண்டப்படும் முதற்பணி. அப்போதுதான் நம்மிலும் நமது சிந்தனையிலும் நமது முறைமையிலும் உள்ள

பலவீனத்தையும் கோளாறையும் புரிந்து கொண்டு, சீர்திருத்தத்தை நோக்கிச் செல்லவும், நிறைவான பங்களிப்பை வழங்கவும் நமக்குச் சாத்தியமாகும்.

ஆக- நமது சிந்தனை சார்ந்த பிரச்சினைகளையும், நமது சிந்தனையின் வரலாற்றையும், இஸ்லாமிய முறைமையையும் முழுமையான நோக்கில் அணுகுவதற்குப் பொருத்தமான இடமொன்றை நமது இந்த ஆய்வுப் புள்ளியில் எட்டியிருக்கிறோம். அத்தகையதொரு முழுமையான பார்வையே நமது செல்நெறியையும் நாம் முகம் கொடுக்க வேண்டிய உண்மையான சவால்களையும் அறிந்து கொள்ளவும், அறிவார்ந்து புரிந்து கொள்ளவும் நமக்கு உதவும். கட்டமைப்பிலும், சிந்தனையிலும், சமூக-நாகரிகச் செயற்பாட்டிலும் நாம் ஆசிக்கின்ற இஸ்லாமிய அசல்தன்மையை சாத்தியப்படுத்திக் கொள்வது இதன் மூலமாகவே நமக்குச் சாத்தியமாகும்.

இஸ்லாம் என்பது அல்லாஹ்விடமிருந்து அவனது படைப்புகளுக்காக வந்த நேர்வழித் தூது. வரலாற்றின் மிக இருள் சூழ்ந்த மௌட்டீகக் கால கட்டமொன்றில் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்த போது அது வந்தது. அநியாயமும் சீர்கேடும் அக்கால கட்டத்தில் எங்கும் பரவியிருந்தன. ஆன்மாவை மூடியிருந்த இருளை அகற்றி, ஆழ்ந்த சிந்தனைக்கும் அறிவுக்கும் ஆக்கத்துக்குமான வழிகளை மனித பகுத்தறிவுக்கு இஸ்லாம் திறந்து கொடுத்தது. அதன் விளைவாகவே மனித இனம் ஒரு புதிய நாகரிகப் பயணத்தை ஆரம்பித்தது. இஸ்லாத்தின் வழிகாட்டல் இல்லையெனில், இன்று மனித இனம் சாதித்திருப்பதைச் சாதிக்க முடியாமல் போயிருக்கும்.

நவீன மனிதனுக்கு இஸ்லாம் வழங்கிய மிக முக்கியமான கொடைகளுள் ஒன்று அவனது அறிவை ஒருமுகப் படுத்தியமை ஆகும். வஹியின் உறுதிப்படுத்தல் மூலமாகவும் பாதுகாப்பின் மூலமாகவும் அது நடந்தேறியது. மனிதப் பகுத்தறிவானது அறிவியல், சீர்திருத்தம், வளப்படுத்தல் ஆகிய துறைகளில் தனது ஆக்கபூர்வமான வகிபாத்திரத்தை மேற்கொள்ளும் வகையில் இஸ்லாம் அதன் தளைகளை அறுத்து விடுதலை செய்தது.

ஆரம்ப கால முஸ்லிம் பகுத்தறிவின் முறையியலானது சுயாதீனமானதாகவும் முழுமையாக ஒருங்கிசைந்ததாகவும் அமைந்திருந்தது. வஹீயின் ஞானமிக்க வழிகாட்டல், பகுத்தறிவின் ஆரோக்கியமான இஜ்திஹாத், மனிதர்களதும் பிற படைப்புகளதும் இயல்பு நிலைகள்

பற்றிய நுண்ணிய புரிதல் என்பவற்றை அது அடிநாதமாகக் கொண்டிருந்தது. எனவேதான், நுபுவ்வத்தினதும் நேர்வழி ஆட்சியினதும் காலகட்டம் ஒரு சான்றாகவும், வழிகாட்டிக் காப்பாற்றும் முன்மாதிரியாகவும் அமைந்தது. மனித ஆன்மாவிலும், பல தலைமுறைகளின் பயணத்திலும் சுடர் விட்டுப் பிரகாசித்த முன்மாதிரி அது. இஸ்லாத்தின் பூமியிலும் அதன் சமூகங்களிலும் இன்று வரை நன்மையேதும் எஞ்சியிருக்கிறது எனில், அதற்குக் காரணம் இஸ்லாமும் அதன் விழுமியமும் இலக்குகளும்தான். சரிந்து வீழ்வதற்கான அனைத்துக் காரணிகளுக்கு மத்தியிலும், உம்மாவை காலம் காலமாக அழிவிலிருந்து காக்கின்ற அரணாக இஸ்லாம் அதன் உணர்வில் தங்கி நின்றது இப்படித்தான்.

## அத்தியாயம் மூன்று

# இஸ்லாமிய சிந்தனா முறையியலின் அடிப்படைகள்

இஸ்லாமிய சிந்தனை முறையியலின் மரபார்ந்த சட்டகம் பற்றிய அறிமுகமும் திறனாய்வும் கொண்ட பார்வையொன்றை சுருக்கமாக முன்னர் தந்தோம். அம்முறைமையின் அடிப்படைகள், பிரச்சினைகள், அப்பிரச்சினைகளுக்கான காரணங்கள் என்பவை பற்றியும் விளக்கினோம். அம்முறைமையின் கட்டமைப்புக் கோளாறினால் விளையக் கூடிய முக்கியமான எதிர்மறைத் தாக்கங்களையும் சுட்டிக் காட்டினோம்.

இஸ்லாமிய நாகரிகத்தின் ஆரம்ப காலச் சூழமைவில் முஸ்லிம் பகுத்தறிவின் உயிர்ப்பும், 'உஸூல்' சார்ந்த சட்டகமும் தமது பங்களிப்பைச் சரியாக ஆற்றியிருந்தன. எனினும், பின்னர் அதில் தோன்றிய குறைபாடு காலப்போக்கில் பெரிதாகத் தொடங்கியது. உம்மாவின் பின்னைய யதார்த்தமும் சவால்களும் கால-இடச் சூழமைவுகளும் தூதுத்துவக் காலச் சூழமைவிலிருந்தும் ஆரம்பத் தலைமுறையின் நடைமுறைகளிலிருந்தும் தூரமாக ஆக அக்குறைபாடு விஸ்வரூபம் அடைந்தது.

இஸ்லாமும் முஸ்லிம்களும் எதிர்கொண்ட அத்தனை சூழ்நிலைகளுக்கும் தடைகளுக்கும் மத்தியிலும், முஸ்லிம் பகுத்தறிவும் முறையியலும் பெருமளவு இஸ்லாமிய சக்தியை வெடித்து வெளிவரச் செய்தன. அவை மனிதனையும் மனிதப் பகுத்தறிவையும் புதியதொரு சட்டகத்தினுள் இட்டதோடு, முஸ்லிம் சிந்தைக்கு முன்னால் உழைப்புக்கும் புத்தாக்கத்துக்குமான பரந்த வாய்ப்புகளையும் திறந்து கொடுத்தன. மனித இனம் முன்னெப்போதும் கண்டிராத சட்ட,

அறிவியல், நாகரிக முதுசமொன்றையும் சிந்தனையொன்றையும் அவை வழங்கின. மூட நம்பிக்கைகள், யூகங்கள், பிறழ்வுகள், மாச்சர்யங்கள், உரிமை மறுப்புகள் என்பவற்றால் இருளடைந்திருந்த மானிட வாழ்வுக்கு அந்த முதுசமும் சிந்தனையும் ஒளியூட்டின.

காலம் தூரமடைந்து, நிலைமைகள் மாற்றமடைந்து, இஸ்லாமிய இலக்குக்கும் பற்றுக்கும் சமூக-அரசியல் தலைமைகளுக்கும் மத்தியிலான இடைவெளி அதிகரித்து, இஸ்லாமிய சிந்தனையும் முஸ்லிம் அறிஞர்களும் மேலும் மேலும் தனிமைப்பட்ட போது இஸ்லாமியத் தாக்க விளைவு பலவீனப்படலானது; இஸ்லாமியப் பங்களிப்பு நலிவடையத் தொடங்கியது. முஸ்லிம் உம்மாவுக்கும் அதன் நாகரிகத்துக்கும் முன்னால் குறிப்பிடத்தக்க வேறு நாகரிகச் சவாலொன்று காணப்படாமையும் இப்பலவீனத்துக்கு வழியமைத்தது. எவ்வாறாயினும், இஸ்லாமிய நாகரிகத்தின் நிலைமைகள் எவ்வளவு பின்னடைந்திருந்த போதிலும், அது பிற பல நாகரிகங்களை விடவும் சிறந்த நிலையிலேயே பல நூற்றாண்டுகளாகத் திகழ்ந்தது.

பிந்திய நூற்றாண்டுகளில் மேற்கைரோப்பியச் சவால் தோன்றிய போதுதான் முஸ்லிம் உம்மா தனது நிலைமைகளை மீள்பரிசீலனை செய்யவும், தனது அடிப்படைகளையும் இயங்குதளங்களையும் சிந்தனா முறைமைகளையும் ஒழுங்குகளையும் பரிசோதித்துப் பார்க்கவும் வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது.

காலவோட்டத்தில் உம்மாவின் அங்கத்தவர்கள் பல்கிப் பெருகினர். அதனுள் அடங்கும் சமூகங்கள் விரவி வியாபித்தன. அதன் இருப்பும் வளங்களும் சவால்களை எதிர் கொண்டன. அதே சமகாலத்தில் மேற்கத்திய சமூகங்களில் பரவிய நாகரிக நோய்களால் அபாயங்கள் இன்னும் விஸ்வரூபம் எடுத்தன. அந்த அபாயங்களால் மேற்கு சமூகங்கள் மட்டுமன்றி, முழு மனித இனமும் அழிந்து விடும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. இந்த அனைத்துக்கும் முன்னால் உம்மா தன்னைக் குறித்தும், தனது சிந்தனை குறித்தும், அடிப்படைகள் குறித்தும் மீள்பரிசீலனை செய்வதைத் தவிர வேறு தெரிவு இருக்கவில்லை. ஏனெனில், உம்மாவின் வகிபாத்திரமும் அது எதிர்கொள்ளும் சவால்களும் மிக மேலோட்டமான சிந்தனா அணுகுமுறையொன்றினால் கையாளப்பட முடியாதவை என்பது அறிவார்ந்து சிந்திக்கும் எவருக்கும் தெளிவாகும் உண்மையாகும். வெறுமனே இராணுவ-அரசியல் அணுகுமுறையினாலோ, தோற்றுப்போன உணர்ச்சிவயப்பாட்டு அணுகுமுறையினாலோ அவை கையாளப்பட முடியாதவை.

ஆக- கசப்பான இந்த யதார்த்தத்துக்கு முன்னால் அனைத்துப் போலி ஆரூடங்களதும், பாரம்பரியப் போராட்டங்களதும், நலன் களதும் முகத்திரை கிழிக்கப்படுவதைத் தவிர வேறு வழி இல்லை. ஏனெனில், உம்மா அடைந்திருக்கும் பலவீனம், பிற்போக்கு, துன்பம் என்பவற்றுக்கு முன்னால், அஞ்சுவதற்கோ இழந்து விடுவோம் என்று பயப்படுவதற்கோ இன்று எதுவும் இல்லை. அதனிடம் எஞ்சி நிற்பதெல்லாம் துன்பமும் வேதனையும் பலவீனமும் பிரிவினையும் மட்டுமே.

இன்று உம்மாவின் நாகரிகப் பொறுப்பு என்பது அதன் சுயத்துக் கும் வரலாற்றுக்கும் முன்னுள்ள பொறுப்பாகும். ஃகிலாபா மற்றும் சீர்திருத்தம் சார்ந்த புனிதப் பொறுப்புகளுக்கு முன்னால் அது நிற் கிறது. அதன் உயர்ந்த இஸ்லாமியத் தூதிலிருந்தே இப்பொறுப்புகள் பிறக்கின்றன. நவீன மானிட நாகரிகத்துக்கான அடிப்படைகளை இட்டுத் தரும் பொறுப்புகள் அவை.

இஸ்லாமியத் தூதினதும் இஸ்லாமிய நாகரிக முதுசங்களதும் இயங்கு தளங்களின் மீதே மேற்கு நாகரிகம் கட்டியெழுப்பப்பட்டது. முன்னைய மானிட நாகரிகத்தின் பல அடிப்படைகளை சீரமைக்கக் கூடிய அசலான பல அம்சங்களை அந்தத் தளங்களே வழங்கின. முஸ்லிம் உம்மாவிலிருந்தும், இஸ்லாமிய நாகரிகத்திலிருந்தும், முதுசங்களிலிருந்தும் ஐரோப்பா பெற்றுக் கொண்ட மத, விழுமிய, சமூக, சிந்தனா, அறிவியல் சீர்திருத்தங்களில் இதன் தாக்கத்தை நாம் தெளிவாக அவதானிக்கலாம்.

இஸ்லாத்தின் நிலமெங்கும் மேற்கத்தியர்கள் சுற்றித் திரிந்திருக்கி றார்கள். அதன் சிந்தனைகளையும் சாதனைகளையும் கண்டிருக்கி றார்கள். இஸ்லாமியப் பல்கலைக்கழகங்களிலும், இஸ்லாமிய நூல கங்களிலும், இஸ்லாமிய மொழிபெயர்ப்புகளிலும் அவற்றைக் கற்றி ருக்கிறார்கள். ஐரோப்பிய எழுச்சிக் காலச் சிந்தனைகளும் முதுசங் களும் நாகரிகச் சீர்திருத்தங்களும் இதற்குச் சான்று பகர்கின்றன.

மட்டுமன்றி, இன்று மேற்குலகு அனுபவித்துக் கொண்டிருக்கின்ற பல துன்பங்களுக்கும், சமூக நோய்களுக்கும், தனிநபர் மற்றும் குடும்ப உளவியல் பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணம் மேற்குலகு இஸ்லாமிய நாகரிகத்திடம் பெற்றிருந்த பல சமூக-விழு மியக் கருத்தாக்கங்களையும் அடிப்படைகளையும் உதறித் தள்ளி யமையே என நாம் கருதுகிறோம். மேற்குலகு பலமடைந்து மமதை

கூடிய போதே இது நிகழ்ந்தது. இஸ்லாமிய நாகரிகத்திலிருந்து தான் பெற்ற பெறுமானங்களும் கருத்தாக்கங்களும் பாரம்பரியங்களும் இனியும் தனக்குத் தேவையில்லை என அது எண்ணி விட்டது. தனது சக்தியும் பௌதீக ஆற்றலும் ரோம-கிரேக்க விக்கிரக வழிபாட்டு முதுசத்திலிருந்தும், மத்திய கால கிறிஸ்தவ மௌட்டீக முதுசத்தி லிருந்தும் பெற்ற சுய சார்புப் பண்பிலிருந்தே ஊற்றெடுப்பதாக அது நம்பி விட்டது. சமூக, அறிவியல், சிந்தனா சீர்திருத்தங்களின் போது தனக்குச் சகாயமளித்த இஸ்லாமிய நாகரிகத்திலிருந்தும் பெறுமானங் களிலிருந்தும் இயங்கு தளங்களிலிருந்தும் தனது ஆற்றல் வேறானது என்பது அதன் எண்ணம். இத்தகைய நிலைப்பாட்டின் தாக்கத்தை இன்று சிதைந்து சிதறிப் போயுள்ள அதன் குடும்ப-சமூகச் சூழமைவில் நாம் காண்கிறோம். அறிவியல், தொழிநுட்பம், அரசியல் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள விழுமிய வறுமையிலும் இத்தாக்கத்தைக் காண்கிறோம். இந்நிலையானது மேற்கின் இருப்பை உள்ளார்ந்து அச்சுறுத்துவது மட்டுமன்றி, புறத்தே முழு மனித சமூகத்தையும் அச்சு றுத்துவதாக மாறியிருப்பது அனைவருக்கும் கண்கூடு.

ஆக- மேற்கும் முழு உலகும் இன்று வந்தடைந்திருக்கும் துர்ப் பாக்கிய நிலையில், நவீன மனிதனுக்கும் முஸ்லிம் உம்மாவுக்கும் முன்னாலுள்ள ஏக தெரிவு இஸ்லாம் மட்டுமே. உம்மாவினதும் முழு மனித இனத்தினதும் பயணத்தை நேர்பாதைக்கு மீட்டுக் கொண்டு வரக்கூடிய ஏக தெரிவு அதுதான். சத்தியம், நீதி, விழுமிய இலக்கு என்பவற்றின் அடிப்படையில் மனிதகுலப் பயணத்துக்கு சமநிலையையும் பாதுகாப்பையும் மீளக் கொண்டு வருவது அதன் மூலமே சாத்தியமாகும்.

சிந்தனைக்கும் வாழ்வுக்குமான முறைமையியல் பற்றிய இந்த உரையாடலில் முதலில் நாம் அம்முறைமையியலுக்கான முழுமை யான சட்டகமொன்றை வரைந்து கொள்வது அவசியம். அதன் மூலாதாரங்களையும் பிரதான இயங்குதளங்களையும் அறிந்திருப்ப தும் அவசியம். அப்போதுதான் பல்வேறு வாழ்வியல், சமூகவியல், நாகரிகவியல் தளங்களிலான அறிவியற் பணியை தொடர்வது சாத்திய மாகும். மானிட நாகரிகத்தை மீட்டுருவாக்கம் செய்வதற்குப் பங் காற்றும் வகையில் முஸ்லிம் பகுத்தறிவைத் தகவமைப்பதும் அப் போதுதான் சாத்தியமாகும். மட்டுமன்றி, அதன் மூலமாகத்தான் மனித நாகரிகத்தின் முதன்மைப் பணிகளை மீள் நிரற்படுத்துதல், அதன் தொடர்புகளை நன்மை, சீர்திருத்தம், பாதுகாப்பு, சமாதானம்

என்பவற்றின் மீது மீள வார்த்தெடுத்தல் முதலிய பணிகளுக்கும் முஸ்லிம் பகுத்தறிவால் பங்களிப்புச் செய்ய முடியும்.

இந்த வகையில், இஸ்லாமிய முறைமையியல் தொடர்பான மிக முக்கிய விவகாரமொன்று குறித்து நமது ஆய்வைத் தொடங்குவோம். இஸ்லாமிய சிந்தனை சுழலவும் அசைவியக்கம் பெறவும் கூடிய முறைமை ஒன்றுக்கான முழுமையான சட்டகம் எது என்பதே அந்த விவகாரமாகும்.

### *(1) இஸ்லாமிய சிந்தனைக்கான முறைமையியற் சட்டகம்: கட்புலனானவை, மறைவானவை என்பவற்றின் ஒத்திசைவு*

வாழ்வுக்கும் பிரபஞ்சத்துக்குமான முழுமையான இஸ்லாமிய சட்டகத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் இஸ்லாமிய சிந்தனையையும் அது இயங்கும் சூழமைவையும் புரிந்து கொள்ள முடியும். மட்டுமன்றி, சிந்தனை, முறைமையியல், இஸ்லாமிய வாழ்வுக் கட்டமைப்பு, அதன் தனித்தன்மை என்பவற்றை ஒழுங்கமைக்கின்ற தொடர்புகளையும் கருத்தாக்கங்களையும் இயங்கு தளங்களையும் கூட புரிந்து கொள்ள முடியும்.

இஸ்லாமிய சிந்தனையின் இயல்பையும் அதன் முறைமையையும் நாம் புரிந்து கொள்ள விரும்பினால், மறைவானவை மற்றும் கட்புலனானவை தொடர்பான இஸ்லாமிய கோட்பாட்டுத் தெளிவு அவசியம். முஸ்லிம் பகுத்தறிவிலும் முறைமையிலும் அக்கோட்பாடு பெற்றிருக்கும் பரிமாணங்கள் பற்றிய தெளிவும் அவசியம். இஸ்லாமிய வாழ்வின் பொருள், மனித இருப்பின் பொருள், இஸ்லாமும் இஸ்லாமிய சீர்திருத்தமும் சாதிக்க முனைகின்ற மானிடத் தொடர்புகள் மற்றும் இலக்குகள் முதலியவற்றைப் புரிந்து கொள்வதற்கும் மேற்குறித்த கோட்பாட்டுத் தெளிவு மிக முக்கியம்.

கட்புலனான அம்சங்கள் மற்றும் கட்புலனாகா அம்சங்கள் தொடர்பான இஸ்லாமியக் கருத்தாக்கமானது வாழ்வினதும் பிரபஞ்சத்தினதும் பொருளையும் நோக்கையும் வரையறுத்துத் தருகிறது. வாழ்வு, பிரபஞ்சம், சடப்பொருள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பையும், மறைவான அம்சங்களுடன் அவை கொண்டுள்ள தொடர்பையும் கூட இக்கருத்தாக்கம் வரையறுத்துத் தருகிறது.

மனித இருப்பின் பொருள், மனிதப் பகுத்தறிவின் பொருள், மனித வாழ்வில் அப்பகுத்தறிவு வகிக்கும் பாத்திரம், அப்பாத்திரத்தின்

இயங்கு தளங்களும் எல்லைகளும் என்பவற்றை வரையறுக்கின்ற முழு நிறைவான சட்டகமாகவும் இக்கருத்தாக்கமே உள்ளது.

மறைவான உலகம் என்பது அல்லாஹ்வின் அறிவில் மாத்திரம் உள்ளதோர் அம்சம். அவ்வுலகத்தின் ஒரு பகுதியை மாத்திரம் அவன் தான் விரும்பிய சில அடியார்களுக்குத் தெரிவிக்கிறான். உலக சமுதாயங்களை நேர்வழிப்படுத்தவும், அவற்றின் இருப்பின் பொருளை உணர்த்தவும், அந்த இருப்பின் நோக்கம், இடைத் தொடர்புகள், விளைவுகள் என்பவற்றை எடுத்துக்காட்டவும் அந்த அடியார்களுக்குத் தூது வழங்கி அவன் அனுப்பி வைக்கிறான்.

இஸ்லாமியப் புரிதலின் படி, மறைவான உலகுடனான மனிதத் தொடர்பானது ஆக்கத் தன்மை கொண்ட சிறந்ததொரு தொடர்பாகும். மனித வாழ்வில் சத்தியத்தையும் நீதியையும் நிலை நாட்டுதல், பூமியை வளப்படுத்தல், பூமியையும் இதர படைப்புகளையும் சீர்கேட்டிலிருந்து பாதுகாத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்ட தொடர்பு அது.

> ''உங்களில் எவர் செயலால் சிறந்தவர் என்று சோதிக்கவே அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்''. (67:3)

> ''நிச்சயமாக அல்லாஹ் நீதியையும், நல்லுபகாரத்தையும், உறவினருக்குக் கொடுத்துதவும்படியும் ஏவுகின்றான். மானக் கேடான செயலையும் தீமையையும் வரம்பு மீறலையும் அவன் தடை செய்கிறான்''. (16:90)

மறைவான உலகு பற்றிய மிக முக்கியமான இஸ்லாமியக் கொள்கைகளையும், அவை மனிதனுக்கு வழங்கும் தரவுகளையும் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

- பிரபஞ்ச இருப்புக்கென விழுமியம் சார்ந்த நன்னோக்கொன்று உள்ளதேயன்றி அது வீணாகப் படைக்கப்பட்டதல்ல:

> ''உங்களை நாம் வீணாகப் படைத்திருக்கிறோம் என்றும், நீங்கள் எம்மிடம் மீளக் கொண்டு வரப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?'' (23:115)

- பிரபஞ்சத்தின் முழுமொத்தத் தொடர்புகளும், அத்தொடர்புகளின் தர்க்கமும் மனிதப் பகுத்தறிவுக்கும் தர்க்கத்துக்கும் புரிதலுக்கும் அப்பாற்பட்டவை.

- மனிதனைப் பொறுத்த வரை மறைவான உலகின் மிக முக்கியமான தரவு அல்லாஹ்வின் இருப்பாகும். படைப்பாளன், ஒருவன், ஏகன், தனித்தவன், இணையற்றவன், சத்தியமானவன், நீதியானவன், ஆரம்பமானவன், இறுதியானவன், ஒப்பற்றவன், யாவும் அறிந்தவன் முதலிய பண்புகள் கொண்ட அல்லாஹ்வின் இருப்பை அது குறிக்கிறது.

- மறுவுலகு, மீள எழுப்பப்படல், விசாரணை என்பவையெல்லாம் மனிதன் இவ்வுலகில் செய்யும் நன்மை-தீமையின் விளைவுகளே. அவன் நன்மை செய்திருந்தால், முடிவு நன்மையாகும்; தீமை செய்திருந்தால், முடிவு தீமையாகும்.

- உலகம் என்பது உழைப்புக்கும் சீர்திருத்தத்துக்குமான இடம். அதிலுள்ள அனைத்துப் படைப்புகளும் மனிதன் பூமியில் பிரதிநிதித்துவப் பணியை நிறைவேற்றவும், அதனை வளப்படுத்தவும், சீரமைக்கவும் வசப்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன. இவ்வசப்படுத்தலானது நன்மை, பராமரிப்பு, சீரமைப்பு என்பவற்றுக்கு உரியதேயன்றி, வரம்பு மீறலுக்கோ விஷமம் புரிவதற்கோ சீர்கேட்டுக்கோ உரியதன்று.

- மனித நாட்டம் என்பது அல்லாஹ்வின் அறிவைச் சார்ந்தது. அல்லாஹ்வின் படைப்பியல் அற்புதம் அது. அவனது மகத்தான சக்தியின் பாற்பட்டது. ஏனைய அனைத்தையும் போன்றே அதனையும் தனது நாட்டப்படி அவன் படைத்தான். சுதந்திரமான செயற்பாட்டை வழங்கி அதனை கண்ணியப்படுத்தினான். நன்மையை நோக்கி அல்லது தீமையை நோக்கித் தீர்மானமெடுக்கும் சுதந்திரத்தை அதற்கு வழங்கினான். எனவே, சீர்திருத்தம் செய்வதா அல்லது சீர்கெடுப்பதா என்பதை அதுவே தெரிவு செய்யும். அந்த வகையில், பிரதிநிதித்துவப் பொறுப்பு, கண்காணிப்பு, சீர்திருத்தம், வளப்படுத்தல் என்பவற்றை நோக்கி அது செல்லவும் முடியும்; தீமை, சீர்கேடு, வரம்புமீறல், விரயம் என்பவற்றை நோக்கிச் செல்லவும் முடியும். தூய்மையும் பாதுகாப்பும் வேண்டுமா அல்லது பாவமும் அழுக்கும் வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அதற்கு உள்ளது.

- மனித வாழ்வில் நேர்வழியும் வழிகேடும் ஒவ்வொரு தனி மனிதனதும் தனிப்பட்ட முடிவாயினும், அது அல்லாஹ்வின் முன்னறிவுக்கு உட்பட்டது. நன்மைக்கான பாதையை அல்லது தீமைக்கான பாதையைத் தெரிவு செய்யும் சுதந்திரமான நாட்டத்தை மனிதனுக்கு அல்லாஹ் அளித்திருக்கும் அதேநேரம், அதன் முடிவு எவ்வாறு அமையும் என்ற முன்னறிவையும் அவன் கொண்டிருக்கிறான்.

• அல்லாஹ் மனிதனைப் படைத்து, அவனுக்குப் பகுத்தறிவையும் பௌதீக அறிவையும் கொடுத்தான். பூமியின் பிரதிநிதித்துவப் பொறுப்பை வழங்கி அவனை கண்ணியப்படுத்தினான். அறிவின் கண்ணியத்தினாலும் நாட்ட சுதந்திரத்தினாலும் அவனது அந்தஸ்தை உயர்த்தினான். பிற படைப்புகள் அனைத்தையும் விட அவனை தனித்துவப்படுத்தினான். அந்த வகையில், மனிதன் தனது நாட்ட சுதந்திரத்தின் மூலம் நேர்வழியில் சென்றால் அவனே படைப்புகளிலெல்லாம் பரிபூரணன்; சிறப்பு மிக்கவன்; அழகானவன். அவ்வாறன்றி, அவன் வழிதவறிக் கெட்டழிந்தால், தனது சொந்தத் தெரிவினாலேயே இழிவைத் தேடிக் கொள்கிறான்.

• பிரபஞ்சம், படைப்புகள், வாழ்வு, உயிரிகள் முதலிய அனைத்தையும் படைத்த அல்லாஹ் சில விதிகளுக்கும் காரணங்களுக்கும் அமைவாக அவற்றை இயங்க விட்டுள்ளான். அந்தவகையில், அனைத்துச் செயற்பாடுகளும் நோக்கங்களும் காரண-காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டவை. மனித நாட்டமானது தனது விருப்பத்தையும் முடிவையும் வெளிப்படுத்தக் கூடியது. செயல்களையும் காரணங்களையும் பற்றிய தேட்டம் இன்றி நாட்டமோ உறுதியோ நோக்கமோ வெளிப்பாடோ இல்லை.

• இந்த வாழ்விலும் புவியிலும் மனிதப் பொறுப்பு என்பது பிரதிநிதித்துவப் பணியை மேற்கொள்வதிலும், வளப்படுத்துவதிலும், படைப்புகளை வசப்படுத்திப் பராமரிப்பதிலுமே தங்கியுள்ளது. காரண-காரியத் தொடர்புகளைக் கண்டறிந்து, அவற்றின் வழியில் செயற்படுவதன் மூலம்தான் இது சாத்தியமாகும். மனிதன் இக்காரணங்களையும் விதிகளையும் தேடிக் கண்டறிய வேண்டும். அப்போதுதான் தனது பொறுப்பை அவனால் நிறைவேற்ற முடியும். தன்னை அல்லாஹ் படைத்த நோக்கத்தை விசுவாசித்து, அல்லாஹ்வின் ஏவல் விலக்கல்களை நிறைவேற்றுவதனூடாக அவனது திருப்தியைப் பெற முடியும். ஓர் இறைவிசுவாசி காரண-காரியத் தொடர்புகளை வினைமையோடு தேடிக் கண்டறிவான். பிரபஞ்ச நியதிகளுக்கும் விதிகளுக்கும் அமைவாக தனது கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றுவான். அதன் பிறகுதான், அனைத்து விவகாரங்களதும் சொந்தக்காரனும், மறைவான அம்சங்களை அறிந்தவனும், பிரபஞ்சத்தை இயக்குபவனுமாகிய அல்லாஹ்விடம் தனது முயற்சியின் முடிவை திட நம்பிக்கையுடன் ஒப்புக் கொடுப்பான். அல்லாஹ்வின் ஞானம் மிக்க தீர்க்கமான விதிப்பையும் ஏற்றுக் கொள்வான். ஏனெனில், ஓர் இறை விசுவாசியைப் பொறுத்தவரை,

அனைத்துக் காரண-காரியத் தொடர்புகளையும் பேணி, உரிய பொறு ப்பை நிறைவேற்றிய பிறகு அல்லாஹ் விதித்திருப்பது அனைத்தும் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மையானதே. அல்லாஹ்வின் நீதியும், அவனது முழுமொத்த விதிப்பும், தீர்க்கமான ஞானமுமே இறைவிசு வாசிகளின் உழைப்பும் காரண-காரிய அடிப்படையிலான பிரதி நிதித்துவப் பணியும் வெற்றியடைவதற்கான உத்தரவாதமாகும். இம் மையிலும் மறுமையிலும் அவர்கள் நற்கூலி பெறுவதற்கான உத்தர வாதமும் அவைதான். அவனது ஞானமும் நீதியும் கருணையுமே அதனைத் தீர்மானிக்கின்றன.

- இறை விசுவாசமுள்ள மனிதன் 'ஃபித்றா' என்னும் இயல் புக்கும் பிரபஞ்ச நியதிகளுக்கும் அமைவாகவே சீர்திருத்தம் மற்றும் வளப்படுத்தல் தொடர்பான தனது பிரதிநிதித்துவப் பணியை மேற் கொள்வான். அல்லாஹ் பற்றியும், அவனது ஞானம், நீதி, கருணை என்பவை பற்றியுமான திடமான விசுவாசத்தின் மீது நின்றே தனது தோளில் சுமத்தப்பட்ட பொறுப்பையும் உழைப்பையும் போராட்டத் தையும் மேற்கொள்வான். அந்தவகையில், அவன் சிந்தித்துச் செயற் படுவான்; அல்லாஹ்வின் மீது பரஞ்சாட்டுவான். அல்லாஹ்வின் விதியிலிருந்து தப்பித்து அல்லாஹ்வின் மற்றொரு விதியை நோக்கி ஓடுவான். தன்னையும் தனது பணியையும் பற்றிய தீட்சண்யத்தோடு அவன் உழைப்பான். அவனது விசுவாசமே உழைப்பு; உழைப்பே விசுவாசம். எனவே தனது சத்தியத் தேடலிலும், சீர்திருத்தப் பணி யிலும், வளப்படுத்தலிலும், பிரதிநிதித்துவப் பொறுப்பிலும் கார ணங்களைத் தேடுவான். அல்லாஹ்வின் மீது திடநம்பிக்கை கொள் வான். அல்லாஹ்வுக்கு மட்டுமே அஞ்சுவான். ஈருலகிலும் இறைவிசு வாசிகளுக்குக் கிடைக்கும் வெற்றி குறித்த நம்பிக்கையோடு அல் லாஹ்வை நோக்கி நிற்பான். அந்தவகையில், அல்லாஹ்வையும் அவனது ஞானத்தையும் தீர்ப்பையும் முன்னளப்பையும் நன்கு பொரு ளுணர்ந்து விசுவாசிக்கும் ஒரு மனிதன் பூமியில் அல்லாஹ்வின் நியதிகளின் படி செயற்படுவதில் அதீத ஈடுபாடு காட்டுபவனாக இருப்பான். இதனால் தனது ஆற்றுகை என்ற அசைவியக்கத்தின் உதிரி அம்சங்களை மீளாய்ந்து திருத்திக் கொள்ளும் நோக்குடன் மட்டுமே அவன் திரும்பிப் பார்ப்பான். வெற்றி அவனுக்கு மமதை ஏற்படுத்தாது. காயம் அவனைக் கலங்கடிக்காது. ஏனெனில் அவையெல்லாம் சோதனை என்பதை அவன் அறிவான். பிரபஞ்சத்தை இயக்கிச் செல்ல வும், மனிதர்களை உந்தித் தள்ளவும், அவர்களைப் பரிசோதிக்கவும் அல்லாஹ்வின் ஆழ்ந்த ஞானத்திலிருந்து அவை பிறக்கின்றன என்

பது அவனுக்குத் தெரியும். அந்தவகையில், ஓர் இறைவிசுவாசியின் இயக்கத்தில் அவனுக்கு ஏற்படும் அனைத்துமே இம்மைக்கும் மறு மைக்கும் நன்மையானதுதான். அவனது வாழ்வு, இயக்கம், பொறுப்பு, யத்தனம், காரண-காரியத் தேட்டம் ஆகிய அனைத்தும் அதனுட னேயே தொடர்பு பட்டிருக்கும். உண்மையாக உழைக்கும் இறைவிசு வாசிகளுக்கு அல்லாஹ் அளித்திருக்கும் வாக்குறுதி நிச்சயம் நிறை வேறும். அதற்கு அவர்கள் தங்களது பொறுப்பை பூரணமாக நிறை வேற்ற வேண்டும். அல்லாஹ்வின் முன்னளப்பையும் விதிப்பையும் ஆழ்ந்து விசுவாசிக்க வேண்டும். தமது செயற்பாடுகளை காரண-காரிய அடிப்படைகளைப் பேணி அழகாக மேற்கொள்ள வேண்டும். ஓர் இறைவிசுவாசியின் நம்பிக்கையிலும், இஸ்லாமிய வாழ்வின் யதார்த் தத்திலும் இவை தவிர வேறொன்றும் இருக்க முடியாது. விசுவாசிகள் தமது அழகிய விசுவாசத்தின் மூலமாகவும், அழகிய செயற்பாடு மூலமாகவும் இவ்வாறு அல்லாஹ்வுக்கு உதவும் காலமெல்லாம், அவனும் அவர்களுக்கு உதவுவான்; பூமியில் அதிகாரத்தையும் பிரதி நிதிப் பொறுப்பையும் பெற்றுத் தருவான். இதுவே அவனது வாக் குறுதி. அவன் விதித்த நியதி.

> *''நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய் தால், அவன் உங்களுக்கு உதவுவான்; உங்கள் பாதங்களையும் ஸ்திரப்படுத்துவான்''. (47:7)*

- மனிதப் பகுத்தறிவும் புரிதலும் இப்பூமியில் அவன் வாழ்வ தற்கும், சீர்திருத்தம், வளப்படுத்தல் முதலிய ஃகிலாபத் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் ஏற்ற வகையிலேயே தகவமைக்கப்பட்டுள் ளது. இப்பகுத்தறிவும் புரிதலுமே இவ்வாழ்வில் மனிதன் மீது சுமத் தப்பட்டுள்ள பணியைச் சுமப்பதற்கு உதவும் அடிப்படையான கருவி யாகவும் தனிப்பெரும் பண்பாகவும் அமைந்துள்ளது.

> *''(நபியே!) உமது ரட்சகன் வானவர்களை நோக்கி, 'நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை ஆக்குவேன்' என்று கூறியதை எண்ணிப் பார்ப்பீராக!... (பின்னர்) அவன் ஆதமை நோக்கி, 'ஆதமே! அவர்களுக்கு இப்படைப்புகளின் பெயர்களை எடுத்துக் கூறுவீராக' எனக் கட்டளையிட்டான்'' (2:30-33)*

ஆக, பிரதிநிதித்துவப் பணிக்கான மனிதனது தகைமை அவனது அறிவாகும். கட்புலனாகும் உலகில் அந்த அறிவைப் பெறும் சாதன மாகவும் கருவியாகவும் அமைந்திருப்பது பகுத்தறிவாகும்.

- ‘வஹீ’ என்பது தெய்வீக மூலாதாரமாகும். மறைவான அம்சங்கள் பற்றிய அறிவை அது மனிதனுக்கு வழங்குகிறது. மறைவான அம்சங்கள் யாவை? அவற்றுக்கிடையிலான தொடர்புகளும், அவற்றின் முழு மொத்த இலக்குகளும் என்ன? அத்தகைய அம்சங்களுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு என்ன? என்ற விபரங்களை மனிதனுக்கு வஹீ வழங்குகிறது. அதேவேளை, மனிதப் பகுத்தறிவு என்பது கட்புல உலகுடன் தொடர்புடைய அறிவியலுக்கும் அறிதலுக்கும் புவி மீதான செயற்பாட்டுக்கும் உரிய மனிதக் கருவியாக உள்ளது. மனிதன் தனது பிரதிநிதித்துவப் பணியை நிறைவேற்றவும், சத்தியம், நீதி, நன்மை என்பவற்றை நிலைநாட்டவும் உதவும் வகையிலேயே இந்த ஏற்பாடு மனிதனுக்குச் செய்து தரப்பட்டிருக்கிறது.

- இப்புரிதலின் படி, வஹீயும் பகுத்தறிவும் ஒன்றோடொன்று பரிபூரணமாக ஒத்திசைந்து, கட்புல உலகில் மனிதனது இடம் என்ன என்பதை வரையறை செய்கின்றன. மட்டுமன்றி, கட்புல உலகில் அவனது நோக்கத்தை எய்தவும் அவை உதவுகின்றன. ஒருபுறத்தில், வஹீயானது மனித அறிவியலுக்கும் புரிதலுக்கும் அப்பாற்பட்ட அம்சங்கள் பற்றிய மொத்த அறிவை வழங்குகிறது. அந்த அறிவு மனிதனது பார்வையை முழுமைப்படுத்தி, இயல்பாகவே அவனது கட்டமைப்பினுள் பொதிந்துள்ள ‘ஃபித்றா’வின் தேவையையும் நோக்கையும் ஈடுசெய்கிறது. மறுபுறத்தில், பகுத்தறிவானது கட்புல உலகு சார்ந்த மனித அறிவுக்கான கருவியாக உள்ளது. இப்பிரபஞ்சம் உள்ளடக்கியுள்ள ‘ஃபித்றா’ சார்ந்த நியதிகளையும் இயல்புகளையும் வசதிகளையும் மனிதன் புரிந்து கொண்டு, தெய்வீக வழிகாட்டலுக்கு அமைவாக சீர்திருத்தத்தையும் வளப்படுத்தலையும் மேற்கொள்ள இக்கருவி உதவுகிறது.

- ‘ஃபித்றா’வின் தளத்திலும், அல்லாஹ்வின் ஏகத்துவம் மற்றும் வஹீயின் வழிகாட்டல் என்பவை குறித்த விசுவாசத்தின் தளத்திலும் நின்று நோக்கும் போது, வஹீயும் பகுத்தறிவும் பிரபஞ்சமும் முரண்படுதல் என்பதற்கு இடமேயில்லை. ஏனெனில் வஹீ என்பது மறைவான உலகுடனும், பிரபஞ்சத்தினதும் வாழ்வினதும் முழு மொத்த அம்சங்களோடும், உயர்ந்த நோக்கங்களோடும் தொடர்பானது; அல்லாஹ்வின் கட்டளை சார்ந்தது. எனவே இவ்விடயத்தில் வஹீயின் வழிகாட்டலுக்கு மாறாகச் செல்வது வழிகேடாகவும் யூகமாகவும் ஆணவமாகவுமே கருதப்படும். வஹீ கொண்டு வந்த உண்

மைக்கு கட்டுப்பட்டு, அதன்படி செயற்படுவதே நல்லறிவையும் சீர்கெட்ட அறிவையும் வேறுபடுத்துகிறது. வானவர்களது அறிவுக்கும் சீரிய தர்க்கத்துக்கும், இப்லீஸின் அறிவுக்கும் சீர்கெட்ட தர்க்கத்துக்கும் இடையிலான வேறுபாட்டை உணர்த்தும் அளவுகோலும் இதுதான்.

*''(வானவர்கள்) கூறினர்: 'இறைவா, நீ தூயவன். நீ எமக்குக் கற்றுத் தந்தவை தவிர வேறு அறிவெதுவும் எமக்கில்லை''. (2:32)*

*இப்லீஸோ தான் படைக்கப்பட்ட மூலப்பொருளின் உயர்வு பற்றிய அறிவினால் பெருமையடித்து இவ்வாறு கூறினான்:*

*''நீ என்னை நெருப்பினால் படைத்தாய். ஆதமை களிமண்ணினால் படைத்தாய்'' (7:12)*

*''நீ களிமண்ணினால் படைத்தவருக்கா நான் சிரம் பணிவேன்?'' (17:61)*

*அப்போது முற்றறிவும் பரிபூரண வல்லமையும் கொண்ட அல்லாஹ் கூறினான்: ''நீங்கள் அறியாதவற்றையும் நிச்சயமாக நான் அறிவேன்''. (2:30)*

ஆக- மனிதப் பகுத்தறிவும் தர்க்கமும் புரிதலும் கட்புல உலகையும், அதில் பிரதிநிதிப் பொறுப்பையும் நோக்கிச் செலுத்தப்படுமாயின், அதுவே சரியான பகுத்தறிவாகும். இலக்குகள், அளவுகோல்கள், முடிவுகள், விளைவுகள் என்பவற்றை வரையறுக்கும் வகையில் அல்லாஹ் அருளிய கட்புலனாகா உலகம் பற்றிய அறிவும் இதனுடன் இணைந்திருப்பது அவசியம். மறைவான அம்சங்கள் பற்றிய அறிவுக்கும், கட்புலனான உலகு பற்றிய அறிவுக்கும், வஹீக்கும் பகுத்தறிவுக்கும் பிரபஞ்சத்துக்கும் இடையிலான இப்பரிபூரண சட்டகத்தினுள் நின்ற முதல் தலைமுறை இஸ்லாமியர்கள் மறைவான விவகாரங்கள் குறித்த குதர்க்கவாதங்களில் ஈடுபடவில்லை. வஹீ வழங்கிய இலக்குகளிலும் அளவுகோல்களிலும் தமக்குத் தேவையான அம்சங்களை அவர்கள் பரிபூரணமாகக் கண்டுகொண்டார்கள்.

- ஏகத்துவம் என்ற உண்மையின் மீது கட்டியெழுப்பப்பட்ட பரிபூரண இஸ்லாமியச் சட்டகத்தினுள் கட்புலனானதும் கட்புலனாகாததும் ஒருங்கிசைகின்றன; வஹீயும் பகுத்தறிவும் பிரபஞ்சமும்

ஒருங்கிசைகின்றன; விசுவாசமும் செயலும் ஒருங்கிசைகின்றன; முயற்சியும் பரஞ்சாட்டலும் ஒருங்கிசைகின்றன; தெய்வீக முன்ன ளப்பு பற்றிய நம்பிக்கையும் பிரபஞ்ச நியதிகளைப் பற்றிய புரிதலுட னான உழைப்பும் ஒருங்கிசைகின்றன. இந்தப் பிண்ணணியில்தான், எண்ணத்தினுள் அடங்கி நிற்கும் விசுவாசத்தையும் நற்செயலையும் அல்லாஹ் எப்போதும் இணைத்துக் கூறுகின்றான். அல்-குர்ஆனில் ''விசுவாசம் கொண்டு நற்செயல் புரிபவர்கள்'' பற்றிக் குறிப்பிடும் எல்லா இடங்களிலும் இதனை நாம் அவதானிக்கலாம். 'நற்செயல்' என்பது இங்கு விடயவாரியான புரிதல், வினைமை மிக்க உழைப்பு, சத்தியத்தின் அடிப்படையிலான தேடல் முதலிய அனைத்துப் பொருள்களையும் உள்ளடக்கும். எனவே அதில் நல்ல எண்ணமும் நோக்கமும் மாத்திரம் இருத்தல் போதாது என்பது இறை கட்டளை யாகும். பிரபஞ்ச இயங்கியல் நியதிகளில் அவன் நிலைநிறுத்தி வைத்திருக்கும் உண்மையும் அதுதான். ஏனெனில், 'நல்ல எண்ணம்' என்ற அர்த்தம் வசனத்தின் முதல் பகுதியாகிய இறை விசுவாசம் என்பதற்குள் அடங்கி விடுகிறது. அதற்கு அப்பால் வருவது காரண-காரியத் தொடர்பை முன்னிறுத்தி விடயவாரியாக மேற்கொள்ளப் படும் சிறந்த உழைப்புதான்.

ஆக- இறுதியாக நாம் பெறும் சுருக்கம் இதுதான்: முஸ்லிம் பகுத்தறிவு என்பது கட்புலனான உலகையும், வாழ்வியல் மற்றும் உலகப் படைப்புகள் தொடர்பான விவகாரங்களையும் சார்ந்தது. இவையனத்தையும் அது அவற்றினுள் பொதிந்திருக்கும் விதிகளை யும் நியதிகளையும் இயல்புகளையும் பற்றிய அறிவின் அடிப்படை யில் வசப்படுத்தி ஒழுங்கு படுத்துகிறது; சீரமைத்துப் பராமரிக்கிறது. வஹீயின் வழிகாட்டலுக்கும், ஷரீஆவின் மகாஸிதுக்கும், சட்டங் களுக்கும் அமைவாக பிரதிநிதித்துவ அர்த்தத்தை நிதர்சனப்படுத்தும் வகையில் இப்பணியை அது மேற்கொள்கிறது. எனவே, மறைவான உலகுடனும் அல்லாஹ்வின் மெய்மையுடனும் தொடர்பான விவ காரங்களில் மூழ்கி முஸ்லிம் பகுத்தறிவு தனது நேரத்தையும் முயற்சி யையும் வீணடிக்கக் கூடாது. இவ்விவகாரங்களில் வஹீயும் தூதும் தெரிவித்த உண்மைகளை மட்டுமே அது கவனத்தில் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் பகுத்தறிவானது தனக்கு இலகுவாக்கித் தரப்பட்டிருக் கும் கட்புல உலகையும், உலப் படைப்புகள் மீதான உழைப்பையும் விட்டு எப்போது விலகியதோ அப்போதுதான் அதன் பார்வை பலவீன

முற்றுச் சிதைவடைந்தது. தன்னால் கிரகித்துக் கொள்ள முடியாத மறைவான அம்சங்களிலும் தெய்வீக ரகசியங்களிலும் அது ஈடுபாடு கொள்ளத் தொடங்கிய போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்து.

முஸ்லிம் பகுத்தறிவு தனது ஆரோக்கியத்தை மீளப் பெற வேண்டு மாயின், ஏகத்துவத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட பரிபூரண இஸ் லாமிய நோக்கை அது மீட்டெடுக்க வேண்டும். அந்நோக்கு இலக்கு மையப் பட்டதாகவும், காரண-காரியத் தொடர்பைப் பேணியதாக வும் அமைதல் அவசியம். மறைவானதும் புலவயப்பட்டதும் அதில் இணைந்திருக்க வேண்டும். வஹீயும் (பகுத்தறிவு மற்றும் பிரபஞ்சம் உள்ளிட்ட) ஃபித்றாவும் ஒருங்கிசைந்திருக்கவும் வேண்டும். அதன் மூலமாகவே மனிதனதும் அவனது பகுத்தறிவினதும் பயணம் நேர்த் திசையில் அமையும்; சக்தியும் உதவியும் குறித்தான தேவ வாக்கும் நிதர்சனமாகும்.

இஸ்லாமிய முறைமையியலின் மற்றொரு முக்கிய விவகாரம் குறித்து இனி நாம் கவனம் செலுத்தலாம். இம்முறைமையினதும் சிந்தனையினதும் மூலாதாரங்கள் மற்றும் அவற்றுக்கிடையிலான ஒத்திசைவான தொடர்பு என்ற விவகாரமே அதுவாகும்.

## *(2) இஸ்லாமிய சிந்தனை மற்றும் முறையியலின் மூலாதாரங்கள்: வஹீ, பகுத்தறிவு, பிரபஞ்சம்.*

வஹீ என்பது மனித வாழ்வில் அறிவுக்கும் வழிகாட்டலுக்குமான மூலாதாரம் ஆகும். உலக சமுதாயங்களுக்கு எத்தி வைப்பதற்காக அல்லாஹ் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் அருளிய சத்தி யமே பொதுவாக வஹீ என்பதன் மூலமாக நம்பப்படுகிறது. இப்பின்னணியில்தான், அனைத்து மக்களுக்கும் எத்திவைக்கும் வகையில் அல்லாஹ் தனது தூதராகிய முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளிய அவனது வார்த்தையும் சத்தியமும் வஹீயாக அமைந்தது. அறிவுக்கும் இஸ்லாமிய வழிகாட்டலுக்கும் மூலாதாரமாக அமைந்த வேத வெளிப்பாடான இந்த ‘வஹீ’யானது பரிபூரணமான, அனைத்தும் தழுவிய இறுதித் தூதாக அமைந்துள்ளது. மனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதோடு, அவர்களது இருப்பின் பொருளையும் நோக்கத்தை யும் அது காட்டித் தருகிறது. தங்களது இருப்பின் நோக்கத்தை எய்த வும், செயல்களின் அதியுயர் இலக்குகளை (மகாஸிதை) அடைந்து கொள்ளவும் பேண வேண்டிய கொள்கைகளையும் பெறுமானங் களையும் சட்டங்களையும் அது விளக்குகிறது. மொத்தத்தில், மனித

னுக்கு அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பின் இயல்பையும், பிரபஞ்சத் தில் மனிதனது இருப்பையும் பற்றிய விளக்கமே வஹீயின் உள்ள டக்கமாக அமைகிறது. வாழ்வில் மனிதனது இயக்கத்துக்கான வழி காட்டலையும், வாழ்வுக்கப்பால் அவனது முடிவு என்ன என்பதையும் அது தெளிவுபடுத்துகிறது.

மனிதன் என்பவன் அல்லாஹ்வின் படைப்புகளில் மிக கண்ணிய மான படைப்பு. நாட்ட சக்தி, செயற் சுதந்திரம், பிரபஞ்சத்தையும் வாழ்வையும் வசப்படுத்திக் கொடுத்தமை என்பவற்றின் மூலமாக அல்லாஹ் மனிதனுக்கு தனித்துவத்தையும் கண்ணியத்தையும் வழங்கி யுள்ளான். மட்டுமன்றி, பகுத்தறிவையும் அதன் உள்ளியல்பான புரிதல், ஆழ்ந்த சிந்தனை, திட்டமிடல், வாழ்வை நடாத்துதல், ஆற் றல்கள் முதலியனவும் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளன. பிரபஞ்சத் தின் இயங்கு விதிகளையும், காரண-காரியத் தொடர்புகளையும் பற்றிய அறிவுக்கேற்ப அவற்றிலிருந்து அவன் பயன்பெற முடியும். அந்த வகையில், அவன் சத்தியத்தைப் பேணி உயர்வும் சிறப்பும் அடையலாம்; அல்லது சத்தியத்திலிருந்து விலகி, மனோ இச்சையின் பின்னால் சென்று, வரம்பு மீறிக் கெட்டழிந்து போகலாம்.

ஆக- வாழ்வையும் பிரபஞ்சத்தையும் படைத்து நிர்வகிப்பவனான அல்லாஹ்வுடன் மனிதப் படைப்பு கொண்டிருக்கும் தொடர்பானது நாட்டம், அறிதல், தெரிவு என்பவற்றின் மீதான தொடர்பாகும். ஏக காலத்தில் அத்தொடர்பு அடிமைப்படலுக்கும் பணிதலுக்குமான தொடர்பாகவும், பிரதிநிதித்துவப் பணிக்கும் கண்ணியத்துக்குமான தொடர்பாகவும் அமைகிறது. அந்த வகையில், மனிதன் அல்லாஹ்வை நோக்கி நின்று, அவனது கட்டளைகளைகளைப் பின்பற்றி, அவன் தடுத்தவற்றைத் தவிர்ந்து கொள்ளும் போது அது உயர்வுக்கும் கண்ணியத்துக்கும் உரிய தொடர்பாகிறது. ஏனெனில் அது சத்தியத் தையும் நன்மையையும் உண்மையையும் நேரிய பாதையையும் நோக் கிய அடைவாகவும் சாதனையாகவும் அமைகிறது. சீரிய மனிதனொரு வன் அவாவக் கூடிய கண்ணியமும் பெறுமதியும் மிக்க இலக்கு அதுதான். அந்த இலக்கின் மூலமாக அவன் உயர்ந்து செல்கிறான்; பரந்த திசைகளைத் தொடுகிறான்.

எனவே இஸ்லாமியப் புரிதலின்படி, இத்தகைய தொடர்பில் இழிவோ சிறுமையோ சுரண்டலோ இல்லை. மாறாக, அன்பும் வேட்கையும் பலமும் கண்ணியமுமே அங்கிருக்கும். இத்தகைய சாத் தியங்களையும் பரிமாணங்களையும் பெறுமானங்களையும் கண்ணிய

*மிக்க இறைத்தூதரின் ஆளுமையிலும், அன்னாரது தோழர்களது ஆளுமையிலும் நாம் முதல் நிலையில் கண்டுணர முடிகிறது.*

*இப்பின்னணியில்தான் இறைத் தூதர் (ஸல்) கூறினார்கள்: ''நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாசனை கஸ்தூரியின் வாசனையை விட அல்லாஹ்விடம் நறுமணம் மிக்கது''. (புஹாரி, முஸ்லிம்)*

*''அடியான் பாவமீட்சி கோரும் போது அல்லாஹ் மிக்க மகிழ்ச்சி அடைகிறான். உங்களில் ஒருவர் பாலைவனத்தில் தனது ஒட்டகத்தின் மீது பயணம் செய்து கொண்டிருக்கிறார் என வைத்துக் கொள்ளுங்கள். திடீரென அந்த ஒட்டகம் காணாமல் போய்விடுகிறது. அவரது உணவும் தண்ணீரும் கூட ஒட்டகத்தின் மீதே உள்ளன. நிராசை அடைந்த அவர் ஒரு மரத்தடியை வந்தடைந்து அதன் நிழலில் படுத்துக் கொள்கிறார். ஒட்டகம் திரும்பவும் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவரிடம் சிறிதும் இல்லை. இந்நிலையில் திடீரென்று அது அவரருகில் வந்து நின்றால் எவ்வளவு மகிழ்ச்சியடைவாரோ அதனை விட அல்லாஹ் தனது அடியானின் பாவமீட்சியால் மகிழ்ச்சியடைகிறான்''. (முஸ்லிம்)*

*அல்லாஹ் தனது அருள் மறையில் கூறுகின்றான்:*

> ''(நபியே!) உமது ரட்சகன் வானவர்களை நோக்கிக் கூறினான்: நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை ஏற்படுத்தப் போகிறேன்''. *(2:30)*

மேலும் கூறுகின்றான்:

> *''நிச்சயமாக நாம் மனிதர்களை கண்ணியப் படுத்தியுள்ளோம். தரையிலும் கடலிலும் அவர்களை நாமே சுமந்து செல்கிறோம்'' (17:70)*

*பிற படைப்புகளுக்கு மத்தியில் மனிதனுக்கு ஏன் இந்த அந்தஸ்தும் கண்ணியமும் என்பதற்கான காரணத்தை நாம் மறந்து விடக் கூடாது. மனிதனைப் படைத்து பூமியில் அவனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதில் மறைந்துள்ள உயர் தெய்வீக ஞானத்தையும் நாம் சிந்திக்கத் தவறலாகாது. மனிதனுக்கு தனித்துவமாக வழங்கப்பட்டுள்ள நாட்ட சுதந்திரம் என்ற பண்பும், அதன் மூலமாக தனது பாதையை சுயாதீனமாகத் தெரிவு செய்யும் ஆற்றலை அவன் பெற்றிருப்பதுமே அந்தக் காரணமாகும். கண்ணியமிக்க அல்லாஹ் மனிதன் மீது சத்தியம் செய்யுமளவுக்கு அவனை உயர்த்தியதும் அதுதான்:*

*''ஆத்மாவின் மீதும், அதனைச் சீரமைத்தவன் மீதும் சத்தியமாக! அவன் (அதனைச் சீரமைத்த) பின்னர் அதன் நன்மையையும் தீமையையும் அதற்கு உணர்த்தினான். அந்த ஆத்மாவைத் தூய்மைப் படுத்திக் கொண்டவர் வெற்றியடைந்து விட்டார். அதனை (பாவத்தில்) புதைத்துக் கொண்டவர் தோல்வியடைந்து விட்டார்''. (91:7-10)*

மனிதன் தனது வரம்பு மீறலாலும் சீர்கேட்டினாலும் பிறழ்வினாலும் தானே தனது ஆன்மாவுக்கு அநியாயம் இழைத்துக் கொள்கிறான். பாவத்திலும் சீர் கேட்டிலும் அதனைப் புதைத்து, இழிவையும் துன்பத்தையும் நோக்கி இழுத்துச் செல்கிறான். இது நல்ல மனிதனது கண்ணியத்துக்கும் அந்தஸ்துக்கும் மாறான நிலையாகும்.

*''நிச்சயமாக மனிதனை நாம் மிக அழகிய அமைப்பில் படைத்தோம். பின்னர் அவனை மிக இழிந்தவனாக மாற்றி னோம். எனினும், விசுவாசம் கொண்டு நற்செயல் புரிகின்றவர் களைத் தவிர. அவர்களுக்கு இடையறாத நற்கூலி உள்ளது''. (95:4-6)*

எனவே, கண்ணியத்துக்கும் நற்கூலிக்கும் உரிய இந்த உயர்நிலைக் கும், ஆணவக்காரர்களையும் அடக்குமுறையாளர்களையும் கொடூரர் களையும் நோக்கிய தெய்வீக எச்சரிக்கைக்கும் இடையில் நாம் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை. ஆணவக்காரர்களின் பிடிவா தத்தை உடைத்தெறியவே அல்லாஹ் இந்த எச்சரிக்கையை விடுக்கி றான். அவர்களது போலித்தனத்தையும் நிராகரிப்பையும் வழிகேட் டையும் தோலுரித்துக் காட்டுவதே இதன் நோக்கம். அபூ ஜஹ்ல், அபூ லஹப் போன்ற கொடூரர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை அது. எனவே, இத்தொனியை அல்லாஹ் மனிதனை நோக்கிப் பேசும் அடிப்படையான தொனியாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. அல்லாஹ்வை நோக்கிய அழைப்பின் தொனியாகவும் பொதுமைப் படுத்தி விடக் கூடாது. உலக வாழ்வில் மனிதனுடன் அல்லாஹ் கொண்டிருக்கும் உறவின் தன்மை அதுதான் எனப் புரிந்து கொள்ள வும் கூடாது. நமது சிந்தையிலும் புரிதலிலும் என்றென்றும் தங்கி நிற்க வேண்டிய தொனி கண்ணியமும் நன்மையும் கொண்ட தொனியே அன்றி, அச்சுறுத்தலும் எச்சரிக்கையும் கொண்ட தொனியல்ல.

அவ்வாறே, இறை விசுவாசிகளது கண்ணியத்துக்கும் மிடுக்குக்கும், அவர்கள் தமது தொழுகைகளில் அருளும் மன்னிப்பும் அறிவும்

கண்ணியமும் நிறைந்த அல்லாஹ்வின் முன்னால் அன்புடன் பணிந்து மன்றாடும் நிலைக்கும் இடையில் கூட நாம் குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் இந்த இரண்டாவது நிலையானது அருளும் அன்பும் கொண்ட அல்லாஹ்வுடன் வேட்கையோடு தொடர்பு கொண்டிருக்கும் நிலை.

அல்லாஹ்வுடன் இறை விசுவாசி கொள்ளும் தொடர்பில் இந்த இரு நிலைகளுமே அவசியமானவைதான். மனிதன் அல்லாஹ்வை விசுவாசம் கொண்டு, அவனைச் சார்ந்து நின்று, அவனது திருப்தியை நாடி நின்று, பூமியில் தனது தூதை நிறைவேற்றவும், பிரதிநிதித்துவ நோக்கத்தை எய்தவும் இவ்விரு நிலைகளும் அவனுக்கு அவசியம்.

இந்த வகையில், வஹீ என்பது மனித அறிவுக்கு அடிப்படை மூலாதாரமாகத் திகழ்கிறது. மனித இருப்பின் நோக்கத்தையும், இப் பிரபஞ்சத்தில் அவனது இடத்தையும், இதற்குப் பின்னால் அவ னுடைய முடிவையும் உணர்த்துவது அந்த வஹீதான்:

''உங்களில் எவர் செயலால் சிறந்தவர் என்று சோதிப்பதற்காக அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்''. *(67:2)*

மனிதன் தனது இருப்பின் நோக்கம், பிரபஞ்சத்தில் தனது இடம், பிரபஞ்சத்துக்கும் வாழ்வுக்கும் அப்பால் உள்ளவற்றுடன் தனக்குள்ள தொடர்பு என்பவற்றைத் திட்டமாக அறிவதற்கு வஹீயைத் தவிர வேறொரு சாதனம் அவனுக்குக் கிடையாது. ஏனெனில் இந்த வகை யான முழுமொத்த அம்சங்களை அறிந்து கொள்வதற்கு மனிதனது சுய சார்பான செயற்பாடும் அறிவியலும் தர்க்கமும் போதுமானவை யன்று.

அல்லாஹ் மனிதனைப் படைத்துள்ள இயல்பு, அவனுக்கு வழங்கி யுள்ள பகுத்தறிவு, பிரபஞ்சத்திலும் படைப்புகளிலும் மனிதன் அவ தானிக்கின்ற இயற்கை நியதிகள் முதலிய அனைத்தும் சேர்ந்து இப்பிரபஞ்சத்தினது முழுமொத்த உண்மைகளையும், அவற்றில் தனது நிலை என்ன என்பதையும் தேடியறிய வேண்டிய கட்டாயத்தை அவனுக்கு ஏற்படுத்துகின்றன. இல்லையெனில், அவனுக்கென்று இலக்கோ பொருளோ அற்றுப் போய் விடும். அவ்வாறு இலக்கோ பொருளோ அற்ற நிலையை மனிதப் பகுத்தறிவோ, அல்லாஹ்வின் படைப்பியல் நியதிகளோ ஏற்றுக் கொள்வதில்லை. மட்டுமன்றி, அந்நிலை மனித உள்ளத்தில் குழப்பத்தையும் தடுமாற்றத்தையும் பயத்தையுமே உண்டு பண்ணும்.

நம்பகமாக உறுதிப்படுத்தப்பட்ட வஹீயே இவ்வகையான அறிவைப் பெறுவதற்கான ஏக வழியாகும். அந்த வஹீ மூலமாகவே மனிதன் தனது இருப்பையும் வாழ்வையும் இலகுபடுத்திக் கொள்கிறான். அந்த வகையில், வஹீயானது இவ்வுலக வாழ்வில் மனிதப் பகுத்தறிவுக்கும் புரிதலுக்கும் சிந்தனைக்கும் அத்தியவசியமானது. நம்பகமான வஹீயின் துணையின்றி இவ்வாழ்வில் மனிதனாலோ மனித சிந்தனையினாலோ நிம்மதியையும் திட உறுதியையும் எட்ட முடியாது. வாழ்வியக்கத்தை பூரணப்படுத்திக் கொள்ளவும் முடியாது. கட்புல உலக விவகாரங்கள் பற்றிய அறிவைக் கூட நம்பகமான வஹீயைக் கொண்டே அவனால் பூரணப்படுத்திக் கொள்ள முடியும்.

''அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு ஒளியும் தெளிவான வேதமும் வந்திருக்கின்றன. அதன் மூலமாக அல்லாஹ் அவனது திருப்தியைத் தேடி வந்தோருக்கு அமைதியின் பாதைகளைக் காண்பிக்கிறான். இருள்களிலிருந்து அவர்களை வெளியேற்றி ஒளியின் பால் கொண்டு செல்கிறான். நேரான பாதையொன்றை நோக்கி அவர்களுக்கு வழிகாட்டுகின்றான்''. *(5:15-16)*

மனிதப் பகுத்தறிவானது அறிதல், புரிதல், ஆராய்தல், பெறுதல், பிரித்தறிதல், ஒப்பிடல் என்பவற்றுக்கான சாதனமாக உள்ளது. கட்புல உலகிலும் கூட இருப்பு மற்றும் செயல் சார்ந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கு மனிதனுக்கு உதவும் சாதனமாக அது உள்ளது. பகுத்தறிவானது 'ஃபித்றா' என்னும் இயல்பைக் கொண்டது என்ற வகையிலும், அறிவதற்கான அடிப்படைச் சாதனமாக உள்ளது என்ற வகையிலும், மனிதன், வாழ்வு, பிரபஞ்சம், படைப்புகள் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளினதும் அர்த்தங்களினதும் எளிய உண்மைகளை அது தன்னுள் பொதிந்திருக்கிறது. மட்டுமன்றி, அந்த எளிய உண்மைகளின் மீதே இப்பிரபஞ்சம் பற்றிய தர்க்கத்தையும் கருத்தாக்கங்களையும் அது கட்டமைக்கிறது. எனவே பகுத்தறிவின்றி மனிதன் இல்லை; அறிதல் இல்லை; புரிதல் இல்லை; பொறுப்புக் கூறலும் இல்லை.

இவ்வாழ்வில் மனிதனது இடத்தையும் நோக்கத்தையும் புரிந்து கொள்வதற்கு வழிகாட்டியாகவும் ஊக்கியாகவும் கருவியாகவும் அமைவது பகுத்தறிவுதான். வஹீயைச் சுமந்த தூதுகளிலிருந்து மறைவான உண்மைகள் பற்றிய அறிவைத் தேட அவனை ஊக்குவது அதுதான். அதனூடாகவே மனிதன் வஹீயின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்கிறான். வாழ்வையும் அதன் ஒழுங்குகளையும் சாத

னைகளையும் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டியாக அந்த வஹீயைப் பாவிக்கவும் அதுவே அவனுக்கு உதவுகிறது. அதன் மூலமாகத் தான் வஹீயின் இலக்கும் உயர் நோக்கங்களும் வழிகாட்டல்களும் சட்டங்களும் நிதர்சனமாகின்றன.

நம்பகமாக உறுதிப்படுத்தப்பட்ட வஹீயை மூட நம்பிக்கைகளிலிருந்தும், நெறிபிறழ்ந்த போலிப் புனைவுகளிலிருந்தும் வேறு பிரித்துக் காட்டுவதும் இந்தப் பகுத்தறிவுதான். தெரிவுக்கான வாய்ப்பை அது மனித நாட்டத்துக்கு வழங்கி, பாதையையும் முடிவையும் தீர்மானிக்கும் பொறுப்புக்கு முன்னால் அவனை நிறுத்துகிறது.

ஆக, பகுத்தறிவின் இருப்பும் அதன் வகிபாகமும் இன்றி மனித இருப்பு சாத்தியமற்றது; அறிவுக்கும் வழிகாட்டலுக்குமான மூலாதாரம் என்ற வகையில் மனிதன் வஹீயின் தூதைப் பெறுவதும் சாத்தியமற்றது; பிரதிநிதித்துவப் பொறுப்பை வகிப்பதும் சாத்தியமற்றது.

முன்னைய சமுதாயங்களுக்கு அருளப்பட்ட வஹீ பல்வேறு திரிபுகளால் சீர்கெட்டு, அறிதலுக்கான திடமான மூலாதாரம் என்ற நம்பகத் தன்மையை இழந்து விட்டது. ஆனால் உண்மையும் பரிபூரணத் தன்மையும் மிக்க தூதைப் பெற்றிருக்கும் முஸ்லிம் பகுத்தறிவோ மறைவான உலகு, புலவயமான உலகு ஆகிய இரண்டுக்குமான அறிவு மூலாதாரங்களை ஒரு சேரப் பெற்றிருக்கிறது. அந்த வகையில், வஹீ என்பது மறைவான உலகு பற்றிய அறிவு மூலமாகவும், பகுத்தறிவானது புலவயமான உலகுக்கும் வாழ்வை நிர்வகிப்பதற்குமான அறிவு மூலமாகவும் தொழிற்படுகின்றன. வஹீயும் பகுத்தறிவும் என்ற இவ்விரு மூலாதாரங்களும் பிரபஞ்சத்துடன் ஒத்திசைந்து, படைப்பின் நோக்கங்களைப் புரிந்து கொள்ளவும், பிரதிநிதித்துவப் பாத்திரத்தை நிறைவேற்றவும் மனிதனுக்கு உதவுகின்றன.

தூதர்களின் நம்பகத் தன்மையையும், வஹீ வந்து சேரும் வழியையும் புலவயமாக ஆய்ந்தறிவது பகுத்தறிவின் பணியே. மனிதன் மற்றும் மனித வாழ்வு தொடர்பான வஹீயின் மகாஸிதைப் புரிந்து கொள்வதும் பகுத்தறிவின் பணியே. புலவய உலகையும், அது உட்பொதிந்திருக்கும் இயல்புகள், தொடர்புகள், வசதிகள் என்பவற்றை வஹீயின் தரவுகளின் ஒளியில் புரிந்து கொள்வதும் பகுத்தறிவின் பணிதான். தெய்வீக நாட்டத்துக்கும் நோக்கத்துக்கும் இயைபாக இப்பிரபஞ்சத்தில் புலவயமான பிரதிநிதித்துவ உலகைக்

கட்டியெழுப்புவதும் கூட பகுத்தறிவின் பணிதான். மனிதர்களிலும் பிற படைப்புகளிலும் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கும் நியதி களை அனுசரித்து, அமைதிக்கான வழிகளையும் நேர்பாதையையும் நோக்கி இப்பணியை ஆற்ற அது கடமைப் பட்டுள்ளது.

முஸ்லிம் பகுத்தறிவானது தனது பலம், சமநிலை, ஸ்திரத்தன்மை, நேர்நிலை என்பவற்றை வஹீயிலிருந்தே பெற்றுக் கொள்கிறது. வஹீயின் அறிவை அது எந்தளவு தூரம் கொண்டுள்ளதோ அந்தள வுக்கு மறைவான உலகு பற்றிய ஐயமற்ற அறிவையும் பெற்றுக் கொள்கிறது. அப்பகுத்தறிவு விசுவாசம் மிக்கது; தெளிவாக சிந்திக்கக் கூடியது; திருப்தியுற்று அமைதியடையக் கூடியது; நிராகரித்துப் பெருமையடிக்காதது; திடமான நம்பிக்கையை ஐயத்துக்குட்படுத் தாதது; நேர்வழியை வழிகேட்டிடம் ஒப்படைக்காதது. ஆழ்ந்த விசு வாசமும் சக்தியும் சாதிக்கும் திறனும் கொண்ட அப்பகுத்தறிவை பிரிதிநிதித்துவப் பொறுப்பே ஆட்கொண்டிருக்கும். அறிவு, ஒளி, திடமான நம்பிக்கை என்பவற்றின் மீது நின்று, பிரபஞ்சம், வாழ்வு, வளப்படுத்தல், சீர்திருத்தம் என்பவை தொடர்பான தனது பிரதி நிதித்துவப் பணியை அது ஆற்றும். அறிவோ தெளிவான வழி காட்டலோ இன்றி, மறைவான உலகு பற்றிய யூகங்களுக்குள் அது தன்னைத் தொலைத்து விடாது.

அந்த வகையில், மறைவான உலகு தொடர்பாக முஸ்லிம் பகுத் தறிவுக்குத் தேவையான புரிதலை வழங்குவதே 'வஹீ' என்னும் தேவ வழிகாட்டலின் பணியாகும். புலவய உலகில் மனிதன் படைக்கப்பட்டமைக்கான நன்னோக்கையும் பூமியின் பிரதிநிதித் துவப் பணியில் அவன் வகிக்க வேண்டிய பாத்திரத்தையும் அந்த வேதவெளிப்பாடு தெளிவுபடுத்த வேண்டும். வஹீயினதும் தெய்வீகத் தூதினதும் ஒளியில், புலவய உலகில் பிரதிநிதித்துவத்தை நிலை நாட்டும் பணிக்காக முயன்றுழைப்பதே முஸ்லிம் பகுத்தறிவின் பணியாக அமையும்.

முதல் முஸ்லிம் தலைமுறை இயங்கியது இப்படித்தான். முஸ்லிம் பகுத்தறிவு சீராக தொழிற்படத் தொடங்கினால் ஏற்படக் கூடிய விளைவும் இதுதான். அங்கு குழப்பம் இருக்காது. தடுமாற்றம் இருக்காது. உழைப்பும் சக்தியும் வீணடிக்கப்படாது. நீங்காத ஐயமோ கலக்கமோ என்றும் இருக்காது.

வஹீயின் பொருளையும், மனித வாழ்வில் அது வகிக்கும் பாத்திரத்தையும் பற்றிய தெளிவான இப்பார்வை பிற்காலங்களில்

அற்றுப் போனது. வஹீயின் அர்த்தங்களைப் புரிந்து கொள்வதில் பகுத்தறிவு வகிக்கும் பாத்திரம் பற்றிய திட்டவட்டமான நோக்கும் அற்றுப் போனது. முதல் முஸ்லிம் தலைமுறைக்குப் பின் வந்த இஸ்லாமிய வரலாற்றுக் காலங்களில் ஏற்பட்ட இத்தெளிவின்மையும் பின்னடைவுமே வஹீ, பகுத்தறிவு ஆகிய இரு கருத்தாக்கங்களையும் பற்றிய குழப்பமான புரிதல் இஸ்லாமிய சிந்தையில் தோன்ற வழிவகுத்தன. அவ்விரண்டுக்கும் இடையிலான தொடர்பு என்ன என்ற புரிதலோ, அவை ஒவ்வொன்றினதும் இயல்பும் துறையும் யாவை என்ற புரிதலோ அற்றுப் போனதால், முஸ்லிம் சிந்தை சோபையிழந்து தன் இலக்கிலிருந்து பிறழ்வுற்றது.

சரியான இஸ்லாமிய நோக்கின் படியும், சரியான இஸ்லாமிய வழிமுறையின் படியும், பகுத்தறிவின் பெயராலோ மதத்தின் பெயராலோ நெறிபிறழ்வு ஏற்பட வாய்ப்பில்லை. வஹீயின் நோக்கங்களையும் வழிகாட்டல்களையும் புறந்தள்ளி, பகுத்தறிவின் பெயரால் அடக்கியாள்வதற்கும் இடமில்லை. மதத்தின் பெயராலோ புனிதக் கருத்தாக்கங்களின் பெயராலோ உம்மாவின் விவகாரங்களில் அதன் திருப்தியோ ஆலோசனையோ பெறப்படாமல் அடக்கியாள முற்படுவதும் ஏற்க முடியாதது. உம்மாவின் அறியாமையைக் காரணமாக வைத்து, அதன் ஆலோசனையைப் பெறாமல் அல்லது ஏற்பையும் ஆதரவையும் பெறாமல் எவரும் கடந்து சென்று விட முடியாது. ஏனெனில், அறியாமையை அறிவின் ஒளியே நீக்கி வைக்க முடியும். பலவீனத்தையும் ஒழுங்கீனத்தையும் ஆற்றல் விருத்தியினூடாகவும் சிறந்த ஒழுங்குபடுத்தலின் மூலமாகவுமே களைய முடியும். அந்த வகையில், உம்மா கடந்த நூற்றாண்டுகளில் எதிர்கொண்ட கஷ்டங்கள், குறைபாடுகள், வீழ்ச்சி, தடுமாற்றம் என்பவற்றுக்கான காரணங்களை அதற்கு எடுத்துக் காட்டும் பொறுப்பு முஸ்லிம் பகுத்தறிவுக்கும் சிந்தனைக்கும் உள்ளது. அப்பொறுப்பிலிருந்து அவை ஒரு போதும் தப்ப முடியாது.

ஆக- உம்மா தனது தெளிவான அடையாளத்தையும் சிந்தனைப் பங்களிப்பையும் ஆற்றலையும் மீட்டெடுக்க வேண்டுமாயின், வினைமை மிக்க முயற்சிகளிலிருந்து முஸ்லிம் பகுத்தறிவு தடுக்கப்படலாகாது. ஆய்வுக்கும் பரிசோதனைக்கும் புரிதலுக்கும் பொருள் கோடல்களுக்கும் அது அனுமதிக்கப்பட வேண்டும். வஹீயின் ஒளியில் மனிதர்களதும் சமூகங்களதும் நலனைப் புரிந்து கொள்ள அதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

அவ்வாறே, உம்மாவின் பார்வைத் தெளிவையும் சிந்தனைப் பங்களிப்பையும் ஆற்றலையும் மீள நிலைநிறுத்த நாம் விரும்பினால், மறைவான உலகம் தொடர்பான விவகாரங்களில் வஹீயும் இறைத் தூதும் காட்டித் தந்த உண்மைகளுக்கு அப்பால் முஸ்லிம் பகுத்தறிவு மூழ்கி விடாமல் பாதுகாக்கப்படுவது அவசியம்.

சரியான இஸ்லாமிய நோக்கின்படி, வஹீயானது பகுத்தறிவை செயலிழக்கச் செய்ய முடியாது; வெறும் வரலாற்று மாதிரிகளாகவும் வடிவங்களாகவும் அதனை மாற்றி விடவும் முடியாது; மக்களது நிலைமைகளோடும், வாழ்வியல் நிகழ்வுகளோடும், சவால்களோடும், புத்தாக்கங்களோடும் வசதிகளோடும் தொடர்பற்ற ஏவல்-விலக்கல் தளைகளாகவோ பயமுறுத்தும் சாட்டைகளாகவோ அதனை மாற்றி விடவும் முடியாது.

நமது தெளிவான நோக்கை மீண்டும் பெற நாம் விரும்பினால், நமது தூதும் வஹீயும் வெறுமனே கல்வியியல் சார்ந்த சிக்கலான விவகாரமொன்றாக மாறி விடாதிருப்பதும் அவசியம். அவ்வாறு மாறுமாயின், அதற்கான தனியான கட்டமைப்பொன்றும், தாம் விரும்பிய அமைப்புக்கு அதனை மாற்றிக் கொள்கின்ற தலைவர்களும் தோன்றி விடுவார்கள். அவர்கள் இக்கட்டமைப்பின் பெயரால் மனிதர்களது வாழ்வின் மீதும் அறிவின் மீதும் வாழ்வையும் சமூகத்தையும் பற்றிய தமது பார்வைக்கு அமைவாக அதிகாரம் செலுத்தத் தொடங்கி விடுவார்கள். உம்மாவினதோ அதன் சிந்தனையாளர்களதோ புத்திஜீவிகளதோ எந்த அபிப்பிராயத்தையும் ஆலோசனையையும் ஏற்புநிலையையும் அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். உம்மாவின் தேவைகள், அது எதிர் கொள்ளும் சவால்கள், அதன் அபிலாஷைகள் முதலிய எதனையும் அவர்கள் கவனிக்க மாட்டார்கள். ஷரீஆவினதும் வஹீயினதும் மகாஸிதை சாத்தியப்படுத்தும் வகையில் உம்மா மேற்கொள்ள வேண்டிய நாகரிகப் பயணத்துக்குத் தேவையான புதிய தீர்வுகளைப் பற்றியோ புத்தாக்க ஒழுங்குகளைப் பற்றியோ கூட அவர்கள் கணக்கிலெடுக்க மாட்டார்கள்.

வரலாறு நெடுகிலும் முஸ்லிம் பகுத்தறிவு தனது ஏராளமான ஆற்றல்களை இழந்து விட்டது. இஸ்லாமிய நோக்குக்கும் அதன் சிந்தனா-முறையியல் சட்டகத்துக்கும் மாறான வகையில், தெய்வீகம் சார்ந்த மறைவான உண்மைகளிலும், தெய்வீகப் பொதுண்மைகள் சார்ந்த தத்துவ விசாரங்களிலும் முஸ்லிம் பகுத்தறிவு மூழ்கிப் போனமையே இதற்குக் காரணமாகும்.

வஹீயும் பகுத்தறிவும் பிரபஞ்சமும் ஒருங்கமைந்த சீரிய இஸ்லாமிய நோக்கே முதல் இஸ்லாமியத் தலைமுறை புத்தாக்கத்தின் கொடுமுடியைப் பற்றியிருக்க உதவியது. அந்நோக்கானது புலவய உலகை ஆழ்ந்து கவனிக்கவும், வஹீயின் வழிகாட்டலின் படி செயற்படவும் முஸ்லிம் பகுத்தறிவைத் தூண்டியது. மட்டுமன்றி, மனித இனத்துக்கு நாகரிகத் துறையில் புதிய திசைவழிகளை அது திறந்து கொடுத்தது. அந்தப் பாதையிலேயே மனித நாகரிகம் முன்னெப்போதும் அறிந்திராத அறிவியல்-பரிசோதனை முறைமையையும், பௌதீக உலகச் சாதனைகளையும் நிறுவியது.

முஸ்லிம் பகுத்தறிவானது கடந்த காலங்களில் எந்தளவுக்கு இஸ்லாமிய நோக்கை தெளிவாகப் புரிந்திருந்ததோ அந்தளவுக்கு வாழ்வைக் கட்டியெழுப்பவும், புலவய உலகின் பிரதிநிதித்துவப் பொறுப்பைச் சுமக்கவும் ஆற்றல் பெற்றிருந்தது. இயற்கை, தொழில் நுட்பம், ஷரீஆ முதலிய பல்வேறு துறைகளில் முஸ்லிம்கள் விட்டுச் சென்ற நாகரிக முதுசங்கள் இதற்குச் சான்றாய் அமைந்துள்ளன. அதேபோன்று, முஸ்லிம் பகுத்தறிவானது தனது வரலாற்றுப் பயணத்தில் ஸ்தூல உலகுக்கு அப்பாலுள்ள சாஸ்வத மறை உலக விவகாரங்களில் எந்தளவுக்கு மூழ்கியதோ அந்தளவுக்கு தனது சக்தியையும் முயற்சிகளையும் வீணடித்து விட்டது. ஏனெனில், அந்த மறைவான உலகு மனிதப் பகுத்தறிவால் ஸ்பரிசிக்க முடியாத வேறொரு பரிமாணம் கொண்டது. அதனுடன் ஒப்புவமை காணத் தகுந்த எதுவும் பௌதீக உலகில் கிடையாது.

> ''அவன் யாரையும் பெறவில்லை; அவனையும் யாரும் பெறவில்லை''. ''அவனைப் போன்று எதுவுமில்லை''.

முஸ்லிம் பகுத்தறிவை மூழ்கடித்த அதே தர்க்கவாதங்களும் யூகங்களும் பிரச்சினைகளும் இன்றும் தொடர்கின்றன. அவை தொடர்பான முரண்பாடும் பிரிவினையும் கண்மூடித்தனமான மோதலும் மேலும் அதிகரித்துச் செல்கின்றனவே தவிர குறைந்தபாடில்லை. பல்வேறு உள்நோக்கம் கொண்டவர்களால் இத்தகைய விவகாரங்கள் தவறாகக் கையாளப்படுவதால், அவை உம்மாவுக்குத் தீங்கிழைத்து, அதனைச் சின்னா பின்னமாக்கிக் கொண்டிருக்கின்றன. உம்மாவினுள்ளிருக்கும் அணிகளுக்கு மத்தியில் முரண்பாட்டு நெருப்பை மூட்டி, உண்மையான சவால்களை விட்டு அதனைத் திசைதிருப்பி இருக்கின்றன. இந்நிலை எதிரிகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளதோடு, அவர்களது நோக்கங்களையும் பேராசைகளையும் அடைந்து கொள்ளவும் இடமளித்துள்ளது.

இஸ்லாமிய ஷரீஆவுக்கும் வஹீக்கும் என பாரிய கொள்கைகளும் இலக்குகளும் கோட்பாடுகளும் உள்ளன. அடிப்படையான பெறு மானங்களும் சட்டங்களும் உள்ளன. அவை ஆரோக்கியமாகவும், அறிவார்ந்த முறையிலும், தெளிவாகவும் வெளிப்படுத்தப்படுவது அவசியம். மட்டுமன்றி, உம்மாவின் அங்கத்தவர்கள் பயிற்றுவிக்கப் படக்கூடிய பாடநெறியாகவும் அது மாற வேண்டும். அதன் அடிப் படையிலேயே அவர்களது உளவியலும் சிந்தனையும் அறிவியற் சாத னங்களும் கட்டமைக்கப்பட மேண்டும்.

வஹீயினதும் இறைத்தூதினதும் வசனங்களும் வார்த்தைகளும் தற்காலத்தில் பரிபூரண ஒழுங்கொன்றில் தொகுக்கப்பட வேண்டும். நோக்கங்களும் கோட்பாடுகளும் பெறுமானங்களும் தெளிவாக வெளிப்படும் வகையிலும், முதன்மைப்படுத்தப்பட வேண்டிய அம் சங்கள் நிரற்படுத்தப்பட்டும் அந்த ஒழுங்கு அமைந்திருப்பது அவ சியமாகும். அப்போதுதான், முஸ்லிமின் அறிவு நோக்கில் ஏற்பட்டி ருக்கும் தடுமாற்றத்துக்கான மூலகாரணங்களை இல்லாதொழிக்க முடியும். இத்தடுமாற்றமே குறுகிய பார்வை கொண்டோரும் மலட் டுக் கோட்பாட்டாளர்களும் உம்மாவின் சிந்தனை குறித்தும் கலா சாரம் குறித்தும் கருத்துக் கூறவும் மேலாதிக்கம் செலுத்தவும் வழி யேற்படுத்தியது; இன்றும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. பார்வைத் தெளிவும், இலக்குகள் பற்றிய புரிதலும், அழகிய முன்வைப்புமே இம்மயக்கத்தையும் குழப்பத்தையும் தீர்த்து வைக்க முடியும். வசனங்கள், அவற்றின் தொடர்புகள், அவற்றின் முதன்மைப் படுத்தல் கள், இலக்குகள் என்பவை குறித்த அறிவீனமான பார்வைக்கும் அதன் மூலமே வழியில்லாது போகும்.

இஸ்லாமிய ஆய்வறிவாளர்கள் வஹீயை பகுதி பகுதியாக அன்றி முழு மொத்தமாகவே நோக்க வேண்டும். அதிலிருந்து அவர்கள் வழிகாட்டல்களையும் விதிகளையும் சாரமாகப் பெற்று, அவற்றின் அடிப்படையில் அவசியமான தீர்வுகளையும் ஒழுங்குகளையும் சட் டங்களையும் பெற வேண்டும்.

இஸ்லாமிய சிந்தனையாளர்களும் ஆய்வறிவாளர்களும் வாழ்வை நோக்கிச் செல்ல வேண்டும். உயிரிகள், நியதிகள், இயல்புகள், தேவைகள், நிகழ்வுகள், சூழமைவுகள், கட்டொழுங்குகள், பல்வேறு வாழ்வியல் நிலைமைகள் என்பவற்றை அவர்கள் நன்கு புரிந்து அவற்றிலிருந்து பயன்பெறவும் கற்றுக் கொள்ளவும் முயல வேண் டும். தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண வேண்டும். தமது

செயற்பாட்டுக்கான ஒழுங்குகளையும் சட்டதிட்டங்களையும் விதி களையும் இஸ்லாமிய நோக்கின் அடிப்படையிலும், வஹீயின் வெளிச்சத்திலும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் பகுத்தறிவானது இஸ்லாமிய அறிவுக்கான மூலங் களாகத் திகழும் வஹீயோடும் பிரபஞ்சத்தோடும் இணைந்த தனது நாகரிகப் பங்களிப்பை மேற்கொள்ளும் போது, சமூக-மானிட-சட்டத் துறைகளிலான ஷரீஆ சார்ந்த படிப்பனுபவத்தையும், அரசியல்-சட்ட வாக்கப் பணியையும் ஒன்றாகக் கலந்து குழப்பிக் கொள்ளாது. ஏனெனில், பல்வேறு துறைகளிலான அறிவாய்வுகளும் படிப்பனுப வங்களும் உம்மாவுக்கும் அதன் தலைமைக்கும் நிறுவனங்களுக்கும் அறிவையும் சிந்தனையையும் அனுபவத்தையும் ஆய்வுகளையும் வழங்குவதற்குரிய அடிப்படை மூலாதாரங்களாக அமைகின்றன. அதன்பிறகு வாழ்வையும் அதன் நிகழ்வுகளையும் புரிந்து கொள்வ தற்கு குறித்த தரப்புகள் அவற்றை பயன்படுத்திக் கொள்ளும். மட்டுமன்றி, தமது திட்டங்களை கட்டமைப்பதற்கும், விவகாரங் களை நிர்வகிப்பதற்கும், தேவைகளை தீர்த்துக் கொள்வதற்கும் அவற்றை இத்தரப்புகள் பயன்படுத்திக் கொள்ளும். மனிதர்களையும் அவர்களது தேவைகளையும் புரிந்து கொள்வதிலும், அவர்களது சிந்தனைக்கான உள்ளடக்கத்தை வழங்குவதிலும் அறிவாய்வுகள் பாரிய முக்கியத்துவத்தைப் பெறுகின்ற போதிலும், அரசியல்-சட்ட வாக்கப் பணியிலிருந்து அவை வேறானவையாகும். அரசியல்-சட்ட வாக்கப் பணிக்குத் தேவையான உள்ளடக்கத்துக்கும் அதன் சிறந்த ஆற்றுகைக்கும் இவ்வாய்வுகள் பங்களித்தாலும், குறித்த அரசியல்-சட்டவாக்கப் பணியினுள் அவை அடங்குவதில்லை என்பது இங்கு முக்கியமாக கவனிக்கத் தக்கது.

உம்மாவின் விவகாரங்களை நிர்வகிப்பது தொடர்பாகவும், சவால் களை எதிர்கொள்ளும் வகையில் அல்லது அபிலாஷைகளை நிறை வேற்றும் வகையில் அதன் ஆற்றல்களையும் வளங்களையும் பயன்படுத்துவது தொடர்பாகவும் உம்மா கொண்டிருக்கும் பார்வை, அனுபவங்கள், ஏற்பு நிலை என்பவற்றின் சாராம்சத்தைப் பிரதி பலிப்பதாகவே உம்மாவினுள் மேற்கொள்ளப்படும் அரசியல்-சட்ட வாக்கப் பணி அமைய வேண்டும். அந்த வகையில், வெற்றிகரமான அரசியல்-சட்டவாக்கப் பணியானது உம்மாவின் அனைத்து அங்கத்த வர்களதும் ஆலோசனையை பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் பயன்படுத்திக் கொள்வது அவசிய மாகும். அப்போதுதான் அனைத்துத் தனிநபர்களும் தங்களது அபிப்

பிராயங்களை வெளிப்படுத்த வாய்ப்புக் கிட்டும். சிறப்புத் துறை யாளர்கள் தங்களது பங்களிப்புக்களை வழங்கவும் சந்தர்ப்பம் ஏற் படும். அதன் மூலமாக, குறித்த அரசியல் கண்ணோட்டமானது யதார்த்தம் தழுவியதாகவும் உண்மையானதாகவும் அமைவதோடு, உம்மாவையும் அதன் தேவைகளையும் அனுபவங்களையும் ஏற்பு நிலையையும் பிரதிபலிப்பதாகவும் அமையும். இது உம்மாவின் ஆதரவையும் அர்ப்பணிப்பையும் பெற்றுத் தருவதோடு, குறித்த நோக்கு வெற்றி பெறுவதற்கு அவசியமான அம்சங்களைப் பேணக் கூடியதாக உம்மாவை மாற்றவும் உதவும்.

வஹீயை முஸ்லிம் சிந்தனைக்கும் அறிவுக்குமான மூலாதாரமாக எடுத்துக் கொள்வதோ, முஸ்லிம் பகுத்தறிவு தனது பங்களிப்பின் போது வஹீயின் நியமங்களையும் இலக்குகளையும் பின்பற்றுவதோ அறிவாய்வு விவகாரத்தையும் அரசியல்-சட்டவாக்க விவகாரத்தை யும் குழப்பிக் கொள்வதாகாது. அரசியல்-சட்டவாக்கக் களத்தை கோட்பாடு சார்ந்த படிப்பாய்வுக் களமாக மாற்றுவதாகவும் அது பொருள் தராது. மாற்றமாக, தெய்வீக வழிகாட்டல் துறையிலான அறிவியல் ஆய்வுகளின் பங்களிப்புக்களைப் பெற்று, இஸ்லாமிய சட்டவாக்கத்தையும் அரசியலையும் செழுமைப்படுத்துவதாகவே அது அமையும். குறிப்பாக அரசியல் மற்றும் சட்டவாக்கத் தீர்மானங்களை எடுக்கும் போது இவ்வறிவாய்வுப் பங்களிப்புகள் முக்கியத்துவம் கொண்டவையாகும்.

வஹீயையும், பகுத்தறிவின் 'ஃபித்றாவை'யும், பிரபஞ்சத்தையும் தனது கட்டுருவாக்கத்துக்கான மூலாதாரங்களாக ஏற்றுக் கொள்ளும் இஸ்லாமிய நோக்கானது உம்மாவினதும் சமூகத்தினதும் தீர்மானங் கள் கலந்தாலோசனையின் அடிப்படையிலேயே நிகழ வேண்டுமென வற்புறுத்துகிறது. ஏனெனில், உம்மாவின் கலந்தாலோசனையும் பொதுவான ஏற்புநிலையுமே மானிட நிர்வாகப் பொறுப்பையும் ஃகிலாபாவின் நோக்கங்களையும் சாத்தியப்படுத்தும். மட்டுமன்றி, அடக்குமுறை, வரம்பு மீறல், மனிதர்களையும் சமூகங்களையும் அவர்களது நலன்களுக்கும் கண்ணோட்டங்களுக்கும் ஏற்புநிலை களுக்கும் மாறாக வழிநடாத்துதல் என்பவற்றைத் தடுக்கவும் அதுவே உதவும்.

உம்மாவின் தீர்மானங்களில் தவறு நிகழ்ந்து விடுமோ என்ற அச்சமும், அத்தீர்மானங்கள் சரியாக அமைய வேண்டும் என்ற அதீத அக்கறையும் உம்மாவின் அங்கத்தவர்களிடையே அறிவு பரப்பப்பட

வேண்டிய கட்டாயத்தை வற்புறுத்துகின்றன. இளைய தலைமுறையைப் பயிற்றுவித்து, அறிவூட்டி, பண்படுத்தி, சரியான வஹீயினதும் ஆரோக்கியமான பகுத்தறிவினதும் வழிகாட்டலைத் தேடி ஒழுகுவதற்கு அவர்களைப் பயிற்றுவிக்கப் பாடுபடுகின்ற குடும்பங்கள் உருவாக்கப்பட வேண்டிய கட்டாயத்தையும் இது வற்புறுத்துகிறது. அத்தோடு அரசியல்-சட்டவாக்கத் தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பை ஒப்படைக்கத் தகுதியான கருத்தியலும் அனுபவமும் ஈடுபாடும் கொண்ட மனிதர்களைத் தெரிவு செய்வதற்கு உம்மாவின் வெகுமக்களைத் தகுதிப்படுத்தக் கூடிய அறிவார்ந்த அலைவரிசைகள் நிறுவப்படுவதும் அவசியமாகும். அவர்களது தீர்மானங்கள் உம்மாவின் தேவையைப் பிரதிபலிக்க வேண்டும்; உம்மாவின் நோக்கைச் சார்ந்து நிற்க வேண்டும்; உம்மாவின் ஏற்பையும் ஆதரவையும் ஈடுபாட்டையும் ஈர்க்க வேண்டும். அவ்வாறில்லாத எந்தத் தீர்மானமும் அடக்குமுறை, பயங்கரவாதம், வீழ்ச்சி என்பவற்றுக்கே இட்டுச் செல்லும். மட்டுமன்றி, அறியாமையும் சீர்கேடும் தனிப்பட்ட நலன்களும் சத்தியத்தின் ஆடையை அணிந்து கொள்ளவும், பொதுநலக் கோஷங்களை எழுப்பவும் ஏதுவான நிலை உருவாகி விடும்.

ஆக- இஸ்லாமிய நோக்கிலோ முஸ்லிம் சிந்தனையிலோ ஆய்வு, புரிதல், கண்ணோட்டம், விளக்கம், அபிப்பிராயம் என்பவையும், (அல்லாஹ் பாதுகாத்துத் தருவதாக உறுதியளித்த) வஹீயும் தூதும் ஒன்றோடொன்று கலந்து விடாதிருப்பது இப்படித்தான்.

இந்த வகையில், வஹீயின் அந்தஸ்தும் பாத்திரமும் என்ன என்பது சீரிய இஸ்லாமிய நோக்கில் தெளிவாகவே இருக்கும். அறிவியல் விவகாரங்களில் அறிவாய்வுச் செயற்பாடுகளின் வகிபாத்திரமும், தனிப்பட்ட அறிவுசார் முயற்சிகளது வகிபாத்திரமும் கூட தெளிவாகவே இருக்கும். அவ்வாறே, சமூக-சட்டவாக்கத்தின் வகிபாத்திரமும் தெளிவாக இருக்கும். வஹீயின் வழிகாட்டல்களிலிருந்தும், உம்மாவின் முழுமொத்தப் புரிதல், இஜ்திஹாத், ஏற்புநிலை என்பவற்றிலிருந்தும் இச் சமூக-சட்டவாக்கம் பெறப்படுவதால், உம்மாவின் தேவைகளோடு காலத்தாலும் இடத்தாலும் இயல்பாக ஒத்திசைந்திருக்கும்.

அந்தவகையில், இஸ்லாமிய முறையிமையியல் பற்றிய இவ்வாய்வில், இஸ்லாமிய அறிவுக்கான மூலாதாரங்களான வஹீ, பகுத்தறிவு, ஃபித்றா என்பவற்றையும், சமூக-மானிட அறிவாய்வு வழிமுறைகளையும் நாம் கலந்து குழப்பிக் கொள்ளக் கூடாது. ஒவ்வோர்

அறிவியல் துறைக்குமென தனியான வழிமுறைகளும் சாதனங்களும் உண்டு. அவையே குறிப்பிட்ட துறைக்கும் தேவைகளுக்கும் பொருத்த மாகவும் அமைந்திருக்கும். ஆயினும், இவ்வனைத்து இஸ்லாமிய அறிவாய்வுத் துறைகளும் வஹீயையும் ஃபித்றாவையுமே சார்ந்து நிற்கின்றன. ஃபித்றா என்பது பகுத்தறிவு, படைப்புகளில் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கும் நியதிகள், அறிவுக்கும் வழிகாட்டலுக்கு மான நியமங்கள் முதலியவற்றை உள்ளடக்குகின்ற பிரயோகமாகும். ஒவ்வோர் அறிவுத் துறையிலும் காணப்படுகின்ற சாத்தியமான வழி முறைகளால் அந்த அறிவும் வழிகாட்டலும் பெறப்பட முடியும். வஹீயினதும் பிரபஞ்ச நியதிகளதும் இந்த ஒத்திசைவின் மூலமாகவே இஸ்லாமிய அறிவுத் துறைகள் முழுமைத்துவப் பண்பைப் பெறு கின்றன. மட்டுமன்றி, மனிதனுக்குப் பயனளிக்கும் அறிவை உரு வாக்கும் அனைத்து நல்ல வழிமுறைகளையும் மனதார ஏற்றுக் கொள்ளும் நிலையும் உருவாகின்றது.

இன்று உம்மாவைப் பீடித்துள்ள பின்னடைவும் துன்பமும் முஸ் லிம் பகுத்தறிவானது இஸ்லாமிய சிந்தனைக்கான மூலாதாரம் என்ற தனது பாத்திரத்தை சரியாக வகிக்க வேண்டிய கட்டாயத்தை ஏற் படுத்தியுள்ளது. வஹீயோடும் பிரபஞ்சத்தோடும் ஒருங்கிணைந்தும் ஒத்துழைத்தும் இப்பணியை அது மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவையனைத்தும் சமமாக ஒன்றிணைந்து இஸ்லாமிய அடிப்படை யிலான நாகரிக நோக்கொன்றைக் கட்டியெழுப்புவது அவசியமாகும். அவ்வாறே, உம்மாவின் தேவைக்கும் அபிலாஷைகளுக்கும் சவால் களுக்கும் ஏற்ற நவீன முஸ்லிம் சமூகம் ஒன்றையும் அதற்கான நிறுவனங்களையும் வசதிகளையும் கட்டியெழுப்ப அவை உழைக்க வேண்டும்.

இஸ்லாமிய அறிவுக்கான மூலாதாரம் என்ற வகிபாத்திரத்தில் காலத்துக்கேற்ற ஒழுங்குடன் கருமமாற்றும் நிலைக்கு முஸ்லிம் பகுத்தறிவு இன்னும் வரவில்லை. உலகப் படைப்புகளில் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கும் ஃபித்றாவிலிருந்து பெறப்படும் அறிவை ஏற்காமல் இவ்வகிபாத்திரம் பரிபூரணம் அடையாது. இஸ்லாமிய நோக்கு கட்டாயப் படுத்துகின்ற இஸ்லாமிய சமூகவியல் விஞ்ஞா னங்களைக் கட்டியெழுப்பாமலும் இது முழுமையடையப் போவ தில்லை. ஏனெனில், இத்தகைய சமூக விஞ்ஞானங்களே தமது ஆய்வு கள் மூலமாக முஸ்லிம் உம்மாவை தகைமைப்படுத்தி, தேவையான அறிவாற்றலை அதற்கு வழங்கக் கூடியவையாகும்.

முஸ்லிம் பகுத்தறிவும் சிந்தனையும் சமூகவியல் கலைகளைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், இஸ்லாமிய சிந்தனைக்கு ஆதாரமாக அமையக் கூடிய அடிப்படைகளையும் கொள்கைகளையும் கருத்தாக் கங்களையும் பற்றிய முழுமையான தெளிவு அவசியம். அவை குறித்து இனி நோக்கிவோம்.

## (3) இஸ்லாமிய முறையியலினதும் சிந்தனையினதும் இயங்கு தளங்கள்:

இஸ்லாமிய முறைமையியலும், அதன் பகைப்புலமாக நிற்கின்ற இஸ்லாமிய சிந்தனையும் தமக்கென்று சில அடிப்படைகளைக் கொண்டிருக்கின்றன. அவற்றை நாம் புரிந்து கொள்ளாமல் அவற் றுடன் உறவாடுவதோ, அவற்றினூடாக ஆரோக்கியமான செயல் வாதத்தில் இறங்குவதோ சாத்தியமற்றது. வாழ்வையும் உயிரிகளை யும் இதர படைப்பினங்களையும் புரிந்து கொள்வதற்கான சிந்தனா-புத்தாக்க இயக்கத்தின் போது, முஸ்லிம் பகுத்தறிவுக்கு முன்னால் நின்று வழிகாட்டும் மையக் கருதுகோள்களாகவும் அவையே உள் ளன. வாழ்வையும் படைப்பினங்களையும் புரிந்து கொள்ளவும், அவற்றுடன் உறவாடவும், அவற்றின் விவகாரங்களை நிர்வகித்துத் திசைப்படுத்தவும் அவை உதவுகின்றன.

ஏகத்துவம், பிரதிநிதித்துவப் பணி, பொறுப்புக்கூறல் என்பனவே அந்த அடிப்படைகளாகும். முஸ்லிம் அறிவைப் பொறுத்த வரை, இம்மூன்றும் மிகவும் முக்கியமான அடிப்படைகளாகும். இந்த அடிப் படைகளிலிருந்து பிறக்காத எந்தத் தீர்வுத் திட்டமும் முஸ்லிம் மனச் சாட்சியிலோ நாட்டத்திலோ எந்த இயக்க சக்தியையும் கண்டு கொள்ள முடியாது; எதனையும் சாதிக்கவும் முடியாது.

### அ)- ஏகத்துவம்:

ஏகத்துவமே முஸ்லிம் சிந்தையின் முதல் பிரதான இயங்குதள மாகும். 'ஏகத்துவம்' என்பது அப்பழுக்கற்ற, இயல்பான, பகுத்தறிவு பூர்வமானதோர் நம்பிக்கைக் கோட்பாடு என ஏற்றுக் கொள்ளாமல் முஸ்லிம் பகுத்தறிவுக்கு எந்த இருப்பும் கிடையாது. முஸ்லிமின் ஒவ்வோர் அணுவிலும், அறிவிலும், மனச்சாட்சியிலும் அந்த நம் பிக்கை இரண்டறக் கலந்திருக்க வேண்டும். தன்னையும், தனது வாழ்வையும், தன்னைச் சூழவுள்ள பிரபஞ்சத்தையும் பற்றிய அவனது புரிதலில் அந்த நம்பிக்கை ஐக்கியமாகியிருக்க வேண்டும். இயற்கை

யானதும் பகுத்தறிவு பூர்வமானதுமான இந்நம்பிக்கையின் ஆதார சுருதி கண்ணியம் பொருந்திய அல்லாஹ் பற்றிய எல்லையற்ற விசுவாசமும் தெளிவான புரிதலுமாகும். அவன் படைப்பாளன்; சத்திய மானவன்; ஒருவன்; ஏகன்; தனித்தவன்; தன்னளவில் நிலை பெற்றவன்; அவனைப் போன்ற எதுவும் இல்லை என்ற நம்பிக் கையை இது குறிக்கிறது.

இதுதான் தொடக்கம். ‘ஷஹாதா கலிமா’ இதனையே பேசுகிறது. சங்கை மிகு அல்-குர்ஆனும் தூய ஸுன்னாவும் இதனையே விளக்கு கின்றன. இந்த அடிப்படையே முஸ்லிம் பகுத்தறிவையும் சிந்தனை யையும் இஸ்லாமிய முறையியலையும் சத்தியத்தின் மீது நிலை நிறுத்துகிறது. பிரபஞ்சத்துக்கும் படைப்பினங்களுக்கும் ஆதார சுருதி யாகவும், முடிவாகவும் இதுவே உள்ளதாக அவற்றை ஏற்கச் செய்கி றது. அவை அனைத்தினதும் இருப்பும் மீட்சியும் இணை துணை யற்ற ஏகனான அல்லாஹ்வுக்கே உரியது எனவும் இது ஏற்கச் செய் கிறது. மூலத்தின் ஒருமைத் தன்மையையும், அந்த மூலத்திலிருந்து பிறக்கும் உண்மையின் ஒருமைத் தன்மையையும் இந்த அடிப் படையே உறுதி செய்கிறது. அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட மனிதனின் ஒருமைப்பாட்டையும் இதுவே உறுதிப் படுத்துகிறது. அந்த மனிதனை அல்லாஹ் நாட்ட சக்தியையும் பிரதிநிதித்துவப் பதவியையும் கொடுத்து கண்ணியப் படுத்தினான். சத்தியம், நீதி, நன்மை என்பவற்றின் அடிப்படையில் படைப்புகளை நிர்வகிக்கும் பொறுப்பையும் அவனுக்கு வழங்கினான்.

அந்த வகையில், முஸ்லிம் பகுத்தறிவானது தனது வாழ்வியக் கத்தின் எல்லா அம்சங்களிலும் ஏகத்துவக் கொள்கையையே உள்ளு றையாகக் கொண்டிருக்கும். இதனால், அதன் முறைமையியலில் ஐயத்துக்கோ யூகத்துக்கோ முரண்பாட்டுக்கோ தடுமாற்றத்துக்கோ இடமில்லை. அதன் திசைவழியும் பயணமும் திடமானவை. சமூக வியல், இயற்கையியல், தொழிநுட்பவியல் முதலிய எந்தத் துறை யிலாயினும், ஏகத்துவக் கொள்கையைப் பின்பற்றி ஒழுகும் வரை அதனை எவராலும் திசை திருப்ப முடியாது; வாழ்விலும் பிரபஞ்ச த்திலும் அது ஆற்றும் நற்பணியையும் தடுத்து விட முடியாது. முஸ்லிம் பகுத்தறிவு சாதித்த அனைத்து வெற்றிகளும் ஏகத்துவக் கொள்கை மீது பற்றுறுதி கொண்டிருந்ததன் மூலமாகவே சாத்திய மாகின. எப்போதாவது அதன் முயற்சிகள் திசை தவறித் தோல்வி யில் முடிந்திருக்குமாயின், ஏகத்துவக் கொள்கையை அது புறக்கணித் திருந்தமையே அதற்குக் காரணம் எனலாம்.

*மனோ இச்சை, வெறியுணர்வுகள், பெருமை, விஷமம் புரிதல் போன்ற நோய்களுக்கான சரியான சிகிச்சையைப் பெறுவதே இஸ்லாமியப் பகுத்தறிவினதும் முறைமையினதும் ஆரம்பமாகும். மனித அறிவு -இவ்வளவு சாதனைகளுக்குப் பிறகும்- தனிமனிதர்களுக்கும் சமூகங்களுக்கும் சாந்தியையும் பாதுகாப்பையும் சாத்தியப்படுத்துவதில் இன்று வரை ஏன் சிரமத்தையும் குழப்பத்தையும் தோல்வியையும் சந்தித்து வருக்கிறது என்ற கேள்விக்கான பதில் இங்குதான் மறைந்திருக்கிறது.*

*''உயர்ந்த உமது ரட்சகனின் பெயரைத் துதி செய்வீராக! அவன் படைத்துச் சீர் படுத்தினான்; அளவாகத் திட்டமிட்டு வழிகாட்டினான்''. (87:1-3)*

*''அல்லாஹ் எந்தச் சந்ததியையும் தனக்காக எடுத்துக் கொள்ளவில்லை. அவனுடன் வேறு கடவுளும் இருந்ததில்லை. அவ்வாறு இருந்திருப்பின், ஒவ்வொரு கடவுளும் தான் படைத்ததை எடுத்துச் சென்றிருப்பர். சிலர் மற்றும் சிலர் மீது மேலாண்மை பெறவும் முயன்றிருப்பர். இவர்கள் வர்ணிக்கும் பண்புகளிலிருந்து அல்லாஹ் தூய்மையானவன்''. (23:91)*

*''எதுவுமின்றியே அவர்கள் படைக்கப்பட்டார்களா அல்லது படைப்பாளர்களே அவர்கள்தானா?''. (52:35)*

*''(மூஸா) கூறினார்: எங்கள் ரட்சகன்தான் அனைத்தையும் படைத்துப் பின்னர் வழிகாட்டினான்''. (20:50)*

*''இது அல்லாஹ்வின் படைப்பாகும். எனவே அவனல்லாதவர்கள் எதனைப் படைத்தார்கள் என்பதை எனக்குக் காட்டுங்கள்!'' (31:11)*

*''அனைத்தையும் நேர்த்தியாக அமைத்த அல்லாஹ்வின் செயல் இதுவாகும். நிச்சயமாக அவன் நீங்கள் செய்வதை நன்கு அறிந்தே இருக்கிறான்''. (27:88)*

*''அவன் வானங்களையும் பூமியையும் சத்தியமாகப் படைத்தான். உங்களை வடிவமைத்து, உங்களது தோற்றங்களையும் அழகு படுத்தினான். இறுதி மீட்சி அவனிடமே உள்ளது'' (64:3)*

*''அருளாளனின் படைப்பில் எந்த முரண்பாட்டையும் நீர் காணமாட்டீர். எனவே மீண்டும் பார்ப்பீராக! அதில் எந்தக் கோளாறையாவது நீர் காண்கிறீரா?'' (67:3)*

*''உங்களை நாம் வீணாகவே படைத்தோம் என்றும், நீங்கள் எம்மிடம் திரும்பி வர மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண் டீர்களா? அரசனும் சத்தியமானவனும் ஆகிய அல்லாஹ் மிக உயர்ந்தவன்''. (23:115-116)*

*''(வானம், பூமி ஆகிய) இரண்டிலும் அல்லாஹ்வைத் தவிர்ந்த வேறு கடவுளர் இருந்திருப்பின், அவ்விரண்டும் சீர்கெட்டிருக் கும். அர்ஷின் அதிபதியாகிய அல்லாஹ் இவர்களது வர்ண னைகளை விட்டும் தூய்மையானவன்''. (21: 22)*

*''அவனைப் போன்று எதுவுமில்லை. அவன் நன்கு செவியுறு பவன்; அனைத்தையும் பார்ப்பவன்''. (42:11)*

*''எவர் அல்லாஹ்வை விசுவாசிக்கிறாரோ அவரது இதயத்துக்கு அவன் வழிகாட்டுகிறான். அல்லாஹ் அனைத்தையும் அறிந்த வன்''. (64:11)*

*''ஏனெனில், அல்லாஹ்வே சத்தியமானவன். அவனன்றி இவர் கள் பிரார்த்திப்பவை அசத்தியமானவைதான். அல்லாஹ்வே உயர்ந்தவனாகவும் மகத்தானவனாகவும் இருக்கிறான்''. (22:62)*

## ஆ)- பிரதிநிதித்துவம்:

பூமியிலும் பிரபஞ்சத்திலும் மனிதன் சுமக்கும் பிரதிநிதித்துவப் பொறுப்பையே இது குறிக்கிறது. பராமரிப்பு, வள மேம்பாடு, நிர்வகிப்பு, வசப்படுத்தல் என்பவற்றுக்கான இப்பிரதிநிதித்துவப் பொறுப்பின் மூலமாக அனைத்துப் படைப்புகளும் மனிதனது தலை மையின் கீழ் வருகின்றன. இப்பொறுப்பின் மூலமாக பிரபஞ்சம், பூமி, படைப்புகள், உயிரிகள் முதலியவற்றின் விவகாரங்களை நிர் வகிப்பதில் மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாக நின்று செயல் படுகிறான். ஒரு முஸ்லிம் தனது நம்பிக்கைக் கோட்பாட்டின் காரணமாகவும், சிந்தனா முறைமையின் காரணமாகவும், அல்லாஹ் தனக்களித்த நாட்ட சக்தி, அறிவுப் பலம் முதலிய கண்ணியங் களின் காரணமாகவும் இயல்பாகவே மனிதனை பிரபஞ்சத்தின் பிரதிநிதியாகத்தான் பார்க்கிறான்.

இந்த வகையில், பிரதிநிதித்துவம் என்பது முஸ்லிம் புரிதலின் படி ஓர் அருளும் கண்ணியமும் ஆகும். அது மனிதனுக்கு பலமும் அதிகாரமும் மிக்க இடமொன்றை பிரபஞ்சத்தில் பெற்றுக் கொடுக் கிறது. தனது தேவைகளுக்காக அதனை வசப்படுத்திக் கொள்ளும்

அதேவேளை, சீர்திருத்தத்தையும், வள மேம்பாட்டையும் நோக்கிய பாதையில் பயணிப்பவனாகவும் அவன் இருப்பான். இப்பொறுப்பானது அதன் உட்கிடையில் தெரிவுச் சுதந்திரத்தையும் அறிவுப் பலத்தையும் பொதிந்ததாகும்.

பிரபஞ்சத்தை நிர்வகிப்பதிலும், வசப்படுத்துவதிலும், பராமரிப்பதிலும் மனிதன் தொடர்ச்சியாகச் செயற்படாமல் வாழ்வில் தனது வகிபாத்திரத்தை நிறைவேற்ற முடியாது; ஸ்திரமடையவோ நிம்மதி பெறவோ முடியாது. அந்தவகையில், மனிதனுக்கு செயற்பாடும் அவசியம்; ஸ்திரத்தன்மையும் அவசியம்; அறிவும் அவசியம். முஸ்லிம் சிந்தையிலுள்ள பிரதிநிதித்துவக் கருத்தாக்கமே இந்த இயல்பான தேவைகளை வரையறுத்து திசைப்படுத்துகிறது. இதன் மூலமாக அவை நன்மை, பராமரிப்பு, வளப்படுத்தல் என்பவற்றை நோக்கிய தேவைகளாக மாறுகின்றன.

*''உங்களை நாம் விளையாட்டாகப் படைத்தோம் என்றும், நீங்கள் எம்மிடம் திரும்பக் கொண்டு வரப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?'' (23:115)*

*''உங்களில் எவர் செயலால் சிறந்தவர் என உங்களைச் சோதித்துப் பார்க்கவே அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்''. (67:2)*

*''உமது ரட்சகன் வானவர்களிடம், 'பூமியில் நான் ஒரு பிரதிநிதியை ஏற்படுத்தப் போகிறேன்' எனக் கூறினான்''. (2:30)*

*''வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்தையும் உங்களுக்கு அவன் வசப்படுத்தினான். சிந்திக்கக் கூடிய சமூகத்தினருக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் உண்டு''. (45:13)*

*''அவன்தான் உங்களுக்கு பூமியை சாதுவாக கீழ்ப்படியக் கூடியதாக ஆக்கித் தந்தான். எனவே அதன் பல பாகங்களிலும் பரந்து சென்று, அவன் அளித்த வாழ்வாதாரத்திலிருந்து புசியுங்கள். அவனை நோக்கியே இறுதி மீட்சியும் இருக்கிறது''. (67:15)*

*''நபியே கூறும்: நீங்கள் பூமியில் பயணித்து, படைப்பு எவ்வாறு ஆரம்பித்தது என்று கவனித்துப் பாருங்கள்!'' (29:20)*

ஆக- பிரபஞ்சத்தையும் படைப்புகளையும் பயனுள்ளவற்றுக்கு வசப்படுத்திக் கொள்ளுமாறு 'பிரதிநிதித்துவம்' என்ற தளத்திலிருந்து முஸ்லிம் பகுத்தறிவுக்கு அழைப்பு விடுக்கப் படுகிறது. அந்தப் பயன்

அவனுக்கும், பிரபஞ்சத்துக்கும், சுற்றியுள்ள படைப்பினங்களுக்கும் கிட்டுவதாக அமைய வேண்டும். பிரபஞ்சத்தின் பல திசைகளிலும் பரவிச் சென்று செயற்படுமாறு முஸ்லிம் பகுத்தறிவு அழைக்கப் படுகிறது. பிரபஞ்சத்தின் இரகசியங்களை அறிந்து நன்மைக்காகப் பயன்படுத்துமாறு அது கேட்கப் படுகிறது.

'பிரதிநிதித்துவம்' என்ற தளத்திலிருந்து நோக்கும் போது, முஸ்லிம் பகுத்தறிவே பிரபஞ்சத்தில் பிரதான அதிகாரி. உழைக்குமாறும், புத்தாக்கம் புரியுமாறும், வளப்படுத்துமாறும் அது வேண்டப்பட் டுள்ளது. அறிவு, வளப்படுத்தல், வசப்படுத்தல் என்பவற்றின் மூல மாக மனிதன் பூமியில் தனது பணியை நிறைவேற்ற முடியும்; இலக்கை எட்ட முடியும். மனித உள்ளமானது அறிவு, உழைப்பு, நன்முயற்சி என்பவற்றின் மூலமாகவே பூமியில் நிம்மதி காண முடியும். முஸ்லிமின் சீரான பகுத்தறிவிலோ உணர்வுள்ள மனச் சாட்சியிலோ இயலாமைக்கும் அறியாமைக்கும் இடமில்லை. நன்மையை அறியாதிருப்பதற்கோ, நன்மை புரியாதிருப்பதற்கோ, நன்மைக்காக உழைக்காமல் இருப்பதற்கோ அங்கு இடமில்லை. ஏனெனில், பூமியில் மனித இருப்பின் நோக்கமே நன்மைக்காக உழைப்பதுதான். அவனது பிரதிநிதித்துவப் பொறுப்பும் அதுதான். உலக வாழ்வு முடிந்த பிறகு அவன் காணவிருப்பதும் இந்த அறிவினதும் உழைப்பினதும் அறுவடையைத்தான்.

இஸ்லாமிய சிந்தனைப் பாங்கிலுள்ள 'பிரதிநிதித்துவம்' என்ற இப்பரிமாணமே இஸ்லாத்தின் ஆரம்பத் தலைமுறையினர் ஏன் அவ்வளவு சக்தி பெற்றிருந்தனர் என்பதற்கான விளக்கத்தைத் தரு கிறது. இஸ்லாத்தின் தூதரும் அன்னாரது தோழர்களும் பெற்றிருந்த அந்தச் சக்தி ஒப்பற்றதாக இருந்தது. செயலிலும், உழைப்பிலும், பிறர் நலன் பேணுவதிலும், போராட்டத்திலும் சடைவோ சலிப்போ காணாத ஆக்க சக்தி அது. எனவேதான், குறுகிய சில வருடங்களி லேயே பூமியின் திசையெங்கும் சத்தியம், நேர்வழி, சீர்திருத்தம், வளப்படுத்தல் என்பவற்றின் ஒளியை அவர்கள் பாய்ச்சினர். வானுலக வழிகாட்டலை மனித இனத்திற்கு புதுப்பித்துக் கொடுத்தனர். அவர்கள் கட்டியெழுப்பிய நாகரிகத்தினாலும் சீர்திருத்தத்தினாலும் தாக்கமடையாத அல்லது பயன் பெறாத பிராந்தியமொன்று பூமிப் பந்தில் அப்போது இருக்கவில்லை.

அந்த முதல் தலைமுறையின் நோக்கில் 'பிரதிநிதித்துவம்' பெற்றி ருந்த முக்கியத்துவமும் பொருளும் கடமைகளுமே அவர்களது சக்தி,

உழைப்பு, அர்ப்பணம், கற்பு, திருப்தி, தன்னல மறுப்பு என்பவற் றுக்கு மூல காரணமாய் அமைந்திருந்தன. ஏனெனில், 'பிரதிநிதித் துவம்' என்ற இந்த அடிப்படையையும் அதன் பொருளையும் உணர் வார்ந்து புரிந்து கொண்ட மனிதன் இயலாமை, அறியாமை, சுயநலம், பிற்போக்கு முதலிய எதனிடமும் சரணாகதி அடைய மாட்டான்.

## இ)- விழுமியம் சார் பொறுப்புணர்வு:

இஸ்லாமிய சிந்தனையும் முறைமையியலும் இயங்குகின்ற மூன் றாவது தளமே இந்த விழுமியம் சார் பொறுப்புணர்வாகும். பொறுப் புணர்வு என்ற இந்த அடிப்படையையும், முஸ்லிம் சிந்தனைப் பாங்கில் அது பெற்றிருக்கும் பரிமாணத்தையும் புரிந்து கொள்ளாமல் முஸ்லிம் மனிதனையோ முஸ்லிம் பகுத்தறிவையோ ஒருவரால் புரிந்து கொள்ள முடியாது.

முஸ்லிம் உம்மா தேக்கமடைந்து, முஸ்லிம் மனிதன் இருப்பிழந்து போயிருந்த மிகக் கடினமான காலப் பிரிவுகளில் கூட அவன் வரலாற் றுச் சுழிகளுக்குள் தொலைந்து விடாமலும் உறக்க நிலை அடைந்து விடாமலும் காப்பாற்றியவை அவனது மனச்சாட்சியும், பொறுப் புணர்வும், அது குறித்த குற்றவுணர்வும்தான். தேங்கித் துருப்பிடித் திருக்கும் நிகழ் யதார்த்தத்தை ஏற்க முடியாமல் முஸ்லிம் சிந்தை திணறிக் கொண்டிருப்பதன் காரணமும் அதுதான். ஏனெனில் முஸ்லிம் பகுத்தறிவிலும் மனச்சாட்சியிலும் அடங்கியுள்ள விழுமியம் சார்ந்த இப்பொறுப்புணர்வானது அவன் தூக்கத்தில் அயர்ந்து விடுவதையோ கடமையில் தவறுவதையோ அனுமதிப்பதில்லை. இந்த வகையில் தான், முஸ்லிம் உம்மாவின் பார்வை மங்கி, பாதை தவறி, பயணம் பின்தங்கிய பிற்பட்ட காலப் பிரிவுகளில் கூட அதன் வரலாறு தூக்க மின்மையும் கலக்கமும் கொண்ட வரலாறாக இருந்திருக்கிறது. அக் காலப் பிரிவுகளில் கூட தனது பணி பற்றிய பொறுப்புணர்வும், நோக்கும், அதில் ஏற்படும் தவறு பற்றிய குற்றவுணர்வும் உம்மா விடம் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. எனவேதான் முஸ்லிம் உம்மா தனது துர்ப்பாக்கியமான நிலையிலிருந்து மீண்டு வருவதற் கான மார்க்கத்தை தொடர்ந்தும் தேடி வந்திருக்கிறது.

'பொறுப்புணர்வு' என்ற இந்த அடிப்படையும் பரிமாணமும் இஸ்லாமிய சிந்தனைப் பாங்கின் உருவாக்கத்தில் 'பிரதிநிதித்துவம்' வகிக்கின்ற பாத்திரத்தின் இன்னொரு பக்கத்தையும் பிரதிபலிக்கிறது எனலாம். ஏனெனில், பிரதிநிதித்துவம், அப்பிரதிநிதித்துவத்தின்

நோக்கம், நாட்ட சுதந்திரம், அறிவுப் பலம் முதலிய அனைத்தும் அப்பணி பற்றிய மனிதனது விழுமியம் சார் பொறுப்புணர்வையும் சேர்த்தே தம்முள் அடக்கியிருக்கின்றன. பிரபஞ்சத்தை வசப்படுத்திக் கொள்வதற்கும் நிர்வகிப்பதற்கும் முயற்சிப்பதா அல்லது முயற்சிக் காமல் இருப்பதா? சீர்திருத்தம் செய்வதா அல்லது சீர்கெடுப்பதா? நடுநிலையையும் சமனிலையையும் பேணுவதா அல்லது வரம்பு மீறுவதா?... முதலிய தீர்மானங்களும் இப்பொறுப்புணர்வின் பாற் பட்டதுதான்.

'ஏகத்துவம்' என்பது அடிப்படையில் வினைமை மிக்க இருப் பையும், வினைமை மிக்க பிரதிநிதித்துவத்தையும், வினைமை மிக்க பொறுப்புணர்வையும் உணர்த்துவதாகும். அந்த வகையில், வாழ்வு என்பது இஸலாமிய நோக்கில் மனிதனது நாட்டத்துக்கும் ஆற்றல் களுக்குமான சோதனையாக அமைகிறது. யார் அவற்றைக் கொண்டு சீர்திருத்தத்துக்கும் வளப்படுத்தலுக்கும் முயல்கிறாரோ அவரே தனது பொறுப்பைச் சுமந்து கொள்கிறார்; மறுமையின் சாஸ்வத வாழ்வில் தனது நன்முடிவையும் உறுதிப்படுத்திக் கொள்கிறார். இதற்கு மறு கிடையாக, யார் தனது நாட்ட சக்தியையும் ஆற்றல்களையும் -அவற்றின் இயல்புக்கு மாறான வகையில்- அநியாயத்தையும் சீர் கேட்டையும் நோக்கி இட்டுச் செல்கிறாரோ, அவர் தனது பொறுப் பிலிருந்து விலகி விடுகிறார்; தனது கடமைகளையும், தனது இருப்பின் நோக்கத்தையும் பாழ்படுத்திக் கொள்கிறார்; தனது நிரந்த முடிவை இழிவாக்கிக் கொள்கிறார்.

ஆக- முஸ்லிம் பகுத்தறிவிலும் மனச்சாட்சியிலும் பதிந்துள்ள இப்பொறுப்புணர்வின் படி, முஸ்லிமின் முயற்சியும் தீர்மானமும் அறிவும் சத்தியம், நீதி, நன்மை, அர்ப்பணம், சீர்திருத்தம், வளப் படுத்தல் என்பவற்றின் அடிப்படையிலேயே அமைதல் வேண்டும். இல்லாத போது, அவை முழுமையோ அங்கீகாரமோ பெறப் போவதில்லை.

''(நபியே) கூறுவீராக: நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒறு மனிதரே. உங்களது கடவுள் ஒரே கடவுளே என எனக்கு 'வஹீ' அறிவிக்கப்படுகிறது. எனவே யார் தனது ரட்சகனைச் சந்திக்க விரும்புகிறைரோ அவர் சிறந்த செயல் புரியட்டும்; தனது ரட்சகனை வணங்குவதில் எவரையும் இணையாக்காம லும் இருக்கட்டும்''. *(18:110)*

*''மனிதர்களே! பூமியில் உள்ளவற்றில் அனுமதிக்கப்பட்ட தூயவற்றையே உண்ணுங்கள். ஷெய்த்தானின் சுவடுகளை பின்பற்றிச் செல்லாதீர்கள். நிச்சயமாக அவன் பகிரங்க விரோதியாக இருக்கிறான்''. (2:168)*

*''அல்லாஹ் உமக்குத் தந்திருப்பதில் மறுமையை தேடிக் கொள்வீராக! உலகில் உமக்குரிய பங்கையும் மறந்து விட வேண்டாம். அல்லாஹ் உமக்கு நல்லுபகாரம் செய்திருப்பது போன்று நீரும் நல்லுபகாரம் செய்வீராக! பூமியில் விஷமம் தோன்ற விரும்ப வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் விஷமம் புரிவோரை நேசப்பதில்லை''. (28:77)*

*''நீங்கள் அல்லாஹ்விடம் மீளக் கொண்டு வரப்பட இருக்கும் நாளை அஞ்சிக் கொள்ளுங்கள். பின்னர் ஒவ்வோர் உயிரும் சம்பாதித்துக் கொண்டது அதற்கு நிறைவாக வழங்கப்படும். அவர்களுக்கு எந்த அநியாயமும் இழைக்கப்பட மாட்டாது''. (2:281)*

*''நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நல்லுபகாரம் புரியுமாறும், உறவினர்களுக்கு கொடுத்துதவுமாறும் கட்டளை இடுகின்றான். தீமை, மானக்கேடான செயல், வரம்பு மீறல் என்பவற்றை விட்டும் தடுக்கின்றான். நீங்கள் நல்லுணர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக உங்களுக்கு அவன் இவ்வாறு உபதேசிக்கின்றான்''. (16:90)*

*''எவர் நன்மை புரிகிறாரோ அது அவருக்கே உரியதாகும். எவர் தீமை புரிகிறாரோ அதுவும் அவருக்கு எதிராகவே அமையும். பின்னர் நீங்கள் உங்களது ரட்சகனிடம் மீளக் கொண்டு வரப் படுவீர்கள்''. (45:15)*

*''எந்த ஆத்மாவும் மற்றொன்றின் பாவத்தைச் சுமக்காது. மனிதனுக்கு அவன் முயன்று செய்ததே கிடைக்கும். அவனது முயற்சி அவனுக்கு எடுத்துக் காண்பிக்கப்படும். பின்னர் அதற்கான நிறைவான கூலியும் வழங்கப்படும்''. (53:38-41)*

*''பின்னர், அவர்கள் அவர்களது உண்மையான ரட்சகனாகிய அல்லாஹ்விடம் மீளக் கொண்டு வரப் படுவார்கள். ஆட்சித் தீர்ப்பு அவனுக்கே உரியது என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவன் மிக விரைவாக கணக்குப் பார்ப்பவனாக இருக்கிறான்''. (6:62)*

''நீங்கள் எவ்வாறு செற்படுகிறீர்கள் என்று பார்ப்பதற்காக பூமியில் அவர்களுக்குப் பின்னர் உங்களை நாம் பிரதிநிதி களாக்கினோம்''. (10:14)

''எவர் ஓர் அணுப் பிரமாணம் நன்மை செய்தாலும் அதனைக் கண்டு கொள்வார். எவர் ஓர் அணுப் பிரமாணம் தீமை செய்தாலும் அதனையும் கண்டு கொள்வார்''. (99:7-8)

ஒரு முஸ்லிம் மேற்கொள்கின்ற பிரதிநிதித்துவ உழைப்பும், பிரபஞ்ச வசப்படுத்தற் செயற்பாடும், 'ஏகத்துவ' உண்மையின் அடிப் படையில் அவன் படைப்பினங்களை நிர்வகிப்பதும் யதார்த்தத்தில் அவனது சுய பிரக்ஞையும் சத்தியத் தேடலுமே அன்றி வேறில்லை. இப்புரிதலின் படி, சத்தியத்தின் மீதான வேட்கையும் கண்ணிய உணர் வுமே முஸ்லிமின் 'பொறுப்புணர்வு' எனபதன் உட்கிடையாகும்.

'பொறுப்புணர்வு' என்பது முஸ்லிம் பகுத்தறிவிலும் மனச்சாட்சி யிலும் 'பிரதிநிதித்துவம்' என்ற கருத்தாக்கத்தை முழுமைப்படுத்து வதாகும். அந்த வகையில், இஸ்லாத்தின் முதல் தலைமுறையினர் கொண்டிருந்த அன்புப் பலம், அர்ப்பண சிந்தை, மனச்சாட்சி, வினைமை என்பவை சமுதாயங்களின் வரலாற்றில் உதாரணமாக எடுத்துக் காட்டத் தக்க அளவுக்கு எப்படி அவர்களுக்கு வாய்த்தன என்பதை இது நமக்கு விளக்குகிறது. அவ்வாறே, பேராசை, பெருமை, உலகப்பற்று என்பவற்றிலிருந்து பிரமிப்பூட்டும் வகையில் எவ்வாறு விடுபட்டிருந்தார்கள் என்பதையும் நமக்கு விளக்குகிறது. செல்வத்தை சேர்த்துக் குவிப்பதற்கான இயலுமையும் விருப்பமும் அவர்களிடம் இருந்த போதும், பின்வரும் அல்-குர்ஆனிய வர்ணனைக்குப் பாத் திரமானவர்களாக அவர்கள் இருந்தனர்:

''அவர்கள் (உணவில்) விருப்புக் கொண்ட நிலையிலும், ஏழைக்கும் அநாதைக்கும் கைதிக்கும் அந்த உணவை புசிக்கக் கொடுக்கிறார்கள். 'நாம் உணவளிப்பது அல்லாஹ்வின் திருப் தியை நாடியே அன்றி, உங்களிடம் கூலியையோ நன்றியையோ எதிர்பார்த்தல்ல' எனவும் அவர்கள் கூறுகிறார்கள்''. (76:8-9)

'பொறுப்புணர்வு' என்ற இந்த அடிப்படையே சரியான இஸ்லா மிய சிந்தனையின் நிலைபேற்றுக்கான உத்தரவாதத்தை அளிக்கிறது. இஸ்லாமியப் பகுத்தறிவு முறைமையில் நன்மையை உத்தரவாதப் படுத்துவதும் இதுவே. பூமியின் பிரதிநிதித்துவம் குறித்தும், அதனைப்

பராமரித்து வளப்படுத்தும் பணி குறித்தும் படைப்பாளனுக்கு முன்னால் வகை கூறும் நேரடிப் பொறுப்பை முஸ்லிம் பகுத்தறிவும் சீராக நிறைவேற்ற வேண்டுமானால், அதன் நோக்கும் செயற்பாடும் நன்மையானவையாக அமைவது அவசியம். ஏனெனில் அறிவிலும் செயலிலும் நன்மை நாட்டமும் சீர்திருத்த நோக்குமே இஸ்லாமிய செயல்வாதத்தின் முதன்மை அளவுகோலும் மிக உயர்ந்த அளவுகோலும் ஆகும். ''நிச்சயமாக செயல்கள் எண்ணங்களைப் பொறுத்தே அளவிடப்படுகின்றன. நிச்சயமாக ஒவ்வொரு மனிதருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கும்''.

ஏகத்துவம், பிரதிநிதித்துவம், பொறுப்புணர்வு ஆகிய இம்மூன்றினதும் அர்த்தங்களை நாம் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம் பகுத்தறிவையும் மனச்சாட்சியையும் கட்டமைப்பதிலும், முஸ்லிம் சிந்தனைக்கான முறைமையைக் கட்டியெழுப்புவதிலும் இக்கருத்தாக்கங்கள் கொண்டிருக்கும் உள்ளார்ந்த தொடர்பையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், இப்புரிதலின் மூலமாகவே முஸ்லிம் தனிமனிதனும் உம்மாவும் தமது பாதையை தெளிவாக கண்டு கொள்ள முடியும்; தமது சக்தி மூலத்தையும் நேர்பாதையையும் மீட்டெடுக்கவும் முடியும்; சரியான இஸ்லாமிய முறைமையின் அடிப்படையில் தமது இளைய தலைமுறைகளை வளர்த்தெடுக்கவும் முடியும். இவையனைத்தும் சாத்தியமாகும் போது தான், வரலாற்று-நாகரிகப் பாதையில் உம்மா தனது பயணத்தை பலத்தோடும் உத்வேகத்தோடும் புத்தாக்கத்தோடும் பிறருக்கு நல்வழி காட்டும் வகையிலும் தொடர முடியும்.

முஸ்லிம் பகுத்தறிவானது ஏகத்துவத்தின் உண்மை நிலையைப் புரிந்து கொள்வதன் மூலமாக சரியான திசையில் பயணித்து வெற்றியடையும்; பிரதிநிதித்துவப் பணியை நல்ல முறையில் நிறைவேற்றுவதன் மூலமாக விரைந்து முன்னேறும்; அறிவார்ந்த பொறுப்புணர்வின் மூலமாக கட்டுக் கோப்பும் சீரமைப்பும் பெறும். இவ்வனைத்தையும் உள்ளடக்கிய பரிபூரண முறையின் மூலமாகவே ஒரு முஸ்லிம் வினைமை மிக்கவனாகவும், நேர்மனப் பாங்கு கொண்டவனாகவும், தெளிந்த சிந்தனையும் நற்பண்பும் பெற்றவனாகவும், அர்ப்பணத்துடன் தொடர்ந்து உழைப்பவனாகவும் மாறுவான்.

முறைமை சார்ந்த இவ்வியங்கு தளங்களை முஸ்லிம் பகுத்தறிவு மீட்டெடுக்க வேண்டும். கடைவாய்ப் பற்களால் அவற்றை இறுகப்

பற்றிக் கொள்ள வேண்டும். தனது இலக்குகளைப் புரிந்து, முதன்மை பெற வேண்டிய அம்சங்களை பற்றுறுதியுடன் கைக்கொள்ள வேண் டும். அதற்குத் தடையாக அமையக் கூடிய எத்தகைய அந்நியத் தத்துவங்களுக்கும் கலாசாரங்களுக்கும் அது இடமளிக்கக் கூடாது.

முஸ்லிம் பகுத்தறிவு இஸ்லாத்தின் பூரணத்துவப் பண்பையும், அல்-குர்ஆனின் தெளிவான வசனங்களையும், மகாஸிதையும் புரிந்து கொள்வதன் மூலமே -இன்ஷா அல்லாஹ்- தனது சக்தியை மீட்டெ டுக்க முடியும்; பயணத்தைச் சீரமைக்க முடியும்; சிந்தனா முறை மையை திருத்திக் கொள்ள முடியும்; சமுதாயங்களிலும் நாகரிகங் களிலும் முன்னணி அந்தஸ்தைப் பெற முடியும்.

## (4) இஸ்லாமிய முறைமையியலின் பிரதான கோட்பாடுகள்:

முஸ்லிம் பகுத்தறிவு எவ்வாறு செயற்பட வேண்டும் என்று புரிந்து கொள்வதற்கு, அப்பகுத்தறிவின் சட்டகத்தையும் முறையிலையும் பிரதான இயங்கு தளங்களையும் மாத்திரம் புரிந்து கொள்வது போதாது. அவற்றுடன் சேர்த்து முஸ்லிம் பகுத்தறிவும் முறையிய லும் இயங்குவதற்கு அடிப்படையான கோட்பாடுகளும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், இக்கோட்பாடுகளே அதன் செயற்பாட்டுப் பகுதியை பிரதிபலிப்பவையாகும்.

கவலைக்குரிய வகையில், இஸ்லாமிய முறையியலின் அடிப் படைக் கோட்பாடுகளில் பெருமளவு தவறுகளும் மயக்கங்களும் ஒட்டிக் கொண்டு விட்டன. இஸ்லாத்தில் நுழைந்த பிற சமுதாயங் களது மௌட்டீகங்களும் கலாசாரங்களும் தத்துவங்களும் செயல் வாதங்களும் உம்மாவின் தூய சிந்தனையுடன் இரண்டறக் கலந்த மையே இந்நிலைக்குக் காரணமாகியது. பிற்காலப் பிரிவுகளில் உம்மாவில் தோன்றிய பல அரசியல் தலைமைகளது பலவீனமும் சந்தர்ப்பவாதமும் செயற்பாடுகளும் கூட இதற்கு வலுச் சேர்த்தன. முஸ்லிம் பகுத்தறிவு முறைமையில் ஏற்பட்ட மயக்க நிலை உம்மா வின் நோக்கைப் பலவீனப்படுத்தி, அதன் வல்லமைகளின் மீது நியாயமற்ற வகையில் மேலாதிக்கம் செலுத்துவதற்கு அத்தலைமை களுக்கு இடமளித்தது. உம்மாவை வழிநடாத்துவதிலிருந்தும், அதன் விவகாரங்களை நிர்வகிப்பதிலிருந்தும் விலகி தமது பிறழ்வான செயற்பாடுகளில் ஆழ்ந்து விடுவதற்கும் அவர்களுக்கு அது வாய்ப் பளித்தது.

முஸ்லிம் பகுத்தறிவு முறையியலின் இயக்க சக்தியைப் பிரதி பலிக்கின்ற பிரதான கோட்பாடுகள் வருமாறு:

அ) படைப்பினதும் பிரபஞ்ச இருப்பினதும் நோக்கம்.

ஆ) விடயவாரியான புற உண்மை நிலையும் சூழமைவுச் சார் பியமும்.

இ) தீர்மானிக்கும் சுதந்திரமும் நாட்ட சுதந்திரமும்.

ஈ) அல்லாஹ்விடம் ஒப்புக் கொடுத்தல் (தவக்குல்).

உ) மனித செயற்பாட்டின் காரண-காரியத் தொடர்பு.

## அ)- படைப்பினதும் பிரபஞ்ச இருப்பினதும் நோக்கம்:

ஏகத்துவ நம்பிக்கைக் கோட்பாடே முஸ்லிம் சிந்தனைப் பாங்கு கட்டமைந்திருக்கின்ற அடிப்படைக் கொள்கையும் ஆதார சுருதியும் ஆகும். இந்நம்பிக்கைக் கோட்பாட்டின் அர்த்தங்களும், பிரபஞ்சத் திலும் வாழ்விலும் அது ஏற்படுத்தும் பிரதிபலிப்புகளும் ஆழ்ந்து புரிந்து கொள்ளப்படும் போது, படைப்பின் ஒருமைப்பாடும் சத்தி யத்தின் ஒருமைப்பாடும் புலனாகி விடும். இந்த ஏகத்துவ-ஒருமைப் பாட்டு நிலையானது படைப்புக்கும் பிரபஞ்ச இருப்புக்கும் ஒரு நோக்கம் இருப்பதை வற்புறுத்துகிறது:

''நாம் வானத்தையும் பூமியையும் அவ்விரண்டுக்கிடையில் இருப்பவற்றையும் விளையாட்டாகப் படைக்கவில்லை. நாம் ஒரு கேளிக்கையை விளையாட்டை எடுத்துக் கொள்ள விரும்பி யிருந்தால், நம்மிடமிருந்தே அதனை எடுத்துக் கொண்டி ருப்போம்''. (21:16-17)

''ஜின் வர்க்கத்தையும் மனு வர்க்கத்தையும் எனக்கு வணங்கிப் பணிவதற்காகவே படைத்தேன். அவர்களிடமிருந்து நான் வாழ் வாதாரத்தைக் கேட்கவில்லை. அவர்கள் எனக்கு உணவளிக்க வேண்டும் என்று நான் நாடவுமில்லை''. (51:56-57)

சத்திய ஏகனான அல்லாஹ்வே படைப்பாளன் என்ற வகையில், படைப்பின் மூலமும் அதன் இலக்கும் நிச்சயமாக ஒன்றுதான். மனிதப் பகுத்தறிவின் இயல்பின் அடிப்படையிலும், 'ஏகத்துவம்' பற்றிய முஸ்லிம் சிந்தையின் நம்பிக்கை அடிப்படையிலும் படைப் பின் இந்த ஒருமைத் தன்மையையும், நோக்கத்தையும், படைப்பு களுக்கிடையிலான நேர்த்தியான ஒத்திசைவையும் முஸ்லிம் பகுத்

தறிவு உணர்ந்தே ஆக வேண்டும். முஸ்லிம் பகுத்தறிவிலுள்ள இந்த ஏகத்துவ நம்பிக்கையானது இயல்பாகவே பிரபஞ்சப் படைப்பு களோடும் நிகழ்வுகளோடும் ஒழுங்காகவும் இலக்கு மையப்பட்டும் உறவாடுவதற்கான வழிகாட்டலை அவனுக்கு வழங்குகிறது. இஸ் லாமிய சிந்தனைப் பாங்குக்கும் பிரபஞ்சப் படைப்புகளுக்கும் நிகழ்வுகளுக்கும் இடையிலான உறவு பற்றிய இப்புரிதலானது எதிர்மறையான நிலைப்பாடுகளையோ, காரண-காரியத் தொடர்பைக் கவனத்தில் கொள்ளாது இறைவனிடம் பரஞ்சாட்டுதலையோ, திட்டமிடலற்ற எழுந்தமானச் செயற்பாட்டையோ ஏற்பதில்லை. ஏனெனில், முஸ்லிம் பகுத்தறிவானது அதன் மானிட இயல்பு, பிரக்ஞை, இஸ்லாமிய நோக்கு என்பவற்றின் பின்புலத்தில், பிரபஞ் சத்துக்கும் படைப்புகளுக்குமான பிரதிநிதியாகவும் மேற்பார்வை யாளராகவும், சாட்சியாகவும் நிற்கிறது. முஸ்லிம் பிரக்ஞையில் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு படைப்புக்கும், நிகழ்வுக்கும் ஓர் அர்த்த மும் நோக்கமும் உண்டு. அந்த அர்த்தமும் நோக்கமும் புறக்கணிக் கப்படவோ அசட்டை செய்யப்படவோ கூடாது. படைப்புகளின் மீது மனிதனது பிரதிநிதித்துவப் பாத்திரமும், பிரபஞ்சத்தை நிர்வகிப்பதி லும் வளப்படுத்துவதிலும் அவனுக்குள்ள பொறுப்பும் படைப்பினங் களது அசைவியக்கத்துக்குப் பின்னாலுள்ள தர்க்கத்தையும் விதி களையும் புரிந்து கொள்ள வேண்டிய கடப்பாட்டை முஸ்லிம் பகுத் தறிவின் மீது சுமத்துகிறது. ஏனெனில், அதன் மூலமாகவே படைப் புகளை நிர்வகித்தல், பராமரித்தல், இலகுபடுத்தல், படைப்பின் நோக்கங்களுக்கும் பிரதிநிதித்துவத் தேவைகளுக்கும் அமைவாக அவற்றை வசப்படுத்தல் முதலிய பொறுப்புகள் முழுமையடையும்.

படைப்பின் இலக்கையும் காரண-காரியத் தொடர்பையும் பற்றிய இந்நோக்கும் புரிதலும் தெளிவற்றுப் போனமைதான் 'தவக்குல்' என்னும் அல்லாஹ்வின் மீது பரஞ்சாட்டும் கருத்தாக்கமும், 'கழா கத்ர்' என்னும் 'விதி மற்றும் முன்னளப்பு' பற்றிய நம்பிக்கையும் விகாரமடையக் காரணமாகியது. முஸ்லிம் பகுத்தறிவை குழப்பம், இயலாமை, சோர்வு முதலிய நிலைகளுக்கும் அது இட்டுச் சென்றது. கண்மூடித்தனமான பரஞ்சாட்டல் (தவாக்குல்), அனைத்துக்கும் விதியைக் காரணம் காட்டல், இயலாமை, வேற்று மதத் துறவறம் முதலிய நோய்கள் முஸ்லிம் பகுத்தறிவைத் தாக்கவும் அது காரணமாகியது. முஸ்லிம் சிந்தையின் ஆற்றல்கள், இயலுமைகள், சீர்திருத்த-நாகரிகப் பங்களிப்புகள் என்பவற்றையும் அழித்தொழித்தது.

நோக்கு பற்றிய கருத்தாக்கம் சரியாகப் புரிந்து கொள்ளப் படுமாயின், கண்மூடிப் பரஞ்சாட்டுதல், எதிர் மறை மனப்பாங்கு, இயலாமை, கையறு நிலை முதலிய எதற்கும் இடமளிக்காத திடமானதோர் அடிப்படையாக அதுவே அமைந்து விடும். மட்டு மன்றி, மனிதன், வாழ்வு, பிரபஞ்சம், நிகழ்வுகள் என்பவற்றுக் கிடையிலுள்ள தொடர்பின் மீதான அறிவுத் தேடலுக்கும் முயற்சி க்கும் முஸ்லிம் தனிமனிதனைத் தூண்டுவதாகவும் அது அமையும். படைப்பியல் ஒழுங்கு, வாழ்வின் இயல்பான நியதிகள், அவற்றின் இயங்கியல் தர்க்கம் என்பவற்றுக்கேற்ப வாழ்வின் பொருளைச் சாத்தியப்படுத்தவும் அது உதவும்.

''ஆட்சியதிகாரத்தில் அவனுக்கு நிகராக எவரும் இல்லை. அவன் ஒவ்வொன்றை படைத்து, நன்கு திட்டமிட்டு அமைத் தான்''. *(25:2)*

''இது அனைத்தையும் நேர்த்தியாக அமைத்த அல்லாஹ்வின் செயலாகும். நிச்சயமாக அவன் நீங்கள் செய்பவற்றை நுணுக்கமாக அறிந்திருக்கிறான்''. *(27:88)*

### ஆ)- விடயவாரியான புற உண்மையும் சூழமைவுச் சார்பியமும்:

பிரபஞ்சத்தின் ஒழுங்கும் வாழ்வமைப்பும் மனிதன் தனது உள் ளியல்பினால் உணர்ந்து கொள்ளும் உண்மையாகும். தனது இருப் பின் ஒவ்வொரு கணத்திலும் அந்த உண்மைக்குக் கட்டுப்பட்டே அவன் ஊடாடுகிறான். மனிதனது வரையறுக்கப்பட்ட அறிவினா லும் பகுதியளவான புரிதலினாலும் பிரபஞ்சத்தின் இருப்பையும் அதன் ஒழுங்கையும் ஓரளவு புரிந்து கொள்ள முடியும். அந்த ஒழுங் கின் சில இயல்புகளையும் உண்மைகளையும் கூட அவனால் புரிந்து கொள்ள முடியும். ஆனால், பிரபஞ்சத்தையும், அதன் ஒழுங்கையும், நோக்கையும், அசைவியக்க இலக்குகளையும் பற்றிய முற்று முழு தான புரிதலைப் பெற்றுக் கொள்ளல் அவனுக்குச் சாத்தியமற்றது.

அதேவேளை, முஸ்லிம் பகுத்தறிவும் ஃபித்றாவும் பிரக்ஞையும் அவ்வாறானவையன்று. பிரபஞ்சத்தின் நிகரற்ற படைப்பாளனுடன் அவை கொண்டிருக்கும் தொடர்பின் காரணமாக மேற்கூறிய உண் மைகளை நன்கு உள்வாங்கிக் கொண்டு அவற்றுடன் உறவாடு கின்றன. அவை பெற்றிருக்கும் முழுமொத்த நோக்கே இத்தகைய பரிபூரணப் புரிதலை சாத்தியப் படுத்துகின்றன. இம்முழுமொத்த

நோக்கின் மூலவேராக இருப்பது தெய்வீக அறிவும் வழிகாட்டலும் ஆகும். அதன் மூலமாக முஸ்லிம் பகுத்தறிவு வாழ்வின் நோக்கங் களையும் மனித இருப்பின் இலக்குகளையும் புரிந்து கொள்கிறது.

முஸ்லிம் பகுத்தறிவும் 'ஃபித்றா'வும் வேத வெளிப்பாட்டின் ஒளியாலும் வழிகாட்டலாலும் தீட்சண்யம் பெற்றவை. அந்த வகையில், உண்மை என்பது -முஸ்லிம் பகுத்தறிவைப் பொறுத்த வரை- விடயவாரியான புற உண்மையாகும். அவ்வுண்மையின் இருப்பையும் பரிமாணங்களையும் முஸ்லிம் பகுத்தறிவு புரிந்து கொண்டு, அதனோடும் அதன் நியமங்களோடும் ஆரோக்கியமாக உறவாட முயலும். அந்த வகையில், முஸ்லிம் பகுத்தறிவானது முற்றிலும் சுயாதீனமான-விடயவாரியான இயங்கு தன்மை கொண் டது. அது மனோ இச்சையினால் இயக்கப் படுவதில்லை. உடலிச்சை களால் ஆளப்படுவதில்லை. முஸ்லிம் வாழ்வை இயக்குவது நற்பண்புதான். அது சத்தியத்தையும் உண்மையையும் தேடும். அந்த இரண்டையும் கொண்டு பிரபஞ்சத்தின் ஒழுங்குகளோடும் நியதி களோடும் இணக்கமாகவும் இசைவாகவும் தொழிற்படும்.

முஸ்லிம் பகுத்தறிவைப் பொறுத்தவரை, வாழ்வு என்பதும் வெற்றி என்பதும் தறிகெட்டு அலைவதிலோ சீர்கேட்டிலோ இல்லை. கட்டுக்கோப்பு, சரியான புரிதல், வாழ்வொழுங்குடனான சீரான இணக்கம் என்பவற்றிலேயே வாழ்வின் அர்த்தமும் வெற்றியும் தங்கியுள்ளது.

சத்தியம் என்பதற்கும், மனித இனத்தின் -தனிநபர் மற்றும் சமூகம் உள்ளிட்ட- அனைத்துத் தரப்புகளதும் நலன் என்பதற்குமிடையில் முஸ்லிம் பகுத்தறிவோ ஒழுங்கோ முரண்பாடு காண்பதில்லை. கருத்தியல், ஸ்தூலம், உடன் நிகழ்வது, தாமதித்து வருவது, உலகம், மறுமை என்பவற்றையும் முஸ்லிம் பகுத்தறிவு வேறுபட்ட கூறு களாக பிரித்துப் பார்ப்பதில்லை. ஏனெனில் இவையனைத்தும் இருப்பின் உண்மையைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாகங்களாகும். அந்த உண்மையில் இவையனைத்தும் ஒன்றோடொன்று ஒத்திசைந்து முழுமை பெறுகின்றன.

இத்தகைய முழுமைத்துவப் புரிதலின்படி, முஸ்லிம் மனிதனின் அனைத்துப் பணிகளிலும் பாத்திரங்களிலும் அவனே மேற்பார்வை யாளனாகவும் பொறுப்பாளனாகவும் மாறுகின்றான். உபதேசம், கலந் தாலோசனை, சத்தியம், நீதி என்பவற்றின் அடிப்படையில் தனது விவகாரங்களை அவன் நிர்வகிக்கிறான்.

''நீங்கள் ஒவ்வொருவரும் மேற்பார்வையாளர்களே. ஒவ்வொரு வரும் அவரது பொறுப்பிலுள்ளவை பற்றி பொறுப்புக் கூற வேண் டியவர்களே''. (புஹாரி, முஸ்லிம்)

''இறை விசுவாசிகளது உயிர்கள் சமனானவை. அவர்கள் ஒன்றி ணைந்து விரோதிகளுடன் போராடுவார்கள். அவர்களில் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர் கூட பொது விவகாரங்களில் பங்கெடுக்க உரிமை பெற்றிருப்பார்''. (அபூ தாவூத், நஸாஈ)

''சன்மார்க்கம் என்பது தூய்மையாக நடந்து கொள்வதாகும்'' என இறைத்தூதர் (ஸல்) மும்முறை கூறிய போது, '''யாருக்குத் தூய்மை யாக நடந்து கொள்வது, அல்லாஹ்வின் தூதரே?'' என தோழர்கள் வினவினர். அதற்கவர்கள், ''அல்லாஹ்வுக்கும், அவனது வேதத்துக் கும், அவனது தூதருக்கும், முஸ்லிம் தலைவர்களுக்கும், பொது மக்களுக்கும்'' எனப் பதிலளித்தார்கள். (முஸ்லிம்)

முஸ்லிம்களது விவகாரங்கள் 'ஷூறா'வின் அடிப்படையில் அமைந் திருக்கும். அங்கு வெறித்தனமோ, இன உணர்வோ, குழுவாதமோ இருக்காது. இன்றிருப்பது போன்று பாகுபாடு, அநீதி, அத்துமீறல், ஊழல் என்பவற்றைக் கொண்ட கட்சி வெறியும் அங்கிருக்காது.

முஸ்லிம் பகுத்தறிவைப் பொறுத்த வரை, உண்மை என்பது சார்பி யங்களற்ற-விடயவாரியான விவகாரமாயினும், அது ஒடுங்கிய தன்மை கொண்டதன்று. உண்மை என்பது எந்த நிலையிலும் மாற்றமடையாத ஒரே உட்கருவாக இருந்த போதிலும், தனியாளாகவும் சமூகமாகவும் நிற்கும் மனிதனது நிலைமை பகுதியளவானது; கால-இட வர்த்த மானங்களுக்கேற்ப மாறக்கூடியது. மனித நோக்கு, நிலைப்பாடு, நடைமுறை என்பன சார்பியத்தன்மை கொண்டவை என்பதே இதன் பொருளாகும். அந்த வகையில், முஸ்லிம் பகுத்தறிவானது மனிதர் களது நிலைகளுக்கேற்பவே உண்மையைக் கையாள்கிறது. தேவை களுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்ப அது அணுகுமுறைகளை வேறு படுத்துகிறது. ஏனெனில், குழந்தை வேறு; இளைஞன் வேறு. பல சாலி வேறு; பலவீனன் வேறு. படித்தவன் வேறு; பாமரன் வேறு. பயிற்றுவிக்கும் இடங்களும், தீர்ப்புக் கூறும் இடங்களும் வெவ் வேறானவை. சமாதானத்துக்குரிய இடங்களும், போருக்குரிய இடங் களும் வெவ்வேறனவை. அபரிமிதமாகக் கிடைக்கும் இடங்களும், அரிதாகக் கிடைக்கும் இடங்களும் வெவ்வேறானவை. சொகுசான இடங்களும், கஷ்டமான இடங்களும் வெவ்வேறானவை. ஆக,

முஸ்லிம் பகுத்தறிவு முழுமொத்த ஒருமைப்பாடு கொண்டதாக இருப்பினும், அடிப்படையை இழக்காமல் கால-இடச் சூழமைவு களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப நெகிழக் கூடியதாகும். வேறுபாடு கள், ஏற்றத்தாழ்வுகள், பன்மைத் தன்மை என்பவற்றுக்கும் உட்படக் கூடியதாகும்.

உண்மை தொடர்பான சூழமைவுச் சார்பியத்தின் அடிப்படையில் முஸ்லிம் பகுத்தறிவு கொண்டிருக்கும் இப்பரந்த இயல்பும் சகிப்புத் தன்மையும் அதன் நம்பிக்கைச் சுதந்திரத்தையும், சிந்தனைச் சுதந்தி ரத்தையும், அவற்றின் பன்முக நிலைகளையும் உத்தரவாதப் படுத்து கின்றன.

இஸ்லாமியக் கட்டமைப்பில் பன்மைத்துவம், ஏற்றத்தாழ்வு, வேறுபாடு என்பன காணப்படுவது ஆபத்தானதோ, அடிப்படையை ஆட்டங்காணச் செய்யக் கூடியதோ அன்று. மாற்றமாக, அது சமநிலை, வளர்ச்சி, ஸ்திரத்தன்மை என்பவற்றுக்கான பரந்த வாய்ப்பாகவே அமைகிறது. ஏனெனில், முஸ்லிம் பகுத்தறிவும் சிந்தனையும் தெளி வான நோக்குடையவை. வஹீயின் வழிகாட்டலையும் பெறுமானங் களையும் கருத்தாக்கங்களையும் அடிப்படையாகக் கொண்ட நோக் காக அது அமைந்திருப்பதால், முஸ்லிம் சிந்தை எப்போதும் பலமாகவே இருக்கும். உம்மாவும் வெகுமக்களும் அந்த நோக்கின் அடிப்படை அம்சங்கள் மீது ஒன்றுபட்டிருக்கும் அதே வேளை, ஏற்றத்தாழ்வுக்கும் வேறுபாட்டுக்குமுரிய இடங்கள் இயக்கம், வளர்ச்சி, விழிப்பு, புத்தாக்கம், புனர்நிர்மாணம் என்பவற்றைத் தூண்டும் கருவிகளாக அமைந்திருக்கும்.

இஸ்லாத்தின் அரசும் ஒழுங்கும் இலக்குகளும் சிந்தனா மற்றும் நம்பிக்கைச் சுதந்திரத்தின் மீது மேலாண்மை செலுத்தி விடும் என்ற அச்சம் அவசியமற்றது. மாறாக, அவை சிந்தனா மற்றும் நம்பிக்கைச் சுதந்திரத்துக்கு உத்தரவாதமாகவும் பக்கபலமாகவும் அமையக் கூடிய வையாகும். ஏனெனில், தெய்வீக வழிகாட்டலின் ஒளியில் சீரான மானிட இயற்கைக்கு அமைவாக உருப் பெற்றிருக்கும் இஸ்லாம், மனித வாழ்விலும் இருப்பிலும் உள்ள விடயவாரியான (புற) உண்மையைப் பிரதிபலிப்பதாகும். அந்த உண்மை நிலைத்திருப்ப தும், மனிதர்கள் மீண்டு வந்து அதனிடம் நிழல் பெறுவதும், அதன் ஊற்றிலிருந்து பருகுவதும் தவிர்க்க முடியாமல் நிகழ்ந்தே ஆக வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தில் சிந்தனையும் சிந்தனைச் சுதந்திரமும் பீறிட்டுப் பாய்கின்ற ஆழமான நதி போன்றது. அது எவ்வளவு ஆழமாக இருக்கிறதோ அவ்வளவு பலமாகவும் இருக்கும். இலக்கை நோக்கிய அதன் ஆழமான பாய்ச்சலின் போது கரைபுரளும் வெள்ளம் அதன் அழகை இன்னும் இன்னும் அதிகரிக்கவே செய்யும்.

இஸ்லாமிய நோக்கானது அதன் அடியாளத்தில் ஆற்றல் மிக்கதாகவும், ஆதிக்க சக்தி கொண்டதாகவுமே இருந்தது. இன்றும் அவ்வாறுதான் இருந்து வருகிறது. எனினும், அந்தப் பலமும் ஆதிக்கமும் இஸ்லாமிய அரசினால் வந்தவையன்று. மாறாக, வஹீயின் அறிவிலிருந்தும், சீரான 'ஃபித்றா'வின் இயல்பிலிருந்தும் பெறப்பட்ட முற்றுண்மையிலிருந்து அந்த நோக்கு பிறந்தமையே இதற்குக் காரணமாகும். இஸ்லாமிய நோக்கு தனது சரியான முறைமையையும் ஆரோக்கியமான கட்டமைப்பையும் பாதுகாத்துக் கொள்ளும் வரை ஏற்றத்தாழ்வுகளுக்கோ முரண்பாடுகளுக்கோ அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில், இஸ்லாமிய 'ஃபித்றா'வின் பலம்தான் எப்போதும் உம்மாவின் பயணப் பாதையாகவும், ஆழமான ஓட்டமாகவும் இருக்கப் போகிறது. இந்நிலையில் தோன்றும் ஏற்றத் தாழ்வும் முரண்பாடும் பூமியை மேலும் உயிரோட்டம் மிக்கதாகவும் அழகானதாகவும் செழிப்பு மிக்கதாகவுமே மாற்றும்.

ஆக- இஸ்லாம் குறித்த சிறந்த புரிதலும், அறிவும், அதனை அழகிய முறையில் முன்வைப்பதும், ஆரோக்கியமான அத்திவாரத்தின் மீது அதன் ஒழுங்குகளைக் கட்டியெழுப்புவதுமே அதனைப் பாதுகாக்கும்.

அடக்குமுறையும் அத்துமீறலும் நிர்ப்பந்தித்தலும் இஸ்லாத்தைப் பாதுகாக்காது. அதனால் இஸ்லாத்தின் நோக்கை மக்களுக்குப் புரிய வைக்கவும் முடியாது. மட்டுமன்றி, அத்தகைய நடவடிக்கைகள் இஸ்லாமியத் தூதின் மீதும், அதன் முற்றுண்மையின் மீதும், இலக்கின் மீதும் மேற்கொள்ளப்படுகின்ற அத்துமீறலாகவே அமையும்.

> *''சன்மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை; வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது''. **(2:256)***
>
> *''எனவே விரும்பினவர் விசுவாசிக்கட்டும்; விரும்பியவர் நிராகரிக்கட்டும்''. **(18:29)***
>
> *''உமது ரட்சகன் நாடியிருந்தால் மனிதர்களை ஒரே உம்மாவாக ஆக்கியிருப்பான்''. **(11:118)***
>
> *''மக்கள் (அனைவரும்) இறைவிசுவாசிகளாக மாறும் வகையில் அவர்களை நீர் நிர்ப்பந்திப்பீரா?'' **(10:99)***

*''எவர் நற்செயல் புரிகிறாரோ அது அவருக்கே நன்மையானது. எவர் தீமை புரிகிறாரோ அது அவருக்கே எதிராக அமையும். பின்னர் உங்களது ரட்சகனிடம் நீங்கள் மீளக் கொண்டு வரப் படுவீர்கள்''. (45:15)*

*''பின்னர், அந்த உள்ளத்திற்கு அதன் தீமையையும், இறை யச்சத்தையும் அவன் உணர்த்தினான். எவர் அதனை தூய்மைப் படுத்தி னாரோ அவர் வெற்றியடைந்து விட்டார். எவர் அதனை அழுக்காக்கி னாரோ அவர் தோல்வியடைந்து விட்டார்''. (91:8-10)*

*''சத்தியத்தைக் கொண்டே அதனை நாம் இறக்கினோம். சத்தி யத்தைக் கொண்டே அது இறங்கியது. உம்மை நாம் நன்மா ராயம் கூறுபவராகவும் எச்சரிப்பவராகவுமே அனுப்பினோம்''. (17:105)*

*''அவர்களுக்கு நாம் ஒரு வேதத்தைக் கொண்டு வந்தோம். விசு வாசம் கொண்ட சமூகத்தினருக்கு நாம் அதனை நேர் வழி யாகவும் அருளாகவும் அறிவார்ந்த முறையில் விளக்கினோம்''. (7:52)*

*''நிச்சயமாக நாமே இவ்வேதத்தை இறக்கி வைத்தோம். நிச்சய மாக நாமே அதனைப் பாதுகாப்போம்''. (15:9)*

### இ)- தீர்மானிக்கும் சுதந்திரமும் நாட்ட சுதந்திரமும்:

இஸ்லாமியப் பகுத்தறிவினதும் முறையியலினதும் தூண்கள் கட்டமைக்கப்பட்டிருக்கின்ற மூன்றாவது பிரதான கருத்தாக்கம் இது வாகும். மனித நாட்டத்தினதும் தீர்மானத்தினதும் சுயாதீனத் தன்மை யையும், அதன் பொறுப்புக் கூறும் தன்மையையும் இக்கருத்தாக்கம் குறித்து நிற்கிறது. மனிதனது நாட்ட சுதந்திரம் பற்றிய இக்கருத் தாக்கத்தையும், அச்சுதந்திரம் குறித்த தனிமனிதப் பொறுப்பையும் நாம் சரியாகப் புரிந்து கொள்ளாமல் மனித வாழ்வின் தூது என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. இறைத்தூதர் (ஸல்) அவர்களது வாழ்வு, போராட்டம், படையெடுப்புகள் என்பவற்றின் பொரு ளையோ, ரோம-பாரசீக சக்கராதிபத்தியங்களுடன் முதல் தலைமுறை முஸ்லிம்கள் ஏன் மோதினார்கள் என்பதையோ கூட நம்மால் புரிந்து கொள்ள முடியாது.

ஏனெனில் இஸ்லாமியத் தூதின் படி, உலக வாழ்வின் நோக்கமே பூமியை பிரதிநிதித்துவப் படுத்துவது குறித்த மனித நாட்டத்தை சோதனைக்கு உட்படுத்துவதுதான். அந்த நாட்டம் தனது சொந்தத் தெரிவின் அடிப்படையில் நன்மையையும் சத்தியத்தையும் நீதியையும் நோக்கி உழைக்கிறதா? அல்லது கர்வம் கொண்டு சத்தியத்தையும் நன்மையையும் நீதியையும் புறக்கணித்து, மனோ இச்சைக்கும் குழப்பத்துக்கும் வரம்பு மீறலுக்கும் பின்னால் செல்கிறதா? இதுதான் அந்தச் சோதனை. இஸ்லாமியத் தூதின் படி, மறுமை வாழ்வு என்பது கூட இந்த நாட்ட சுதந்திரத்தின் பெறுபேறுகளது இறுதி நிலைதான். உலக வாழ்வில் அது நல்லதாக இருப்பின், நிரந்தர மறுமையின் பெறுபேறும் நன்மையாக அமையும்; தீயதாக இருப்பின், மறுமையின் பெறுபேறும் தீமையாகவே அமையும்.

தெய்வீகப் படைப்பிலுள்ள மனித நாட்டத்தின் இச்சுயாதீனத் தன்மை மனிதனது 'ஃபித்றா'வினால் புரிந்து கொள்ளப்பட முடியுமானதுதான் என்பதை அல்-குர்ஆன் தெளிவாக உறுதிப்படுத்துகிறது:

*''ஆத்மாவின் மீதும் அதனைச் சீரமைத்தவன் மீதும் சத்தியமாக! பாவம் எது என்பதையும், இறையச்சம் எது என்பதையும் அவனே அதற்கு உணர்த்தினான். எவர் அதனைத் தூய்மைப் படுத்தினாரோ அவர் வெற்றி பெற்றார்; எவர் அதனை அழுக்காக்கினாரோ அவர் தோல்வியடைந்தார்''. (91:7-10)*

''வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் அல்லாஹ்வுக்கே சொந்தமானவை. தீயது செய்தோருக்கு அவர்களது செயலுக்குரிய கூலியை அவன் கொடுக்கிறான். நன்மை செய்தோருக்கு அவன் நன்மையை கூலியாக கொடுக்கிறான்''. *(53:31)*

''வானங்களையும் பூமியையும் அவன் சத்தியத்தைக் கொண்டே படைத்தான். ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அதன் செயலுக்கேற்பவே கூலி வழங்கப்படும். அதில் அவர்களுக்கு அநியாயம் இழைக்கப் படாது''. *(45:22)*

*''உங்களை அவன் பூமியின் பிரதிநிதிகளாக்கி, நீங்கள் எவ்வாறு செயற்படுகிறீர்கள் என்று பார்க்கிறான்''. (7:129)*

*''(நபியே) கூறுவீராக: மனிதர்களே! உங்கள் ரட்சகனிடமிருந்து உங்களுக்கு சத்தியம் வந்திருக்கிறது. எனவே, எவர் நேர்வழியை எடுத்துக் கொள்கிராரோ அவர் தனது நன்மைக்காகவே அதனை*

எடுத்துக் கொள்கிறார். எவர் வழிகேட்டில் செல்கிறாரோ அவர் தனக்குப் பாதகமாகவே அதில் செல்கிறார்''. *(10:108)*

''இது அனைத்தையும் கச்சிதமாக அமைத்த அல்லாஹ்வின் செயலாகும்''. *(27:88)*

''படைப்பும் ஆட்சியும் அவனுக்கே உரியவை என்பதை அறிந்து கொள்ளுங்கள்''. *(7:54)*

மனிதனது நாட்ட சுதந்திரமும் தீர்மானிக்கும் சுதந்திரமும் பல பரிமாணங்கள் கொண்டவை. எனவே, அவற்றையும் அவற்றின் வேறு பாடுகளையும் புரிந்து கொள்ளாமல் இச்சுதந்திரங்களை சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. அப்பரிமாணங்களை பிரதானமாக மூன்றாக சுருக்கிக் கூறலாம். நம்பிக்கைச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், சமூக செயற்பாட்டுச் சுதந்திரம் என்பனவே அம் மூன்றுமாகும்.

### ஒன்று: நம்பிக்கைச் சுதந்திரம்.

மனிதனது நம்பிக்கைச் சுதந்திரத்தையும் நாட்ட சுதந்திரத்தையும் இஸ்லாம் மிகத் திடமாகவும் வெளிப்படையாகவும் உறுதி செய் கிறது. அந்த வகையில்தான், இந்நம்பிக்கைச் சுதந்திரம் இஸ்லாமிய அழைப்பின் அடிப்படையாகவும், இஸ்லாமிய ஒழுங்குகளின் அடிப் படையாகவும் அமைந்திருந்தது. அத்துமீறும் சக்திகளுக்கெதிரான போராட்டங்களைத் தூண்டிய காரணியாகவும் அது அமைந்திருந்தது.

நம்பிக்கைச் சுதந்திரம் பற்றிய இப்புரிதலிலிருந்தே இஸ்லாமும் அதன் அரசும் முஸ்லிமல்லாத குடிமக்களது நம்பிக்கைச் சுதந்தி ரத்தை உத்தரவாதப்படுத்தின. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பிற நாட்டு மன்னர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் அனுப்பிய கடிதங்க ளின் பொருளை இந்த அடிப்படையிலிருந்தே நாம் புரிந்து கொள்கி றோம். குடிமக்கள் மீது அத்துமீறி அடக்கியாள்வதைக் கைவிட்டு, அவர்களது நம்பிக்கைச் சுதந்திரத்தை கண்ணியப்படுத்துமாறு ஆட்சி யாளர்களைக் கோரும் வகையிலும், இஸ்லாத்தை நோக்கி அவர் களை அழைக்கும் வகையிலும் அக்கடிதங்கள் அமைந்திருந்தன. மனிதனது நம்பிக்கைச் சுதந்திரம் பற்றிய இப்புரிதலின் அடிப்படை யில்தான் ஆரம்ப இஸ்லாமியப் படைகள் அடக்குமுறைச் சக்திகளை திட விசுவாசத்தோடும் சங்கற்பத்தோடும் எதிர்த்தன. மனிதனது நம்பிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், அவனது பொறுப்பை நிறைவேற்ற இடமளிக்கவும், அவனுக்கெதிரான அத்துமீறலைத் தடுக்கவும் அப்படைகள் போராடின.

மனிதன் விசுவாசிக்க விரும்பும் நம்பிக்கைக் கோட்பாட்டை அவனே சுதந்திரமாகத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுதான் நம்பிக்கைச் சுதந்திரம் தொடர்பான இஸ்லாமிய நிலைப்பாடாகும். அது இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடா அல்லது வேறொரு நம்பிக்கைக் கோட்பாடா என்பதை அம்மனிதனே தீர்மானிக்க வேண்டும். அந்த வகையில், தீர்மானத்தை எடுப்பவனும், அதற்கு வகை கூறுபவனும் அவனே. அவனது இவ்வுரிமையை மதிப்பதும் பாதுகாப்பதும் இஸ்லாமிய அரசினதும் முஸ்லிம் சமூகத்தினதும் கடமையாகும். இஸ்லாமிய நிலத்தில் மட்டுமன்றி, பூமி முழுவதிலும் உள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் அந்த உரிமையை அது பாதுகாத்துக் கொடுக்க வேண்டும்.

சுதந்திரம் என்ற பரிமாணத்தைப் புரிந்து கொள்வதில் அச்சு தந்திரத்தை அனுபவிப்பதற்கான நிபந்தனைகள் எவை எனப் புரிந்து கொள்வதும் முக்கியமானது. ஏனெனில், சுதந்திரம் என்பது ஓர் உரிமை; நிலைப்பாடு; பொறுப்பு. அந்த வகையில், பிற உரிமைகளையும் நிலைப்பாடுகளையும் போன்றதே அதுவும். வெறுமை நிலையிலிருந்தோ குழப்ப நிலையிலிருந்தோ அலட்சிய நிலையிலிருந்தோ அதனை அப்பியாசம் செய்ய முடியாது. மட்டுமன்றி, பிற உரிமைகளையும் நிலைப்பாடுகளையும் விட அது அதிக நியமங்களுக்கும் ஒழுங்குகளுக்கும் உட்படக் கூடியது. மனித வாழ்விலும் இருப்பிலும் அது ஏற்படுத்துகின்ற ஆழமான தாக்கமே அதற்குக் காரணமாகும்.

அந்த வகையில், பொதுவாக நாட்ட சுதந்திரமும், குறிப்பாக நம்பிக்கைச் சுதந்திரமும் ஒவ்வொரு தனிமனிதனதும் உரிமை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். புரியும் திறனும் முதிர்ச்சியும் கொண்ட அனைவருக்கும் அந்த உரிமை உள்ளது. ஏனெனில், அவர்களால்தான் சுதந்திரத்தின் பொருளையும் தாக்கங்களையும் புரிந்து, தமது வாழ்விலும் சுற்றியுள்ள சமூகத்தின் வாழ்விலும் அதனைப் பிரயோகிக்க முடியும். அதனால்தான் அது பருவமடைந்த, புத்தி சுவாதீனமுள்ள மனிதர்களது உரிமையாகவும் கொள்ளப்படுகிறது. குழந்தைகளையும் சித்த சுவாதீனம் அற்றவர்களையும் பொறுத்த வரை, அவர்கள் உரிய அறிவு முதிர்ச்சியை அடையும் வரை அல்லது சித்த சுவாதீனமடைந்து சுதந்திரமாகவும் பொறுப்போடும் செயல்படத் துவங்கும் வரை அவர்களது கண்ணியம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களது குறைபாட்டை எவரும் துஷ்பிரயோகம் செய்யலாகாது. அவர்களது விவகாரங்களை நிர்வகிப்பவர்கள் இதில் கவனமாக இருப்பது அவசியம்.

இதேபோன்று, மனிதன் நம்பிக்கைச் சுதந்திரத்தை அனுபவிப்ப தற்கான தகைமையாக நாகரிக முதிர்ச்சி என்ற நிபந்தனையும் கொள் ளப்பட முடியும். ஏனெனில், நாகரிக முதிர்ச்சியின்மையும் சில வகையான நாகரிகப் பிற்போக்குத்தனங்களும் மனிதனை சமூக-நாகரிக-அறிவுக் குறைபாட்டுக்கு ஆளாக்கி விடுகின்றன. இக்குறை பாடானது பொறுப்புள்ள தீர்மானங்களை எடுக்காமல் அவனைத் தடுப்பது மட்டுமன்றி, சுதந்திரத்தை அனுபவிக்கும் தகைமையையும் இல்லாது செய்து விடுகிறது. எனவே, அவனுக்குச் சுதந்திரம் வழங்கி, அதன் விளைவான பொறுப்புக் கூறலை அவன் மீது சுமத்த முன்னர், அவனைப் பராமரித்துத் தகுதிப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இஸ்லாம் தோன்றிய போது பாலைவன சிலை வணங்கிக் கோத்தி ரங்களிடம் அது மேற்கொண்ட பணி இதுதான். ஆரம்ப இஸ்லாமிய அரசும் சமூகமும் அக்கோத்திரங்களுடன் கொண்டிருந்த தொடர்பின் மூலமாக, காட்டுமிராண்டிச் சகதியிலிருந்து அவற்றை வெளியே கொண்டு வர உதவக்கூடிய அனைத்து வழிமுறைகளையும் இஸ்லாம் பயன்படுத்தியது. சமூக-நாகரிகப் பின்னடைவிலிருந்து அவற்றை விடுவித்து, முஸ்லிம்கள் மீதும் முஸ்லிம்களோடு ஒப்பந்தம் செய் திருந்த பிற கோத்திரங்கள் மீதும் அவற்றின் அத்துமீறலைக் கட்டுப் படுத்த முயன்றது. இவ்வாறு இஸ்லாத்தின் நாகரிக ஒழுங்குக்கு கட்டுப்படச் செய்து, அனைத்து வகையான காட்டுமிராண்டிச் செயற் பாடுகளிலிருந்தும், சிலை வணக்க மௌட்டீகங்களிலிருந்தும் அவற்றை மீட்டெடுப்பது இஸ்லமிய- மானிடப் பொறுப்பின் தவிர்க்க முடியாத பணியாகவும் அமைந்திருந்தது.

இந்த வகையில்தான், அக்கோத்திரங்களது பிரச்சினை நாட்ட சுதந் திரம் பற்றிய பிரச்சினையோ நம்பிக்கைச் சுதந்திரம் பற்றிய பிரச்சி னையோ அல்ல என்பதாக இஸ்லாம் தெளிவாகவே பிரகடனப் படுத்தியது. இஸ்லாத்தின் ஒழுங்குக்கு அவற்றைக் கட்டுப்படச் செய்து, காட்டுமிராண்டிச் சமூக வாழ்விலிருந்து அவற்றை விடு விப்பதே அப்போதிருந்த உண்மையான பிரச்சினையாக இருந்தது.

''நீர் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டீர். பின்னர் அவர்கள் (அல்லாஹ்வை) அஞ்சாமல் ஒவ்வொரு தடவையும் தங்களது ஒப்பந்தத்தை முறித்துக் கொள்கிறார்கள்''.(8:56)

''எந்த இறைநம்பிக்கையாளர் விடயத்திலும் அவர்கள் உறவு முறையையோ உடன்படிக்கையையோ மதிப்பதில்லை. நிச்சய மாக அவர்களே வரம்பு மீறியோர்''. (9:10)

''விசுவாசம் கொண்டவர்களே! நிச்சயமாக இணைவைப்பாளர்கள் அசூயையானவர்களே. எனவே அவர்கள் இந்த ஆண்டின் பிறகு மஸ்ஜிதுல் ஹறாமை நெருங்க வேண்டாம்''. *(9:28)*

''(கண்ணியமான மாதங்களில்) இணைவைப்பாளர்கள் அனைவரும் உங்களுடன் போர் புரிந்தால், நீங்கள் அனைவரும் அவர்களுக்கெதிராக போரிடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் இறையச்சம் கொண்டோருடன் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்''. *(9:36)*

''(இறை நிராகரிப்பாளர்களின்) விஷமம் நீங்கி, மார்க்கம் முழுமையும் அல்லாஹ்வுக்கென்று நிலைபெறும் வரை (கோத்திர வாசிகளாகிய) அவர்களுடன் போரிடுங்கள். விஷமம் புரிவதிலிருந்து அவர்கள் விலகிக் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் அவர்களது செயலை உற்றுக் கவனித்தவனாகவே இருக்கிறான்''. *(8:39)*

''நாட்டுப்புற அறபிகளில் பலர் தாமும் இறைநம்பிக்கை கொண்டு விட்டதாகக் கூறினர். (நபியே) அவர்களிடம் கூறுவீராக: நீங்கள் நம்பிக்கையாளர்களாக மாறவில்லை. 'நாம் வெளிப்படையாக வழிப்பட்டு விட்டோம்' என்றே கூறுங்கள். ஏனெனில், இறை விசுவாசம் உங்கள் உள்ளங்களில் இன்னும் நுழையவில்லை. மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிப்பட்டு நடப்பீர்களாயின், உங்களது செயல்களில் எதனையும் அவன் குறைத்து விட மாட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன்; கிருபை நிறைந்தவன்''. *(49:14)*

ஆக- சிலை வணங்கிகளான பாலைவன நாடோடிகள் தொடர்பாக இஸ்லாம் கொண்டிருந்த நிலைப்பாடு சமூக-நாகரிகத் தகவுருவாக்கம் சார்ந்த நிலைப்பாடே அன்றி, தகைமை பெற்ற மானிட நாட்ட சுதந்திரத்தை மறுதலிக்கும் நிலைப்பாடன்று; மனிதனது நம்பிக்கைச் சுதந்திரம் சார்ந்த தனது அடிப்படையான நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கும் நிலைப்பாடுமன்று.

இந்த வகையில்தான், வேதக்காரர்கள் முஸ்லிம்களுக்கெதிராக எவ்வளவு சூழ்ச்சியும் அத்துமீறலும் செய்த போதும், அவர்களது நம்பிக்கைச் சுதந்திரத்தை மதித்துப் பேணும் வகையில் இஸ்லாத்தின்

நிலைப்பாடும் நடைமுறைகளும் அமைந்திருந்தன. மட்டுமன்றி, பாரசீகர்கள் போன்ற பிற நாகரிகங்களைச் சேர்ந்தோர் நெருப்பை வணங்குகின்ற இணை வைப்பாளர்களாக இருந்த போதும், அவர் களது இச்சுதந்திரத்தை தெளிவான வசனங்கள் மூலமாக இஸ்லாம் உறுதிப் படுத்தியது. நம்பிக்கைச் சுதந்திரம் என்பது இஸ்லாமிய-நாகரிக சிந்தனைப் பாங்கையும் முறையியலையும் உருவாக்குவதற் கான அடிப்படைக் கருத்தாக்கமாக அமைந்திருப்பது இதன் மூலம் சிறிதும் மயக்கமின்றித் தெளிவாகிறது.

## இரண்டு: சிந்தனைச் சுதந்திரம்

மனிதனது சிந்தனைச் சுதந்திரம் நம்பிக்கைச் சுதந்திரத்திலிருந்து பிறப்பதாகவும், அச்சுதந்திரத்தை முழுமைப் படுத்துவதாகவுமே உள்ளது. இச்சுதந்திரம் நாட்ட சுதந்திரத்துடனும் தீர்மானிக்கும் சுதந் திரத்துடனும் தொடர்புற்றிருந்த போதிலும், முழுமொத்த நம்பிக் கைக் கோட்பாட்டுச் சட்டகத்தினுள் அடங்கும் ஒன்றாகவே உள்ள தெனலாம். ஏனெனில், குறித்ததொரு நம்பிக்கைக் கோட்பாட்டைப் பேணியொழுகும் ஒருவர் அக்கோட்பாட்டினுள் அடங்கும் விவகா ரங்களையும், வாழ்விலும் மனிதத் தொடர்புகளிலும் அது கொண்டி ருக்கும் பிரதிபலிப்புகளையும் புரிந்து கொள்வதற்கு எண்ணற்ற நிலைப்பாடுகளையும் தீர்மானங்களையும் எடுக்க வேண்டியவராகிறார்.

இஸ்லாம் மனித நாட்டத்தை மதகுருக்களின் ஆதிக்கத்திலிருந்தும் அத்துமீறலிலிருந்தும் விடுதலை செய்து, சுய திருப்தியுடன் தீர்மானம் எடுக்கும் சுதந்திரத்தை அதற்கு வழங்குகிறது. மனச்சாட்சி மற்றும் விழுமியம் சார்ந்த ஏற்பு நிலையை மனித உள்ளத்தின் மீது திணிப் பதற்கு இஸ்லாமிய சமூகத்தில் இடமில்லை. சுதந்திரமான நாட்டத் தின் மூலம் ஏற்றுத் திருப்தி காணும் முறைமையையே அது அங்கீ கரிக்கிறது. ஏனெனில், திணிப்பு என்பது ஆரோக்கியமான மனித இயல்புக்கு ஏற்புடையதன்று. இஸ்லாம் அதனை மனித வாழ்க்கை யிலோ மனித சமூகத்திலோ பின்பற்றத்தக்க முறைமையாக ஏற்ப தில்லை. அந்த வகையில், மனிதனது இறுதித் தீர்மானமும் தெரிவும் அவனது நாட்ட சுதந்திரத்தையே சார்ந்திருக்கும். இம்மையிலும் மறு மையிலும் அவற்றின் விளைவுகளை ஏற்க வேண்டியதும் அதுவே.

சிந்தனைச் சுதந்திரம் என்பதன் பொருள் ஒழுங்கற்றுத் தீர்மானம் எடுப்பதோ, அறிவீனமாக முடிவெடுப்பதோ அன்று. முஸ்லிம் சிந்தனையும் முறைமையும் வினைமை மிக்கவை; பொறுப்பு

மிக்கவை. அறிவு, ஆராய்ச்சி, நுணுகிய அவதானிப்பு என்பனவே அவை தீர்மானம் எடுப்பதற்கான முன் நிபந்தனைகளாகும். மனித முயற்சி இந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத போது இலக்கு மையம், வினைமை, பொறுப்புணர்வு என்பன சாத்தியமற்றுப் போய்விடும். எவ்வாறாயினும், மனித நாட்டத் தீர்மானம் என்பது எப்போதும் தனிமனித மனச்சாட்சியோடும் விழுமியம் சார் திருப்தியோடும் தொடர்பு பட்டதாகவே இருக்க வேண்டும். அங்கு எந்த வற்புறுத்தலோ கட்டாயப் படுத்தலோ இருக்கக் கூடாது.

''மனிதர்கள் எப்படித் தீர்ப்பு வழங்கினாலும், உங்கள் உள்ளத்தின் தீர்ப்பையும் கேட்டுக் கொள்ளுங்கள்''. *(அஹ்மத்)*

''மனிதனுக்கு அவன் முயன்றதே கிடைக்கும்''. ***(53:39)***

''தவறான வழியில் செல்பவர் தனக்கே தீங்கிழைத்துக் கொள் கிறார். ஒருவரது பாவச் சுமையை மற்றொருவர் சுமக்க மாட்டார்''. ***(17:15)***

சிந்தனைச் சுதந்திரமும் சிந்தனா ஏற்பு நிலையும் என்பது அடிப் படையானதோர் உரிமையும் நிலைப்பாடும் ஆகும். பூமியில் மனித இருப்புக்கும், பிரதிந்தித்துவப் பொறுப்பைச் சுமப்பதற்கும் அது அவசியமானது. எனவே மனிதனது சிந்தனையையும் அவனது மனச் சாட்சி சார்ந்த ஏற்பு நிலையையும் அடக்குமுறைக்கு உட்படுத்துவது வாழ்வின் பொருளையும் பொறுப்பையும் அழிப்பதாகவே அமை யும். முஸ்லிம் முறைமை இதனை ஒருபோதும் ஏற்காது. ஏனெனில், நம்பிக்கைச் சுதந்திரத்துக்கும் சிந்தனைச் சுதந்திரத்துக்குமான உரிமை பேணப்படுவதன் மூலமாகவே முஸ்லிம் பகுத்தறிவு நிலைபேற டையும்.

முஸ்லிம் சிந்தனையானது முஸ்லிம் சமூகத்தில் சுதந்திரமாகவும் புத்தாக்கம் கொண்டதாகவும் தொழிற்படும். அதன் உற்பத்திகள் பல்வகைப்பட்டவையாகவும், ஒன்றையொன்று முழுமைப் படுத்து பவையாகவும் அமைந்திருக்கும். எனினும் சீர்திருத்தம், வளப்படுத் தல், குழப்பம் செய்யாமை முதலிய மனித இருப்பின் இலக்குகளைச் சார்ந்தே அதன் இயங்குதளமும் செல்திசையும் புத்தாக்கமும் -மொத் தத்தில்- அமைந்திருக்கும். ஏனெனில், இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளும் அதியுயர் நோக்கங் களும் வலியுறுத்துவது இதனைத்தான். இஸ்லாமிய சமூக ஒழுங்கின் அத்தியாவசிய நியமங்கள் வேண்டி நிற்பதும் இதனைத்தான்.

அடிப்படையில் சிந்தனைச் சுதந்திரம் என்பது மனித வாழ்விலும் அதன் விவகாரங்களிலும் முழுமொத்த நம்பிக்கைக் கோட்பாடு ஏற்படுத்துகின்ற பிரதி விம்பமே ஆகும். ஒரு மனிதனது நம்பிக்கைச் சுதந்திரத்தினதும் சிந்தனைச் சுதந்திரத்தினதும் அடியாகவே அவனது செயற்பாடும் சமூக நடத்தையும் அமைகின்றன. நம்பிக்கை மற்றும் சிந்தனா ரீதியான பார்வைகளும் அபிலாஷைகளும் மட்டுமன்றி, யதார்த்தம் குறித்த செயலார்ந்த பரிசீலனைகளும் வசதிகளும் தேவைகளும் கூட அந்த நடத்தையை ஆளுகை செய்கின்றன. அவை இந் நடத்தையின் மீது கட்டுப்பாடுகளையும் வரையறைகளையும் விதிக்கின்றன.

சுதந்திரம் தொடர்பான விவகாரங்களில் நடைமுறை அறிவு முக்கியமானது. கோட்பாட்டு-தத்துவார்த்தப் பகுதி மாத்திரம் அங்கு போதுமானதல்ல. ஏனெனில், அதனால் சமூக நடைமுறையின் யதார்த்தத்துக்கு முழுமையான வியாக்கியானம் தர முடியாது. சுதந்திரங்கள் பற்றிய சமூக நடைமுறையும், தனிமனித உரிமைகளின் பாதுகாப்பும் கோட்பாட்டு அடிப்படைகள் மீது மாத்திரம் தங்கியிருப்பதில்லை. யதார்த்தபூர்வமான பரிசீலனைகளுக்கும் அவை கட்டுப்பட்டிருக்கும்.

அந்த வகையில், கோட்பாட்டு-தத்துவார்த்தத் தளங்களும், உம்மாவின் சிந்தனையும் ஆரோக்கியமாக இருக்கும் அளவுக்கு உம்மாவும் அதன் நிறுவனங்களும் சகிப்புத் தன்மைக்கு ஆற்றல் கொண்டவையாக இருக்கும். அத்துடன், தனிநபர்களும் குழுக்களும் தமது சுதந்திரங்களை அனுபவிப்பதற்கு இடமளிப்பவையாகவும் அவை இருக்கும். மறுபுறத்தில், உம்மாவின் பயணம் தடுமாற்றம் கொண்டதாகவும், அதன் சிந்தனைத் தளமும் நாகரிகச் செயற்பாடும் தளம்பல் கொண்டனவாகவும் இருக்குமாயின், அவற்றிடம் சகிப்புத் தன்மை குறைவாகவே இருக்கும். மாற்றுச் சிந்தனைக்கு பெரியளவு இடமளிக்காதவையாகவும் அவை இருக்கும். ஏனெனில், பலவீனம் எப்போதும் கடும்போக்கிற்குச் சாய்வானதாகும். பலமே -தனது ஆரோக்கியமான தத்துவார்த்தப் பின்னணியின் காரணமாக- பரஸ்பர சகிப்புத் தன்மைக்கும் பன்மைத் தன்மைக்கும் இடமளிப்பதாக இருக்கும். சிந்தனைப் படையெடுப்பு மற்றும் காலனிய ஒடுக்குமுறை பற்றிய அச்சங்களும் இப்பலவீனத்துடன் சேர்ந்து கொள்ளுமாயின், புரிதலுக்கான இயலுமைகள் இன்னும் பலவீனமடைந்து விடும். அந்நிலையில், தொலைநோக்கும் மனக்கட்டுப்பாடும் இன்னும் அதிகளவு தேவைப்படும்.

## மூன்று: சமூக செயற்பாட்டுச் சுதந்திரம்

மனித இருப்பின் இயக்கப் பரிமாணமாகிய இச்சுதந்திரம் தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையிலான செயற்பாடுகள், நடவடிக் கைகள், தொடர்புகள், நலன் பரிமாற்றங்கள் முதலிய அனைத்து விவகாரங்களோடும் சம்பந்தப் படுகிறது. ஏனெனில், தனிமனிதன் சமூகமொன்றுடன் இல்லாத போது வாழ்வில் அவனது இருப்பு நிலைபேறடையாது. சமூகத்துடன் அவன் இருக்கும் போதுதான், அதன் நிறுவனங்களோடும் அங்கத்தவர்களோடும் தொடர்புகளையும் நலன்களையும் பரிமாறிக் கொள்கிறான்.

சமூகத்தின் உள்ளேயான தனிமனித இருப்பானது அவனது இயக்கத்தின் மீதும் மானிடத் தொழிற்பாட்டின் மீதும் பல வரை யறைகளையும் நிபந்தனைகளையும் விதிக்கிறது. சமூகத்தின் கட்ட மைப்பும், அதன் பல்வேறு உள்ளடக்கங்களும், யதார்த்தமும், இயலுமைகளும், சவால்களும் இயல்பாகவே அப்படித்தான் இருக் கும். மனிதன், வாழ்வு, சமூகம், என்பவை சார்ந்த வளப்படுத்தல் இலக்கின் இயல்பும் அதுதான். நம்பிக்கைச் சுதந்திரமும் சிந்தனைச் சுதந்திரமும் தனிமனிதனோடும் அவனது சுயாதீனத் தன்மையோடும் தொடர்பு பட்டவையாயினும், மனித செயற்பாட்டின் எல்லையும் தாக்கமும் தனிமனிதனோடு மாத்திரம் நின்று விடுவதில்லை. தனி மனிதனைத் தாண்டி சமூகம், அதன் நிறுவனங்கள், அங்கத்தவர்கள், வளங்கள், சக்திகள் என்பவற்றையும் அது பாதிக்கிறது. இந்த வகை யில், மனித செயற்பாடு என்பது சமூக இயல்பு கொண்டதாகிறது. அதாவது சமூகம், அதன் கட்டமைப்பு, தீர்மானம் என்பவற்றுடன் ஒருங்கிசைந்து ஊடாடக் கூடியதாக அது உள்ளது.

சமூக செயற்பாட்டின் கூட்டுப் பரிமாணம் என்பதன் பொருள் தனிமனிதர்களது நாட்டத்தையோ அவர்களது சமூக செயற்பாட் டையோ அடக்கு முறைக்கு உட்படுத்துவதன்று. மாறாக, சமூகத்தில் தனிமனிதனது செயற் சுதந்திரமானது நியமங்களால் ஆளப்பட வேண்டும் என்பதே அதன் பொருளாகும். தனிமனித நடத்தைகளை அவனது சீர்திருத்த நாட்டத்தையும் தேவையையும் நிதர்சனப்படுத் தும் வகையில் இணக்கப்படுத்துவனவே இந்நியமங்களாகும். தனி மனிதனது இயலுமைகளுக்கும், சமூகத்தின் இயலுமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப இது இடம்பெற வேண்டும். அதாவது, இந் நியமங்களானவை வளப்படுத்தல் சார்ந்த மனித இருப்பின் ஒளியில்

சமூக அங்கத்தவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களாகும். தனிமனிதனது நம்பிக்கை மற்றும் சிந்தனை சார்ந்த சுதந்திரங்கள் சமூக சீர்திருத்த இலக்குகளோ வரையறைகளோ இன்றி சமூக செயற்பாட்டை நோக்கிப் பயணிக்க முடியாது என்பதையும் அவை குறிக்கின்றன.

ஏனெனில், சமூகத்தின் நியமங்களும் சட்டங்களும் விதிகளும் நிறுவனங்களும் பொது ஒழுங்கும் சமூகத்தின் சீர்திருத்தம் மற்றும் வளப்படுத்தல் சார்ந்த தீர்மானங்களை சாத்தியப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தப்படுகின்றன. இந்த எல்லைகளுக்குள் நின்று செயலாற்று வதற்கான அதிகபட்ச வாய்ப்பு தனிமனிதர்களுக்கு வழங்கப்படு கிறது. அவர்கள் தமது விருப்பையும் ஏற்பையும் சிந்தனைப் போக்கை யும் உண்மையாக வெளிப்படுத்தவும் செயற்படவும் இங்கு சந்தர்ப் பம் கிட்டுகிறது. சமூகத்தின் நியமங்களும் பொது ஒழுங்கும் தனி மனிதர்களது சமூகப் பார்வையிலிருந்தே பிறக்கின்றன. நம்பிக்கை யிலும் சிந்தனையிலும் திருப்தியான அளவில் தனிமனிதனுக்கு சுதந் திரம் காணப்படும் போது, பொது ஒழுங்குக்கும் அதன் நியமங்களுக் கும் வரையறைகளுக்கும் தீர்மானங்களுக்கும் மாற்றமாக அவனால் செயற்பட முடியாது. ஏனெனில், பொது ஒழுங்கின் நியமங்களைப் பேணாமல் சிந்தனைச் சுதந்திரம் என்ற பெயரில் இடம்பெறும் தனிநபர் செயற்பாடுகள் சமூக வாழ்வில் குழப்பம் பரவவே வழி வகுக்கும். அந்நிலையில், உரிமைகளும் சுதந்திரங்களும் மொத்த மாகப் பறிபோவது மட்டுமன்றி, மனித வாழ்வும் பிரபஞ்ச இருப்பும் கூட பொருளற்றுப் போய்விடும்.

தனிமனித நம்பிக்கையும் சிந்தனையும் செயற்பாடும் சமூகத்தின் சீர்திருத்த-வளப்படுத்தல் நோக்கங்களுடன் ஒத்திசைந்து, பொது ஒழுங்கின் நியமங்களுக்கு அமைவாக கட்டுக்கோப்புடன் செல்ல வேண்டும். அதுதான் நம்பிக்கைச் சுதந்திரத்தையும் சிந்தனைச் சுதந் திரத்தையும் புத்தாக்கத்துக்கும் சீர்திருத்தத்துக்குமான உந்து விசை களாக மாற்றும். சமூகக் கட்டமைப்பிலும் அதன் தொடர்புகளிலும் குழறுபடியையும் அழிவையும் ஏற்படுத்தும் சக்தியாக அவை மாறு வதும் தவிர்க்கப்படும்.

தனிமனிதனது எத்தகைய செயலும் சமூகம் விதித்த பொது ஒழுங்கின் நியமங்களைத் தாண்டிச் செல்கின்ற போது தனது சட்ட பூர்வத் தன்மையை இழந்து விடும். அவ்வாறே, பொது ஒழுங்கின் நியமங்கள் தனிமனிதர்களது நம்பிக்கை, சிந்தனை, கருத்து வெளிப்

பாடு என்பவை சார்ந்த உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்டிரா விடின் அவையும் தமது சட்டபூர்வத் தன்மையை இழந்து விடும். எனினும், இவ்விரு நிலைகளிலும் வளப்படுத்தலும் சீர் திருத்தமுமே நோக்கமாக அமைந்திருக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தனிப்பட்ட செயல் வாதங்களும், பொதுச் சட்டவாக்க ஒழுங்குகளும் தத்தமக்குரிய அங்கீகாரத்தினை இஸ்லாம் என்ற ஒரே அடிப்படையிலிருந்துதான் பெற்றுக் கொள்கின்றன. இஸ்லாத்தையும் அதன் அதியுயர் இலக்கு களையும் பெறுமானங்களையும் சட்டங்களையும் சுயவிருப்புடன் பேணிப் பின்பற்றுவதன் மூலமாகவே இந்த அங்கீகாரம் இரு தரப்புக்கும் கிடைக்கிறது. முஸ்லிம் சமூகத்தில் சட்டமியற்றுவோர் தாம் உருவாக்கும் ஒழுங்குகளிலும் சட்டங்களிலும் நியமங்களிலும் இஸ்லாத்தின் நோக்கங்களையும் பெறுமானங்களையும் தாண்டிச் செல்லலாகாது. அந்த வகையில், பூமியை நிர்வகிப்பதிலும் சீர் திருத்துவதிலும் வளப்படுத்துவதிலும் மனிதன் தனது பொறுப்பை ஏற்கச் செய்யும் வகையில் அவனது இயலுமைகளை முடுக்கி விடுவதே அவற்றின் முழு நோக்கமாக இருக்க வேண்டும். அவ்வாறே, தனிமனித சிந்தனைச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாடும் சீர் திருத்த-வளப்படுத்தல் நோக்கங்களைப் பேணி இயங்குவதனூடாக சமூகத்தின் அபிப்பிராயங்களும் பார்வைகளும் ஒன்றுக்குள் மற் றொன்று ஊடாடுவதற்கு வழியமைக்க வேண்டும். அதன் விளை வாக, சமூகத்தின் பார்வைக் கோணங்கள் உயிரோட்டமடைந்து, பொது ஒழுங்குகளும் கொள்கைகளும் விருத்தியடைய வேண்டும்.

இவ்வகையில்தான், இஸ்லாமிய தேச ஒழுங்குகளுக்கு அமைவாக நியமப் படுத்தப்படும் நம்பிக்கைச் சுதந்திரமும் சிந்தனைச் சுதந்திர மும் புத்தாக்கத்துக்கும் முன்னேற்றத்துக்குமான சாதனங்களாக மாறி, வாழ்வுச் சக்கரத்தை பயன்மிகு இலக்குகளை நோக்கி நெம்பித் தள்ளுகின்றன. மட்டுமன்றி, சமூகத்தில் வாழும் பிற மனிதர்களது மொத்த உரிமைகளின் ஒளியில் தனிமனித செயற்பாட்டுக்கும் நடத் தைக்கும் பாரியளவு இடமொன்றை அகலித்துக் கொடுக்கின்றன. சக மனிதர்களது சிந்தனா-நம்பிக்கை சுதந்திரங்கள், சமூகத்தின் இயலு மைகள், சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள் என்பன அங்கு கவனத் தில் எடுத்துக் கொள்ளப் படுகின்றன.

சுதந்திரம் பற்றிய இக்கருத்தாக்கங்களை சாத்தியப் படுத்தவும், அதன் துறைகளைத் தயார்படுத்தவுமே 'ஆகுமானது' (முபாஹ்) என்ற

கொள்கை இஸ்லாமிய ஒழுங்கின் பொதுவான விதிகளுள் ஒன்றாக அமைக்கப் பட்டுள்ளது. தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்ட வஹீயின் வசனங்களே அந்த விதியில் விலக்குகளை ஏற்படுத்த முடியும். அல்லது 'ஃபித்றா' என்னும் இயல்பு விதிகளும், 'மஸாலிஹ்' என்னும் அடிப்படை நலன்களும் அதில் விலக்குகளை ஏற்படுத்த லாம். இவை தவிர, தவிர்க்க முடியாத நிர்ப்பந்த நிலைகளாலும் அக்கொள்கை கட்டுப்படுத்தப் படலாம்.

மனிதனுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள நாட்ட சுதந்திரம், தீர்மானம் எடுக்கும் சுதந்திரம் என்பன சரியாகப் புரிந்து கொள்ளப் படுவது அவசியம். மனித சமூகத்தில் தனிமனிதனது அங்கத்துவம், முஸ்லிம் சமூகத்தின் உறவுகள், அதன் அங்கத்தவர்களதும் நிறுவனங்களதும் ஆற்றுகை என்பனவும் சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இவற்றைப் புரிந்து கொள்ளாமல், கண்மூடித்தனமான பின்பற்றலிலிருந்தும் சிந்தனா-நாகரிக மலட்டுத் தன்மையிலிருந்தும் முஸ்லிம் சிந்தை விடுபட முடியாது. உம்மாவின் ரோகங்களுக்கும், புத்தாக்க-நாகரிகத் துறையில் அது முகம் கொடுத்திருக்கின்ற இயலா மைக்குமான பயனுள்ள தீர்வுகளையோ புதிய சிந்தனைகளையோ கண்டடைவதற்கான பாதைகளும் திறக்கப்பட மாட்டாது.

இந்தப் பகைப்புலத்தில்தான், 'நன்மையை ஏவி தீமையைத் தடுத் தல்' என்ற இஸ்லாமியக் கருத்தாக்கத்தின் பொருளை நாம் புரிந்து கொள்கிறோம். ஏனெனில், இக்கருத்தாக்கம் ஒருபுறத்தில் சிந்தனா-நம்பிக்கைச் சுதந்திர நோக்கில் நின்று பார்க்கும் போது உபதேசமாக வும் வழிகாட்டலாகவும் அமைகிறது. மறுபுறத்தில், சமூக ரீதியான ஆற்றுகை என்ற கோணத்திலிருந்து நோக்கும் போது, சமூகத்தின் உரிமைகளையும் பொது ஒழுங்கையும் காப்பாற்றிக் கரைசேர்க்கும் போராட்டமாகவும் உழைப்பாகவும் யத்தனமாகவும் அமைகிறது. அதன் மூலமாக, சமூகம் என்ற கப்பல் மூழ்கி விடாமலும், சிதைந்து விடாமலும், குழப்பத்தில் ஆழ்ந்து விடாமலும் காப்பாற்றப்படுகிறது; வாழ்வினதும் சமூகத்தினதும் சீர்திருத்த-வளப்படுத்தல் நோக்கம் அழியாது தடுக்கப்படுகிறது.

### ஈ)- அல்லாஹ்விடம் ஒப்புக் கொடுத்தல் (தவக்குல்):

இஸ்லாமிய முறையியலின் நான்காவது அடிப்படையான கருத் தாக்கமாக இது உள்ளது.

'தவக்குல்' என்பது ஓர் இறைவிசுவாசியின் உள்ளம் அல்லாஹ் வைச் சார்ந்து நின்று, அவனில் முழு நம்பிக்கை வைத்து, வாழ்வுடன் தொடர்பான அனைத்திலும் அவனது விதிப்பையும் அளப்பையும் ஏற்றுச் செயல்படுவதை குறிக்கிறது. அல்லாஹ்வின் பேராற்றல், ஞானம், நீதி என்பவற்றையும், அனைத்தின் முடிவும் அவனிடமே உள்ளது என்பதையும் மனதால் விசுவாசிப்பதை இது குறிக்கிறது.

விசுவாசம் கொண்ட உள்ளமொன்றின் 'தவக்குல்' மறைவான அம்சங்கள் பற்றிய அதன் நம்பிக்கையிலிருந்தே உருவாகிறது. வானங்களையும் பூமியையும் முழு அறிவுடன் படைத்த ரட்சகனே அம்மறைவான அம்சங்களைத் திட்டமிட்டு நிர்வகிக்கிறான் என்ற நம்பிக்கை அது.

முஸ்லிமின் தவக்குல் என்பது ஓர் அறிவு; புரிதல்; நம்பிக்கை சார்ந்த இயல்பான கூருணர்ச்சி. முஸ்லிமின் மிகப் பிரதான சக்தி மூலங்களுள் ஒன்று அது. அப்பிரமாண்டமான உளவியல் பலத்திலிருந்துதான் அவனது பொறுமையும் போராட்டமும் திருப்தியும் மகிழ்ச்சியும் ஊற்றெடுக்கின்றன.

புலவய உலகில் தன் மீதுள்ள கடமைகளுடன் தனது முயற்சியும் யத்தனமும் தொடர்பு பட்டிருப்பது அவனுக்குத் தெரியும். படைப்புகளின் மீது அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கும் நியதிகளுக்கும், காரண-காரியத் தொடர்புக்கும், அவற்றைக் கையாள்வதற்காக தனக்கு வழங்கப் பட்டுள்ள அறிவாற்றலுக்கும் அமைவாக தன் பணியை நிறைவேற்றுவதிலேயே தனது முயற்சியும் யத்தனமும் அடங்கியுள்ளன என்பதை முஸ்லிம் அறிவான்.

ஆயினும், காரண-காரியங்களின் முழு மொத்தத் தொடர்பு, படைப்புகளின் இயக்கம், அவற்றின் இடைவினைகள் என்பன பற்றிய முழு யதார்த்தத்தை தனது பகுத்தறிவினாலும் தர்க்கத்தினாலும் ஐயந்திரிபறப் புரிந்து கொள்ள முடியாது என்பதும் முஸ்லிமுக்குத் தெரியும். படைப்பாளன் மட்டுமே அவற்றை முழுமையாக அறிந்தவன். எனவே, விவகாரங்களின் இறுதி முடிவு அல்லாஹ்வுக்கே உரியது என்பதை இறைவிசுவாசி ஏற்றுக் கொண்டே இருப்பான். தவக்குல் என்பது அவனது பிரதான சக்தி மூலங்களுள் ஒன்றாக அமைந்திருப்பதற்குக் காரணம் இதுதான்.

''(நபியே) கூறுவீராக: நிச்சயமாக விவகாரங்கள் யாவும் அல்லாஹ்வுக்கே உரியவை''. *(3:154)*

''படைப்பும் கட்டளையும் அவனுக்குரியவை என்பதை அறிந்து கொள்ளுங்கள்'' *(7:54)*

''உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவு மிகச் சொற்பமே''. *(17:85)*

''அவனது அறிவிலிருந்து அவன் நாடியதை மட்டுமே அவர்களால் தெரிந்து கொள்ள முடியும்''. *(2:255)*

''எங்கள் ரட்சகா! உனது கருணையும் அறிவும் அனைத்தையும் சூழ்ந்திருக்கின்றன''. *(40:7)*

இந்த வகையில்தான், வாழ்வையும் பிரபஞ்சத்தையும் சூழ்ந்திருக்கும் முழுமொத்த தெய்வீக ஏற்பாடுகளோடு ஒரு முஸ்லிம் திடமான நம்பிக்கையோடும் திருப்தியோடும் உறவாடுகிறான்; அல்லாஹ்வின் விதிப்புக்கும் அளப்புக்கும் அமைவாக வரும் முடிவுகளை ஏற்றுப் பணிகிறான். அனைத்து விவகாரங்களதும் முடிவு நன்மையானதே என்பதுதான் அவனது நம்பிக்கையினதும் சிந்தனா முறைமையினதும் சாராம்சமாகும். அருட்கொடைகளுக்கு அவன் நன்றி செலுத்தும் போதும் நன்மைதான். துன்பங்களைப் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளும் போதும் நன்மைதான். மறுமையில் கிடைக்கும் கூலியும் நன்மையாகத்தான் அமையப் போகிறது. முஸ்லிமின் முயற்சிக்குக் கிடைக்கும் உலகியல் முடிவு இன்பமாயினும் துன்பமாயினும், மறுமையில் அகிலங்களின் ரட்சகனுக்கு முன்னால் மனிதர்கள் எழுந்து நிற்கும் நாளில் சத்தியமும் சத்தியத்தைச் சுமந்தவர்களும் வெற்றி பெறுவார்கள் என்பதும், அசத்தியமும் அதன் காவலர்களும் தோற்று விடுவார்கள் என்பதும் முஸ்லிமின் நம்பிக்கையாகும்.

''உங்களில் போராடக் கூடியோரையும் பொறுமையாளர்களையும் அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களை நாம் நிச்சயமாக சோதிப்போம்''. *(47:31)*

''தீமையாலும் நன்மையாலும் உங்களை நாம் சோதிப்போம். நீங்கள் எம்மிடமே மீளக் கொண்டு வரப்படுவீர்கள்''. *(21:35)*

''நமக்காகப் போராடுவோருக்கு நமது வழிகளை நாம் காண்பிப்போம்''. *(29:69)*

''விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால் அவன் உங்களுக்கு உதவுவான்; உங்கள் பாதங்களை ஸ்திரப் படுத்துவான்''. *(47:7)*

*''நீங்கள் அல்லாஹ்வுக்காக உரிய முறையில் போராடுங்கள்''. (22:78)*

*''முடிந்தவரை சீர்திருத்தத்தை ஏற்படுத்தவே நான் விரும்புகி றேன். எனது வெற்றி அல்லாஹ்வின் மூலமாகவே கிட்டும். அவனிடமே நான் பொறுப்புச் சாட்டுகிறேன். அவனை நோக்கியே மீள்கிறேன்''. (11:88)*

*''பொறுமை கொண்டு, தங்கள் ரட்சகனிடம் பரஞ்சாட்டிச் செயற்படுவோரது கூலி சிறந்ததாகவே அமையும்''. (29:59)*

*''விசுவாசம் கொண்டு, தங்கள் ரட்சகன் மீது பரஞ்சாட்டு வோருக்கு அல்லாஹ்விடம் இருப்பதே சிறந்ததும் நிலை யானதும் ஆகும்''. (42:36)*

*''அனைத்து விவகாரங்களும் அவனிடமே மீளக் கொண்டு வரப்படும். எனவே அவனையே வணங்கி, அவனிடமே பொறுப்புச் சாட்டுவீராக!'' (11:123)*

'தவக்குல்' என்பதன் வரம்பு மீறிய நிலை 'தவாக்குல்' ஆகும். ஏனெனில், 'தவாக்குல்' என்பது வாழ்வியல் விவகாரங்கள் தொடர் பாகவும், புலவய உலகு தொடர்பாகவும் பலவீனத்தையும் இய லாமையையும் வெளிப்படுத்தும் நிலையைக் குறிக்கிறது. மனித னுக்கு இவ்வுலகில் அல்லாஹ் வசப்படுத்தித் தந்திருக்கும் பிரபஞ்ச விதிகளை அனுசரித்து பூமியின் முன்னேற்றத்துக்காக உழைக்கா திருக்கும் நிலையே இதுவாகும். முயற்சியின்மை, உழைப்பின்மை, விவகாரங்களை நுணுகிக் கவனித்துச் செயற்படாமை என்பவற்றை இது குறிக்கிறது. இந்த வகையில், 'தவாக்குல்' என்பது அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறானது மட்டுமன்றி, சீரான மனித இயல்புக்கும் மாறானதாகும். ஏனெனில், நன்மையையும் சீர்மையையும் ஏற்படுத் தும் நேர்கோடு காரண-காரியத் தொடர்பின் அடிப்படையில் உழைப் பதையே சீரான 'ஃபித்றா' வற்புறுத்துகிறது. அவ்வாறு பிரபஞ்ச விதிகளைப் பேணி காரண-காரிய அடிப்படையில் செயற்படுவதில் கோளாறு ஏற்படுமாயின், அதனை 'தவக்குல்' என அழைக்க முடியாது. ஏனெனில், அத்தகைய உழைப்பும் செயற்பாடுமே வாழ்வில் மனித னுக்குள்ள பொறுப்பின் உள்ளீடாகும். அவனது செயல் நாட்டத்தை யும், இருப்பின் நோக்கத்தையும் சோதித்துப் பார்க்கும் இடமும் அதுதான்.

'தவாக்குல்' என்பது நம்பிக்கையில் தோன்றும் சீர்கேடாகும். அது உழைப்பையும் முயற்சியையும் திசைதிருப்பி அழித்து விடும்.

அதனால்தான், ‘தவக்குல்’ என்பதற்கும், ‘தவாக்குல்’ என்பதற்குமான வேறுபாட்டை அறியாத நாட்டுப்புற அறபிக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ‘‘ஒட்டகத்தைச் கட்டி வைத்து விட்டு அல்லாஹ்விடம் பரஞ்சாட்டு!’’ என தெளிவாக வழிகாட்டினார்கள்.

இதே புரிதல்தான் கொள்ளை நோய் தொடர்பாக இஸ்லாத்தின் இரண்டாம் கலீபா உமர் பின் கத்தாப் (றழி) அவர்கள் எடுத்த நிலைப்பாட்டுக்கும் காரணமாய் அமைந்தது. தொற்று நோய்க்குள் ளான இடத்தை விட்டு வேறு இடத்தை நோக்கிச் சென்று விடுவதை ‘‘அல்லாஹ்வின் விதியிலிருந்து அல்லாஹ்வின் மற்றொரு விதியை நோக்கி ஓடுகிறேன்’’ என அவர் கூறியது இதனைத்தான். காரண-காரியத் தொடர்பைப் பேணாமலும், பிரபஞ்சத்திலும் படைப்பு களிலும் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள நியதிகளை அனுசரிக்காமலும் விதிவசம் என வாளாவிருப்பதுதான் ‘தவக்குல்’ என எண்ணியிருந்த ஒருவருக்கு உமர் (றழி) அளித்த பதிலே அது. ஏனெனில், தொற்று நோய் என்பது அல்லாஹ்வின் நிர்ணயமாகும். அந்த நோய் தாக்கி விடாமல் தற்காத்துக் கொள்வதும் அல்லாஹ்வின் நிர்ணயமே.

ஆக- ‘தவாக்குல்’ என்பது எவ்வகையிலும் இஸ்லாத்துடன் சம் பந்தப் பட்டதன்று. அல்லாஹ்வின் அளப்பையும் விதிப்பையும் பற்றிய நமது முன்னோர்களது புரிதலுக்கு அது இயைபானதுமன்று. மட்டுமன்றி, எல்லா நிலைகளிலும் பிரபஞ்ச நியதிகளுக்கும் காரண-காரியத் தொடர்புகளுக்கும் ஏற்ப தமது செயற்பாடுகளையும் போராட் டங்களையும் அமைத்துக் கொண்ட இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களின் வாழ்வியலுக்கும், நபித்தோழர்களின் முன்மாதிரிகளுக்கும் கூட அது முரணானது.

## உ) மனித செயற்பாடுகளில் காரண-காரியத் தொடர்பு:

காரண-காரியத் தொடர்பு என்பது முஸ்லிமின் வாழ்விலும், மனப்பாங்கிலும், சிந்தனா முறைமையிலும் அடிப்படையானதொரு கருத்தாக்கமாகும். அவனது ‘ஃபித்றா’வும் ‘அகீதா’வும் அவனுக்குச் சில தெளிவுகளை வழங்கியிருப்பதே இதற்குக் காரணம் எனலாம். மாட்சிமை மிக்க அல்லாஹ்வே அனைத்துப் படைப்புகளையும் உயிரினங்களையும் உருவாக்கினான். பிரபஞ்ச விதிகளையும் நியதி களையும் ஏற்படுத்தினான். அவற்றை வளப்படுத்தி நிர்வகித்துப் பரிபாலனம் செய்யும் பொறுப்பை மனிதனுக்கு வழங்கினான்.

மனிதன் தனது பொறுப்பை மேற்கொள்ளவும், பிரபஞ்ச நியதிகளுக்கிடையிலான தொடர்புகளைப் பேணி காரண-காரியச் செயற்பாடுகள் மூலமாக தனது நாட்டத்தை வெளிப்படுத்தவுமான ஆற்றலை அல்லாஹ் அவனுக்குக் கொடுத்தான். இதுதான் முஸ்லிமின் புரிதல்.

மனிதன் காரண-காரியத் தொடர்பைப் பேணி, பூமியில் தனது கடமைகளை நிறைவேற்ற பிரபஞ்ச விதிகளை வசப்படுத்திக் கொள்வானாயின், அதன் மூலமாக தன் பணியை நிறைவேற்றியவனாகிறான்; தனது 'ஃபித்றா'வை மதித்தவனாகிறான்; வாழ்வு குறித்தும் பிரபஞ்சம் குறித்துமான தனது பொறுப்பைச் சுமந்து கொண்டவனாகிறான். அதற்கப்பால், முழுமொத்த தெய்வீக நாட்டம் என்ற நெடுவழியில் தான் செலவிட்ட முயற்சிகள் பெறுகின்ற இடமென்ன என்று தேடிப் பார்க்க வேண்டிய தேவை அவனுக்கில்லை. அது அவனது அறிவெல்லைக்கு உட்பட்டதுமல்ல.

இக்கருத்தாக்கங்கள் தொடர்பாகவும் முன்னைய கருத்தாக்கங்கள் தொடர்பாகவும் பின்வரும் மறை வசனங்களை நாம் கவனத்திற் கொள்ள முடியும்:

''வானங்கள், பூமியின் ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது. அவன் எந்தப் பிள்ளையையும் (தனக்குச் சந்ததியாக) எடுத்துக் கொள்ள வில்லை. ஆட்சியதிகாரத்தில் அவனுக்கு இணையாகவும் எவரு மில்லை. அவன் அனைத்தையும் படைத்து, அளவுப் பிரமாணம் கொண்டு அமைத்தான்''. *(25:2)*

''உமது உயர்ந்த ரட்சகனின் பெயரைத் துதிப்பீராக! அவன் படைத்துச் சீரமைத்தான்; அளவுப் பிரமாணங்களை நிர்ணயித்து வழிகாட்டினான்''.*(87:1-3)*

''அனைத்தையும் கச்சிதமாக அமைத்த அல்லாஹ்வின் செயல் இதுவாகும். நிச்சயமாக அவன் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவன்''. *(27:88)*

''அல்லாஹ் மனிதர்களுக்கு ஆக்கி வைத்த இயல்பு இதுதான். அவனது படைப்புக்கு எந்தப் பதிலீடும் இல்லை''. *(30:30)*

''அல்லாஹ் வானங்களையும் பூமியையும் சத்தியத்தைக் கொண்டு படைத்தான். ஒவ்வோர் உயிருக்கும் அது சம்பாதித்துக் கொண்டதே கூலியாக வழங்கப்படும். அதில் அவர்களுக்கு அநீதி இடம்பெறாது''. *(45:22)*

''உங்களுக்கு முன்னரும் (இத்தகைய) பல வரலாறுகள் கடந்து சென்றிருக்கின்றன. எனவே, பொய்ப்பித்தவர்களின் முடிவு என்னவாயிற்று என்று பூமியில் பயணம் செய்து கவனித்துப் பாருங்கள்''. *(3:137)*

''அவருக்கு நாம் பூமியில் அதிகாரத்தைக் கொடுத்து, ஒவ்வொன்றையும் சாதித்துக் கொள்வதற்கான காரண அறிவையும் கொடுத்தோம்''. *(18:84)*

''எந்த ஆன்மாவும் மற்றொன்றின் பாவத்தைச் சுமக்காது. மனிதன் சம்பாதித்துக் கொண்டதே அவனுக்குக் கிடைக்கும். அவனது முயற்சிகள் அவனுக்கு எடுத்துக் காண்பிக்கப்பட்டு, பின்னர் அவற்றுக்கான கூலியும் நிறைவாக வழங்கப்படும்''. *(53:38-41)*

''வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் ஆகிய அனைத்தையும் உங்களுக்கு அவன் வசப்படுத்தினான். சிந்திக்கும் மக்களுக்கு இதில் பல அத்தாட்சிகள் உண்டு''. *(45:13)*

''வானங்களில் உள்ளவையும், பூமியல் உள்ளவையும் அல்லாஹ்வுக்கே உரியவை. தீமை செய்தோருக்கு அவர்களது செயலுக்கேற்ற கூலியை அவன் வழங்குவான். நன்மை செய்தோருக்கும் அவர்களது செயலுக்கேற்ற கூலியை அவன் வழங்குவான்''. *(53:31)*

''உங்களில் எவர் செயல்களில் சிறந்தவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்''. *(67:2)*

''உங்களை அவன் பூமியின் பிரதிநிதிகளாக்கி நீங்கள் எவ்வாறு செயற்படுகிறீர்கள் என்று பார்ப்பான்''. *(7:129)*

''வானத்தையும், பூமியையும், அவ்விரண்டுக்கிடையில் உள்ளவற்றையும் நாம் விளையாட்டாகப் படைக்கவில்லை''. *(21:16)*

மனித வாழ்வின் அர்த்தம் பற்றிய இப்புரிதலும், பிற படைப்பினங்களுடன் மனிதன் கொண்டிருக்கும் உறவு குறித்த அவனது ஃபித்றாவின் வழிகாட்டலும் அவனுக்கு ஓர் உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அவனது வாழ்வும் அதில் அவன் ஏற்றிருக்கும் பொறுப்பும் காரண-காரியங்களை அடிப்படையாகக்

கொண்டது என்பதே அவ்வுண்மையாகும். உயிரிகளிலும் படைப் பினங்களிலும் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கும் விதிகளை நிர்வகிப்பதிலேயே அவனது வாழ்வு தங்கியிருக்கிறது. இக்காரண-காரியத் தொடர்பின் வழியாகவும், பிரபஞ்ச விதிகளின் வழியாகவுமே அவனது செயற்பாடும் யத்தனமும் இடம்பெறுகின்றன. அவற்றின் அடிப்படையிலேயே அவனது பகுத்தறிவும், புரிதலும், பிற படைப்பு களுடனான உறவின் தர்க்கமும் கட்டமைகின்றன. அவை இல்லை யெனில், அவனது பொறுப்பும் ஆற்றுகையும் துண்டிக்கப்பட்டு விடும்; பகுத்தறிவும் புரிதலும் பலவீனமுற்று விடும். இறைத்தூதர் (ஸல்) அவர்களதும் ஆரம்ப முஸ்லிம்களதும் முறைமை, போராட்டம், திட்டமிடல், முயற்சி, காரண-காரிய அடிப்படையில் செயலாற்றுதல், பிரபஞ்ச நியதிகளையும் விதிகளையும் திடமாகப் பின்பற்றுதல் முதலிய பண்புகளுக்கு இந்தப் புரிதலே அடிப்படையாக அமைந்தது.

இஸ்லாமிய மனப்பாங்கின் செயலாற்றுகைக்கும், இஸ்லாமிய முறையியலின் கட்டுருவாக்கத்துக்கும் இக்காரண-காரியத் தொடர்பே அடிப்படையாக அமைகிறது. காரண-காரியத் தொடர்பு பெறும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாமலும், இஸ்லாமிய நாட்ட சக்தியை அத்தொடர்பின் அடியாகக் கட்டமைக்காமலும் இஸ்லாமிய செயல்வாதத்தை உருவாக்க முடியாது.

காரண-காரியத் தொடர்பைப் பேணியும், இயற்கை விதிகளை வசப்படுத்தியும் செயற்படும் போது குறுக்கிடும் தடைகளையும் சவால்கலையும் எதிர்கொள்வதற்கான துணிச்சல், திடமான தவக்குல் என்பவற்றுக்கேற்பவே முஸ்லிமிடமிருந்து புத்தாக்கமும் உற்பத்தி யும் பிறக்கும். இவ்வாறு அவன் இறைநம்பிக்கையையும் நற்செய லையும் ஒன்றாக இணைத்து தனது பொறுப்பை நிறைவேற்றும் போதுதான் மகத்தான அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு அருகதை யுள்ளவனாகவும் மாறுகிறான். இறை விசுவாசிகளுக்கு உதவியளித்து, பலப்படுத்தி, பூமியின் அதிகாரத்தைப் பெற்றுத் தருவதாக அளிக் கப்பட்ட வாக்குறுதி அது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களும் சான்றோர்களான ‘ஸலபு’களும் வினைமையுடன் சிந்தித்து, திட்டமிட்டு, பாரிய துணிச்சலுடன் செயற் பட்டமைக்குக் காரணம் அவர்களது இத்தகைய புரிதல் முறைமையே ஆகும். அதன் மூலமாகத்தான் அவர்களுக்கு அத்தனை சக்தியும் பலமும் வெற்றியும் சித்தித்தன.

அவர்கள் பெற்றிருந்த பலத்தையும், சாதித்த வெற்றிகளையும் இன்றைய முஸ்லிம் சாதிக்க விரும்பினால், அவர்களைப் போன்று பொறுப்புடன் அவன் செயலாற்ற வேண்டும். சிந்தித்து, ஆராய்ந்து, காரண-காரிய அடிப்படையில் இயங்க வேண்டும். சமூகவியல், பௌதீகவியல், தொழிநுட்பவியல் முதலிய பல்வேறு வாழ்வியல் தளங்களில் இயங்கும் படைப்பியல் விதிகளை அனுசரித்துச் செயற்பட வேண்டும். அதேவேளை, முழுமொத்த தெய்வீக ஏற்பாடுகள் தொடர்பான விடயங்களை அவற்றுக்குச் சொந்தக்காரனும் அவற்றைத் திட்டமிடுபவனுமாகிய அல்லாஹ்விடம் விட்டுவிட வேண்டும். ஏனெனில் அது அவனது விவகாரம். யாருக்கு வெற்றியையும் கூலியையும் அதிகாரத்தையும் வழங்குவது என்பதை தனது முழுமை யான அறிவினாலும் அருளினாலும் அவனே முடிவு செய்வான்.

இம்முறைமையை நமது விஞ்ஞானிகள் ஆய்வு கூடங்களிலும், ஆசிரியர்கள் பாடசாலைகளிலும், தொழிலாளர்கள் தொழிற்சாலை களிலும், படை வீரர்கள் போர்க்களங்களிலும் பின்பற்ற வேண்டும். நமது இளைய தலைமுறை இம்முறைமையின் மீது வளர்க்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட வேண்டும். அப்போதுதான் நாம் நமது பாத்திரத்தை முழுமையாக நிறைவேற்றியவர்களாகவும், நமது பொறுப்பைச் சுமந்தவர்களாகவும், பிரதிநிதித்துவப் பொறுப்புக்கும் நேர்வழிக்கும் அதிகாரத்துக்கும் தகைமை பெற்றவர்களாகவும் -இன்ஷா அல்லாஹ்- மாறுவோம்.

*''அல்லாஹ்வின் வாக்கு சத்தியமானது. அல்லாஹ்வை விட உண்மை உரைப்பவர் யார்?'' (4:122)*

இனி- நாம் முஸ்லிம் சிந்தனையின் செயல்வாதம் பற்றிய கருத்தாடலை நோக்கி நகர்வோம். ஏனெனில், முஸ்லிம் சிந்தனையின் பின்னடைவாலும், சிந்தனைத் தலைமை தனித்து ஒதுங்கியமையாலும், மேற்கத்திய அனுபவத்தில் மதம் பற்றிய புரிதல் ஏற்படுத்திய தாக்கத்தினாலும் முஸ்லிம் சிந்தனையின் இயக்கமும் முறைமையும் துரதிஷ்டவசமாக ஆன்மீக விவகாரங்களிலும் தனிநபர் விவகாரங் களிலும் ஏறக்குறைய சுருங்கி விட்டது. ஆனால், முஸ்லிம் சிந்தனா முறைமையானது -உண்மையில்- வாழ்வு நீட்சியடையும் இடமெங் கும் நீளக் கூடியது; அனைத்து வாழ்வியல் வழிகளையும் தொடக் கூடியது. தொடர்ந்து வரும் பகுதியில் அது பற்றிக் கலந்துரையாடுவோம்.

## (5) இஸ்லாமிய சிந்தனா முறைமையின் தனிப்பண்புகள்:

இஸ்லாமிய சிந்தனா முறைமை முழுமை தழுவியது. அது முஸ்லிம் மனிதனதும் அவனது பகுத்தறிவினதும் செயற்பாட்டை ஆராய்ந்து, முழு வாழ்வையும் சீர்திருத்துவதன் பால் ஆற்றுப்படுத்து கிறது. வாழ்வை ஒழுங்கமைக்கவும், வாழ்வின் இலக்குக்கேற்ப அதன் சக்தியையும் இயலுமைகளையும் வகையாலும் தொகையாலும் முன்னேற்றவும் அது வழிகாட்டுகிறது.

இஸ்லாமிய சிந்தனை முறைமையானது தனது துறையாலும் சாதனங்களாலும் முழுமை பெற்றதாகும். அந்த வகையில், அனைத் துப் படைப்பினங்களும் உள்ளடங்கிய முழு வாழ்வுமே ஒரு முஸ் லிம் தனது முயற்சியைச் செலவிடுவதற்கான துறையாக உள்ள தெனலாம். எனவேதான், அவன் தனது சக்திக்குட்பட்ட எல்லா சாத னங்களையும் பயன்படுத்தி வாழ்வியல் விவகாரங்கள் பற்றிய அறிவைத் தேடுமாறு பணிக்கப்பட்டிருக்கிறான். வாழ்வையும் படைப்புகளையும் வசப்படுத்தி, நிர்வகித்து, ஒழுங்குபடுத்தும் பணி யில் வினைமையோடும் புத்தாக்கத்தோடும் ஈடுபடுமாறு அவன் கேட்கப்பட்டிருக்கிறான்.

அறிவியல் ஆய்வுக்கும் அறிவுத் தேடலுக்கும் உதவக் கூடிய எத் தகைய சாதனங்களாக இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்துமாறும், அவற்றிலிருந்து பயன்பெறுமாறும் முஸ்லிம் பகுத்தறிவு பணிக்கப் பட்டிருக்கிறது. அவை பௌதீகவியல் சார்ந்த அல்லது கருத்தியல் சார்ந்த அல்லது எண்ணிக்கை சார்ந்த அல்லது முறைமை சார்ந்த எத்தகைய சாதனகங்களாக இருப்பினும் சரி. தொகுத்தறிதல், உய்த் தறிதல், அறிவியல், பரிசோதனை, கோட்பாட்டாக்கம், பகுப்பாய்வு முதலிய எத்தகைய வழிமுறையாக இருந்தாலும் சரி. எந்தச் சாதன மாயினும் வழிமுறையாயினும் சீர்திருத்தத்தை நோக்காகக் கொண்ட சரியான சாதனமாக அல்லது வழிமுறையாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறெந்தக் கட்டுப்பாடும் அங்கு கிடையாது. மனிதன் பூமியின் பிரதிநிதித்துவப் பணி தொடர்பான தனது பாத்தி ரத்தை மேற்கொள்வதற்கு அவை உதவியாக அமைய வேண்டும். சீர்திருத்தம், வளப்படுத்தல், பூமியின் பிரதிநிதித்துவம் என்பவற்றில் மனித இயல்பின் சீரிய நோக்கங்களுக்கு முரணாக அமையக்கூடிய எந்த விடயமும் சரியான அறிவாகவோ செயற்பாடாகவோ அமைய முடியாது. அவ்வாறே, மனிதப் பகுத்தறிவால் புரிந்து கொள்ள முடியாத மறைவான உலகு பற்றிய விவகாரங்களில் தறிகெட்டு

அலையும் அளவுக்கு அதனை ஆழ்த்தி விடும் விடயங்களும் சரியான அறிவாக அமையாது. ஏனெனில், மறைவான உலகு பற்றி 'வஹீ' கொண்டு வந்த செய்திகளை விட அதிகமாக எதனையும் அறிந்திருக்க வேண்டும் என மனிதன் பணிக்கப்படவில்லை. இவ்வுலக வாழ்வில் மனிதன் ஆற்ற வேண்டிய பணிக்கு மறைவான உலகு பற்றிய அறிவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு மட்டுமே 'வஹீ' மூலம் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, முஸ்லிம் பகுத்தறிவானது உலக விவகாரங்களில் கவனம் செலுத்தி அவற்றை வளப்படுத்திச் சீரமைப்பதே அது ஆற்ற வேண்டிய பணியாகும். அதற்கப்பால், மறைவான உலகம் பற்றிய பிழையான இறையியல் கோட்பாடுகள் முஸ்லிம் பகுத்தறிவை அதன் கடமைகளை விட்டும் திசை திருப்பக் கூடியவை; புலவய உலகை முழுக் கவனத்துடன் வளப்படுத்துவதற்கான சக்தியை நிர்மூலம் செய்யக் கூடியவை. அந்தச் சக்திதான் ஆரம்பத்தில் முஸ்லிம் மனிதன் அடைந்த வெற்றிகளுக்குக் காரணமாய் அமைந்ததாகும். பின்னர் ஏற்பட்ட பார்வைக் கோளாறும் மயக்கமும்தான் முஸ்லிம் சிந்தை பெருமளவு வழி தவறவும், அதன் முயற்சியும் உந்து சக்தியும் உறுதியும் மங்கி, இறையியல் தர்க்கம், யூகம், பிரிவினை என்பவற்றின் சாகரத்தில் அது மூழ்கிப் போகவும் காரணமாகியது. எனவே அவற்றை முதுகுக்குப் பின்னால் வீசி விட்டு, இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாட்டையும் சிந்தனைச் சட்டகத்தையும் பிரக்ஞையுடன் எடுத்துக் கொள்ளாமல் இச்சாகரத்திலிருந்து அது வெளிவர முடியாது. புலவய உலகிலும், பூமியின் பிரதிநிதித்துவப் பணியிலும் முஸ்லிம் பகுத்தறிவு தனது சீர்திருத்தப் பொறுப்புகளை மேற்கொள்வதற்கு முழுச் சக்தியையும் பிரயோகிக்க வேண்டியுள்ளது. உழைப்பதற்கும் புத்தாக்கம் புரிவதற்கும் தன்னால் முடிந்த அனைத்து உபாயங்களையும் வழி முறைகளையும் அது கைக்கொள்ள வேண்டியுள்ளது.

அந்த வகையில், இஸ்லாமிய சிந்தனையின் முழுமைப் பண்பையும் முறைமையியலையும் நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான், முஸ்லிம் அறிவு, சிந்தனை, கலாசாரம் என்பவற்றின் கட்டுருவாக்கமானது தனிநபர்கள், சமூகங்கள், முஸ்லிம் உம்மா, முழு மானிட சமுதாயம் ஆகிய அனைத்தினதும் வாழ்வியல் யதார்த்தத்தை அறிந்திருப்பதன் அவசியப்பாட்டையும் நாம் புரிந்து கொள்வோம். மட்டுமன்றி, அவற்றின் தேவைகள், எதிர்பார்ப்புகள், வசதிகள், தொடர்புகள், சவால்கள் என்பவை குறித்த சரியான அறி

வாக அது அமைந்திருப்பதும் அவசியமாகும். இந்நோக்கங்களைச் சாதிக்காத எந்த அறிவியல் கட்டமைப்பும் சரியான இஸ்லாமியக் கட்டமைப்பாகவோ முறைமையாகவோ கருதப்பட மாட்டாது. இஸ்லாத்தின் தூது மற்றும் மனிதனின் பிரதிநிதித்துவப் பொறுப்பு என்ற தராசில் அதற்கு எந்தப் பெறுமானமும் இருக்காது.

அவ்வாறே, நுணுக்கமான புரிதல், ஆரோக்கியமான அறிவு, நியம மான ஆற்றுகை என்பவற்றை மிகச் சிறந்த முறையில் முஸ்லிம் பகுத்தறிவுக்குச் சாத்தியப் படுத்தாத எந்த (அறிவியல்-சிந்தனா-கலா சார) கட்டுருவாக்கமும் அறிவுக்கும் சிந்தனைக்கும் வாழ்வுக்குமான இஸ்லாமிய முறைமையாகவோ கட்டுருவாக்கமாகவோ அமைய முடியாது. துறை சார்ந்தும் வழிமுறை சார்ந்தும் இவ்வாறான முழுமைப் பண்பைக் கொண்டிராத முறையியலால் பின்வரும் வச னத்தில் மெச்சப்படும் அளவுக்கு பொறுப்பை நிறைவேற்றவோ, பிரதிநிதித்துவப் பணியைக் கட்டியெழுப்பவோ முடியாது:

''மனிதர்களுக்காக வெளிப்படுத்தப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்: நன்மையை ஏவுகிறீர்கள்; தீமையைத் தடுக்கிறீர்கள்; அல்லாஹ்வை விசுவாசிக்கிறீர்கள்''.(3:110)

நேர்வழி நடந்த ஃகலீபாக்களின் அழகிய புரிதலும் முழுமைப் பண்பு கொண்ட அவர்களது முறைமையும் அரசியலிலும் ஆட்சி யொழுங்கிலும் கட்டுருவாக்கப் பணியிலும் இஜ்திஹாதுக்கான பல வாயில்களை அவர்களுக்குத் திறந்து விட்டிருந்தமைக்கு வரலாறு சான்று பகர்கிறது. இத்தனைக்கும் அவர்கள் தூதுத்துவக் காலத்துக்கு மிக நெருக்கமாக வாழ்ந்தவர்கள்; சமகாலச் சவால்களுக்கு முகம் கொடுப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தவர்கள்; நாகரிக-கட்டு மானப் பணிகளுக்கான குறைந்தளவு நிறுவன வசதிகளையே கொண்டிருந்தவர்கள்.

அந்த வகையில், ஆரம்ப கால முஸ்லிம்களது முறையியலையும் பகுத்தறிவுத் தளங்களையும் நாம் நன்கு புரிந்து கொள்வது அவசியம். ஆற்றுகையிலும், புத்தாக்கத்திலும், இஜ்திஹாதிலும் அவர்களது சக்தி மூலங்களாக இருந்தவை எவையென்றும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நிறுவன ரீதியான கொள்கைகளை விருத்தி செய்வதில் அவர்கள் கைக்கொண்ட வழிமுறைகளையும், இலக்குகளை சாதித்துக் கொள்வதில் அவை எவ்வாறு வெற்றியடைந்தன என்பதையும் நாம் கண்டறிய வேண்டும்.

தாபிஈன்களின் வழிவந்த சிந்தனையாளர்களும் அழைப்பாளர்களும் அறிஞர்களும் -அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்கியிருந்த போதிலும்- வஹீ மற்றும் தூதுத்துவ வசனங்களை அழிவிலிருந்தும் திரிபிலிருந்தும் பாதுகாக்கும் இயலுமையைப் பெற்றிருந்தார்கள். அப்பணி எவ்வளவு முழுமையாக நடந்தேறியது என்பதற்கு அல்-குர்ஆன் மற்றும் அஸ்-ஸுன்னா தொடர்பான ஷரீஆ கற்கைகளே சிறந்த சான்றாகும். ஆயினும் மறுபுறத்தில், அரசியல், பொருளியல், சமூகவியல், கல்வி, அறிவியல், கலை போன்ற துறைகளில் இஜ்திஹாத் சார்ந்த அறிவுக் கலைகள் அவர்களிடம் குறிப்பிடத் தக்களவு தோன்றியிருக்கவில்லை. பின்வந்த இஸ்லாமிய சிந்தனையிலும் அவை தொடர்பான ஆய்வுகள் தோன்றவில்லை. இஸ்லாமிய ஃகிலாபா அரசு சரிவுற்றமையும், சிந்தனையாளர்கள் ஒதுங்கிப் போனமையும், இஸ்லாத்துக்குப் புறம்பான மௌட்டீகங்களதும் வெறியுணர்வுகளதும் கொள்கைகளதும் நாகரிகங்களதும் எச்சசொச்சப் பேராசைகள் ஆட்சி பீடங்களை ஆக்கிரமித்தமையுமே இதற்குக் காரணங்களாகும். அந்த வகையில், இஸ்லாமிய சிந்தனைப் பரப்பில் இஸ்லாமிய நோக்கினடியான அரசியல், பொருளாதார, சமூகவியல் கலைகளோ ஆய்வுகளோ -சரியான அறிவியல் அர்த்தத்தில்- தோன்றவில்லை என்றே கூறல் வேண்டும். அவ்வாறே, வாழ்வை யதார்த்தமாக நோக்குவதற்கு அவசியமான பரிபூரண, முறைவழிப்பட்ட சாதனங்களை -இஸ்லாமிய அதியுயர் இலக்குகளுக்கும் நோக்கங்களுக்கும் இயைபான வகையில்- வளர்த்தெடுக்கவும் இஸ்லாமிய சிந்தனையால் முடியாமற் போனது.

இஸ்லாமிய இலக்குகளைச் சாதிப்பதற்கு அவசியமான அறிவியல் முறைமை என்ற செயற்களத்தில் இஸ்லாமிய சிந்தனையானது இன்று வரை ஆழ்ந்து செல்லவில்லை. மாபெரும் முறைமை சார் கோட்பாடுகளைப் பதிவு செய்தல் என்ற கட்டத்திலேயே அது இன்னும் உள்ளது. ஆனால் ஆரம்ப முஸ்லிம்கள் தமது பார்வைகளிலும் அறிவு சார் முயற்சிகளிலும் அக்கொள்கைகளையே வழிகாட்டியாகக் கொண்டிருந்தனர். நாம் இன்று இரண்டாம் நிலை மூலாதாரங்கள் என அழைப்பது அவற்றைத்தான். மஸ்லஹா முர்ஸலா, ஸத்து தரீஆ, உர்ஃபு, இஸ்திஹ்ஸான், இஸ்திஸ்ஹாப் என்பன அவற்றுள் சிலவாகும்.

முன்னைய அறிஞர்களது சிந்தனா முயற்சிகள் வசனம் (Text) குறித்தே பெரிதும் கவனம் செலுத்தின. வசனம் பற்றிய விவரணம்,

வசனத்தை நியமப்படுத்தல், ஆதாரப்படுத்துதல், அதனுடன் தொடர்பான அறிவுக் கலைகளை உருவாக்குதல் என்ற அளவிலேயே அம்முயற்சிகள் அமைந்திருந்தன. அந்த வகையிலேயே அல்-குர்ஆனியக் கலைகள், தப்ஸீர், ஹதீஸ், அறிவிப்பு, ஃபிக்ஹு, சட்டங்கள், மொழி, இலக்கியம் முதலான கலைகள் தோன்றின. ஃபிக்ஹு மற்றும் சட்டத்துறைப் பங்களிப்புகள் கூட அறிஞர்களது தனிப்பட்ட இஜ்திஹாத் வழியான அவதானங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தனவே அன்றி, குறிப்பிடத்தக்க முறைமை சார் தகவமைப்புகளின் அடிப்படையில் அவை இடம்பெறவில்லை.

இஸ்லாமிய சிந்தனை உரிய விளைவைத் தந்து, மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்ட வேண்டுமாயின், அதன் முறைமை, அறிவியல் துறைகள், சாதனங்கள் முதலியவை பற்றிய நமது புரிதலை மீள்பார்வைக்கு உட்படுத்துவது அவசியம். ஒவ்வொரு சமூக-வாழ்வியல் கலைகளுக்குமான முறைமைகளை முஸ்லிம் சிந்தனையாளர்கள் கட்டியெழுப்பவும் வேண்டும். அப்போதுதான் அக்கலைகளைக் கட்டியெழுப்புவதில் இஸ்லாமிய சிந்தனை தனது வகிபாகத்தை உரிய வகையில் நிறைவேற்ற முடியும்; ஒழுங்கமைக்கப்பட்ட அறிவியல் அடிப்படைகளின் மீது இயங்க முடியும்; தீர்வுகளையும் ஒழுங்குகளையும் பதிலீடுகளையும் பிறப்பிக்க முடியும்; பெறுபேறுகளையும் சாதனைகளையும் நியமப்படுத்த முடியும்.

இஸ்லாமிய அறிவியல் நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் 'புனித வசனங்கள்' சார்ந்த கலைகளில் மாத்திரம் தம்மை சுருக்கிக் கொண்டு இனியும் பயணிக்க முடியாது. மானிட சமூகவியல் மற்றும் தொழிநுட்பவியல் கலைகளிலிருந்து அவை தொடர்ந்து விலகி நிற்கவும் முடியாது. ஏனெனில், இந்த அனைத்து வேறுபட்ட துறைகளும் மனித வாழ்வினதும் செயற்பாட்டினதும் பல்வேறுபட்ட பக்கங்களாகும். அந்த வகையில், இஸ்லாத்தின் வழிகாட்டலையும் இலக்குகளையும் விட்டு அவை விலகி நிற்க முடியாது.

அறிவுக்கான இஸ்லாமிய முறைமையின் இயங்குதளம் மானிடவியல் துறை முஸ்லிம் அறிஞர்களிடமிருந்தே ஆரம்பிக்கிறது. அந்த வகையில், இது குறித்த பிரக்ஞையை அவர்கள் பெறுவது அவசியம். தமது ஆய்வுத் துறைகளுக்கான அறிவு, வழிகாட்டல் என்பவற்றில் 'வஹீ' பெறும் இடத்தையும் அதன் மூலாதார முக்கியத்துவம் பற்றியும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மறுபுறத்தில், இஸ்லாமிய ‘வஹீ’ சார் அறிஞர்கள் பகுத்தறிவின தும் ‘ஃபித்றா’வினதும் அந்தஸ்தைப் புரிந்து கொள்வதும் அவசியம். அவ்விரண்டிலும் அல்லாஹ் இட்டு வைத்திருக்கும் பண்புகளையும் விதிகளையும் அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில், வஹீயின் அர்த்தங்களைப் புரிந்து, மனித வாழ்வில் அது பெறும் அந்தஸ்தில் வைத்து நோக்குவதற்கு இப்பண்புகளையும் விதிகளை யும் பற்றிய புரிதல் அவசியம். அந்த வகையில், மானிடவியல் மற்றும் தொழிநுட்பவியல் அறிஞர்களால் விருத்தி செய்யப்பட்ட அறிவியல் முறைமை சார்ந்த பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு வழிமுறைகளை வஹீ சார் அறிஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வஹீ தொடர்பான தமது ஆய்வுகளில் வஹீயின் அர்த்தங்களைப் புரிந்து கொள்வதற்கும், ஃபித்றாவுடன் அதற்குள்ள தொடர்பைப் புரிந்து கொள்வதற்கும் (குறித்த துறைக்குப் பொருத்தமான அளவிலும் வடிவத்திலும்) அவற்றை அவர்கள் கையாள வேண்டும். ஏனெனில் அவ்வழிமுறைகள் கட்டுக்கோப்பானவை; பகுப்பாய்வுத் தன்மை கொண்டவை; யதார்த்தமும் நுணுக்கமும் உடையவை.

இதன் மூலமாகத்தான், வஹீ, பகுத்தறிவு, ஃபித்றா, பிரபஞ்சம் என்பவற்றில் அடங்கியிருக்கும் இஸ்லாமிய அறிவு மூலாதாரங்கள் பரஸ்பரம் முழுமை பெறும். இஸ்லாமிய அறிவியல் முறைமை யொன்றைக் கட்டியெழுப்புவதற்கும், தனித்தன்மை வாய்ந்த இஸ்லா மிய அறிவியல் கலைகளை உருவாக்குவதற்குமான வழியும் பிறக்கும்.

இஸ்லாமிய இலக்குகள், வழிகாட்டல்கள், பெறுமானங்கள், சட் டங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்ற பல்வேறு மானிடவியல், தொழிநுட்பவியல் துறைகளில் இஸ்லாமிய சிந்தனையாளன் சில அடிப்படையான முன்னாயத்தங்களைச் செய்து கொள்வது அவசியம். அத்தகைய முன்னாயத்தங்களுக்கு இஸ்லாத்தின் புனித வசனங்கள் வகைப்பாடு செய்யப்படுவது மிக அவசியம். சங்கை மிகு அல்-குர் ஆனிலிருந்து ஆரம்பித்து, தூய ஸுன்னா உட்பட, சரியானதும் ஆழம் மிக்கதுமான நமது அறிவுப் பொக்கிஷங்கள் அனைத்தும் இவ்வாறு வகைப்படுத்தப்பட வேண்டும். அதேபோல், அரசியல் அபிலாஷை களின் அடியாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளும், மூட நம்பிக் கைகள், யூகங்கள், இஸ்றாஈலிய்யாத் என்பவற்றின் தாக்கத்திற்கு உட்பட்ட எழுத்துக்களும் வடிகட்டப்பட்டுத் தூரமாக்கப்பட வேண் டும். (இஸ்லாத்தின் பிற்காலப் பிரிவுகளைச் சேர்ந்த ஆக்கங்களில் இவற்றின் தாக்கம் அதிகமென்பது குறிப்பிடத்தக்கது.) பல்வேறு

வாழ்வியல் துறைகளிலும், தொழிநுட்பத் துறைகளிலும் நவீன இஸ்லாமிய நோக்கு வேண்டி நிற்கின்ற விதிகளின் அடிப்படை யிலேயே இத்தகைய வகைப்படுத்தல் பணி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

முஸ்லிம் ஆய்வாளர்களும் சிந்தனையாளர்களும் கற்றறிவார் களும் நமது முதுசங்கள் உள்ளடக்கி வைத்துள்ள வசனங்களைக் கற்பதற்கும், அவற்றின் வழியே இஸ்லாத்தின் முழு மொத்தக் கோட்பாடுகளையும் இலக்குகளையும் பெறுமானங்களையும் அறிந்து கொள்வதற்கும் இந்த வகைப்படுத்தல் அத்தியாவசியமானது. அப்போதுதான் அவற்றின் ஒளியில் அவர்கள் தங்களது பல்வேறு பட்ட துறைகளில் நிகழ் யாதார்த்தத்தின் தேவைகளுக்கும் நவீன சவால்களுக்கும் ஏற்ப புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள முன்வரு வார்கள்.

பல்வேறு துறைகளிலும் அறிவியல் கலைகளிலும் காணப்படு கின்ற அடிப்படைகளும் பூர்வாங்கப் பணிகளும் இஸ்லாமிய நோக் கையே பிரதிபலிக்கின்றன. இஸ்லாத்தின் ஆக்க சக்தியையும் தனித் துவத்தையும் அவை எடுத்துக் காட்டுகின்றன. எனவே, இஸ்லாமிய சிந்தனையாளர்கள் அவற்றை தொடர்ந்து கட்டியெழுப்ப வேண்டும். சமகால இஸ்லாமிய சிந்தனை எதிர்கொள்ளும் சவால்களை துணிச்ச லோடும் வினைமையோடும் எதிர்கொள்வதற்கு அது அவசியமாகும். முஸ்லிம் சிந்தனை என்பது வஹீயிலிருந்தும் தெய்வீகத் தூதிலிருந்தும் பெறப்பட்ட இஸ்லாமிய இலக்குகளையும் பெறுமானங்களையும் பற்றிப் பிடித்திருத்தலையே குறிக்கிறது. ஒரு முஸ்லிம் இந்த இஸ் லாமிய நோக்கினதும், பெறுமானங்களதும், கருத்தாக்கங்களதும் பெறுமதியை நன்கு உணர்ந்தவனாகவும், அவற்றினால் கௌரவம் அடைபவனாகவுமே இருப்பான்.

ஆயினும், இஸ்லாமிய உலகின் யதார்த்தமும், அதன் பிந்திய வரலாறும் அதனை கஷ்டத்திலும் சங்கடத்திலுமே ஆழ்த்தியிருக் கின்றன. இன்று இஸ்லாமிய சிந்தனையிலும் ஆய்வுக் கலைகளிலும் காணப்படுபவை இஸ்லாமிய உலகின் தேவைகளுக்கும் சவால் களுக்கும் போதுமானவையாக இல்லை. மட்டுமன்றி, இஸ்லாமிய சிந்தனையின் இன்றைய வீழ்ச்சி நிலையானது இன்னுமின்னும் குழப்பமும் சங்கடமும் பிரிவினையும் அதிகரிக்கவே காரணமாகி யுள்ளது. மாற்றீடுகளற்ற, மிகப் பொதுவான, ஸ்திரமற்ற பார்வை

யொன்றுக்கும், குழப்பமடைந்த, பலவீனமான, இறுகிய சிந்தனை யொன்றுக்கும் மத்தியில் அது தற்போது தடுமாறிக் கொண்டிருக்கி றது. அடுத்தவர்களின் சிந்தனையிலும் உற்பத்தியிலும் தங்கி நிற்ப தையும், கண்மூடித் தனமாக அவர்களைப் பின்பற்றுவதையும் தவிர அதற்கு வேறு வழியில்லை.

முஸ்லிம் சிந்தனையாளர்களும் அறிஞர்களும் இஸ்லாமிய வச னங்களை, குறிப்பாக நபியவர்களது ஸுன்னா சார்ந்த வசனங்களை நன்கு ஆராய்ந்து, வடிவத்தாலும் உள்ளடக்கத்தாலும் 'ஸஹீஹ்' ஆன வற்றை இலகுவான வகைப்பாட்டினூடாக முன்வைக்க வேண்டும். இஸ்றாஈலிய்யாத், இடைச் செருகல்கள் என்பவற்றிலிருந்து அவற்றை சுத்தப்படுத்த வேண்டும். அல்-குர்ஆனுக்கும், இஸ்லாத்தின் ஆன்மா வுக்கும், இறைத்தூதர் (ஸல்) அவர்களது செயற்பாட்டுக்கும் மாறாக ஸுன்னாவினுள் நுழைந்த அனைத்தும் ஓரங்கட்டப்பட வேண்டும். நவீன கல்வி முறையின் ஆய்வுப் புதிர்களிலிருந்தும், வெற்று வளையங்களிலிருந்தும் கூட அவை வெளியே கொண்டுவரப்பட வேண்டும். ஏனெனில், இத்தகைய வெற்று ஆய்வுகளும் கோட் பாட்டுப் புதிர்களும் -நுணுக்கமான துறை சாராத- மாணவர்களுக்கு முன்னால் இஸ்லாமிய வசனங்களை பாதரசப் பதார்த்தம் போன்று ஆக்கி விடுகின்றன. சாளரக் கண்ணாடியில் வழிந்தோடும் நீர் போல் அவை கைக்கு அகப்படாமலேயே சென்று விடுகின்றன. தோல்வி மனப்பான்மையையும் இயலாமையையும் குறையறிவையும் மட் டுமே அவை விட்டுச் செல்கின்றன.

இஸ்லாமிய வசனங்கள் இவ்வாறு வடிவத்திலும் உள்ளடக்கத் திலும் தெளிவான முறைமையொன்றின் மூலமாக வகைப்படுத்தப் பட்டு, நியமப் படுத்தப்பட்டு, தூய்மைப் படுத்தப்பட்டு முழுமை யான அமைப்பில் முன்வைக்கப்படுவதோடு மற்றொரு பணியும் மேற்கொள்ளப்பட வேண்டும். குறித்த வசனங்களை விடய வாரி யான, வரலாற்று வரன்முறை அடிப்படையிலான ஆய்வுகளின் வழியாக முன்வைப்பதே அப்பணியாகும். குறித்த வசனங்கள் இறங் கிய தூதுத்துவக் காலம், சூழ்நிலைகள், சமூக-நாகரிகச் சூழமைவுகள், அவற்றுக்கான ஆரம்ப எதிர்வினைகள், ஆரம்ப முஸ்லிம்களின் முயற்சிகளால் விளைந்த பெறுபேறுகள் முதலிய அனைத்து அம்சங் களையும் பற்றிய ஆய்வுகளாக அவை அமைந்திருக்க வேண்டும்.

இஸ்லாமிய வசனங்கள் பற்றிய தெளிவு, அதிலும் குறிப்பாக ஸுன்னாவின் வசனங்கள் மற்றும் முதல் முஸ்லிம் தலைமுறையின்

வாழ்வியல் பற்றிய தெளிவு, அவை பற்றிய முழுமைத்துவ நோக்கு, வரலாற்றுப் பின்புல அறிவு முதலிய அனைத்தும் இஸ்லாமிய வசனங்களைப் புரிந்து கொள்வதற்கு அவசியமான சாதனங்களாகும். அவற்றின் மூலமாகவே குறித்த வசனங்களின் நோக்கங்களும் அடைவுகளும் புரிந்து கொள்ளப்பட முடியும். மட்டுமன்றி, அரை குறைப் புரிதலால் ஏற்படும் தவறுகளையும், 'அறிவியல் மௌட்டீ கத்தின்' குதர்க்கங்களையும் கூட அவற்றினாலேயே தடுக்க முடியும்.

இந்த வகைப்படுத்தல், இலகுபடுத்தல், நியமப்படுத்தல் என்பன ஒவ்வொரு துறைக்குமான இஸ்லாமிய அடிப்படைகளைக் கண்ட டைந்து கட்டியெழுப்புவதற்கு அத்தியாவசியமான ஆரம்பக் கட்டங் களாகும். அவை நிறைவேறிய பிறகே முஸ்லிம் பகுத்தறிவானது -இஸ்லாமியத் தூதின் இலக்குகளைச் சாதிக்கும் வகையில்- தனது இயலுமைகளதும் சவால்களதும் ஒளியில் இஸ்லாமிய நாகரிகக் கட்டு மானத்தை நோக்கி உத்வேகத்துடன் பயணிக்க முடியும்.

இஸ்லாமிய அறிவும் சிந்தனையும் இவ்வாறான நிலையில் இருக்கும் போது, இஸ்லாமிய அனுபவம் பற்றிய அறிவோ தெளிவோ அற்ற பார்வையாளர்களை நாம் குற்றம் சொல்ல முடியாது. இஸ்லாம் பற்றிய சரியான அறிவற்ற அவர்கள் அந்த இஸ்லாத்தை மூட நம்பிக்கைகளும் கோமாளித்தனங்களும் மௌட்டீகங்களும் நிறைந்த மேற்குலக மத அனுபவங்களுடன் இணைத்து நோக்கவே முற்படுவர். அதன் காரணமாக தவறான பொருள்கோடலுக்கும் வியாக்கியானங் களுக்கும் சென்று, சரியான பாதையைத் தவறவும் விட்டு விடுவர்.

இஸ்லாமிய வசனங்கள் தொடர்பான சிறப்புத் துறை அறிவைக் கொண்டிராத படித்த வர்க்கத்துக்கு (அவர்கள் முஸ்லிம்களாயினும் முஸ்லிம்கள் அல்லாதவர்களாயினும்) அவ்வசனங்களை உள்ளடக்கிய நூல்களில் தேவையான வழிகாட்டலோ கட்டுச் சாதமோ கிடைக்காத போது அவற்றில் எந்த ஈர்ப்பும் ஏற்படுவதில்லை. அதனால்தான், பல உத்வேகமிக்க படித்த முஸ்லிம்களால் கூட வினைமை மிக்க, புத்தாக்கச் சிந்தனை கொண்ட இஸ்லாமிய அறிவாய்வுப் படைப் புக்களை வழங்க முடியாதுள்ளது. உம்மா பயன்பெறவும், அதன் நாகரிகப் பங்களிப்பு வெற்றி பெறவும் அவசியமான கருத்துக்களை யும் அசலான மாற்றீடுகளையும் அவர்களால் முன்வைக்க முடி யாதிருப்பதும் அதனால்தான்.

முழுமைத்தன்மை வாய்ந்த இஸ்லாத்தை முன்வைக்க நாம் விரும்பு வதாயின், ஒவ்வொரு துறைக்குமான முறைவழிப்பட்ட இஸ்லாமிய

அறிவியல் முன்னேற்பாடுகளை முஸ்லிம் கற்றறிவாளர்களும் சிந்தனையாளர்களும் ஆரம்பிக்க வேணடும். அவ்வாறே, ஏலவே நமது கையிலுள்ள அறிவுகளும் அறிவியற் கலைகளும் என்ன என்பதை நுணுக்கமாகப் பரிசீலித்து, சரியானதையும் பயனுள்ளதையும் வடிகட்டி எடுக்க வேண்டும். அதன் பிறகுதான் நமது முயற்சிகள் -இறை நாட்டப்படி- முழுமையானவையாகவும் மேலானவையாகவும் அசலானவையாகவும் இருக்க நாம் எதிர்பார்க்க முடியும்.

சமகால மேற்குலக அறிவியலாளர்களும், அவர்களைப் பின்பற்றுகின்ற மதச் சார்பற்ற முஸ்லிம்களும் இஸ்லாத்தையும் பிற சமயங்களையும் ஒரே தராசில் வைத்தே நிறுக்கின்றனர். இஸ்லாம் உட்பட எந்த மதமும் மனிதனின் வாழ்வொழுங்குடனோ, சமூகத்தை வழி நடாத்தும் கொள்கைகளுடனோ எவ்வகையிலும் சம்பந்தப்படக் கூடாது என அவர்கள் கூறுகின்றனர். ஏனெனில் அவர்களது அபிப்பிராயப்படி, இம்மதங்கள் அனைத்துமே வரலாற்றுச் சிந்தனைகளாகவும், பௌராணிகக் கதைகளாகவும் அவ்வக்கால வாழ்க்கையுடன் தொடர்புபட்டு வந்தவையாகும். எனவே அவை தனிப்பட்ட அனுஷ்டானங்களோடும் கிரியைகளோடும் மாத்திரமே மட்டுப்பட்டிருக்க வேண்டும்.

சிலபோது ஏனைய மதங்களின் நம்பிக்கைகளிலும் புனித நூல்களிலும் காணப்படும் புனைவுகள், திரிபுகள், மௌட்டீகங்கள் என்பன மதச்சார்பற்ற விமர்சகர்களின் குற்றச்சாட்டை உண்மைப்படுத்துவன போன்று அமைந்திருந்தாலும், இஸ்லாம் மார்க்கத்துக்கு அது எவ்வகையிலும் பொருந்தாது.

எவ்வாறாயினும், இஸ்லாமியவாதிகள் தமது பண்டத்தை முன்வைக்கும் முறையானது நவீன அறிவியல் வட்டாரங்களை இஸ்லாத்தின் உண்மை நிலையை நோக்கித் திரும்பச் செய்யும் வகையில் அமையவில்லை என்பது இங்கு மறுக்க முடியாதது. இஸ்லாத்துக்கும் பிறமதங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன என்று அவர்களை கவனிக்கச் செய்வதாக அம்முன்வைப்பு அமையவில்லை. இஸ்லாத்தின் தூது, அதன் உயர்வு, தனித்துவம் என்பவை பற்றிய விசுவாசத்தை வெறுமனே வலியுறுத்துவது மாத்திரம் இஸ்லாம் பற்றிய பார்வையை தெளிவு படுத்துவதற்கும், இஸ்லாத்தின் வழங்கு திறன் பற்றிய திருப்தி நிலையை ஏற்படுத்துவதற்கும் போதுமானதல்ல.

இஸ்லாமிய அறிவைக் கட்டியெழுப்புவதற்கான முறைவழிப்பட்ட அறிவியல் யத்தனங்கள் மூலமாகத்தான் இந்த உயர் இலக்கு

எட்டப்பட முடியும். இஸ்லாமிய வசனங்களைத் தாங்கி நிற்கும் பனுவல்கள் தூய்மைப்படுத்தப்பட்டு, அவற்றின் உள்ளடக்கம் வர லாற்று வரன்முறையிலும் மொழி அடிப்படையிலும் மீளொழுங்கு படுத்தப்பட வேண்டும். முழுமைத்துவ நோக்கிலும் தெளிவாகவும் நியமப்படுத்தப் படுவதன் மூலமாகவே அவற்றையும் அவை தரும் அர்த்தங்களையும் புரிந்து கொள்வது இலகுவாக மாறும். அவற்றி லிருந்து பல்வேறு வாழ்வியல் துறைகளுக்கும் அறிவியல் துறை களுக்குமான அடிப்படை அம்சங்களை சாரமாக வடித்தெடுப்பதும் ஆய்வாளர்களுக்குச் சாத்தியமாகும்.

பின்னர், அவ்வசனங்களும் அவற்றிலிருந்து பெறப்படும் அடிப் படைகளும் ஆய்வு, பரிசோதனை, ஒப்பீடு முதலிய செயற்பாடு களுக்கு உட்படுத்தப்படும். அதன் மூலமாக சிந்தனைகள் உயிர்ப்பு மிக்க யதார்த்தமாக மாற்றப்பட்டு, சமூக-நாகரிக ஒழுங்குகளின் மீது செயலேற்றம் பெறும். அந்நிலையில், உணர்ச்சி பூர்வமான வெற்றுக் கோஷங்கள் பின்தள்ளப்பட்டு, புத்தாக்கம் நிறைந்த இஸ்லாமிய ஆற்றுகையே இறுதி வார்த்தையாகவும் தெளிவான சான்றாகவும் இடம்பிடிக்கும்.

''விசுவாசம் கொண்டவர்களே, அல்லாஹ்வும் தூதரும் உங்க ளுக்குப் புத்துயிரளிக்க உங்களை அழைத்தால் அவர்களது அழைப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்''. *(8:24)*

''அனைத்துக்கும் விளக்கமாகவும், முஸ்லிம்களுக்கு நேர்வழி யாகவும் அருளாகவும் நற்செய்தியாகவுமே நாம் உம்மீது வேதத்தை இறக்கினோம்''. *(16:89)*

''தனது இலக்கை அடைபவன் முகங்குப்புற விழுந்து செல்ப வனா அல்லது நேரான பாதையில் சீராகச் செல்பவனா?'' *(67:22)*

''எல்லா மார்க்கங்களையும் வெற்றி கொள்ளும் பொருட்டு அவன்தான் தனது தூதருக்கு நேர்வழியையும் சத்திய மார்க்கத் தையும் கொடுத்து அனுப்பி வைத்தான்''. *(61:9)*

''அல்லாஹ்வின் பால் அழைத்து, நற்செயல் புரிந்து, நான் முஸ்லிம்களில் ஒருவன் என்று கூறியவரை விட வார்த்தையால் சிறந்தவர் யார்?'' *(41:33)*

அத்தியாயம் நான்கு

# இஸ்லாமிய முறையியலும், இஸ்லாமிய அறிவியற் கலைகளைக் கட்டியெழுப்ப அவசியமானவையும்

இஸ்லாமிய நாகரிக அறிவியற் கலைகளைக் கட்டியெழுப்புவ தற்கு அவசியமான அடிப்படைகளை நிறைவு செய்யக் கூடிய சில பொதுவான அம்சங்களை இவ்வத்தியாயத்தில் முன்வைக்க விரும்பு கிறோம்.

'அறிவியற் கலைகள்' என்பதன் மூலமாக இங்கு நாம் அனைத்து வகையான அறிவு சார் கலைகளையுமே கருத்திற் கொள்கிறோம். அனைத்து சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைகளும் இப்பிர யோகத்தினுள் அடங்கும். அவ்வாறே அனைத்து தொழிநுட்பவியல் கலைகளும் இதனுள் அடங்கும். இஸ்லாமிய வாழ்வினதும் நாகரி கத்தினதும் சாதனங்களோடு தொடர்புபடும் இக்கலைகள் எல்லா இயற்கையியல், பிரயோகவியல், தொழிநுட்பவியல் கலைகளையும் உள்ளடக்கும்.

'உஸூல்' சார்ந்த இஸ்லாமிய முறையியலானது பல்வேறு வாழ்வியல் துறைகள் பற்றி ஆய்வதற்கான அடிப்படைகளைக் கொண்டிருக்கிறது என ஏலவே நாம் சுட்டிக் காட்டினோம். அந்த வகையில், வாழ்வியல் ஆய்வுக் களங்களில் அறிவியல் கட்டுமானத்தை முறையாக மேற்கொள்வதற்கான பல அடிப்படைகளும் ஆய்வு முன் னேற்பாடுகளும் அதனுள் அடங்கியிருக்கின்றன என்பது உண்மை தான். ஆயினும், இஜ்திஹாதுடன் தொடர்புபட்ட இஸ்லாமிய உஸூல் முறைமைக்கான பொதுக் கொள்கைகளும், ஷரீஆவின் ஒளியில் மனித

விவகாரங்களை பகுத்தறிவு ரீதியாக நோக்குவதற்கான அடிப்படைகளும் கட்டுக்கோப்பான அறிவியற் கலைகளாக மாற்றமடையாமல் வெறும் கொள்கைகளாகவும் பொதுவான அடிப்படைகளாகவும் மாத்திரமே தொடர்ந்தும் இருப்பது கவலைக்குரியதாகும். அப்பொதுவான அடிப்படைகளும் ஏற்பாடுகளும் முறையான திட்டங்களாகவோ, அறிவியல் நோக்கிலான வழிமுறைகளாகவோ, கட்டுக்கோப்பான ஒழுங்குகளாகவோ விருத்தி அடையவில்லை. அதிலும் குறிப்பாக, சமூக-மானிடவியல் துறைகளிலும், அவற்றுடன் தொடர்பான மனித மனவெழுச்சிகள் மற்றும் இயல்புகள் தொடர்பான துறைகளிலும் அந்த அடிப்படைகள் விரிவாக்கம் பெறவில்லை. தீர்வுகளோ பதிலீடுகளோ விரிவான செயற்பாடுகளோ எட்டப்படவுமில்லை. இவ்வாறு ஒழுங்குகளையும், தீர்வுகளையும், பதிலீடுகளையும், நடைமுறைக் கொள்கைகளையும் கட்டமைப்பதற்குத் தேவையான சிந்தனா-அறிவியல் வளத்தையும் விடயதானத்தையும் வழங்காத மிகப் பொதுவான கொள்கைகளோடும் சட்டங்களோடும் மாத்திரம் போதுமாக்கிக் கொள்வது எவ்வகையிலும் ஏற்புடையதன்று. ஏனெனில், அத்தகைய பொதுவான கொள்கைகளின் தொகுப்பினால் மாத்திரம் முஸ்லிம் சிந்தைக்கு புத்தாக்கத் திறனையோ அறிவியல் ரீதியாக ஒப்புமை (Analogy) செய்யும் ஆற்றலையோ வழங்கி விட முடியாது. ஒவ்வொரு வாழ்வியல் துறைக்குமான சாதனங்கள், வசதிகள், பொறுப்புகள் என்பவற்றை வரையறுத்துத் தொகுப்பதற்கான இயலுமையையும் அதனால் வழங்கிட முடியாது.

சமூக-மானிடவியல் கலைகளையும் ஆய்வுகளையும் சான்றாதாரப்படுத்துவதன் அவசியம் பற்றியும், இயற்பியல் மற்றும் தொழிநுட்பவியல் கலைகளில் இஸ்லாமிய முறையியலை சான்றாதாரப்படுத்துவதன் அவசியம் பற்றியும் முன்னர் நாம் குறிப்பிட்ட கருத்தை உறுதிப்படுத்துவதாக இது உள்ளது. ஏனெனில், இத்தகைய செயற்பாட்டின் மூலமாகவே பௌதீகவியற் கலைகள் சமயம் சார் கலைகளோடு இணைந்து முழுமையான அணுகுமுறையொன்றை உருவாக்கும் சாத்தியம் ஏற்படும். அந்த அணுகுமுறை ஒருபுறத்தில் வஹீயின் வழிகாட்டலுடன் கூடிய அறிவை முஸ்லிமுக்கு வழங்கும்; மறுபுறத்தில், பகுத்தறிவு, ஃபித்றாவின் இயல்புகள் என்பவற்றை உணர்ந்து செயலாற்றும் ஆற்றலை வழங்கும்.

அந்தவகையில், இவ்வாய்வில் நாம் வாழ்வியலோடு தொடர்பான அறிவாய்வுக் கலைகளை சான்றாதாரப்படுத்துகின்ற சில எட்டுக்களை

எடுத்து வைக்க விரும்புகிறோம். அக்கலைகளையும் அவை வேண்டி நிற்கும் அம்சங்களையும் இஸ்லாமிய மயப்படுத்துவதற்கு அவசிய மான ஆரம்ப நிலைத் திட்டம் குறித்தும் ஆராயவுள்ளோம்.

### *1) இஸ்லாமிய வசனங்களை வகைப்பாடு செய்தல்:*

இஸ்லாமிய வசனங்கள் முஸ்லிம் ஆய்வாளர்களால் புரிந்து கொள்ளப்படும் வகையிலும், அறிவியல் பூர்வமாக கையாளத்தக்க விதத்திலும் எளிமையான வடிவத்தில் முன்வைக்கப்பட வேண்டும். அப்போதுதான், அறிவை இஸ்லாமிய மயப்படுத்தும் செயற்பாடும், சமூகவியற் கலைகளை இஸ்லாமியப் மயப்படுத்தும் செயற்பாடும் சாத்தியமாகும்.

இஸ்லாமிய வசனங்களை வகை வேறாக்கம் செய்யும் விடயத்தில், விடய வாரியாக அவற்றை மீளொழுங்கு செய்வது மாத்திரமன்றி, பல்வேறு நோக்கங்களாலும் மனிதக் குறைபாடுகளாலும் அவற்றில் சேர்ந்திருக்கும் மாசுகளிலிருந்தும் அவை தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என முன்னர் கூறினோம்.

வசனங்களை -குறிப்பாக ஸுன்னாவின் வசனங்களை- வகைப் படுத்தும் போது, வரலாற்று ரீதியாக அணுகும் கல்வியியலாளர் களுக்குரிய குறியீடுகள், நுணுக்கங்கள் முதலியன தவிர்க்கப்பட வேண்டும். பொதுவான ஆய்வாளர்களும் கற்றறிவாளர்களும் கூட அணுகிப் பயனடையும் வகையிலும், பயன்பாட்டு முறையை அறிந்து கொள்ளத்தக்க விதத்திலும், எவ்வளவு தூரம் ஆதாரபூர்வமானவை எனப் புரிந்து கொள்ள முடியுமான முறையிலும் அவை இலகுவாக முன்வைக்கப்படுவது அவசியம்.

இஸ்லாமிய வசனங்களை நன்கு விளங்கிக் கொள்வதற்கு, அவை பற்றிய வரலாற்று மற்றும் மொழியியல் ஆய்வுகளும் விளக்கவுரை களும் கூட முன்வைக்கப்பட வேண்டும். ஏனெனில், அவைதான் குறித்த வசனங்களையும் அவற்றின் பின்னணியையும் உரிய வடி வத்தில் தெளிவு படுத்தக் கூடியவையாகும். மட்டுமன்றி, வசனங் களின் உச்ச பட்ச நோக்கங்களையும் இலக்குகளையும் அறிந்து கொள்ளவும் அவை ஆய்வாளருக்கு உதவும். வசனங்கள் உட் பொதிந்திருக்கும் கொள்கைகள், பெறுமானங்கள், கருத்தாக்கங்கள் என்பவற்றையும், மனிதனோடும் அவன் சார்ந்த சமூகத்தோடும் அவை கொண்டிருக்கும் தொடர்புகளையும் அறிவதற்குக் கூட அவை உதவும்.

குறித்த வசனங்கள் கூறப்பட்ட கால-இட வர்த்தமானங்களைப் புரிந்து, வேறுபட்ட கால-இடச் சூழமைவுகளில் அவற்றை எப்படிப் பிரயோகிப்பது என்ற அறிவையும் அது தரும். இத்தகைய தயார்படுத்தலின் மூலமாக இஸ்லாமிய வசனங்கள் அங்குமிங்கும் சிதறிக் கிடக்கும் வரல்லாற்றுத் துணுக்குகளாக அன்றி, தெளிவான பொருளும் விளைவும் கொண்ட உயிர்ப் பிம்பங்களாக மாற்றமடையும்.

அவ்வாறே, இந்த ஆய்வுகள் அனைத்தும் அறிவியல் பூர்வமாகவும், ஆதாரபூர்வமான முறைமையினூடாகவும் இடம்பெறுவது அவசியமாகும். அப்போதுதான் வசனங்களும் அவற்றுக்கான விளக்கங்களும் ஒன்றோடொன்று கலப்பது தவிர்க்கப்படும். அறிவியல் ரீதியாக அல்லது வரலாற்று ரீதியாக அல்லது மொழியியல் ரீதியாக திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்படாத விடயங்கள் திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்பட்டவை போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் நிலையும் தவிர்க்கப்படும். இத்தகைய அறிவியல் அணுகுமுறையினூடாக வசனங்களின் அர்த்தங்களும் விளக்கங்களும் பின்னணியும் தெளிவாகத் தெரிந்து விடும். அவ்வாறு முழுமையான விளக்கம் கொடுக்கப்பட முடியாத சில வசனங்கள் நபியவர்களது முழுமொத்த ஸீறாவுக்கு அமைவாகவும், ஆரம்ப முஸ்லிம்களது வரலாற்றுக்கு அமைவாகவும், இஸ்லாமியத் தூதின் உச்ச பட்ச இலக்குகளுக்கு அமைவாகவும் பொதுவானதொரு விளக்கத்துடன் விட்டு வைக்கப்படுவதே சிறந்ததாகும்.

மேலும், விடயவாரியாக ஒழுங்குபடுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட இவ்வசனங்கள் வினைமையும் ஆற்றலும் கொண்ட அறிஞர்களாலும் அறிவியல் நிறுவனங்களாலும் மட்டுமே வெளியிடப்பட வேண்டும். அப்போதுதான் அவை தமக்குரிய அறிவியல் நம்பகத் தன்மையைப் பெறும்.

அறிஞர்களும் ஆய்வாளர்களும் இத்தகைய ஆய்வுகளையும் வெளியீடுகளையும் நேர்நிலையாக (Positive) அணுகுவதும் அவசியமாகும். வினைமையான ஆய்வு முறைமையிலும், விமர்சன ரீதியிலும், விடுபட்டதை இணைத்து முழுமைப்படுத்தும் விதத்திலும் அவர்களது அணுகுமுறை அமைதல் வேண்டும். அதன் மூலமாகத் தான், இஸ்லாமிய வசனங்கள் தொடர்பான இலகுபடுத்தப்பட்ட அடிப்படை மூலாதாரங்கள் உம்மாவுக்கு சித்திக்கும்.

இஸ்லாமிய அறிவாய்வு வட்டாரங்கள் இப்பணிக்கு முன்னுரிமை வழங்குவதோடு, வசனங்களைக் கணிப்பீடு செய்யவும், வகை

வேறாக்கம் செய்யவும் நவீன தொழிநுட்பங்களை விரைந்து பயன் படுத்தவும் வேண்டும். அத்துடன், நமது முன்னோர்களது முயற்சி களிலிருந்து பயன்பெறும் வகையில் அவர்களது அறிவு முதுசங்கள் அனைத்தையும் மீள் அட்டவணைப்படுத்த இத்தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். உம்மாவின் அடையாளத்தையும் நமது சிந்தனை வேர்களையும் இன்னும் ஆழப்படுத்திக் கொள்ள அவை உதவும்.

இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் இவ்விவகா ரத்தை தற்காலத்தின் முதன்மைப் பணிகளுள் ஒன்றாகக் கருதுகிறது. அதற்குப் பங்களிக்கும் வகையில் செயற்பட்டும் வருகிறது. இத் துறையில் ஈடுபாடு கொண்ட தனிநபர்களுக்கும் அமைப்புகளுக்கும் உதவவும் அது தயாராக உள்ளது.

## 2) முழுமைத்தன்மை கொண்ட நாகரிக நோக்கு:

தற்கால முஸ்லிம்கள் சமூக-நாகரிகவியல் துறையில் தங்களது பங்களிப்பை வழங்கும் போது சூன்யத்திலிருந்து அதனை ஆரம்பிக்க வேண்டியதில்லை. ஏனெனில், நாகரிகப் பங்களிப்பில் அவர்களுக் கென்று கீர்த்திமிகு வரலாறொன்று உள்ளது. அதேவேளை, சுற்றி யிருக்கும் சமுதாயங்கள் இத்துறையில் இன்று பல சுற்றுகள் முன் னேறியிருக்கும் நிலையில், இந்நாகரிகப் பந்தயமானது இஸ்லாமிய இருப்புக்கு ஒரு சவாலாக மாறியிருப்பதும் அவதானத்துக்குரியது.

முஸ்லிம்கள் இச்சவாலைப் புரிந்து கொண்டது முதல் பிற சமு தாயங்களது நாகரிக முயற்சிகளை அறிந்து கொள்ளவும், அவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் தொடங்கி விட்டனர். அதன் மூலமாக, தாம் தவற விட்டதை அடைந்து கொள்வதே அவர்களது எதிர்பார்ப்பாக இருந்தது. ஆயினும் -கவலைக்குரிய வகையில்- அவர் களது எதிர்பார்ப்பில் பெரும் பகுதி நிறைவேறவில்லை. தற்கால நாகரிக-வலுப் போட்டியில் பெருமளவு செல்வங்களையும் பிரமாண்ட மான முயற்சிகளையும் அவர்கள் செலவிட்ட போதிலும், அவர் களுக்கும் பிற சமுதாயங்களுக்கும் மத்தியிலான நாகரிக இடைவெளி அதிகரித்த வண்ணமே உள்ளது.

பிற நாகரிகங்களின் அறிவியல், இலக்கிய ஆக்கங்களை மொழி பெயர்க்கும் முயற்சிகளை அதிகரிக்கச் செய்வதனாலோ, கல்வி நிறுவனங்களையும் பல்கலைக்கழகங்களையும் மேலும் மேலும்

நிறுவுவதானாலோ முஸ்லிம்களின் இக்கவலைக்குரிய நிலை பெரி தாக மாறப் போவதில்லை. இஸ்லாமிய மனப்பாங்கும் அதன் முறை யியலும் இன்று அடைந்திருக்கும் பலவீன நிலையே இந்நோய்க்கான ஏக காரணமாகும். பகுதியளவான பார்வை, செயல் முனைப்பின் பலவீனம், உளவியல் ரீதியாகவும் நம்பிக்கைக் கோட்பாட்டு ரீதியாகவும் உத்வேகமின்மை என்பன இன்று முஸ்லிம் சிந்தனைப் பாங்கை வெகுவாகப் பாதித்துள்ளன.

இப்பின்னணியில், இஸ்லாமிய சிந்தனைப்பாங்கில் மேற்கொள் ளப்பட வேண்டிய முறைமை சார்ந்த சீர்திருத்தங்களாக முன்னர் நாம் குறிப்பிட்டவற்றுக்கு மேலதிகமாக இன்னொன்றும் செய்யப்பட வேண்டும். மேற்குலக சிந்தனையுடனான இஸ்லாமிய சிந்தனையின் உறவின் போது நவீன சிந்தனை, நாகரிகம், அதன் வரலாறு, பெறு மானங்கள், இலக்குகள் என்பவை பற்றிய முழுமைத்துவ ஆய்வுகள் முஸ்லிம் ஆய்வாளனுக்கும் அவனது சிந்தைக்கும் வழங்கப்பட வேண்டும். அதன் மூலமாகவே நமது கற்றறிவாளர்கள் மேற்குலகின் சிந்தனைச் சுழலில் கலந்து தொலைந்து விடாமல் தங்களை விடு வித்துக் கொள்ள முடியும். அந்தச் சிந்தனையோடு சுயாதீனமாக உறவாடி, அதன் தனித்தன்மைகளைப் புரிந்து கொள்ளவும் அப் போதுதான் அவர்களுக்குச் சாத்தியமாகும். இஸ்லாமிய சிந்தனை கட்டமைந்திருக்கும் அடிப்படைகளைச் சிதைத்து விடாமல் பலமாக நின்று கொண்டே பிற சமூகங்களின் அனுபவங்களிலிருந்து பயன் பெற முடியுமான பாதை அதுதான்.

சிந்தனா-நாகரிகப் பிரமிப்பு நிலை, அதனால் தோன்றும் சோம்பல், செயலின்மை, கண்மூடிப் பின்பற்றல் என்பவற்றுக்கும், பிரக்ஞை பூர்வமாகவும் பயனுள்ள வகையிலும் சிந்தனா-நாகரிகத் தெரிவு களை மேற்கொள்ளல் என்பதற்கும் இடையிலான வேறுபாட்டை நாம் பிரித்தறிதல் வேண்டும். ஏனெனில், பிரக்ஞை பூர்வமான தெரிவின் போது நம்பிக்கைக் கோட்பாடு, அடையாளம், முழுமொத்த அம்சங்கள், இலக்குகள், அடிப்படைகள் என்பனவற்றில் எந்த விட்டுக் கொடுப்போ பேரம் பேசலோ இருக்காது. இருக்கின்ற உள்ளடக் கத்திலும் அறிவியல்-நாகரிகச் சாதனங்களிலும் பயனுள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து, உம்மாவின் தேவைகளுக்கேற்ப சரியான இடத்தில் அவற்றை வைத்துக் கொள்வதே அங்கு நிகழ்வதாகும். அந்த வகையில், இது அறிவுபூர்வமானதும், கட்டுக்கோப்புடன் கூடியதுமான திறந்த நிலையாகும். வரலாறு நெடுக பல்வேறு சமுதாயங்களுக்கிடையில்

நிகழ்ந்த வெற்றிகரமான நாகரிகத் தொடர்பாடலும் இதுதான். வேதக்காரர்களுடனான சிந்தனா-நாகரிகச் சந்திப்பின் போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கும் சமூகத்தினருக்கும் வழங்கிய வழிகாட்டலில் இம்முறைமையைத்தான் காண்கிறோம். மேற்கு சமுதாயங்கள் உட்பட வளர்முக சமுதாயங்கள் அனைத்தும் இஸ்லாமிய சமுதாயத்தோடும் அதன் முன்னைய நாகரிகத்தோடும் கொண்டிருந்த தொடர்பும் இத்தகையதுதான். அதனால்தான் மேற்கு சமூகங்கள் தமது அடையாளத்தையும், நம்பிக்கைகளையும், அடிப்படையான செல்நெறிகளையும் மாற்றிக் கொள்ளாமல் இருந்தன. மட்டுமன்றி, இஸ்லாமிய நம்பிக்கை சார்ந்த எத்தகைய தாக்கத்தையும் அவை தமது  பல்வேறு பிரச்சார, தடுப்பு, கண்காணிப்பு வழிமுறைகளூடாக எதிர்கொண்டன. அத்தகைய தாக்கத்தைத் தவிர்ப்பதற்காக இஸ்லாத்தைப் பற்றியும், அதன் தூதர் பற்றியும், அன்னாரது தோழர்கள் பற்றியும் பல்வேறு பொய்களை இட்டுக்கட்டிப் பரப்பவும் கூட அவை -குறிப்பாக அவற்றின் திருச்சபை நிறுவனங்கள் - தயங்கவில்லை.

சமுதாயங்களுக்கிடையிலான இத்தகைய நாகரிக உறவாடல் பாணியையே ஜப்பான், சீனா, ரஷ்யா போன்ற நவீன முன்னேறிய சமுதாயங்களிலும் நாம் காண்கிறோம். மேற்கு சமுதாயங்கள் கூட இதற்கு விலக்கில்லை. அவை அன்னிய சமுதாயங்களது வசதி வாய்ப்புகளையும் நாகரிக அடைவுகளையும் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் தீவிர ஆர்வம் கொண்டிருந்த போதிலும், தமது நம்பிக்கை மற்றும் சிந்தனை சார்ந்த கருத்தாக்கங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பல்வேறு திட்டங்களையும் கொள்கைகளையும் தடுப்புகளையும் -நேரடியாகவும் மறைமுகமாகவும்- ஏற்படுத்திக் கொள்கின்றன. தமது தேவைகளுக்கும் நிலைமைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் நிறுவனங்களுக்கும் பொருந்தாதவற்றை அவை தவிர்த்து விடுகின்றன.

ஆக - நவீன நாகரிகத்தை சரியாகவும் முழுமையாகவும் புரிந்து கொள்வதும், கட்டுக்கோப்புடன் அதனுடன் உறவாடுவதும் சரியான நாகரிகமொன்றுக்கு அத்தியாவசியமானதாகும். அத்தகைய சரியான புரிதலே பெறுமானங்கள், நம்பிக்கைகள், கொள்கைகள், அடையாளம் என்பவற்றை இழக்காமல் அறிவார்ந்த முறையில் அதிலிருந்து பயனடைவதற்கு வாய்ப்பளிக்கும். மட்டுமன்றி, உம்மாவின் நோக்கங்களையும் உச்சபட்ச இலக்குகளையும் சாத்தியப்படுத்தக் கூடிய சரியான சாதனங்களை அடையாளம் காண்பதும் அத்தகைய புரிதல் மூலமே சாத்தியமாகும்.

அந்த வகையில், நாகரிகப் பயன்பெறுகைக்கான திறந்த நிலை என்பது வரையறையற்ற திறந்த நிலைக்கான அல்லது செயலின் மைக்கான அல்லது கரைந்து போதலுக்கான அல்லது கண்மூடிப் பின்பற்றலுக்கான அழைப்பாக புரிந்து கொள்ளப்படக் கூடாது. ஏனெனில், வரலாறு நமக்கு கற்றுத் தரும் பாடம் அதுவன்று. சமுதாயங்களுக்கிடையிலான தொடர்பின் யாதார்த்தமும் அதுவன்று.

நாகரிக உறவாடல் என்பதன் மூலமாகவும், சீரிய நாகரிகப் பயன் பெறுகை என்பதன் மூலமாகவும் நாடப்படுவது, பிரக்ஞை பூர்வ மான, சுயாதீனத் தன்மையும் தேர்ச்சியும் கொண்ட உறவாடலே ஆகும். அது நிகரானவர்களது இடைத்தொடர்பே அன்றி, பின்பற்று வோரதும் தங்கிநிற்போரதும் இடைத்தொடர்பல்ல. இத்தகைய சரிநிகரான உறவாடலின் மூலமாகவே உலக சமுதாயங்கள் பல அடைவுகளைச் சாதித்திருக்கின்றன.

இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் இக்கட்டப் பணியை ஆரம்பித்து விட்டது. பிற நாகரிக அறிவுப் பணிகளை இன்னுமின்னும் அதிகமாக மொழிபெயர்ப்பதன் மூலமாக அன்றி, மேற்கு நாகரிகம் பற்றியும் மேற்கத்திய சமூகவியல் கலைகள் பற்றியுமான முழுமையான ஆய்வுகளை முஸ்லிம் சிந்தைக்கு வழங்குவதன் மூலமாகவே இப்பணி ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. ஏனெனில், அதன் மூலமாகத்தான் அந்த நாகரிகத்தைப் புரிந்து கொள்வதும், பிரக்ஞை பூர்வமாகவும் சுயாதீனமாகவும் அதனோடு உறவாடுவதும் சாத்தியமாகும்.

இவ்வாய்வுகள் அனைத்தும் மேற்கு நாகரிகம் பற்றியும், அதன் அடிப்படைகள், இலக்குகள், செல்நெறி, தனிப்பண்புகள், சாதனங்கள், பலங்கள், குறைபாடுகள் என்பவை பற்றியுமான முழுமையான நூலொன்றாகத் தொகுக்கப்படும் என நம்புகிறேன். அதன் மூலமாக நவீன இஸ்லாமிய சிந்தனையின் குறைபாடொன்று சீர்செய்யப்பட்டு, அச்சிந்தனையிலுள்ள முறைமையியல் பலவீனமொன்று களையப் படும் எனவும் நம்புகிறேன்.

முக்கியமான இப்பணியை நிறைவேற்றுவதற்கும், தேவையான ஆற்றல்களைத் திரட்டிக் கொண்டு இத்திட்டத்தை சாத்தியப் படுத்துவதற்கும் முஸ்லிம் சிந்தனையாளர்களது ஒத்துழைப்பை இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் எதிர்பார்த்து நிற்கிறது.

### 3. சமூகவியல் கலைகளுக்கான முன்னேற்பாடுகள்:

சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைகள் என்பதன் மூலம், உயிரிகளதும் படைப்புகளதும் இயல்புகளையும் தொடர்புகளையும் பற்றிய முறைவழிப்பட்ட நோக்கே நாடப்படுகிறது. உம்மாவின் யதார்த்தம், இயலுமைகள், அது எதிர்கொள்ளும் சவால்கள் என்ப வற்றை அறிந்து கொள்ள இந்நோக்கு அவசியமானது. உம்மாவின் வாழ்வுக்கு அவசியமான ஒழுங்குகளையும், கொள்கைகளையும், செயற்பாடுகளையும், இஸ்லாமியப் பதிலீடுகளையும் வெளிக் கொண்டு வருகின்ற சிந்தனா முயற்சிகளுக்கும் இது அவசியமானது. இந்நிலையில், வஹீ, தூது, அவற்றின் நோக்கங்கள், உச்சபட்ச இலக்குகள் என்பவற்றையும், மேற்குறித்த சமூக-மானிடவியல் கலை களையும் முறைமைகளையும் பிணைத்து இணக்கப்படுத்துவது எவ்வாறு?

இத்துறைகளில் காணப்படும் இஸ்லாமிய முன்னேற்பாடுகளை யும் அடிப்படைகளையும் வகை வேறாக்கம் செய்வதிலிருந்தே இவ்விணைப்புப் பணி ஆரம்பிக்கப்பட முடியும் என நாம் நம்பு கிறோம். அதன் மூலமாகவே, அவற்றின் சட்டகம் வரையறுக்கப் பட்டு, இலக்குகள் தெளிவுபடுத்தப்பட முடியும். அது நிகழாத போது, மேற்குறித்த கலைகளும் ஆய்வுகளும் வெறும் இலக்கங் களாகவும் அட்டவணைகளாகவும் அவதானங்களாகவும் பகுப்பாய்வு களாகவும் மாறி, இஸ்லாத்திலிருந்தும் உம்மாவின் இலக்கிலிருந்தும் திசைமாறிச் சென்று விடும்.

அறிவியற் கலைகளுக்கு அவசியமான இஸ்லாமிய அடிப்படை களும் முன்னேற்பாடுகளும் இரு வகையானவை. பொதுவான புனித அம்சங்கள் முதலாவது வகையாகும். இஸ்லாத்தின் பொதுவான அடிப்படைகள், மனித வாழ்வொழுங்குகளில் அது கொண்டிருக்கும் பிரதான இலக்குகள் என்பவற்றுடன் அவை தொடர்பு பட்டிருக்கும். முறைவழிப்பட்ட இஸ்லாமிய சிந்தனைச் சட்டகம், அதன் மூலாதா ரங்கள், வழிமுறைகள் என்பவற்றுடன் தொடர்பு பட்டவையாகவும் அவை இருக்கும். இஸ்லாமிய அறிவியல் முயற்சிகளைத் திசைப் படுத்தவும், கண்காணிக்கவும், அவற்றின் விளைவுகளை மதிப்பிட வும் அவை அவசியமாகும்.

இஸ்லாமிய முன்னேற்பாடுகளில் இரண்டாவது வகை வாழ்வு சார்ந்த அறிவியற் கலைகளுடன் தொடர்புபட்டதாகும். அது பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகிறது:

1. சமூகவியல் சார்ந்ததும் சாராததுமான துறைகள் ஒவ்வொன்றுக்குமான அடிப்படைகளும் முன்னாயத்தங்களும்.

2. ஒவ்வொரு துறைக்கும் பிரத்தியேகமான ஃபித்றாவும், யதார்த்தமும், வசதிகளும், தொடர்புகளும்.

3. ஒவ்வொரு துறைக்கும் பிரத்தியேகமான இஸ்லாமிய இலக்குகளும், பெறுமானங்களும், வழிகாட்டல்களும், முறையியல் நியமங்களும்.

4. இத்தகைய இஸ்லாமிய இலக்குகள், பெறுமானங்கள், அடிப்படைகள், நியமங்கள், வழிமுறைகள் என்பவற்றின் ஒளியில் குறித்த அறிவியல் துறை பற்றிய கலந்துரையாடல்.

5. ஒவ்வொரு துறைக்குமான இஸ்லாமிய நோக்கை இஸ்லாம் சாராத கருத்துகளோடும், இலக்குகளோடும், அவற்றின் சமூக-மானிட விளைவுகளோடும் ஒப்பிட்டு விளக்கக் கூடிய பிரதான அறிவியல் விவகாரங்கள்.

இவ்வடிப்படைகளும் முன்னேற்பாடுகளும் இஸ்லாத்தின் தூதையும், வரலாற்றையும், நோக்கையும், அதன் பொதுவான இலக்குகளையும் சார்ந்தவையாக இருப்பினும், எல்லா நிலையிலும் இவை பகுத்தறிவு நோக்கைப் பிரதிபலிக்கும் 'இஜ்திஹாத்' அபிப்பிராயங்களே ஆகும். நாகரிகச் சவால்களுக்கும், அவற்றின் கால-இட வர்த்தமானங்களுக்கும் அமைவாக முன்வைக்கப்படும் இஸ்லாமியப் பதிவீடுகளாக இவை அமைகின்றன. அந்த வகையில், இவற்றின் பெரும்பகுதி கலந்துரையாடலுக்கும், விமர்சனத்துக்கும், திருத்தத்துக்கும், கூட்டல்-குறைத்தலுக்கும் உட்படக்கூடிய உயிர்ப்பு மிக்க இஸ்லாமிய சிந்தனைகளாகும். வஹீ, அதன் அர்த்தங்கள், யதார்த்தம், அதன் மாறிகள், மனித இயல்பு, அதன் இரகசியங்கள், ஆற்றல்கள் முதலியவை பற்றி புதிது புதிதாகத் தோன்றும் கண்ணோட்டங்களின் ஒளியில் இவ்விமர்சனங்களும் திருத்தங்களும் இடம்பெற முடியும்.

காலப்போக்கில், இஸ்லாமிய நோக்கு ஸ்திரமடைந்து, தகவல்கள் இன்னும் தாராளமாகக் கிடைக்கும் போது, இம்முன்னெடுப்புகள் இன்னும் முதிர்ச்சி நிலையை எட்டும். பல்வேறு அறிவியல்களோடும் கலைகளோடும் அவை ஊடுபாவி, எல்லாப் பக்கங்களிலும் தாக்கம் செலுத்தக் கூடியவையாகவும் மாறும். முன்னுரிமை பெறும் அனைத்து அம்சங்களிலும் வடிவத்தாலும், உள்ளடக்கத்தாலும், எண்ணிக்கை

யாலும், முறைமையாலும் இந்தக் தாக்கம் வேறுபட்டு அமையும். இதன் மூலம், சமூகவியல் சார்ந்ததும் சாராததுமான கலைகளின் விளைவுகள் இஸ்லாமியக் கண்ணோட்டத்தினூடாகத் தெளிவாவதுடன், இஸ்லாமிய கருத்தாளுகையின் தனித்தன்மையும் தெளிவாகும். இறுதியில், -அல்லாஹ்வின் உதவியால்- மானிட நாகரிகப் பயணத்தில் இஸ்லாமியப் பங்களிப்பின் வளப்படுத்தல் சார் நல் விளைவுகள் வெளிப்படையாகத் துலங்கும் நிலையும் தோன்றும்.

முஸ்லிம்கள் இஸ்லாமிய சிந்தனையில் முறைவழிப்பட்ட நாகரிக மாற்றமொன்றை ஏற்படுத்தியே ஆக வேண்டியுள்ளது. பகுதியளவான நோக்கிலிருந்தும், முன்னைய அரசியல் மோதல்களின் தாக்கங்களிலிருந்தும் அச்சிந்தனையை அவர்கள் விடுவிக்க வேண்டும். ஏனெனில் அவையே இஸ்லாமிய சிந்தனையை விகாரப்படுத்தின; அதன் ஆய்வு நோக்கை மழுங்கடித்தன; அதன் இயங்கு தளங்களை செயலிழக்கச் செய்தன; யதார்த்த வாழ்வையும் ஃபித்றாவையும் இஸ்லாமியப் பெறுமானங்களோடும் இலக்குகளோடும் இணைப்பதற்கு அச்சிந்தனை கொண்டிருந்த ஆற்றல்களை மழுங்கடித்தன; இஸ்லாமியப் பெறுமானங்களை மானிட யதார்த்தத்தின் மீது உயிர்ப்புடன் இயங்கச் செய்வதற்கான அதன் சக்தியை மட்டுப்படுத்தின; உம்மாவின் சிந்தனா-அரசியல் விரிசலை இல்லாதொழிப்பதற்கான வாய்ப்பை இல்லாமற் செய்தன. அதனால் இஸ்லாமிய ஆளுமையின் உட்கூறுகளிலும் உம்மாவின் கட்டமைப்பிலும் காணப்பட்ட நாகரிகப் புலமும் சமூகப் பரிமாணமும் தூர்ந்து போயின.

எனவே, பரிபூரணமான, முறைவழிப்பட்ட தளங்களை நோக்கி இஸ்லாமிய சிந்தனையை வெளிக்கொண்டு வரும் இயலுமையை முஸ்லிம்கள் பெற வேண்டியது கட்டாயமாகும். தெளிவான முதன்மைப் படுத்தல்களைக் கொண்ட நம்பிக்கைக் கோட்பாட்டை நோக்கி அவர்கள் அதனை வழிநடாத்த வேண்டும். வாழ்வியல், அறிவியல், சமூகவியல் என்பவற்றுடன் தொடர்பான இஜ்திஹாதின் வாயில் அகலத் திறக்கப்பட்டு, உம்மாவின் அங்கத்தவர்களது மனங்களிலும் சிந்தனையிலும் குடிகொண்டிருக்கும் அச்சமும் இயலாமையும் துடைத்தெறியப்பட வேண்டும். குழந்தை வளர்ப்பிலும், நிறுவனங்களையும் ஒழுங்குகளையும் கட்டியெழுப்புவதிலும் புதிய முன்னெடுப்புகள் உயிர்ப்பிக்கப்பட வேண்டும்.

முஸ்லிம்களால் சிந்தனை செய்ய முடியவில்லையெனில், உம்மாவின் வீழ்ச்சி இன்னும் தொடரும்; முஸ்லிம் சமூகங்களது

துன்பம் வளர்ந்து விஸ்வரூபமடையும்; இஸ்லாமிய வரலாற்றின் பிந்திய காலகட்ட முயற்சிகளும் இயக்கங்களும் கண்ட தோல்விகளை விடப் பாரிய தோல்வியை நவீன இஸ்லாமிய முயற்சிகளும் இயக்கங்களும் சந்திக்கும்.

இஸ்லாமிய உலகின் பாலைவனங்களில் பிற்பட்ட காலங்களில் உருவாகிய இஸ்லாமிய இயக்கங்கள் பற்றிய நமது ஆய்வுகள் அவ்வியக்கங்கள் ஏன் உருவாகின என்பதையும், அங்கு கொள்கை யளவிலான வெற்றியை அவை எவ்வாறு கண்டன என்பதையும் விளக்குகின்றன. பாலைவன வாழ்வின் பௌதீக அமைப்பும் தோற்ற மும் இஸ்லாம் தோன்றிய ஆரம்பச் சூழமைவை ஒத்திருந்தமையே அந்த வெற்றிக்குக் காரணம் என அவ்வாய்வுகள் தெளிவுபடுத்து கின்றன. ஆயினும், அதன் பிறகு சிந்தனா ரீதியான, முறைவழிப்பட்ட நாகரிகப் பாய்ச்சலொன்றை நிகழ்த்துவதற்கு அந்த இயக்கங்களால் இயலாமற் போனது. பாரம்பரிய உள்ளடக்கத்தையும், பகுதியளவான முறைமையையும், இஸ்லாத்தின் நாகரிகப் பயணம் பற்றிய வரலாற்று விளக்கமுறைப் புரிதலையும் கொண்டிருந்த அந்த இயக்கங்கள் -ஆரம்பத்தில் அவற்றின் எளிமையான பாலைவனச் சூழலில் வெற்றி யடைந்து ஆட்சியை எட்டிய போதிலும்- இஸ்லாமிய உலகின் நகர்ப் புறங்களைச் சென்றடைந்த போது தோல்வியுற்றன. நகர்ப்புறங்களின் நாகரிகத் தொடர்பாடல்களில் அவை தமது அடையாளத்தை இழந்து கரைந்து போயின. அவை முறையாகப் பயிற்றுவிக்கப்படாமல் நவீன காலச் சவால்களை எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப் பட்டமையே இதற் குக் காரணமாக அமைந்தது. இதனால் அவை முதலில் சிந்தனா ரீதியாகவும் நாகரிக ரீதியாகவும் தோல்வி கண்டன. பின்னர் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் இருப்பிழந்தன.

இஸ்லாமிய உலகின் போக்கை மாற்றுவதற்கும், அதன் சக்தியைப் புதுப்பிப்பதற்குமான முறையான பயிற்சியைப் பெறாமல் அடுத் தடுத்து தோன்றிய இஸ்லாமிய இயக்கங்களும் அரசுகளும் தோல்வி கண்டது கூட இதனால்தான். அவ்வியக்கங்களாலும் அரசுகளாலும் உம்மாவைக் கடைத்தேற்றவோ, இஸ்லாமிய இருப்பில் தேவையான பாய்ச்சலொன்றை ஏற்படுத்தவோ முடியாமல் போனது. ஸனூஸி, மஹ்தீ, ஷாஹ் வலியுள்ளாஹ் போன்ற இமாம்களது இயங்கியல் அனுபவங்களை இப்பகுப்பாய்வின் ஒளியில் கற்பது பயன் மிக்கதாய் அமைய முடியும்.

நவீன இஸ்லாமிய இயக்கங்கள் இஸ்லாமிய நகரங்களில் வெற்றி யடைய வேண்டுமாயின், அவற்றின் சிந்தனா முறைமையிலும் நாக ரிக நோக்கிலும் வேர் நிலையான புத்துயிர்ப்பு முயற்சியொன்று தவிர்க்க முடியாததாகும். அதன் மூலமாகத்தான், உம்மாவின் போராட்டமும் பிரயாசையும் வெறும் உணர்ச்சிக் கொந்தளிப்புடைய அகீதா சார்ந்த யத்தனங்களாக மாத்திரம் மாறுவது தவிர்க்கப்பட முடியும். அத்தகைய உணர்ச்சி மேலிட்ட முயற்சிகளால் சிந்தனா முறைமையொன்றை உருவாக்க முடியாது. சவால்களை எதிர்கொள் வதற்கும், அடையாளத்தைத் துலக்குவதற்கும், உம்மாவினதும் அதன் இளைய தலைமுறையினதும் உளவியல் கட்டமைப்பை சீரமைப்ப தற்கும் தேவையான நாகரிக மாற்றத்தையும் அத்தகைய முயற்சிகளால் ஏற்படுத்த முடியாது. இஸ்லாமிய சமூக நாகரிக நிறுவனங்களையும் அறிவுகளையும் மீளக் கட்டியெழுப்பவும் முடியாது.

முறையியலில் மாற்றம் ஏற்படாவிடில், கட்டுருவாக்க முயற்சிகள் உணர்ச்சிவயப்பாட்டுத் தன்மை கொண்ட வீண் முயற்சிகளாகவே அமையும். அவற்றினால் எப்பயனும் விளையப் போவதில்லை. மட்டுமன்றி, சக்தியையும் வளங்களையும் ஆற்றல்களையும் தொடர் ந்து அழிக்கும் முயற்சிகளாகவே அவை அமையும். உம்மாவுக்கும் ஏனைய முன்னேறிய சமுதாயங்களுக்கும் மத்தியிலான இடைவெளி யும் அவற்றினால் அதிகரிக்கும். இதனால் உம்மா பிராந்தியம் பிராந்தியமாக, சமூகம் சமூகமாக, வளத்துக்கு மேல் வளமாக, அனர்த் தத்துக்கு மேல் அனர்த்தமாக இழப்புகளையே தொடர்ந்து சந்திக்கும். உழைப்புக்கும், ஆற்றுகைக்கும், சவால்களை எதிர்கொள்வதற்குமான சரியான வழிவகைகளை உம்மா மேற்கொள்ளும் நிலை தோன்றும் வரை இத்தோல்விகளும் தொடரும்.

சிந்தனா முறைமையும், சிந்தனைச் சீர்திருத்தமும், உம்மாவின் சிந்தனைப் பாங்கில் ஏற்படுத்தப்பட வேண்டிய நாகரிகப் பாய்ச்சலும் எவ்வளவு முக்கியமானவை என்பதை இவ்விளக்கங்களிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

நமது சன்மார்க்கமும் வரலாறும் தேசங்களும் எவ்வளவு வளம் பெற்றவையாக இருந்த போதிலும், கோணலும் குறைபாடும் கொண்ட சிந்தனா-உளவியல்-நாகரிகக் கட்டமைப்பொன்றின் மீது நாம் தொடர்ந்தும் பயணிப்போமாயின், துன்பம் என்பது தொடர் கதையாகி விடும். இதனை நாம் நேர்மையோடும் பிரக்ஞை பூர்வ மாகவும் புரிந்து கொள்வது அவசியம்.

நேர்மையான சுயவிமர்சனம் என்பது அவ்வளவு இலகுவான தன்று. மட்டுமன்றி, சுயத்தின் கட்டமைப்பிலும் ஆற்றுகையிலும் காணப்படும் குறைபாட்டை நேர்மையாக எதிர்கொள்வதென்பது வேதனை மிக்கதும் கசப்பானதும் ஆகும். ஆயினும், நமக்கு வேறு வழியில்லை. நமக்கு நாமே இதோபதேசம் செய்து கொள்ள வேண் டிய தேவை உள்ளது. உண்மையை அறிந்து, உணர்ச்சிகளை வென்று, நமது ஆற்றல்களையும் சாதனைகளையும் பற்றி நம்மிடமுள்ள மாயை களையும் பெருமைகளையும் களையும் ஆற்றலை அது நமக்குத் தர வேண்டும். அப்போதுதான், நமது இறந்த கால முதுசங்களிலிருந்தும் பாடங்களிலிருந்தும் பயன்பெற்று எதிர்கால நன்மைக்காக அவற் றைப் பிரயோகிக்க முடியும். பூமியில் பிரதிநிதித்துவத்தையும் சீர் திருத்தத்தையும் நன்மையையும் உத்தரவாதப் படுத்தவும் முடியும். அல்லாஹ் பூமியில் மனிதனை படைத்த நோக்கமும் அதுதான்.

இஸ்லாமிய முறைமையியல் விவகாரங்களையும், பல்வேறு அறி வியல் துறைகளுக்கான இஸ்லாமிய நோக்கிலான பொதுவான அடிப்படைகளையும் பற்றிய இவ்வாய்வில், இஸ்லாமிய நோக்கை பிற நவீன நாகரிக நோக்கிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற சில அடிப்படைகளைப் பற்றிக் கலந்துரையாடுவது பொருத்தமாக அமையும். ஏனெனில், அதுவே இஸ்லாமிய உம்மாவின் அறிவியற் பங்களிப்பு அசலானதாகவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கூடியதாகவும் அமையும் என்ற எதிர்பார்ப்பை உருவாக்கும். மட்டு மன்றி, பிறழ்வுற்ற பயணத்தையும் அப்பங்களிப்பு சீரமைக்கும். பிரபஞ்சத்தில் மனிதனையும் மனித இருப்பையும் அழித்து விடப் பார்க்கும் பாரிய அபாயங்களையும் அது தடுக்கும். அந்த அபாயங்கள் மனிதனால் தாக்குப்பிடிக்கவோ கட்டுப்படுத்தவோ முடியாத பாரிய தீமைகள் குறித்தும் அழிவுகள் குறித்தும் எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கின்றன.

மனித இயல்பு பற்றிய முழுமையான இஸ்லாமியக் கருத்தாக்கமே வாழ்வியல் மற்றும் சமூகவியல் சார்ந்த கலைகளில் ஆராய்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்குமான ஆரோக்கியமான தளமொன்றை முன் வைக்கும். அந்த வகையில், நமது கலந்துரையாடல் பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்தவிருக்கிறது:

அ) மானிட-இஸ்லாமிய இருப்பின் பரிமாணங்கள்: பன்மைத் துவமும் முழுமைத்துவமும்.

ஆ) பிரபஞ்ச, வாழ்வொழுங்கின் இலக்கும் நோக்கமும்.

(இ) மனித இயல்புகளிலும், சமூக-மானிடவியல் தொடர்புகளிலும் உள்ள விடயவாரியான (Objective) உண்மையும் பக்கச்சார் பின்மையும்.

## அ) இஸ்லாமிய-மானிட இருப்பின் பரிமாணங்கள்: பன்மைத் துவமும் முழுமைத்துவமும்.

இஸ்லாமிய நோக்கில் மனித இருப்பு என்பது ஒருமுகப்படுத்தப் பட்ட மனிதக் கட்டமைப்பினுள்ளேயான பரிபூரணப் பன்மைத் துவமாகும். இக்கூற்று மிக முக்கியமான முறைமை சார் கருது கோளொன்றைப் பிரதிபலிக்கிறது. இக்கருதுகோள் மனித நடத்தை பற்றிய ஆய்வுகளிலும், பொதுவாக மனிதனை விளங்கிக் கொள் வதிலும், குறிப்பாக முஸ்லிம் மனிதனையும் அவனது உளவியலை யும் அவன் செயற்படும் முறையையும் விளங்கிக் கொள்வதிலும் நீண்ட தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாகும்.

பொதுவாக மதங்களாயினும் சித்தாந்தங்களாயினும் அவை ஒவ் வொன்றும் மனித இருப்பின் ஏதாவதொரு பகுதியின் மீதே பெரும் பாலும் கவனத்தைக் குவித்திருக்கும். ஏனைய பகுதிகளை அவை வேறுபட்ட அளவுகளில் புறக்கணித்திருக்கும். இம்மதங்களும் சித் தாந்தங்களும் எவ்வளவு வெற்றிகளைச் சாதித்த போதிலும், அவற் றின் நிழலில் மனிதன் கலக்கமும் பதட்டமும் கொண்டவனாகவே தொடர்ந்தும் வாழ்கிறான். அகத்தேயும், புறத்தேயும், தனியாளாகவும், சமூகமாகவும் அவன் இடையறாத போராட்டங்களில் உழன்று கொண்டிருக்கிறான். அவற்றைத் தீர்ப்பதற்கு இம்மதங்களிலோ சித் தாத்தங்களிலோ தீர்வுகள் இல்லை.

மேற்குலக தனிமனிதன் சார் சடவாதச் சிந்தனையானது புலன் களின் மீதும், உலக இன்பங்களின் மீதுமே பெரிதும் சார்ந்திருக்கிறது. மனோ இச்சையையும் உடலின்பங்களையுமே அது தெய்வமாகப் பூஜிக்கிறது. மேற்கு நாகரிகம் பல வெற்றிகளைச் சாதித்திருக்கிறது என்பதையும், சடவாத இன்பங்களை தாராளமாக மனிதனுக்கு ஏற் படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆயினும், அதன் நிழலில் மனிதன் தொடர்ந்தும் துன்பப்பட்டுக் கொண்டே இருக்கிறான். உளவியல் மற்றும் சமூகவியல் போராட் டங்களிலும், ஆன்மீக வெறுமையிலும் அவன் உழல்கிறான். இந்த

ஆன்மீக வெறுமை பற்றியும் அதன் தாக்கங்கள் பற்றியுமான முறை யீடுகள் தொடர்ந்து விஸ்வரூபம் எடுத்த வண்ணமே உள்ளன. எந்த ஆய்வுகளாலும் இந்த யதார்த்தத்தை எதிர்கொள்ள முடியவில்லை.

சமூகவியல் சடவாதச் சித்தாந்தமான மார்க்ஸியத்தின் நிலையும் இதுதான். அடக்குமுறைப் பண்பு கொண்ட இச்சித்தாந்தம் மனிதனது சடவாத, பொருளாதாரத் தேவைகளையே முழுமையாகச் சார்ந்திருக் கிறது. இத்தேவைகளை நிறைவேற்றுவதும், மனிதனை அவற்றி லிருந்து விடுவிப்பதுமே மனித இருப்பினதும், வாழ்வில் அவன் மேற்கொள்ளும் உழைப்பினதும் இலட்சியம் என அது கருதுகிறது. ஆயினும், இவ்வாறான சித்தாத்தங்களின் உபயத்தில் கூட மனிதனது நிலை சீரடையவில்லை. மேற்கத்திய மனிதனை விட பதற்றமோ கலக்கமோ குறைந்தவனாக அவன் தெரியவில்லை. தான் மேலாதிக் கம் செலுத்தும் தனிமனிதர்களிலும் சமூகங்களிலும் உள அமைதி யையும் சமூக அமைதியையும் ஏற்படுத்துவதில் மேற்கத்திய சித் தாந்தத்தைப் போலவே இதுவும் தோல்வியடைந்து விட்டது.

தூர கிழக்கு மதங்களோ வாழ்வையும் மனிதனையும் திரிபடைந்த கிறிஸ்தவத்தை விட மோசமாகப் பழிக்கின்றன. உடலையும் அதன் பௌதீகத் தேவைகளையும் அற்பமாகக் கருதுவதே ஆன்மீக விடு தலைக்கும் விரைவான ஆத்ம ஈடேற்றத்துக்குமான பாதையாக அமையும் என அவை போதிக்கின்றன. தமது பின்பற்றாளர்களை அவை உளவியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மிக மோசமான பின்னடைவுக்கு கொண்டு சென்று விட்டன. அதனால்தான், சீனா போன்ற சில சமூகங்கள் தாம் அனுபவித்துக் கொண்டிருந்த துன்பங் களிலிருந்து விடுதலை பெறுவதற்காக சடவாத சித்தாந்தங்களையும் அடக்குமுறை கொண்ட ஆட்சியொழுங்குகளையும் தத்தெடுத்துக் கொண்டன. இது அம்மதங்களிலுள்ள குறைபாட்டை -ஆழ்ந்து கவ னிப்போருக்கு- தெளிவாகப் புரிய வைக்கிறது. இவை சுமத்தும் கஷ்டமான வாழ்வமைப்பிலிருந்தும் இவற்றின் பின்பற்றாளர்கள் எவ்வாறு தூரமாகிச் செல்கின்றனர் என்பதையும் இது விளக்குகிறது.

இஸ்லாமோ (அதன் தீர்க்கமான வஹீயின் வசனங்கள் உறுதிப் படுத்துவது போன்று) மனிதன் என்பவன் ஃபித்றா என்னும் இயல் பும், உடற்கட்டமைப்பும், தேவைகளும் உடையவன் என்ற புரித லுடனேயே அவனை அணுகுகிறது. மனிதனின் இயல்பூக்கங்களை யும், ஆசைகளையும், விருப்பங்களையும் அது ஏற்றுக் கொள்கிறது. ஏனெனில், இவையனைத்தும் அல்லாஹ் மனிதனுக்களித்த அருட்

கொடைகளாகும். இவற்றை அவன் உரிய முறையில் நெறிப்படுத்திப் பயன்படுத்தினால், ஆக்கபூர்வமான இலக்குகளைச் சாதிக்க முடியும்.

இஸ்லாம் மனிதனது பௌதீக-பொருளாதாரத் தேவைகளை அங்கீ கரிக்கிறது. அவை மனித இருப்புக்கும், ஆற்றுகைக்கும், புத்தாக்கத் துக்கும் மட்டுமன்றி, வாழ்விலும் சமுதாயங்களிலும் சத்தியம், நீதி, நன்மை என்பவற்றை நிலைநாட்ட உதவும் சாதனங்கள் எனவும் அது கருதுகிறது. அதேவேளை, மனிதனை உடலிச்சையினதும் சடவாத இன்பங்களினதும் கீழ்நிலைக்கு அது இறக்கி விடுவதில்லை. அவனது ஆன்மீக அபிலாஷைகளை இழிவு படுத்துவதும் இல்லை.

மனிதன் என்பவன் சடமாகவும் ஆன்மாவாகவும் இருக்கிறான் என இஸ்லாம் உறுதிப்படுத்துகிறது. அவன் பூமி சார்ந்த இருப்பாக வும், வானுலகு சார்ந்த இலட்சியமாகவும் இருக்கிறான். தெய்வீக இலக்கும் சாஸ்வதப் பரிமாணமும் கொண்ட பௌதீகக் கட்டமைப்பு அவனுடையது. அந்த வகையில், மனித வாழ்வில் இடம்பிடிக்கும் அனைத்துச் செயற்பாடுகளும் பௌதீகச் சாதனைகளும் உயர் ஆன்மீக இலக்குகளை சாத்தியப் படுத்துவதற்கான பௌதீக வடிவங்களாகவும் வெளிப்பாடுகளாகவுமே அமைகின்றன. அந்த உயர் ஆன்மீக இலக்கு கள் மூலமாகவே அவனது இருப்பின் பொருள் நிதர்சனமாகிறது. அவற்றின் மூலமாகவே உலக வாழ்வில் அவனது நாட்ட சுதந்திரத்துக்கு வைக்கப்பட்ட பரீட்சையில் அவன் சித்தியடைகிறான்.

எனவேதான், இஸ்லாத்தில் 'வணக்கங்கள்' என அறியப்பட்ட கிரியைகள் மிகக் குறைந்தளவில் அமைக்கப்பட்டுள்ளன. அக்கிரி யைகளும் கூட, அவற்றின் ஆன்மீகப் பயன்களுக்கு அப்பால், புல வயப்பட்ட பல பௌதீகப் பயன்களைக் கொண்டிருக்கின்றன. வுழூவில் சுத்தம், தொழுகையில் ஒழுங்கு, நோன்பில் பொறுமை, ஸகாத்தில் அர்ப்பணம், ஹஜ்ஜில் சமத்துவம் முதலிய பயன்கள் இத்தகைய லௌகீகப் பயன்களே. நன்மை புரிவதற்கும், பிரதி நிதித்துவப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கும், பூமியை வளப்படுத் தும் பணியை மேற்கொள்வதற்கும் அவை மனிதனைத் தயார் படுத்துகின்றன.

> ''நிச்சயமாக அல்லாஹ் நீதியையும், நல்லுபகாரத்தையும், நெருங்கியவர்களுக்கு கொடுத்துதவுவதையும் ஏவுகிறான். மானக் கேடானதையும், பாவத்தையும், வரம்பு மீறலையும் தடுக்கிறான். நீங்கள் நல்லுணர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக இவ்வாறு அவன் உங்களுக்கு உபதேசிக்கிறான்''. *(16:90)*

*''மார்க்கத்தைப் பொய்ப்படுத்துபவனை (நபியே) நீர் பார்த் தீரா? அவன் அனாதையைக் கொடுமைப் படுத்துவான். ஏழைக்கு உணவளிக்கத் தூண்டாமலும் இருப்பான்''. (107:1-3)*

*''எவர் நன்மை புரிகிறாரோ அது அவருக்கே நன்மையானது. எவர் தீமை புரிகிறாரோ அதுவும் அவருக்கே எதிரானது. பின்னர் நீங்கள் உங்கள் ரட்சகனிடம் மீளக் கொண்டு வரப் படுவீர்கள்''. (45:15)*

*''உங்களில் எவர் செயலால் சிறந்தவர் என்று சோதிக்கவே அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்''. (67:2)*

*''எனவே, அணுவளவு நன்மை செய்தவரும் அதனைக் கண்டு கொள்வார்; அணுவளவு தீமை செய்தவரும் அதனைக் கண்டு கொள்வார்''. (99:7-8)*

*''நல்ல வார்த்தையும் தர்மமே''. (தபறானீ)*

*''உங்களில் ஒருவர் தனது மனைவியுடன் உறவு கொள்வதும் தர்மமே''. (புஹாரி)*

*''பூனையொன்றைக் கட்டி வைத்து கொடுமைப் படுத்தியதற்காக ஒரு பெண் நரகம் நுழைந்தாள்''. (முஸ்லிம், அஹ்மத்)*

*''ஒரு மனிதர் கடும் தாகத்தோடு இருந்த நாய்க்கு நீர் புகட்டியதால் அல்லாஹ் அவருக்கு நன்றி செலுத்தி அவரது பாவங்ளை மன்னித் தான்''. (புஹாரி)*

*''எந்தவோர் உயிருக்குச் செய்யும் நன்மைக்கும் நற்கூலி உண்டு''. (புஹாரி)*

இஸ்லாமிய நோக்கின் படி, மனிதனது இருப்பும், தேவைகளும், ஆளுமையும் பல் பரிமாணம் கொண்டவையாக இருக்கும் அதே வேளை, அவன் ஒரே பரிபூரண கட்டமைப்பைக் கொண்டவனாக வும் இருக்கிறான். அக்கட்டமைப்பின் பௌதீக, ஆன்மீகப் பரி மாணங்கள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிவதுமில்லை; ஒன்றோடொன்று முரண்படுவதுமில்லை. மனிதனது இப்பக்கங்களுள் எந்த ஒன்று புறக்கணிக்கப்பட்டாலும், அல்லது பிழையாகப் பயன்படுத்தப்பட் டாலும், அவனில் சுபீட்சத்தையோ சமநிலையையோ ஏற்படுத்த முடியாது.

இக்கோட்பாடுதான் மனிதனின் குறுகிய ஆயுள் கொண்ட உலக வாழ்வுக்கு மிகப் பரந்த, சாஸ்வதமான பரிமாணமொன்றைக் கொடுக்கிறது. ஏனெனில், மரணம் என்பது இருப்பின் முடிவன்று. மனித வாழ்வு இப்பிரபஞ்சத்தில் ஒரு நோக்கத்தோடு உருவாக்கப் பட்டுள்ளது. இவ்வாழ்வில் அவனுக்கு வழங்கப்பட்ட நாட்ட சுதந் திரம் தெரிவுக்கும் சுதந்திரத்துக்குமானது. மரணத்துக்குப் பின்னர் வருவது உலக இருப்பின் பெறுபேறு மட்டுமே. இவ்வுலக வாழ்வில் மனித வாழ்வின் தன்மையும், இலக்கும், நாட்ட சுதந்திரம் பயன் படுத்தப்பட்ட முறையுமே மறுமையின் நிரந்தர வாழ்வில் அவனது இடத்தைத் தீர்மானிக்கின்றன.

வாழ்வு பற்றிய இக்கோட்பாடுதான் மனித வாழ்வுக்குப் பொருத்த மான கோட்பாடு. மனித வாழ்வின் இயல்பையும் கட்டொழுங்கை யும் பயணத்தையும் பிரதிபலிக்கின்ற கோட்பாடு இதுவே. மனித வாழ்வானது உலக ஆசைகளையும் உடலிச்சைகளையும் மாத்திரமே சாத்தியப்படுத்துமாக இருந்தால், அங்கு சமநிலையோ ஸ்திரத்தன் மையோ மன அமைதியோ இருக்காது. இந்நிலையில் அது நிலை யற்ற உலக இருப்புக்காக கட்டற்று அலையும் மிருக வாழ்வாகவே அமையும். இந்த வாழ்வு எப்படி கிடைத்தது? ஏன் கிடைத்தது? எங்கே செல்லவிருக்கிறது? எப்படி முடியவிருக்கிறது? என்ற கேள்வி களுக்கான விடையை மனிதனால் அறிந்து கொள்ள முடியாமலே போய் விடும். வாழ்வின் இலக்கையோ, பூமியில் தனது இருப்புக் கான காரணத்தையோ அவனது வரையறுக்கப்பட்ட அறிவால் புரிந்து கொள்ளவே முடியாது.

நிகழ்வுகள், மாற்றங்கள், பிரச்சினைகள், நன்மைகள், தீமைகள், இன்ப துன்பங்கள் என்பவற்றை உள்ளடக்கிய உலக வாழ்வானது அதற்குப் பின்னால் இன்னொரு பரிமாணத்தைக் கொண்டிரா விடில், அது திருப்தியோ ஸ்திரத்தன்மையோ அடையப் போவதில்லை. தவறைத் திருத்தவும், நீதி செலுத்தவும், கூலி வழங்கவும் கூடிய மற்றொரு பரிமாணம் மனித வாழ்வுக்கு இல்லையெனில், என்ன வாழ்வு அது? அத்தகைய வாழ்வை விட மிருகத்தின் வாழ்வு எவ்வளவோ சிறந்ததாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், வாழ்வில் நீதி சார்ந்த அர்த்தங்களைத் தேடுவதற்கான புரிதலோ மனச்சாட்சியோ மிருகத்துக்கு இல்லை.

மனித வாழ்வின் மறுமைப் பரிமாணம் பற்றிய இக்கோட்பாடா னது மனித வாழ்வின் சமநிலைக்கு மிக அவசியமானது. மட்டுமன்றி,

நன்மை, சத்தியம், மன மகிழ்ச்சி முதலிய தூண்களை ஸ்திரப்படுத்த வும், அநியாயத்தையும் சீர்கேட்டையும் எதிர்த்துப் போராடவும் கூட அது அவசியமானது.

சரியான முஸ்லிம் வாழ்வானது தனது ஒருமைப்பாடு, பரிபூரண இணக்கப்பாடு, மறுமைப் பரிமாணம் என்பவற்றின் காரணமாக திருப்தியும் மன நிறைவும் ஸ்திரத்தன்மையும் நிறைந்ததாக இருக் கும். ஏனெனில், அந்த வாழ்வுக்கு ஒரு நன்னோக்கு உள்ளது. அதில் ஏற்படும் துன்பங்களுக்குக் கூட -நோக்கத்திற்கேற்ப- நல்ல பரிமாணம் உள்ளது. முஸ்லிமின் முயற்சிகள் ஒரு போதும் வீணாவதில்லை. மறுமையில் அவை பொறுமையாகவும் நன்றியாகவும் அமையும்; நன்மையாகவும் நற்கூலியாகவும் அமையும். அல்லாஹ்வின் மீதும், அவனது நீதியின் மீதும், அவனது ஞானத்தின் மீதும் ஆழ்ந்த நம் பிக்கை கொண்ட வாழ்வு அது. வாழ்வுப் பயணத்திலும், அதன் துன்பங்களையும் சோதனைகளையும் எதிர்கொள்வதிலும் ஒரு முஸ்லிம் வைத்திருக்கும் தயாரிப்பும் கட்டுச்சாதமும் அதுதான். அந்த வகையில், எல்லா நிலையிலும் திருப்தி கொண்டு, நன்றி செலுத்தி, உழைக்கின்ற உள்ளமாக அவனது உள்ளம் இருக்கும்.

இந்த ஆன்மீக-மறுமைப் பரிமாணத்தை பாதிக்கக் கூடிய ஏதாவ தொன்று தனிமனிதனது அல்லது சமூகத்தினது சிந்தனையை அல்லது நடத்தையைப் பீடிக்குமாயின், அதனால் ஏற்படும் கோளாறையும் பிறழ்வையும் வீழ்ச்சியையும் இலகுவாகக் கண்டு பிடித்து விட முடியும். ஏனெனில், அவை தனிமனிதனதும் சமூகத்தினதும் ஆளு மையையும் நடத்தையையும் உள ஆரோக்கியத்தையும் நிச்சயம் பாதிக்கும்.

இந்த மறுமைப் பரிமாணம் இரண்டாம் தர விவகாரமன்று. மாறாக, அது முஸ்லிம் தனி மனிதனிலும் சமூகத்திலும் ஆழமான உளவியல் தாக்கங்களையும், பௌதீக-நாகரிகத் தாக்கங்களையும் ஏற்படுத்தக் கூடியது.

மனிதக் கட்டமைப்பின் ஒருமுகப்பட்ட நிலை என்ற கருத்தாக் கத்தில், தனிநபர் பரிமாணத்துக்கும் சமூகப் பரிமாணத்துக்கும் இடை யில் இஸ்லாம் எந்த முரண்பாட்டையும் காண்பதில்லை. ஏனெனில், இவ்விரு பரிமாணங்களும் அக்கட்டமைப்பிலும் தேவையிலும் உண்மையாகவே இருப்பவை. இந்த ஒவ்வொரு பரிமாணத்துக்கும் பௌதீக ரீதியாகவும் மானசீக ரீதியாகவும் தனித்தனி வகிபாத்திரமும் விளைவுகளும் உள்ளன.

அந்த வகையில், மனித சமூகம் என்பது கருத்தும் பௌதீக இருப்பும் ஆகும். தனிமனிதர்கள் இன்றி அதற்கு எந்த இருப்பும் கிடையாது. அவ்வாறே, சமூகம் இன்றி தனிமனிதனுக்கு இருப்போ நிலைபேறோ கிடையாது.

மனிதன் என்பவன் தனித்துவமானதோர் இருப்பு. அல்லாஹ் அவனுக்குள் ஏற்படுத்தியிருக்கும் ஃபித்றா, பகுத்தறிவு, புரிதல், மனச் சாட்சி, நாட்ட சுதந்திரம் என்பவற்றின் பெறுபேறாகவே இத்தனிச் சிறப்பு அவனுக்கு வாய்த்திருக்கிறது. அவனது வரையறுக்கப்பட்ட இயல்பு, பலவீனம், தேவைகள் என்பனவும் கூட அதற்குக் காரண மாகும். தனிமனிதனது ஸ்தூல, மானசீகத் தேவைகளை சமூகம் கவனித்து நிறைவேற்றுவதன் மூலமும், அது வழங்கும் போதனை கள், பயிற்சி, பராமரிப்பு என்பவற்றின் மூலமும் அவன் வளர்ச்சி அடைகிறான்; தன் தேவைகளையும், தனது நிலைபேற்றுக்கு அவ சியமான அம்சங்களையும் பெற்றுக் கொள்கிறான்; தனது உழைப் பின் விளைவுகளையும் அறுவடை செய்கிறான்.

எவ்வாறாயினும் -இவ்வனைத்துக்கும் அப்பால்- தனது இருப்புக் கான பொறுப்பை ஏற்க வேண்டியவன் அந்தத் தனிமனிதனே. தனக்கு வழங்கப்பட்டுள்ள நாட்ட சுதந்திரம், மனச்சாட்சி, தனிமனிதப் பொறுப்பு என்பவற்றின் காரணமாக தனது இருப்பு எவ்வாறாக அமைய வேண்டும் என்பதையும், அதன் விளைவையும் ஏற்க வேண்டிய பொறுப்பு அவனுக்கே உரியது.

அந்த வகையில், இஸ்லாமியக் கருத்தாக்கமானது முரண்பாடும் போராட்டமும் கொண்ட கருத்தாக்கமன்று. மாறாக, ஃபித்றா என்னும் இயல்பு சார்ந்த கருத்தாக்கம் அது. அதற்கென்று அடிப்படைகளும் ஒழுங்குகளும் சட்டங்களும் உண்டு. வாழ்வு சீர்கேடோ பிறழ்வோ இன்றி சீராகவும் நன்மை மிக்கதாகவும் இயங்குவதற்கு அவை அவசியம்.

சமூக வாழ்வொழுங்கில் அநீதியையோ சீர்கேட்டையோ இஸ் லாமியக் கோட்பாடு ஏற்பதில்லை. வாழ்வு என்பது பிரதிநிதித்துவம், நன்மை, நீதி முதலிய அடிப்படைகளின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும் என அது கருதுகிறது. சீர்கேடும் பிறழ்வும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறது.

சீர்திருத்துதல் அல்லது சீர்கேட்டை எதிர்த்தல் தொடர்பான விவ காரங்களில், தீர்க்கமான தெய்வீகக் கட்டளைக்கும், அபிப்பிராயமாக

அல்லது வியாக்கியானமாக, அல்லது இஜ்திஹாதாக அமைபவற்றுக்கும் இடையிலான வேறுபாடு கவனிக்கப்பட வேண்டும். வியாக்கியானமாக அல்லது அபிப்பிராயமாக அல்லது இஜ்திஹாதாக அமையத்தக்க விடயங்களில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு உம்மாவின் பெரும்பான்மைக்கும் அதன் தலைவர்களுக்கும் உரியதாகும். உம்மாவின் அரசியல்-சட்டவாக்க ஒழுங்குக்கேற்பவும், ஷரீஆவின் உயர் இலக்குகளுக்கு அமைவாகவும் இத்தீர்மானங்களை அவர்கள் எடுப்பார்கள். அந்த வகையில், உம்மாவின் ஏனைய பொது ஒழுங்கு விவகாரங்களையும், சமூக செயற்பாடுகளையும் போன்றதே இதுவும். இத்தகைய விவகாரங்களில் உம்மாவின் 'ஷூறா' சார்ந்தே இறுதி முடிவுகள் பெறப்பட வேண்டும். முன்வைக்கப்படும் பிரச்சினைகளது பரிமாணங்களுக்கும் விளைவுகளுக்கும் ஏற்ற வழிமுறைகளூடாக முதிர்ச்சியான கருத்து வெளிப்பாட்டின் அடிப்படையில் அவை பெறப்பட வேண்டும். உம்மாவின் திருப்தியைப் பெறும் வகையிலும் அவை அமைய வேண்டும். அப்போதுதான் உம்மாவின் ஆதரவு அவற்றுக்குக் கிட்டும்.

## ஆ) பிரபஞ்ச-வாழ்வொழுங்கின் இலக்கும் நோக்கமும்:

ஏலவே இஸ்லாமிய முறையியலின் இயங்குதளங்கள் பற்றிய கலந்துரையாடலின் போது, மனித இருப்பின் இலக்கு குறித்துப் பேசியிருக்கிறோம். அந்த இலக்குதான் இஸ்லாமிய அறிவாய்வு முயற்சிகளை வழி நடாத்துகிறது. இஸ்லாமிய முறையியலின் அடிப்படையான கருதுகோளாகவும் (Hypothesis), இஸ்லாமிய மனப்பாங்கின் உட்கூறுகளுள் ஒன்றாகவும் அதுவே உள்ளது. இஸ்லாமிய அறிவியல் நோக்கை தகவல் குறைபாடுகளிலிருந்தும் செல்திசைப் பிறழ்வுகளிலிருந்தும் பாதுகாப்பதாகவும் அது உள்ளது.

இந்த வகையில், இஸ்லாமிய அறிவியல் நோக்கு எப்போதும் ஃபித்றா பற்றிய தீர்க்கமான அறிவைக் கொண்டிருக்கும். வாழ்வின் இலக்கை அறிந்தே பயணிக்கும். நன்மை, சீர்திருத்தம், வளப்படுத்தல் என்பவற்றின் அடிப்படையில் அது பிரபஞ்ச ஒழுங்கை கட்டியெழுப்பும். சீர்கேடு, பிறழ்வு, மூட நம்பிக்கை, நிராகரிப்பு, நாத்திகம், வழிகேடு என்பவற்றுக்கு அங்கு இடமிருக்காது.

*''எங்கள் ரட்சகா! இவற்றை நீ வீணாகப் படைக்கவில்லை. நீ மிகத் தூயவன்''.(3:191.)*

## இ) மனித இயல்புகளிலும் சமூக-மானிடவியல் தொர்புகளிலும் உள்ள விடயவாரியான உண்மையும் பக்கச் சார்பின்மையும்:

ஏகத்துவம் தொடர்பாகவும், இறைவிசுவாசம் தொடர்பாகவும், பிரபஞ்ச இருப்பின் இலக்கு தொடர்பாகவும் தான் கொண்டிருக்கின்ற முறைவழிப்பட்ட கருத்தாக்கங்களின் காரணமாக, இஸ்லாமிய சிந்தனையானது ஒவ்வோர் அறிவுத்துறை பற்றியுமான தனது நோக்கில் அடிப்படையான முன்னேற்பாடொன்றைக் கொண்டிருக்கிறது. சத்தியமும் உண்மையும் சரியும் தவறும் நன்மையும் தீமையும் சார்பியமற்றவை என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதே அந்த முன்னேற்பாடாகும். சார்பியமற்ற இவ்வுண்மைகள் அல்லாஹ் படைப்புகளில் ஏற்படுத்தி வைத்திருக்கும் இயல்புகள், நியதிகள் என்பவற்றின் ஒளியிலும், வஹீயின் மூலமாக மனிதனுக்கு அவன் அளித்த இலக்குகள், அளவுகோல்கள் என்பவற்றின் ஒளியிலுமே புரிந்து கொள்ளப்பட வேண்டும் என அது கருதுகிறது.

அந்த வகையில், முஸ்லிம் பகுத்தறிவானது அறிவை அதற்கேயுரிய நிபந்தனைகளின் அடிப்படையில் அடைந்து கொள்ள முயலும் தன்மை கெண்டதாகும். மனோ இச்சை, வழிகேடு என்பவற்றின் அடியாக அன்றி, சார்பியமற்ற தரவுகளின் அடிப்படையிலேயே அது அறிவைப் பெற முயற்சிக்கும். இதனால் அதன் முயற்சி வீணாகாமலும் வழிதவறாமலும் தடுக்கப்படுகிறது.

*''சத்தியம் அவர்களது மனோ இச்சைகளுக்கு பின்னால் சென்றிருக்குமாயின், வானங்களும் பூமியும் அவற்றில் உள்ளவையும் சீர்கேட்டிருக்கும்'' (23:71)*

*''அல்லாஹ்விடமிருந்து வந்த நேர்வழியை விடுத்து, தனது மனோ இச்சையைப் பின்பற்றியவரை விட வழி தவறியவர் யார்?'' (28:50)*

*''தனது மனோ இச்சையை தெய்வமாக எடுத்துக் கொண்டவரை (நபியே!) நீர் பார்த்தீரா?! (அவருக்கு) அறிவிருந்தும் அல்லாஹ் அவரை வழிகேட்டில் விட்டுவிட்டான்''. (45:23)*

இயற்கை மற்றும் தொழிநுட்பம் சார் அறிவியற் கலைகளின் ஆய்வு முறைமையானது விஞ்ஞான பூர்வத் தன்மை, பக்கச்சார்பின்மை முதலிய நெறிமுறைகளைப் பேணுமாறு நவீன சடவாதப் பகுத்தறிவைக் கட்டாயப் படுத்துவது உண்மைதான். ஆயினும், சமூக-

மானிடவியல் ஆய்வுத் துறைகளில் இப்பகுத்தறிவு வழி தவறி விட வாய்ப்புள்ளது. மட்டுமன்றி, பல நேரங்களில் அது கட்டுக்கடங்காத சாத்தானாக மாறவும் வாய்ப்புள்ளது. அந்நிலையில் அது சார்பியமற்ற மெய்மத் தன்மையைத் தேடும் பண்பை இழந்து விடும். மனிதக் கட்டமைப்பு, அவனது ஃபித்றா, தொடர்புகள், இலக்குகள், சமூக ஒழுங்கு என்பவற்றைப் பொருட்படுத்தாது, மனோ இச்சையின் அடிப்படையில் செயற்படவும் தொடங்கி விடும். இலக்கை மறந்து, அறிவாய்வு என்ற பெயரில் பிறழ்வுகளைக் கூட நியாயப்படுத்த முயலும். இப்பின்னணியில்தான், சில சிந்தனைப் பள்ளிகள் எழுச்சி அடைவதையும், வேறு சில சிந்தனைப் பள்ளிகள் வீழ்ச்சி அடை வதையும் இன்று நாம் பார்க்கிறோம். சில கோட்பாடுகள் பிரகடனப் படுத்தப்பட, வேறு சில கோட்பாடுகள் தோல்வி அடைகின்றன. மனித சமூகம் எப்போதும் குழப்பத்திலும் தடுமாற்றத்திலும் கலக்கத்திலும் கவலையிலும் திணறிக் கொண்டிருக்கிறது. வாழ்வின் துன்பங்கள், அதன் சீர்குலைவுகள், அதில் பரவும் குற்றங்கள், பாவங்கள் என்பவற்றிலிருந்து விடுபடும் வழியை அது தேடுகிறது. இவை எவற்றுக்கும் திருப்திகரமான பதிலொன்றைக் காணும் வழி அதனிடம் இல்லை.

சரியானதும் முழுமையானதுமான வழிகாட்டலொன்று தன்னிடம் இல்லாதிருப்பதே தனது இயலாமைக்கும் குறைபாட்டுக்குமான பிரதான காரணம் என்பதை தெய்வீக வழிகாட்டலைப் பெறாத சட வாத சமூகவியல் ஆய்வுத் துறை ஏற்பதில்லை. தனது பலவீனமான தர்க்கத்தினாலும், புரிதல் குறைபாட்டினாலும் மனோ இச்சை மற்றும் குருட்டுத்தனமான ஆசைகள் என்ற தளத்தில் நின்று தான் செயற் பட்டுக் கொண்டிருப்பதையும் அது ஏற்பதில்லை. இதற்கு மாறாக, சமூகவியல் ஆய்வுத் துறை கடினமானதாகவும், சிக்கல் நிறைந்த தாகவும், வேறுபட்ட காரணிகளால் தாக்கமடையக் கூடியதாகவும் இருப்பதையே அது காரணம் காட்டிக் கொண்டிருக்கிறது. இவற் றையே அது தனது ஆய்வுத் தடுமாற்றத்துக்கும், ஆய்வு முறைமை களின் தோல்விக்கும், சமூகச் சீர்கேடுகளுக்குமான ஏக நியாயமாகவும் அது முன்வைக்கிறது.

சமூகவியல் ஆய்வுகளின் இலக்குத் தவறி, செல்திசை தடம் புரண்டு, இயங்கியல் நியமங்களை இழந்து விடுமாயின், சிரமம் இன்னும் பன்மடங்காகி விடும். மட்டுமன்றி, முயற்சிகள் குன்றி, பெறுபேறுகளும் சீர்கெட்டு விடும். இதனால், சமூகங்களில் சடவாதம்

ஆழ்ந்து பரவி, முன்னர் மனோ இச்சைகளால் வழிகெட்ட சமூகங் களைப் போன்று ஆகி விடும்; சீர்கேடும் நெறி பிறழ்வும் நீக்கமற எங்கும் நிறைந்து விடும்.

மனித அறிவியலை மாத்திரம் அறிதலுக்கான மூலாதாரமாகவும் ஆய்வுக்கான வழிகாட்டியாகவும் கொண்டிருக்கும் சமூகவியல் துறை திசை மாறுவதும் வழிகெடுவதும் தவிர்க்க முடியாதது. ஏனெனில், மனித உள்ளங்களிலும் இயல்புகளிலும் மறைந்திருக்கின்ற பரிபூரண, சார்பியமற்ற உண்மையையும், மெய்ம இலக்கையும் புரிந்து கொள் வதற்கு மனித அறிவு மாத்திரம் போதுமானதல்ல. வஹீயின் வழி காட்டலும் தெய்வீகத் தூதும் அந்த அறிவுடன் இணைய வேண்டும். அப்போதுதான், இவ்வறிவாய்வுத் துறையானது தனக்குத் தேவை யான முழுத் தயாரிப்பையும் பெற்றுக் கொள்ளும்; நல்லதை 'ஹறாம்' ஆக்குவதும், கெட்டதை 'ஹலால்' ஆக்குவதும், தீமையையும் சீர்கேட்டையும் நாடிச் செல்வதும் தவிர்க்கப்படும்.

மேற்கத்திய அறிவுத் தளம் தெய்வீக அறிவுப் பலத்தை இழந்து நிற்கிறது. அங்கு மதங்களில் ஏற்பட்ட திரிபும், மக்களுக்கு அவற்றில் நம்பிக்கையற்றுப் போனதுமே இதற்குக் காரணமாகும். சமூகவியல் ஆய்வுத் துறைகளில் அங்கு இவ்வளவு பிறழ்வுகளும் குறைபாடு களும் தோன்ற இதுவே காரணமாகும். மேற்கின் எழுச்சிக் காலப் பிரிவில், 'இயற்கை விதி சார் சிந்தனைப்பள்ளி' என அறியப்பட்டி ருந்த மனித இயல்பு சார் முன்னெடுப்புகள் வளராமல் போனதற்குக் காரணமும் இதுதான். ஆதாரபூர்வமான தெய்வீகத் தூதின் அறிவு மூலங்கள் திரிபுற்றுத் தூர்ந்து போய், பின்னர் அவையே ஒரு தடையாகவும் மூட நம்பிக்கையாகவும் வழிகேடாகவும் மாறி விட்டதே இதற்குக் காரணமாகும். மேற்குலகும் நவீன நாகரிகமும் சாதித்த வெற்றிகளால் ஏற்பட்ட மமதையையும் இதனோடு சேர்த்துக் கொள்ளலாம். இச்சாதனைகளுக்கும் வெற்றிகளுக்கும் அடிப்படை யாக அமைந்தவை மேற்குலகு இஸ்லாமிய நாகரிகத்திடமிருந்து பெற்ற அறிவுகளும் முறைமைகளும் விழுமியம் சார் நியமங்களும் தான் என்ற போதிலும், தான் கண்டடைந்த வெற்றிகளுக்குப் பிறகு அவற்றை விட்டு அது படிப்படியாகத் தூர விலகி விட்டது.

இஸ்லாமிய சமூகவியல் ஆய்வானது வாழ்விலும் படைப்பு களிலும் இயல்புகளிலும் சார்பியமற்ற உண்மையையே தேடுகிறது. வஹீயின் வழிகாட்டலோடும், அதன் இலக்குகள், பெறுமானங்கள், முழுமொத்த உண்மைகள் என்பவற்றின் ஒளியிலும் அந்த உண்மையை

அது பின்தொடர்ந்து செல்கிறது. அதன் மூலமாக மனிதனது முயற்சி வீணாகி விடாமல் தவிர்க்கப் படுகிறது. விடுதலை, முன்னேற்றம் முதலிய உள்ளீடற்ற கோஷங்களால் மனிதனது செல்திசை தவறி, மனோ இச்சைகளையும் வழிகேடுகளையும் நோக்கி அவன் சென்று விடாமலும் தடுக்கப்படுகிறது.

நவீன சடவாத நாகரிகம் தொழிநுட்பத் துறைகளில் சாதித்ததை சமூக-மானிடவியல் துறைகளில் சாதிக்க முடியாமற் போனது ஏன் என்பதை மேற்கூறிய உண்மைகளிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த வகையில், அந்நாகரிகம் கண்ட தொழிநுட்ப முன் னேற்றத்துக்கும் சாதனைகளுக்கும் மறுகிடையாக, வாழ்வையும் சமூக-குடும்ப-மானிடத் தொடர்புகளையும் கட்டியெழுப்புவதில் தோல்வியடைந்தமை ஆச்சர்யமானதல்ல. இன்று அந்நாகரிகத்தின் சமூகக் குழுமங்கள் அச்சம், கலக்கம், போராட்டம் முதலியவற்றின் சுழலுக்குள் சிக்கித் திணறிக் கொண்டிருக்கின்றன. அந்தச் சுழலுக்குள் அவற்றின் இருப்பே அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கிறது. மனிதக் கட்டமைப்பிலும், உள்ளத்தியல்புகளிலும் மறைந்துள்ள சார் பியமற்ற முழுமொத்த உண்மையையும் இலக்கையும் நோக்கிப் பயணிப்பதற்கு மேற்கத்திய அறிவியலாலும் தத்துவங்களாலும் முடிந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

இஸ்லாமிய சமூகவியல் ஆய்வானது அறிவார்ந்த இலக்கும் செல் நெறியும் கொண்டதாக இருப்பதே இஸ்லாம் சாராத பிற ஆய்வு முறைகளிலிருந்து அதனை வேறுபடுத்தும் அம்சமாகும். பகுதியள வான பார்வைகளாலும் மனோ இச்சைகளாலும் அவ்வாய்வு முறைமை தடுமாறுவதோ, சத்தியத்தின் பாதையிலிருந்து பிறழ்வதோ இல்லை. எல்லா நிலையிலும் அது நன்மையான இலக்குகளை நோக்கியே பயணிக்கும். தனது பயணத்துக்கான நியமங்களையும், முன்னெச் சரிக்கை விதிகளையும் அது தனக்குள்ளேயே கொண்டிருக்கிறது. எனவேதான், தனது பயணத்தை அது திடமாகவும் நேர்மையாகவும் பாரிய தவறுகள் ஏற்படாமலும் மேற்கொள்கிறது. அறிவு, சுதந்திரம், பரிசோதனை முதலியவற்றின் பெயரால் மலட்டுத்தனமான முயற்சி களில் அது சிக்கிக் கொள்வதில்லை. அந்த வகையில், சீர்கேடு, அத்துமீறல், அநீதி, ஆணவம் முதலிய அனைத்தும் அதன் பெறுமான அளவுகோலில் சீர்கேடாகவும், அத்துமீறலாகவும், அநீதியாகவும், ஆணவமாகவுமே பார்க்கப்படுகின்றன. தர்க்க உபாயமாக எத்தகைய அறிவியல் நாமங்கள் அவற்றுக்குச் சூட்டப்பட்டாலும் அவற்றை அது பொருட்படுத்துவதில்லை.

அத்தியாயம் ஐந்து

# சமூகவியல் கலைகளுக்கான முற்குறிப்புகள்

அறிவுத் துறைகள் -சமூகவியல் சார்ந்தவையாயினும், தொழிநுட்ப வியல் சார்ந்தவையாயினும்- அவற்றுக்கு இஸ்லாமிய நோக்கில் பொதுவான முறையியலும் முற்னேற்பாடுகளும் காணப்படுகின்றன. அவ்வாறே, ஒவ்வொரு துறைக்குமென பிரத்தியேகமான முற்குறிப்பு களும், ஏற்பாடுகளும், முறைமை சார் விவகாரங்களும் காணப்படு கின்றன. ஒவ்வொரு துறையிலும் இயங்குகின்ற முஸ்லிம் ஆய்வாளர் அவற்றைப் புரிந்து கொண்டு தனியாகத் திரட்டிக் கொள்ள வேண்டும். அப்போதுதான், குறித்த துறையை பிற அறிவுத் துறைகளிலிருந்து வேறுபடுத்தி, அதன் தேவைகளுக்கேற்ப அவரால் செயற்பட முடியும். பிரச்சினைகளும் பணிகளும் ஒன்றோடொன்று கலந்து குழம்பி விடா மலும், உழைப்புகள் வீணாகி விடாமலும் இருக்க இது அவசியம்.

இஸ்லாமிய அறிவாய்வுச் செயற்பாடுகள் ஆரம்பம் முதலே இந்த வேறுபாடுகளைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் எனக் கருதுகிறோம். அந்த வேறுபடுத்தலுக்கான காரணங்கள், தேவைகள், அதனால் ஏற்படும் பயன்கள் என்பனவற்றையும் அவை தெளிவுபடுத்த வேண்டும். ஆய்வின் வளர்ச்சி நிலைக்கும், சமூகங்கள், தேவைகள், இயலுமைகள், சவால்கள் என்பவற்றின் விருத்திக்கும் ஏற்ப வேறு பாடுகளும் பிரிவுகளும் மேலும் மேலும் வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லை.

பல்வேறு துறைகளின் இயல்பு, முறைமைகள், அவற்றுக்குரிய வழிமுறைகள் என்பன ஆரம்பம் முதலே கவனத்தில் கொள்ளப் படுவது அவசியம். இஸ்லாமிய நோக்கில், அறிவுக்கான முழுமை

யான முறைமைச் சட்டகத்தில் அவை என்ன இடத்தைப் பெறுகின்றன என்பது ஆரம்பத்திலிருந்தே கவனிக்கப்பட வேண்டும். அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் வசனங்களோடும், அவ்வசனங்களைப் பாது காப்பதோடும், மகாஸிதோடும் தொர்பான துறைகள் இவ்வகையினுள் அடங்கும். மானிட, சமூக இயல்புகள் மற்றும் அவற்றுடன் ஆரோக் கியமாக உறவாடி சிறந்த இலக்குகளை நோக்கி ஆற்றுப்படுத்துதல் தொடர்பான துறைகளும் இதனுள் அடங்கும். சமூகவியல் ஒழுங்கு கள், கொள்கைகள், அவற்றை விருத்தி செய்தல், இஸ்லாமிய இலக்கு களை அவற்றின் மீது சாத்தியப்படுத்தல் என்பவை தொடர்பான துறைகளும் இதனுள் அடங்கும். படைப்புகளிலும் சடப் பொருட்களி லும் இயங்கும் விதிகள் மற்றும் அவற்றை சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்ளல் என்பவை தொடர்பான துறைகளும் இவ்வகை யினுள் அடங்குபவையே.

இந்த ஒவ்வொரு துறையும் இயல்பாகவே இன்னும் வேறுபட்ட பல கிளைகளாகவும் கலைகளாகவும் பிரிந்து, ஒன்றையொன்று முழுமைப் படுத்துபவையாக மாற்றமடையும். இறுதியில் அவை அல்-குர்ஆனிய அறிவுக் கலைகள், ஸுன்னாவின் அறிவுக் கலைகள், மகாஸிதிய அறிவுக் கலைகள், ஃபித்றா சார்ந்த சமூகவியற் கலைகள், ஃபித்றா சார்ந்த பௌதீக-தொழிநுட்பக் கலைகள், இலக்கிய-அழகியற் கலைகள் என கட்டுருவாக்கம் பெறும்.

இஸ்லாமிய அறிவுப் பயணத்திலும், பரிபூரண அறிவியல் கட்ட மைப்பொன்றை உருவாக்கும் நமது முயற்சிகளிலும் ஆரம்பமாக முன்னுரிமை பெற வேண்டிய சில கலைகள் காணப்படுகின்றன. அவை நவீன மேற்கத்திய அறிவியலில், ‘நடத்தை சார் அறிவியற் கலைகள்’ (Behavioral Sciences) என அழைக்கப்படுகின்றன. உள வியல், சமூகவியல், மானிடவியல் என்பனவே அவையாகும். இக் கலைகள் இஸ்லாமியப் படுத்தப்பட்டு, அவற்றின் பிரதானமான விவகாரங்கள் இஸ்லாமிய நோக்கில் அணுகப்பட வேண்டும். ஏனெ னில், இக்கலைகளே இன்றைய சமூக- மானிடவியல் ஆய்வுகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. மனிதன் பற்றியும், அவனது இயல்பு, உட்கூறுகள், நோக்கங்கள், தேவைகள் என்பவை பற்றியுமான அடிப்படையான கருதுகோள்களை அவ்வாய்வுகள் எடுத்தாள்கின் றன. அறிவியல், சமூகவியல், மானிடவியல், மெய்யியல் சார்ந்த அனைத்துத் துறைகளும் இக்கருதுகோள்களாலும் செல்நெறிகளாலும் தாக்கமடைந்தே வந்திருக்கின்றன.

கல்வி, அரசியல், பொருளியல், முகாமைத்துவம், ஊடகத் துறை முதலிய சமூக-மானிடவியல் கலைகளும் அவற்றின் தத்துவங்களும் மனித நடத்தை சார் கருதுகோள்களின் மீதும், அவற்றின் ஆய்வு முடிவுகளின் மீதும் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனது இயல்பு, அவனது இருப்பின் பொருள், தேவைகள், நடத்தைக் கோலங்கள் என்பவை தொடர்பான கருத்தாக்கங்களே அவற்றுக்கு அடிப்படையாகவும் அமைந்துள்ளன. அந்த வகையில், முதலில் இத்துறைகளில் இஸ்லாமியக் கருத்தாக்கங்களும், கருதுகோள்களும், அடிப்படைகளும் உறுதிப்படுத்தப்படுவது அவசியம். இல்லை யெனில், இவற்றுள் எந்தக் கலையையும் சரியாகவும் முழுமையாக வும் இஸ்லாமியப் படுத்த முடியாது போய்விடும். மட்டுமன்றி, ஆய்வாளர் பல்வேறு முரண்பாடுகளிலும், கருத்தியல் தவறுகளிலும், தீர்வுத் தடுமாற்றத்திலும் கூட விழ வேண்டி ஏற்படும்.

மனித இயல்பையும், மனிதத் தொடர்புகளின் இயங்கியலையும் ஆய்வாளர்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது பல்வேறு சமூகவியல் கலைகளை இஸ்லாமியப் படுத்தும் முயற்சிகளுக்கான முன் நிபந்தனையாகும். ஏனெனில், அதுவே கல்வி, அரசியல், பொருளியல் போன்ற இதர சமூகவியற் கலைகளை இஸ்லாமியப் படுத்துவதற்கான முதல் எட்டாக அமையும்.

### 1) இஸ்லாமியமும் கல்வியியலும்:

முஸ்லிம்களது பலவீனத்துக்கும் பின்னடைவுக்குமான தீர்வைக் கண்டடைவது சிரமமாகி, பௌதீக, இராணுவ, சட்ட, அரசியல் கலைகளில் அத்தீர்வைப் பெறலாம் என்ற எதிர்பார்ப்பும் தோல்வி யடைந்த பிறகு, முஸ்லிம்கள் கல்வி, முகாமைத்துவம், பொருளாதா ரம் போன்ற துறைகளில் தீர்வு தேடத் தொடங்கினர். அவர்கள் இறுதியாக வந்தடைந்த துறை ஊடகம் சார்ந்த கலைகளாகும்.

இஸ்லாம் சாராத நோக்கில் முஸ்லிம்கள் தம்மை நவீனப்படுத்து வதற்கும் மேற்கு மயப் படுத்துவதற்கும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றதாலும், அதனால் உம்மாவில் ஏற்பட்ட இஸ்லாமிய எதிர் வினைகளாலும், முஸ்லிம்களது பார்வை இஸ்லாமிய அசல் நிலையை நோக்கித் திரும்பலானது. உம்மாவின் வாழ்விலும் அதன் சமூக ஒழுங்கிலும் இஸ்லாத்தைப் பின்பற்றும் முனைப்பு அதி கரித்தது. பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கும், ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வதற்குமான முயற்சியாக அது அமைந்திருந்தது.

பொருளாதாரம், ஊடகம் போன்ற சில பிரயோக-சமூகவியற் கலை களை இஸ்லாமியப்படுத்த உழைத்தல் மற்றும் அந்நோக்கத்துக்கு உதவக் கூடிய அறிவாய்வு நிலையங்களை உருவாக்குதல் என்பன இம்முனைப்பின் முக்கிய வெளிப்பாடுகளாக அமைந்திருந்தன.

இம்முயற்சிகளுக்குப் பின்னாலிருந்த நோக்கம் சிறந்ததே என்பதில் ஐயமில்லை. ஆனால், இவ்விரு துறைகளும் வழிமுறைகள் (means) சார்ந்த துறைகளாகும். இவ்விரு துறைகளும் சீர்படுத்தப்படுவது அவசியம்தான். இவை இஸ்லாமிய நோக்கில் கட்டமைக்கப்படாமல் இஸ்லாமிய வாழ்வு சீர்பெறாது என்பதும் உண்மைதான். ஆயினும், முஸ்லிம் தனிமனிதனின் கல்வியும் வளர்ப்பும் உளவியல் கட்டு ருவாக்கமும் சீர்பெறவில்லையெனில், மேற்குறித்த துறைகளில் மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியின் விளைவையும் முஸ்லிம் சமூகத்தினால் அறுவடை செய்ய முடியாது. அவ்வாறே, முஸ்லிம் சமூகமும் அதன் அரசியல் நிறுவனங்களும் ஒழுங்கு படுத்தப் படாமலும், இலக்குகளுக்கு அமைவாக அதன் இயலுமைகள் பயன்படுத்தப் படாமலும் எந்தப் பயனும் விளையாது.

அந்த வகையில்தான், -நடத்தை சார் கலைகளைப் போலவே- கல்வித் துறை, கல்வி சார் ஆய்வுகள், அரசியல் துறை, அரசியல் ஆய்வுகள் என்பன முஸ்லிம் உழைப்பாளர்களது கவனயீர்ப்பைப் பெறுவது அவசியமாகிறது. மாநாடுகள், கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள், ஆய்வு மையங்கள், சிறப்புத் துறை நிறுவனங்கள் என்பவற்றை நிறுவுவதன் மூலமாக இதனைச் சாத்தியப் படுத்தலாம்.

இவ்விடத்தில், பிற்கால முஸ்லிம்களது மிக முக்கியமான ஆளு மைப் பண்பொன்று குறித்து கவனயீர்ப்புச் செய்வது பயனளிக்க முடியும். உம்மாவிலுள்ள வளவாளர்களதும் உழைப்பாளர்களதும் பேச்சுக்கும், அவர்களது உண்மையான நடத்தை, ஆற்றல், இயலுமை கள் என்பவற்றுக்கும் இடையிலான முரண்பாடே அதுவாகும்.

இஸ்லாம் உயர்வானது என்ற திருப்தி முஸ்லிம்களிடம் உறுதியாக உள்ளது என்பது உண்மைதான். முஸ்லிம் உம்மாவே இஸ்லாத்தின் தூதை மக்களுக்கு எடுத்துச் செல்லக் கூடியது என்பதும் உண்மை தான். இஸ்லாத்தின் கொள்கைகள், பெறுமானங்கள், முழு நிறை வான கோட்பாடுகள் என்பவற்றுக்கு நிகரான முழு நிறைவான வேறு பெறுமானங்களோ கோட்பாடுகளோ இல்லை என்பதும் உண்மை தான். இவையெல்லாம் உண்மையாக இருந்த போதிலும், முஸ்லிம்

உம்மா இஸ்லாத்தைச் சரியாகவோ, ஏற்கத்தக்க வகையிலோ பிரதி பலிக்கவில்லை என்ற உண்மையையும் நாம் ஏற்கத்தான் வேண்டும். இஸ்லாம் அதனைச் சேர்ந்தவர்களின் வாழ்வில் ஸ்தூல வடிவம் பெறாமல், ஒரு கற்பனாவாதத் தோன்மமாகவே ஏறக்குறைய காட்சி யளிக்கிறது. கதகதப்பும் ஒளியும் கொண்ட இஸ்லாமியச் சூரியன் தங்கள் மீதும் முழு மனித இனத்தின் மீதும் புலரும் நாள் வரும் என்ற கனவில் இன்றைய முஸ்லிம்கள் பொழுதைக் கழிக்கிறார்கள்- அவ்வளவுதான்!

இஸ்லாமியப் பெறுமானங்களையும், இலக்குகளையும், பண்பு களையும், சரியான இஸ்லாமிய நடத்தையையும் ஸ்தூலப்படுத்து கின்ற தனிநபர் செயற்பாடுகள் கூட -பெரும்பாலும்- முழு நிறைவான வடிவில் அமையவில்லை. இதனால் அவற்றினால் உரிய தாக்கத்தை ஏற்படுத்தவோ, விளைதிறனைப் பெறவோ முடியவில்லை. மட்டு மன்றி, வெற்றிகரமான இஸ்லாமிய ஆளுமைக்கு அவசியமான ஆக் கப் பண்புகளுக்கு மாறுபட்ட அல்லது குறைபாடுகள் கொண்ட மாதிரிகளே அவற்றிலிருந்து உருவாகிக் கொண்டும் இருக்கின்றன.

அந்த வகையில், 'இஸ்லாமிய நெருக்கடி' என்ற தோற்றப்பாட் டுக்கு பங்களிப்புச் செய்கின்ற அடிப்படையான சில அம்சங்கள் குறித்தும் இவ்வுரையாடலில் கவனக்குவிப்புச் செய்வது பயனுடைய தாகலாம்.

பிற்பட்ட காலப் பிரிவுகளில் கல்வி தொடர்பான இஸ்லாமிய சிந்தனையின் நிலையையும் அதன் ஆழமின்மையையும் புரிந்து கொண்டவர்கள் மட்டுமே முஸ்லிம் சமூகத்தின் கல்விப் பிரச்சி னைகள் அறிவியல் முறைமை ஒன்றினூடாகவே தீர்க்கப்பட முடியும் என்பதைப் புரிந்து கொள்வார்கள். ஒழுங்கு படுத்தப்பட்ட தொடர்ச்சி யான அறிவாய்வு மூலமாகவே கல்வி தொடர்பான விவகாரங்கள் ஆழமாகவும், துணிச்சலாகவும், பொறுமையாகவும் கையாளப்பட முடியும் என்பது அவர்களுக்கே புரியும். ஏனெனில், வரையறுக்கப் பட்ட, எழுமாறான சிந்திப்புகளால் அப்பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாதவை.

கல்விப் பிரச்சினைகள் பற்றிய இஸ்லாமிய சிந்தனையின் அவ தானங்கள் இஸ்லாம் மனித உள்ளங்களில் பதிக்க விரும்புகின்ற நோக்கங்களை படம் பிடித்துக் காட்டுகின்றன. எனினும், மனித நடத்தை, இயல்புகள், அவற்றின் கட்டமைப்பு, வளர்ச்சி என்பவை

தொடர்பான துறைகளில் முறைவழிப்பட்ட அறிவாய்வுப் பண்பு மறைந்து விட்டதை நாம் அவதானிக்கிறோம். மனித நடத்தைகளும் இயல்புகளும் மனித உடலைப் போன்ற வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டவை என்பதும், ஆய்வையும் புரிதலையும், கண்காணிப்பை யும், சீரான கட்டுருவாக்கத்தையும் வேண்டி நிற்பவை என்பதும் இங்கு நமது கவனத்துக்குரியது.

இஸ்லாமியக் கல்வித் துறையை முறையாகவும், அறிவியல் பூர்வமாகவும் அணுகாத இக்குறைபாட்டின் காரணமாகவே, அடிப் படையான இஸ்லாமியப் பெறுமானங்களையும் கோட்பாடுகளை யும் சிறுவர்களின் உள்ளங்களில் விதைக்கும் செயற்பாடு அவர்களது வயதுப் பருவத்துக்கும் உளவியல் கட்டமைப்புக்கும் பொருந்தாத வகையில் அமைந்திருப்பதையும், எல்லா நிலையிலும் ஒரே மாதிரி யாக அமைந்திருப்பதையும் நாம் அவதானிக்கிறோம்.

உண்மையில் இத்தகைய வழிமுறை இறைத்தூதர் (ஸல்) காலத்து அறபுக் கோத்திர மாந்தர்களைப் போன்று உளவியல் கட்டமைப்பு முழுமை பெற்றவர்களுக்கே பொருத்தமானதாகும். அத்தகையோ ரைப் பயிற்றுவிக்கும் வகையிலேயே இறைத்தூதர் (ஸல்) அவர்களது வழிகாட்டல்களும் அமைந்திருந்தன. சத்தியத்தைப் பிடிவாதமாக மறுத்துப் புறக்கணிப்பதன் விளைவுகளை அவர்களுக்குப் புரிய வைப்பதற்காக அன்னார் அவ்வழிமுறையைக் கையாண்டார்கள். குறைஷிகளுக்கும், அவர்களது கடின இயல்புக்கும், அக்கால பாலை வன நாடோடி வாழ்வமைப்புக்கும், அபாயங்களுக்கும் ஏற்ற அறி வூட்டல் வழிமுறையாக அன்னாரது வழிமுறை அமைந்திருந்தது. அந்த வகையில்தான், வஹீயின் தொனியும் இறைத்தூதர் (ஸல்) அவர்களது தொனியும் உயர்ந்திருந்தன. நிராகரிப்பு, பாவம், அத்து மீறல், சீர்கேடு என்பவற்றின் விளைவுகள் குறித்து எச்சரிப்பதாகவும் அச்சுறுத்துவதாகவும் அத்தொனி அமைந்திருந்தது.

பலம்மிக்க அத்தொனி அம்மக்களது இறுகிய உள்ளங்களை இளக்கியது; முதிர்ச்சியுடன் சிந்திக்க வைத்தது. எனவேதான், கொடூர மான வன விலங்குகள் போன்றிருந்த அக்காட்டு மிராண்டிக் கோத் திரங்கள் கட்டுக் கோப்பும் பலமும் கொண்ட சமூகங்களாகவும் படைகளாகவும் மாற்றமடைந்தன; அகில நாகரிகத் தூதையும் உயர்ந்த கொள்கைகளையும் சுமந்து கொண்டன; மங்கோலியர், ஜேர்மானியர் போன்று வரலாறு நெடுகிலும் காணப்பட்ட பல்வேறு காட்டு மிராண்டி நாடோடிக் கோத்திரங்களிலிருந்து வேறுபட்டு தனித்

துவமான கோத்திரங்களாக மாறின. இஸ்லாத்தினால் முதிர்ச்சி பெற்ற அந்த ஆரம்ப அறபுக் கோத்திர மாந்தர்கள் நீதி, சீர்திருத்தம், வளப் படுத்தல் என்பவற்றின் மீது நிர்மாணிக்கப்பட்ட நாகரிகத்தையும் தெய்வீகத் தூதையும் சுமந்து, விடுதலைச் சக்தியாக மிளிர்ந்தனர்.

இங்கு நாம் ஒரு விடயத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அல்-குர்ஆன் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மூலமாக அறபுக் கோத் திரங்களையும், அபூ லஹப், அபூ ஜஹ்ல் போன்ற குறைஷிக் கோத் திரத் தலைவர்களையும் நோக்கிப் பயன்படுத்திய அதே 'உரை மொழி' யைத்தான் இன்றும் பல முஸ்லிம் பயிற்றுவிப்பாளர்களும் உபன்னியாசகர்களும் மக்களை நோக்கிப் பயன்படுத்துகிறார்கள். நாம் எத்தகைய மனிதர்களை நோக்கிப் பேசுகிறோம் என்பதை யெல்லாம் அவர்கள் சிந்திப்பதில்லை. முஸ்லிம் சிறார்களுக்கு இஸ்லாமியக் கல்வியை ஊட்டும் போது கூட தங்களை அறியாமலே அவர்கள் இம்முறையைத்தான் கையாள்கிறார்கள். இளைஞர்கள் மற்றும் முழுமையாக வளர்ந்த நபர்களின் தேவையை விட சிறார் களின் தேவையும், உளவியல் கட்டமைப்பும், அது கடந்து செல்லும் படிநிலைகளும் வேறுபட்டிருந்த போதிலும் அவற்றையெல்லாம் இவர்கள் கவனத்தில் எடுப்பதில்லை.

நம்பிக்கைக் கோட்பாடு மற்றும் விழுமியம் சார் வழிப்படுத்தல் தொடர்பாக வளர்ந்தவர்களுடன் மேற்கொள்ளப்படும் உரையாடல் அனேகமாக பகுத்தறிவு ரீதியான உரையாடலாகவே அமைந்திருக்கும். இலக்குகள் சார்ந்த முதிர்ச்சி நிலையை ஏற்படுத்துதல், சரியான இலக்கை நோக்கி ஆற்றல்களையும் இயலுமைகளையும் தகவமைத்தல் முதலிய பணிகளை அந்த உரையாடல் மேற்கொள்ளும்.

ஆனால், இவ்விடயங்கள் பற்றி சிறுவர்களுடன் உரையாடும் போது, அவர்களது உளவியற் பண்புகளையும் ஆற்றல்களையும் கட்டமைக்கும் வகையிலேயே அவ்வுரையாடல் -முதல் நிலையில்- அமைந்திருக்கும். எதிர்கால வாழ்வில் அவர்களிடம் இயல்பாக அமைந்திருக்க வேண்டிய பண்புகளாகவும் ஆற்றல்களாகவும் அவை இருக்கும். இதனைத்தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இப்படிக் கூறினார்கள்:

''உங்களில் மௌட்டீகக் காலத்தில் சிறந்தவர்களாய் இருந்தவர்கள், (இஸ்லாத்தின் சட்டங்களை) நன்கு புரிந்து கொள்வார்களாயின், இஸ்லாத்திலும் சிறந்தவர்களாய் இருப்பர்''. (புஹாரி)

சிறார்கள் பலமாகவும் ஆரோக்கியமாகவும் உருவாகும் போது, எல்லா நிலையிலும் அவ்வாறே இருப்பர். அவர்களது நல்லறிவும் புரிதலும் அவர்களிடமுள்ள சக்தியையும் உள்ளார்ந்த ஆற்றலையும் நன்மை, சீர்திருத்தம் முதலிய இலக்குகளை நோக்கி வழி நடாத்தும்.

சிறார்களுக்கு முன்வைக்கப்படும் கல்வி சார் உரையாடல்கள் -முதல் நிலையில்- உருவாக்கம் மற்றும் உளவியல் விருத்தி சார்ந்தவை. ஆனால் இளைஞர்களைப் பொறுத்தவரை அவை பகுத்தறிவு சார் வழிகாட்டலாய் அமைபவை. அந்த வகையில்தான், இறைத்தூதர் (ஸல்) அவர்களது பின்வரும் பிரார்த்தனையும் அமைந்திருந்தது:

''யா அல்லாஹ்! உமர் இப்னுல் கத்தாப் மற்றும் அபூ ஜஹ்ல் இப்னு ஹிஷாம் ஆகிய இருவருள் நீ விரும்பிய ஒருவரைக் கொண்டு இஸ்லாத்தை கண்ணியப் படுத்துவாயாக!''

ஏனெனில் அவ்விருவரிடமும் சக்தியும் துணிச்சலும் உறுதியும் இருந்தன. சிறந்த உடற் கட்டமைப்பு, உளவியல் உருவாக்கம், பலமான மனநிலை என்பவை வேறு; இலக்குகள் மற்றும் நோக்கங் கள் என்பவை வேறு. இன்னொரு வகையில் கூறினால், ஒரு மனிதரிடம் இருக்கும் துணிச்சலும் தைரியமும் வேறு; அவர் எந்த நோக்கத்துக்காக அந்தத் துணிச்சலையும் தைரியத்தையும் பயன் படுத்துகிறார் என்பது வேறு. இதய சுத்தி, உண்மை, பொறுமை போன்ற பண்புகளும் உளவியல் கூறுகளும் கூட இவ்வாறானவைதான். இந்த உளவியல் பண்புகளும், இவற்றை மனிதர்கள் என்ன நோக் கங்களுக்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதும் இரு வேறுபட்ட விடயங்களாகும்.

இந்த வகையில்தான், சிறந்த பண்புகளும் பலமான உளவியல் கட்டமைப்பும் கொண்ட மனிதர்கள், மௌட்டீகத்தில் இருந்தாலும், அவர்கள் அவர்களாகவே இருப்பார்கள். அந்தப் பலமான உளவியல் கட்டமைப்பு வேறுபடுவது அது எந்த நோக்கத்துக்காகப் பயன் படுத்தப்படுகிறது என்பதில்தான். இஸ்லாத்தில் நுழைந்த பிறகு அவர்கள் கொண்டிருக்கும் சிறந்த சீர்திருத்த நோக்கங்கள், மௌட்டீ கத்தின் குறுகிய நோக்கங்களிலிருந்து வேறானவையாகும். இரண்டு 'உமர்'களில் ஒருவர் மூலமாக இஸ்லாத்துக்கு கண்ணியம் கிடைக்க வேண்டும் என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எதிர்பார்த்தது இந்த ஆற்றல் மிக்க உளவியல் பலத்தையும் இயல்பையுமே. உண்மையில் நிகழ்ந்ததும் அதுதான். ஏனெனில், இந்த இரு 'உமர்'களும்தான்

இஸ்லாத்தினதும் 'ஜாஹிலிய்ய' மௌட்டீகத்தினதும் இரு வீர நாய கர்களாக இருந்தனர். இஸ்லாத்தின் வீர நாயகரான உமர் இப்னுல் ஃகத்தாபும், 'ஜாஹிலிய்யா'வின் வீர நாயகராக அபூஜஹ்ல் அம்ர் இப்னு ஹிஷாமும் விளங்கினர்.

ஆக- பாதுகாத்துப் போர் புரியும் மனிதனும், கோஷ்டி சேர்த்துக் கொள்ளையிடும் மனிதனும் ஆற்றல், சக்தி என்பவற்றில் வேறுபட்ட வர்களாய் இருக்க வேண்டும் என்ற அவசியம் எதுவும் கிடையாது. அவர்களது இலக்கிலும் நோக்கிலும்தான் அந்த வேறுபாடு தோன்று கிறது. ஒவ்வொரு நபரும் பெற்றிருக்கக் கூடிய இதயசுத்தி, பலம், அர்ப்பணிப்பு என்பன அந்தந்த நபர்கள் சார்ந்திருக்கும் சமூகங்கள் தமது சிறார்களைப் பயிற்றுவிக்கச் செலவிடும் முயற்சிகளிலேயே தங்கியுள்ளது.

குழந்தைகளது உளவியல் கட்டுமானத்தில் உபதேசப் பாணி ஏற்படுத்தும் தாக்கமானது கட்டம் கட்டமாக, ஆண்டுக்கு ஆண்டு வேறுபட்டதாக அமைய வேண்டும். அந்த வகையில், உடல் வளர்ச்சி யின் கட்டங்கள் போன்றதுதான் அதுவும். கல்வி சார் விவகாரங்க ளில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான உண்மை இது. அந்த வகையில், வளர்ந்தவர்களுக்கு முன்வைக்கப்படும் உபதேசம், வழிகாட்டல், பயிற்சி என்பவை சார்ந்த அணுகுமுறை களிலிருந்து சிறுவர்களுக்கான 'உரை'யின் பண்புகள் எவ்வாறு வேறுபடுகின்றன என்ற புரிதல் நமக்கு மிகவும் அவசியம்.

வளரும் குழந்தைக்கு அதன் உள்ளத்தில் நேர்நிலையான உளவியல் பண்புகளையும் ஆற்றல்களையும் விதைத்து விருத்தி செய்யும் 'உரை மொழி' ஒன்றையே நாம் பயன்படுத்த வேண்டும். அவ்வாறான பண்பு களும் ஆற்றல்களுமே அவர்களிடம் தன்னம்பிக்கையையும், வாழ்வில் தமது பணியை கண்ணிய உணர்வோடு ஆற்றும் விருப்பத்தையும், பூமியில் தமது பிரதிநிதித்துவப் பணியில் வெற்றியடைவதற்கான வேட்கையையும் கொடுக்கும்.

குழந்தையின் உளவியல் உருவாக்கக் கட்டங்களில் எதிர்மறையாக அச்சுறுத்தும் பாணியையும் பயமுறுத்தலையும் நாம் தவிர்ந்து கொள் வது அவசியம். ஏனெனில், அத்தகைய வழிமுறை குழந்தைகளிடம் தைரியம், தன்னம்பிக்கை, கண்ணியம், முன்னெடுப்பு முதலிய பண்பு களுக்கு அவசியமான உளவியல் ஆற்றல்களை அழித்துவிடும். இதற்கு மாறாக, அவர்களைப் பயிற்றுவிப்பதிலும், அவர்களது

கேள்விகளுக்குப் பதிலளிப்பதிலும் அன்பு, உற்சாகப்படுத்தல் முதலிய வழிமுறைகளையே நாம் கைக்கொள்ள வேண்டும். குறிப்பாக, சத்தியமும் நீதியும் அன்பும் கிருபையும் உடைய அல்லாஹ்வுடன் தொடர்புபட்ட அவர்களது வினாக்களுக்கு விடையளிக்கும் போது இது நமக்கு மிக அவசியம். அப்போதுதான் குழந்தைகள் உறுதி, பொறுமை, ஆர்வம், அன்பு என்பவற்றுடன் அல்லாஹ்வை நோக்கிச் செல்வார்கள்; வாழ்வின் மீதும் அதில் தாம் ஆற்ற வேண்டிய பாத்திரத்தின் மீதும் பற்றுறுதி கொள்வார்கள்; மறுமை மீதும், அங்கு அல்லாஹ்வைச் சந்திப்பதன் மீதும் ஆர்வம் கொள்வார்கள். இன்னொரு வகையில் கூறினால், சன்மார்க்கக் கொள்கைகள், பெறுமானங்கள், இலக்குகள், நம்பிக்கைகள் என்பவற்றை குழந்தைகளின் ஆரம்ப உருவாக்கக் கட்டங்களில் நேர்நிலையான மனப்பாங்கை வளர்க்கும் வகையிலேயே நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். அதுவே அன்பு, வேட்கை, சாதனை முதலிய உணர்வு நிலைகளை குழந்தைகளிடம் ஏற்படுத்தும். நேசமும் வேட்கையும் கண்ணிய உணர்வும் கொண்டவர்தான் அர்ப்பணிப்பும் தியாகமும் பொறுமையும் கொண்டு கருமமாற்றுவார். அச்சமும் பயமும் கொண்டவரோ எச்சரிக்கையையும் வெறுப்பையுமே விதைப்பார். மிகக் குறைந்த அளவே செயலாற்றுவார். தொடர்ச்சியான பல உளவியல் போராட்டங்களுக்கும் அவர் உட்பட்டிருப்பார். பயமுறுத்தல் சார்ந்த உணர்வுகள் ஆயுள் முழுவதும் அவருடன் ஒட்டியிருக்கும். இந்த மனச்சிதைவானது விருப்புடன் பணியாற்ற விடாமல் அவரைத் தடுத்து விடுவது மட்டுமன்றி, தாழ்ந்து சரணாகதி அடையும் நிலைக்கும் தள்ளி விடும். இதனால் அவரிடம் சோம்பல், காத்திருப்பின்மை, கடமையை நிறைவேற்றாமை, முரண்பாடு, உற்சாகமோ நேர்த்தியோ அற்ற மிகக் குறைந்தளவு செயற்பாடு முதலிய பண்புகள் குடிகொண்டிருக்கும். பிற்பட்ட காலங்களில் வாழ்ந்த பெருமளவு முஸ்லிம்களிடம் நாம் அவதானிக்கும் பண்புகள் இவைதான்.

தூய சன்மார்க்கத்தை நாம் ஆழ்ந்து கவனித்தால், ஒரு முஸ்லிம் அகிலங்களின் நாயனான அல்லாஹ்விடம் பெறுகின்ற விஷேட அந்தஸ்தைக் கண்டு கொள்ள முடியும். எவ்வாறாயினும், அவனது இறுதி முடிவு சுவனமாகத்தான் இருக்கப் போகிறது.

*'' 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று கூறியவர் சுவனம் நுழைவார். அவர் விபச்சாரம் செய்திருந்தாலும் சரி; திருடியிருந்தாலும் சரி!'' -(புஹாரி, முஸ்லிம்)*

முஸ்லிம் குழந்தை பக்குவ வயதை அடையும் வரை அதற்கு எந்தப் பொறுப்போ விசாரணையோ கிடையாது. எனவே, அது பொறுப்பைச் சுமப்பதற்கான தயார் நிலையையும் பருவத்தையும் அடைய முன்னர் அவசரப்பட்டு நாம் பொறுப்புகளைச் சுமத்தி விடக் கூடாது. குழந்தையுடனான நமது உரையாடல் தொனி அன்பையும் நற்செய்தியையும் அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்க வேண்டும். சக்தி, உறுதி, கண்ணியம், விருப்புடன் முன்வரல் முதலிய பண்புகளை அவர்களிடம் வளர்க்கும் வகையில் அத்தொனி அமைய வேண்டும். குழந்தைகளை நேசித்தல், அவர்களை கவனித்தல், அச்சத்தை ஏற்படுத்தும் காரணிகளை அவர்களது உள்ளங்களிலிருந்து அகற்றுதல் என்பவற்றில் இறைத்தூதர் (ஸல்) அவர்களது வாழ்வியல் காட்டித் தரும் மாதிரிகளை நாம் பின்பற்ற வேண்டும். இப்னு அப்பாஸுடன் நபியவர்கள் பேசிய முறை, மிம்பரில் உரை நிகழ்திக் கொண்டிருக்கும் போது தனது பேரப் பிள்ளையை தூக்கி வைத்தி ருந்தமை, மஸ்ஜிதில் தொழுகை நடாத்திக் கொண்டிருக்கும் போது பேரப்பிள்ளை முதுகிலேறி அமர்வதைப் பொறுத்துக் கொண்டமை, சிறுவரான அனஸ் பின் மாலிக்கை நடாத்திய முறை, குழந்தைகளுடன் கடுமையாக நடந்து கொள்ளும் நாட்டுப் புற அறபிக்கு அன்னார் கூறிய வார்த்தைகள் என்பன அன்னாரது சிறந்த முன்மாதிரிகளாகும்.

முஸ்லிம் இளவல்கள் மீது பொருத்தமானதொரு கட்டத்திலேயே பொறுப்புச் சுமத்தும் வகையிலான உரையாடல் மொழி பயன் படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் இவ்வகையான உரையாடல் அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். அபூபக்கர், உமர், ஃகாலித் இப்னு வலீத், ஸஅத் பின் அபீ வக்காஸ், அபூ உபைதா ஆமிர் இப்னுல் ஜர்ராஹ் முதலியோரும் இன்னும் பல நபித்தோழர்களும் ஜாஹி லிய்யாக் காலத்திலேயே முழு மனிதர்களாக மாறி விட்டிருந்ததால் தான், இஸ்லாத்தை ஏற்ற பிறகு இஸ்லாத்தின் திடமான தொனி அவர்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆக- அறிவியல் முறைமையின் அடிப்படையில் அமைந்த இஸ் லாமியக் கல்வி மனித உள்ளங்களையும் இயல்புகளையும் புரிந்து கொள்ளும் முயற்சியில் இறங்க வேண்டும். அவற்றின் வளர்ச்சிக் கட்டங்களையும், அவற்றுக்கிடையிலான இடைவினைத் தாக்கங் களையும், தொடர்புகளையும் கண்டறிய வேண்டும். இஸ்லாமியக் கல்வி முறையிலும், அதன் சாதனங்களிலும் பின்பற்றப்படும் நியம வழிப்பட்ட அறிவியல் முறைமையானது அதன் நொய்மையான

அம்சங்களை மாற்றியமைத்து உண்மையாகவே அறிவியல் பள்ளி யொன்றாக அதனை ஆக்கி விடும் என்பதில் ஐயமில்லை. அந் நிலையில், அதற்கென்று தெளிவான நோக்கங்களும், அதியுயர் இலக்குகளும், வினைத்திறனான முறைமைகளும் சாதனங்களும் உருவாகியிருக்கும். அந்த இலக்குகளும் முறைமைகளும் சாதனங் களும் சமூக வாழ்வியல் யதார்த்தத்தில் எதிர்பார்க்கப்படும் மாதிரி களையும் தலைமுறைகளையும் சாத்தியப் படுத்துவதோடு, பிரபஞ் சத்தை நிர்வகிப்பதற்கும், பராமரித்து வளப்படுத்துவதற்கும் அவற் றைத் தயார்படுத்தும்.

இஸ்லாமியக் கல்விக்கான சரியான நுழைவாயில் பயமுறுத்து தலோ அச்சுறுத்தலோ அன்று. அன்பும் ஆசையூட்டலுமே அதன் ஆரம்பமாக இருக்க வேண்டும். படைப்பாளனும் அன்பாளனுமாகிய அல்லாஹ்வை நேசிப்பதோடு அது ஆரம்பிக்க வேண்டும். அவன் நேசிக்கும் நன்மை, சத்தியம், நீதி என்பவற்றின் மீதான நேசமாக அது அமைய வேண்டும். மனித வாழ்வு, அதில் முஸ்லிமுக்கு அல்லாஹ் விதித்த பிரதிநிதித்துவப் பணி, தனது தூதை நிறைவேற்றும் வகையில் அவன் மேற்கொள்ளும் போராட்டம், அன்பு நிறைந்த அல்லாஹ் வுடனான மறுமைச் சந்திப்பு, விசுவாசிகளின் நிரந்தர இன்ப உலகில் அல்லாஹ்வின் திருமுகத்தைப் பார்த்தல் முதலியவை பற்றிய நேசத் தின் மீது அந்த ஆரம்பம் கட்டமைக்கப்பட வேண்டும்.

குழந்தை வளர்ந்து நன்மை-தீமையைப் பிரித்தறியும் வாலிபக் கட்டத்தை அடையும் போதுதான் பொறுப்புகள் பற்றியும், செயல் களின் விளைவுகள் பற்றியும் அறிவூட்டப்பட வேண்டும். அப்போது தான், அவனிடம் பொறுப்புணர்வும், செயலூக்கமும், சுயகட்டுப் பாடும் உருவாகும். கடமைகளையும் உரிமைகளையும் மதித்தல், புனிதங்களை மதித்தல், நீதிக்கும் சீர்திருத்தத்துக்குமாக உழைத்தல் முதலிய பண்புகள் அவனிடம் வளரும். இவை அனைத்தும் சேர்ந்து அவனிடம் நன்மாராயமும் எச்சரிக்கையும் கலந்த முஸ்லிம் உள்ள மொன்றை உருவாக்கப் பங்களிப்புச் செய்யும்.

பிற துறைகளை விட அதிகமாக கல்வித் துறையிலேயே வஹீயின் இலக்குகளோடு அறிவியல் ஆய்வு முயற்சிகள் இணைந்து ஒன்றை யொன்று முழுமைப்படுத்த வேண்டியுள்ளது என நாம் கருதுகி றோம். மனித உள்ளங்களில் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கும் ஃபித்றாக்களையும் இயற்கைக் குணங்களையும் புரிந்து கொள்வ தற்கு இது அவசியமானது. இவ்வாறு மனித இயல்புகளையும்

தொடர்புகளையும் அறிவியல் ரீதியாக ஆராய்வதானது இஸ்லாத்தின் நோக்கங்களையும் அதியுயர் இலக்குகளையும் நிதர்சனப்படுத்துவ தற்கான வினைத்திறன் மிக்க வழியாக அமையும்.

இஸ்லாமியக் கல்வி தொடர்பான பின்னைய கால இஸ்லாமிய சிந்தனையின் அனுபவங்கள் அதன் போதாமையை எமக்கு சான்றுப் படுத்துகின்றன. அத்துறையில் புதிய நன்மைகளைச் சாதிப்பதற்குரிய வழித்தடங்கள் கண்டறியப்படுவதன் அவசியத்தை அவை உணர்த்து கின்றன.

இங்கு ஒரு விடயத்தை நாம் குறிப்பிட்டாக வேண்டும். 'ஃகிலாபா றாஷிதா' முடிவடைந்த பின்னர் கூட குறைஷிக் குல குழந்தைகளை நாட்டுப் புறங்களுக்கு சில காலம் அனுப்பி வைக்கும் வழக்கம் அறபு முஸ்லிம்களிடம் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளது. அக்காலத்தைய நாட்டுப்புற அறபிகளின் பண்புகளைப் பெற்று வளர வேண்டும் என்பதற்காகவே குழந்தைகள் அவ்வாறு அனுப்பி வைக்கப் பட்டார் கள். இந்த நாட்டுப்புற வளர்ப்பு முறையானது வெறுமனே உடலோடு மாத்திரம் சம்பந்தப்பட்டதாக இருக்கவில்லை. உளவியல் தாக்கங்க ளோடு சம்பந்தப்பட்டதாகவும் அது அமைந்திருந்தது. அந்த வகையில், குழந்தை அங்கு சுதந்திர உணர்வும், பலமான உளக் கட்டமைப்பும் கொண்டதாக வளர்ந்தது. பசுமையான உளவியல் உருவாக்கத்தின் அந்த ஆரம்பக் கட்டத்தில் குழந்தையிடம் சக்தியும் ஆற்றலும் துணிச்ச லும் வளர்ச்சியடைவதைத் தடுக்கக் கூடிய கட்டுப்பாடுகளோ பய முறுத்தல்களோ அழுத்தங்களோ அங்கிருக்கவில்லை. அதனால் குழந் தையின் உள்ளம் அங்கு சுதந்திரமானதாகவும் பலமானதாகவும் துணிச்சல் மிக்கதாகவும் வளர்ந்தது.

இஸ்லாமிய நாகரிக-அரச உருவாக்கக் கால கட்டங்களில் வாழ்ந்த பொதுவான மன்னர்களும் பிரபுக்களும் கூட இம்முறையிலேயே தங்களது புதல்வர்களை தலைமைத்துவப் பண்புக்கு தயார் படுத்தி னார்கள். ஆற்றல், துணிச்சல் முதலிய அடிப்படையான உளவியல் கட்டுருவாக்கப் பண்புகளை அப்புதல்வர்கள் நிறைவாகப் பெற்றதன் பிறகு நகர்ப்புறங்களுக்கு மீண்டும் வரவழைக்கப்பட்டு, பாடசாலை களிலும் ஆசிரியர்களிடமும் ஒப்படைக்கப் பட்டனர். அங்கு அவர்கள் பல்வேறு வகையான அறிவு ஞானங்களையும் உபதேசங்களையும் பெற்று அறிவு ரீதியான முதிர்ச்சியைப் பெற்றனர். அதன் பின்னர் அவர்களது கல்வி வாழ்வு நிறைவடைந்து, அறிவும், ஆற்றலும், துணிச்சலும், கண்ணியமும் பெற்று மிளிர்ந்தனர்.

இஸ்லாமியக் கல்வியியலுக்கான முற்குறிப்புகளின் போது இறைத் தூதர் (ஸல்) அவர்களது முறைமை மீது ஆய்வாளர்கள் கவனம் செலுத் துவது முக்கியமானதாகும். உம்மாவுக்கான அன்னாரது வழிகாட்டல் களதும் கூற்றுகளதும் முழுமொத்த அம்சங்களை மட்டுமன்றி, அன்னாரது கூற்றுக்களுள் 'ஸஹீஹ்' ஆனவை எவை என்பது குறித் தும், ஒவ்வொரு கூற்றும் தருகின்ற சரியான அர்த்தம் என்ன என்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட வேண்டும். அன்னார் தமது குழந்தை களையும் பிற குழந்தைகளையும் அணுகுவதற்குப் பின்பற்றிய அறி வியல் முறைமை என்ன என்பதையும், குழந்தை வளர்ப்பில் அன்னார் கைக்கொண்ட அன்பு, இரக்கம், பொறுமை, சகிப்புத்தன்மை என் பவை தொடர்பாகவும் ஆய்வாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். நபி (ஸல்) அவர்கள் தமது முழு வாழ்விலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிறார்களுக்கு அடித்ததில்லை என்பது இங்கு முக்கியமாக கவனிக் கப்பட வேண்டும். முகத்தில் அறைவது உளவியல் உருவாக்கத்தில் தாக்கம் ஏற்படுத்தும் என்பதால், அதனை எல்லா நிலையிலும் அன் னார் தடுத்திருந்தார்கள் என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இஸ்லாமியக் கல்வி முறைமை மற்றும் அதன் அறிவாய்வுப் பிரயோகம் என்பவை தொடர்பான இம்மீளாய்வு எல்லா வகையான கல்வித் துறைகளிலும் இடம்பெறல் வேண்டும். குழந்தைகளுக்கும் இளவல்களுக்கும் நாம் தெரிவு செய்து கொடுக்கும் விடயங்களும் அதனுள் அடங்கும். அவர்களது ஒவ்வொரு கட்டத்துக்கும் இயலு மைக்கும் பொருத்தமான வாசிப்புகளும், அல்-குர்ஆன், ஸுன்னா வசனங்களும் தெரிவு செய்யப்படல் வேண்டும். அந்த வசனங்கள் உள்ளடக்கியுள்ள மொழி, இலக்கியம், உயர் கருத்துக்கள் என்பவற் றில் மாத்திரமன்றி, அவை ஏற்படுத்தும் உளவியல் தாக்கங்களிலும் முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனெனில், இக்கட்டக் கல்வியின் உரைகல்லானது ஆசையூட்டுதல் அல்லது அச்சமூட்டுதல் சார்ந்த தொனியினால் எவ்வகையான உளத் தாக்கம் ஏற்படுகிறது என்பதைக் கவனிப்பதே. அதன் மூலமாகத்தான், குழந்தை வளர்ச்சி யின் ஒவ்வொரு கட்டத்துக்குமான உள மற்றும் அறிவு மட்டங்களின் கல்வியியல் நோக்கங்களை எம்மால் சாதிக்க முடியும்.

சிறுவர்களின் உளவியல் கட்டுருவாக்கத்தின் போது கடைப்பிடிக் கப்படும் நேர்நிலை அணுகுமுறை, அன்பு, திருப்தி முதலியவை சார்ந்த கருத்தாக்கத்துக்கும், அவர்களது நடத்தையிலும் உளவியல் கட்டுமானத்திலும் காணப்பட வேண்டிய கட்டுக்கோப்பு என்ற

கருத்தாக்கத்துக்கும் இடையில் முரண்பாடுள்ளது என எண்ணுவ தற்கே இங்கு இடமில்லை. ஏனெனில், கட்டுக்கோப்பும் ஒழுங்கும் செயற்படும் முறையைக் குறிப்பதாகும். பயிற்சி, பழக்கம், எடுத் துக்காட்டு, முன்மாதிரி என்பவற்றின் மூலமாகவே குழந்தைகள் அதனை கற்றுக் கொள்கின்றனர். சாதித்தல் மற்றும் வெற்றி பெறுதல் சார்ந்த நேர்நிலைத் தூண்டல்களும், தாம் நேசிக்கின்ற நபர்களது திருப்தியைப் பெற்றுக் கொள்ளும் விருப்பமும் குழந்தைகள் இப் பண்பை தம்மிடம் வளர்த்துக் கொள்ள உறுதுணையாக அமைய முடியும். எனவே இதற்கும், குழந்தைகளைப் பயிற்றுவிப்பதில் அன்பு, உற்சாகமூட்டல், ஆசையூட்டல் என்பன பிரயோகிக்கப்படு வதற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை.

அன்பு காட்டுவது குழந்தைகளைக் கெடுப்பதாகவும், அவர்களுக்கு அதிக சலுகை கொடுப்பதாகவும், கண்டிப்பும் பயமுறுத்தலுமே கட்டுக்கோப்பையும் ஒழுங்கையும் பழக்குவதாகவும் புரிந்து கொள் ளப் படலாகாது. அது தவறான புரிதல் மட்டுமன்றி, இயலாமை கொண்ட அணுகுமுறையும் ஆகும். உண்மையில் நாம் அன்பு, கட்டுக்கோப்பு ஆகிய இரண்டிலும் உரிய கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான், உம்மாவின் அங்கத்தவர்களிடம் வெற்றிகரமான குழுச்செயற்பாட்டு உணர்வையும், மதிப்பு, கண்ணியம், சக்தி, ஆற்றல், ஒத்துழைப்பு, அர்ப்பணம், ஒழுங்கு, சுதந்திரம் முதலிய பண்புகளையும் நாம் உருவாக்க முடியும்.

இன்றுள்ள பயிற்றுவித்தல் மற்றும் சீர்திருத்தம் சார்ந்த பணி யானது இறைத்தூதர் (ஸல்) அவர்களது காலத்து பயிற்றுவித்தல் மற்றும் சீர்திருத்தப் பணியிலிருந்து -சில அம்சங்களில்- வேறுபட்டது என்பதை உம்மாவின் தலைவர்களும், அறிஞர்களும், பயிற்றுவிப் பாளர்களும், துறைசார்ந்தவர்களும் புரிந்து கொள்வது அவசியம். இறைத்தூதர் (ஸல்) எதிர்கொண்ட சமூகத்தினர் பலமும் ரோஷ உணர்வும் கொண்டவர்களாக இருந்தனர். அதேவேளை, கடின இயல்பு, அறியாமை, கோத்திர வெறி என்பன கொண்டவர்களாகவும் அவர்கள் இருந்தனர்.

இன்றைய உம்மாவையும், அதன் அங்கத்தவர்களையும், அவர் களது பண்புகளையும் பொறுத்த வரை, அவர்களிடம் பல்வேறு பலவீனங்கள் காணப்படுகின்றன. இழிவு, அவநம்பிக்கை, முன்வந்து செயற்படாமை, வாழ்வை எதிர் கொள்ள முடியாமை முதலிய பல

நோய்கள் அவர்களைப் பீடித்திருக்கின்றன. 'ஃபாரோ' மன்னர்கள் இஸ்ரவேலர்களை அடக்கி இத்தகைய இழி நிலையிலேயே வைத்திருந்தனர். எனவேதான், அவர்களை விடுவித்து, உளச் சீர்திருத்தம் செய்து, சுதந்திர உணர்வு கொண்டவர்களாய் உருவாக்கும் பணி மூஸா (அலை) அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. புனித பூமியில் துணிச்சலோடும் ஆற்றலோடும் நுழைந்து, இஸ்லாத்தினதும் ஏக தெய்வக் கொள்கையினதும் சமூகத்தை உருவாக்கும் தலைமுறையாக அது அமைய வேண்டும் என்பதற்காகவே மூஸா (அலை) பாடுபட்டார்.

அவ்வாறே, உள்ளீட்டைப் புரிந்து கொள்ளாமல் வெளித் தோற்றங்களை மட்டும் பற்றிப் பிடித்திருத்தல் என்ற நோய் இன்று உம்மாவைப் பீடித்திருக்கிறது என்பதும் அவதானத்துக்குரியது. சிந்திக்கும் திறன் சுருங்கியமை, யதார்த்தத்தைப் புரிந்து அதன் சவால்களை உள்வாங்கவும் பதிலீடுகளை முன்வைக்கவுமான ஆற்றல் குறைவடைந்தமை என்பன இதற்கான காரணங்களாகும். இஸ்ரவேலர்களுக்கும் அவர்களது மத அறிஞர்களுக்கும் ஏற்பட்டிருந்த நிலையும் இதுதான். ஓர் ஏழை திருடி விட்டால் தண்டிப்பவர்களாகவும், செல்வந்தன் திருடினால் எதுவுமே செய்யாமல் விட்டு விடுபவர்களாகவும் அவர்கள் இருந்தனர். இந்த வகையில்தான், அவர்களது உள்ளங்களை உட்கருவை நோக்கி இழுக்கும் பணியாக ஈஸா (அலை) அவர்களது தூது அமைந்திருந்தது. அன்பினாலும், இதயசுத்தி கொண்ட அக்கறையினாலும் உள்ளங்களைக் கட்டியெழுப்புவதே அவர்களது பணியாக இருந்தது. ஏனெனில், அதன் மூலமாகத்தான் பிரதிநிதித்துவம், படைப்புகளைப் பராமரித்தல், பூமியை வளப்படுத்துதல் என்பவை தொடர்பான தனது பாத்திரத்தை மனிதனால் உண்மையாக ஆற்ற முடியும்.

ஆக- இன்றைய கல்வி சார் சீர்திருத்தப் பணி என்பது பலமான சமூகங்களைப் பயிற்றுவித்து முதிர்ச்சியடையச் செய்யும் பணியன்று. மாறாக, அது நோயும் பலவீனமும் கொண்டதோர் உம்மாவைக் கையாளும் பணி. பலம், துணிச்சல், புத்தாக்கம், முனைப்பு, அர்ப்பணிப்பு, கொடை, அன்பு, அக்கறை முதலிய பண்புகளை அந்த உம்மா இழந்து நிற்கிறது. பயம், பலவீனம், அடிமை மனோபாவம், மேலோட்டமான பார்வை முதலிய எதிர்மறைப் பண்புகள் அதனைப் பீடித்திருக்கின்றன. வரலாறு நெடுகிலும் அதில் ஏற்பட்டு வந்த பிளவு, எதேச்சதிகாரம், சிந்தனைப் பலவீனம், பிற்போக்கு என்பவற்றினாலேயே இப்பண்புகள் அதில் குடிகொண்டன.

முஸ்லிம் கல்வியியலாளர்கள் தங்களது பணி என்ன என்பதை மிகச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். கல்விக்கான இஸ்லாமிய அறிவியற் கோட்பாடொன்றைக் கட்டியெழுப்ப அவர்கள் உழைக்க வேண்டும். அக்கோட்பாடு தெளிவான அடிப்படைகளையும் இலக்கு களையும் வழிமுறைகளையும் கொண்டிருப்பது அவசியம். மிகக் குறிப்பாக, இளைய தலைமுறைக்கு வழங்கப்படும் உள்ளடக்கத்தில் அறிவு சார்ந்த பகுதிகள் எவை, உளவியல் சார்ந்த பகுதிகள் எவை என்ற தெளிவு அவர்களுக்கு அவசியம். உம்மாவின் உளவியல் சார் பகுதிகளை நன்குணர்ந்து, முறையான கல்விப் பணியினூடாக அவற்றைச் சீரமைப்பது எவ்வாறு என அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் அவர்களது பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் வழங்கப்படும் விடயதானங்கள் எவை என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அறிவுத் துறையில் மட்டுமன்றி, அதற்கு முன்னதாக உளவியல் துறையில் அவற்றின் தாக்கம் என்ன என்பது கவனிக்கப்பட வேண்டும். நம்பிக்கை, விழுமியப் பயிற்சி, கல்வி முதலிய அனைத்துப் பாடங்களிலும் இந்தக் கவனம் அவசியம்.

மனிதனது ஆன்மீகம், உளவியல், கருத்தியல், பௌதீகவியல் சார்ந்த வஹீயின் வழிகாட்டலின் கீழ் முஸ்லிம் உளவியலாளர்களும் சமூகவியலாளர்களும் உளவியல் மற்றும் சமூகவியல் கலைகளை இஸ்லாமியப் படுத்துவதற்கான தமது முயற்சிகளைச் செறிவாக்க வேண்டும். மனித உள்ளத்தையும், மனித சமூகத்தையும் பற்றிய இஸ்லாமிய கோட்பாட்டுருவாக்கப் பாதையொன்றை அவர்கள் வரைய வேண்டும். அத்தகைய பணிகளே முஸ்லிம் ஆசிரியர்கள் மனித உள்ளத்தின் இயல்பையும், அதன் வளர்ச்சிக் கட்டங்களையும், அதனைப் பயிற்றுவிக்கும் முறையையும் முழுமையாகப் புரிந்து, தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள உறுதுணையாக அமையும்.

### 2) இஸ்லாமியமும் அரசறிவியலும்:

அரசியல் தோற்றப்பாடு குறித்த ஆய்வைச் சுற்றியதாகவே அர சறிவியல் அமைகிறது. உம்மாவின் முன்னுரிமைகள், அதன் முழு மொத்த விவகாரங்கள், பொது நிறுவனங்கள், அரசியல் தலைமை களைத் தெரிவு செய்யும் வழிமுறைகள், உம்மாவுக்கான பொது வான அரசியல் நிகழ்ச்சிகளையும் கருத்தேற்புகளையும் தெளிவாக

வடிவமைத்தல், உம்மாவுக்கான ஒழுங்குகளையும் விதிமுறைகளை யும் சட்டங்களையும் ஏற்படுத்தல், அதன் இயந்திரங்களை நிர்வகித்து அவற்றின் சக்திகளையும் இயலுமைகளையும் திசைப்படுத்தல் முதலிய அனைத்தும் அரசறிவியல் எனும் கலைக்குள் அடங்கும்.

தலைமைகளைத் தெரிவு செய்தல், முன்னுரிமைகளையும் ஏற்பு நிலைகளையும் சட்டவாக்கங்களையும் தெளிவாக வடிவமைத்தல், பொது நிறுவனங்களின் கட்டமைப்பைப் புதுப்பித்தல், ஆற்றல்களை நெறிப்படுத்தல் என்பன எப்போதும் உம்மாவின் உயிர்ப்பு மிக்க விவகாரங்களாக இருந்து வருபவையாகும். இவ்விவகாரங்கள் -ஒரு புறத்தில்- உம்மாவின் அடிப்படையான பெறுமானங்களையும் கொள் கைகளையும் நம்பிக்கைகளையும் வழிகாட்டல்களையும் கொண்டி ருக்கின்றன. இப்பக்கத்தை நாம் யாப்பு அல்லது சித்தாந்தம் சார்ந்த பக்கம் எனக் குறிக்கலாம். மறுபுறத்தில், இவ்விவகாரங்கள் உம்மா வின் இயலுமைகள், பௌதீக-மானசீக-நாகரிகப் பலங்கள், வளங்கள், சமூக உருவாக்கச் சூழமைவுகள் என்பவற்றினை ஆதாரமாகக் கொண்டதாகும். அவ்வாறே, உம்மாவைச் சூழ்ந்திருக்கும் புறச் சவால் கள், சூழ்நிலைகள், உம்மா எதிர் கொள்ளும் பிற சமுதாயங்களது ஆற்றல்கள் என்பவற்றிலும் இவ்விவகாரங்கள் தங்கி நிற்கின்றன.

இக்கூறுகளையும் தொடர்புகளையும் அவற்றின் தாக்கங்களையும் புரிந்து கொள்ளல், அதற்கேற்ப தீர்வுகளையும் கோட்பாடுகளையும் முன்வைத்தல், அரசியற் களத்தில் புதிது புதிதாகத் தோன்றும் நிகழ்வுகளோடு இயைந்து செல்லல் என்பவற்றைச் சூழ்ந்ததாகவே அரசியல் ஆய்வும் செயற்பாடும் அமைந்திருக்கும். இவையனைத்தும் உம்மாவின் ஐக்கியத்தையும், வளர்ச்சியையும், ஸ்திரத்தன்மைக்கான ஆற்றலையும் சாத்தியப் படுத்துவனவாகும்.

அந்த வகையில், அரசியல் வாழ்வுடனும் பொது வாழ்வுடனும் தொடர்பான ஒழுங்குகள், நிறுவனங்கள், செயற்பாடுகள், சட்டங்கள் என்பன வளர்ச்சியடைந்த நிறுவனங்களின் வெளிப்பாடுகளாகும். அந்நிறுவனங்கள் உம்மாவின் நேர்நிலைப் பங்களிப்புக்கும், அங்கத்த வர்களது ஆக்கபூர்வ கூட்டுச் செயற்பாட்டுக்குமான சாத்தியப்பாட்டை ஏற்படுத்திக் கொடுக்கும் இலக்குடன் செயற்படும். மட்டுமன்றி, உம்மாவின் இயலுமைகளுக்கு உட்பட்ட வகையில், அதன் வளப் படுத்தல் சார்ந்த அசைவியக்கத்தை நெறிப்படுத்தும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்கும்.

இஸ்லாமிய வரலாற்று மாதிரிகளானவை இலட்சியவாத மாதிரிகளாகக் கொள்ளப்பட முடியாதவையாயினும், இஸ்லாமிய அரசியல் ஆய்வுகள் கவனத்தில் கொள்ளத்தக்க முக்கிய பாடங்களின் தொகுப்பாக அமைந்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை. இம்மாதிரிகளும் நிறுவனங்களும் ஒழுங்குகளும் தமக்கேயுரிய இயல்பான வரலாற்றையும் நாகரிகச் சூழமைவையும் கொண்டவையாகும். ஆயினும், இஸ்லாமிய அரசியல் ஆய்வானது இவ்வரலாற்றுப் பாடங்களிலிருந்து உரிய வகையில் பயன்பெற்றுக் கொண்டு முன்னேறிச் செல்ல முடியும்; அக யதார்த்தத்திற்கும் புறச் சூழ்நிலைகளுக்கும் அமைவாக, முடியுமான வரை இலக்குகளையும் நோக்கங்களையும் சிறப்பாகச் சாதிக்கும் வகையில், அதனால் செயலாற்ற முடியும்.

இஸ்லாமிய அரசறிவியல் ஆய்வானது இஸ்லாமிய வரலாற்று மாதிரிகள் தொடர்பாக இன்னொரு விடயத்தையும் கவனிப்பது அவசியம். அதாவது, அவ்வரலாற்று மாதிரிகளின் தாக்கங்களை சாத்தியப் படுத்துவதில் உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற நிறுவனங்கள் ஆற்றிய பாத்திரம் என்ன என்பதே அவ்விடயமாகும். ஏனெனில், அப்போதுதான் அந்த ஒழுங்குகளுக்கு நேர்ந்த முடிவின் காரணங்களையும், நேர்நிலையானதும் எதிர்மறையானதுமான படிப்பினைகளையும் உய்த்தறிவது சாத்தியமாகும். இது சாத்தியமானால் தான் உம்மாவின் பயணத்தை நாம் திட்டவட்டமாக வரையறுக்க முடியும். கூட்டுப் பிரக்ஞையை நோக்கி அதனை மீட்டெடுத்து, அதன் அங்கத்தவர்ளையும் சமூகத் தொகுதிகளையும் கூட்டாகச் செயற்பட வைக்க முடியும்; அதற்கான இயந்திரங்களையும் நிறுவனங்களையும் பொதுக் கொள்கைகளையும் கூட மீட்டுருவாக்கம் செய்ய முடியும்.

உம்மாவின் அங்கத்தவர்கள் அதன் யதார்த்தத்துக்கும் பெறுமானங்களுக்கும் உகந்த அரசியல் நிறுவனங்களை உருவாக்கும் இயலுமையைப் பெற்றால் மாத்திரமே ‘உம்மா’ என்ற கருத்தாக்கமும் அதன் கட்டுருவாக்கமும் சாத்தியமாகும்.

உம்மாவின் தலைமைகள், அதிலுள்ள நிறுவனங்களின் வகை மாதிரிகள், அவற்றின் செயல்வாதங்கள் என்பன உம்மாவின் சிந்தனா மற்றும் உளவியல் யதார்த்தங்களையே பிரதிபலிக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எந்தவொரு தலைமையாயினும் அல்லது பொது அரசியல் நிறுவனமாயினும் உம்மாவின் சிந்தனையோடும் உளவியலோடும் இணங்கிச் செல்லவில்லையெனில், அதனால் நிலைத்து நிற்கவோ தொடர்ந்து பயணிக்கவோ முடியாது. எனவே,

உம்மாவின் அரசியல் பயணத்தையும், அதன் தலைமைத்துவ வகை மாதிரியையும், நிறுவனங்களையும், அவற்றின் ஆற்றுகையையும் நாம் சீர்செய்ய விரும்பினால், அது நமது சந்ததிகளுக்கு நாம் கற்றுக் கொடுக்கும் சிந்தனா அமைப்பிலேயே தங்கியுள்ளது. அவர்களுக்கு வழங்கப்படும் உளவியல், நம்பிக்கை, சமூகவியல், அரசியல் கல்வி யமைப்பிலும் அது தங்கியுள்ளது.

ஸ்திரத்தன்மையும் பலமும் தெளிந்த நோக்கும் கொண்ட அரசியல் தலைமைகளும் நிறுவனங்களும் நேர்நிலைப் பண்புள்ள சமுதாய மொன்றை பிரதிபலிப்பவையாகும். அத்தகைய சமுதாயத்திடம் ஒருமுகப் படுத்தப்பட்ட பாரிய இலக்குகள் காணப்படும். அதன் உளவியல் கட்டமைப்பானது நேர்நிலைக் கருத்தாக்கங்களுக்கும் முன்னோடி நாகரிகப் புத்தாக்கத்துக்கும் வழியேற்படுத்திக் கொடுக் கும்; பொது வாழ்வை கண்ணியமான சமூக அமைப்பின் மீது நிறு வும். அச்சமூக அமைப்பு தனிமனித சுதந்திரத்துக்கும் உரிமைகளுக்கு மான பரந்த, நேர்நிலைச் சட்டகமொன்றைக் கொண்டிருக்கும்.

சீரான இஸ்லாமிய அரசியல் வாழ்வுக்கு ஆரோக்கியமான சிந் தனை கொண்ட உம்மா அவசியம். பலமான உளவியல் கட்டமைப்பும் சிறந்த நாகரிக நோக்கும் அதனிடம் இருக்க வேண்டும். அதன் அரசியல் தலைமையும் நிறுவனங்களும் வெகுமக்களின் நம்பிக் கையைப் பெற்றிருக்க வேண்டும். அதன் அங்கத்தவர்கள் நிலை மைகளை நன்கு புரிந்தவர்களாகவும், முதிர்ச்சியான ஆலோசனைகள் மூலமாக உம்மாவின் விவகாரங்களை நிர்வகிக்க பங்களிப்புச் செய்வோராகவும் இருக்க வேண்டும்.

இஸ்லாமிய அரசியல் சிந்தனை தொடர்பாகவும், உம்மாவின் அங்கத்தவர்களதும் இளைய தலைமுறையினதும் உள-சிந்தனா- அரசியல் கல்வி தொடர்பாகவும் ஆழமான மீளாய்வொன்று மேற் கொள்ளப்பட வேண்டும். அச்சிந்தனையும் கல்வியும் ஆரோக்கிய மான, நம்பிக்கை சார்ந்த, முறைவழிப்பட்ட உளவியல் நோக் கொன்றைப் பிரதிபலிப்பது அவசியம். அரசியல் வாழ்வின் இயல்பு குறித்தும், அதன் அடிப்படையான இலக்குகள் குறித்துமான பிரதி பலிப்பையும் அவை கொண்டிருக்க வேண்டும். வரலாற்று, அரசியல் நிறுவனங்களையும், அவை கொண்டிருந்த நோக்கங்களையும், சாதித்த வெற்றிகளையும், அவற்றில் ஏற்பட்ட குறைபாடுகளுக்கான காரணங் களையும் பற்றிய சார்பியமற்ற புரிதலையும் கூட அச்சிந்தனையும் கல்வியும் கொண்டிருக்க வேண்டும்.

அரசியல் வாழ்வின் அர்த்தம், அதற்கான சரியான முறைமைகள் என்பன பற்றிய புரிதல் நமக்குத் தேவை. உளவியல்-சிந்தனா-நம் பிக்கை சார் உருவாக்கம் மற்றும் அதற்கான சரியான முறைமைகள் பற்றிய புரிதலும் நமக்குத் தேவை. இவ்விரு புரிதல்களும் உம்மா வின் ஆரோக்கியத்தையும், அடையாளத்தையும், நாகரிக ஆக்க வலு வையும் மீட்டெடுக்க மிக அடிப்படையான திறவுகோல்களாகும்.

நவீன இஸ்லாமிய அரசியல் சிந்தனையானது ஆரம்பத்திலிருந்தே அரசியல் தோற்றப்பாடு குறித்தும், அரசியல் அறிவூட்டல் குறித்தும் கவனம் செலுத்துவது முக்கியமானது. சட்ட ரீதியான மேலோட்ட வடிவங்களைத் தாண்டி உம்மாவின் அங்கத்தவர்களிடம் அரசியல் விசுவாசத்தையும் கீழ்ப்படிவையும் ஏற்படுத்தக் கூடிய உட்கருவை நோக்கி அது ஆழ்ந்து செல்ல வேண்டும். உம்மாவின் அணிகளுக் கிடையில் நிலவும் கூட்டுணர்வுப் பலவீனம், அரசியல் கட்டுப் பாடின்மை, விசுவாசமின்மை என்பவற்றுக்கு அது முடிவு கட்ட வேண்டும்.

இஸ்லாமிய அரசியல் சிந்தனையினதும் நிறுவனங்களதும் மீட்டு ருவாக்கமானது உம்மாவின் அங்கத்தவர்களையும் சமூகங்களையும் பலவீனத்திலிருந்தும் இழிநிலையிலிருந்தும் மீட்டெடுப்பவையாக இருக்க வேண்டும். ஏனெனில் இப்பலவீனமும் இழிநிலையும் அவர் களை நாட்ட சுதந்திரமோ சுயாதீன முன்னெடுப்புகளோ அற்ற அடிமை மனோபாவத்தினுள் தள்ளி விட்டிருக்கிறது. மேலும், உள வியல் ரீதியாகவும் சிந்தனா ரீதியாகவும் பிரயோகிக்கப்படுகின்ற பயமுறுத்தற் கலாசாரத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படுவது அவ சியம். ஏனெனில், இப்பயமுறுத்துல் கலாசாரமே சத்தியம், சார்பிய மற்ற உண்மை, நன்மை, நீதி, சுய கௌரவம் என்பவற்றையும், அவற்றுக்குத் தலைசாய்க்கும் இஸ்லாமிய மனநிலையையும் விகார மான கருத்தாக்கங்களாக மாற்றியிருக்கின்றன. இழிவு, சிறுமை, அவநம்பிக்கை, இயலாமை, கண்மூடிப் பின்பற்றல் முதலிய பண்பு களையும் தோற்றுவித்திருக்கின்றன.

இறைத்தூதர் (ஸல்) அவர்களும் தோழர்களும் பிரதிநிதித்துவம் செய்த சரியான இஸ்லாமிய சிந்தனையே கண்ணியத்தையும் கௌர வத்தையும் தரவல்லதாகும். சத்தியம், நன்மை, பிறர் நலம் பேணல், அர்ப்பணம், சீர்திருத்தம், பிரதிநிதித்துவம் முதலிய கருத்தாக்கங் களை அதுவே பிரதிபலிக்கிறது. நிராகரிப்பு, பெருமை, வரம்புமீறல், பிடிவாதம், சீர்கேடு, மனோஇச்சை என்பவற்றின் விளைவுகளே இழிவும் சிறுமையும் ஆகும்.

உம்மா இன்று அடைந்திருக்கும் பலவீனம், வீழ்ச்சி, பின்னடைவு, எதிரிகள் மீதான பயம், இழிவு, அவர்களது சூழ்ச்சிகளுக்குப் பணிதல் என்பன அதன் அச்சம் நிறைந்த மனநிலையையும் இழிவு மனோ பாவத்தையுமே பிரதிபலிக்கின்றன. நோயுற்ற சிந்தனையும் விகாரமான உளவியல் கட்டமைப்புமே இதற்குக் காரணம்.

இஸ்லாமிய அரசறிவியல் ஆய்வுகளின் போது, வஹீயின் வசனங் களுக்கும், இயங்குநிலைச் சமூக-அரசியல் சட்டவாக்கத் தீர்மானங் களுக்கும், கல்வி சார் ஆய்வு முயற்சிகளுக்கும் இடையிலான வேறு பாடுகள் கவனிக்கப்பட வேண்டும். ஏனெனில் 'வஹீ' என்பது அல்லாஹ் இறக்கிய வேதமும், கூட்டல்-குறைத்தலின்றி அவனது தூதர் எத்திவைத்த வழிகாட்டல்களும் ஆகும். இயங்குநிலைச் சமூக-அரசியல் சட்டவாக்கத்தைப் பொறுத்த வரை, அது உம்மாவின் தலை மைகளது சன்மார்க்க நோக்கையும், சன்மார்க்க உயர் இலக்குகளுக்கு அமைவாக அவர்கள் இடும் திட்டங்களையும் குறிக்கும். இவை யனைத்தும் உம்மாவின் யதார்த்தம், ஆற்றல்கள், ஏற்புநிலை என்ப வற்றின் மீது செயல்பூர்வமான நோக்கினடியாகவும் அறிவார்ந்த சிந்தனையூடாகவும் நடைமுறைப்படுத்தப் படுபவை. இந்த இயங்கு நிலைச் சட்டங்களே உம்மாவின் அங்கத்தவர்கள் தமது பொதுவான செயற்பாடுகளிலும் சமூக வாழ்விலும் அவசியம் பின்பற்ற வேண்டிய சட்டங்களாக இருக்கும். எனினும், உம்மாவின் பொதுவான அரசியல் நோக்கிலிருந்து தனிநபர் அபிப்பிராயங்கள் ஏதோவொரு பகுதியில் வேறுபட்டிருப்பதற்குத் தடையேதும் கிடையாது. எவ்வாறாயினும், பொதுவான சட்டங்களுக்கும் ஒழுங்குகளுக்கும் அனைவரும் கட்டுப் படுவது கட்டாயமானது என்பதிலோ, பொது நடைமுறைகளில் அவையே பின்பற்றப்பட வேண்டும் என்பதிலோ மாற்றுக் கருத் தில்லை.

சிந்தனையாளர்களும் அறிஞர்களும் மேற்கொள்கின்ற கல்வி சார் அறிவாய்வுகளைப் பொறுத்த வரை, அவை ஓதப்படும் வஹீயும் அல்ல; உம்மாவின் இயங்குநிலை அரசியல் சட்டவாக்கங்களும் அல்ல. மாற்றமாக, அவை உம்மாவின் சிந்தனா வளத்தைப் பிரதி பலிப்பவை. பல்வேறு துறைகளிலான ஆய்வுகளின் மூலம் வெளிப் படும் உம்மாவின் அறிவியல் நோக்கை அவை பிரதிபலிக்கும். இயங்குநிலை அரசியல் சட்டவாக்கங்களும் கூட அவற்றினுள் அடங்க முடியும்.

அறிஞர்களதும் ஆய்வாளர்களதும் வேறுபட்ட அபிப்பிராயங்களாயினும் சரி, இயங்குநிலை அரசியல்-சமூக சட்டவாக்கங்கள் பற்றிய அவர்களது மதிப்பீடுகளாயினும் சரி, அவை எவரது கருத்தின் பெறுமானத்தையும் குறைத்து விடப்போவதில்லை. அறிஞர்களதும் ஆய்வாளர்களதும் சிந்தனைகள் கவனிப்புக்கும் புரிதலுக்கும் வடிகட்டலுக்கும் உட்படுகின்ற அளவுக்கு, உம்மா தனது சட்டவாக்க-அரசியல் தீர்மானங்களை மெய்மத் தன்மையோடும் முதிர்ச்சியோடும் எடுப்பதற்கு வாய்ப்பேற்படும். மட்டுமன்றி, அத்தீர்மானங்கள் உம்மாவின் பொதுக்கருத்தையும், உயர் இஸ்லாமிய நலன்களையும் வெளிப்படுத்துவனவாகவும் அமையும். அதேவேளை, குறிப்பிட்ட ஒருவரது அல்லது ஒரு குழுவினது அபிப்பிராயம் (அவர்கள் எவ்வளவு அந்தஸ்துள்ளோராக இருப்பினும்) இங்கு புறநடையாக அமைய முடியும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆக, அரசியல்-சமூக சட்டவாக்கப் பரிசீலனைகளும், கல்வி சார் ஆய்வுகளும் வெவ்வேறானவை என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. அரசியல் தலைமைகள் எதிர்கொள்ளும் அழுத்தங்களும், சிந்தனா-கல்விச் செயற்பாட்டின் சூழ்நிலைகளும் வெவ்வேறானவை என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. இத்துறைகள் ஒவ்வொன்றுக்கும் இவ்வாறு தனித்தனியான பரிசீலனைகள் காணப்பட்டாலும், அவை ஒன்றையொன்று முழுமைப்படுத்தும் துறைகளாகவும் உள்ளன. எனவே, இவ்விரு துறைகளுக்குமிடையில் போராட்டமும் முரண்பாடும் சந்தர்ப்ப வாதமும் காணப்படுவதாக எண்ணுவது தவறாகும்.

இறுதியில், மேற்குறித்த அனைத்துத் தரப்புகளும் உம்மாவின் மொத்தப் பயணத்தில் ஒன்றோடொன்று இடைவினை ஆற்றுபவையாகவும், பரஸ்பர ஊடுபாவு கொண்டவையாகவும், ஒன்றையொன்று முழுமைப் படுத்துபவையாகவுமே உள்ளன. எனவே, உம்மாவின் சிந்தனையைக் கட்டமைக்கும் இக்கூறுகளுக்கிடையில் செயற்கையாக எழும் மோதல்கள் தவறான புரிதலால் தோன்றுபவையாகும். இத் தவறான புரிதலானது உம்மாவின் சிந்தனையை பலவீனப்படுத்துவது மட்டுமன்றி, உம்மாவின் கட்டமைப்பைச் சிதைத்து, அதன் சக்தியையும் செயலாக்கத் திறனையும் அழித்து விடும்.

உம்மாவின் கட்டமைப்பிலும் சிந்தனையிலும் காணப்படுகின்ற மாறா அம்சங்களை வரையறுத்து இனங்காண்பது, அரசியல், சமூகவியல், இஸ்லாமியவியல் சார்ந்த ஆய்வாளர்களது முக்கிய

கடமைகளுள் ஒன்றாகும். சட்டவாக்க-ஒழுங்கமைப்புத் துறைகளில் இம்மாறா அம்சங்களைக் கையாளும் முறையையும், அவ்வப்போது தோன்றும் சவால்களுக்கும் மாற்றங்களுக்கும் முகங்கொடுக்கும் முறையையும் அவர்கள் அடையாளப்படுத்த வேண்டும். அப்போது தான் அரசியல்-சட்டவாக்க ஆற்றலை வினைத்திறனோடும் அறிவார்ந்த முறையிலும் சாத்தியப்படுத்த முடியும்.

மேற்கிலோ கிழக்கிலோ உள்ள நிறுவனங்களாலும் ஒழுங்கு களாலும் இஸ்லாமிய உம்மாவின் அரசியல் தேவைகளை சாத்வீக மாக வெளிப்படுத்த முடியாது. ஏனெனில் -பிற சமுதாயங்களைப் போலன்றி- இஸ்லாமிய சமுதாயம் உண்மையையும் நீதியையும் புனிதக் கடமையாகவே கருதுகிறது. வேத வெளிப்பாடு (வஹீ), படைப்பியல்பு (ஃபித்றா), பகுத்தறிவு (அக்ல்) என்பவற்றில் ஸ்பரிசி க்கப்படும் உண்மையை சார்பியமற்ற உண்மையாகக் கருதி அதனை அடைந்து கொள்ளவே அது முயல்கிறது அந்த உண்மையைக் கண்டடைவதற்கான அடிப்படையான முறைமையாகவே 'ஷூறா' என்னும் கலந்தாலோசனையை அது நோக்குகிறது. உரிமைகளையும் கடமைகளையும் நிலைநாட்டுவதும், அவற்றைப் பேணி ஒழுகுவதுமே பொது நலனையும் தனிப்பட்ட நலனையும் சாதிப்பதற்கான சரியான வழி என்று அது நம்புகிறது. அந்த வகையில், மேற்கத்திய கட்சி சார் வார்ப்புகள் இஸ்லாமிய 'ஷூறா'வின் மெய்மத்தன்மையையோ சுயா தீனத்தையோ சாத்தியப்படுத்தப் போவதில்லை. மறுபுறத்தில், கீழைத் தேய மார்க்ஸிய உயரடுக்கின் சர்வதிகாரப் பாணியிலான ஆட்சி யொழுங்கு கூட இஸ்லாம் மார்க்கத்துக்கு மிகத் தொலைவிலேயே உள்ளது.

பல்வேறு நாகரிகங்களும் சமுதாயங்களும் கட்டமைத்திருக்கும் அடிப்படைகளையும் வேர்களையும் பற்றிய ஆய்வை முஸ்லிம் சிந்த னையாளர்களும் சமூக-அரசியல் ஆய்வாளர்களும் இன்னும் ஆழப் படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான், அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளையும், அவ்வேறுபாடுகள் எவ்வாறு பல்வேறு ஒழுங்கு களிலும் செயற்பாடுகளிலும் சாதனைகளிலும் வெளிப்படுகின்றன என்பதையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியும்.

மேற்கு நாகரிகத்தின் உட்கருவானது முற்றுமுழுக்க பகுத்தறிவு வாத-சடவாதக் கருத்தாக்கத்தின் மீது கட்டமைந்திருந்தாலும், பெறு மானம் சார்ந்த ஆன்மீகப் பக்கமொன்றை இன்றும் அதில் காண முடிகிறது. புராதன பாரம்பரியங்களின் எச்சசொச்சங்கள் இன்னும்

அதில் காணப்படுவதே இதற்குக் காரணமாகும். மத்திய காலப்பிரிவில் இஸ்லாமிய நாகரிகம் பெற்றிருந்த ஒப்பீட்டளவிலான பலத்தின் காரணமாக, மேற்கு நாகரிகத்தினால் இப்பாரம்பரியங்களை முற்றாகத் துறக்க முடியவில்லை. மேற்கு சமூகங்களுக்கு இஸ்லாமிய நாகரிகத்துடன் இருந்த இறுக்கமான தொடர்பு மேற்கின் மதத்திலும் திருச்சபையிலும் கூட பல்வேறு சீர்திருத்தங்கள் ஏற்பட வழியமைத்தது.

மேற்குலகின் பகுத்தறிவுவாத-சடவாதக் கருத்தாக்கத்தின் நிழலில் தான் தனிநபர்வாத ஜனநாயக ஒழுங்குகள் அங்கு நிலைபெற்றன. அவ்வொழுங்குகள் பாராளுமன்றப் பெரும்பான்மை முறைமையே மிகச் சிறந்த வடிவம் எனக் கருதின. அதனூடாகவே தனிமனிதர்கள் தங்களது தீர்மானத்துக்கும் அபிப்பிராயத்துக்கும் விருப்பத்துக்கும் அமைவாக தத்தமக்குரிய சிறப்புச் சலுகைகளைப் பெற்றிட முடியுமான உடன்படிக்கையொன்று கைகூடும் என அவை எதிர்பார்த்தன.

பின்னர், மேற்கத்திய சீர்திருத்த இயக்கமாக மார்க்ஸியம் வந்தது. அது மனிதப் பகுத்தறிவைத் திசை திருப்பியது; மதத்தை மறுதலித்தது; நாத்திகத்தை வெளிப்படையாகவே பிரகடனப்படுத்தியது; சட வாழ்வைத் தேடி அலையும் நிலைக்கு மனிதனைக் கொண்டு சேர்த்தது. பொருளாதாரமும் சடவாதத் தேவைகளுமே மனித வாழ்வையும் வரலாற்றையும் இயக்கி வந்திருப்பதாக அது கருதியது. இப்புதிய போக்கானது மேற்கு நாகரிகத் தளங்களை அவற்றின் உச்ச நிலைக்குக் கொண்டு சென்றன. விளைவாக, மனித வாழ்வும் இருப்பும் ஒரு சர்வாதிகாரக் கருத்தாக்கத்துக்கு உட்பட்டது. மனித நாட்டம் என்பது பொருளற்றுப் போனது. சர்வாதிகார ஆட்சியொழுங்குகள் உருவாகி, மனித சமூகங்களை மந்தைக் கூட்டங்களாக நடாத்தும் நிலையை இச்சிந்தனை உருவாக்கியது. வஹீயின் ஆன்மீக-விழுமியப் பரிமாணங்களுடன் கூடிய வழிகாட்டல் மேற்குலகுக்கு கிடைக்காமற் போனமை, சடவாதப் பொறியில் அது அகப்பட்டுக் கொண்டமை, பகுத்தறிவின் குறைபாடு என்பனவே மேற்குலகின் சமூக, பண்பாட்டு, பொருளியல் நெருக்கடிகளுக்கு மூல காரணமாய் அமைந்தன.

இஸ்லாம் மேற்கத்திய சிந்தனையுடன் அதன் அடிப்படைத் தளங்களிலிருந்தே முரண்படுகிறது. ஏனெனில், இஸ்லாம் மனிதனை அவனது பல்பக்கப் பரிமாணங்களுடன் ஏற்றுக் கொள்கிறது. சத்தியம்-அசத்தியம், சரியானது-தவறானது, நன்மை-தீமை என்பவற்றுக்கிடையிலான தெரிவுச் சுதந்திரத்தின் செயல்வாதமே இவ்வாழ்வில் மனித இருப்பின் இலட்சியம் என அது கூறுகிறது. இச்சித்தாந்தமானது

இலட்சியத்தையும் சத்தியத்தையும் கண்டடையும் பணியை சார்பிய மற்ற உண்மையாக நிலை நிறுத்துகிறது. மனிதனே அதனை தேடிக் கண்டடைய வேண்டும். அதனால்தான், இஸ்லாமியக் கருத்தாக்கத் தின் படி ஆட்சி என்பது பெரும்பான்மையின் (அதாவது ஜனநாய கத்தின்) ஆட்சியாக அன்றி, 'ஷூறா' என்னும் கலந்தாலோசனையின் அடிப்படையிலான ஆட்சியாக கொள்ளப்படுகிறது. அதாவது, உம்மா வுக்கு முன்னால் எழும் விவகாரங்களில் சரியானதும் நன்மையானதும் உண்மையானதும் எது எனக் கண்டறியும் நோக்குடன் பல்வேறு அபிப்பிராயங்கள் குறித்து கலந்தாலோசனை செய்வதை இது குறிக் கிறது. நன்மையோ உண்மையோ அற்ற தனிநபர் விருப்பங்கள் புறந்தள்ளப்பட்டு, வஹீயின் வழிகாட்டல், படைப்பியல் விதிகள், சமூகத்தின் தேவைகள் என்பவற்றுக்கு அமைவாகவே இச்செயற்பாடு இடம்பெறல் வேண்டும்.

இந்த வகையில், 'ஷூறா' என்ற கருத்தாக்கத்தின் இயங்குதளமும் இலக்கும் ஜனநாயகம் என்ற கருத்தாக்கத்தின் இயங்குதளத்திலிருந் தும் இலக்கிலிருந்தும் வேறானவை என்பது தெளிவு. ஒரு சில பகுதிகளில் இரு கருத்தாக்கங்களுக்கும் இடையில் ஒற்றுமை காணப் படுவது உண்மைதான். உதாரணமாக, உண்மையைக் கண்டறிவதில் மயக்க நிலை தோன்றும் போதும், ஏகோபித்த தீர்மானங்கள் எட்டப் பட முடியாத விவகாரங்கள் தோன்றும் போதும் பெரும்பான்மை அபிப்பிராயத்தை ஏற்றல் என்ற விடயம் இரு கருத்தாக்கங்களுக்கும் பொதுவாக இருப்பதைக் குறிப்பிடலாம். ஏனெனில், பெரும்பான்மை அபிப்பிராயம் என்பது சரியான அபிப்பிராயம் என்பதற்கான சாத்தி யப்பாட்டை அதிகம் கொண்டதாகும். அந்த வகையில்தான், எந்த வொரு பொதுத் தீர்மானத்தையும் நிறைவேற்றுவதற்கான குறைந்த பட்ச அரசியல் தளமாக அது அமைகிறது. ஆயினும், 'ஷூறா' சார்ந்த நிறுவனங்களும், ஒழுங்குகளும் ஜனநாயக ஒழுங்குகளிலிருந்தும், நிறுவனங்களிலிருந்தும், செயன்முறைகளிலிருந்தும் வேறுபட்டவை யாகும். ஏனெனில், ஜனநாயகம் சார்ந்த ஒழுங்குகளும் செயன்முறை களும் ஆளும் தரப்பு அங்கத்தவர்களது விருப்பங்களிலிருந்தும் அபிப் பிராயங்களிலிருந்தும் பிறக்கின்ற சுய தீர்மானமொன்றைப் பெறவே எப்போதும் முயற்சிக்கும். அதில் அவர்களது நலன்களும் அவர்கள் சார்ந்த சமூகங்களின் நலன்களுமே முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

இஸ்லாமிய அரசியல் ஒழுங்கானது இவ்வாறு தனது தர்க்கத்தி லும் இயல்பிலும் மேற்கத்திய ஜனநாயக அரசியல் ஒழுங்கிலிருந்து

வேறுபட்டிருக்கும் போது, இஸ்லாமிய நிறுவனங்களும் செயற்பாடு களும் அந்த இஸ்லாமிய இயல்பைப் பிரதிபலிப்பது அவசியமாகும்.

அந்தவகையில், இஸ்லாமிய அரசியல் ஒழுங்கானது நாட்ட சுதந்தி ரத்தையும், அதன் பின்னொட்டுகளான நம்பிக்கைச் சுதந்திரத்தையும், கட்டுக்கோப்பான சமூக செயற்பாட்டுச் சுதந்திரத்தையும் பிரதிபலிப் பது அவசியமாகும். அவ்வாறே, உம்மாவின் சிந்தனையையும் சித் தாந்த நிலைப்பாட்டையும் கூட அது பிரதிபலிக்க வேண்டும். உம்மா வின் சித்தாந்த நிலைப்பாடானது நன்மை, உண்மை, அனைவருக்கு மான நீதி என்பவற்றின் மீது கட்டமைந்திருப்பது தெரிந்ததே. வஹீயின் கொள்கைகள், பெறுமானங்கள், படைப்பியல்பு விதிகள் என்பவற்றினூடாகவும், பொருத்தமான 'ஷூறா' வழிமுறையின் மூல மாகவுமே இந்த நன்மையும் உண்மையும் நீதியும் தீர்மானிக்கப்படும். உம்மாவை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், அதன் தெரிவி லிருந்து பிறக்கும் தலைமைகள் இப்பணியை மேற்கொள்வர். அதே வேளை, இத்தலைமைகள் தம்மளவில் மட்டுமன்றி, தமது கட்டுப் பாட்டிலிருக்கும் நிறுவனங்கள் மற்றும் வசதிவாய்ப்புகள் விடயத் திலும் அறிவுபூர்வமாகவும் கட்டுக்கோப்பாகவும் நடந்து கொள்வர்.

இம்முன்வைப்பானது ஒழுங்குகளைப் பற்றிய முழுமையான நோக்கின் முக்கியத்துவத்தையும், அவற்றுக்கிடையிலான ஒப்பீட் டின் முக்கியத்துவத்தையும் விளக்குகிறது. அசலான இஸ்லாமிய ஒழுங்குகள் பற்றிய சிந்தனைத் தொடக்கத்துக்கான பிரதான கோடு களை வரைந்து கொள்ள இம்முன்வைப்பு உதவும். அவ்வொழுங்கு கள் பிறரது அனுபவங்களிலிருந்து பயன் பெறலாம். ஆனால் கண் மூடித்தனமான பின்பற்றுதலாக அமைந்து விடக் கூடாது. ஏனெனில் பிறரது தொடங்கு தளங்களும் இறுதி இலக்குகளும், நமது தொடங்கு தளங்களிலிருந்தும் இறுதி இலக்குகளிலிருந்தும் முற்றிலும் வேறு பட்டவை.

இந்த வகையில், அரசியல் செயற்களத்தில் இஸ்லாத்தின் ஆன் மாவை வெளிப்படுத்த முடியுமான ஒழுங்கு என்ன? அதனை எவ் வாறு சாத்தியப் படுத்தலாம்?

இஸ்லாமிய ஒழுங்கிற்கென தனியான நிபந்தனைகளும், (அகீதா ரீதியான) சித்தாந்தத் தகைமைகளும் காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. அவை யாப்பு ரீதியாகவும், கல்வி, அரசியல் அறிவூட்டல் என்பவற்றின் மூலமாகவும் உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும்.

இஸ்லாமிய அரசியல் ஒழுங்கும், அதில் அரசியல்-சட்டவாக்க நிறுவனங்கள் செயற்பட வேண்டிய முறைமையும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறே, பல்வேறு அரசியல் குழுக்கள் உரிய வகையிலும் நெகிழ்வுத் தன்மையோடும் அரசியல் ரீதியான ஒழுங்கு படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அங்கு 'ஷூறா'வும், இஸ்லாமிய நோக்கிலான தேர்ச்சியும், அந்நோக்கின் ஆற்றுகைக்கான நிபந்தனைகளும் பேணப்படல் வேண்டும். அதாவது, அடிப்படையான வாழ்வியல் துறைகளிலும், பொதுவான சமூகப் பணிகளிலும் காணப்படுகின்ற தேவைக்கேற்ப பல்வேறு அதிகாரப் பொறுப்புகளும், ஆலோசனை மற்றும் தீர்மான சபைகளும் உருவாக்கப்பட முடியும் என்பதே இதன் பொருளாகும்.

கருத்து வெளிப்பாட்டுக்கும் அரசியல் ஒழுங்கமைப்புக்குமான வழிமுறைகள் கூட நெகிழ்வான வடிவங்களைப் பெற்றிருப்பது அவசியமாகும். உம்மாவின் பிரதிநிதிகளும் தலைவர்களும் ஒவ்வொரு முக்கியமான விவகாரம் தொடர்பாகவும் புதிதுபுதிதாகத் தோன்றும் மனவேற்பு நிலைகளுக்கு அமைவாக ஆக்கபூர்வமாக செயற்படத்தக்க வகையில் அவ்வடிவங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், இஸ்லாமிய அரசியல் ஒழுங்கில் அரசியல் கட்சிகள் என்பவை கட்சி ரீதியான முன்நிபந்தனைகளுக்கோ நிலைப்பாடுகளுக்கோ உட்படாத பாராளுமன்றக் குழுக்களை ஒத்தவையாகும். அவற்றின் செயற்பாடும், நிகழ்வுகளுடனான இடைவினையாற்றலும் விடயவாரியான ஏற்புநிலைகளின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். 'ஷூறா'வின் அடியான புரிதல் மற்றும் முறைமை என்பவற்றினூடாகவே அவை நிலைப்பாடுகளையும் தீர்மானங்களையும் எடுக்கும்.

முன்னேறிய நாடுகள் என அறியப்படும் தேசங்களின் சமகால அரசியல் வாழ்வில் பல மாற்றங்களை நாம் காண்கிறோம். அரசியல் வாழ்வை ஒழுங்கு படுத்துவதிலும், சீர்கேடுகளிலிருந்து அதனைப் பாதுகாப்பதிலும் உம்மாவின் வகிபாத்திரம் எவ்வளவு மகத்தானதாக அமைய முடியும் என்பதை அம்மாற்றங்கள் நமக்குத் தெளிவு படுத்துகின்றன. அந்தவகையில், அரசியல் மேடைகளைக் கட்டியெழுப்பவும், அரசியல் செயற்பாட்டை முன்னேற்றமடையச் செய்யவும் அது பாரிய பணியை ஆற்ற வேண்டியுள்ளது. அரசியல் தலைமைகளின் சுயாதீனத்தையும், சார்பியமற்ற வகையில் அவை தீர்மானம் எடுப்பதையும் உம்மா உத்தரவாதப்படுத்த வேண்டும்.

மட்டுமன்றி, அரசியல் தலைமைகள் உம்மாவின் வெகுமக்களையும் அவர்களது நலன்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதும் உத்தர வாதப் படுத்தப்படல் வேண்டும். இறுதியில், இந்த அனைத்தும் இணைந்து மாற்று ஒழுங்குகளுக்கான சாத்தியப்பாடுகள் குறித்துச் சிந்திக்கும் துணிச்சலை முஸ்லிம் சிந்தனையாளர்களுக்கும் சட்ட வாக்கத் துறையாளர்களுக்கும் வழங்குவது அவசியமாகும். கண் மூடிப் பின்பற்றலுக்கோ போலிச் சோடனைகளுக்கோ அவசிய மின்றி, இஸ்லாமிய உம்மாவின் தேவைக்கும், அதன் நம்பிக்கை மற்றும் உளவியல் கட்டியல்புக்கும் ஏற்ற வகையில் அம்மாற் றொழுங்குகளை அவர்கள் சிந்திக்க முடியும்.

இஸ்லாமிய உம்மா புவியெங்கும் நீட்சி பெற்று, பல்வேறு வர லாற்று-நாகரிக-இயற்கைச் சூழமைவுகளில் வாழும் சமூகங்களை உள்ளடக்கிய வகையில் பரந்து கிடக்கிறது. இதனை நாம் கவனத்திற் கொண்டால், இஸ்லாமிய நாடுகளின் ஆட்சி சார்ந்த பொறுப்புக்களை நகரம், கிராமம், மாவட்டம், மாநிலம் முதலிய பல மட்டங்களிலும், நெகிழ்வுத் தன்மை கொண்ட கூட்டாட்சி முறையிலும் பகிர்ந்தளிப் பதே இஸ்லாமிய நாடுகளின் இன்றைய நிலைமைகளுக்குப் பொருத்த மானது என்பதைப் புரிந்து கொள்ளலாம். மட்டுமன்றி, அது உம்மா வின் தலைமைகளுக்கு அரசியற் செயற்பாட்டையும் இலகுபடுத்தும். பொறுப்புகளைச் சுமப்பதிலும், சமூக-அரசியல் செயற்பாட்டுக்குப் பொருத்தமானவற்றை முன்னுரிமைப் படுத்துவதிலும் உம்மாவின் அங்கத்தவர்களும் குழுக்களும் பங்களிப்புச் செய்வதற்கான சிறந்த சட்டகம் ஒன்றையும் அது வழங்கும்.

இஸ்லாமிய அரசறிவியலுக்கும் அரசியற் பணிக்குமான இஸ்லா மிய முற்குறிப்புகளானவை ‘ஃகிலாபத்’ முறைமை பற்றிய புரிதலில் தேவையான பாய்ச்சலொன்றை ஏற்படுத்த வேண்டும். ‘ஃகிலாபத்’ ஒழுங்கு என்பது வரலாற்று ரீதியானதோர் ஒழுங்கு எனவும், உம்மா தனது முன்னைய காலங்களில் அப்பியாசம் செய்த அதே வரலாற்றுப் பண்புகளையே தொடர்ந்தும் வார்ப்படம் செய்ய வேண்டும் எனவும் நிலவுகின்ற பொதுப் புரிதலில் ஏற்பட வேண்டிய வகைமாதிரியான பாய்ச்சல் அது. ‘ஃகிலாபத்’ ஒழுங்கு என்பது குறிப்பிட்ட சில இலக்கு களைச் சாதிக்கவும், குறிப்பிட்ட சில பெறுமானங்களையும் கொள்கை களையும் மனித வாழ்வில் ஆழப்பதித்து அதன் உலக-மறுமை நலன் களைப் பாதுகாக்க விழைந்ததோர் அசைவியக்க ஒழுங்கு மட்டுமே என்ற புரிதலை நோக்கி அப்பாய்ச்சல் இடம்பெற வேண்டும். அந்த

வகையில் நோக்கினால், உம்மாவின் ஒழுங்குகளையும் நிறுவனங் களையும் செயற்பாடுகளையும் பற்றிய இஸ்லாமிய நோக்கைப் புதுப்பிப்பதற்கும், உம்மாவின் நலன்களுக்கு உதவும் வகையில் அவற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் எந்தத் தடையும் இருக்க முடியாது.

ஃகிலாபத் ஒழுங்கு என்பது ஓர் இறுகிய அரசியல் ஒழுங்கு என்றும், அதில் அதிகாரமும் ஆட்சியும் ஓரிடத்தில் குவிமையம் கொண்டி ருக்கும் என்றும் பல ஆய்வாளர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இது குறைபாடானதும் மிக மேலோட்டமானதுமான புரிதலாகும். அந்தப் புரிதலுக்கு எத்தகைய புனிதத்துவமும் கிடையாது. அந்த வகையில், உம்மா தனது இஸ்லாமிய இலக்குகளையும் உலக-மறுமை நோக்கங்களையும் சாதிப்பதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் அரசியல் ஏற்பாடு எத்தகையதாக இருந்தாலும், அது ஃகிலாபா ஒழுங்கின் உட்கரு பற்றிய சரியான புரிதலாகவே அமையும். எனவே, ஆய் வாளர்கள் மேலோட்டமான வரலாற்று வடிவங்களில் மாத்திரம் கவனம் செலுத்துவது தகாது. அவ்வாறு உட்கருவை விடுத்து, வரலாற்று வடிவங்களில் மாத்திரம் சுருங்கி விடுவதற்கு அனுபவக் குறைபாடும் நடைமுறை சார்ந்த அறிவின்மையுமே காரணமாகும். அதனால், புரிதல்களில் கோளாறு தோன்றி, உணர்ச்சிக்கும் கற்ப னைக்கும் இடமேற்பட்டு விடுகிறது.

உம்மாவின் வாழ்வு, ஒழுங்கு, இயலுமைகள், இட வேறுபாடுகள், நலன்கள், கண்ணோட்டங்கள் என்பவற்றில் இஸ்லாமிய உயர் இலக்குகளும் நோக்கங்களும் பெறுகின்ற வகிபாத்திரத்தை அறிந்து கொள்வதும் அரசறிவியலுக்கான இஸ்லாமிய முன்னேற்பாடுகளில் ஒரு பகுதியே.

'யதார்த்தவாதமும் கற்பனாவாதமும்' என்ற கருத்தாக்கம் மேற் கத்திய அரசியல் சிந்தனைச் சட்டகமாகும். விழுமியங்கள், அளவு கோல்கள் என்பவை எல்லாம் யதார்த்தத்துக்கும் அதன் தேவைகளுக் கும் எதிரானவை எனக் கருதி அவற்றை இரண்டாம் பட்சமாக நோக்குவதே இச்சிந்தனையின் இயல்பாகும். மேற்கத்திய மனிதனின் அறிவுக் கலாசாரத்தில் 'வஹீ' என்ற மூலாதாரத்தின் மீது ஏற்பட்ட திரிபு, சத்தியமும் அசத்தியமும் கலந்து குழம்பிப் போனமை, மனித னின் படைப்பியல்பைக் கையாள்வதில் ஏற்பட்ட கோளாறு என்ப வற்றினால், முழுமொத்த பிரபஞ்சப் பார்வைக்கான சாதனங்களை

அவன் இழந்தமையே அங்கு இச்சிந்தனை தோன்றக் காரணமாகியது. அத்தகைய சூழ்நிலையில் மேற்கு மனிதன் இவ்வாறு சிந்தித்தது நியாயமெனினும், இஸ்லாத்தில் ‘கற்பனாவாதம்’ என்ற கருத்தாக் கத்துக்கு இடமில்லை. இஸ்லாம் கொண்டிருக்கும் இலக்குகளும் வழிகாட்டல்களும் மனிதக் கற்பனைகளோ ஆசைகளோ அல்ல. மாறாக, அவை படைப்பிலும் ஃபித்றாவிலும் அடிப்படையாக உள்ள உண்மைகளாகும். அந்த உண்மைகளின் மீதே வானங்களும் பூமியும் கூட கட்டமைந்திருக்கின்றன.

இஸ்லாத்தில் இருப்பது வேறு வகையானதோர் ஒப்புமை நிலை யாகும். சத்தியம்-அசத்தியம், நன்மை-தீமை, நேர்ழி-வழிகேடு, சீரொ ழுங்கு-பிறழ்வு முதலிய ஒப்பீடுகளே அதில் உண்டு. அந்த வகையில், இஸ்லாமிய சமூக ஒழுங்கில் கற்பனாவாதமோ யதார்த்தவாதமோ கிடையாது. சீர்கேட்டுக்கும் பிறழ்வுக்கும் வழிகேட்டுக்கும் எதிரான சத்தியமும் நேர்வழியும் சீரொழுங்குமே அங்கிருக்கும். பொறுப் புணர்வு, வினைமை மிக்க உழைப்பு, அழகிய செயற்பாடு என்பவற் றில் தனிமனிதர்களும் சமூகங்களும் கொண்டிருக்கும் பங்கிற்கேற்ப இவ்விரு நிலைகளுக்கும் இடையிலான அவர்களது அந்தஸ்தும் செயல்களும் வேறுபட்டு அமையும்.

வஹீயின் வழிகாட்டலும், உண்மை, நன்மை, நீதி என்பவற்றை நாடும் சீரான படைப்பியல்பும் இன்றேல், மனிதனிடம் தீமையும் பாவமும் அத்துமீறலுமே எஞ்சி நிற்கும். சத்தியத்தின் தாக்கமும், இலக்கு சார் விழுமியமும், நன்மை நாட்டமும், நீதியும் இன்றி மனித சமூகம் சீரடைய முடியாது. சீரான விழுமியங்கள் காணப்படும் அளவுக்கே தனிநபர்களும் சமூகங்களும் சீர்பெறுவர். இவ்விரு தரப்பினதும் யதார்த்தம் சீர்பெற்று, பிறழ்வுக்கும் வழிகேட்டுக்குமான தாக்கக் காரணிகள் குறைவடைய வேண்டுமெனில், அங்கு உண் மையும் விழுமியமும் தவிர்க்க முடியாத நிபந்தனைகளாகும்.

முற்காலம் தொட்டே இஸ்லாமிய சிந்தனையைப் பீடித்துள்ள கால-இடச் சூழமைவுகள் சார்ந்த முரண்பாடுகளிலிருந்து அதனைத் தூய்மைப் படுத்துவதும் முக்கியமானதாகும். ஏனெனில், இத்தகைய முரண்பாடுகளே வசனங்களையும் நிகழ்வுகளையும் அவற்றின் உண்மை நிலையையும் விட்டு இஸ்லாமிய சிந்தனையைத் திசை திருப்பியன. நிகழ்வுகளின் கால-இடச் சூழமைவுகளைப் புறக் கணிக்கும் நிலைக்கும் அதனை இட்டுச் சென்றன. ஏதோவொரு தரப்பின் ஆட்சி மற்றும் அரசியல் நோக்கங்களுக்கும் மனச்சாய்வு

களுக்கும் இடமளிக்கும் வகையில் இவையனைத்தும் நடந்தேறின. இந்த வகையில்தான், -பாரசீக இன வெறிக்கும் அறபுக் கோத்திர வெறிக்கும் இடையிலான மோதலின் காரணமாக- குறித்ததொரு குடும்பத்துக்கு அல்லது பரம்பரைக்கு அல்லது இனக் குழுவுக்கு ஆதரவளிக்கும் கோஷம் உருவானது. ஷாம் பிரதேச அறபு உமையாக்களையும், அவர்களின் பின்னாலிருந்த தென் பிராந்தியக் கோத்திரங்களையும் எதிர்க்கும் வகையிலேயே இப்போக்கு உரு வானது. பாரசீகத்தில் தோற்கடிக்கப்பட்டிருந்த சக்கராதிபத்திய வழித் தோன்றல்களுக்கும், ஈராக் பிரதேசத்தில் வசித்து வந்த வட பிராந்தி யக் கோத்திரங்களுக்கும் ஆதரவளிப்பதாக இது அமைந்திருந்தது.

மட்டுமன்றி, -அறபுக் கோத்திரங்கள் மதீனாவிலிருந்த முதல் தலைமுறை அரசுக்கு அரசியல் ரீதியாகக் கட்டுப்படுவதில்லை என பிரகடனப் படுத்திய போது- ஃகிலாபா பொறுப்பு குறைஷிகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும் என்பதற்கான அரசியல் நியாயம் புறந்தள்ளப்பட்டு, ஆட்சியையும் அதிகாரத்தையும் தனி யுடைமையாக தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகளே அரங் கேற்றப்பட்டன. அந்த வகையில்தான், புனித வசனங்கள் அவற்றின் ‘மகாஸிது’களையும் சூழமைவுகளையும் விட்டு திசை திருப்பப் பட்டன.

மறுபுறத்தில், ‘ஃகவாரிஜ்’களது குரலும் ஓங்கத் தொடங்கியிருந் தது. அந்தஸ்தும், ஆற்றலும், கண்ணியமும், தகுதியும் கொண்ட வர்களைப் புறக்கணிக்கும் நிலையும் பெரும் குழப்பமாக உரு வெடுத்திருந்தது. உம்மாவின் விவகாரங்களையும், பாதுகாப்பையும் பிணைப்பையும் அரசியல் விசுவாசத்தையும் கட்டிக் காக்கும் ஆற்றல் கொண்டிருந்தவர்கள் -‘அனைவரும் சமமே’ என்ற கோஷத்தின் பெயரால்- புறக்கணிக்கப் பட்டிருந்தனர். ‘அனைவரும் சமமே’ என்ற இந்தக் கோஷம் உண்மையில் சமூகக் கட்டுக்கோப்பைச் சிதைத்து, ஆட்சித் தலைவர்களையும் மத்திய அரசியல் அதிகாரத்தையும் எதிர்த்துக் கலகம் விளைவிப்பதை நியாயப் படுத்துவதாகவே அமைந் திருந்தது.

ஐக்கியப் படுத்தப்பட்ட ஒற்றையாட்சி என்ற கருவிலிருந்து மிக ஆரம்ப காலம் தொட்டே முஸ்லிம் உம்மாவும் அதன் சிந்தனை யாளர்களும் இப்படித்தான் திசை திருப்பப் பட்டனர். உம்மாவின் விவகாரங்களை நடாத்திச் செல்வதிலும் கட்டியெழுப்புவதிலும் ‘ஷூறா’ பெறும் பாத்திரமும் இப்படித்தான் அவர்களது கவனத்தி

லிருந்து தவறிப் போனது. வசனங்களுக்கிடையிலான மோதலாகவும், வாதங்களாகவும், எதிர்வாதங்களாகவும், ஒரு தரப்பு வாதத்தை மாத்திரம் நியாயப் படுத்தும் வசனங்களையும் நிகழ்வுகளையும் துருவித் தேடுவதாகவும் அவர்களது செயற்பாடுகள் மாறிப் போயின. இந்நிலையானது இஸ்லாத்தின் தூதைச் சுமக்கவும், அதன் சமூக ஒழுங்கைக் கட்டியெழுப்பவும் சக்தியற்ற நிலைக்கு முஸ்லிம் உம்மாவைக் கொண்டு சேர்த்தது.

அரசியல் வாழ்வை இஸ்லாமியப் படுத்துதல் என்பதன் பொருள், கோட்பாடு, கல்வி, பொதுமக்கள், தலைமை, ஒழுங்கமைப்பு, செயற்பாடுகள் முதலிய அனைத்தையும் இஸ்லாமிய மயப்படுத்துதலாகும். இஸ்லாமியம் என்பது இஸ்லாத்தின் பிரதான பெறுமானங்களையும் இலக்குகளையும் சரியான, நடைமுறைச் சாத்தியமான 'ஷூறா' முறைமையுடன் பேணிப் பின்பற்றுவதைக் குறிக்கும். மட்டுமன்றி, உம்மாவின் அங்கத்தவர்களும் அரசியல் வெகுமக்களும் அந்த இலகுபடுத்தப்பட்ட, சீரிய முறைமையின் மீது பயிற்றுவிக்கப்படவும் வேண்டும்.

அரசறிவியற் கற்கைகளை இஸ்லாமியப் படுத்துதல் என்பதன் பொருள், இஸ்லாமிய இலக்குகளையும், இஸ்லாமிய சிந்தனா மூலாதாரங்களையும், இஸ்லாமிய முறைமையையும் பேணி, நிகழ் யதார்த்தத்தையும் ஒழுங்குகளையும் தொடர்புகளையும் ஆய்வுக்கு உட்படுத்துவதாகும். பொருத்தமானதும் சரியானதுமான அறிவியற் சாதனங்கள் மூலமாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். நோக்கைத் தெளிவுபடுத்துதல், அரசியல் ரீதியான புரிதலை இலகுபடுத்துதல், இஸ்லாமிய அரசியல் தீர்வுகளையும் பதிலீடுகளையும் பரிந்துரை செய்தல் என்பனவே இதன் நோக்கமாக இருக்கும்.

ஆரோக்கியமான இஸ்லாமிய சமூக-அரசியல் சிந்தனை என்ற தலைப்பைப் புரிந்து கொள்வதற்கு மற்றொரு விடயத்தையும் நாம் அறிந்திருப்பது அவசியம். அதாவது, முஸ்லிம் சமூகத்தில் எடுக்கப்படும் சமூக-அரசியல் தீர்மானத்தில் எவ்வகையான சமூக சிந்தனை பிரதிபலிக்கிறது என்பதே இறுதியில் கவனிக்கப்படுவதாக இருக்கும். அந்தவகையில், குறித்த தீர்மானமானது வஹீயின் வசனமும் இஸ்லாமிய நோக்கும் ஃபித்றாவுடனும் நிகழ் யதார்த்தத்துடனும் இடைவினை ஆற்றுவதால் தோன்றும் பெறுபேறாக அமைந்திருக்கும். தலைமை வகிப்போரது புரிதல், தீர்மானங்கள், செயற்பாடுகள்

என்பவற்றினூடாகவே இது நிகழும். இந்த அம்சங்களுக்கிடை யிலான இறுக்கமான உறவையும் தொடர்பையும் விளக்குவதாகவே பின்வரும் அல்-குர்ஆனியக் கருத்தாக்கமும் உள்ளது:

''நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள்; தூதருக்கும் கட் டுப்படுங்கள்; உங்கள் தலைவர்களுக்கும் கட்டுப்படுங்கள்.'' *(4:59)*

ஏனெனில், இஸ்லாமிய அடிப்படையிலான கட்டுப்பாடும் கீழ்ப் படிவும் செயற்பாடும் வெறுமனே வஹீயின் வசனங்களைப் பற்றிய பள்ளி நோக்கினால் மட்டுமே சாத்தியப் படுவதில்லை. வசனம், யதார்த்தம் என்பவற்றுக்கிடையிலான அறிவார்ந்த இடைவினை யாற்றல் மூலமே அது சாத்தியமாகும். உம்மாவையும் அதன் யதார்த்தத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இஸ்லாமியத் தலை மையின் ஊடாகவே அந்த இடைவினையாற்றல் நிகழவும் வேண் டும். உம்மாவின் தேவைகளிலிருந்தும் சவால்களிலிருந்தும் ஆரம் பித்து, புனித வசனத்தின் இலக்குகளை நோக்கி உம்மாவை வழி நடாத்துவதாக அத்தலைமை இருக்க வேண்டும். இல்லையெனில், (அல்-குர்ஆன், ஸுன்னா உள்ளிட்ட) வஹீயின் வசனங்கள் பிற எல்லா எழுதப்பட்ட வசனங்களையும் போலவே உயிரற்றுப் போய்விடும். மட்டுமன்றி, பிரிவினைக்கும், பரஸ்பரக் கழுத்தறுப்புக்கும், தவறான பொருள் கோடல்களுக்கும், நகைப்புக்குரிய கருத்துகளுக்குமான கருவியாகவும் அவ்வசனங்கள் அமைந்து விடும்.

உம்மா தனது அணிகளுக்கு மத்தியில் கட்டுப்பாடு மிக்க இஸ் லாமியத் தலைமை ஒன்றை உருவாக்கும் உறுதியிலிருந்து விலகி விடக் கூடாது. இத்தலைமை உம்மாவுடன் இணைந்திருப்பதோடு, வஹீயின் வழிகாட்டல்களிலிருந்து பயன்பெறுவதற்கான வழியாக வும் இருக்க வேண்டும். நமது சிந்தனா முறைமைகளைச் சீரமைப் போமாயின், பரந்த இஸ்லாமிய சமூக அடித்தளமொன்றைக் கட்டி யெழுப்புவதற்கான கருத்தாக்கங்களையும் வழிமுறைகளையும் கண்ட டையலாம் என்பதில் ஐயமில்லை. அந்நிலையில், ஆற்றலும் சுய கட்டுப்பாடும் கொண்ட இஸ்லாமியத் தலைமையொன்று வெகுமக் கள் தளத்திலிருந்து பிறக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இமாம் அல்-மாவர்தீ, தத்துவஞானியும் சிந்தனையாளருமான அல்-ஃபாறாபீ, அரசியல் தத்துவ ஞானியான இப்னு ஃகல்தூன் முதலிய மாமனிதர்களிடம் மலர்ந்து வெளிப்பட்ட சிந்தனைகள்

வளர்ந்து அறிவியல் பரிமாணங்களோடும் முறைவழிப்பட்ட ஆய்வு களோடும் முழுமை பெற வேண்டும். அதன் மூலமாகவே உம்மா தனது சீரிய நாகரிகப் பாத்திரத்தை வகிப்பதற்கான வழிகள் பிறக்கும்.

## 3) இஸ்லாமியமும் தொழிநுட்ப அறிவியற் கலைகளும்:

உம்மாவின் முன்னைய வாழ்வுக் கட்டமொன்றில், மேற்கிலிருந்து வந்த அறிவியல்-நாகரிக அழுத்தங்களினாலும், உம்மாவில் நிலவிய பார்வைத் தெளிவின்மை மற்றும் சிந்தனைப் பலவீனம் என்பவற் றாலும் முஸ்லிம் கற்றறிவாளர்கள் இரு விடயங்களை ஒன்றோ டொன்று குழப்பிக் கொண்டனர்:

ஒன்று: உண்மைகள், நியதிகள், இயல்புகள் என்பவற்றின் சார்பிய மற்ற மெய்மத் தன்மை.

இரண்டு: உண்மைகள், நியதிகள், இயல்புகள், படைப்புகள், என்பவற்றின் மீதான சுயாதீனமான மானிட-சமூகப் பயன்பாடு.

இக்குழப்ப நிலையின் காரணமாக முஸ்லிம் கற்றறிவாளர்கள் மேற்கு நாகரிகத்தையும் அதன் பல்வேறு அறிவுகளையும் விதி விலக்கு எதுவுமின்றி முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டனர். அவை யனைத்தையும் சார்பியமற்ற அறிவியல்-நாகரிகத் தொகுப்பாகக் கருதிய அவர்கள், நியதிகளையும் இயல்புகளையும் பற்றிய அறிவை மட்டுமன்றி, அவற்றின் மீதான மேற்கத்தியப் பிரயோகங்களையும் சேர்த்து எடுத்துக் கொண்டனர். எல்லா மேற்கத்திய அறிவுகளையும் மெய்மத்தன்மை கொண்ட, சார்பியமற்ற பண்புக்குள் பொதுமைப் படுத்தி நோக்கவும் முற்பட்டனர். மேற்கத்திய சிந்தனையாளன் என்பவன் அனைத்தையும் விடயவாரியாக மட்டுமே நோக்குகின்ற, சார்பியமற்ற சிந்தனையாளன் என்றும், அவனது செயன்முறைகளும் பிரயோகங்களும் அகிலத் தன்மை வாய்ந்தவை என்றும் கருதும் நிலை அவர்களிடம் உருவாகியிருந்தது.

எனினும், மானிடப் பிரக்ஞையும், பல்வேறு சமுதாயங்களுக்கும் நாகரிகங்களுக்கும் இடையிலான தொடர்பாடலும் வளர்ச்சி கண்ட போது, மனித சிந்தனையின் ஏராளமான பகுதிகள் பிரத்தியேகத் தன்மை வாய்ந்தவை என்பதை அறிஞர்களும் சிந்தனையாளர்களும் புரிந்து கொண்டனர். மானிடக் கருத்தாக்கங்கள், இலக்குகள், நாகரிகங்கள் என்பனவும், உண்மைகள், நியதிகள், விதிகள், பெறு மானங்கள் என்பவற்றின் மீதான அவற்றின் பிரயோகங்களும்,

படைப்புகளையும் பௌதீகப் பொருட்களையும் பயன்படுத்தும் முறைமைகளும் பாரியளவு பிரத்தியேக வேறுபாடுகளைக் கொண் டவை என்பதும் அவர்களுக்குத் தெளிவாகியது.

இவ்வகையில் நோக்கினால், மேற்கு மனிதனின் நாகரிகமும் பிற மனித நாகரிகங்களைப் போன்றதுதான். மேற்கு மனிதனின் நம்பிக் கைகள், உளவியல், நோக்கங்கள், வரலாறு என்பவற்றிலிருந்தே அந்த நாகரிகம் பிறக்கிறது. அவற்றையே அது வெளிப்படுத்துகிறது. அவற்றை நிதர்சனப்படுத்தவே அது உழைக்கிறது. மறுபுறத்தில், அது தெய்வீக வழிகாட்டலின் மூலாதாரங்களையும், முழுமொத்த தெய்வீக அறிவையும் இழந்து நிற்கிறது. இதனால் அது ஒரு பகுதியளவான நாகரிகமாகவே மாறி நிற்கிறது. பல விவகாரங்களில் அது மனோ இச்சை, விருப்பங்கள், மானிட- பௌதீகத் தேவைகள் என்பவற்றின் மீதே தங்கி நிற்கிறது. அந்த வகையில், அது ஒரு சடவாத நாகரிகமாக மாறி, தனிமனிதனையும், அவனது இச்சைகளையும் ஆசைகளையும் தெய்வங்களாகப் போற்றுகிறது. வாழ்வின் இருப்பையும் இலக்கை யும் புரிந்து கொள்ள உதவக்கூடிய அனைத்து ஆன்மீகத் தொடர்பு களையும் அது துண்டித்துக் கொண்டது. எனவேதான், மேற்கு நாக ரிகம் பௌதீக உலகில் இவ்வளவு அபரிமிதமான சாதனைகளைப் புரிந்திருந்தும், அதன் சமூகங்களும் அதன் பின்னால் செல்லும் மனித இனமும் ஒரு வித மனக்கலக்கம், ஆன்மீக வங்குரோத்து, சமூகச் சிதைவு, போராட்டம் என்பவற்றுடன் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். போர்களும் அழிவுகளும் நெருக்கடிகளும் பேரி டர்களும் அச்சமூகங்களை அச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றன.

மேற்கத்திய அறிவு அனைத்துமே முழுவதுமாக சார்பியமற்ற தன்று என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம். சமூகவியல் கலைகளின் உள்ளடக்கங்களும் அவற்றின் ஆய்வுத் துறைகளும் எவ் வாறு சார்பியம் கொண்டனவாக உள்ளனவோ, அவ்வாறுதான் தொழி நுட்பவியல் கலைகளும் உள்ளன. இரு வகைக் கலைகளுக்குமிடை யில் இருப்பது தர வித்தியாசம் மட்டும்தான். ஏனெனில், இத்தகைய அறிவியல் ஆய்வுகள் சடப்பொருட்களின் மீதும் படைப்புகள் மீதும் அகஸ்மாத்தாக நிகழ்வதில்லை. அவற்றை மேற்கொள்ளும் மனித னது நோக்கங்களிலிருந்தும் அக நிலைப் பரிசீலனைகளிலிருந்துமே அவ்வாய்வுகள் பிறக்கின்றன. மட்டுமன்றி, அந்நோக்கங்களையும் அக நிலைப் பரிசீலனைகளையும் நிதர்சனப்படுத்தவும் அவை முயல்கின் றன. அன்னிய நாகரிகங்கள் சார்ந்த எல்லா அறிவியல்களும் இவ்

வகையிலேயே நோக்கப்பட வேண்டும். அனைத்தையும் கண்மூடித் தனமாகப் பின்பற்றும் அணுகுமுறையானது உம்மாவையும் அதன் நம்பிக்கைகளையும் சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் ஒரு வகைத் தடுமாற்றத்துக்கும் குழப்ப நிலைக்குமே இட்டுச் செல்லும். அத்தகைய குழப்ப நிலை உம்மாவின் சுயாதீன ஆக்க சக்திகளையும், அசல் தன்மையையும், புதிய முன்னெடுப்புகளையும் நிர்மூலமாக்கி விடும்.

மேற்கத்திய அறிவியலும் கலைகளும் சார்பியமற்றவை என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில், மேற்கிடம் இறை வழிகாட்டலோ சான்றோ கிடையாது. முன்னைய தூதுகளினதும், ஃபித்ரா வினதும் சில எச்சசொச்சங்கள் மட்டுமே இன்று அதனிடம் உண்டு. மேற்கு நாகரிகத்திடம் காணப்படுகின்ற அனைத்து அறிவியற் கண்டு பிடிப்புகளும் இணைந்தாலும், பாரதூரமான இக்குறைபாட்டை நிவர்த்திக்க முடியாது. ஏனெனில், அவையனைத்துமே சடப்பொருட் களதும் படைப்புகளதும் இயல்புகளையும் பௌதீக விதிகளையும் பகுதியளவிலேயே நோக்குகின்றன.

கிழக்கிலும் மேற்கிலும், எல்லா அறிவியல்-சமூகவியல்-தொழி நுட்பவியல் துறைகளிலும் நிகழ்த்தப்பட்ட மேற்குலகச் சாதனைகள் முழுவதும் பிரபஞ்சம் பற்றிய பகுதியளவான பார்வையின் மீதும், அதன் மேலோட்டமான பௌதீகப் பண்புகள் பற்றிய அறிவின் மீதும் நிகழ்த்தப்பட்டவையே. முழுமொத்த நோக்கில், மேற்கு நாகரிகம் இன்னும் வழி தவறியே நிற்கிறது. மட்டுமன்றி, மனித இனத்தை அது மிக மோசமான குழப்ப நிலை, சந்தேகம், கலக்கம், பயம், சிதைவு, போராட்டம், அழிவு என்பவற்றின் பால் கொண்டு நிறுத்தி இருக் கிறது. எனவே, முஸ்லிம் சிந்தனையானது அந்த நாகரிகத்திலுள்ள குறைபாடுகளையும் கோளாறுகளையும் சீர்கேடுகளையும் நன்கு ஆராய்ந்து புரிந்து கொள்வது அவசியம். மேற்கு நாகரிகத்தின் இயல்பு, பிரத்தியேகப் பண்புகள், வேர்கள், நேர்நிலைப் பண்புகள், எதிர் மறைப் பண்புகள் முதலிய அனைத்தையும் அதன் சமூகவியல் மற்றும் தொழிநுட்பவியல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் முஸ்லிம் உம்மா தெரிந்து கொள்ள வேண்டும். உம்மாவின் அறிஞர்களும் கற்றறிவாளர்களும் தலைவர்களும் அவை குறித்து பூரண பிரக்ஞை யைப் பெறல் வேண்டும். இந்த நோக்கம் நிறைவேற வேண்டு மெனில், அவர்களிடம் திறம்பட அமைக்கப்பட்ட முறையியலும் வழிமுறைமையும் இஸ்லாமிய அளவுகோல்களும் இருப்பது

அவசியம். அவற்றின் மூலமாகவே மேற்கின் சாதனைகளையும் நேர்நிலை அம்சங்களையும் மதிப்பீடு செய்து பயன் பெறுவதும், குறைபாடுகளையும் எதிர்மறையான அம்சங்களை நிவர்த்தி செய் வதும் சாத்தியமாகும்.

அறிவியற் கலைகளில், குறிப்பாக பௌதீக-தொழிநுட்பவியல் கலைகளில், சார்பியமின்மை பற்றி நிஜமாகப் பேசுவதாயின் அது இஸ்லாமியத் தர்க்கத்தினூடாகவே முடியும். ஏனெனில், இஸ்லா மிய சிந்தனையானது சடப்பொருட்களதும் உயிரிகளதும் இயல்பு களையும் விதிகளையும் பற்றி ஆய்வு செய்யும் போது, குறைபாடான நோக்கிலிருந்தோ குறுகி வரையறுக்கப்பட்ட சிந்தனையிலிருந்தோ அதன் ஆய்வு பிறப்பதில்லை. மாறாக, பரிபூரண தெய்வீக அறிவுடன் இணைந்ததாகவே அது பிறக்கிறது. எனவே, அதன் அறிவியலும் கலைகளும் சீரிய இலக்கும் போக்கும் கொண்டவையாகவே அமைந் திருக்கும். மனிதனது பௌதீக-ஆன்மீகத் தேவைகளை அவை நிறைவு செய்யும்; பௌதீக வசதிகளையும் மன அமைதியையும் ஏற்படுத்திக் கொடுக்கும்; உண்மையான இறை விசுவாசிகளுக்கு முழுமையான பாதுகாப்பையும் அமைதியையும் உருவாக்கித் தரும்.

மனித அறிவைக் கட்டியெழுப்புவதிலும், பிரபஞ்சப் படைப்பு களில் இயங்கும் விதிகளையும் இயல்புகளையும் அறிவதிலும் முழுமொத்த வஹீயும் குறை நிலையுடைய பகுத்தறிவும் இணைந்து செயலாற்ற வேண்டும். அதுவே இன்றைய உலகில் இஸ்லாம் மனித நாகரிகத்துக்கும் அதன் பயணத்தை திசைப்படுத்துவதற்கும் பங்களிப் பதற்கான மிக முக்கிய வழியாகும். அறிவாய்வுகளின் இயங்கு திசையும், அறிவுப் பிரயோக முறைகளும், அவற்றை ஆளுகை செய்யும் நாகரிகச் சித்தாந்தமும் சரியாக அமைவது அவசியம். இது படைப்பியல் விதிகளையும் பௌதீக இயல்புகளையும் பற்றிய அறிவியல் கண்டுபிடிப்புகளை விட எவ்வகையிலும் முக்கியத்துவம் குறைந்ததல்ல. மட்டுமன்றி, அறிவு பொதிந்திருக்கும் முழுமொத்த உண்மைகளே அந்த அறிவு சரியானதா என்பதையும், அதில் என்ன வகையான நன்மைகள் உள்ளன என்பதையும் தீர்மானிக்கின்றன.

பொதுவாக அறிவியற் கலைகளையும், குறிப்பாக பௌதீக-தொழிநுட்பவியற் கலைகளையும் இஸ்லாமிய மயப்படுத்துதல் என்பது, மனிதப் பகுத்தறிவும் சிந்தனையும் படைப்பின் இயல்பு களிலும் இயங்கு விதிகளிலும் கண்டறிந்த உண்மைகளுக்கு மாற்ற மான பௌதிக-தொழிநுட்ப உண்மைகளைத்தான் கண்டடைய

வேண்டும் என்பதைக் குறிக்காது. ஆயினும், இஸ்லாமிய அணுகு முறையானது பிரபஞ்ச இயல்புகளையும் இயங்கு விதிகளையும் புரிந்து கொள்ளும் மனிதப் பகுத்தறிவின் யத்தனத்துக்கு சிறந்ததொரு வழிகாட்டலையும் பெறுபேற்றையும் வழங்க முடியும் என்பதையே இங்கு நாம் கூற விழைகின்றோம். இஸ்லாமிய அறிவின் கருது கோள்கள் பாதுகாப்பானவையாகவும், அதன் இலக்கும் மூலாதார மும் முழுமைத் தன்மை கொண்டவையாகவும் இருப்பதுதான் இதற்குக் காரணமாகும். இந்த வகையில், வரையறுக்கப்பட்ட பகுத்தறிவு காணத் தவறுகின்ற சில நல்ல பக்கங்களை இஸ்லாமிய அறிவு சுட்டிக் காட்டவும், பகுத்தறிவு தவறு விடுகின்ற இடங்களைத் திருத்தவும் வாய்ப்பேற்படுகிறது.

இஸ்லாமியப் படுத்துதல் என்பதன் உண்மைப் பொருள் அறிவியற் கலைகளின் இலக்கும் போக்கும் பாதுகாப்பானவையாக இருக்க வேண்டும் என்பதே. அறிவியற் கலைகள் தொடர்பான ஆய்வுகளின் உள்ளடக்கங்கள், பிரயோகங்கள், புத்தாக்கங்கள் என்பவற்றுக்கு உள்ளிழையாக இயங்குகின்ற சித்தாந்தம் சரியாகவும் பாதுகாப் பானதாகவும் இருக்க வேண்டும் என்பதே இஸ்லாமிய மயப்படுத் துதல் என்ற கருத்தாக்கத்தின் உட்கருவாகும். அதன் மூலமாகத்தான், இஸ்லாமிய அறிவியலானது சீர்திருத்தம், வளப்படுத்தல், ஏகத்துவம், விழுமியம், சீரறிவு முதலிய பண்புகள் கொண்டதாகவும் அமையும்.

மனித இன வரலாற்றின் அறிவியல் நாகரிகப் பயணத்தை நாம் உற்றுக் கவனித்தால், இஸ்லாமிய நாகரிகத்தின் நிழலில்தான் நவீன அறிவியலும் அதன் முறைமையியலும், நிறுவனங்களும், சமூக-சுகா தார-கைத்தொழில் பணிகளும் துளிர் விட்டன என்பதைக் கண்டு கொள்ளலாம். சீர்திருத்தத்திலும் வளப்படுத்தலிலும் இஸ்லாமிய நாகரிகம் ஆக்கபூர்வமான பல சாதனைகளைப் படைத்திருக்கும் அதே வேளை, பேரழிவுச் சாதனங்களையும் ஆயுதங்களையும் உருவாக்கு வதில் அதற்கு எந்தப் பங்கும் இருந்ததில்லை. அதன் பிறகு மேற்கு நாகரிகம் வந்தது; ஆயுதங்களாலும் வெடிபொருட்களாலும் பேரழிவுக் கருவிகளாலும் உலகை நிறைத்தது. அந்த வகையில், அழிவு, அநி யாயம், ஊழல், சீர்கேடு, அத்துமீறல், அடக்குமுறை, காலனியம் முதலிய எல்லாமே மேற்கு நாகரிகம் உலக சமுதாயங்களுக்கு வழங்கிய பரிசுகள்தான். அந்நாகரிகம் போர்ப் படைகளையும் கடற் படைத் தளவாடங்களையும் உருவாக்கிக் கொண்டது முதல், கடல் களைக் கடந்து, சமூகங்களைச் சுரண்டி, அவற்றின் புனிதங்களை

பாழ்படுத்தத் தொடங்கி விட்டது. இன்று அந்நாகரிகத்தின் நிழலில் அறிவும் செல்வமும் தொழிநுட்பமும் கொட்டிக் கிடக்கும் அதே வேளை, மேற்கு சாராத சமுதாயங்கள் பட்டினிக்கும் அறியாமைக் கும் நோய்களுக்கும் இரையாகிக் கொண்டிருக்கின்றன. இச்சமுதா யங்கள் சிகிச்சைக்கான மருந்துகளை வாங்கிக் குவிப்பதில் மட்டு மன்றி, கொலைக் கருவிகளை வாங்கிக் குவிப்பதிலும் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. மொத்தத்தில், கொலைக் கருவி உற்பத்திக்கான ஆய்வுகளதும், அதற்காக ஒதுக்கப்பட்ட செல்வங்கள தும் பெறுபேறே இன்றைய உலக அறிவியலின் அறுவடையாகும்.

இந்நிலையில், மனித சமுதாயத்துக்கு புதிய பார்வையையும் புதிய இலக்குகளையும் சவால்களையும் முன்வைக்க வேண்டியதே இஸ் லாமிய அறிவியற் கலைகளுக்கு முன்னுள்ள பணியாகும். அப்புதிய பார்வையானது மனிதனுக்குப் பணிவிடை செய்யக் கூடியதாக அறிவை மாற்றியமைக்க வேண்டும். பிரதிநிதித்துவம், சீர்திருத்தம், வளப்படுத்தல், உலகையும் படைப்புகளையும் பராமரித்தல் முதலிய பணிகளுக்கு மனித அறிவு பயன்பட அது வழிகாட்ட வேண்டும்.

ஆக, பௌதீக-தொழிநுட்பவியற் கலைகளை இஸ்லாமிய மயப் படுத்துதல் என்பது அறிவியற் சித்தாந்தம் சார்ந்த விவகாரமாகும். அச்சித்தாந்தம் அறிவியலுக்கும், வாழ்வுக்கும், சமூகத்துக்கும் இடை யிலான தொடர்பு குறித்துக் கவனம் செலுத்துகிறது. இறைவிசுவாச-ஏகத்துவ-விழுமிய அடிப்படையிலான பரிபூரண இஸ்லாமிய நோக்கி லிருந்து மனிதனின் வாழ்வியல் சீர்திருத்தம் தொடங்க வேண்டும் என அது கருதுகிறது. அத்தகைய சீர்திருத்தமே ஆன்மீக வறுமையும் சடவாதப் பிரமிப்பும் முறைமை சார் குறைபாடும் பாழாக்கிய அம் சங்களைச் சீரமைக்க உதவும். கிழக்கிலும் மேற்கிலும் இன்று பல் வேறு வடிவங்களில் காணப்படுகின்ற சடவாத நாகரிகங்கள் இத்த கைய சீர்கேட்டையே அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

இன்றைய நாகரிகத்தின் நிழலில், ஆயுதக் கொள்வனவைத் தவிர வேறெதிலும் மனிதர்களால் போட்டி போட முடியாதிருப்பது உண் மையில் ஆச்சரியமளிக்கிறது. அழிவு தரும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்தான் அவர்கள் போட்டி போட்டுக் கொள்கிறார்கள். பயம் குறித்த சமநிலைகளைப் பேணுவதிலேயே அவர்களது பாதுகாப் புணர்வு அடங்கிக் கிடக்கிறது. பலமுள்ளவர் மட்டுமே ஆயுதம் வைத்திருக்கலாம் என்பதும், தெரிவு செய்யப்பட்ட சில சமூகங்களே செல்வத்தையும் ஆடம்பரத்தையும் அனுபவிக்கலாம் என்பதும் ஆச்சரியமான ஒன்றுதான்!

இன்று மனித இனம் அடைந்திருக்கும் நிலையும், அதனைச் சூழ்ந்து நிற்கும் பெரும் அபாயங்களும் சீரான மனித இயல்பினால் ஏற்க முடியாதவை. எனவே, இருப்பதை விடச் சிறந்த கண் ணோட்டமொன்று இன்று தேவைப்படுகிறது. அது மனிதனுக்கும், அவனது வாழ்வுக்கும், அவனது பிரபஞ்ச இருப்புக்கும் உகந்ததாக இருப்பது அவசியம்.

மனித இனமும், அதன் நாகரிகமும், அது எதிர்கொண்டுள்ள அபாயங்களும் முழுமொத்த தெய்வீக வழிகாட்டலையும், சார்பிய மற்ற முழுமைத்துவ நோக்கையும் வேண்டக் கூடிய எல்லையொன் றையே அடைந்திருக்கின்றன. சீர்திருத்தத்துக்கும், வளப்படுத்தலுக் கும், மீட்சிக்குமான நாகரிகமொன்றின் தோற்றம் இன்று தவிர்க்க முடியாத தேவையாக மாறியுள்ளது. ஆனால், புலவயப்பட்ட உதாரணமோ, உயிர்ப்புள்ள மாதிரியோ இன்றி இஸ்லாமிய நோக் கையும் அதன் தீர்வையும் மனித இனத்தினால் புரிந்து கொள்ள முடியாது. எனவே, முஸ்லிம்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளவும், தங்களது வாழ்வை சரியான பாதைக்கு திருப்பிக் கொள்ளவுமான முயற்சியில் இறங்குவது அத்தியாவசியக் கடமை யாகும். அப்போதுதான், பூமியில் வாழும் பிற சமூகங்கள் சார்பிய மற்ற இஸ்லாமிய நோக்கைப் புரிந்து கொள்ளவும், அதனை ஏற்றுப் பயன்பெறவும் வழியேற்படும்.

இஸ்லாமியக் கட்டமைப்பிலும், அதன் கல்வி-அறிவியல் நிறு வனங்களிலும் ஏற்பட்டிருக்கும் சிந்தனா நெருக்கடியை எதிர்கொள் வதும் அறிவை இஸ்லாமிய மயப்படுத்துவதனுள் அடங்குவதே. இத்துறைகளிலான இஸ்லாமிய செயற்பாட்டுக் குறைபாடுதான் இந் நெருக்கடிக்குக் காரணமாகும். இதனால் அன்னிய அறிவு மூலங் களை அட்சரம் பிசகாமல் மொழி மாற்றம் செய்யும் நிலையே இந்நிறுவனங்களில் காணப்படுகின்றது. மட்டுமன்றி, இஸ்லாமிய உலகிலுள்ள பல கல்வி நிறுவனங்கள், குறிப்பாக உயர் கல்வி நிறுவனங்கள், மேற்கு சமூகங்களதும் நாகரிகங்களதும் நோக்கிலி ருந்து பிறக்கும் சிந்தனைச் சட்டகத்தினுள் நின்றே இன்றும் அறி வியற் கலைகளை கற்பிக்கின்றன. எனவே, இந்த அறிவியல் உள் ளடக்கங்களை முன்வைப்பதற்கான சிந்தனா-நம்பிக்கைச் சட்டகம் சீரமைக்கப்படுவது அறிவியல் தொழிநுட்பத் துறைகளில் 'இஸ்லா மிய மயப்படுத்தல்' செயற்பாடு மேற்கொள்ள வேண்டிய மிக முக்கிய மான பணியாகும். அந்தச் சட்டகம் இஸ்லாமியச் சட்டகமாகவே

அமைய வேண்டும். இஸ்லாத்தின் முழுமொத்த அம்சங்கள், பெறு மானங்கள், இலக்குகள், இயங்குதளங்கள் என்பனவே அதன் அடி நாதமாக இருக்க வேண்டும். முஸ்லிமின் சக்தியை அது நேர்நிலை யாக அசைவியக்கப் படுத்த வேண்டும். கண்டுபிடித்தல், வசப் படுத்தல், வளப்படுத்தல், கட்டியெழுப்புதல், பூமியை சிறந்த முறையில் நிர்வகித்தல் முதலிய பொறுப்புகளின் முன்னால் அவனை நிறுத்த வேண்டும்.

இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் இன்று கவனம் செலுத்த வேண்டிய மிகப்பெரும் பொறுப்பு கல்வி சார் பொறுப்பாகும். இப்பொறுப்பு பல பரிமாணங்களைக் கொண்டது. மிக ஆரம்பத் தரம் முதல் அனைத்துத் தரங்களுக்குமான பாடத்திட்டங்களும் பாட நூல்களும் உருவாக்கப்படுதல் கூட இப்பணியினுள் அடங்கும். அவை யனைத்தும் இஸ்லாமிய நோக்கையும், கருத்தாக்கங்களையும், இலக்குகளையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருப்பது அவ சியம். குழந்தைப் பருவம் முதல் பயிற்றுவிப்பின் ஒவ்வொரு கட்டத்தையும் எவ்விதத் தொய்வுமின்றி வினைமையுடன் கவனிப் பது தலைவர்களதும் கல்வியியலாளர்களதும் கடமையாகும். அப்போதுதான் உளவியல்-சிந்தனா கட்டுருவாக்கத்திலும், நாகரிக ஆற்று கையிலும் நமது முன்னோர் அனுபவித்த பிரச்சினைகளை வளர்ந்து வரும் தலைமுறைகள் அனுபவிக்காமல் தடுக்க முடியும். அவர்களது உள்ளங்களையும் சிந்தைகளையும் காப்பாற்றிக் கொள்ள வும் முடியும்.

## அத்தியாயம் ஆறு

# இஸ்லாமும் எதிர்காலமும்

இஸ்லாமிய சீர்திருத்தமானது ஏக காலத்தில் உம்மாவுக்காகவும் மனித இனத்துக்காகவும் மேற்கொள்ளப்படும் பணி என்பதை இந்த ஆய்வின் முடிவில் வலியுறுத்திக் கூறுவது முக்கியமானது. அந்த வகையில், இஸ்லாமிய செயற்பாட்டாளர்களதும், தலைவர்களதும் முயற்சிகள் மூன்று அடிப்படையான விடயங்களை நோக்கி திசைப் படுத்தப் படுவது அவசியமாகும்.

ஒன்று: உம்மாவின் எதிர்காலம் தொடர்பான பணி. அதாவது, உம்மாவின் இளைய தலைமுறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியை இது குறிக்கிறது.

இரண்டு: அறிவியல் துறை, வினைத்திறன் மிக்க நாகரிக ஆற்றுகை, தூதைச் சுமக்கும் புதிய தலைமுறைகளைக் கட்டியெழுப்புதல் முதலிய பணிகளை இஸ்லாமிய மயப்படுத்துவதில் அறிவியல் நிறுவனங்கள் ஆற்ற வேண்டிய பங்கு.

மூன்று: மானிட இருப்பு மற்றும் நாகரிக கட்டுருவாக்கம் என்பவற்றின் எதிர்காலம் தொடர்பான பணி. மானிட நாகரிகத்தின் பயணத்தைச் சீரமைப்பதற்கும், நவீன மானிட சிந்தனையின் பயணத்தை திருத்தியமைப்பதற்கும் உம்மா தனது சீரிய சிந்தனையின் மூலமாக ஆற்ற வேண்டிய பணி இதுவாகும்.

### *1) உம்மாவைக் கட்டியெழுப்புவதன் எதிர்காலம்:*

உம்மாவின் சிந்தனையானது சீர்திருத்தத்துக்கு உட்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது என்பது தெளிவு. உம்மாவின் உளவியற்

கட்டமைப்பு இன்றைய நிலையில் கோளாறுக்கு உட்பட்டிருக்கிறது என்பதும் தெளிவு. உம்மாவின் அங்கத்தவர்களுக்கும் தலைமுறைகளுக்கும் முன்வைக்கப்படுகின்ற தகவல்கள் பற்றியும், புதிய சிந்தனைகள் பற்றியும் அவர்களால் புரிந்து கொள்ள முடியுமாக இருக்கின்ற போதிலும், அப்புரிதல் வெறுமனே அறிவு சார்ந்த புரிதலாகவும், மனனமிட்டு ஒப்புவிக்கும் செயற்பாடாகவுமே உள்ளது. யதார்த்தத்தில் அந்தப் புரிதல் உளவியல் கட்டுருவாக்கச் செயற்பாட்டிலிருந்து வேறுபட்டதாகும். ஏனெனில், உளவியல் கட்டுருவாக்கமானது தனக்குரிய பண்புகளையும் அடிப்படைக் கூறுகளையும் மனிதனின் குழந்தைப் பருவத்திலிருந்தும் கட்டிளமைப் பருவத்திலிருந்துமே எடுத்துக் கொள்கிறது. அதன் பிறகு, வளர்ச்சியடைந்த மனிதனின் பிந்திய வாழ்வுக் கட்டங்களில் நிகழும் உளவியல் கட்டுமானம் என்பது, அனேகமாக அவன் ஆரம்ப வயதுக் கட்டங்களில் பெற்றுக் கொண்ட உளவியல் பண்புகளையும் சக்தியையும் திருத்தியமைத்து திசைப்படுத்தும் செயற்பாடாக மட்டுமே இருக்கும்:

''மௌட்டீகக் காலத்தில் சிறந்தவர்களாக இருந்தோரே, சரியான அறிவைப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில், இஸ்லாத்திலும் சிறந்தவர்களாக இருப்பர்''. (புஹாரி)

இதனால்தான், கடின இயல்பும் சுதந்திரப் பண்பும் துணிச்சலும் கொண்டிருந்த நாட்டுப்புற அறபிகள் இஸ்லாமிய ஒழுங்கை ஏற்றுக் கொண்ட குறுகிய காலத்திலேயே வகையிலும் தொகையிலும் பிரமாண்டமான சாதனைகளைப் புரியும் இயலுமையைப் பெற்றனர்.

அந்த வகையில், களத்தின் இயல்பையும், செயற் தளங்களையும், இயலுமைகளையும் நன்கு புரிந்து கொண்டு சிறந்த சிந்தனை ஒன்றை முன்வைப்பதே உம்மாவின் இன்றைய தலைமுறை ஆற்ற வேண்டிய அடிப்படைப் பணியாகும். சிறந்த உதாரணங்களையும் மாதிரிகளையும் முன்னிறுத்தி, சரியான வழிமுறைகள் மூலமாக அது தனது இளைய பரம்பரையைக் கட்டியெழுப்ப வேண்டும். அப்போதுதான் அதனிடம் சிறந்த பண்புகள் வளரும்; இஸ்லாத்தின் உயர் இலக்குகளையும் சட்டங்களையும் பற்றிய ஆழமான விசுவாசம் உருவாகும்.

உம்மாவில் மாற்றம் ஏற்படுத்துதல் என்பது எதிர்காலத்துக்கான செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. வளரும் தலைமுறையை உளவியல் ரீதியாகவும், சிந்தனா ரீதியாகவும், ஆரோக்கியமான அடிப்படைகளின் மீதும் தயார்படுத்துவதில்தான் அது தங்கியுள்ளது. அவ்வாறு

தயார்படுத்தப்படும் தலைமுறையே தனது நாகரிகப் பாத்திரத்தை வகிப்பதற்கான தயார் நிலையைப் பெறும். எனவே, இன்றைய தலை முறை எதிர்காலத் தலைமுறையை உருவாக்கித் தயார்படுத்தும் பணியை மேற்கொண்டு விட்டால், தனது பணியில் வெற்றியடைந்து விட்டது என்பதே அதன் பொருளாகும். அவ்வாறன்றி, சரியான முறையில் செயலாற்றும் சக்தி தன்னிடம் போதியளவு இருப்பதாக எண்ணிக் கொண்டு அது காரியத்தில் இறங்குமாயின், இலக்குத் தவறி விட முடியும். மட்டுமன்றி, தன்னிடமுள்ள வரையறுக்கப் பட்ட சக்தியையும் வீணாக்கி விட முடியும். ஏனெனில், அதன் உளவியல் கட்டமைப்பு பல தவறுகளுக்கு உட்பட்டிருக்கிறது. அந்தத் தவறுகளை நாமிருக்கும் இக்குறுகிய வரலாற்றுக் கட்டத்தினுள் சரிசெய்து விட முடியும் என்று தோன்றவில்லை. சிறிதளவு சரிசெய்ய முடியுமென்றிருப்பினும், இன்றிருக்கும் நெருக்கடி நிலையிலிருந்து உம்மாவை வெளிக் கொண்டு வர அது போதுமானதல்ல.

ஆக- சமகாலத் தலைமுறையின் முதன்மைப்பணி எதிர்காலத் தயார்படுத்தல் மட்டுமே. எதிர்காலப் பரம்பரைகளைத் தயார் படுத்து வதற்குப் பொருத்தமான தளங்களையும் சாதனங்களையும் அது உரு வாக்க வேண்டும். இந்த அடிப்படையான பாடத்தை நாம் பிரக்ஞை பூர்வமாக ஏற்றுக் கொண்டால், நமது முயற்சிகள் குவிமையம் கொள்ள வேண்டிய விடயங்கள் மூன்றாக அமையும்:

1. கட்டுருவாக்கப் பணிகளுக்கான வலுவை சேமித்துப் பாது காத்தல்.
2. சரியான இஸ்லாமிய சிந்தனைகளையும் கண்ணோக்குகளை யும் கருத்தாக்கங்களையும் உருவாக்குதல்.
3. இளைய தலைமுறையைப் பயிற்றுவித்து, உளவியல் ரீதியில் பலமானதாகவும், சீரானதாகவும், தாக்கம் விளைவிக்கக் கூடிய தாகவும் கட்டியெழுப்ப இஸ்லாமிய சிந்தனைகளையும் கண்ணோக்குகளையும் மாற்றும் வகையில், சேமிக்கப்பட்ட வலுவைப் பயன்படுத்துதல்.

உம்மாவின் ஆற்றலையும், வலுவையும், மனித இனப் பயணத்தில் அதன் தலைமைப் பாத்திரத்தையும் புதுப்பித்தல் என்பது இன்றிருக் கும் பலவீனமான உளவியற் கட்டமைப்பினூடாகவோ, நலிவுற்ற சிந்தனா-நாகரிக ஆற்றலினூடாகவோ சாத்தியமாகாது. இந்த யதார்த் தத்தை முஸ்லிம் சிந்தனையாளர்களும், தலைவர்களும், வெகு

மக்களும் புரிந்து கொள்வது அவசியம். அந்த வகையில், இப் போதைக்கு உம்மாவின் முதன்மைப் பணி ஆரோக்கியமான இஸ் லாமிய சிந்தனையையும் கண்ணோக்கையும் புனர்நிர்மாணம் செய் வதே. இவ்விலக்கை எட்டுவதற்கு பங்களிப்புச் செய்யாத எந்தப் போராட்டமும் அல்லது முன்னெடுப்பும் -இப்போதைய நிலையில்- பயனற்ற சக்தி விரயமாகவே அமையும் என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும். உம்மாவின் எதிரிகளது சூழ்ச்சிகளைத் தடுத்து நிறுத்தும் வகையிலான முன்னெடுப்பேதும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உம்மாவுக்கு ஏற்படுமாயின், அதற்காக மிக வரையறுக் கப்பட்ட முயற்சியும் சக்தியுமே செலவிடப்பட வேண்டும். அப் போதுதான், இவ்வாறான முன்னெடுப்புகளாலும் மோதல்களாலும் உம்மா தனது அடிப்படை இலக்குகளிலிருந்து திசைதிரும்பும் நிலை தவிர்க்கப்படும்.

இக்கட்டத்தின் எதிர்கால கட்டுருவாக்கச் செயற்பாடுகள் சிந்தனைக் களத்திலும் கல்விக் களத்திலுமே முதலில் இடம்பெற வேண்டும். ஏனெனில், அவையே தேவையானளவு வலுப்பிறப்பாக்கம் செய்யக் கூடிய களங்களாகும். உம்மாவின் போராட்டங்களை தீர்க்ககரமாக முடித்து வைப்பதற்கும், அதன் சவால்களை எதிர்கொள்வதற்கும் இக்களங்களும் துறைகளும் மிக அவசியமானவை. அந்தவகையில், இன்றைய அரசியல்-இராணுவக் களங்களிலான உம்மாவின் யத்த னங்கள் அதன் கட்டுருவாக்க சீர்திருத்த முயற்சிகளைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவில் மாத்திரமே மட்டுப் பட்டிருக்க வேண்டும்.

உளவியல் கட்டுருவாக்கம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? உம்மாவின் இருப்பில் அதன் வகிபாத்திரம் யாது? அதனை உருவாக்குவதற்கு அவசியமான கூறுகள் எவை?... என்பவை போன்ற கேள்விகளுக்கான பதில்களை உம்மாவின் சிந்தனையாளர்களும் தலைவர்களும் வழங்க வேண்டும். ஏனெனில், உம்மாவின் வெகு மக்களுக்கும் கல்விப் பயிற்றுவித்தல் துறையில் இருப்போருக்கும் இத்தெளிவு அவசியமாகும். அப்போதுதான், இன்றைய தலை முறைகளதும், வீழ்ச்சிக் கட்டத்தில் வாழ்ந்த முன்னைய தலை முறைகளதும் கட்டமைப்புக்கு மாற்றமான வகையில் உம்மாவின் எதிர்காலத் தலைமுறைகள் உருவாகும். பெற்றோரும் ஆசிரியரும் வளர்ந்த நிலையிலிருந்து மாறுபட்ட உளவியலோடு மகனும் மாண வனும் இளைஞனும் வளர்வார்கள். இந்நிலையில் பெற்றோரதும் ஆசிரியர்களதும் பாத்திரம் இலக்கையும் வழிமுறைகளையும் நோக்கி

வழிகாட்டும் பாத்திரமாக அமையுமேயன்றி, முன்மாதிரிகளின் பாத்திர மாக அமையாது. பெரும்பாலும் அவர்களது நிலை நோயாளிகளுக்கு அறிவுரை கூறும் மருத்துவரின் நிலை போன்றதாகவே இருக்கும். தீங்கான மருந்துகளிலிருந்தும், ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் பழக்க வழக்கங்களிலிருந்தும் விலகிக் கொள்வதற்கான ஆலோ சனைகளை அந்த மருத்துவர் வழங்குவார். ஆனால், தனிப்பட்ட உளவியற் பலவீனம் காரணமாகவும், பிழையாக வளர்க்கப்பட்டதன் காரணமாகவும் அவரே அத்தகைய தீமைகளுக்குப் பலியாகியும் இருப்பார். முழுமையான முன்மாதிரியாகத் திகழ முடியாத நிலை யில் இருப்பவர் கூட தாக்கம் மிக்க பயிற்றுவிப்பாளராக இருக்க முடியும். இதற்கு அவர் முதலில் தனது குறைகளை ஏற்றுக் கொள்பவராக இருப்பது அவசியம். அப்போதுதான், எவ்வாறான குறைபாடுகள் ஏற்பட முடியும் என்பதையும், அவற்றுக்கான காரணங்கள் என்ன என்பதையும் பயிலுனர்கள் புரிந்து கொள்ளும் வகையில் அவரால் விளக்க முடியும். இந்நிலையில் அவர் வயது முதிர்ந்த விளையாட்டுப் பயிற்றுவிப்பாளரை ஒத்திருப்பார். அவரால் தனது அறிவையும் அனுபவத்தையும் நகர்த்த முடியுமே தவிர, முழுமையாக செயற்படுத்திக் காட்ட முடியாது.

எதிர்காலத் தலைமுறைகளில் ஏற்படுத்தப்படும் வளர்ச்சியிலும், சிந்தனா-உளவியல் கட்டுருவாக்கத்திலுமே உம்மாவின் எதிர்காலம் தங்கியுள்ளது. உம்மாவுக்கும் சமகாலத் தலைமுறைக்கும் முன்னால் திறந்திருக்கும் களமும் அதுவே. எனவே, இளைய தலைமுறையின் உள்ளங்களில் சக்தியையும் ஆற்றலையும் சரியான நோக்கையும் விதைக்கும் அளவுக்கு விளைவும் பயனுள்ளதாக அமையும்.

உம்மாவின் சிந்தனையாளர்களும் அறிஞர்களும் கற்றறிவாளர் களும் தங்களது அறிவுப்புல யத்தனங்களைத் திரட்டி இஸ்லாமிய சிந்தனையைச் சீரமைக்க வேண்டும். ஆரோக்கியமான அடித்தளங் களின் மீது இஸ்லாமியக் கண்ணோக்கை கட்டியெழுப்ப வேண்டும். பின்னர் அதன் பெறுபேறுகளை உம்மாவுக்கும் அதன் நிறுவனங் களுக்கும் வழங்க வேண்டும். உம்மாவும் அதன் நிறுவனங்களும் அவற்றைத் தமது சிந்தனையின் உள்ளடக்கமாகவும், எதிர்காலக் கட்டுமான முயற்சிகளுக்கான வழிகாட்டியாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த இலக்கை உம்மாவின் சிந்தனையாளர்களும் அறிஞர்களும் சாதிக்க வேண்டுமாயின், வரலாற்றுப் போக்கை ஆய்வு செய்வ

தற்கான முயற்சிகளை அவர்கள் ஒன்று குவிக்க வேண்டும். அந்த வரலாற்றுப் போக்கு உம்மாவின் சிந்தனையில் ஏற்படுத்திய தாக்கத் தையும், அதன் செல்திசையில் ஏற்பட்ட பிறழ்வுகளையும் அவர்கள் அறிந்த கொள்ள வேண்டும். அப்போதுதான் உம்மாவின் பயணத்தை சரியான பாதைக்கு மீட்டெடுக்க முடியும். ஆரோக்கியமான சிந்தனை களையும் கண்ணோக்குகளையும் பிறப்பாக்கம் செய்வதற்கு இம் மீட்பு அவசியம். ஆக்கபூர்வமான, புத்தாக்கம் கொண்ட எதிர்காலச் செயற்பாடும் இதன் மூலமாகத்தான் சாத்தியமாகும்.

இஸ்லாமிய சிந்தனை என்ற கருத்தாக்கம், அதன் அடிப்படை கள், உட்கூறுகள், அந்த உட்கூறுகளுக்கிடையிலான தொடர்புகள், முறைமை என்பன பற்றியெல்லாம் உம்மாவின் சிந்தனையாளர் களும் அறிஞர்களும் ஆராய வேண்டும். வாழ்வின் அனைத்துப் பக்கங்களிலும் இஸ்லாமிய சிந்தனையையும், கண்ணோக்கையும், அறிவையும் பிறப்பாக்கம் செய்வதற்கு இந்த அம்சங்கள் வழங்க முடியுமான பங்களிப்புகள் என்ன என்பதை அவர்கள் கண்டறிய வேண்டும். இஸ்லாமிய சிந்தனை, இஸ்லாமிய நோக்கு என்பவற்றின் அசல் பண்பையும், முழுமைத்துவ அணுகுமுறையையும், இயல்பை யும், யதார்த்தத்தையும் மீட்டெடுக்க வேண்டும். அந்த இஸ்லாமிய சிந்தனையும் நோக்கும் பிறழ்வடையக் காரணமாக அமைந்த வரலாற்றுச் சூழமைவுகளையும், அனுபவங்களையும், தவறுகளையும் தாண்டி வர வேண்டும். இஸ்லாமிய சிந்தனையிலும் நோக்கிலும் ஏற்பட்ட இப்பிறழ்வும், உள்ளடக்கத்தை விட்டு அவை வேறானமை யும், வெறும் வெளித்தோற்றங்களாகவும் சடங்குகளாகவும் அவை மாறியமையுமே கடந்த பல நூற்றாண்டுகளாக உம்மா சரியான முடி வுக்கோ பாதைக்கோ சென்றடையாததற்கான காரணங்களாகும்.

இஸ்லாமிய சிந்தனையின் ‘உஸூல்’கள் குறித்தும், அதன் முறை மையியல் குறித்தும் கூட உம்மாவின் சிந்தனையாளர்களும் கற்றறி வாளர்களும் கவனம் செலுத்துவது அவசியம். இஸ்லாமிய நோக்கை யும், சிந்தனையையும், கலைகளையும் பிறப்பிக்கும் வகையில் இத்துறை தொடர்பான விவகாரங்களை அவர்கள் துலக்க வேண்டும். வஹீ, சன்மார்க்க வசனங்கள், மொழி முதலிய துறைகளில் மட்டு மன்றி, மானிட சமூக-வாழ்வியல் துறைகள் அனைத்திலும் அந்த நோக்கும் சிந்தனையும் பெறப்பட வேண்டும். ஏனெனில், இஸ்லாமிய சிந்தனா முறையியலானது கல்வி, உளவியல், அரசியல், சமூகவியல், பொருளியல், முகாமைத்துவம், ஊடகம் முதலிய அனைத்து

வாழ்வியல் துறைகளுக்குமான அறிவையும் நோக்கையும் உயிரோட்டமாகவும், முழுமையாகவும், பயனுள்ள வகையிலும் தரக்கூடியது. தத்துவம், நுண்கலைகள், கட்டிடக் கலை, இயற்கை விஞ்ஞானம் முதலிய அனைத்து வாழ்வியல் கலைகளும் இவற்றுள் அடங்கும். இவை மாற்றமுறும் வாழ்வியல் தேவைகளுக்கு ஏற்ப மனித அறிவு உற்பவிக்கும் கலைகளாகவும் துறைகளாகவும் உள்ளன.

உம்மாவை ஆற்றல் மிக்க முன்னேற்றப் பாதைக்கு மீட்டுக் கொண்டு வரும் பொறுப்பு -பிறருக்கு முன்பாக- தமது தோள்களில் சுமத்தப்பட்டிருப்பதை சிந்தனையாளர்களும் அறிஞர்களும் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனையோரைப் பொறுத்த வரை அவர்கள் அறிஞர்களது நோக்கையும் ஆலோசனைகளையும் பின்பற்றுபவர்களாகவே இருப்பர். அறிஞர்கள் தங்களது நோக்கையும் ஆலோசனைகளையும் ஆரோக்கியமான அறிவியல் வழிமுறையினூடாக முன்வைப்பதில் வெற்றி பெறும் அளவுக்கே தூதையும் வாழ்வையும் கட்டியெழுப்புவதற்கு உம்மாவை அசைவியக்கப்படுத்தும் பணியில் வெற்றிபெற முடியும். வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கான இஸ்லாமியப் புத்தாக்க ஆற்றலை நோக்கி உம்மா எவ்வளவு தூரம் நகர்கிறது என்பதுதான் அவர்கள் தமது வகிபாத்திரத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்களா இல்லையா என்பதற்கான அளவுகோலாகும். இப்பணியில் குறைபாடு நேரும் அளவுக்கு உம்மாவின் துன்பங்களும் விஸ்வரூபம் அடையும்; தடுமாற்றம் அதிகரிக்கும்; சரியான பாதைக்கு மீண்டு வந்து வாழ்வைக் கட்டியெழுப்புவதும் கடினமாகி விடும்.

எனவே, நவீன நாகரிக நோக்கை முன்வைப்பதும், இஸ்லாமிய சிந்தனா முறைமையைச் சீரமைப்பதும், அதில் பரிபூரண அறிவியல் அசல் தன்மையை நிதர்சனப்படுத்துவதும் முஸ்லிம் சிந்தனையாளர்களது பொறுப்பாகிறது. உம்மாவுக்கான செயல் வழிகாட்டி ஒன்று உருவாகும் வகையில், சமூக ஒழுங்கமைப்புத் துறையிலும் கல்விப் பயிற்றுவித்தல் துறையிலும் இஸ்லாமியக் கோட்பாடுகளையும் பதிலீடுகளையும் அவர்கள் முன்வைக்க வேண்டும்.

உம்மாவின் இந்தக் கட்டத்தில் தலைவர்களிடமும் வெகுமக்களிடமும் இஸ்லாமியப் பிரக்ஞையை கட்டியெழுப்புவதும் முஸ்லிம் சிந்தனையாளர்களது பொறுப்பே. சீரான, சரியான, முழுமையான சிந்திப்பு முறைமையொன்றை அவர்கள் கட்டமைக்க வேண்டும். சிறந்த உளவியல் கட்டுருவாக்க முறைமைகளுக்கும் அவர்கள் இடமளிக்க வேண்டும். வீட்டில் தொடங்கி, முன் பள்ளி மற்றும்

பொதுக் கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் இது இடம்பெற வேண்டும். ஏனெனில், இளைய தலைமுறைதான் நமது நாளைய நம்பிக்கை. வாலிபமே பலம். அந்தவகையில், நாளைய மனிதர்களைத் தயார் படுத்தும் பணிகளை உம்மா இன்று ஆரம்பித்தே ஆக வேண்டும்.

நாளைய தலைமுறையைத் தயார்படுத்துவதில் பெற்றோரின் வகிபாத்திரம் குறித்து சிந்தனையாளர்களும் கல்வியியலாளர்களும் புரிந்து கொள்வது முக்கியமானது. பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் முறைமைகள் பற்றிய ஏற்பு நிலையை பெற்றோரிடம் ஏற்படுத்துவதற்கு நிகரான வேறொரு கல்வியியல் விவகாரம் இருக்க முடியாது. ஏனெனில், உளவியல் மற்றும் பெறுமானங்கள் சார்ந்த கட்டுருவாக்கமானது பெற்றார்-பிள்ளைத் தொடர்புகளிலேயே பெருமளவு தங்கியுள்ளது. குடும்ப உறவுகளில் நிலவும் கண்ணோட்டம், பெறுமானங்கள், அபிலாஷைகள் என்பவற்றிலும் அது தங்கியுள்ளது. பெற்றோரதும் குடும்பத்தினதும் ஏற்பைப் பெறாத எத்தகைய பாடசாலை மட்ட அல்லது சமூக மட்ட முயற்சியும் தோல்வியையே தழுவும். ஏனெனில், அத்தகைய முயற்சிகளை எதிர்ப்பதும், அவற்றின் விளைவுகளைப் பாழாக்குவதும் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஒரு போதும் சிரமமானதன்று.

எனவே, மாற்றச் செயல்வாதத்தில் சிந்தனையாளர்களும் கல்விப் பயிற்றுவிப்பாளர்களும் வெற்றி பெறுதல் என்பது அடிப்படையில் பெற்றோரது ஏற்பு நிலையைப் பெறுவதிலும், பயிற்றுவித்தல் விவகாரத்தை அவர்களிடம் அழகிய முறையில் நகர்த்துவதிலுமே தங்கியுள்ளது. அதன் மூலமாகவே, அவசியமான இலக்குகளையும் முயற்சிகளையும் சாதிப்பதில் வீடும் குடும்பமும் தமது பங்கை ஆற்றும். பிள்ளைகளின் வெற்றிக்காகவும், அவர்களது நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் பெற்றோர் மேற்கொள்ளும் அர்ப்பணத்துக்கு நிகராகவோ மாற்றாகவோ எதுவும் கிடையாது. அந்த வகையில், பெற்றோருடன் அழகிய முறையில் உரையாடுவதும், உண்மையை அவர்களுக்கு எளிய முறையில் விளக்குவதும் மிக அடிப்படையான பணி என்பது சிந்தனையார்களதும், கல்விப் பயிற்றுவிப்பாளர்களதும், சீர்திருத்த வாதிகளதும் சிந்தையில் எப்போதும் இருக்க வேண்டும். அதுவே பல்வேறு தடைகளை வெற்றி கொள்வதற்கான வழியாகும். சீர்திருத்த முயற்சிகளுக்கு முன்னால் அவ்வாறான தடைகள் -பல்வேறு நோக்கங்களுக்காக- பல்வேறு நிறுவனங்களாலும் ஒழுங்குகளாலும் ஏற்படுத்தப்பட முடியும் என்பது கண்கூடு.

### (2) இஸ்லாமிய மயப்படுத்தலும் அறிவியல் நிறுவனங்களும்:

இஸ்லாமிய மயப்படுத்தலையும், இஸ்லாமியக் கண்ணோக்கை கட்டியெழுப்புவதையும் சாதிப்பதில் இஸ்லாமிய அறிவியல் நிறுவனங்களின் வகிபாத்திரம் பற்றிப் பேசாமல் எதிர்காலம் பற்றிய உரையாடல் முழுமையடையாது. ஏனெனில், இஸ்லாமிய உம்மாவின் பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் பலமான சமூக யதார்த்தமொன்றின் மீது பிரயோகிப்பது எவ்வாறு என்பதே நெருக்கடியின் இறுதி வடிவமாகும். உம்மாவின் இதுவரையான யத்தனங்களும், அரசியல்-இராணுவப் பிரயாசைகளும் அதனை அதிக தூரம் முன்தள்ளவில்லை என்பது வெளிப்படையானது. மட்டுமன்றி, உம்மாவின் பேரவலம் நாளுக்கு நாள் பயங்கரமாகிக் கொண்டே செல்கிறது. முஸ்லிம் உம்மாவின் தளங்களுக்கும் சமூகங்களுக்கும், முன்னேறிய சமுதாயங்களின் தளங்களுக்கும் சமூகங்களுக்கும் இடையிலான விரிசல் இன்னுமின்னும் அதிகரித்த வண்ணமே உள்ளது. அதன் விளைவாக, முஸ்லிம் உம்மாவின் உரிமைகள், உயிர்கள், செல்வங்கள் என்பவற்றின் மீதான அத்துமீறலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

உம்மாவின் சிந்தையிலும் மனச்சாட்சியிலும் கல்வித் திட்டத்திலும் ஆழப்பதிந்த அறிவு மூலாதாரங்கள் மற்றும் ஆரோக்கியமான சிந்தனா- அறிவியல் முறைமை என்பவற்றின் பங்களிப்பின்றி, இஸ்லாமிய மாதிரியை வாழ்வியல் யதார்த்தத்தின் மீது பிரயோகித்தல் சாத்தியமற்றது. உயர் நாகரிக இலக்குகளையும், ஆக்கபூர்வமான செயல் திட்டங்களையும், வளர்ச்சியடைந்த சமூகவியல் ஒழுங்குகளையும் பிரதிபலித்துக் காட்டுவதற்கு இந்நடைமுறைப் பிரயோகம் அவசியமாகும்.

இஸ்லாமிய நாடுகளிலுள்ள கல்வி-அறிவியல் நிறுவனங்களும், வீடும், குடும்பமும் ஆற்றல்களையும், சக்திகளையும், வளர்த்தெடுப்பதற்கான மிகப் பெரும் களங்களாகவும் முதல் தரக் கோட்டைகளாகவும் விளங்குகின்றன. களத்தை தயார்படுத்தவும், உம்மாவின் அங்கத்தவர்களைத் தகவமைக்கவும், வளவாளர்களை உருவாக்கவும் உகந்த பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் அவையே.

இஸ்லாமிய உலகிலுள்ள கல்வி-அறிவியல் நிறுவனங்கள் தமது பணியில் வெற்றிபெற வேண்டுமாயின், சிந்தனைச் சோம்பலும், அறிவியற் பலவீனமும், அன்னிய சிந்தனையை கண்மூடிப் பின்பற்றும்

பண்பும் கொண்ட நொய்மையான கட்டமைப்புகளாக அவை தொடர்ந்தும் இருக்க முடியாது.

இஸ்லாமிய உம்மாவில் பரந்து கிடக்கும் கல்வி-அறிவியல் நிறுவனங்கள் மலட்டுத்தன்மை வாய்ந்த, நோயுற்ற கட்டமைப்பு களாக இருப்பது இனியும் ஏற்க முடியாதது. கல்விக்காகவும் தகை மைக்காகவும் முஸ்லிம் புத்திஜீவிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் நிறுவனங்களாக அவை தொடர்ந்தும் பயணிக்க முடியாது. அவ்வாறு பல தலைமுறைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிய பிறகும் உம்மா வின் சொந்த மண்ணில் பலமோ அறிவியல்-நாகரிக உயிர்ப்போ வளரவில்லை என்பதே உண்மையாகும். உம்மாவுக்குத் தேவையான சிறந்த அறிவியல் சாதனங்களையும் உற்பத்திகளையும் வழங்கக் கூடிய சாதுரியம் மிக்க ஆய்வாளர்களோ புத்தாக்க அறிவியலாளர் களோ உருவாகவில்லை. எனவே, மேற்கத்தியரின் உணவு மேஜை களைப் பார்த்திருந்து, அவற்றிலிருந்து சிந்தும் பருக்கைகளைப் பொறுக்கும் நிலை இனியும் வேண்டாம்.

இஸ்லாமிய உலகிலுள்ள அறிவியல் நிறுவனங்கள் தமது முக் கியத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தமது சிந்தனைப் பாங்கை மாற்றிக் கொள்ள வேண்டும். உம்மாவையே அவை சார்ந்து நிற்க வேண்டும். உம்மாவின் யத்தனங்கள், சக்திகள், சமயம், விசு வாசம், சிந்தனைத் தளங்கள் இலக்குகள், வரலாற்றுப் பாடங்கள் என்பவற்றைச் சார்ந்து நின்று, முழுமைத்துவ அறிவியல் முறைமை யொன்றை ஆக்கபூர்வமாகவும் சிறந்த ஒழுங்கமைப்பிலும் வகுத் தளிக்க வேண்டும். அப்போதுதான் நம்மை நோக்கி வரும் உண்மை யான சவால்களையும், உண்மையான தேவைகளையும் எம்மால் எதிர்கொள்ள முடியும்.

மேற்கத்திய அல்லது கிழக்கத்திய அறிவுகளையும் கலைகளையும் முறைமைகளையும் அட்சரம் பிசகாமல் மொழிமாற்றம் செய்து தருவது மட்டுமே உம்மாவிலுள்ள அறிவியல் நிறுவனங்களது பணி யாக இருக்க முடியாது. பிறரது அறிவியற் பெறுபேறுகளையும் சிந் தனா அறுவடைகளையும் பெற்று, புனித வசனங்களாலும் உள்ளூர்ப் பெயர்களாலும் இலக்கங்களாலும் கணக்கெடுப்புக்களாலும் அவற் றுக்கு முலாமிட்டு முன்வைப்பது மட்டுமே முஸ்லிம் கற்றறிவாளர் களது அதிகபட்சப் பங்களிப்பாக அமைய முடியாது. இவ்வாறு சாய மடித்து முலாமிடும் செயற்பாடுகள் நமது கண்மூடிப் பின்பற்றலை யும் இயலாமையையும் எவ்வகையிலும் மாற்றி விடப் போவதில்லை.

இஸ்லாமிய உலகிலுள்ள கல்வி-அறிவியல் நிறுவனங்கள் உம்மாவின் மனச்சாட்சியினுள் பொதிந்திருக்கும் முழுமொத்தக் கோட்பாடுகள், சிந்தனைகள், உயர் இலக்குகள் என்பவற்றின் அடிப்படையிலேயே இயங்க வேண்டும். இஸ்லாமிய அறிவியல் முறைமைகளை உருவாக்கும் நோக்குடன் அனைத்துத் தரப்புகளும் ஒன்றுபட்டு உழைக்கக் கூடிய அறிவியல் சங்கங்களும் அலகுகளும் அந்நிறுவனங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும். பல்வேறு அறிவுத் துறைகளுக்குத் தேவையான இஸ்லாமிய முறையியலை உருவாக்குவதற்கு உழைப்பதனூடாக 'அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்' என்ற பணியை அவை ஆரம்பிக்க வேண்டும். அப்பணியினூடாக பல்வேறு அறிவுத் துறைகளுக்கான முற்குறிப்புகளும் பொதுவான அடிப்படைகளும் அறிமுகங்களும் வழங்கப்பட வேண்டும். இத்தகைய முன்னேற்பாடுகள் இஸ்லாமிய அறிவியல்-நாகரிக ஆய்வுகளுக்கான இயங்கு தளங்களாகவும் அடிப்படைச் சட்டகங்களாகவும் அமைவதோடு, இளம் தலைமுறையினரின் முயற்சிகளையும் ஆர்வங்களையும் திசைப்படுத்துவனவாகவும் அமையும்.

அறிவுத் துறைகளில் மேற்கொள்ளப்படும் 'இஸ்லாமிய மயப்படுத்தல்' சார்ந்த இம்முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டுமாயின், -அறிஞர்களையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் உள்ளடக்கிய- ஆய்வாளர்களது உழைப்பானது புதிய இஸ்லாமிய அறிவியற் சட்டமொன்றையும், நாகரிக இலக்குகளையும் நோக்கி திசைப்படுத்தப்படுதல் அவசியம். இஸ்லாமிய முற்குறிப்புகளையும் கருதுகோள்களையும் கட்டியெழுப்ப அவர்கள் வழிநடாத்தப்படுவதோடு, அத்தகைய அறிவு மனப்பாங்கு அவர்களிடம் வளர்க்கப்படவும் வேண்டும். மட்டுன்றி, இவற்றின் ஒளியில் நமது அறிவியல் முதுசங்களும், நம்மைச் சுற்றியுள்ள சமுதாயங்களின் முதுசங்களும் ஆய்ந்து வகைப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய முயற்சிகளே நாம் ஆற்றலையும், முதிர்ச்சியையும், அசல் தன்மை வாய்ந்த அறிவியல் இயலுமையையும் சாதித்துக் கொள்வதற்கான ஏக வழியாகும்.

இஸ்லாமிய உலகின் சில பல்கலைக்கழகங்களில் இஸ்லாமிய சமூகவியல் சார்ந்த சில பிரிவுகள் இன்று உருவாக்கப்பட்டுள்ளன. இஸ்லாமியப் பொருளியல், இஸ்லாமிய ஊடகவியல், இஸ்லாமிய நாகரிகம் முதலிய கற்கைப் பிரிவுகளை இவற்றுக்கு எடுத்துக்காட்டாக கூறலாம். இஸ்லாமிய சமூகவியல் ஆய்வுகளுக்கான நிலையங்கள் கூட பல இடங்களில் உருவாக்கப் பட்டுள்ளன. இஸ்லாமிய சிந்தனை,

இஸ்லாமியப் பொருளியல் போன்றவை தொடர்பான ஆய்வு நிலையங்களாக அவை செயற்படுகின்றன. சில சமூகவியல் கற்கைப் பிரிவுகளில் சர்வதேச இஸ்லாமிய உறவுகள், இஸ்லாமிய அரசியல் சிந்தனை, இஸ்லாமிய ஆட்சியொழுங்குகள், இஸ்லாமிய உலகின் அரசியல் வளர்ச்சி போன்ற பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இந்த அனைத்துமே சரியான பாதையில் எடுத்து வைக்கப்பட்ட சிறந்த எட்டுக்களாகும். எனவே, இவை உற்சாகப்படுத்தப்பட்டு பலப் படுத்தப்பட வேண்டும். இவற்றை வளர்ச்சியடையச் செய்யவும் விரிவுபடுத்தவும் அவசியமான வழிவகைகளும் சாதனங்களும் ஏற் படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். மட்டுமன்றி, தகுதி வாய்ந்த சிறப்புத் துறை ஆய்வாளர்களும் போதியளவு பெற்றுக் கொடுக்கப் பட வேண்டும். அவர்கள் குறித்த துறைகளிலான ஆய்வுகளுக்கு உதவக் கூடியவர்களாகவும், அவற்றின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்பவர்களாகவும் இருப்பர்.

இஸ்லாமிய சமூகவியல் ஆய்வுத் துறைகள் எதிர்கொள்கின்ற மிக முக்கியமான பிரச்சினை, அவற்றில் போதியளவு வசதிகளும் சாத னங்களும் இல்லாதிருப்பதே. எந்தவொரு பிரிவை அல்லது நிலை யத்தை எடுத்துப் பார்த்தாலும், அதன் வசதிக் குறைபாட்டை நாம் இலகுவாகக் கண்டு பிடித்து விடலாம். மட்டுமன்றி, அவற்றின் புதிய திட்டங்களில் முழு நேரமாகப் பணியாற்ற தகுதி வாய்ந்த ஆய் வாளர்களும் போதியளவு இருப்பதில்லை.

தற்போதைய கட்டத்தில் இவ்வாறான நிலையங்கள் தகுதிவாய்ந்த ஆளணியோ சாதனங்களோ இன்றி விடப்பட முடியாது. மட்டுமன்றி, இந்நிலையங்களின் ஆய்வுகள் பரவலாக்கப்பட்டு, உரிய இலக்கு களைச் சாதிப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும்.

இக்கட்டத்தில், துறைசார்ந்த அறிவாய்வில் ஈடுபட முடியாதளவு பணிச்சுமைகள் அல்லது கற்பித்தற் சுமைகள் ஆய்வாளர்களது தோள் களில் சுமத்தப்படலாகாது. உம்மாவின் அறிவியல்-நாகரிகப் பயணம் தொடர்பான இக்கட்டத்தில் அது சிறந்த விளைவைத் தராது. கார ணங்களை வலிந்து கற்பித்துக் கொண்டு ஆய்வுப் பணியில் ஈடு படாதிருக்கும் சாத்தியத்தையும் அது அதிகரிக்கும்.

அறிவை இஸ்லாமிய மயப்படுத்துதல் மற்றும் கலைகளையும் கல்வி-அறிவியல் முறைமைகளையும் இஸ்லாமிய மயப்படுத்துதல்

முதலிய பணிகளின் வெற்றிக்கு இடையறாத உழைப்பும், ஒன்றன் மேல் ஒன்றான அறிவுத் திரட்சியும் தேவை. அவற்றிலிருந்தே அசலான இஸ்லாமிய அறிவியல் நோக்கும் உள்ளடக்கமும் பிறக்கும். எனவே, இது வெறுமனே தொலைத்தொடர்பு ஊடகங்களில் விடுக்கப்படும் விளம்பரமாகவோ தீர்மானமாகவோ கோஷமாகவோ மாத்திரம் இருந்து விட முடியாது. துறை சார்ந்தவர்கள் அதற்காகத் திட்டமிட்டு, முறையாகவும் தொடராகவும் உழைக்க வேண்டும். அப்போதுதான், விருட்சம் ஆழ வேரூன்றி, கிளை பரப்பி, விளைச்சல் தரும்.

அறிவையும் உம்மாவையும் இஸ்லாமிய மயப்படுத்தத் தேவையான முதல் நடவடிக்கையாக, இஸ்லாமிய அறிவியல் நிறுவனங்கள் முக்கியமான சில பணிகளை ஆற்ற வேண்டும். அப்பணிகளாவன:

அ) அல்-குர்ஆனும் ஸஹீஹான ஸுன்னாவுமாக அமைந்த வஹீயின் வசனங்களை உறுதிப்படுத்தி, வகைப்படுத்தி, செறிவாக்குதல்; ஆய்வாளர்களும் கற்றறிவாளர்களும் அவற்றையும் அவற்றின் 'மகாஸிது'களையும் புரிந்து கொள்ளும் வகையில் இலகுபடுத்தல்; ஒவ்வொருவரது சிறப்புத் துறைக்கும் ஆர்வத்துக்கும் தக்கவாறு அவற்றைக் கையாளும் வாய்ப்பை வழங்குதல்.

ஆ) இஸ்லாமிய சிறப்புத்துறை முதுசங்களிலுள்ள தலைசிறந்த மூலாதாரப் பனுவல்களை விடயவாரியாக வகைப்படுத்தி, உறுதிப்படுத்தி, செறிவு படுத்தல்; ஆய்வாளர்களும் கற்றறிவாளர்களும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அவற்றை இலகுபடுத்தல்.

முஸ்லிம் மாணாக்கரின் அறிவையும் மனச்சாட்சியையும் கலைத் திட்டத்தையும் இஸ்லாத்தின் மூலாதாரங்களோடும் முதுசங்களோடும் தொடர்புபடுத்துவதும், அவற்றை அவர்களுக்கு இலகுபடுத்தி விளக்குவதும் மிக அடிப்படையான பணியாகும். அதன் மூலமாகவே இஸ்லாத்துடனான அசலான மனத்தொடர்பை அவர்களிடம் ஏற்படுத்த முடியும். இப்பணி மேற்கொள்ளப் படாத போது நவீன இஸ்லாமிய சிந்தனையின் அனைத்துச் சீர்திருத்த முயற்சிகளும் கானலாகி விட முடியும்.

இ) சிறப்புத்துறை அறிவுடன் இஸ்லாமிய அறிவு முதுசங்கள் பற்றிய பரிச்சயமும் கொண்ட அறிஞர்களையே கல்வி-அறிவியல் நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் தமது அறிவாய்வுப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். ஏனெனில், அத்தகையோர் ஒழுங்

கமைப்போடு தொடர்ச்சியாக மேற்கொள்ளும் சிறப்புத்துறை ஆய்வு கள்தான் தேவையான அறிவியல் நோக்கையும் அறிவியல் முறைமை யையும் துலக்க வல்லவை. சிறப்புத்துறை அறிவாய்வு நிலையங் களும், உயர்கல்விப் பிரிவுகளுமே ஆரம்பத்தில் நமது தேவையை நிறைவேற்ற உதவக்கூடிய மிகச்சிறந்த ஏற்பாடுகளாகும். அவற்றி லுள்ள ஆய்வாளர்களும், கற்கையாளர்களும், மாணவர்களும் பரஸ்பர ஒத்துழைப்புடன் தொடராகச் செயற்படுவதனூடாக இஸ்லாமிய அறிவியல் நோக்கை வெளிக் கொண்டு வர முடியும். முழுமையான அறிவியற் கலைகளையும், முறைமைகளையும், பாடப் புத்தகங்களை யும் உருவாக்கவும் முடியும். அவை படிப்படியாக அன்னிய முறை மைகளதும், கோட்பாடுகளதும், அறிவியற் கலைகளதும் இடத்தைப் பிடிக்கும் சாத்தியமும் தோன்றும். அதன் பிறகு, ஒவ்வொரு துறை யிலும் தேவையான அறிவின் அளவுக்கும், அவசியமான ஒப்பீட்டுக் கற்கைகளின் அளவுக்குமே அன்னிய அறிவியற் கலைகள் நம்மிடம் எஞ்சி நிற்கும்.

இன்று அறிவியல் ஆக்கங்களில் பரவலாக அவதானிக்கப்படுகின்ற பலவீனமான தயார்படுத்தல், நுனிப்புல் மேய்தல் என்பன நிராசை யையும் தடுமாற்றத்தையும் மயக்கத்தையுமே ஏற்படுத்துகின்றன. பெறுபேறுகளைக் கொண்டு வரும் அவசரத்தில் அவ்வாக்கங்கள் உரியவாறு தயார்படுத்தப் படாமலும் முதிர்ச்சியடையாமலும் வெளி வருவதால், பொறுப்பு நிறைவேறாமலே போய் விடுகிறது.

ஈ) இஸ்லாமிய அறிவியல் நிறுவனங்கள் உம்மாவின் தலைவர் களுக்கும், கற்றறிவாளர்களுக்கும், அறிஞர்களுக்கும் பொதுவான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்; அறிவை இஸ்லாமிய மயப் படுத்துதல் தொடர்பான பிரச்சினைகளை அவர்களது பார்வைக்கு முன்வைக்க வேண்டும்; அவற்றுள் முன்னுரிமை பெறும் விவகாரங் களையும், அவ்விவகாரங்கள் இன்றைய உம்மாவில் பெறும் இடத் தையும் அவர்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும்; அவை குறித்து அவர்கள் செலுத்த வேண்டிய கவனமும், மேற்கொள்ள வேண்டிய பணிகளும் எடுத்துக் காட்டப்பட வேண்டும்.

அதேபோல், இந்நிறுவனங்கள் அறிவியல் மாநாடுகளையும் கல்விக் கருத்தரங்குகளையும் நடாத்தி, பிரச்சினையின் பல்வேறு பக்கங்களை இத்தலைமைகளுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். ஒவ் வொரு துறை சார்ந்தும் உழைத்துக் கொண்டிருப்போரது முயற்சி களையும் பங்களிப்புகளையும் முன்வைப்பதற்கான மேடையாக

அம்மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் அவை பயன்படுத்த வேண்டும். அப்போதுதான், குறித்த பிரச்சினைகள் தலைவர்களதும் கற்றறிவாளர்களதும் கவனயீர்ப்பை உரிய வகையில் பெறும்.

அறிவியல் கழகங்கள் உருவாவதையும், பருவகால சிறப்புத்துறை அறிவியற் சஞ்சிகைகள் வெளியாவதையும் மேற்குறித்த நிறுவனங்கள் இலகுபடுத்திக் கொடுக்க வேண்டும். ஏனெனில், அவையே அறிவி வாய்வுப் பங்களிப்பை செயலூக்கப்படுத்துவதற்கான பிரதான வழி யாகக் கருதப்படுகிறது. மட்டுமன்றி, குறித்த பிரச்சினையை உம்மா வின் விவகாரமாகவும், சமூகத்தின் விவகாரமாகவும், தலைவர்களது இலக்காகவும் ஆக்கிக் கொள்ளவும் அவை உதவும். உள்ளீடற்ற கோஷங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் இது. குறிப்பிட்ட சிலர் மாத்திரம் அறிவியல் தந்தக் கோபுரங்களின் ஓரத் தில் அமர்ந்து கொண்டு கருமமாற்றியதும் இனிப் போதும்!

உ) இஸ்லாமிய அறிவியலின் அசல் தன்மைக்கும், உம்மாவின் வாழ்வியல் விவகாரங்களுக்கும் இஸ்லாமிய நோக்கில் உதவக் கூடிய விவகாரங்களை நோக்கியே அறிவியல் நிறுவனங்கள் தமது புலமைப் பரிசில்களையும், உயர் கற்கைகளையும், அறிவாய்வுகளையும் திசைப் படுத்த வேண்டும். மட்டுமன்றி, மாணவர்களையும் ஆய்வாளர்களை யும் அவர்களது கற்கை மண்டபங்களிலும் ஆய்வு கூடங்களிலும் பராமரித்து, அவர்களிலிருந்து தேவையான வளவாளர்களை அவை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் அறிவொளியை ஏந்தி பயணத்தை தொடரக் கூடியவர்களாக உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான், ஆய்வாளன் தனது அறிவுப் பயணத்தில் திசை தவறி, மேற்கத்திய சிந்தனை கொண்டவனாகத் திரும்பும் அபாயம் தவிர்க் கப்படும். அவ்வாறு அவன் திசை தவறி விட்டால், உம்மாவுடனான அவனது மானசீகப் பிணைப்பு தளர்ந்து விடும். காலனிய கலாசாரப் படையெடுப்பின் கருவியாகவும் அவன் மாறி விடுவான். அத்தகைய காலனிய கலாசாரப் படையெடுப்பே நீண்ட காலமாக உம்மாவின் நம்பிக்கை, சிந்தனை, கல்வி முதலிய எல்லாத் தளங்களையும் ஆழ ஊடுருவிப் பாதித்திருக்கிறது.

திட்டமிட்ட முயற்சிகளாலும், பயனுள்ள தொடர்ச் செயற்பாடு களாலுமே நாம் கடமையை நிறைவேற்றியவர்களாகவும் பொறுப் பைச் சுமந்தவர்களாகவும் திகழ முடியும் என்று திடமாக நம்புவோம். அதன் பிறகு அல்லாஹ்வின் திருப்தியையும் உதவியையும் நாம் எதிர்பார்க்க முடியும். நிச்சயமாக அவன் சிறந்த எஜமானன்; சிறந்த உதவியாளன்.

### 3) மனித இனப் பயணத்தின் எதிர்காலம்:

இஸ்லாமிய உம்மாவைக் கட்டியெழுப்புவதன் எதிர்காலம் உம்மாவின் சிந்தனா முறைமைகளையும், கல்வித் திட்டங்களையும் சீர்திருத்துவதில் எட்டப்படும் வெற்றியின் அளவிலேயே தங்கியுள்ளது. அவ்வாறே, இஸ்லாமிய சமூகவியல் மற்றும் இஸ்லாமிய அறிவியற் கலைகளின் அசல் தன்மையை உறுதிப் படுத்துவதிலும் அது தங்கியுள்ளது. மறுபுறத்தில், இஸ்லாமிய உம்மா தனது முறைமைகளைச் சீர்திருத்துவதிலும், நோக்கைத் தெளிவுபடுத்துவதிலும், உயிர்ப்பு மிக்க இஸ்லாமிய மாதிரியொன்றை முன்வைப்பதிலும் அடைகின்ற வெற்றியிலேயே இன்று -கண்ணுக்கெட்டிய தூரம் வரை- அச்சுறுத்தலுக்கும் கலக்கத்துக்கும் உட்பட்டிருக்கின்ற மனித இனத்தின் எதிர்காலமும் தங்கியுள்ளது.

ஏனெனில், இஸ்லாம்தான் மனிதனுக்கு (அவன் தனிநபராயினும், சமூகமாயினும்) அவனது இருப்பின் நோக்கத்தை திருப்திகரமாக முன்வைக்கிறது; சிறந்த விழுமிய அடிப்படைகளை வழங்குகிறது; 'ஃபித்றா'வின் உணர்வுகளையும் தேவைகளையும் மானிடத் தீட்சண்யத்திற்கு துலக்கிக் காட்டுகிறது. மனித உள்ளம், சமூகம், உலகம், பிரபஞ்சம் என்பவற்றில் அந்த ஃபித்றா -வெளிப்படையாகவும் மறைமுகமாகவும்- கொண்டிருக்கும் முழுமொத்தத் தொடர்புகளின் பரிமாணங்களை இஸ்லாமே தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. சமூக ஸ்திரத்தன்மை, நாகரிக முன்னேற்றம், சமாதானம், சர்வதேசப் பாதுகாப்பு என்பவற்றுக்கான அடிப்படைகளையும் அதுவே மனித இனத்துக்கு முன்வைக்கிறது.

குடும்பம் என்ற நிறுவனத்தை இஸ்லாம் பாதுகாக்கிறது. நீதிக் கொள்கை, பரஸ்பரக் கூட்டுறவு, தனிமனித-சமூகப் பொறுப்பு, நம்பிக்கைச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சி என்பவற்றை அது உத்தரவாதப் படுத்துகிறது. 'ஷூறா' என்ற கொள்கையையும், மனிதனது ஒருமைப்பாடு என்ற கொள்கையையும் அடிப்படையாகவும் நலனாகவும் முடிவாகவும் அது முன்வைக்கிறது.

இஸ்லாம் அறிவியலுக்குத் தூண்டுதலளிக்கிறது; அறிவு பெறுமாறு அழைப்பு விடுக்கிறது; சீர்திருத்தத்தையும் வளப்படுத்தலையும் கட்டுருவாக்கத்தையும் ஏவுகிறது; தேவைகளை நிறைவேற்றுமாறும், அவசியப்பாடுகளை இலகுபடுத்திக் கொடுக்குமாறும் கட்டளை இடுகிறது.

மனித இன அபிலாஷைகளைப் பிரதிபலிக்கின்ற இத்தகைய சீரிய இஸ்லாமிய நோக்கே நவீன கால ரோகங்களை எதிர் கொள்ள ஆற்றல் வாய்ந்ததாகும். தெய்வீக வழிகாட்டலைப் பெறாது பிறழ்வுற்ற சட வாத நாகரிகத்தின் அபாயங்களை முறியடிக்க உகந்தது அதுவே.

நவீன சடவாத நாகரிகம் வங்குரோத்து நிலையை அடைந்து விட்டமை அனைவருக்கும் கண்கூடு. அதன் சமூகக் கட்டமைப்பு சரிந்து விட்டது; குடும்பக் கட்டமைப்பு தகர்ந்து விட்டது. அதன் அங்கத்தவர்கள் பல்வேறு உளவியல் நெருக்கடிகளையும், ஆன்மீக வறுமையையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சடவாத நாகரிகம் கொண்டிருக்கும் பௌதீக ஆற்றலின் நிழலில், மனித இனத்தின் முன்னேறிய சமூகங்கள் இன்று சிதைவுற்றுச் சரிந்து கொண்டிருக்கின்றன. வடக்கு-தெற்கு என்றும், வெள்ளை-கறுப்பு என்றும், செல்வம்-வறுமை என்றும், பசித்தவன்-வயிறு புடைக்க உண்பவன் என்றும், காலனியப்படுத்துபவன்-காலனியத்தால் ஒடுக்கப் படுபவன் என்றும் அந்த உலகம் இன்று பிளவுற்று நிற்கிறது. அழிவையும் நாசகாரக் கருவிகளையும் நோக்கியே மொத்தமாக அனைவரும் போட்டி போட்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். சமா தானத்தின் அர்த்தம் இன்று மனித இனத்தில் எஞ்சியிருப்பது முழு மொத்தப் பேரழிவு குறித்த அச்சத்தின் மீது மாத்திரமே. அப்படியோர் அழிவு ஏற்பட்டால், பரஸ்பரம் காழ்ப்புணர்வுடன் மோதிக் கொண்டி ருக்கும் அனைத்து தேசியவாதங்களுக்கும் வர்க்கங்களுக்கும் முகாம் களுக்குமான சாவுமணியாகவே அது அமையும் என்ற பீதிதான் சமாதானத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

ஆக- மனித இனத்துக்கும் பௌதீக ரீதியாகப் பலமடைந்த சமூகங்களுக்கும் இன்றுள்ள மிகக் கடுமையான தேவை இஸ்லாம் தான். ஏனெனில், அவற்றின் கட்டமைப்பிலுள்ள பலவீனங்களுக்கு விடையாக அமையக் கூடியது அதுவே. இப்பலவீனங்கள் எதிர் காலத்தில் இன்னும் விஸ்வரூபம் எடுக்கும் வாய்ப்புகள் மிக அதிகம்.

அந்த வகையில், இக்கருத்தாக்கங்களை இரு அம்சங்களாக நாம் வகுத்துக் கூற முடியும்:

ஒன்று: ஒற்றுமை, சகோதரத்துவம் முதலிய அடிப்படைகளின் மீதான சமூகமொன்றையே இஸ்லாம் நிலை நிறுத்துகிறது. தனி மனிதனின் அடிப்படைத் தேவைகளிலும், அந்தத் தனிமனிதனுக்கும் பிறருக்கும் இடையிலான பொதுவான அம்சங்களிலும் அது கவனம்

செலுத்துகிறது. குடும்பம், அயலவர், சமூகம், மனித இனம் முதலிய அனைத்து மட்டங்களையும் அது கவனிக்கிறது.

மேலே நாம் குறிப்பிட்டது போல், மிகப்பாரிய-நாசகார-பௌதீக சக்தி வளங்களை வெடித்து வெளிவரச் செய்து கொண்டிருக்கும் உலக சமூகங்கள் தனிநபர்களுக்கும், தேசியவாதங்களுக்கும், வர்க் கங்களுக்கும் இடையிலான மோதல் சார்ந்த தத்துவங்களின் நிழலில் தொடர்ந்தும் வாழ முடியாது. ஏனெனில், பிரபஞ்ச அழிவுக் கருவி கள் பெருகிக் கிடக்கும் இச்சூழ்நிலையில், எப்போதும் முரண்பாடு களிலும் எதிர்ப்பு மனப்பாங்கிலும் சமூகங்களது கவனம் குவிந் திருக்கும் இக்கட்டத்தில், கடிவாளம் கைநழுவிப் போய் விடுவதற் கான வாய்ப்புகளே அதிகமாகும். மதிகெட்ட மனநிலையின் ஆதிக்க கணமொன்றில் மனிதன் எடுக்கக் கூடிய தற்கொலை முடிவொன்று உலகப் பேரழிவுக்குக் காரணமாகி விட முடியும். அத்தகைய கொலை வெறி மனோ நிலையையும், சமுதாயங்களுக்கிடையிலான அத்து மீறல்களையுமே இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கடந்த கால வரலாறுகள் கூட இதுபோன்ற நிகழ்வுகளை -அவற்றின் நாசகார விளைவுகள் வேறுபட்டவையாயினும்- கண்டிருக்கின்றன.

ஆக- இஸ்லாத்தின் உலகமே அல்லது 'கூட்டுப் பாதுகாப்பு' உலகமே நாளைய உலகிற்கு சமாதானத்தையும் பாதுகாப்பையும் சாத் தியப் படுத்துவதற்கான சித்தாந்தமாக அமைய முடியும்.

மாட்சிமை நிறைந்த அல்லாஹ் தனது கண்ணிய வேதத்தில் கூறுவதைப் பாருங்கள்:

> ''மனிதர்களே, உங்கள் ரட்சகனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். அவனே உங்களை ஒரே உயிரிலிருந்து படைத்தான். அதன் சோடியையும் அதிலிருந்தே படைத்தான். அந்த இருவரிலு மிருந்து பல ஆண்களையும் பெண்களையும் உருவாக்கி பரவச் செய்தான்''. *(4:1)*

> ''மனிதர்களே, நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்துமே படைத்தோம். நீங்கள் பரஸ்பரம் உங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சய மாக உங்களில் அல்லாஹ்விடம் கண்ணியமானவர் அதிகம் உள்ளச்சம் கொண்டவரே. நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்த வன்; தேர்ச்சி மிக்கவன்''. *(49:13)*

''வானங்களதும் பூமியினதும் படைப்பும், உங்களது மொழி களும் நிறங்களும் வேறுபட்டிருப்பதும் அவனது அத்தாட்சி களாகும்''. *(30:22)*

''மனிதர்கள் ஒரே சமுதாயமாகவே இருந்தனர்; பின்னர் வேறு பட்டுப் போயினர்''. *(10:19)*

''பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள். அவ்வாறே உறவினர் களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டையி லுள்ள உறவினர்களுக்கும், அன்னிய அண்டை வீட்டாருக்கும், உடனிருக்கும் நண்பர்களுக்கும், பயணிகளுக்கும் (உபகாரம் செய்யுங்கள்)''. *(4:36)*

''அதன் காரணமாகவே இஸ்ரவேலர்களுக்கு நாம் இவ்வாறு விதித்தோம்: எவர், கொலைக்குப் பதிலாக அல்லது பூமியில் விஷமத்தை தடுப்பதற்காக அன்றி, மற்றோர் உயிரைக் கொல்கிறாரோ அவர் மனிதர்கள் அனைவரையும் கொன்றவர் போலாவார்''. *(5:32)*

''உங்களுக்கிடையில் உபகாரம் செய்து கொள்ள மறவாதீர்கள்''. *(2:237)*

''மக்களுக்கு நல்லதையே கூறுங்கள்''. *(2:83)*

''சன்மார்க்க விடயத்தில் உங்களுடன் போரிடாமலும், உங்கள் வாழ்விடங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்த வர்களோடு நல்ல முறையில் நடந்து கொள்வதையும், நீதியாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடுக்க வில்லை. நிச்சமாக அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசி க்கிறான்''. *(60:8)*

''தண்டிப்பதாயின், நீங்கள் தண்டிக்கப்பட்டது போலவே தண்டியுங்கள். நீங்கள் பொறுமை காப்பீர்களாயின், பொறுமை யாளர்களுக்கு அது மிகச் சிறந்ததாகும்''. *(16:126)*

''உங்களுடன் போர் செய்பவர்களோடு அல்லாஹ்வின் பாதை யில் நீங்களும் போரிடுங்கள்; வரம்பு மீறாதீர்கள்''. *(2:190)*

''அவர்கள் (விஷமம் செய்வதிலிருந்து) விலகிக் கொண்டால், அதன் பிறகும் அநியாயம் புரிவோர் மீதன்றி வேறெவர் மீது அத்துமீறல் நிகழக் கூடாது''. *(2:193)*

*''ஒரு சமூகத்தினர் மீதுள்ள பகையுணர்ச்சி அவர்களுடன் நீதியாக நடந்து கொல்வதை விட்டு உங்களைத் தடுக்க வேண்டாம். நீதியைப் பேணுங்கள்; அதுவே இறையச்சத்துக்கு மிக நெருக்கமானது. நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்''. (5:8)*

*''நீங்கள் பேசினால் நீதமாகவே பேசுங்கள்; அது நெருங்கிய உறவினருக்கு எதிராக இருப்பினும் சரியே!'' (4:135)*

*''மனிதர்களுக்கு மத்தியில் தீர்ப்புக் கூறினால், நீதமாகவே தீர்ப்புக் கூறுங்கள்''. (4:58)*

*''நீங்கள் நன்மைக்கும் இறையச்சத்துக்கும் பரஸ்பரம் உதவிக் கொள்ளுங்கள்; பாவத்துக்கும் வரம்புமீறலுக்கும் உதவிக் கொள்ள வேண்டாம்''. (5:2)*

*''இறை விசுவாசிகளில் இரு சாரார் மோதிக் கொண்டால், அவர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். அவர்களில் ஒரு சாரார் அடுத்த சாரார் மீது அத்துமீறினால், அத்துமீறும் சாரார் அல்லாஹ்வின் கட்டளையை நோக்கித் திரும்பும் வரை அவர்களுடன் போரிடுங்கள். அவர்கள் மீண்டு வந்து விட்டால், இரு சாராரையும் நீதமான முறையில் சமாதானப் படுத்துங்கள். நீதியாக நடந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களையே விரும்புகின்றான். நிச்சயமாக இறைவிசுவாசிகள் சகோதரர்களே. எனவே, உங்களது இரு சகோதரர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; கிருபை செய்யப்படுவீர்கள். விசுவாசம் கொண்டவர்களே! உங்களில் ஒரு கூட்டத்தினர் மற்றொரு கூட்டத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம்; ஏனெனில், ஏளனம் செய்பவர்களை விட ஏளனம் செய்யப்படுவோர் சிறந்தவர்களாக இருக்கக் கூடும். பெண்களும் மற்றப் பெண்களை ஏளனம் செய்ய வேண்டாம்; ஏனெனில் ஏளனம் செய்யப்படும் பெண்கள் ஏளனம் செய்யும் பெண்களை விட சிறந்தவர்களாக இருக்கக் கூடும். உங்களுக்குள் ஜாடை காட்டிப் பேச வேண்டாம். பட்டப்பெயர் கூறி அழைக்கவும் வேண்டாம்''. (49:9-11)*

*இரண்டு: இந்த இரண்டாவது அம்சம் அறிவோடும், அறிவியல் ஆய்வு முறைகளோடும் தொடர்புபட்டதாகும்.*

சடவாத சிந்தனையானது -பிரதானமாக- பகுத்தறிவு சார்ந்த பரிசோதனை முறையிலான தொகுத்தளி (Inductive) அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டதாகும். வாழ்வையும் பிரபஞ்சத்தையும் ஆளுகின்ற விதிகளைக் கண்டறிவதற்கு புலவயப்பட்ட உலகையும், பரிசோதனைகளையும், கிடைக்கும் தரவுகளையுமே அது தளமாகக் கொள்கிறது. எல்லா வகையான முன்னறிவிலிருந்தும் வேத வழிகாட்டலிலிருந்தும் தன்னை துண்டித்துக் கொண்டே அச்சிந்தனை இயங்குகிறது. இந்நிலைக்குக் காரணம் முன்னைய பிரதான மதங்கள் -குறிப்பாக கிறிஸ்தவ மதம்- ஆகும். ஏனெனில், அம்மதங்களின் பின்பற்றாளர்கள் தங்களது புனித வேதங்களில் வந்திருக்கும் எந்தத் தகவலையும் திடமாக நம்ப முடியாதளவுக்கு அவை -வரலாற்று ஓட்டத்தில்- திரிபுக்கு உள்ளாகி விட்டன. பகுத்தறிவோ அறிவியலோ சீரான 'ஃபித்றா'வோ ஏற்காத பல விடயங்கள் இன்று அவற்றில் நிரம்பியுள்ளன.

மனிதனது சமூக இயல்பில் காணப்படுகின்ற பயங்கர சிக்கலையும், மனித நடத்தையில் ஏக காலத்தில் தாக்கம் செலுத்துகின்ற பல காரணிகளையும், மனிதர்களை அறிவியல் பரிசோதனைக்குள் கொண்டு வருவதிலுள்ள அசாத்தியங்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான், சமூகவியல் ஆய்வுக் கலைகளின் பாரிய தடுமாற்றங்களை நாம் புரிந்து கொள்ள முடியும். மனித நடத்தை, சமூகவியல், கல்விப் பயிற்றுவித்தல் என்பவை சார்ந்த ஆய்வுக் களத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கோட்பாடுகள் எவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாகத் தோற்றம் பெற்றன என்பதையும் தெரிந்து கொள்ள முடியும். இத்துறைகளில் ஏற்படும் தவறுகளின் தாக்கங்கள் குறுகிய காலத்திற்குள் வெளித் தெரிவதில்லை. சமுதாயங்களின் உருவாக்கத்திலும் கட்டமைப்பிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய பிறகு அவற்றிலிருந்து விடுபடுவதும் சாத்தியமில்லை.

இதனை நாம் புரிந்து கொண்டால், இஸ்லாமிய அறிவுத் துறையின் அனந்தரமான தனித்தன்மையைப் புரிந்து கொள்ளலாம். அது படைப்புகளின் இயல்புகளிலும் நியதிகளிலும் உள்ள அடிப்படையான பௌதீக அறிவுடன் இணக்கமும் இசைவும் கொண்டதாகும். ஆயினும் அத்துடன் நின்று விடாமல், அந்த அறிவை அது பண்படுத்துகிறது; அதன் குறைபாடுகளால் ஏற்படக் கூடிய தீங்குகளைத் தடுக்கிறது.

எனவே, படைப்புகள் பற்றியும், அவற்றில் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கும் இயல்புகள் மற்றும் விதிகள் பற்றியும் ஆழ்ந்து

ஆராய்ந்து பயன்பெறுதல் முஸ்லிமின் கடமையாகும். அதேவேளை, அடிப்படையான சமூக நடத்தைகள் தொடர்பாக வஹீயின் வழியாக அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப்பெற்ற மாறா உண்மைகளையும் அவர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்போதுதான், பிரபஞ்ச விதிகளையும் தொடர்புகளையும் புரிந்து கொள்வதில் தவறிழைத்து விடாமல் அவர் பாதுகாக்கப் படுவார்; காலம் கடந்து கைசேதப் படும் நிலையிலிருந்தும் பாதுகாக்கப் படுவார். ஏனெனில், தெளி வான புனித வசனமொன்றின் தெளிவான புரிதலின் படி 'ஹலால்' என்றோ அல்லது 'ஹறாம்' என்றோ அல்லது 'முழுமொத்த இஸ்லா மிய அடிப்படை' என்றோ நிரூபணமான ஒன்றுக்கு மாற்றமான எதுவும் சரியானதாக இருக்க முடியாது.

இவ்வாறுதான் இஸ்லாமிய அறிவானது ஏக காலத்தில் பரிசோ தனை முறையிலான தொகுத்தறி அணுகுமுறையின் மூலாதாரங் களையும், முழுமொத்த தெய்வீக வழிகாட்டலின் மூலாதாரங்களை யும் பயன்படுத்திக் கொள்கிறது. அந்த வகையில், ஒரு முஸ்லிம் தான் விரும்பிய கொடுக்கல்-வாங்கலில் ஈடுபடவும், வியாபாரம் செய்ய வும், உற்பத்தியில் ஈடுபடவும் சுதந்திரம் பெறுகிறார். அவர் ஈடுபடும் எந்தச் செயலும் பிறருக்குத் தீங்கிழைப்பதாகவோ அநியாயம் புரிவ தாகவோ வட்டியாகவோ அமைந்து விடக் கூடாது என்பது மட்டுமே இங்கு கவனிக்கப்பட வேண்டிய நிபந்தனையாகும்.

அதேபோல், ஒரு முஸ்லிம் தான் விரும்பிய வாழ்க்கை முறை யையும், கண்ணியமான குடும்ப வாழ்வுப் பாரம்பரியங்களையும் எடுத்துக் கொள்ள முடியும். அவரது தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கேற்ப அவற்றை தகவமைத்துக் கொள்ளவும் முடியும். ஆனால், பாலுறவின் உண்மையான நோக்கத்துக்கு மாறான வகையில் அதனை அவர் ஆகுமாக்கிக் கொள்ளக் கூடாது. சட்டபூர்வமான ஒப்பந்தமின்றி அதனை அமைத்துக் கொள்ளவும் முடியாது. ஏனெனில், அத்தகைய ஒப்பந்தமே பெண்ணுக்கும் குழந்தைகளுக்கும் கண்ணியத்தையும், பௌதீக-உளவியல் உரிமைகளையும் உத்தரவாதப் படுத்துவதாகும். இவ்வொழுங்குகளைப் பேணி தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாத போது, அவர் அநியாயம் இழைத்தவராகவும், பாவம் செய்தவராகவும், வரம்பு மீறியவராகவும் ஆகி விடுவார். அவ்வாறு வரம்பு மீறுவோரை அல்லாஹ் விரும்புவதில்லை.

இஸ்லாத்தின் வஹீயும் போதனைகளும் இப்படித்தான் அமைந் திருக்கின்றன. அவை தளைகளாகவும் வார்ப்புருக்களாகவும் அன்றி,

வாழ்வுப் பாதையின் வெளிச்ச விளக்குளாகவும் மைல்கற்களாகவும் நின்று வழிகாட்டுகின்றன; வழிகேட்டையும் பிறழ்வையும் தடுத்து, உன்னத சமூகவியல் தொடர்புகளைச் சாத்தியப்படுத்த உதவுகின்றன.

''நிச்சயமாக அல்லாஹ் நீதி, உபகாரம், உறவினருக்கு தர்மம் செய்தல் என்பவற்றை ஏவுகிறான்; மானக்கேடான செயலையும், தீமையையும், வரம்பு மீறலையும் தடுக்கிறான். நீங்கள் நல்லறிவு பெற வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு அவன் உங்களுக்கு உபதேசிக்கிறான்''. *(16:90)*

இஸ்லாமிய வைதீக அறிவில் மனிதப் பகுத்தறிவு பெற்றிருக்கும் இந்த இடம் பற்றிய புரிதல் இஸ்லாத்தைப் பின்பற்றுவோரிடம் இல்லாதிருப்பது இவ்வுண்மையை எவ்வகையிலும் மாற்றி விடப் போவதில்லை. அவர்களது சிந்தனைத் தலைமையும், சமூகத் தலைமையும் நீண்ட பல நூற்றாண்டுகளாக தனித்தனியாகப் பிரிந்து நிற்பதற்கு வழிகோலிய வரலாற்று நிகழ்வுகளே அவர்களது இந்த அறியாமைக்குக் காரணமாகும்.

'மோதிக்கொள்ளும் சமூகம்' என்பதற்குப் பதிலாக 'ஒன்று பட்ட சமூகம்' என்ற கருத்தாக்கத்தையும், மனித அறிவு மூலாதாரங்களிலுள்ள தொடர்பு நியமங்களையும் முஸ்லிம்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். நாளைய உலகுக்கு அவர்கள் முன்மாதிரியை வழங்கவும் வேண்டும். அவ்வாறு செய்வார்களாயின், மனித சமூகம் தனது தவறுகளின் விலையைச் செலுத்த முடியாது போகின்ற நிலை வரும் போது, முஸ்லிம்களது புரிதலுக்கும் முன்மாதிரிக்கும் தனியான முக்கியத்துவம் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

மனிதன் கண்டுபிடித்த கொலை ஆயுதங்களும் நாசகாரக் கருவிகளும் பிரபஞ்ச வெளியில் பூமிப்பந்தின் இருப்பையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ள நிலையை மனித இனம் திட்டவட்டமாக கண்டு கொள்ளும் வேளை வரும். அப்போதுதான் அது இறை வேதத்திலும், நம்பகமான நபிவழியிலும் அறியப்பட்ட நுணுக்கமான-தீர்க்ககரமான நியமங்கள் தனக்கு எவ்வளவு அவசியமானவை என்பதைப் புரிந்து கொள்ளும். அழிவின் பாதாளத்தை நோக்கிச் சறுக்கி விடாமல் மனித இனத்தைக் காப்பதற்கு அந்த வழிகாட்டல்கள் எவ்வளவு முக்கியம் என்பதை நியாயமாகச் சிந்திக்கும் எவரும் ஏற்கவே செய்வர்.

அப்போது இந்நெருக்கடியிலிருந்து வெளியேறும் வழி மோத லாகவோ பலப் பரீட்சையாகவோ அன்றி, ஒற்றுமையாகவும் பரஸ் பர நெருக்கமாகவுமே அமையும். பொது இருப்புக்கும் பொது நலனுக்கும் வாய்ப்பான காரணிகளைத் தேடுவதன் மூலமாகவே அது சாத்தியமாகும்.

முஸ்லிம்கள் அவர்களது தூதை உண்மையாகவே புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்தத் தூதின் நோக்கத்தையும் கடமை யையும் அல்லாஹ் தனது ஞானத்தினால் விதித்த பிரகாரம் அவர் களால் நிறைவேற்ற முடியும். அல்லாஹ் கூறுகின்றான்:

> ''நீங்கள் மனிதர்களுக்குச் சான்று பகர்பவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு உங்களை நடுநிலைச் சமுதாயமாக ஆக்கினோம்''. *(2:143)*

> ''ஒருவர் அணுவளவு நன்மை செய்தாலும் அதனைக் கண்டு கொள்வார்; அணுவளவு தீமை செய்தாலும் அதனைக் கண்டு கொள்வார்''. *(99:7-8)*

இஸ்லாமிய உம்மாவினதும், முஸ்லிம் அறிஞர்களதும், சிந்தனை யாளர்களதும் பொறுப்பை இது பன்மடங்காக்குகிறது. அந்தவகை யில், அவர்கள் சரியான சன்மார்க்கக் கருத்தாக்கங்களை நிலைநிறுத்தி, முன்மாதிரிச் சமூகமொன்றை உருவாக்கி விட்டால், அதன் மூலமாக பாதுகாக்கப்படுவது அவர்கள் மட்டுமல்ல. சீரமைக்கப் படுவது அவர்களது நாகரிகக் கட்டமைப்பும் சமூகமும் மட்டுமல்ல. மாறாக, முழு மனித இனத்தின் நிலையையுமே அவர்கள் சீரமைக்கிறார்கள். பூமியின் மீதுள்ள மனித நாகரிகத்தையும், அதன் வளப்படுத்தல் சார்ந்த பணியையுமே அவர்கள் மீட்டெடுக்கிறார்கள். தங்களுக்காவும் முழு மனிதர்களுக்காகவும் சத்தியம், பாதுகாப்பு, சமாதானம் என்பவற்றைக் கொண்ட சமூகமொன்றை அதன்மூலம் நிதர்சனப் படுத்துகிறார்கள். விஞ்ஞானக் கண்டுபிடிப்பு முயற்சிகளையும், பௌதீக முன்னேற் றத்தையும், நாகரிக வளப்படுத்தலையும் வழிநடாத்துகிறார்கள். பூமி யின் மீது நிறுவுமாறு அல்லாஹ் ஏவிய 'பிரதிநிதித்துவ சமூகத்தை' யும் நிலைநிறுத்துகிறார்கள்.

## இறுதியாக:
## இஸ்லாமியமாக்கல் என்பது உம்மாவின் விவகாரம்

உம்மாவின் நிலையை அதன் முழு விம்பத்துடன் விவரணம் செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாக இருந்தது. வரலாற்றில் உம்மா மேற்கொண்டிருந்த பயணத்தை அதன் அங்கத்தவர்கள் நன்கு புரிந்து கொண்டு தங்கள் பணியைத் தொடங்க வாய்ப்பாக இவ்விவரணம் முன்வைக்கப் பட்டிருக்கிறது. உம்மா இன்று சந்தித்திருக்கும் பிரதான பிரச்சினைகள் குறித்து இவ்வாய்வின் வெளிச்சத்தில் அவர்கள் கலந் துரையாட வேண்டும். அப்போதுதான், தனிமனிதனையும், முஸ்லிம் உம்மாவையும், முழு மனித இனத்தையும் ஆரோக்கிய நிலைக்கு மீளக் கொண்டு வருவதற்கான வழிவகைகளை அவர்களால் கண்டறிய முடியும்.

இப்பாரிய இலக்குகளை எய்தும் பாதையில் இவ்வாய்வு செய்ய விரும்புவதெல்லாம், முழுமொத்த இஸ்லாமிய நோக்கை முஸ்லிம் சிந்தையில் ஆழப்படுத்துவதொன்றுதான். உம்மாவின் பின்னடைவு, வீழ்ச்சி, துன்பங்கள் என்பவை தொடர்பாக அசலான கண்ணோக் கொன்றைப் பெறுவதற்கு முஸ்லிம் சிந்தையைத் தூண்டவே இவ் வாய்வு விழைகிறது. எனவே, இவ்விவகாரங்கள் தொடர்பாக நிதானமாகவும், வினைமையோடும், நுணுக்கமாகவும், சார்பியமின் றியும் முஸ்லிம் சிந்தை கலந்துரையாட வேண்டும்; காரணங்களைக் கண்டறிந்து, சிகிச்சைகளை விதந்துரைக்க வேண்டும்.

இவ்வாய்வை முன்வைப்பவரது சிந்தனை, கல்வி, அனுபவம் என்பவற்றின் படி, இன்று உம்மாவிடம் இருக்கும் குறைபாடு வளக் குறைபாடோ, வசதிக் குறைபாடோ, பெறுமானக் குறைபாடோ அன்று. மாறாக, ஆரோக்கியமான சிந்தனா முறைமையொன்று இல் லாதிருப்பதே அதன் குறைபாடாகும். சமூக-நாகரிக நோக்கில் ஏற் பட்ட கோளாறு, இஸ்லாமியக் கல்வி சீர்கெட்டமை, பொது நிறுவ னங்களின் வீழ்ச்சி என்பனவே இக்குறைபாட்டுக்கான காரணங்க ளாகும். இதனால் உம்மா தனிமனிதர்களாகச் சிதைவுற்றது. அத்தனி மனிதர்களது அச்சம், இயலாமை, தங்களது உள் விரோதங்களின் போது எதிரிகளுக்கு உதவி செய்து அழிவைத் தேடிக் கொள்ளல் முதலிய பண்புகள் அவர்களை அடிமை மனோநிலைக்கு கொண்டு சென்று விட்டன.

இஸ்லாமியமாக்கல் செயற்பாடானது, அதன் மிகப் பரந்த பொரு ளில், முஸ்லிம் உம்மாவின் விவகாரமாக எதிர்வரும் தசாப்தங்களில் அமைய வேண்டும் என்பதே நமது எதிர்ப்பார்ப்பாகும். அப்போது தான், உம்மா மீண்டும் பலமடைந்து வளர்ச்சியடையும்; ஆற்றலை யும் கௌரவத்தையும் மீட்டெடுத்து, சீர்திருத்தத்திலும் வளப்படுத்த லிலும் தனது பாத்திரத்தை நிறைவேற்றும்; சத்தியப் பாதையையும் அல்லாஹ்வின் சீரிய மார்க்கத்தையும் நோக்கி மனித இனத்துக்கு வழிகாட்டும் பொறுப்பை ஏற்கச் சக்தி பெறும்.

இஸ்லாமியப் பணியின் தலைமைகளும் இயக்கங்களும் இம் முன்னெடுப்பு தங்களது முயற்சிகளின் பெறுமதியை இல்லாது செய்து விடும் என்று நோக்க வேண்டியதில்லை. ஏனெனில், அடிப்படையில் இப்பணி வேர்நிலையான சிந்தனைப் பணியே அன்றி, இயக்க-அரசி யல் பணியல்ல. சிந்தனா ரீதியான வழிகாட்டலோ, அர்ப்பண மனோ நிலையோ அற்ற இயக்க-அரசியல் செயற்பாடானது வள விரயமாக வும் சுமையாகவுமே அமையும். அது நம்மை யதார்த்தம் பற்றிய பிரக்ஞையை விட்டும், உண்மையாகவே தீர்வுக்கு இட்டுச் செல்லும் வழிமுறைகளை விட்டும் தூரமாக்கி விடும்.

உண்மையில் இப்போதுள்ள பிரச்சினை, நாகரிகத் தலைமை ஆச னத்தில் உம்மாவை அமரச் செய்யும் வகையில் அதனைத் தகவமைப் பது எவ்வாறு என்ற பிரச்சினையே. அது ஓர் ஆட்சியின் அல்லது நாட்டின் அல்லது கட்சியின் பிரச்சினையன்று. சிந்தனை மாற்றமே தகைமைப்படுத்தலுக்கான அடிப்படைக் காரணியாகும்; அதன் மூல மாகவே முயற்சிகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் உரிய விளைவைக் கொண்டு வரும்.

பல்வேறு துறைகளிலான முயற்சிகள் ஒன்றுக்கொன்று பலமூட் டுபவையாகவும், ஒன்றையொன்று முழுமைப் படுத்துபவையாக வும் இருக்க வேண்டும். ஆயினும் இதன் பொருள், ஏதோ சூழ் நிலைக்காகவும் தேவைக்காகவும் ஒரு விடயத்தை முன்னுரிமைப் படுத்தி, மற்றொரு விடயத்தைப் புறக்கணித்து விடுவதல்ல என்பது முக்கியமாக வலியுறுத்தப்பட வேண்டும். அந்தவகையில், இயக்க-அரசியல் முயற்சிகளும் சிந்தனா முயற்சிகளும் அருகருகே இடம் பெற வேண்டியவையாகும். மட்டுமன்றி, உள்ளத்திலும் சிந்தை யிலும் இருக்கின்ற சக்தி மூலங்களைச் சீரமைத்து வளர்ச்சியடையச் செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தவும் பாதுகாக்கவும் இயக்க-அரசியற் புலம் மிக அவசியம்.

சிந்தனைச் செயற்பாடு கூட பல தரங்களையும் துறைகளையும் கொண்டிருப்பது இங்கு தெளிவு படுத்தப்பட வேண்டும். அந்த வகையில், அவற்றுள் சில முறையியலோடும், மூலாதாரங்களோடும், இலக்குகளோடும், பகுத்தறிவு நோக்கின் இயல்பை புத்தாக்கம் செய்வதோடும் தொடர்புபட்டவை; மற்றும் சில, பயனாக்க- மூலோ பாய இயங்குநிலை சார்ந்தவை. உம்மா இன்று எதிர்நோக்கும் பாரிய சிக்கல் அறிவுநோக்கு மற்றும் முறையியல் சார்ந்ததாகும். பய னாக்க-மூலோபாய இயக்கச் சிந்தனை கூட அறிவுநோக்கினதும் முறையியலினதும் சிறந்த ஆரோக்கியத்தின் மீதே தனது வெற்றியை தகவமைத்துக் கொள்ள முடியும். அப்துல் ரஹ்மான் அல்-கவ்கபீ தனது ‘உம்முல் குறா’ என்ற நூலில் குறிப்பிட்டது போன்ற மூலோ பாய இயக்க சிந்தனை ஏன் வெற்றி பெறவில்லை என்பதை இவ்வகையிலேயே நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட அந்நூல் இஸ்லாமிய சீர்திருத்த இயக்கங்களுக்கான பல நிகழ்ச்சித் திட்டங்களையும் முன் மொழிவுகளையும் தெளிவான வசனங்களில் குறிப்பிட்டிருந்த போதி லும், எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் எய்தப் படவில்லை. பகுதியள வில் சாதிக்கப்பட்ட சில அடைவுகளால் உம்மாவின் வரலாற்றை மாற்றவும் முடியவில்லை.

பகுதியளவான அடைவு என்னும் கானலை விலக்கி அனைத்து யத்தனங்களும் ஒன்றாகத் திரட்சியடைய வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பாகும். அப்போதுதான், பல்வேறு சமுதாயங்களில் நிலவும் சவால்களின் மட்டத்திற்கு இஸ்லாமிய சீர்திருத்தப் பணியை முன்னகர்த்த முடியும்.

இத்தகைய ஆரோக்கிய நோக்கொன்று உம்மாவிலுள்ள சிந்தனை யாளர்களுக்கும், அறிஞர்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் சித்திக்க வேண் டும் என நாம் எதிர்பார்க்கிறோம். அது பற்றி அவர்கள் உம்மாவுக்கு அறிவூட்டி, அதன் முயற்சிகளை சரியான பாதைக்கு மீள் நகர்த்த வேண்டும். அவ்வாறு நிகழ்ந்து விட்டால், வைக்கோலில் விழுந்த அக்கினிக் குஞ்சாய் அது பற்றியெழும்; வைகறையின் விடியல் எல்லாக் களங்களிலும் பரவும்; தொழிற்சாலைச் சக்கரங்கள் முன் னைய தரமான உற்பத்திகளை மாதிரியாகக் கொண்டு புதிய பொருட் களை உருவாக்கும். வரலாற்றுப் பாடங்களும் படிப்பினைகளும் நம்முன்னே தெளிவாகவும் பிரகாசமாகவும் நிற்கின்றன.

எப்போது ஒரு சமுதாயம் சரியான பாதையைக் கண்டடைந்து, தனது சிந்தனையையும் இயங்குதளங்களையும் சரிசெய்து கொள்கிறதோ அப்போது அதன் சக்தியும் திரட்சியும் காட்டாற்று வெள்ளமாய் பிரவகிக்கும். ஆற்றுகையிலும் சாதனையிலும் தனது பாதையை தானாகவே அது அமைத்துக் கொள்ளும். சக்தியும், அசைவாற்றலும், இயக்கமும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதனிடம் பீறிடும். சிறிது காலம் செல்ல முன்னரே அதன் நிலை வெகுவாக மாறி விடும். காலக் கணக்கு என்பது இதுதான். இயலாமையுடன் வழி தவறி நிற்பவருக்கு அது நீண்டு செல்லும்; சக்தியும் உறுதியும் கொண்டு விட்டால், அது குறுகி மறைந்து விடும்.

ஆக- உம்மாவின் சிந்தனையாளர்களும் அறிஞர்களும் புத்திஜீவிகளும் தங்களது பார்வையையும் உறுதியையும் முதலில் சிந்தனைச் சீர்திருத்தத்தின் மீதே குவிமையப்படுத்த வேண்டும். உம்மாவின் அங்கத்தவர்களுக்கும், தலைவர்களுக்கும், பிரதானிகளுக்கும் அவர்கள் பார்வைத் தெளிவை வழங்க வேண்டும். அது நிகழ்ந்து விட்டால், -அல்லாஹ்வின் நாட்டப்படி- உம்மாவின் அணிகளும் குழுக்களும் பெரும் வீரியத்துடன் எழுந்து விடும்; பயணத்துக்கான கப்பலை கண்ணிமைப் பொழுதில் தயாரித்து விடும்; உயர்வின் திசைகளை நோக்கி விரைந்து புறப்பட்டு விடும்.

இம்முயற்சியில் ஞானத்தையும் சரியான செயற்பாட்டையும் அருள வேண்டும் என்று அல்லாஹ்வைப் பிரார்த்தித்தவர்களாக நமது வார்த்தைகளை நிறைவு செய்கின்றோம்.


முஸ்லிம் உம்மாவையும், முழு மனித இனத்தையும் அழுத்திக் கொண்டிருக்கும் சிதைவுகளின் குவியலிலிருந்து நம்மை அவன் வெளியேற்றுவானாக! சொல்லப்படுவதை செவிதாழ்த்திக் கேட்டு, மிகச் சிறந்ததை எடுத்துப் பின்பற்றும் நல்ல செயற்பாட்டாளர்களாக நம்மை ஆக்குவானாக!

புகழனைத்தும் அகிலங்களின் ரட்சகனான அந்த அல்லாஹ்வுக்கே உரியது.

## *அடிக்குறிப்புகள்:*

1. பக்கம் 31: H. A. R. GIBB & Harold BOWEN, Islamic Society and the West.
2. பக்கம் 54: அப்பாஸிய ஆட்சியாளர்கள் உம்மாவின் சிரேஷ்ட அறிஞர்களைக் கட்டாயப்படுத்தி தமக்குக் கீழ்ப்படிவதற்கான சத்தியப் பிரமாணத்தைப் பெற்றுக் கொண்டனர். சத்தியப் பிரமாணத்தை மீறினால் அவர்களது மனைவியர் இயல்பாகவே அவர்களிடமிருந்து மணவிலக்கு அடைந்து விடுவர் எனவும் ஆட்சியாளர்கள் நிபந்தனை இட்டிருந்தனர். இப்பின் புலத்திலேயே இமாம் மாலிக் மேற்குறித்த மார்க்கத் தீர்ப்பை வழங்கி யிருந்தார். ஆட்சியாளர்களுக்கு நிர்ப்பந்தமாக வழங்கப்படும் சத்தியப் பிரமாணம் பிறகு மீறப்படலாம் என்பதை இத்தீர்ப்பு மறைமுகமாக உணர்த்தியது.
3. பக்கம் 117 : நபி (ஸல்) கூறினார்கள்: ''நிலம் வைத்திருப்பவர் அதில் விவ சாயம் செய்யட்டும். (விளைச்சலின்) கால்வாசிக்காக அல்லது மூன்றிலொரு பகுதிக்காக அல்லது குறிப்பிட்டதோர் உணவுப் பொருளுக்காக அவர் நிலத்தை குத்தகைக்குக் கொடுக்கக் கூடாது''.
4. பக்கம் 117: வட்டி என்னும் கருத்தாக்கம் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடு பற்றி விரிவாக அறிய விரும்புபவர் Contemporary Aspects of Economic and Social Thinking in Islam & Proceedings of the Third East Cost Regional Conference of the Muslim Student's Association of the United States and Canada, April 1968 என்னும் நூலின் முன்னுரையை வாசிக்கலாம்
5. பக்கம் 126 : சட்ட நியாயவியல் பிரயோகத்தில் 'தல்ஃபீக்' என்பது பல்வேறு சட்ட மரபுகளிலிருந்து மக்கள் தமக்கு வசதியான சட்டங்களையும் சலுகை களையும் மாத்திரம் தேடிப் பின்பற்றும் போக்காகும். (மொ-ர்)

## அப்துல் ஹமீத் அஹ்மத் அபூ ஸுலைமான்



டாக்டர் அப்துல் ஹமீத் அஹ்மத் அபூ ஸுலைமான் 1936 இல் மக்காவில் பிறந்தார். அங்கு தனதுஉயர் பள்ளிக் கல்வியை முடித்துக் கொண்ட அவர் கெய்ரோ பல்கலைக்கழகத்தில் வர்த்தகத்தில் B.A பட்டத்தைப் (1959) பெற்றுக்கொண்டார். பின்னர் 1963 இல் அதே பல்கலைக்கழகத்தில் அரசியலில் M.A பட்டத்தையும் 1973 இல் பென்ஸில்வேனியா பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் பற்றிய Ph.D பட்ட மொன்றையும் பெற்றுக்கொண்டார்.

சவூதி அரேபியாவின் அரச திட்டமிடல் கமிட்டியின் செயலாளராக வும் (1963-1964), முஸ்லிம் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் (AMSS) ஸ்தாபக உறுப்பினராகவும் (1972), WAMY அமைப்பின் செயலாளர் நாயகமாகவும் (1973-1980), சவூதி அரேபியாவின் ரியாத் நகரிலுள்ள மன்னர் ஸஊத் பல்கலைக்கழக அரசியல் துறையின் தலைவராகவும் (1982-1984), மலேஷியாவில் நிறுவப்பட்ட சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் முதல்வராகவும் (1988- 1998) இவர் பணி புரிந்துள்ளார்.

பல்வேறு சர்வதேச மாநாடுகளுக்கும் கருத்தரங்குகளுக்கும் காரண கர்த்தாவாக இருந்த டாக்டர் அபூ ஸுலைமான் தற்போது இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் (IIIT) தலைவராகப் பணி யாற்றுகிறார். முஸ்லிம் சமூகங்களைச் சீர்திருத்துவது தொடர்பாக இவர் பல கட்டுரைகளையும் நூல் களையும் எழுதியுள்ளார். இவரது நூல் களுள் கூட The Islamic Theory of International Relations: New Directions for Islamic Methodology and Thought, Crisis in the Muslim Mind, Marital Discord: Recapturing the Full Islamic Spirit of Human Dignity, Revitalizing- Higher Education in the Muslim World, The Qur'anic World View: A spring board for cultural Reform என்பன குறிப்பிடத்தக்கன.

Published by
**Fuzin Texts**
23/3 Market Road, Dharga Town 12090
Sri-Lanka.

ISBN 978-955-8398-64-7

INTERNATIONAL INSTITUTE OF ISLAMIC THOUGHT